# முகங்கள்

சர்வதேச தமிழ் எழுத்தாளர்களின்
'புலம்பெயர்வு' பற்றிய சிறுகதைத் தொகுதி 2011



முகங்கள்!

மனித உணர்ச்சிகளின்
விம்பங்களைக் காட்டும்
கண்ணாடி இந்த முகங்கள்!

சொந்த தேசத்தின்
எல்லைகளை தாண்டும் பொழுது
இதே முகங்கள் தம் முகத்தை
இழக்கின்றன! அல்லது முகமூடி
போட்டுக் கொள்கின்றன.

புலம் பெயர்வு வாழ்வில்
சந்தித்த வேதனைகளும்
சாதனைகளும் தான்
இந்த தொகுப்பில் உள்ள
சிறுகதைகள்.

ஐம்பது ஆசிரியர்களின்
வாழ்வின் அனுபவங்கள்
சிறுகதைகளாக இங்கு இறக்கி
வைக்கப்பட்டிருகின்றது.

இது ஒரு வித்தியாசமான
முயற்சி! இதனை வாசகர்கள்
வரவேற்பார்கள் என
எதிர்பார்க்கின்றோம்!!

இதன் பிரதி ஒவ்வொன்றையும்
நீங்கள் வாங்கும் பொழுது இதன்
மற்றைய பிரதி ஒன்று
இலங்கையில் ஒரு
பாடசாலைக்கோ அல்லது
நூலகங்களுக்கோ
இலவசமாக வழங்கப்படுகின்றது.

அன்புடன்
விஸ்வசேது இலக்கியப் பாலம் சார்பாக
வி. ஜீவகுமாரன்
-நினைவு நல்லது வேண்டும்-
01-01-2011



# நினைவு நல்லது வேண்டும்

# முகங்கள்

## சர்வதேச தமிழ் எழுத்தாளர்களின் ‘புலம்பெயர் வாழ்வு’ பற்றிய சிறுகதைத் தொகுதி 2011

தொகுப்பாசிரியர்
**வி.ஜீவகுமாரன்**

விஸ்வசேது இலக்கிய பாலம்

@copy right
VISVASETHU ILAKKIYA PALAM (VIP) 2011

| முகங்கள் | சிறுகதைத் தொகுப்பு | ஓவியம்: சிவ.கௌதமன் |
| தொகுப்பாசிரியர்: வி.ஜீவகுமாரன் | முதல் பதிப்பு: ஜனவரி 2011 |
| மொத்த பக்கங்கள்: 552 | வடிவமைப்பு: இவள் பாரதி |
தொடர்புக்கு: **visvasethu@gmail.com** | ✆:0045 22303134 |

---

| Mukankal | Anthology of Short stroies | Drawings: SIVA.Gowthaman |
Edited by : V.Jeevakumaran|
| First Edition : January 2011 | Total Pages: 552 |
| Designed By: Ival Bharathi |
| visvasethu@gmail.com | ✆:0045 22303134 |

## முகவுரையும்
## பதிப்புரையும்

ஓராண்டுகால பதிப்பகத்துறை அனுபவம்!
மூன்றாண்டுகால எழுத்துத்துறை அனுபவம்!!
இருபத்திமூன்றாண்டுகால புலம்பெயர்வாழ்வு அனுபவம்!!!

இந்த மூன்றும் எனக்குத் தந்த தைரியமும், என் முகம் தெரியாமலே என்னை ஆதரித்த என் எழுத்தாள நண்பர்கள் தந்த ஆதரவும்தான் இந்த தொகுப்பு உங்கள் கைகளில் தவழ காரணமாய் அமைகின்றது.

அனைவருக்கும் என் நன்றிகள்!

## புலம்பெயர் 'முகங்கள்'

இந்த 'புலம்பெயர்ந்த தமிழர்கள்' என்ற சொல்லினால் நான் உட்பட அனேக எழுத்தாளர்கள் இலங்கை மக்களிடமிருந்தும், இலங்கை இந்திய எழுத்தாளர்களிடம் இருந்து அன்னியப்படுவது பற்றி என்றுமே எனக்கு மனவருத்தம் உண்டு.

புலம்பெயர் நாடுகளைப் பொறுத்தவரை எங்களை சில சட்டதிட்டங்களின் அடிப்படையில் தான் பிரித்து வைத்துள்ளார்கள். அதன் அடிப்படையில் தான் எங்களை அழைப்பார்கள். அகதி அந்தஸ்துக் கோரியவர்கள், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள், வதியிடவுரிமை பெற்ற அகதிகள், வேலைச்சான்றிதழ் பெற்ற வெளிநாட்டவர்கள், குடியுரிமை பெற்றவர்கள், பிரஜாவுரிமை பெற்றவர்கள். இந்த ஏழு வகையாறாக்களில் பிறப்பால் அந்த நாட்டைச் சேராத மற்ற இன மக்கள் பாகுபடுத்தப்படுவார்கள். உதாரணமாக அகதி அந்தஸ்து கோரியவர்கள் என்ற பிரிவில் ஓர் அறையில் ஒரு ஆப்பிரிக்கரும் ஈரானியரும் இலங்கையரும் வாழ நேரிடலாம். அல்லது ஒருவர் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பிரிவில் பயணித்துக் கொண்டு இருப்பார்கள். உதாரணமாக அகதி அந்தஸ்து கோரும் நிலையில் இருந்த ஒருவர் வதியிடவுரிமை பெற்ற அகதியாகுவதும் பின் அந்த நாட்டு பிரஜாவுரிமை பெற்றவராதலும் காலப்போக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இந்த மாற்றம் நாட்டுக்கு நாடு மாறுபடும். இதற்கான காலங்களும் ஒன்றிலிருந்து ஐந்து அல்லது பத்து வருடங்கள் வரை மாறுபடலாம்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை கட்டுநாயக்காவில் இருந்து விமானம் ஏறியவுடன் அல்லது ரமேஸ்வரத்தை நோக்கி ஏதாவது ஒரு கடற்கரையில் இருந்து வள்ளம் புறப்பட்டதும் அனைவரும் புலம்பெயர்ந்தவர்கள் தான். தத்துக் கொடுக்கப்பட்ட ஒரு பிள்ளை எவ்வாறு பெற்றோருக்கு பிறத்தியாகுமோ அவ்வாறே நாமும் எம் இனத்திற்கு பிறத்தியராய் போவது கசப்புடன் விழுங்க வேண்டிய ஒரு மாத்திரை தான்.

எண்ணை வள நாட்டிற்கு வேலைக்காக போய்வரும் பொழுது அல்லது உயர்கல்விக்காக வேற்று நாட்டுக்கு சென்று திரும்பும் பொழுதும் இந்த புலம்பெயர் முத்திரை குத்தப்படுவதில்லை. பதிலாக நாம் சென்றடையும் நாடுகளின் தரையை விமானத்தின் பின் சில்லுகள் தொட முன்பு அல்லது கரையை வள்ளங்கள் அண்மிக்க முன்பு நாமே எங்கள் கைகளால் எங்கள் கடவுச்சீட்டைக் கிழித்துப் போட்டு அகதி அந்தஸ்த்தைக் கோரும் பொழுது அந்த நாட்டில் ‘அகதி அந்தஸ்து கோருபவர்கள்’ என்ற ஒரு புதுமுகமும் அந்த புதுமுகங்களை தாயகத்தின் கைக்கண்ணாடிகளில் பார்க்கும் பொழுது ‘புலம் பெயர்ந்தவர்கள்’ என்ற முகவரியும் எமக்கு கிடைக்கின்றது.

எங்கு சென்றாலும் இலங்கையர் என்ற பெயர் மறைந்து சென்ற இடத்தில் அகதிகள் என்றும், பிறந்த மண்ணில் புலம் பெயர்ந்தவர்கள் எனவும் பெயர்மாற்றம் பெறுகின்றோம்.

## இடம்பெயர்ந்தவர்களும் புலம்பெயர்ந்தவர்களும்

புலம் பெயர்ந்தவர்கள் பற்றி ஆழமாக அலசிக் கொண்டிருக்கும் பொழுது இந்தியாவில் மண்டபத்திலும் மற்றைய அகதிமுகாம்களில் இருப்பவர்களையும் ‘புலம் பெயர்ந்தவர்கள்’ என்னும் வகையறாக்களுக்குள் அடக்கி விடமுடியுமா என என்னுள் ஒரு கேள்வி எழுகின்றது. இந்த புலம்பெயர்வின் ஆழம் எதில் தங்கியுள்ளது என்று உற்று நோக்கின் அது தன் முகத்தை ‘இழக்கும்’ அல்லது ‘மாற்றும்’ அபாயத்துடன் கைகோர்த்து நிற்பது புரியும்.

ஆனால் இந்தியா அகதி முகாம்களில் இருப்பவர்களை இடம்பெயர்ந்தவர்கள் என்ற பிரிவினுள்ளேயே என்னால் பார்க்க முடிகின்றது.

காரணம் யாதெனில் அவர்கள் இதுவரை தம் சுயத்தை இழக்கவில்லை அல்லது அவ்வாறான ஒரு சமூக நெருக்கடிக்கு முகம் கொடுக்கவில்லை. இரண்டாவது காரணம் அவர்கள் இலங்கைக்கு திரும்பி தமது அன்றாட வாழ்வை வாழ காத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

(தென் இந்தியாவில் தொழில் நிமித்தமும் திருமணங்கள் காரணமாக அந்த நாட்டுப் பிரஜாவுரிமை ஆனவர்களை வேண்டுமென்றால் 'புலம்பெயர்ந்தவர்கள்' என்ற வகையறாவில் அடக்கலாம்.)

## இசைவாக்கம் (Integration)

இந்த 'அகதிவாழ்க்கை' அல்லது 'புலம் பெயர்வு வாழ்வு' நாம் சென்றடையும் நாட்டைப் பொறுத்தும், அந்த நாட்டில் எம்மை வாழ இசைவாக்கப்படுத்தலிலும் அந்த வாழ்வின் தரம் மேலோங்கும் அல்லது கீழிறங்கும்.

இலங்கையிலேயே ஒரு மொழி பேசும் மக்களுக்கு இடையே அல்லது பிரதேசங்களுக்கு இடையே அல்லது ஊர்களுக்கு இடையே பழக்க வழங்கங்களில் வேறுபாடு இருப்பது போல இந்த புலம் பெயர்ந்து சென்ற நாடுகளிலும் நாட்டுக்கு நாடு கலாச்சாரங்களில் பெரிய மாறுபாடுகள் உண்டு.

உதாரணமாக இங்கிலாந்தில், மார்கழி 25ம் திகதி நடுநிசியில் பாலன்பிறப்பிற்காக தேவாலத்தில் மக்கள் கூடியிருக்கும் பொழுது மற்றைய அனேக ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்மஸ் விருந்து முடிந்து விடும். அவ்வாறே உயிர்ந்தெழுந்த ஞாயிறு அன்று ஆசியாக் கண்டங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போது ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் செம்மறி ஆட்டை வாட்டியபடி அதனைச் சுற்றி நடனமாடிக் கொண்டு இருப்பார்கள்.

இந்த கலாச்சார மாற்றங்களை உள்வாங்கி எமது தனித்துவங்களை இழக்காமல் இந்த நாட்டு மக்களுடன் இணைந்து வாழ்வதையே இசைவாக்கம் என இந்த நாடுகள் வரையறுத்துக் கொள்கின்றன.

300 ஆண்டுகள் அடிமைத்தன வாழ்க்கைக்கு பழகிவிட்ட ஆசிய நாட்டு மக்களுக்கு இந்த இசைவாக்கம் இலகுவாக வந்துவிடுகிறது.

இந்த நாடுகளில் நன்கு முன்னேறிய இனமாக தென்கிழக்காசிய மக்கள் இருப்பது கண்கூடு. ஆனால் இந்த இசைவாக்கம் தன் இயல்பை இழக்காமல் இயல்பாகவே நடந்தேற வேண்டிய ஒன்று. இதன் பாதையில் அதிஷ்டவசமாக மேலே தூக்கிச் செல்லும் ஏணிகளும் உண்டு. அதாள பாதாளத்துக்கு இழுத்துச் செல்லும் பாம்புகளும் உண்டு. வெற்றி என்ற 100வது கட்டத்தை எட்டியவர்கள் யாருமே இல்லை. ஆனால் 75வது கட்டத்தைத் தாண்டி இயல்பான நல்ல வாழ்வை அமைத்துக் கொண்டவர் பலர் உண்டு. அதில் இலங்கை இந்திய தமிழ் மக்கள் வெற்றி கண்டுள்ளார்கள் என்பதனை பெருமையுடன் இதில் பதிவு செய்து கொள்கின்றேன்.

இசைவாக்கத்தின் கருத்தினை பிழையாக விளங்கிக் கொண்டு தம் அடையாளங்களை இழந்தால் தான் அன்னிய இனத்துடன் ஒட்டமுடியும் என்ற வகையில் வாழ்வை அமைப்பவர்கள் தான் பல கலாச்சாரச் சிக்கலைச் சந்திக்கின்றார்கள். அல்லது கலாச்சார பிறழ்வுகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

“நாம்” என்று முதன்மைப்படுத்தப்பட்ட தாய்வழிக் கலாச்சார சூழ்நிலையில் இருந்து, “நான், எனது” என்பதனை முதன்மைப்படுத்தும் பொருளாதார கலாச்சாரச்சூழ்நிலைகளுக்கு வரும் பொழுது இந்த அடிப்படை மாற்றத்திற்கு இசைவுபடுவது இலகுவான விடயமல்ல.

அத்துடன் இந்த “நான், எனது” என்ற கலாச்சார மாற்றத்தை எம்மவரும் முற்றாக உள்வாங்கிய பொழுது எம் தாயக உறவுகளுடன் ஆன உறவின் இடைவெளி அதிகரித்துக் கொண்டு போகின்றது.

அவர்கள் அங்கிருந்து "நாம்" எனப் பார்க்கின்றார்கள். நாங்களோ இங்கிருந்து "நான்" எனப்பார்க்கின்றோம். இங்கேதான் இசைவாக்கத்திற்கு எதிரான முட்டுக்கட்டை முதலில் தெரிகின்றது அல்லது உணரப்படுகிறது.

## புதிய தமிழ்க் கலாச்சாரம்

மேலாக மேலைத்தேய நாடுகளின் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப ஊதியம் அல்லது அரச உதவிகள் கிடைத்த பொழுது, அது எமது நாட்டு பின்னணியில் வாழ்ந்தோருக்கு மிகப்பெரிய தொகையாக மாறியது.

அதன் ஒரு பகுதி இலங்கையின் போராட்டத்திற்கும் வேறு பல தான தருமங்களுக்கும் பின் புலமாய் உதவிய பொழுது அதன் மறுபகுதி தம் வாழ்வியல் தரத்தை உயர்த்தும் ஒரு சில போலித் தனங்களுக்கு பயன்படுத்தப்படத் தொடங்க பின்பு கால ஓட்டத்தில் பலர் அதன் காரணகாரியங்களை ஆராயமாமல் அந்த ஓட்டத்தில் இணைய ஆரம்பித்து விட்டார்கள்.

உதாரணமாக புலம் பெயர்நாடுகளில் நிகழும் அதிகமான கோயில் வைபவங்கள் விடுமுறை நாட்களில் நடைபெறுவதற்கு ஏதுவாக மாற்றி அமைக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம். ஆயுதங்கள் மௌனமாக்கப்பட முன்பு மாவீரர் தினங்கள் என்ன தினத்தில் வந்தாலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவரின் மாவீரர்நாள் உரையைக் கேட்பதற்கு மக்கள் பகுதிநேர லீவு எடுத்துக் கொண்டு மண்டபங்களில் கூடியிருந்தார்கள். ஆனால் தேரின் சக்கரங்கள் சனி, ஞாயிறுகளில் தான் உருண்டது. இந்த மாற்றம் அல்லது மாற்றமின்மைக்கு கீழ் வரும் கதையின் பகுதி சிறந்த உதாரணம்.

*அழைப்பிதழ் தொடக்கம் விழாவுக்கு வந்து போவோருக்கு குடுத்தனுப்பும் குத்து விளக்கு முதல் குங்குமச்சிமிழ் வரை தாங்களே பார்த்து வேண்டி தம் கைகளிலேயே எடுத்து வந்திருந்தார்கள்.*

*(குறிப்பு: இந்த இடத்தில் இலங்கை, இந்திய வாசகர்கள் திகைக்க வேண்டாம். இந்த குத்துவிளக்குக் கலாச்சாரம் என்பது இங்கு புதிதாய் புகுத்தப்பட்ட ஒன்று).*

*கலியாண வீடுகளில் பெயின்ற மணம் மாறாத ஒரு பிளாஸ்ரிப் பையுள் மூன்று காய்ந்து போன வெத்திலையும். . . கொஞ்சம் பாக்கு சீவலும். . . சில வேளைகளில். . . ஒரு தேசிக்காய். . . அதையும் தாண்டினால் ஒரு வாழைப்பழம் அல்லது தேங்காய் முடி ஒன்று கிடைத்திருக்குமே. . . .அந்தப் பைக்குப் பதிலாக வந்தது தான் இந்தக் குத்து விளக்கு!*

*ஒவ்வொருவரின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப இந்தக் குத்துவிளக்குகளின் அளவு சிறிதாகலாம். . . அல்லது பெரிதாகலாம். . . .)*

*(நன்றி : யாவும் கற்பனை அல்ல)*

அவ்வாறே தாலிக்கொடிகளின் எடை அதிகமாகிச் செல்லும் எங்கள் நகைக்கலாச்சாரம், திருமணப் பெண்ணுக்கு கட்டாயமாக ஒரு பல்கலைக்கழகத் தகுதியும் உயர்பதவியும் இருக்க வேண்டும் என அதிகரிக்கும் மனநிலை என்பவற்றை மாறி வரும் வாழ்வுக்கு உப உதாரணங்களாக குறிப்பிடலாம். இவ்வாறு பணக்கார நாடுகளுக்கு புலம் பெயந்தவர்களின் முகங்கள் சிறிது சிறிதாக மாற்றமடையத் தொடங்கியது என்பது இன்று கண்கூடு.

## சிறுகதைத் தொகுதி

இந்த புதுச்சூழலில் இந்த புதியவர்களின் முகங்களை எம் தாய்மண்ணில் வாழ்பவர்களுக்கும் மற்றைய மற்றைய நாடுகளில் வசிப்பவர்களுக்கும் காட்டும் ஒரு முயற்சிதான் 'முகங்கள்' என்ற இந்த சிறுகதைத் தொகுதி.

இந்தக் கதைத்தொகுதியில் இடம் பெற்றிருக்கும் அநேக கதைகள் கலாச்சாரப் பிறழ்வுகளைகண்டு வேதனைப்படுவனவாயும், கோபம் கொள்வனவாயும், அல்லது ஏற்றுக் கொள்வனவாயும் அமைந்திருந்தன.

அதில் இரண்டு விடயங்கள் என் மனதை தொட்டன.

1. தாய்வழிச் சமூதாயத்தின் காவிகள் பற்றியது.
2. புதிய தமிழ்ச் சொற்கள் பற்றியது.

தென்கிழக்காசிய நாடுகள் தாய்வழிச் சமுதாயத்தின் வழி வந்தது என்று சமூக ஆராச்சியாளர்கள் கூறுவார்கள். கலாச்சாரத்தின் காவியாக தாய் விளங்குகின்றாள். தாய், தாய்நாடு, தாய் மாமன் மற்றும் தாய்வழி உறவுகள் மிகவும் பலமானவையாக விளங்குகின்றன.

கணவன் எவ்வாறு நடந்தாலும் மனைவியோ... அல்லது தாயோ அந்த குடும்பத்தின் கௌரவத்தை காப்பாற்றும் காரணியாக சித்தரிக்கப்பட்டது மட்டுமின்றி அதைப் பேணியும் நடத்தி வந்தாள். ஆனால் ஐரோப்பிய பொருளாதார அமைப்பில் அந்த உறவுமுறை பொருளாதாரப்புரட்சியுடன் உடைபட்டுப் போய்விட அந்த நாட்டில் வாழ வந்த எம் உறவுகளுக்கும் அதன்பின் இருந்த நியாஜயங்களை ஏற்ககூடியதாய் இருந்தது. இதனை இந்தக் கதைகளில் காணக்கூடியதாக இருந்தது மட்டுமின்றி ஆணின் கலாச்சாரச்சீரழிவை கண்டும் கண்மூடிக் கொண்டு, பெண்ணின் கலாச்சீரழிவைக் கண்டு சகிக்கமுடியாமல் தலைதலையாய் அடிப்பதை காணக்கூடியதாய் இருக்கிறது.

சமூகநீதிகளை “ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவென வைப்போம்” என என்றோ சொன்னதால் தான் மகாகவி தீர்க்தரிசி எனச் சொல்லப்பட்டான் என மீண்டும் எனது மனம் சுப்பிரமணிய பாரதியாரை ஆமோதித்தது.

அடுத்தது என்னைச் சிந்திக்க வைத்த விடயம் தமிழில் புதிய சொற்கள் பற்றி ஒரு கதையில் அலசப்பட்டு இருந்தது. குளிர்களி, வெதுப்பகம், மகிழூர்ந்து இப்படி எத்தனையோ சொற்களை புலம் பெயர்ந்த பிள்ளைகளின் தமிழ்ப் பாடப்புத்தகங்களில் காணமுடியும். இதனைப் பற்றி எனக்குள்ளேயே ஆதரவாயும் எதிராயும் இரு கருத்துகள் இருந்து வந்தன.

புதியன புகுதல் ஆரோக்கியமானவை. ஆனால் இவை அங்கீகரிக்கப்பட்டனவையா? இதன் எல்லைகள் புலம் பெயர்நாட்டு தமிழ்ப் பாடசாலைகளில் மட்டும் தானா? இவை பாவனையில் இருக்கின்றனவா? அல்லது பள்ளிப் புத்தகங்களுடன் மட்டும் தான் இதன் எல்லைகள் இருந்து விடப் போகின்றனவா? எந்த புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஆவது இந்த சொற்பதங்களை தம் படைப்புகளில் பாவிக்கின்றார்களா?

இவ்வாறு எனக்குள் உறங்கிக்கிடந்த இந்தக் கேள்விகளை அ...ஆ...இ... என்ற சிறுகதை மீண்டும் கேட்டிருக்கின்றது.

## ஐந்து புதிய எழுத்தாளர்கள்

இந்த தொகுப்பில் 50 கதைகள் இடம் பெற்றுள்ளது.

குறிப்பாக ஐந்து புதிய எழுத்தாளர்களின் கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. தாங்கள் புதிய எழுத்தாளர்கள் என்ற தயக்கத்துடனே என்னை அணுகினார்கள். அவர்களிடம் கதைகளை அனுப்புங்கள் எனக்கூறிவிட்டு ஆவலுடன் காத்திருந்தேன். கதைகள் வந்த பொழுது அவர்களின் கதைகளில் கரு நன்கு பேசியிருந்தது. உண்மையும் சத்தியமும் ஒரு படைப்பாளியின் படைப்பை தூக்கி நிறுத்தும் என்பதற்கு இந்த 5 கதைகளும் சாட்சியம் என என் மனம் மகிழ்ந்தது.

மற்றைய அறியப்பட்ட 45 எழுத்தாளர்களைப்பற்றிய அறிமுகங்களோ அல்லது அவர்களின் புகைப்படங்களோ இதில் பிரசுரமாகவில்லை.

எழுத்துக்கள் மூலம் எழுத்தாளர்கள் இனம் காணப்படும் பொழுதுதான் வீரியமான எழுத்துகள் எம்மிடையே வளரும் என்ற எனது நம்பிக்கைதான் அந்த அறிமுகப்படலத்தை தவிர்த்தது. கதையின் புவியியல் களத்தை இனம் காண்பதற்காக அவர்கள் தற்சமயம் வசிக்கும் நாடுகளின் பெயர்களை குறிப்பிட்டுள்ளேன்.

சர்வதேச எழுத்தாளர் மகாநாடு பற்றிய சர்ச்சை எழுந்திராவிடின் இன்னும் சில ஆசிரியர்களின் கதைகள் இதில் இடம் பெற்றிருக்கும். தங்களின் நிலைப்பாட்டை எனக்கு எடுத்துரைத்து அடுத்தடுத்த முயற்சிகளில் பங்கெடுப்பதாக உறுதியளித்தார்கள்.

ஆரோக்கியமான சிந்தனைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் விஸ்வசேதுவின் கதவுகள் என்றும் திறந்திருக்கும்.

இந்தக் கதைகளில் வரும் சம்பவங்கள் அல்லது அரசியல் நிலைப்பாடுகள், கோட்பாடுகள் அனைத்திற்கும் ஆசிரியர்களே முழுப்பொறுப்பானவர்கள் ஆவார்கள்.

## நன்றிக்குரியவர்கள்

1. இலங்கையில் உள்ள பத்தாம் தரத்திற்கு மேற்பட்ட தமிழ் கற்பிக்கும் பாடசாலைகளுக்கும், நூல்நிலையங்களுக்கும் இலவசமாக புத்தகங்களை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட விஸ்வ சேது இலக்கியபாலத்தின் முதல் முயற்சிக்கு தங்கள் கதைகளையும் பொருளாதார உதவியையும் தந்த அனைத்து எழுத்தாளர்களும் என் நன்றிக்குரியவர்கள் வரிசையில் முதலிடத்தில் நிற்கின்றார்கள்.

2. அனைத்துக் கதைகளுக்கும் மிகக் குறுகிய காலத்தில் ஓவியங்கள் வரைந்து தந்தும் அட்டைப்படம் அமைத்துத் தந்த ஓவியர். திரு. கௌதமனுக்கும்,

3. இந்நூலை வடிவமைத்து தந்த இவள் பாரதி மற்றும் அவரின் தோழிகளுக்கும்,

4. இதனை அழகுற அச்சிட்டோருக்கும், எழுத்துப் பிழை திருத்தி தந்த நண்பர்களுக்கும்,

5. இந்த பணியின் பல இடங்களில் எனக்கு பல விதங்களில் உதவிய அனைத்து எழுத்தாள நண்பர்களுக்கும் குறிப்பாக திரு. கருணாகரமூர்த்தி (பெர்லின்), திருமதி. சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி), திரு. முருகபூபதி (அவுஸ்திரேலியா), திரு. அகில் (கனடா), டாக்டர். திரு. ஞானசேகரன் (இலங்கை) அனைவருக்கும் எனது நன்றிகள்.

இங்ஙனம்

விஸ்வசேது இலக்கியப்பாலம் சார்பாக

வி. ஜீவகுமாரன்

01-01-2011

## உள்ளடக்கம்


1. **முதிர்பனைகள்** – 17
அகில், நியூசிலாந்து
2. **பேரணங்கு** – 28
தேவகாந்தன், கனடா
3. **அம்மா அம்மாதான்** – 40
யோகேஸ்வரி சிவப்பிரகாசம், இலங்கை
4. **லா சப்பல்** – 46
ஜோதிலிங்கம், பிரான்சு
5. **எல்லாம் இழந்த பின்பும்** – 54
சாந்தினி வரதராஜன், ஜேர்மனி
6. **எனக்காகவே நான்** – 68
சு. சிறிஸ்கந்தராஜா, அவுஸ்திரேலியா
7. **அர்த்தமுள்ள மௌனம்** – 84
'நிலக்கிளி' பாலமனோகரன், டென்மார்க்
8. **தற்கொலை** – 95
கலையரசன், ஹொலண்ட்
9. **ஜேர்மனியில் ஒரு நகரம்** – 109
ரவி அருணாச்சலம், இலண்டன்
10. **அறிவி[லி]ப்பாளர்** 126
'வீரகேசரி' மூர்த்தி, கனடா
11. **அமீருக்கு இரண்டு கேக்** – 134
ரெ. கார்த்திகேசு, மலேசியா
12. **வள்ளி ஆச்சி செத்துப்போனா!** – 142
'குப்பிளான்' ரவிஜன், இந்தியா
13. **சாம்பல்** – 155
வசந்தி, சுவீடன்
14. **வலையில் விழுந்தவள்** – 163
துறையூரான், கனடா
15. **சலனங்களுக்கு வயதில்லை** – 174
நடேசன், அவுஸ்திரேலியா
16. **தாடகையும் தண்டனையும்** – 187
கோபன் மகாதேவா, இலண்டன்
17. **அல்லல்** – 198
தியாகலிங்கம், நோர்வே

18. **இருத்தலை தொலைத்த தமிழ்** – 212
ராம் பிரசாத், இந்தியா
19. **இடியும் மின்னலும்** – 221
சரோ வர்ணன், கனடா
20. **அம்மனும் அடியவரும்** – 228
'மயிலிட்டி' சிவபாலன், சுவிற்ஸ்லாந்து
21. **நானும் மனைவியும் திருவள்ளுவரும்** – 238
கணேசலிங்கம், பிரான்சு
22. **திருஞானம்** – 252
'மட்டுவில்' ஞானக்குமரன், கனடா
23. **முகவரியைத் தொலைத்த முகம்** – 260
'இணுவையூர்' சக்திதாசன், டென்மார்க்
24. **அ. . . ஆ. . . இ. . .** – 271
சிவனேசன், இத்தாலி
25. **வரம்பு உடைத்தல்** – 280
மேழிக்குமரன், ஜேர்மனி
26. **தடைமுகாம்** 290
நவஜோதி யோகரட்னம், இலண்டன்
27. **சக்கரம்** 301
ஜெயந்தி சங்கர், சிங்கப்பூர்
28. **பேரழகியும் அரபுநாட்டு பாதணிகளும்** – 311
எம். ரிஷான் ஷெரீவ், இலங்கை
29. **பாவம்** – 318
'நோர்வே' நக்கீரன், நோர்வே
30. **இது இவர்களின் காலம்** – 324
அகிலேஸ்வரன், கனடா
31. **வேர் பிடிக்காத இயலாத அழுகும் மனங்கள்** – 338
கௌரி, மலேசியா
32. **சக தர சய சமன்** – 347
கௌசல்யா சொர்ணலிங்கம், ஜேரர்மனி
33. **தலைமுறை இடைவெளிகள்** – 355
என். முரளி, டென்மார்க்
34. **கலாச்சார அதிர்ச்சி** – 367
யோகா பாலச்சந்திரன், கனடா
35. **சாத்திரம் உண்டோடி!** – 377
ஆசி. கந்தராஜா, அவுஸ்திரேலியா
36. இரண்டாம் **யஸீர் அரபாத்** – 385
அஷ்ரஃப் சிஹார்ப்தீன், இலங்கை

37. **இது எனது நகரம் இல்லை** – 394
இவள் பாரதி, இந்தியா
38. **ஆதலினால் காதல் செய்வீர்!** – 408
பாலசந்திரன் சுந்தராம்பாள், ஜேர்மனி
39. **பிற்ஸா!** – 416
நடராஜா முரளிதரன், கனடா
40. **புதியபாடம்** – 423
விஜயராணி, அவுஸ்திரேலியா
41. **யாகாவாராயினும் நாய் காக்க!** – 439
'கனடா' மூர்த்தி, சிங்கப்பூர்
42. **தடம் மாறும் தார்ப்பரியம்** – 455
ஸ்ரீரஞ்சனி, கனடா
43. **அகலிகை** – 461
அருணாச்சலம், அமெரிக்கா
44. **கணங்கள்** – 471
முருகபூபதி, அவுஸ்திரேலியா
45. **திருமணம்** – 481
பவதாரிணி, சுவிற்ஸ்லாந்து
46. **யாவரும் கேளீர்** 489
சித்ரா ரமேஸ், சிங்கப்பூர்
47. **பணம்** – 498
கஸ்தூரி வசந், சுவீடன்
48. **விருந்தோம்பல்** – 506
அ. முத்துலிங்கம், கனடா
49. **முட்டர்பாஸ்** – 513
பொன். கருணாகரமூர்த்தி, பேர்லின்
50. **நிர்வாண மனிதர்கள்** – 529
வி. ஜீவகுமாரன், டென்மார்க்

# முதிர்பனைகள்

## அகில்-நியூசிலாந்து



பார்வதி மாமியின் இறுதிக் காரியங்கள் யாவும் சிறப்பாக நடந்து முடிந்து விட்டது.

அவரின் இயற்பெயர் பார்வதி கணபதிப்பிள்ளை. திருமணத்தின் பின் பார்வதி இராஜரட்ணம்.

நியுசிலாந்தில் அவர் மேல் மற்றவர்களுக்கு உள்ள மரியாதையும் அவரின் பண்பும் இணைந்து அவரை பார்வதி மாமி ஆக்கியிருந்தது.

அவரின் இறுதிச் சடங்கிற்கு உற்றம் சுற்றம் என உலகத்தின் எல்லாப்பாகத்திலும் இருந்து உறவினர்கள் வந்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்திலேயே பெயர்பெற்ற குடும்பம். கணவன் இராஜரட்ணம் அதிபராய் இருந்து பின் அவுஸ்திரேலியாவிற்கு இடம் பெயர்ந்து பின் பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றியவர்.

பின்பு ஒரு நியூசிலாந்து அமைச்சில் உயர் பதவி கிடைத்ததால் நியூசிலாந்துக்கு வந்து தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தவர்.

நான்கு வருடத்துக்கு முதல் இதய அடைப்பு வந்து பின் மூன்றாம் நாள் அதிகாலையில் ஆஸ்பத்திரிக் கட்டிலிலேயே கண்ணை மூடிவிட்டார். மூத்த மகன் அதே ஆஸ்பத்திரியில் இதயசத்திர சிகிச்சை நிபுணர். ஆனாலும் மரணத்தை தடுக்க முடியவில்லை.

கடைசிவரை இராஜரட்ணத்திற்கு இருந்த கவலை தனது மூன்று மகன்களில் யாரோ ஒருவரின் மனைவியையோ அல்லது பேரக்குழந்தையோ காணாதது தான். இதே கவலை பார்வதி மாமிக்கும் இருந்தது.

எட்டுச் செலவுக்கு பார்வதி மாமிக்கு விருப்பமானவற்றை படைக்க வேண்டும் என்று ஆயத்தங்கள் செய்த பொழுது வாய்த்துடுக்கான உறவுக்காரப் பெண் ஒருத்தி சொன்னாள், "உந்த றோட்டாலை போற மூன்று பெட்டையளை பிடிச்சுக் கொண்டு வந்து படையலுக்கு முன்னாலை நிற்பாட்டுங்கோ. பார்வதி மாமியின்ரை ஆவி அந்தரப்படாமல் போய்ச் சேரும்" என்று.

*

நான் தான் மூத்தமகன் சேர்ஜன் சிவரூபன். எனக்கு இப்போ வயது 46. அப்பா அம்மா தங்கடை மருமக்களை பார்க்காமல் போனதுக்கு நாங்கள் மூன்று ஆம்பிளைப்பிள்ளைகளும் காரணமாய் போனோம் என்று எங்கடை எல்லா ரிலேற்றிவ்சும் குற்றம் சாட்டினம். என்ரை யங்க பிறதேர்ஸ் பற்றி தெரியாது. நான் அவங்கட பேர்சனல் அலுவல்களிலை தலையிடுறதும் இல்லை. மற்றது நான் கட்டாமல் இருந்து கொண்டு அவன்களை கட்டு எண்டு அட்வைஸ் பண்ணுறதும் நியாயம் இல்லை.

அப்பா அம்மாக்கு வடிவாய் தெரியும் ஏன் நான் திருமணம் செய்யவில்லை எண்டு. அவர்கள் தான் காரணம்.

நிர்மலா எங்கள் யுனிவேசிற்றிக்கு வந்த பொழுது அவளுக்கு 22. எனக்கு 26. ஒரு நாள் வீட்டை கூட்டி கொண்டு வந்தேன்.

அப்பா, அம்மாக்கும் நல்லாய் அவளை பிடித்திருந்தது. யாழ்ப்பாணத்தில் அவள் ஊரையும் அவள் உறவினரையும் அப்பா அம்மா விசாரித்த பொழுது பிடிக்காமல் போய்விட்டது.

இருபத்தியொராம் நூற்றாண்டில் இப்படி ஒரு பதினெட்டாம் நூற்றாண்டு மனிதர்களாக அப்பா அம்மா நடந்து கொள்வார்கள் என நான் நினைக்கவே இல்லை. கடைசிவரை நிர்மலாவைத் தான் கட்டுவேன் என பிடிவாதமாய் இருந்தேன்.

அப்பாக்கு பழைய எம்.பிக்கள் சட்டதரணிகளுடன் பழகி சரியான கிரிமினல் மூளை. நேரே நிர்மலா வீட்டாருடன் தொடர்பு கொண்டு, "சாதியிலை மேலை வருகிறதுக்கு தானே இந்தப் பாடுபடுகிறியள்" என்று கேட்டிருக்கிறார்.

அப்பா எறிந்த இந்த ஈட்டி நிர்மலா குடும்பத்தை நன்கு தாக்கி விட்டது. நிர்மலாவாகவே விலகிக் கொண்டாள்.

எக்ஸ்கியூஸ் கேட்டு எத்தனையே தடவை நிர்மலாவை தொடர்பு கொண்டேன்.

"சிவரூபன். . .எங்கள் காதலுக்காக என்னை கஷ்டப்பட்டு வளர்த்த அப்பா, அம்மா, மேலாக எங்கள் சாதி உங்கள் குடும்பத்திற்கு முன்னால் கைகட்டி நிற்க வேண்டாம்" என உறுதியாகச் சொல்லி விட்டாள்.

பின் எனக்கு எல்லாமே வெறுத்த மாதிரிப் போட்டுது. ஆஸ்பத்திரியும் யுனிவேசிற்றியும் தான் தஞ்சமாய் போச்சு.

பெரிய ஹார்ட் சேர்ஜன் என்று பெயர். பட்... ஹார்ட்லெஸ் பேரன்ஸ்க்கு பிள்ளையாக பிறந்திட்டன்.

பின்பு அப்பா அம்மா எத்தனையோ இடங்களில் எத்தனையோ பார்த்தவர்கள். எனக்கு எதிலுமே என்னை இன்றுவரை கொம்பிறமைஸ் பண்ண முடியேல்லை. அது அப்பா அம்மாக்கும் தெரியும். அப்பா அம்மா இறந்தது பொழுது கூட என்னுடன் இருந்த இருவர் மிஸ்ஸிங் என யோசித்தேனே தவிர இந்த உலகத்தில் இருந்து இரு நல்லவர்கள் செத்து விட்டார்கள் எனக் கவலைப்படவில்லை.

*

நான் தான் இரண்டாவது மகன் சிவநேசன். வயது 39. மறைன் எஞ்ஜினியராக இருக்கின்றேன். கொன்றோய் றிமோவல் லிமிற்றட் என்ற பிரபல கம்பனிக்கு சொந்தமான ஒரு கப்பலின் தலையாய எஞ்ஜினியராக இருக்கின்றன்.

நான் கல்யாணம் செய்யாமல் இருந்ததுக்கு காரணம் அப்பா அம்மா இல்லை.

நான்தான்!

நாள் கணக்காக அல்லது மாதக்கணக்காக கடலினுள்ளும் கடலின் எஞ்ஜின் ரூமுக்குள்ளும் இருக்கின்ற என்னைப் போன்ற சீமென்களுக்கு கடற்கரையும் கடற்கரையில் சந்திக்கும் கன்னிகளும் தான் சுவர்க்கம். எந்த நாட்டின் கரையில் கப்பல் நங்கூரம் இருகின்றதோ அந்த நாட்டில் எங்களுக்கு முதலிரவு தான்.

ஐந்து கண்டங்களிலும் வறுமையும் விபச்சாரமும் இருக்கும் வரையும் எங்களைப் போன்ற பணம் படைத்த சீமென்களின் வாழ்க்கையில் உடலின்பத்திற்கு குறையிராது.

இந்த வாழ்க்கையை இயல்பாக எடுத்து விட்ட எனக்கு அப்பா அம்மா பார்த்த பெண்களையும் சாதகங்களுடன், கூடிய அவர்களின் படங்கள் எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது பாவங்களாய் இருக்கும். அந்தப் படங்களை செக்ஸ் கண்ணோட்டத்துடன் மட்டுமே பார்த்தேன். அவர்களில் யாராவது ஒருவரை திருமணம் செய்தாலும் அடுத்த முறைக் கடற்பயணத்தில் யாரோ ஒரு ஆபிரிக்க பெண்ணுடன் அல்லது இத்தாலிப் பெண்ணுடன் என் கபின் கட்டிலிலை பகிர்ந்து கொள்ளத்தான் போகின்றேன். இதற்கு பிறகு இந்த கற்பு, ஒருத்திக்கு ஒருவன் என்ற எந்த சதுரங்களுக்கும் நடுவில் நின்று என்னையும் அவளையும் ஏமாற்றிக் கொண்டு நிறக முடியாது. அதைவிட எத்தனை பேருக்கு தெரியுமோ தெரியாது நாங்கள் கடலில் நாடடுக்கு நாடு பொருடகளை மட்டும் ஏற்றிச் செல்வதில்லை.

நாட்டுக்கு நாடு பாலியல் நோய்களையும் தான் எடுத்துச் செல்கின்றோம். எல்லாம் பாதுகாப்பான உடலுறவு தான். ஆனால் அதையும் தாண்டி சில அசம்பாவிதங்கள் நடந்து விடுகிறது. மரணத்தின் கதவுகள் தட்டும் பொழுதுதான் அதன் பெறுபேறுகள் தெரியும்.

இது தெரிந்தும் யாரோ ஒருவர் பெற்று சீராட்டி வளர்த்து நியூசிலாந்தில் எஞ்ஜினியர் மாப்பிளையாம் என வரும் ஒரு பெண்ணுக்கு எதற்காக இன்றில்லாவிட்டாலும் நாளை ஒரு நோயைக் கொடுக்கவேண்டும்? ஆஸ்பத்திரிக்கட்டிலில் எதற்காக அவள் படுத்திருந்து எதற்காக தனது பிறப்புறுப்புகளை வைத்தியர்களுக்கு காட்டிக் கொண்டிருக்க வேண்டும்?

குழந்தைப் பேறு வேறு... இது கொடுமை.

தனக்கு எதனால் நோய் வந்தது எனத் தெரியாமல் வைத்தியம் செய்வது கொடுமை! எனவே தான் நான் திருமணமே செய்து கொள்ளவில்லை.

இது அப்பா அம்மாக்கு கடைசிவரை வருத்தம் தான். இதற்கான காரணங்களை அவர்களுக்கு சொல்லவே இல்லை. அதனால் கடைசிவரை இலங்கையிலும் கனடாவிலும், அவுஸ்திரேலியாவிலும், இங்கிலாந்திலும் இருக்கிற சாத்திரிமார்களுக்கும் புறொக்கர்மார்களுக்கும் அம்மா காசைச் செலவழித்துக் கொண்டே இருந்தா. படங்களும் வந்து கொண்டு இருந்தன. சேலைகளுடன் பஞ்சாபிகளுடன் சுரிதார்களுடன் வீட்டுக்கு உள்ளேயும் பூந்தோட்டங்களிலும் இருந்து.

ஒவ்வொரு முறையும் அப்பா அம்மா வீட்டுக்கு வர இருக்கும் மகாலட்சுமி எனப் பார்ப்பார்கள். நான் அனுதாபத்துடன் அவற்றைப் பார்த்து விட்டு வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போவேன்.

"தமிழ் பிள்ளைகளின் அருமை உனக்கு தெரியவில்லை" என அம்மா அடிக்கடி சொல்வா. "கப்பல் சிங்கப்பூருக்கோ, மலேசியாக்கோ, இந்தியாக்கோ அல்லது கொழும்புக்கோ போகும் பொழுது பார்த்துக் கொள்ளலாம்", என மனதுள் நினைத்துக் கொள்வேன்.

இப்போ அம்மாவும் போயிட்டா... இனிப் படங்களும் வரா.

*

சிவரூபன், சிவநேசன் வரிசையில் நான் சிவச்செல்வன்.

வயது 32. மூன்றாவது ஆண்பிள்ளை. கடைக்குட்டி.

அப்பா அம்மா விருப்பப்பட்டபடி பைலற் ஆகவும் விமானத்துறையுடன் சார்ந்த கொம்பியூட்டர் துறையிலும் பட்டப்படிப்பையும் முடிந்திருக்கின்றேன்.

சிறிய வயதில் கறுத்த அல்லது நீல உடையுடன் எயகொஸ்றேர்ஸ் பின்தொடர கைப்பெட்டியை இழுத்துக் கொண்டு வரும் கனவு இருந்தாலும் பின்பு வளர வளர எனக்கு போர்விமானங்கள் மீது நாட்டங்கள் ஏற்பட்டது.

அந்த துறையில் படிப்பதற்கு அதிக பணம் தேவைப்பட்டது. அப்பா அது பற்றி நீ கவலைப்படாதை எனச் சொல்லி விட்டார்.

அமெரிக்காவில் தான் திறமான போர்விமானப் பயிற்சிக் கூடம் இருக்கு என அனுப்பி வைத்தார்கள்.

அம்மா தினமும் தொலைபேசியில் அழைப்பா. குளித்தாயா? சாப்பிட்டாயா? எனத் தினம் தொலைபேசிகள் வந்து கொண்டிருக்கும். காசு வீண் வேண்டாம் என்று சொன்னாலும் கேட்கமாட்டா.

மூத்த அண்ணா அவர்களுடன் இருந்ததால் அவருக்கு அந்த தொலைபேசிப் பிரச்சனை இல்லை.

இரண்டாவது அண்ணா எந்தக் கடலில் இருந்தாலும் வஜலஸ் மூலம் கதைக்க வேண்டும் எனக் கட்டளை. என்னை அவா நித்திரையால் எழுப்பி விட்டுத் தான் அவா நித்திரைக்குச் செல்வா.

நியுசிலாந்தில் இரவு பத்தரையாகும் பொழுது நியோர்க்கில் காலை ஆறரையாகும்.

எனது பட்டமளிப்பு விழாக்கு அம்மாவும் அப்பாவும் இரண்டு அண்ணாமாரும் நியூயோர்கிற்கு வந்திருந்தார்கள்.

கூடவே கலிபோனியாவில் இருக்கிறா மாமா மாமியும் அவர்களின் ஒரேமகளான சியாமியும் வந்திருந்தாள்.

பட்டமளிப்பு விழாவுக்கு பின்பாக ஐந்து நட்சத்திர ஹோட்டலில் எமக்கு மாமா குடும்பத்தினர் அளித்த விருந்துபசாரம் ஒரு வகையில் எனக்கான நிச்சயதார்த்தமாகவே பட்டது.

ஆனால் எதையும் யாரும் நேரடியாக பேசிக்கவில்லை. அம்மா அவளை வடிவாக பார்த்து விட்டு வா எனச் சொல்லிக் கொண்டேயிருந்தா.

நான் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவளும் என்னைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அடுத்த இரண்டு வருடங்களில் அவளது சட்டத்தரணி படிப்பு முடியுது என மாமா சொன்னார். அதற்கு அர்த்தம் நீங்கள் இருவரும் பொறுத்திருக்க வேண்டும் என்பது தான்.

அடுத்த வருடம் ஈராக் யுத்தம் ஆரம்பமானது.

ஒரு போர் விமானத்திற்கு விமானியோட்டி நான்.

பின்பென்ன? வானத்தில் வாணவேடிக்கை தான்.

கட்டளைக்கு காத்திருத்தல். . . நகரங்களுக்கும் பாலைவனங்களுக்கும் மேலான பறப்புகள். . . சொன்ன இடத்தில் குண்டுகளை பொழிதல். . . .

விளைவுகள், அதன் பின்னான அரசியல்கள் எது பற்றியும் நான் கவலைப்படவில்லை.

குண்டுகளை பொழிவதும் தாக்கவரும் றொக்கட்டுகளில் இருந்து தப்புவதும் விளையாட்டாகவே இருந்தது.

மாலையில் சென்ற விமானங்கள் அனைத்தும் தளத்திற்கு திரும்பியிருக்கமாட்டா.

அதனைப் பற்றி யாரும் கேட்கவும் மாட்டார்கள். கேட்கவும் கூடாது. அது இராணுவவிதி.

சதாமின் கைதிற்கு பிறகு எங்கள் குழு அமெரிக்காவிற்கு திரும்பி விட்டது.

நானும் மூன்று மாதலீவில் நியுசிலாண்ட்டிற்கு திரும்பி விட்டேன்.

அந்த ஓய்வில் ஈராக்கில் நடந்த மனிதக் கொடூரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத் தொடங்க எனக்கு மனம் படபடக்கத் தொடங்கியது. அங்கிருக்கும் வரை எதுவும் தெரியவில்லை. ஆனாலும் அந்தப் போரில் மறைமுகச் சாட்சியாக இருந்தது மனதை வாட்டியது.

ஒரு மனோதத்துவ வைத்தியரைச் சந்தித்தேன்.

சில குளிசைகள் தந்தார். அவை கை நடுக்கத்தைக் குறைக்க கொஞ்சம் உதவியது. ஆனால் மனத்தில் வரும் படபடப்பும் அம்மா ஆசையுடன் என்னை அளவுக்கு மீறிக் கவனிக்க வரும் பொழுது அவா மீது வரும் தேவையற்ற கோபத்தையும் பெரிதாக குறைக்கவில்லை.

இது எதுவும் அப்பா அம்மாக்கு தெரியாது. தெரிந்தால் கவலைப்படுவார்கள் எனச் சொல்லவில்லை.

மூன்று மாதம் முடிய வேலைக்குத் திரும்ப வேண்டும்.

மனமில்லாது மீண்டும் அமெரிக்க பயணம்.

விமானநிலையத்துக்கு சியாமியும் மாமாவும் வந்திருந்தனர். நான் நன்கு களைத்திருப்பது போல இருப்பதாகவும் எனது பழைய உற்சாகம் மறைந்திருப்பதாகவும் சொன்னார்கள்.

மருந்துகள் என்னைக் களைக்க வைக்கின்றது என மனதுள் சொல்லிக் கொண்டேன்.

எங்கள் விமானத் தளபதியிடம் எனது பிரச்சனையை சொன்னேன்.

நான் ஏற்கனவே கற்ற விமானத்துறையுடன் சார்ந்த கம்பியூட்டர் துறையில் கடமையாற்றச் சொன்னார்.

மனமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டேன்.

அடுத்த அவர்களது புரஜட் இலங்கைப் போர்.

தரையில் இருந்து 500 மீற்றர் உயரத்தில் இருந்து எடுக்கப்பட்ட வன்னிப்பிரதேசத்தின் படங்கள் கம்பியூட்டரில் வந்து கொட்டிக்கொண்டு இருந்தது.

ஒழுங்கையில் செல்லும் ஒரு சின்ன ரைக்டர் தொடக்கம் வீதிகளில் செல்லும் பெரிய கவசவாகனங்கள் வரை வடிவாகத் தெரியும். புவியியல் படங்களின் அடிப்படையில் காற்றின் வேகத்தையும் கருத்தில் கொண்டு எந்த உயரத்தில் பறந்து கொண்டு என்ன வேகத்தில் குண்டு வீசவேண்டும் என்று என்று கணிப்பது எங்கள் குழவின் வேலையாக இருந்தது. எங்கிருந்து இந்த தகவல்கள் வருகின்றன எங்கு இவை அனுப்பப்படுகின்றன என்ற விபரங்களை அறியமுடியாமல் இருந்தது.

அனைத்து மெயிலும் எங்கள் இராணுவமுகாமின் மெயில் ஐடியுடன் வந்தது. அவ்வாறே பதில்களும் இராணுவமுகாமின் மெயில் ஐடிக்கு சென்றது.

எனக்கு அது பிடிக்கவே இல்லை. எனக்குள் இருந்த பதட்டம் அதிகரிக்க தொடங்கியது. அதிகமாக குளிசைகளை பாவிக்கத் தொடங்கினேன்.

நான் இந்த வேலையில் இருந்து விலகினால் இன்னொருவன் வரப் போகின்றான்.

எனவே வேலையை விடுவது இல்லை எனத் தீர்மானித்தேன். அப்பாவி மக்கள் பலர் இதில் அழியப் போகிறார்கள் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது. போர் தொடங்கி விட்டது.

சிலரையாவது என்னால் காப்பாற்ற முடியாதா? என என்னை நான் கேட்டுக் கொண்டே பத்துக் கணிப்பீடுகளில் ஒன்றையாவது வேண்டுமென்று பிழையாக அனுப்பினேன். ஒரு நாள் விமானத்தில் இருந்து போட்டு குண்டு ஒன்று இராணுவமுகாமின் மேல் விழுந்தது.

நான் கைது செய்யப்பட்டு அமெரிக்க இராணுவச் சிறையில் அடைக்கப்பட்டேன்.

விடுதலை அமைப்புகளுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம் என துருவி துருவி விசாரணைகள்.

எதற்கும் என்னிடம் பதில் இருக்கவில்லை நான் மனிதாமானத்தில் செய்தேன் என்பதை விட.

விசாரணையின் போது எனது டிஸ்பிறேசன் அதிகமாக இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். பின்பு எதுவுமே தெரியவில்லை. ஊசிகளும் மருந்துகளும் தான்.

மருந்துகள் எனது எடையைக் கூட்டி எனது தோற்றத்தையே மாற்றி வைத்திருந்தது. இந்த மருந்துகள் ஒருவரின் ஆண்மையை அல்லது பெண்மையை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கப்பண்ணிவிடும் என்ற உண்மையை அறிந்த பின்பு சியாமியை வேறு இடத்தில் கட்டிக் கொடுக்கச் சொல்லி விட்டு அம்மாக்கு கடிதம் எழுதி விட்டேன்.

அம்மாவுடன் தொலைபேசியில் கதைக்க அனுமதி மறுக்கப்பட்டு கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட்டது. அதுவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சிறையதிகாரிகள் பார்த்த பின்பு தான் கடிதம் எனக்குத் தரப்படும்.

இலங்கை யுத்தமும் எனது தண்டனைக்காலமும் முடிய நியூசிலாந்துக்கு வந்து விட்டேன்.

கம்பியூட்டரும் ரீ. வி. யும். இமெயில்களும் தான் என் உலகமாக மாறியது. இடையில் நான் பதவி இழந்தது நல்லது தான்.

இல்லாவிட்டால் இன்னும் பல விடயங்களுக்கு நான் மௌன சாட்சியாகி வாழ்நாள் முழக்க அவை என்னைக் கொன்றிருக்கும்.

அம்மாவைக் கடைசி நேரத்தில் நல்ல வடிவாக பார்த்த திருப்தி எனக்கு.

ஆனால் அம்மா அப்பா ஆசைப்பட்டபடி எங்கள் மூவருக்கும் திருமணம் ஆகவில்லை.

இனியும் திருமணம் என்பது எனக்கு இல்லை என்பதனை என்னால் உணரமுடிகிறது.


செத்த வீட்டுக்கு சியாமி வந்தபொழுது அவளின் கழுத்தில் தாலி இருந்தது.

வயிறு பெருத்திருந்தது.

அறையைப்பூட்டி விட்டு அதிகமாக அழுதிருந்தேன்.

# பேரணங்கு

தேவகாந்தன்
கனடா



குளோபல் குழுமத்து தொழிற்சாலை ஒன்றிலிருந்து சமீபத்திலுள்ள இன்னொரு தொழிற்சாலைக்கு மாற்றுத் தொழிலாளியாக ஒரு வாரம் வேலைசெய்ய அனுப்பப்பட்டிருந்த ரமணீதரன் சதாசிவம், அந்த ஒல்லியாய் உயர்ந்து வளர்ந்திருந்த பெண்ணை முதல்நாளான திங்கட்கிழமையிலேயே கவனம் பட்டிருந்தான்.

பெரும் பெரும் பலகைகளை அளவாக அறுத்து, அதில் துளைகள் இட்டுப் பொருத்தி தளபாடங்கள் தயாரிக்கும் அத் தொழிற்சாலையில், துளைகளிடும் இரண்டு மூன்று எந்திரங்களுள் ஒன்றில் அவளுக்கு வேலை. அவளுக்குப் பின் வரிசையிலுள்ள அறுவை எந்திரத்தில் பெரும்பலகைகளை வெட்டுவதற்கு உதவிசெய்வதற்காக விடப்பட்டிருந்த அவனுக்கு அவள் அங்கு வேலைசெய்த பத்தோ பதினைந்தோ வரையான பெண்களில் ஒருத்திதான் மதியச் சாப்பாட்டு நேரம்வரை.

அதுவரையில் தனியாக ஒரு எந்திரத்துக்குப் பொறுப்பாகவிருந்து அநாயாசமாக அறுத்த பலகைகளைத் தூக்கி எந்திரத்தில் வைத்து துளைபோட்டு அனுப்பிக்கொண்டிருந்தமையில் அவள் அங்கு வேலை பார்த்திருக்கக்கூடிய காலங்களின் நீள்மையைத்தான் அவன் கண்டுகொண்டிருந்தான். இரண்டு மணிக்கு மேலேதான் அவனை அதிசயப்பட வைத்த அந்தக் காட்சி கண்ணில் விழுந்தது.

அவளுக்கருகே ஆறடி உயரத்தில் ஒரு நடுத் தூணோடு இருந்துகொண்டிருந்தது அந்த இரும்பு அலுமாரி. எந்திர உபகரணங்களும் சாவிகளும் வைக்கப்பட்டு அசைவறுத்திருந்தது. அந்த அலுமாரியை உள்ளங்கையைப் பொறுக்கக் கொடுத்து சாய்ந்துநின்று தள்ளுவதுபோல நின்றுகொண்டிருந்தாள் அவள். மூன்று நான்கு வலுவான ஆண்கள் சேர்ந்தாலும் அரக்கிவிட முடியாதிருந்த அந்த அலுமாரியை இந்த ஒல்லிப் பெண் தள்ள முயல்கிறாளேயென்று ஒரு கேந்தி பார்வையிலோட அவளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது அவளது முகம் அந்த ஸ்திதியிலேயே அவனைநோக்கித் திரும்பியது.

தலையைச்சுற்றி அவள் கட்டியிருந்த துணி கூந்தலில் தூசி படிந்துவிடாதிருக்கப்போலும் என்பதுதான் அவனது எண்ணமாகவிருந்தது. நேர்நேராய்ப் பார்த்தபோது அந்தத் தோற்றம் அவனுக்கு அவளை ஒரு முஸ்லீம் பெண்ணாகக் காட்டியது. அவளை அவ்வாறாக ரமணீதரன் சதாசிவம் நினைத்ததற்கு தெளிவான காரணம் எதுவும் இருக்கவில்லை. யூதப் பெண்கள்கூட அவ்வாறு தலையில் துணி கட்டுவது வழக்கம். ஆனால் அந்த முகத்தின் அமைப்பு அவனை அவ்வாறுதான் எண்ணவைத்தது.

அவளது முகத்தில் இனங்காண முடியாத சோகமொன்று இழையோடிக் கிடப்பதாய் அவன் நினைத்தான். நெற்றியில், புருவ வெளியில், கன்னங்களில், நாடியில் நாள்பட்ட அச் சோகத்தின் மெல்லிய இருள் வரிகள்.

நாலரை மணிக்குள் அன்றைக்கான வேலையை முடிக்கவேண்டியிருந்த அவசரம் அவனை மேற்கொண்டு நினைவிலாழ்ந்து நிற்க அனுமதி மறுத்தது.

அவன் வேலையில் கருமமானான். அந்தளவில் அவளது இரும்பு அலுமாரியைத் தள்ளுவதுபோன்ற ஸ்திதி, தன் நாரி உழைவை முறிப்பதற்கானது என்பது அவனுக்குப் புரிதலாகியிருந்தது.

அன்று மாலை பஸ்ஸில் வீடுநோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தான் ரமணீதரன் சதாசிவம். என்றுமில்லாதவாறு தான் தனது வழக்கமான உற்சாகமெல்லாம் இழந்து வாடிப்போய் அமர்ந்திருப்பதாய் உணர்கை ஆகிக்கொண்டிருந்தது அவனுக்கு. அவனுக்கென்று சோகமெதுவும் இல்லை. அப்படியானால் அந்த உடல் மன வாட்டங்கள் ஏன் அவனில் வந்து விழுந்தன?

அவனைக் கூர்ந்து பார்த்த சிறிதுநேரத்தில் தனது பார்வையை அவள் திருப்பிக்கொண்டிருந்தாலும், அந்தப் பார்வைதான் தன்னுள் நிறைந்து தளும்பிக்கொண்டிருந்த துக்கத்தை தனக்குள் படியவைத்துவிட்டுப் போயிருக்கவேண்டுமென எண்ணிக்கொண்டான். பார்வைகள் செய்திகளைக் கடத்துகின்றன என கேள்வியில் பட்டிருக்கிறான். அவை உணர்வுகளையும் கடத்துபவை, சிலரின் பார்வைகளாவது அவ்வாறு செய்பவை;, என்பதை அன்றுதான் அனுபவத்தில் அவன் அறிந்தான்.

வீட்டில் அம்மாவும் அக்காவும் தொலைக்காட்சித் தொடர்களில் சிரித்தும், பரிதாபப்பட்டும், அழுகைகளில் அவலங்கொண்டும் உணர்வு வலயத்துள் அழுந்திக்கொண்டிருக்கையில், அவனுக்கு அன்று தொழிற்சாலையில் கண்ட அந்த ஒல்லியான உயர்ந்த பெண்ணும், அவளது முகத்தில் கண்ட இனம் சொல்ல முடியாத துக்கமும், அந் நீலக்கண்களில் வெளிவெளியாய்த் தெறித்துக்கொண்டிருந்த வெறுமையுமே ஞாபகமாகிக்கொண்டிருந்தன.

மறுநாள் வேலை முடிந்து வந்து வீட்டில் அமர்ந்திருந்தபோதும் அந்தப் பெண்ணின் ஞாபகமாகவே அவனுக்கு வந்துகொண்டிருந்தது.

அன்று தான் கூடவேலைசெய்து கொண்டிருந்தவரிடம் அவளைப்பற்றி விசாரித்து அறிந்துகொண்டிருந்தான் அவன்.

ஒரு இடைவேளையின் போது தூரத்தே தனியாக அமர்ந்திருந்து நூலொன்றை வாசித்தபடி ஏதோ அருந்திக் கொண்டிருந்தவளைச் சுட்டிக்காட்டி அவளது பெயரென்ன என அவன் வினவியபோது, அவர் திரும்பி அவனை ஒரு விஷமப் பார்வை பார்த்தார். 'சும்மாதான்' என்றான் அவன். அவர் அதற்கு, 'எதுவாயுமிருக்கட்டும். அவள் ஒரு அஜர்பைஜான்காரி. ஐயூன் என்று பெயர். பத்து ஆண்டுகளாக இந்தத் தொழிற்சாலையிலே வேலைசெய்கிறாள். ஏறக்குறைய அதேயளவு காலம் நானும் இங்கு வேலைசெய்கிறேன். ஒருநாளாவது அவள் சிரித்துப் பேசி நான் கண்டதில்லை. வந்த புதிதில் காணும் எவருக்கும் ஒரு வேகம் பிறக்கிறதுதான். அவளோ தன் பார்வையாலேயே அடங்கிப்போகச் செய்துகொண்டிருக்கிறாள். உன் ஆவலை அடக்கிக்கொள்' என்றார்.

ஐயூன் என்ற பெயரே அவனது இதயத்தினுள் ஒட்டியிருந்து இனிமை செய்துகொண்டிருந்தது. அந்த ஒல்லித் தேகம் தன் வன்மையிழந்து ஒரு கொடியாய் அசைந்து நெளிந்து ஆதாரத்தில் சரியத் துடிக்கும் கற்பனைகள் அதைத் தொடர்ந்து அவனுள் பிறக்கவாரம்பித்தன.

மூன்றாம் நாள் அதே வெறிதான பார்வையால் அவனை அவள் நான்கைந்து முறை காரணமின்றி நோக்கிக்கொண்டிருந்ததைக் கண்டபோது, தன் பற்றிய நினைவுகள் இருக்கும் மனத்தைத் தெரிந்து அதைத் துளைத்தெடுக்கும் வித்தை அவளிடமிருப்பதை எண்ணி அவன் அதிர்ந்துபோனான். பார்வையைத் திருப்பி, தலையைக் குனிந்தென என்ன பின்வாங்குகை செய்தும் அவள் மீண்டும் மீண்டும் அவனை வறுகிக்கொண்டிருந்தாள்.

அவள் அவனைவிட சற்று வயது கூடியவளாகக்கூட இருக்கலாம். அவனதைவிட எவ்வளவோ மாறுபட்ட கலாச்சாரப் பின்னணியிலிருந்து அவள் வந்திருப்பதும் சாத்தியம். இருந்தும் தன்னை ஓர் ஆணாக அவளுள் நிறுவும் ஆசை மட்டும் அவனுள் விசைவிசையாய் எழுந்து அவனை விழுங்கிக்கொண்டிருந்தது. அவளது கூர்த்த பார்வையை எதிர்கொள்ளும் அச்சமிருந்தும்கூட களவுகளவாய் அவளது சிரிக்க மறுக்கும் முகத்தை, சோகம் உறைந்த விழிகளை, வன்மை நெரித்து செறிவுபடுத்திய வெண்ணுடலையெனக் கண்டுகண்டு அவன் களியெய்துவது நிற்கவில்லை.

நான்காவது நாள் இரவில், அதுவரை நினைப்பில் அவனைக் களியேற்றிக்கொண்டிருந்த அவளது உடல் ரமணீதரன் சதாசிவத்தின் கைகளுள் இருந்துகொண்டிருந்தது. சருமத் திசுக்களின் உராய்வின் சுகம் கிடைத்துக்கொண்டிருந்த அவ்வேளையில்கூட, அவன் அவளது முகத்தையே ஆவல் ததும்பக் கண்டுகொண்டிருந்தான். அவளது முழு உடலின் அழகும் அவளது முகமாயே இருந்ததோ? அவன் கண்களை ஊடுருவினான், அதனுள் உறைந்திருந்த சோகத்தின் இருப்பினைக் காணப்போல. அவ் நீல அலையடித்த கண்களுள் நட்சத்திரங்கள் மினுங்கக் கண்டு அவன் களியேறி அவளை இறுக அணைத்தான். அக்கணமே அந்த இறுக்கத்துள்ளிருந்தும் மெதுமெதுவாய் உருவிக் கழன்று மறைந்து போனாள் அவள்.

நெடுநேரமாய் படுக்கையில் விழித்தபடி கிடந்து அவள்பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான் அவன்.

தனக்கு அவள் கிடைக்கமுடியாத சூசக முன்னறிவிப்பின் சோர்வு படிந்த முகத்தோடு அவன் காலையிலெழுந்து வேலை செல்லத் தயாராகிக்கொண்டிருந்தபொழுது, தேநீர் வைத்துக்கொடுத்த அம்மா, 'ராத்திரியெல்லாம் நித்திரையில்லைப்போல கிடக்கு. எந்தப் பிசாசு பிடிச்சுதோ?' என்றுவிட்டு அப்பால் சென்றாள்.

இரட்டுற மொழியாடலில் வல்லவள் அம்மா. அவள் எதையோ கிரகித்திருக்கிறாள். தான் ஏதாவது இரவில் பிதற்றியிருக்கக் கூடும்தான்.

பேய் பிசாசெல்லாம் வசீகரித்து வதை செய்பவை, அதற்காக அவை மயக்குறு எழில்கொண்டனவாய் இருக்குமெனவே அவன் அறிந்திருக்கிறான். வனப்பின் பிரக்ஞையே அற்றிருந்து ஒருவரை வயக்கியும், சதா தன் நினைப்பிலேயே அலையவும் வைப்பதை எப்படிச் சொல்வது? அணங்கு என்றா? அணங்குகள் உழல வைக்குமென்றால், அவையுமே உழன்றுகொண்டும் இருக்குமா? பேரணங்குகள் என்ன செய்யும்?

அவனுக்கு மேலே யோசிக்க அவகாசமற்றதாய் இருந்தது வேலை அவசரம். இரவிரவாகக் கொட்டிய பனியுள் கால் புதைய பஸ்ஸுக்கு நடந்தான் ரமணீதரன் சதாசிவம். அன்று வெள்ளிக்கிழமை.

மூன்று மணிக்கே வேலை முடிந்துவிடும் என்ற நினைப்பு அப்போது எழுந்தது. கூட அன்றுதான் அந்த அணங்கின் கடைசித் தரிசனமும் என்ற நினைப்பு. அடுத்த கிழமையிலிருந்து அவனுக்கு அவனது வழமையான தொழிற்சாலையில் வேலை தொடங்கிவிடும்.

தூவலாய்க் கொட்டும் பனி, நிலத்தில் நாட்பட நாட்படக் கிடந்து சறுக்குப் பனியாய் உறைந்துவிடும். தவறி அதன்மேல் காலடி வைப்பவர்கள் சறுக்கிவிழுந்துவிட நேரும். ரமணீதரன் சதாசிவத்தின் காலடியில் அப்போது அவை நொருங்கிச் சிதறிக்கொண்டிருந்தன. வலுவும், அழகும், கம்பீரமுமே ஓர் உருவெடுத்ததாய் அவன் நடந்து சென்றுகொண்டிருந்தான்.

அப்போது ஒரு சிவப்புநிறக் கார் அவனை ஊர்ந்து கடந்தது. கார் கடந்து செல்கையில் தலையைக் குனிந்து ஐயூன் அவனைப் பார்த்தாள்.

அன்று ஐயூன் சற்று யோசனையில் இருப்பதாய்த் தோன்றியது ரமணீதரன் சதாசிவத்துக்கு. அவளது எந்திரத்துக்கு முன்னால் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த பலகைகள் பெரிதானவையாக இருந்தன. அதையே சிறிதுநேரம் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, கண்காணிப்பாளரிடம் சென்று ஏதோ பேசினாள். தனக்கு உதவியாள் தேவையென அவள் கேட்டிருப்பாள் என எண்ணிக்கொண்டான் அவன். எதிர்பாராத விதமாக அவனையே அவளோடு நின்று வேலைசெய்யும்படி கண்காணிப்பாளர் கூறிவிட்டுச் சென்றார்.

ஒவ்வொரு பலகையாக எந்திரத்தில் தூக்கிவைக்க உதவிசெய்வதும், துளைகள் போட்டு முடிய நகர்ந்து வரும் பலகையை சில்லுகள் பொருத்திய ஒரு மேசையில் இழுத்துவிடுவதும்தான் அவனுக்கு வேலை.

நேரம் விரைவுவிரைவாய்ப் போய்க்கொண்டிருந்தது. அன்று வெள்ளிக்கிழமையென்பதன் பூரிப்பு எல்லோர் செயலிலும், முகத்திலும் துலக்கமாய்த் தெரிந்தது. அன்று வேலை நேரத்தோடு முடிவது மட்டுமில்லை, தொடர்ந்துவரும் இரண்டு நாட்களும்கூட விடுதலை நாட்கள். .

கிழமையில் ஐந்து நாட்களை வேலைக்காகக் கொடுத்துவிட்டு, வாழ்க்கை தனக்காகக் கொண்டிருந்த மீதி இரண்டு நாட்களும் அவைதான்.

ஒரு மணிக்கே வேலைகளெல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன. எந்திரங்களைத் துடைத்தும், தொழிற்சாலையைக் கூட்டியும், திங்கள் காலை வந்ததும் வேலையை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்தும் தொழிற்கூடம் சுறுசுறுப்பாக இருந்தது.

இரண்டு ஐம்பதுக்கு எல்லோரும் வெளிச்செல்ல தயார்நிலையில். இரண்டு ஐம்பத்தைந்துக்கு மணியொலித்தது. தமது வெளியேறும் நேரத்தை எந்திரத்தில் பதிய எல்லோரும் வரிசையில். ரமணீதரன் சதாசிவம் தனது நேரப்பதிவை அங்கே செய்யவேண்டியிருக்கவில்லை. அத் தொழிற்சாலை அலுவலகத்தில் சொல்லிவிட்டு புறப்படலாம்.

அவ்வாறு சொல்லிவிட்டு வெளியேறச் சென்றுகொண்டிருக்கையில் சட்டென குறுக்காக வந்த ஐயூன், "உன்னோடு பேசவேண்டும். காஃபி ரைமில் இருக்கிறேன், வா" என்று மெதுவாகக் கூறிவிட்டு கார் நின்றிருக்கும் இடத்துக்கு நடந்துவிட்டாள்.

தனது பார்வையிலிருந்த ஆர்வங்களைக் கவனித்திருப்பவள் அதுபற்றிப் பேசத்தான் கூப்பிடுகிறாளோ என்றொரு அச்சமிருந்தாலும், அதையும் சென்றால்தானே அறியமுடியும் என கடைசியில் செல்லத் துணிந்தான்.

அவன் காஃபி ரைம் சென்றபோது ஐயூன் இல்லை. தொங்கலில் இரண்டு பேர் இருக்கக்கூடிய ஒரு மேசையில் சென்று அமர்ந்தான்.

சிறிதுநேரத்தில் ஒரு பூனைபோல் வந்து அவனுக்கருகே நின்று, "சதா" என்றழைத்தாள் ஐயூன். அந்த காஃபி ரைமில் இருந்த எந்த வாசல் வழியாக வந்திருப்பாள் என எண்ணிக்கொண்டிருக்கையில் ஓர் இருள்போல அவனெதிரே அமர்ந்தாள்.

"காஃபி குடிக்கலாமா?" என்று கேட்டான் அவன்.

"பிறகு."

அவள் தான் சொல்ல அல்லது கேட்க வந்ததை மனத்துள் ஒழுங்குபடுத்துவதற்குப்போல் சிறிதுநேரம் பேசாமலிருந்தாள். பிறகு, "வந்த நாளிலிருந்து என்னையே கவனித்துக்கொண்டிருந்தாய். என்னோடு வேலைசெய்யும்போதும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாய். அதிகமாகவும் நான் குனிகிற வேளையில். என்ன பார்த்தாய்? என் கழுத்துச் சட்டைக்கூடாக என் மார்பகங்கள் தெரிந்தனவா?" என்று மெல்லக் கேட்டாள்.

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். அவள் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆ. . அது சிரிப்பே இல்லை. ஆனால் அதற்கு வேறுபெயரும் இல்லை. கேலியாக அந்த உரையாடலைத் தொடங்க நினைத்து அவள் அவ்வாறு சொல்லியிருக்கலாம் என எண்ணினான் ரமணீதரன் சதாசிவம். அது மேலே பேசும் சக்தியை அவனுக்குக் கொடுத்தது.

"இல்லை, நிச்சயமாக இல்லை. நான் அப்படியானவன் இல்லை."

"சரி. அப்படியானால் என்னதான் பார்த்தாய்?"

"உன் முகத்தை."

"எனது முகத்தில் பார்க்க என்ன இருக்கிறது? ஏன், நான் அழகாக இருக்கிறேனா?"

அவள் வெளிப்படையாக விஷயத்தைப் புட்டுப் புட்டுப் பேசத் தீர்மானித்துவிட்டாள் அல்லது அவ்வாறு பேசுவது அவளது சுபாவம் என்ற முடிவுக்கு அவனால் சுலபமாக வரமுடிந்தது. அவனும் இனி வெளிப்படையாகவே பேசவேண்டும்.

"நீ அழகானவள்தான். ஆனாலும் அங்கே உன்னைவிடவும் அழகான பெண்கள் இருக்கிறார்கள்."

"மெய். அப்படியானால் என் முகத்தில் என்னதான் பார்த்தாயென்று சொல்லேன்."

"உன் முகத்திலிருந்த எப்படிச் சொல்லுறது, உன் முகத்திலிருந்த ஒருவகையான ஒருவகையான அழகின்மையை."

"என்ன !"

அது கேள்வியல்ல. திகைப்பு. அவனின் கவனத்தில் எதுவுமில்லை. அவன் பேசியாகவேண்டும். தன் மனத்தைச் சொல்ல அவளே அழைத்துள்ள அந்தச் சந்தர்ப்பத்தைத் தவிர வேறு கிடைக்காமலும் போகலாம்.

"உன் முகத்தில் அழகின்மையாய் ஒரு சோகம் விரிந்திருக்கிறது, ஐயூன். குறிப்பாக உன் வெளிர்நீலக் கண்களுள் அது நிறைந்து கிடக்கிறது. அது விரிந்து விரிந்து தான் படரும் இடங்களிலும் தன் துக்கத்தைப் பதிந்துகொண்டு போகிறது. நீ அழகானவள்தான். அந்தத் துக்கம் மட்டும் இல்லாதிருந்தால் நீ பேரழகியாக இருப்பாய். நீ காதலித்து ஏமாறியவளாக, கல்யாணம் செய்து மணமுறிவு பெற்றவளாக யாராகவும் இருக்கட்டும். எந்த நிலையிலும், உன் அழகை மறைத்திருக்கும் அந்தத் துயர் ஓர் ஆணுக்கான அறைகூவல். உன் அழகு அந்த அறைகூவலை விடுத்துக்கொண்டிருப்பதாய் நான் உணர்ந்தேன். 'என்னை அந்தத் துக்கத்திலிருந்து விடுவித்து என்னைச் சிரிக்கவைக்க மாட்டாயா?' என்று அது நினைவிலும் கனவிலும் என்னைத் துளைத்தெடுத்துக்கொண்டிருந்தது."

"அதனால் நீ அந்தத் துக்கத்தை நீக்க விரும்பினாய்?"

"ம்."

"பயித்தியம்." அவள் சொல்லிவிட்டு மெல்லக் கலகலத்தாள். சிறிதுநேரம் மௌனமாய் இருந்தவள் விறுவிறுவென எழுந்தாள். "நான் காஃபி வாங்கப்போகிறேன். உனக்கு எப்படி வேண்டும்?" என்றாள்.

அவன் தானும் எழுந்து கூடச்சென்றான்.

கோப்பியோடு மறுபடி வந்தமர்ந்தவர்கள் மெல்ல சுடுகோப்பியைச் சுவைத்தார்கள்.

ஐயூன் சொன்னாள், "என்னைப்பற்றி இதுவரை நான் யாரோடும் பகிர்ந்துகொண்டதில்லை. விருப்பமில்லை. நான் பேசினால் எதை அவர்கள் புரிந்துகொள்ளப் போகிறார்கள்? ஏனோ உன்னோடு பேசவேண்டுமெனத் தோன்றிற்று. நீ ரணகளமாகியிருக்கும் ஒரு தேசத்திலிருந்து வந்தவன். அந்தத் தேசத்தில் சிறுபான்மைச் சமூகம் கொண்டிருக்கக்கூடிய ஆகக்கூடுதலான சோகங்களை அனுபவித்திருக்கக் கூடியவன். அதனால்தான் சந்திக்கக் கேட்டேன்."

காஃபி ரைமில் கூட்டமில்லை. வருபவர்கள் அமர்பவர்களாயின்றி, வாங்கிக்கொண்டு செல்பவர்களாயே இருந்தனர்.

"அஜர்பைஜான் துயரம் மலிந்த பூமி. ஏறக்குறைய உனது நாட்டில் உனது இனத்தவர்க்கு இருக்கக்கூடிய பிரச்சினை மாதிரியானதுதான் அங்கேயும். ஆனால் அதற்கு வேறு பரிமாணங்களும் உண்டு."

அவனுக்கு அஜர்பைஜான் வரலாறு ஓரளவு தெரியும். கஸ்பியன் கடலுக்கு மேற்குக் கரையோரமாய், கோகாஸியஸ் மலைத் தொடர்களுக்கு தென்புறத்தில் இருக்கிறது அந்தத் தேசம். சோவியத்தின் சிதறலுக்குப் பின் அதனுள் அடங்கிருந்த நாடுகளுள் முதலில் சுதந்திரப் பிரகடனம் செய்த நாடு அது. பின்னரும் அது ஒரு நிறைவான வாழ்நிலையை அடைந்துவிடாதேயிருந்தது. உள்நாட்டு மதப் பிரிவினைகளின் அரசியலால், இடம்பெற்றதும் இடம்பெறுவதுமான மனிதாயத அவலங்கள் அங்கே சொல்லமுடியாதவை. அவள் தனது நாட்டுநிலையையும் தனது சொந்த அவலங்களையும் தனதையொத்த ஒரு நாட்டின் பிரஜை என்ற வகையில் தன்னோடு பகிர வந்திருக்கிற நிலையில், தான் காதல் அழகு என்று தன் மனஅவசங்களை அவளிடம் பிரஸ்தாபித்திருந்தமையை எண்ண அவன் கூசினான்.

"ஒரு பிறப்பின் பின்னான முதற் செயற்பாடு எவருக்கும் அழுகையோடுதான் ஆரம்பிக்கிறது என்று சொல்கிறார்கள். புறவுலகின் தன்மை அதை மாற்றியாகவேண்டும். அவ்வாறு மாற்றுவதற்கான அமைவுடன் இருப்பதுதான் ஒரு நாட்டின் அறம். நான் பிறந்தபோது தொடங்கிய அழுகையை என் பத்தாவது வயதுவரை நிறுத்தவேயில்லை, சதா."

அவளது வாசிப்பின் தீவிரத்தை அவன் ஏற்கனவே கண்டிருந்தவன். அது தீவிர வாசிப்புமுள்ளது என்பதை அப்போது அவளது வார்த்தைப் பிரயோகங்களில் அவனால் அறிய முடிந்தது.

"உள்நாட்டு யுத்த காலத்தில் எனக்கு பத்து வயதாயிருக்கும்போது என் அப்பாவும், அம்மாவும் என் கண் முன்னாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்த ஸ்தம்பிதம் என் அழுகையை நிறுத்தியது. அதைத் தொடர்ந்த ஆறேழு ஆண்டுகள் அராஜகத்தினதும் வன்முறையினதும் ஆழப்பதிந்த சுவடுகள் என் வாழ்வில். வாழ்க்கை எவருக்குமே அவ்வண்ணம் அமைந்துவிடக்கூடாது, சதா. கடைசியில் அரசியல் தஞ்சம் காணப் புறப்பட்ட என் சித்தப்பா குடும்பத்தோடு நான் மட்டும் இங்கே வர வாய்ப்புக் கிடைத்தது.

உயிர் பிழைத்துவிட்டேன்தான். ஆனால், வாழ்க்கை? எனது வாழ்க்கையை நான் என் மண்ணிலல்லவா விட்டுவந்திருக்கிறேன். நான் இந்தக் கணம்வரை இந்த நாட்டில் எதுவித துன்பத்தையும், துயரத்தையும் அடைந்ததில்லை என்பது மெய்யே. ஆனாலும் என் மண்ணின் நினைவு, அங்கேயுள்ள என் எச்ச உறவுகளின் நினைவு என்னைவிட்டு என்றும் நீங்கியதில்லை. நான் தின்றும், குடித்தும், உறங்கியுமான ஒரு வாழ்க்கையை நடத்திக்கொண்டுதான் இருக்கிறேன். இது மட்டுமே வாழ்க்கையில்லை என்பதுதான் எனது தீர்மானம். அப்படியிருக்கையில் நான் சிரித்துக்கொண்டே வாழ்ந்துவிடுதல் சாத்தியமா, சதா, சொல்லு."

உறைந்து போய் உட்கார்ந்திருந்தான் ரமணீதரன் சதாசிவம். காதலென்றும் சொல்லமுடியாது, ஒரு பெருவிருப்புத்தான் அவள்மீது அந்தக் கணம்வரை அவனுள் விளைந்திருந்தது. அப்போது அது பவுத்திரமடைந்துகொண்டிருந்தது. சொந்த மண்ணோடு இயைந்ததே வாழ்க்கையென்ற தத்துவத்தின் குருவாக அப்போது அவள் அவனுள் தவிசு போட்டு வீற்றிருந்துகொண்டிருந்தாள்.

"ஐயூன் என்ற பெயருக்கு அஜர்பைஜான் மொழியில் என்ன அர்த்தம் தெரியுமா, சதா? சூரியநிலவு. நிலா ஒழிந்து சூரியன் மட்டுமே இருக்கிற வானமாய் இருக்கிறது எனது.

நானே தகித்துக்கொண்டு இருக்கிறபோது குளிர் கதிர்கள் என்னிலிருந்து எப்படி வீச முடியும்?"

மேலும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர் அவர்கள் புறப்பட எழுந்தனர். அவளது கார்வரை அவன் கூடவே நடந்துசென்றான்.

சற்றுத் தொலைவிலிருந்த பஸ் நிறுத்தத்துக்கு அவன் நடந்துகொண்டிருக்கையில் சிவப்புக் காரின் மூடிய கண்ணாடிக்குள் 'பை. . .பை. . .'யென ஒரு பேரணங்கினதுபோல் ஐயூனின் கை நளினமாய் வீசியது.

இப்போது காலையின் கேள்விக்கு அவனுக்கு விடை வெளித்தது.

காலத்தின் துயரைச் சுமந்துகொண்டு பேரணங்குகள் அறமுரைத்துத் திரியும். எங்கோ எழுந்துகொண்டிருந்த அவலக் குரல்களின் சத்தம் அப்போது அவனுள் கேட்பதுபோலிருந்தது. அங்கே விழுந்துகொண்டிருந்த கொலைகளின் காட்சியும் மனக்கண்ணில் தெரிதலாயிற்று.

ரமணீதரன் சதாசிவத்தினது நெற்றியில், கன்னத்தில், நாடியில் மெல்லிய இருளொன்று அப்போது அப்பி வந்துகொண்டிருந்தது. சிரிப்பதற்கான சகல முகத் தசைநார்களும் மெல்லமெல்ல இறுகி வருவதாய் உணர்ந்துகொண்டிருந்தான் அவன்.

(baladevakanthan@gmail.com)



# அம்மா அம்மாதான்

யோகேஸ்வரி
சிவப்பிரகாசம்
இலங்கை

விமானம் புறப்பட்டு மூன்றுமணி நேரம் கடந்து விட்டது.

மதுராவின் கணவன் வாகீசன் பிள்ளைகள் சஜீத், ரேணு எல்லோரும் உற்சாகத்தின் வசப்பட்டிருந்தனர்.

அவர்களின் விமானம் நள்ளிரவு 12:40க்குப் புறப்பட்டு இருந்ததால் அது புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அவர்கள் தூங்கி விட்டார்கள் அவளால் அது இயலவில்லை.

நாளை அவள் கொழும்பிற்குப் போனால் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் நிற்கப் போகின்றாள்.

அப்பா, அம்மா, கடைக்குட்டித் தங்கை ரேவதி, ரேவதியின் கணவன் மருதவாணன், அவர்களது குட்டி மகன் அனைவரையும் அவள் சந்திக்கப் போகின்றாள்.

போரின் தீ நாக்குகள் நீண்டு கொண்டு இருந்ததால் ரேவதியின் திருமணத்திற்கு அவளாள் வரமுடியவில்லை.

இப்பொழுது தனியொரு ரேவதி குடும்ப பெண் ரேவதியாக காட்சியளிக்கப் போகின்றாள்.

அப்பா அம்மாவும் ரேவதியும்தான் இருக்கிறார்கள்.

மதுராவின் அக்கா, மற்றும் தம்பிகள் இருவரும் கனடா வாசிகள். மதுரா மட்டும் லண்டனில் அடைக்கலம்.

அம்மா, அப்பா, தங்கை எனப் பிரியாது உடனிருந்த உறவுகளைப் பிரிந்து, அவர்களுடன் தொலைபேசியில் பேசக்கூட இயலாது தவித்து வந்த நாட்கள் நினைவுக்கு வருகின்றன. அவ்வாறே கடிதங்களும். எழுதினால் கூடச் சென்று சேராத, வந்து கிட்டாத நிலையில், “என்ன ஆனார்களோ?” என்று எப்படியெல்லாம் பரிதவித்திருப்பாள்.

இப்பொழுது அவர்களை எல்லாம் காணப் போகின்றாள். நேரிலே சென்று காணப் போகின்றாள். அவர்களுக்கும் பேரானந்தம் தரும் சந்திப்புத் தான் இது. அதிக வருடங்களுக்குப் பின் பேரனையும் பேத்தியையும் கண்டு மகிழப் போகின்றார்கள்.

ஒரு தரம் சுஜீத்தும் ரேணுவும் தூங்கிக் கொண்டிருந்த பக்கம் அவள் கண்கள் திரும்பியது.

இருவருமே இலங்கையில் தான் பிறந்தவர்கள். ஆனால் இப்பொழுது அதுவே புதியதாகி விட்டது.

இலண்டனுக்குச் சென்ற பொழுது சுஜித்திற்கு வயது இரண்டு. ரேணு ஐந்து மாதக் குழந்தை.

இப்பொழுது இருவருமே வளர்ந்த சூழலுக்குள் மூழ்கி விட்டார்கள். குழந்தைகளாய் வீட்டிற்குள் இருந்தவரை தமிழ்க் கலாச்சாரத்தை அவர்களுக்கு ஊட்ட முயன்றது உண்மைதான். ஆனால் அவர்கள் பாடசாலைக்குச் சென்ற பின் நிலைமை மாறிவிட்டது.

கையில் எதுவும் இல்லாமல் பிறதேசம் போனவர்கள் அவர்கள். எனவே வாகீசனும் மதுராவும் வெளியே சென்று உழைத்தால் தான் குடும்பத்தை கொண்டு நடாத்தலாம் என்று நிலை.

எனவே பாடசாலை தவிர்ந்த மற்றைய நேரங்களில் கூட அந்நியர்களின் பராமரிப்பில் இருந்தது சுஜியினதும் ரேணுவினதும் மாற்றத்திற்கு காரணம்.

இப்பொழுது அவர்களைப் பார்த்து என்ன நினைக்கப் போகின்றார்கள்?

சுஜித் விடயம் பிரச்சனையாகாது. தமிழ்ப் பேசும் ஆண்கள் உடையைப் பொறுத்தவரை மேல் நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் போலத்தான் நடந்து கொள்கிறார்கள். ஆனால் ரேணு? எந்த நேரமும் ஜீன்சையும் சேட்டையும் தான் அணிகிறாள். இலங்கைக்கு வரும் போதாவது அரைப்பாவாடை அணியுமாறு மதுரா கூறியும் அதற்கு அவள் மறுத்து விட்டாள்.

மதுரா இலங்கையில் இருந்த காலம். . .மதுராவுக்க எட்டு வயது. . .மதுராவின் அம்மம்மாவும் இவர்களுடன் இருந்தாள். இராஜேஸ் பெரியம்மாவும் மகள் திலகாக்காவும் ஜேர்மனியில் இருந்து வந்த நாட்களை அவள் மனக்கணனி பதிவிறக்கம் செய்கின்றது.

திலகாக்கா மதுராவை விட எட்டு வயது தான் மூத்தவள். அவள் சட்டையுடன் வந்திறங்கினாள். சட்டை முழங்காலைத் தொடுவதற்கு முயன்று முயன்று தோற்றுக் கொண்டு இருந்தது. உதடு சாயத்தால் சிவந்திருந்தது. தலைமுடி கழுத்துவரை கத்தரிக்கப்பட்டு சுருட்டி விடப்பட்டிருந்தது. அந்தத் தோற்றம் மதுராவின் மனத்தை நன்று ஈர்த்திருந்தது. தானொரு பட்டிக்காடோ என்ற தாழ்வுணர்ச்சியும் அவளைக் கௌவிக் கொண்டது. ஆனால் அம்மம்மாவின் முகமோ ஒடி இருண்டு விட்டது.

"பொம்பிளைப் பிள்ளையை இப்பிடி வளர்த்திருக்கிறாயே. . .இது என்ன கோலம்?" நேரடியாக இராஜேஸ் பெரியம்மாவிடம் அம்மம்மா கேட்டு விட்டாள்.

நீண்ட நாள் பிரிவு, பேத்தி என்ற பாசம் இத்தனையும் மோதித் தள்ளிவிடும் உணர்ச்சிக் குமுறலொன்றை அந்தக் கணத்தில் திலகாக்காவின் தோற்றம் அம்மம்மாக்கு ஏற்படுத்தி விட்டிருந்தது.

அவர்கள் மீண்டும் ஜேர்மனிக்குச் செல்லும் வரையிலும் திலகமக்காவின் நடை உடையைச் சுட்டிக் கண்டித்துக் கொண்டே இருந்தாள் அம்மம்மா.

அம்மா ரேணுவை இந்தக் கோலத்தில் பார்த்தாள்?

அம்மம்மா இருந்த இடத்தில் இருந்து அம்மா அந்தக் காட்சியை அரங்கேற்றப் போகின்றா.

அம்மா ரேணுக்கு அம்மம்மாதானே?

பிளேன் பறந்து கொண்டு இருந்தது. எல்லோரும் தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

மதுராவின் மனத்தில் எழுந்த பயம் அவள் கண் இமைகளை மூடவிடாது அகலமாக விரித்து வைத்துக் கொண்டு இருந்தது.

'அம்மாவைப் பார்க்க வேண்டும்' என்ற ஆசையை, அம்மா ரேணுவைக் காணும் கணம் வந்து பயமுறுத்திக் கொண்டு இருந்தது.

ஏயர்லங்காவில் பணிபுரியும் ஒரு தமிழ்ப் பெண் சிங்களவர் சேலையணியும் பாணியில் நீராகாரத்தை வழங்கிக் கொண்டு வர மனத்தினுள் ஒரு உறுத்தல் தடம் பதித்தது.

*

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிறங்கி காரிலே பயணிக்கும் பொழுது இலங்கையின் மாற்றங்களை அவதானிக்க கூடியதாயிருந்தது. வீதி மருங்குகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு அவள் பயணித்துக் கொண்டிருந்தாள்.

வெளிநாட்டிலிருந்து அதிகமானோர் வந்திருக்கிறார்கள் போலும். . நாட்டில் போர் ஓய்ந்தது காரணமாக இருக்கலாம் என அவள் நினைத்துக் கொண்டாள்.

அவள் நினைப்பை செல்வி மச்சாள் வீட்டை கூடியிருந்த மற்றைய வெளிநாட்டு உறவினர்களின் எண்ணிக்கை உறுதிப்படுத்தியது.

மச்சாள் வீட்டில் உறவினர் பலர் கூடியிருந்தமையும் அனைவரையும் ஒரே இடத்தில் பார்க்க கிடைத்ததையும் நினைத்து மனம் உணர்ச்சி வசப்பட்டது.

சுஜியும் ரேணுவும் அவர்களின் வயதொத்த பிள்ளைகளுடன் அளவளாவிக் குதூகலித்தார்கள்.

அப்பொழுது தான் மதுரா அவதானித்தாள். அந்தப் பிள்ளைகளின் உடைகளும் மேலைத்தேய மயமாகவே காணப்பட்டன.

இதுவரை உள்ளே இழுத்துக் நெருக்கிக் கொண்டிருந்த இறுக்கம் மெல்லத் தளர்ந்து கொண்டிருந்தது போலிருந்தது. அதுவே மற்றவர்களுடன் மகிழ்ச்சியாகப் பேசிப் பழக வழி சமைத்தது.

நன்கு களைப்பாறி குளித்து சாப்பிட்ட பின்பு பின்னேரம் போல் யாழ்ப்பாண பயணம் ஆரம்பித்தது மீண்டும் தன்னை அறியாமல் இந்த அம்மாப் பயம் அல்லது இறுக்கம் அவளுக்குள் எழுந்து கொண்டது.

இரவைத் தாண்டி அதிகாலையில் மோட்டார் வாகனச் சத்தத்தை கேட்ட பொழுது அனைவரும் வீட்டு வாசலுக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

மதுராவின் கைகளைப் பற்றிக் கொண்டு கண்கலங்கிய அப்பா அடுத்து சுஜியையும் ரேணுவையும் அணைத்துக் கொண்டார்.

அப்பாவின் கைகள் விலக அவ்வாறே அம்மாவும்.

“ரேணுக்குட்டி” என அம்மா அவளைத் தழுவியதை மெய்மறந்து பார்த்துக் கொண்டு நின்ற மதுராவிற்கு தங்கை ரேவதி பின்னால் வந்து தன்னைக் கட்டியணைத்தது கூட கவனத்திற்குள் புகவில்லை.

அம்மாவின் முகத்தையே மதுரா பார்த்துக் கொண்டு நின்றாள்.

அம்மாவின் முகத்தில் எந்த மாறுதலும் இல்லாததது மதுராவின் மனதுக்குள் பெரும் ஆறுதல்.

"என்னக்கா அம்மாவையே பார்த்துக் கொண்டு நிக்கிறியள்"

ரேவதியின் கேள்வி மதுராவை தங்கையின் பக்கம் திருப்பியது.

ரேவதிக்குப் பக்கத்தில் ரேணுகாவின் வயதொத்த இரண்டு பெண் பிள்ளைகள்.

"இந்த இரண்டு பேரும் ஆர்?"

"இவை மாவிட்டபுரம். இடம் பெயர்ந்து முன் வீட்டிலை இருக்கினம். அவையின்ரை ஊருக்கு இன்னும் திரும்பிப் போக விடேல்லை. இவை இரண்டு பேருக்கும் அம்மா எண்டால் போதும். ஒட்டிக் கொண்டு திரிவினம்"

மதுராவின் கேள்விக்கு ரேவதி விளக்கம் கொடுத்தாள்.

"இனி அம்மம்மா எங்களைக் கவனிக்கமாட்டா. . .அவான்ரை பேத்தி வந்திட்டா" ஒருத்தி சிரித்துக் கொண்டே அம்மாவைச் சீண்டினாள்.

"என்ரை பேரப்பிள்ளையளைப் பார்த்தியளே! என்ன ஸ்ரையிலாய் ஸிமாட்டாய் இருக்கினம். நீங்களும் அந்த மாதிரி இருக்க பழகுங்கோ. . .அவையைப் போலை உடுத்து.. அவையளைப் போலை பேசி. ."

மதுரா சட்டென்று திரும்பி அம்மாவைப் பார்த்தாள்.

# லா சப்பல்
# La Chapelle

ஜோதிலிங்கம்
பிரான்சு



பாரிஸில். . . குறிப்பாக வட பரிஸில் வணிக நிறுவனங்கள் குவிந்து காணப்படும் இடம் லா சப்பல் ஆகும்.

மேற்குலக நாடுகளில் வேறு எங்கும் காணக்கிடைக்காதவாறு தொகையான தமிழரின் சிறு வணிகங்கள் இங்கு அடுக்கடுக்காக இருக்கின்றன. 10 கட்டட தொகுதிகளுக்கு மேலாக இவ்வாறு கடைகள் அடுக்கடுக்காய் இருக்கின்றன. அதனால் இதனை குட்டித் தமிழீழம் என அழைப்பதுமுண்டு. இந்த வணிகங்கள் கடந்த 30 ஆண்டுகளுக்குள் இங்கு புகலிடம் வந்த ஈழத்தமிழர்களாலும், பிரஞ்சுக் கொலனியாயிருந்த பாண்டிச்சேரியில் இருந்து வந்த தமிழர்களாலும் நடாத்தப்படுகின்றன.

அனேகமான கடைகளில் புலிகளின் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

அவை தற்பொழுது நிறம் மங்கிக் காணப்படுகின்றன. அண்மையில் செம்மொழி மகாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பார்வதி அம்மாவிற்கு இந்தியா விசா கொடுக்காது மறுத்ததை கண்டித்தும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் துலக்கமாக தெரிகின்றன.

லாச்சப்பல் வீதிகளில் தமிழர்கள், குறிப்பாக தமிழ் இளையோர் ஆங்காங்கே கூடிக்கூடிக் கதைப்பதை காணக்கூடியதாய் இருக்கும்.

ஆபிரிக்ககாரர்களிடம் இருந்து கஞ்சாவும் தாராளமாக இங்கு வேண்டலாம்.

மாலை நேரங்களில் பெண்பிள்ளைகள் இந்த தெருக்களில் போவதற்கு பெரிதாக விரும்புவதில்லை.

குறிப்பாக சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இருட்டியப பின் புகையிரத நிலையத்திற்கு செல்லும் கீழ் சுரங்கப் பாதையில் போவதற்கு தமிழ் பெண் பிள்ளைகள் பயப்பிடுவார்கள்.

லா சப்பலில் உள்ள மாணிக்க விநாயகருக்கு பிரான்சின் உருவாக்கப்பட்ட முதல் சைவ ஆலயம் என்ற பெருமை உண்டு . 1985ல் கட்டப் பட்ட இதனை "பிரான்சின் முதலாவது சைவக்கோயில்" என அவர்கள் விளம்பரப்படுத்தும் பொழுது குறிப்பிடத் தவறுவதே இல்லை.

இந்த வருட சம்மர் வஞ்சகமில்லாது வாட்டி எடுத்தது - ஊரில் கத்தரி வெயில் போல.

கடற்கரைகளில் வருடத்திற்கு ஒரு தடவை பழைய குப்பைகளைப் போட்டு, சூனியக்காரக் கிழவியை கொழுத்தி மகிழும் சம்பிருதாய சடங்குக்கு கூட பிரான்ஸ் அரசாங்கம் இந்த வருடம் தடை செய்திருந்தது ஏதாவது வயல்களில் நெருப்பு பிடித்து விடும் என்ற பயத்தில்.

ஆனாலும் மக்கள் கடற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் ஒன்றாக இறைச்சி வாட்டி சாப்பிட்டும் தண்ணி அடித்தும் கொண்டாடுவதில் குறைவிராது.

பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு நிறைவை சக மாணவ மாணவிகள் விரிவுரையாளர்களுடன் சேர்ந்து இன்று கொண்டாட ஏற்பாடாய் இருந்தது.

"அம்மா போயிட்டு வாறன்" என சொல்லியபடி புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு வாசலடிக்கு போன சிவரஞ்சினியை, "கொஞ்சம் பொறு. . . கண்ணாடியிலை வடிவாய் பார்த்தனியே" என்ற தாய் பரிமளத்தின் அதட்டும் குரல் தடுத்து நிறுத்தியது.

"என்னம்மா. . ." சலித்தவளாக நின்றாள்.

"உங்கை பார். . கழுத்தடி பட்டினைப் பூட்டாமல் போறாய்"

"அது ரை கட்டினால் தான் பூட்டுறது அம்மா. . .ஆக்கள் பார்த்தால் சிரிப்பினம்"

"அது சிரித்தால் சிரிக்கட்டும் நீ இப்ப வடிவாய் பூட்டு. . . குமருகளுக்கு ஏதும் நடந்து முடிஞ்சாப் பிறகு ஊர் உலகம் சிரிக்கிறதுக்கு முதல் இது பறவாயில்லை"

பரிமளம் சிவரஞ்சினியை இழுத்து வைத்து கழுத்து பட்டனைப் போட்டு விட்டாள்.

"கொப்பருக்கு சொன்னனான் இந்த நரக ஊருக்கு நாங்கள் வரேல்லை. . .அங்கையே இருக்கிறம் எண்டு. கேட்டால் தானே" பரிமளத்தின் வழமையான இந்த சுப்பிரபாதத்தை காதில் வேண்டிக் கொள்ளாமல் சிவரஞ்ஜினி வீதிக்கு இறங்கினாள். அடுத்த 5 நிமிடத்தில் பஸ்ஸைப் பிடித்து பின் லா சப்பலில் ரெயினைப் பிடிக்கும் அவசரம் அவளுக்கு.

சிவரஞ்ஜினி கம்பியூட்டர் எஞ்ஜினியரிங் இரண்டாம் ஆண்டு. கறுத்தக் கோட்டும் தொப்பியும் போட்டு கையில் பேப்பர் சுருளும் வேண்ட இன்னும் 2 ஆண்டுகள் உண்டு.

சிவரஞ்ஜினி பரிமளம் பாக்கியநாதன் தம்பதிகளின் ஒரே பெண்.

எப்பொழுது அடுத்த 2 ஆண்டுகள் போகும். . .இலங்கையில் உள்ள தமையனின் மகனுக்கு செய்து கொடுக்கலாம் என்பது பரிமளத்தின் கணக்கு.

"ஒருத்தனுக்கு அவளைப் பிடிச்சுக் கொடுக்கும் வரை இவள் ஓயமாட்டாள்" என்று மனதில் நினைத்தவராய் லங்காசிறியை பாக்கியநாதன் புரட்டிக் கொண்டு இருந்தார்.

ஆளுக்காள் விடும் அறிக்கைகளால் அனேக பக்கங்கள் நிறைந்திருந்தன.

மக்கள் இப்பொழுதும் கம்பி வேலிகளுக்கு அப்பால் தான்!

"நான் ஒருத்தி கத்துறன். . .உங்களுக்கு தகப்பன் எண்டு ஒரு பொறுப்பாவது இருக்கோ. . . ."

இப்பொழுது பரிமளம் பாக்கிய நாதன் மீது திரும்பினாள்.

"நானும் உன்னோடை சேர்ந்து பட்டின் போட வரேல்லை எண்டு கோபமோ"

"நான் அடிவயித்திலை நெருப்பைக் கட்டிக் கொண்டு திரியிறன். . . உங்களுக்கு ஏன் தான் விளங்குதில்லையோ தெரியாது"

"அப்ப ஒரு வாளி தண்ணியை கொண்டு வந்து ஊத்தவோ" என்றவாறு பாக்கியநாதன் ஆபீசுக்கு கிளம்ப ஆயத்தம் ஆனார்.

"உங்களுக்கு என்ன. . .நீங்கள் ஒவ்வீசு எண்டு போயிடுவியள். . . அவள் இண்டைக்கு ஏதோ இறைச்சி வாட்டி சாப்பிடுறது எண்டு . . .இரவு பத்துக்குத் தான் வருவள். . .நான் தான் தனிய இருந்து புலம்ப வேணும். . .ஏதாவது சாட்டு சொல்லிப் போட்டு நில்லடி எண்டாலும் கேக்கிறாள் இல்லை . . . அந்தக் காலத்திலை எளிய சாதியள் தானாம் உப்பிடி நெருப்பிலை வாட்டிச் சாப்பிடுறது. . . ."

“சரி . .நீ கத்தாதை. . .பின்னேரம் நான் வேலையாலை வந்த பிறகு லா சப்பலுக்கு போய் மரக்கறியளும் வாங்கிக் கொண்டு அப்பிடியே பிள்ளையார் கோயிலுக்கும் போட்டு வருவம். அவளும் வீட்டை வர கணக்காய் இருக்கும் . . .”

“அப்ப பிள்ளையையும் அதிலை வைச்சு காரிலை ஏத்திக் கொண்டு வருவம்”

பாக்கியநாதன் போய் காரில் அமர்ந்தான்.

பரிமளம் இப்போது கொஞ்சம் அமைதி ஆனாள்.

*

சிவரஞ்ஜினி பஸ்ஸை விட்டு இறங்கி அவசர அவசரமாய் புகையிர நிலையத்தில் பயணிகள் பாதுகாப்பாய் தங்கள் உடமைகளை வைக்கும் பெட்டகத்தை திறந்து அதனுள் இருந்து தனது இரண்டொரு உடைகளை எடுத்துக் கொண்டு பெண்களுக்கான கழிவறைக்குள் நுழைந்தாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம். . .கழுத்து பட்டன் மட்டுமில்லை எந்த பட்டனுமே இல்லாத ஒரு ஆடையுடன் வெளியே வந்து தனது உடுப்புகளை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்துப் பூட்டினாள்.

தலை இழுப்பு மாறியிருந்தது!

கண் இமைக்கு பூசும் மை இன்னமும் நீட்டப்பட்டிருந்தது!!

உதடுகளில் சிவப்பு மை மறைந்து கறுத்த மை பூசப்பட்டு இருந்தது!!!

பிளாட்போமில் தனக்காக காத்திருந்த தன் வகுப்புத் தோழிகளுடன் சேர்ந்து கொண்டாள்.

“யூ ஆர் சோ சுவீற்” என நண்பிகள் பாராட்டியது அவளுக்கு மனமகிழ்வைக் கொடுத்தது.

*

இரவின் சொர்க்கம் எனப்படும் பரிஸ் நகரம் மின் விளக்குளால் மிளிர்ந்தது.

நேரம் ஒன்பதை அண்மித்துக் கொண்டு இருந்தது.

பரிமளத்தின் கால்கள் கோயில் வீதியைச் சுற்றி வந்து கொண்டிருந்தாலும் மனம் என்னவோ சிவரஞ்சினியை சுற்றித்தான்.

"அப்பா .அவளுக்கு டெலிபோன் அடிச்சனிங்களோ .. . சரியாய் ஸ்ரேசனுக்கு பத்து மணிக்கு வரச் சொன்னனான்"

"சொன்னால் வருவள் தானே. . ."

"எண்டாலும் ஒருக்கா அடியுங்கோ"

பாக்கியநாதன் கோயிலுக்கு வெளியால் போய் எண்களை அழுத்தினார்.

ரிங் டோன் போய்க் கொண்டு இருந்தது.

"என்ன சொல்லுறாள்"

"அவள் சரியாய் பத்துக்கு வாறாளாம். ..நீ கும்பிட வந்தால் போய் கும்பிடு"

சிவரஞ்ஜனி தொலைபேசியை எடுக்காதது அவருக்கு என்னவோ போல இருந்தது.

சிவரஞ்ஜினியின் பெயருக்கும் நட்சத்திரத்திற்கும் மாணிக்க விநாயருக்கு துளசிமாலை சாற்றி மனம் குளிர அர்ச்சனை செய்து கொண்டு வரும் பொழுது பத்து மணிக்கு பத்து நிமிடம் இருந்தது.

"கெதியாய் நடவுங்கோ அப்பா. . . பிள்ளை பார்த்துக் கொண்டு நிற்பாள்"

“உனக்கு எப்பவும் அவசரம் தான். . . இன்னும் கொஞ்ச நேரம் கோயிலை பிந்தி இருந்தால் என்ன செய்திருப்பாய்”

“நான் கை மணிக்கூட்டைப் பார்த்துப் பார்த்து ஐயரைக் குடைஞ்சு கொண்டு நிண்டது உங்களுக்குத தெரியுமே”

“சுத்தம்!”

இப்போ அவர்கள் லா சப்பல் வீதிக்கு வந்து விட்டார்கள்.

வீதியில் ஏதோ ஒரு வித்தியாசமான பரபரப்பு தெரிந்தது.

யாரோ ஒரு பெண் பிள்ளை ஸ்ரேசன் ரொலிலற்றுக்குள் கொலைசெய்யப்பட்டிருக்காம்.

‘ரேப்’ கேஸாம். பரிமளத்திற்கு ‘திக்’ என்றது.

பாக்கியநாதன் மீண்டும் சிவரஞ்ஜினியின் எண்ணை அழுத்தினார்.

ரிங் டோன் போய்க்கொண்டு இருந்தது.

“உவளுக்கு எப்பவும் சொல்லுறனான் பள்ளிக்கூடத்திலை இருக்கிற நேரத்தை தவிர உதை நிப்பாட்டாதை என்று”

தூரத்தில் ஸ்டேசனுக்கு வெளியே பொலிஸ் வாகனங்களும் அம்புலன்ஸகளும் நீல நிற விளக்குகளும் நன்கு தெரிந்தது.

பரிமளத்திற்கு ஏனோ கைகள் உதறியது. . . பாக்கியநாதனின் கையை இறுக பிடித்துக் கொண்டாள்.

இப்பொழுது தொலைபேசி அழைத்தது.

“எங்கை நிற்கிறாள் எண்டு கேளுங்கோ”

பாக்கியநாதனின் முகம் மாறிக் கொண்டு இருந்தது.

“என்னப்பா”

பரிமளத்தின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு ஸ்டேசன் சுரங்கப்பாதையில் இறங்கினார்.

அங்கு காத்திருந்த பொலிஸார் அவர்கள் இருவரையும் அரவணைத்து அழைத்துக் கொண்டு சம்பவம் நடந்த பெண்களின் டொயிலற்க்கு கூட்டிச் சென்றார்கள்.

காலையில் போட்டு வந்த உடுப்பை மாற்றியது பாதி. .மாற்றாதது பாதி . . .

சிவரஞ்ஜினி பிணமாக குப்புறக் கிடந்தாள்.

“பிள்ளை” என அடிக்குரலில் அழைத்தபடி சிவரஞ்ஜினியை திருப்பிய பரிமளம் அதிர்ந்து போய் நின்றாள்.

அவளின் மார்பிலும் தோளிலும் நீலநிறத்தில் பச்சை குத்தப்பட்டிருந்தது.

தொப்புள் அருகே வளையம் ஒன்றும் குத்தப்பட்டிருந்தது.

பரிமளத்திற்கு அழவோ. . . கதைக்கவோ. . .எதுவுமே தோன்றவில்லை.

பொலிசார் தங்கள் விசாரணையை ஆரம்பித்தார்கள்.

*

ஒரு மாதத்துக்கு பின்பு ஸ்டேசன் பொறுப்பதிகாரி பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த மற்றைய ஆடைகளை கொண்டு வந்து பரிமளத்திடமும் பாக்கியநாதனிடம் கொடுத்தார்கள்.

இப்பொழுது முதன் முதலாக பரிமளம் அழத் தொடங்கினாள்.

(sjothi_888@yahoo.com)

# எல்லாம் இழந்த பின்னும்...

சாந்தினி வரதராஜன்
ஜேர்மனி



அந்த வீட்டிலிருந்து வெளியே வரும்பொழுதுதெல்லாம் இப்படித்தான் அந்த முயலும் சிங்கத்தின் குகையிலிருந்து வெளியே வந்திருக்கும் என்ற நினைப்பு எப்பவும் வரும். வரும் வழியெல்லாம் முப்பது ஈரோவைப்பற்றிய கனவும் அது இருக்கா இருக்கா என்று ஜீன்ஸ் பொக்கற்றை தடவி பார்ப்பதும் வெளியே எடுத்துப்பார்த்து தொலைத்த நாட்கள் நினைவில் வர மனம் எதை எதையோ நினைத்து பெருமூச்சை வெளியே தள்ளியது.

இப்பொழுதெல்லாம் வாழ்வின் பிடிப்பு மெல்ல நழுவுவதுபோல் உணர்வு எழுந்து கொண்டே இருக்கிறது. எல்லாமே கொஞ்ச நாட்களில் சலிப்பு தட்டிவிடுகிறது. எப்பவும் வேலையையும் காசையும் அசைபோடும் மனசு எந்த வேலையென்றாலும் என்னைக்கேட்காமலே ஓம் என்று தலையாட்டுகிறது.

எல்லா வேலையையும் ஒருநாள் தூக்கி எறிந்துவிட்டு எந்த அழுத்தமும் இல்லாமல் பழையபடி கவிதையை,கதையை அசைபோட்டபடி.

இப்படி பல முறை முடிவுகள் எடுத்திருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் இல்லாமை பல வழிகளில் மனவெளியில் தன் இருப்பை உணர்த்தி என் உறுதியை பொல பொலவென உடைத்தெறியும். ஆனால் இம்முறை அப்படியல்ல இனி இயலாது என்று கைகளும் கால்களும் கூட மறுக்கத் தொடங்கிவிட்டன. மனமோ வங்கிக்கடனை கணக்கு பார்த்து உடைந்து விழத்தொடங்கியது. என்ன செய்ய? அம்மா புத்தகம் வாங்க நிறைய காசு வேணும். மகனின் குரல் திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டே இருந்தது. நான் உடைந்து விழும் பொழுதெல்லாம் காற்றோடு அடிபட்டு போகும் சருகைப் போல.

வெள்ளைக்காரியும் என்னை அப்படித்தான் நினைத்திருக்கிறாள். இல்லாவிட்டால் ஒரு சின்ன தவறுக்காக படிகளில் நடக்க முடியாவிட்டாலும் தவண்டு கொண்டு வாயில் துடைக்கும் துணியை கவ்வியபடி பாய்ந்து வந்த தோற்றம் ஏதோ ஒரு பெரிய நாய் என்னை கடித்து துப்புவதற்கு வருவதுபோல். ராகினி வீட்டு ஜில்லும் அப்படித்தான் வந்தது. அதுக்கு தன் குட்டிகளை நான் தூக்கிவிடுவேனோ என்ற பயம்.

ஆனால் வெள்ளைக்காரி தான் எஜமானியாகவும் நான் ஏதோ அடிமைமாதிரியும் அப்படித்தான் நினைத்திருக்கிறா. நான் பிறந்து வளர்ந்த என்ர மண்ணிலையும் கூனிக்குறுகி அவர்கள் கேட்கும் பொழுதெல்லாம் காணணோடு ஒட்டிய கவசம் மாதிரி காவித்திரியும் அடையாள அட்டையை காட்டி களைத்து இவைகள் எல்லாம் வேண்டாம் என்றுதானே ஓடிவந்தனான். வந்த இடத்திலும்.

இந்த பொழுதுகளிலெல்லாம் அண்ணா பொகவந்தலாவிலிருந்து வீட்டு வேலைக்கு அனுப்பிய ஒவ்வொரு முகமும் என்னை பார்த்து சிரிப்பதுபோல் இருக்கும். அதிலும் கடைசியாக வந்த குமார் அவன் இப்ப கொழும்பில் பெரிய மொத்த வியாபாரி. காலம் எப்படி எல்லாம் சுழன்றுகொண்டு ஓடுகிறது.

ஏணிப்படியின் உச்சத்தில் இருந்த வாழ்க்கை என்ன நடக்கிறது என்று சிந்திக்கும் முன் மலைப்பாம்பின் வாய்க்குள் அகப்பட்டு சட்டென்று கீழ் இறங்கிய விளையாட்டுப்போல் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. இயலாமையும், இல்லாமையும் இணைந்து வேதனை தீயை வளர்த்தபடி இருக்க இவைகளிலிருந்து மீளமுடியாத மனசு பெரும் குரல் எடுத்து அழுகிறது.

இருட்டு எங்கும் இருட்டு. இலைகளை இழந்த மரங்களும், மௌனித்து கிடக்கும் வெளிகளும் வெறும் வெள்ளைச்சுவர்களும். சில சமயம் இந்த வெள்ளைச்சுவர்கள் என்னை நெரிப்பது போல் இருக்கும் பல சமயம் விரல்களை நீட்டியும் மடித்தும் என்னை குற்றவாளி ஆக்கும். இனி இயலாது வெள்ளைக்காரியின் வீட்டு சுவர்களும் கதவுகளும் கூட என்னை இப்படித்தான் அடிக்கடி முறைத்து பார்க்கும். அங்கு வேலை செய்யும் பொழுதெல்லாம் மனம் ஏதோ ஏதோ நினைத்து அழுதாலும். கை சுவர் பிடிக்க, கண் மணிகூட்டை பார்க்க, மனம் பெருக்கல் வாய்ப்பாட்டை பெருக்கிப் பார்க்கும்.

இந்த மாதம் அண்ணாவுக்கு காசு அனுப்பவேணும். அனுவுக்கும் புத்தகம் வாங்க நிரம்ப காசு தேவை என்டு சொன்னவர். கிறிஸ்மஸ் காசு ஐம்பது ஈரோ தருவா அதையும் சேர்த்து அனுப்புவம். இப்படி பல கற்பனைகள் முப்பது ஈரோவை சுற்றி சுற்றி ஓடும். கை படிகளை துடைக்கும்.

வெள்ளைக்காரி கண்ணாடி முன்னால இருந்து கொண்டு ஒரு கண் என்னிலும் மறு கண் கண்ணாடியிலுமா இருப்பதை பார்த்தால் ஆறுகுள்ளரும் இளவரசியும் கதைதான் ஞாபகத்தில வரும் அதிலையும் இப்படித்தான் சூனியக்காரி இளவரசியை வீடுதுடைக்கவிட்டிட்டு எந்த நேரமும் கண்ணாடிக்கு முன்னால இருந்து கொண்டு கண்ணாடி கண்ணாடி இப்ப சொல்லு நான் அழக இல்லை அவள் அழகா? என்று கேட்டுக்கொண்டே இருப்பா. இவாவும் அப்படித்தான் கேட்கிறவோ? நான் எனக்குள் சிரிப்பதை பார்த்தால் போதும் நான் நினைக்கிறன் நீ எங்கோயோ போய்வராய் போல இருக்குது எனக்கு அப்பவும் சிரிப்புவரும்.

இந்த வெள்ளைக்காரர் எப்ப எப்படி இருப்பினம் என்று சொல்லவே முடியாது.

போன கிழமை சிரிச்ச மனுசிதானே எண்டு சிரிச்சா இந்தக் கிழமை பிடரியை சிலுப்பிக் கொண்டு இருக்கும். கறுப்பிக்கு காசு வேணும் அவள் என்ன சொன்னாலும் வருவாள். இவள் அகதிதானே. இவளுக்கு மானம் ரோசம் ஒன்றும் இருக்காது இருக்கவும் கூடாது அப்படித்தான் மனதுக்கள் என்னைப்பற்றிய ஒரு வரைவிலக்கணத்தை வைத்திருப்பா.

ஒரு நாள் வேலை செய்யும் பொழுது கேட்டாள். உனக்கு உன்ர நாட்டை பார்க்க ஆசை இல்லையே? ஏன் இல்லை ஒரு நாள் எண்டாலும் நான் பிறந்த வீட்டை பார்க்கவேணும்.

அப்ப என்னத்துக்கு இங்க வந்தனீ? மனிதனுடைய உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாத ஜென்மத்திடம் என் உணர்வை கொட்டியதை நினைத்து வெட்கப்பட்டுபோனேன்.

ஓம் நான் ஏன் எல்லாவற்றையும் உதறிப்போட்டு இங்க வந்தனான்? ஏன் இப்படி ஒரு வேலைக்காரி வாழ்க்கைக்குள் உழன்று கொண்டு இருக்க வேணும். வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு போனால் அங்கேயும் அதே தும்புத்தடியும் மப்பண்ணிற தடியும் எனக்காக காத்துக்கொண்டிருக்கும். எப்படியெல்லாம் என்னை அம்மா வளர்த்தா. நினைவுகள் பெருக பெருக இனி இந்த வீடு இருக்கும் தெருவுக்குள் என் கால்கள் வராது என்ற நினைப்பும் சேர விறு விறுவென கால்கள் நடைபோட தொடங்கும். ஆனால் எங்கேயோ என் முதுகிலயோ, அல்லது புறங்காலிலையோ எங்கேயோ அந்த வீட்டு தும்புத்தடியும் மப்பண்ணிற தடியும் என்னோட ஒட்டிக்கொண்டே வரும்.

இப்படித்தான் எனக்குள் எழும் எல்லா உணர்வுகளும். நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் பொய்யாகி போகும் பொழுது வாழ்க்கை வெறுத்து போய்விடுகிறது. வருவன் என்று சொல்லிவிட்டுத்தானே வந்தனான்.

கட்டிப்பிடித்து பின் கைகள் இறுகி, விரல் நுனி தடவி, கண்கள் கலங்கி, ஏங்கி அம்மா நின்ற காட்சி அப்போதும் கால்கள் தன் பாட்டில் நீட்சியான பாதையை நோக்கி நடைபோட்டன. இடைவெளிகள் நீள நீள மனம் பெருங்குரல் எடுத்து அலைபோல் அழுதிருக்கும்.

அலைகள் அழுவது யாருக்கும் புரியாது. இலைகள் உதிரும் பொழுது மரங்கள் மௌனித்து அழுவது போல்தான் அலைகளும்.

நடந்து நடந்து பாதைகள் இல்லாத இடமெல்லாம் பாதைகள் வகுத்த பொழுது எத்தனை முகங்கள் நடைபோடத் தொடங்கின. வேர்களின் முகங்களில் காலால் புழுதியை வாரி இறைத்தபடி நடந்தன. புழுதி அப்பிய முகங்களில் வழிந்த கண்ணீரால் புழுதியை கழுவவே முடியவில்லை.

இப்பொழுது நான் வேராகி வேர்களில் முளைத்ததெல்லாம் மலர்கள் என முகிழ்த்து நின்ற பொழுது அவை நெருஞ்சி முட்களாக முகம் காட்டி சிரித்தன .அப்போதுதான் நான் முதல் முதலாக உடைந்து போனேன். மறுபடியும் என் வேர்களை தேடினேன் அழுதழுது தேடினேன். அவை அழுது, களைத்து, உக்கி,நெருப்போடு போன சேதி காலம் கடந்து. . .

கரை கடந்து, கடல் கடந்து விலகி வரும் பொழுது அலைகள் உடைந்து சிதறி அழுத பொழுது என் காதுக்கு கிட்டவே இல்லை. மல்லாந்து படுத்து தனக்குதானே துப்புகிறது என்றல்லவா நினைத்திருந்தேன்.யாரும் அறிய முடியாத ஆழத்தில் துயர்கள் நிரம்பி வழியும் பொழுது வெடித்து ஓவென பெரும் இரைச்சல் கொண்டு எழுந்து பாறாங்கற்களில் மோதி மோதி அழுதது..அழுத அலைகள் கரைகளுக்கு வருவதும் பின் பெரும் துயர் சுமந்து திரும்பியதையும் அது யாருக்கும் சொல்லவே இல்லை.

கணவர் என்ற பெரும் சுவர் எல்லாவற்றையும் மறைத்துவிட்டது. எல்லா நினைவுகளுமே குளத்தில் போட்ட கல்லாக அடங்கிக் கிடக்கிறது. அவை மேலெழும் பொழுது கலங்கிப்போகும் குளம்போல்தான் நானும்.

எந்த நினைவையும் என்னால் தூர வீசி எறிய முடியவில்லை. அவை எப்போதும் ஒரு மூலையில் பதுங்கியிருந்து சில சமயம் என்னை பார்த்து சிரிக்கும் பல சமயம் முறைக்கும்.

அது எல்லோருடைய குரலிலும் என்னை கேள்வி கேட்கும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த அக்காவிடம் எதை எதையோ கேட்க மனம் துடித்தது. ஆனால் பாலைமரம் எப்படியிருக்கிறது? என்று மட்டும்தான் கேட்க முடிந்தது. கடந்தகாலங்கள் என்னை பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறதா? அல்லது நான் அதை பிடித்து வைத்திருக்கின்றேனா? எல்லவாற்றையும் உதறிவிட்டுத்தானே வந்தேன்.

பகலை தொலைத்த நாட்கள் அவை. வெறும் இருட்டுமட்டுமே பரவிக்கிடந்தது. எல்லாவற்றையும் தொலைத்த வெறுமை. மனிதர்களின் புரியாத மனம் குழம்பிப்போய் கிடந்தது குழம்பிப்போய் கிடக்கும் வானத்தை போல. சில வேளைகளில் மட்டும் வெளிச்சம் பரவும் அதுவும் சில நிமிடங்களில் ஓடி ஒளிந்து கொள்ளும். இரவின் அமைதி தொலைந்து போயிருந்தது.

ஏராளமான கனவுகளை தொலைத்து நடுங்கிய இரவில் வீடும், காற்றும், அந்த ஊரும், சந்தியும் எல்லாவற்றையும் உள்வாங்கி தனக்குள் புதைத்து வைத்துக் கொண்டிருந்தது. யாழ்ப்பாண வீதிகள் அங்கு வாழ்ந்தவர்களின் மனதை பிரதிபலித்துக்கொண்டிருந்த காலம் வேற்று முகங்களினால் பறிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

எல்லா நிகழ்வும் நிரப்படாத இடைவெளியாய் நீண்டு கொண்டே போனது. காட்டிக் கொடுப்போரின் விரல்களும் எல்லா திசைகளிலும் நீள நீள காணமல் போவோரின் பட்டியலும் நீண்டு கொண்டே போனது.

அதே விரல்கள் என் தோழியின் கணவர் முன் நீண்ட பொழுதுதான் எனக்குள் பயம் இன்னும் அதிகமாக படரத் தொடங்கியது.

இலைகள் அசைந்தாலும், இரவு கவியத்தொடங்கினாலும், நாய்கள் குரைத்தாலும் எல்லாவற்றுக்குமே பயம். பயம் வாழ்க்கையை ஆதிக்கம் பண்ணத் தொடங்கியது.

கற்பனைகளை சுமந்த முகங்களெல்லாம் மரண பயத்தை சுமந்தபடி உலவியதை பார்க்க வாழ்க்கையின் கொடூரம் புரியத்தொடங்கியது.

சிரித்தும், கதைத்தும் கழிந்த வாழ்க்கை அடங்கி, ஒடுங்கி, நடுங்கி வாழமுயன்றபோது நாளைய வாழ்வு கேள்விக் குறியானது. கேள்விகள் நிறைந்து நிறைந்து வழியத் தொடங்கியது. அத்தனை முகங்களிலும் துயரமும், பயமும், கேள்வியும் மட்டுமே. போரின் நிஜமுகத்தை எதிர் கொள்ள என்னால் முடியவில்லை என் முகத்தை எங்கேயாவது ஒளிக்க வேண்டும்.

பனிப் புகார் என் அடையாளத்தை மறைக்கத்தொடங்கியது. வீட்டை விட்டு ஓடியகால்கள் பனிகளுக்குள்ளும், ஆற்றிலும் புதைந்து விறைத்தன. புதைந்த கால்களின் அழுகுரல் ஊரில் கேட்டது போலவே. ஆனால் இங்கு ஊர் அசையவே இல்லை. ஏது இயலாது என்று ஓடி வந்தேனோ அது இங்கேயும். . .

வழமைபோலவே என் கால்கள் புதிய பாதையை நோக்கி நடந்து நடந்து முற்றுப்புள்ளியில் நின்றபோது அடையாளங்களை அழித்தும் ஒழித்தும் முகத்தில் பொய்களை அப்பியபடி இங்கேயும் விஷஜந்துக்கள் பற்களை நீட்டியபடி காத்திருக்கின்றன என்பதை அறியாத அப்பாவியாய்.

அப்போது எல்லாவற்றிக்கும் பெயர் இருந்தது. வீட்டுக்கும், அறைகளுக்கும், எங்களுக்கும். இப்போ வெறும் கற்குவியலும் மணலுமாக இருக்கும் வீட்டுக்கு என்ன பெயர்? இங்கு நாங்கள் இருக்கும் வீட்டுக்கு பெயர் அகதி முகாம். எனக்கும் அகதி பொம்பிளை விறாந்தை, கோல், குசினி, சாப்பாட்டறை, சாமிஅறை, படிக்கிறஅறை, படுக்கைஅறை எல்லாமே ஒரு அறை.

அம்மாவுக்கு கடிதம் எழுதுவம் என்று நினைத்தவுடன் மனம் வரிகளை எழுதி எழுதி அழித்துக்கொண்டு இருக்கும். நான் நலம் அதுபோல் நமசிவாய பள்ளிக்கூடத்தில சிவஞான ரீச்சர் கடிதம் எழுதுவது எப்படி? எண்டு எப்ப காட்டித்தந்தாவோ அதில இருந்து இப்படித்தான் எழுதிறன்.

வெளியில போனாலும் வெள்ளைக்காரர் எப்பிடி சுகமா? என்று கேட்டால் போதும் எங்கிருந்துதான் இந்த பொய் சிரிப்பு வந்து ஒட்டிக்கொள்கிறதோ தெரியவில்லை.

எல்லாமே பொய்யாகி நான் உடைந்து அழும்பொழுது வழியும் கண்ணீர் கூட பனியில் இறுகி நிற்கும்.

அழுவதற்கும் நேரம் இல்லாத வாழ்க்கை. எவர் கண்களுக்கும் புலப்படாத விலங்கு கால்களில் பூட்டப்பட்டுக்கிடந்தது.ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நடந்து நடந்து அலுக்கும் மனதை இசைக்கும் கருவியாக பழைய நினைவுகள்.

நினைவுகள் தழும்பி தழும்பி பல சமயம் அதுவும் அழும். அம்மா, வீடு, ஜிம்மி என்னை அழவைக்க வேறு எதுவும் தேவையேயில்லை. என்மேல் யார்கை பட்டாலும் பாய்ந்து கடிக்கும் ஜிம்மி. அம்மா சொல்லுவா நீ ஜிம்மிவேணுமென்டு ஜில்லிட்ட கடி வாங்கினனிதானே அதனாலதான் உனக்கு ஆர் அடிச்சாலும் அவையளை கடிக்குது. எங்கட றோட்டில உள்ள எல்லாரும் சொல்லுவினம்.

'இது நாய் இல்லை கடவுள்.'

ஓம் நானும் அப்பிடித்தான் நினைக்கிறன் எண்டு அம்மாவும் சொல்லுவா. அது எப்பவும் இப்பிடித்தான் சரியா நாலுமணிக்கு அம்மாவோட சேர்ந்து கேற்றில காவல் நிற்கும். சந்தியில என்ரை வெள்ளை சாறி தெரிஞ்சா போதும் பாய்ந்து கொண்டுவரும். தண்ணி எடுக்க றோட்டில நிற்கிற எல்லாரும் சொல்லுவினம் சுகந்தி பள்ளிக்கூடத்தால வறாள்.

என்ர அம்மா மாதிரியே ஜிம்மியும் எப்பவும் என்னோடையே இருக்கும். எல்லாரையும் கடிக்கிற ஜிம்மி ஏன் கணக்கு மாஸ்ரை கடிக்கிதில்ல? விடியாத இருட்டில இருட்டு மாதிரியே இருக்கிற அவரின்ட நிழல் விறாந்தை யன்னல் கண்ணாடியால தெரியும். பிறகு ராகினி, கமலா வருவினம் எனக்கும் ராகினிக்கும் மடக்கை கணக்கு படிப்பிக்கத்தொடங்குவார்.

மார்கழி மாதம் வந்தா போதும் பண்ணைப் பாலசத்தம், நல்லூர்மணி, பெருமான்கோவில் சுப்பிரபாதம், எல்லாம் யாழ்தேவிகூட காதுக்க கூவும் அதில நாங்கள் நித்திரை தூங்கிறதை பாங்கொலி காட்டிக்கொடுக்கும். இறுக்கி குட்டுவார். ஆனால் ஜிம்மி பார்த்துக்கொண்டு சும்மா இருக்கும்.

சோதனை வந்தாபோதும் நானும் அக்காவும் சரஸ்வதி கலண்டருக்கு சண்டை போடத் தொடங்கிவிடுவம். பிறகு அம்மா பூபாலசிங்கம் கடையில இரண்டு மெய்கண்டான் கலண்டர் வாங்குவா. நான் கலண்டரில எனக்கு மட்டும் விளங்கிறமாதிரி ஏதாவது குறிப்பு குறிச்சுவைச்சிட்டு அதில கட்டியிருக்கிற சணலில பிடிச்சு ஆட்டிக்கொண்டு போவன். அக்கா சொல்லுவா எனக்கென்ன கடவுள் உன்னை கோபிப்பார்.

அக்கா எப்பவும் இப்பிடித்தான். நல்லா பொய் சொல்லிறன் எண்டு அம்மாட்டை கோள்மூட்டுவா. அம்மாவும் நல்லூர் உதய பூஜைக்குபோற நேரமெல்லாம் திருஞான சம்பந்தர் ஆதீனத்துக்கு கூட்டிக்கொண்டுபோய் மணி அய்யரிடம் சொல்லுவா. சுவாமி இவள் வாய்திறந்தா பொய் சொல்லிக்கொண்டே இருக்கிறாள். அவரும் ஆதீனத்தில பெரிய கரும்பலகையில ஒட்டியிருக்கிற படத்தை காட்டுவார்.

இங்க பார் பொய் சொன்னா என்ன தண்டனை கிடைக்கும் கண்டியோ? அதில அம்புலிமாமாவில வருகிறவை மாதிரி கொம்புவைச்சு பெரிய மீசைவைச்ச அரக்கர்கள் நகங்களை பிடுங்கிக் கொண்டு இருப்பினம். மற்றவை கொதிக்கிற எண்ணைக்குள்ள கைவைச்சு அமுக்குவினம். எனக்கு பயம்வந்திடும். அக்கா என்னை பார்த்து சிரிப்பா. பிறகு சுடச்சுட கற்கண்டு போட்ட பால்தீர்த்தம் தருவார்.

இரண்டு தரம் வாங்கி குடிச்சதுக்கு அம்மாட்டை நுள்ளுவாங்குவன். அக்கா அம்மா சொல்லிற மாதிரியெல்லாம் கும்பிடுவா. ஆனால் நான் நாங்கள் வீட்டை போறதுக்கிடையில காப்புக்கடைக்காறன் பலூன் கடைக்காறன், இனிப்பு விற்கிற பொரிகடலை வண்டில்காரன் எல்லாரும் எழும்பி கடையை திறந்திட வேணும் கடவுளே எண்டு முருகனிட்டை கேட்டுகொண்டே இருப்பன்.

அக்காவின்ர பள்ளிக்கூட சூட்கேஸ் உள்மூடியில சரஸ்வதி, பிள்ளையார் எல்லாரையும் ஒட்டிவைச்சிட்டு படிக்க முதல் கும்பிட்டிட்டுதான் படிக்கத் தொடங்குவா. சமயபாடத்தில கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பா.

நரியை பரி ஆக்கினது ஆரெண்ட சொல்லு, திருமறைக்கதவை திறக்க பாடினது யார்? மூடப்பாடினது யார்?

நீ முதல்ல சமயபுத்தககத்தை மூடு இவையளுக்கு வேற வேலை இல்லாமல் அற்புதங்கள் செய்தவை. இவையாலதான் சமயபாடத்தில கேள்வி கூடிக்கொண்டே போகுது. அதுக்கும் அம்மாட்டை கோள்மூட்டி அடிவாங்கி தருவா.

சோதனை முடிந்த பிறகு இரண்டு விரலில ஒண்டை தொடு என்டு நெடுகலும் கேப்பா. ரஞ்சன், ராஜன், ரவி, பபா எல்லாரும் பிறேமக்கா வீட்டுக்கு பின்னால இருக்கிற சோனக வளவுக்க போய் வெடிக்கிற காய்க்கு எச்சில துப்பிப்போட்டு கண்ணை மூடிக்கொண்டு வெய்யிலில பிடிப்பம். அது வெடிச்சா பாஸ் அக்கான்ர காய் சத்தத்தோட வெடிக்கும்.

பிறகு பள்ளிக்கூடத்தால வரேக்க இந்த கல்லை வீடுமட்டும் காலால தள்ளிக்கொண்டு போன நான் பாஸ்பண்ணுவன் எண்டு சொல்லி தள்ளிக்கொண்டே வருவா அக்காவுக்கு எல்லாம் சரியாத்தான் இருக்கும்.

ஆனா சோதனை மறுமொழி மட்டும் மாறிவரும். பிறகு கொஞ்ச நாளைக்கு எனக்கு பிறேமக்கா வீட்டுக்கு போய் எங்கட வீட்டில இல்லாத திருவாத்தி பூ பிய்க்கிற வேலை இருக்காது. எனக்கு ஒரே யோசனையா இருக்கும் எல்லாம் சரியாத்தானே வந்தது. பிறகேன் அக்கா பாஸ்பண்ணேல்ல?

எந்தக்கேள்விக்கும் எனக்கு சரியா விடை கிடைப்பதே இல்லை. எந்த வேலை தேடிப்போனாலும் முன் அனுபம் இருக்கா......?

நீங்க வேலை தந்தால்தானே முன் அனுபவம் வரும். வெள்ளையனின்ர முகம் மெல்ல சிவக்கும் இந்த வேலைக்கு படிச்சனியோ?

'உங்கட அரசாங்கம் என்னை மொழியே படிக்க விடேல்லை.'

'ஆனா உனக்கு வாய் பெரிசா இருக்கு'

'எல்லாம் உங்கட ஆட்களோட பழகி பிடிச்சது'

'உனக்கு சரியான வேலை ஒன்டு இருக்குது. காலையில கடை திறக்க முதல்வந்து கூட்டி துடைச்சிட்டு போ.'

'இப்ப எனக்கு காது எரியும் ஏன் அதுக்கு முன் அனுபவம் வேண்டாமோ?' என்ர கோபத்தை கதவில மட்டும்தான் காட்ட முடிந்தது.

பகல் வருவதும் போவதுமாக இருந்தது. ஆனால் இரவுமட்டும் நிரந்தரமாக தங்கியிருந்தது. கடலையும் காற்றையும் தொலைத்து உயர்ந்த கட்டிடங்களுக்கிடையில் சிறு குப்பையாக வாழும் வாழ்க்கை சலிப்பும் வெறுப்பும் கலந்த கலவையாக.

தொலைகாட்சி தன்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. அங்கேயும் வெள்ளைக்காரி கதிரையில இருக்க அமெரிக்க கறுப்பு இன மனுசி மண்டியிட்டு வீட்டை துடைத்துக்கொண்டிருந்தாள்.

எரிச்சலுடன் சனலை மாற்றினேன். ஓட்டப்போட்டி வெள்ளையர்களுடன் கறுத்தவர்களும் விடாதே விடாதே என மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது.

பாடாசாலையால் வந்து பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு சில வேளைகளில் என்னிடம் பதிலே இருக்காது. நாங்கள் ஏன் அம்மா கறுப்பா பிறந்தனாங்கள்? இந்த சோப்போட்டு குளிச்சா வெள்ளையாவருவமோ? லூக்காஸ் இதுபோட்டுத்தான் குளிக்கிறவனாம். அதுதான் அவன் வெள்ளையா இருக்கிறானோ?. அம்மா ஏன் சாத்தானையும் கள்ளனையும் கறுப்பா காட்டினம்? பள்ளிக்கூடத்தில எல்லாரும் படம் கீறேக்க என்னை பார்க்கினம். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த பெரியமகன். மை பமிலியை பற்றி எழுதவேணும் என்னுடைய அம்மா ஒரு புட்ஸ் பிறா(துடைக்கிறமனுசி) எண்டே எழுதிறது. மற்ற பிள்ளையள் எல்லாம் தங்கட அம்மா லேரா (ஆசிரியர்), பாங்கில புக்கள்ரரின்(கணக்காளர்), எண்டு எழுதிக்கொண்டு வருவினம் எங்கட அம்மாவும் ஐ ஏ பி எல்லாம் படிச்சவ எண்டுதானே அப்பா சொன்னவர். பிறகேன் சுமிற்சிக்(ஊத்தை) வேலையெல்லாம் செய்யிறா? எங்களோட படிக்கிறவை ஆராவது கண்டிட்டா எங்களுக்கு வெக்கமா இருக்கு அம்மா.

ஓம் என்கிறமாதிரி மற்றப்பிள்ளைகளும் என்ர முகத்தை பார்ப்பினம். பிள்ளைகளின் ஆதங்கங்கம் ஒவ்வொன்றாய் எதிரொலித்துக்கொண்டிருக்க முள்ளந்தண்டில் குளிர் ஊசியை ஏற்றியபடி இருந்தது.கால்கள் சிங்கத்தின் குகையை நோக்கி தன்பாட்டில் நடைபோட்டது. காலம் என்னோடு வர மறுக்கின்றது. நானும் அதுவும் எப்போதும் விலகியபடி.

பள்ளிக்கூட யூனிபோமை கஞ்சிபோட்டு அலம்பி அயன்பண்ணி கசங்காம கை முட்டாமல் றோட்டுக்கு வந்தா தேவிகாவின்ர அம்மா குப்பை லொறிக்குள்ள குப்பையை அள்ளிபோடும் பொழுது எழும் புழுதியில் கோபம் வரும். என்னுடைய கோபம் தேவிகாவை அழவைக்கும். மரங்களும் வெள்ளைக்காரி மாதிரியே. சருகுகளை அள்ளிபோட்டிட்டு முதுகைதடவியபடி திரும்பி பார்த்த அடங்கா பிடாரிமாதிரி தலையை உலுப்பி திரும்பவும் கொட்டிப்போட்டு என்னைப் பார்க்கும்.. அள்ளின சருகுகளை குப்பை வாளிக்குள் கொட்டும் பொழுது பாடசாலைக்கு போகும் ஒவ்வொரு சிறுவர்களின் பார்வையிலும் தேவிகா தெரிவாள்.

கொட்டடி பள்ளிக்கூடத்தில் மாமரத்துக்கு கீழே வட்டமாக இருந்து கொண்டு முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று அர்த்தமே புரியாது கத்தி கத்தி பாடமாக்கினதன் அர்த்தம் இப்பொழுதுதான்................ ரொயிலற்றை கழுவும் பொழுது தண்ணீரைவிட கண்ணீரால் கழுவுவது அதிகமாக இருக்கும். வாளியின் கம்பிச்சத்தம் எதையெல்லாமோ நினைவுபடுத்தும். கோடியால் வந்து போகும் ஊத்தை துரை வந்திட்டான் என்று அம்மாவுக்கு அடையாளம் காட்டுவது இந்த வாளியின் கம்பிச்சத்தம்தான்.

ஒரு நாள் வாளியை வாங்கும் பொழுது ஊத்தை துரையின் விரல் என் கைமீது பட்டுவிட்டது என்பதற்காக இழுத்துவைத்து முழுகவார்த்த அம்மா. இப்போ எதைவைத்து என்னை முழுகவார்ப்பா? பொய்யாகி போன வாழ்க்கையில் இனி சொல்வதற்கு எதுவும் இல்லை கேட்பதற்கும் ஆரும் இல்லை.

தொலைகாட்சியில் பிரிந்த ஜேர்மனி ஒன்றான நாளைப்பற்றிய விமர்சனம் ஓடிக்கொண்டிருந்தது. வெள்ளைக்காரி ஒரு கையில் பாண்துண்டும் மறுகையில் கோப்பியுமாக மிக ஆர்வமாக பார்த்துக்கொண்டிருந்தா.

நானும் ஒரு கையில் துடைக்கிற துணியும் மறுகையில் தும்புத்தடியுமாக ஓடிக்கொண்டிருந்தேன். ஒரு நொடியில் மதில் கீழே சரிந்து கொண்டிருந்தது. பலர் அதன் துண்டுகளை இடிபட்டு எடுத்துக்கொண்டிருந்தார்கள். இரண்டு பக்கமாக உறவுகளை பிரித்து வைத்திருந்த மதிலின் சரிவை வாணங்கள் எழுந்து வெடித்து மகிழ்வை தெரிவித்துக்கொண்டிருக்க பிரிந்த உறவுகள் கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் வடிக்க, எனக்கும் அழுகைவந்தது. இப்படித்தான் ஏ 9 பாதை திறக்கும் பொழுது இருந்தாக அண்ணா எழுதியிருந்தார்.

இதை மூடும் பொழுது எத்தனை உயிர்களின் இரத்தம் இந்த மண்ணில் சிந்தியிருக்கும். எத்தனை உறவுகள் பிரிக்கப்பட்டிருக்கும். எத்தனையோ நாட்களாக மெழுகுதிரியை ஏற்றிக்கொண்டு ஒரு ஓரத்தில் நின்று வயது முதிர்ந்த அன்னையர்கள் தங்கள் குழந்தைகளின் பெயர்களை சொல்லிச் சொல்லி அழைத்தார்களாம். அவர்களின் ஒப்பாரிகளை ஏக்கங்களை எல்லாவற்றையும் உள்வாங்கியும் இரங்காத சுவர் இப்போ மண்ணில் சாய்ந்து கிடந்தது.

அந்தகாட்சியும் பிள்ளைகளை இறுதிக்காலம் வரையும் காணாது ஏக்கத்துடன் இறந்த அத்தனை அம்மாவைப்பற்றிய நினைவும் என்னை ஆக்கிரமித்துக்கொண்டிருக்க என் கையிலிருந்த பூனையின் கோப்பை என்னை அறியாமலே விழுந்து சிதறியது. ஒரு கணம் நடுங்கிப்போனேன். வெள்ளைக்காரியின் உள்ளிருந்து பிடரியை சிலுப்பிக்கொண்டு சிங்கம் எழும்பியது. என் உயிர் சிங்கத்தின் கோரப்பற்களுக்குள் அகப்பட்டு துடிக்கும் காட்சி என் கண்முன்னே விரிந்தது.

சிங்கத்தின் கண்கள் என் அச்சத்தையும், துயரையும் உள்வாங்கியபடி நெருப்பை கக்கத் தொடங்கியது.

என்னுள் இருந்த இரத்தம் வேர்வையாக கொட்டியது. உடல் அனலின் பிடியில் சிக்கியது. இம்முறை அகதி வேலைக்காரியின் கையிலிருந்த தும்புத்தடியும் ஊத்தைத் துணியும் அதற்கான இடத்தில் போய் சுழன்று கொண்டு விழுந்தது.

வெளியே பாரம் தாங்காமல் மேகம் கீழ்இறங்கிக் கொண்டிருந்தது.

(shanthyneevaratharajan@gmail.com)

# எனக்காகவா நான்...?

பாடும் மீன்.
சு. ஸ்ரீ கந்தராசா
அவுஸ்திரேலியா



சுகந்திக்குத் தனது தலை துண்டுதுண்டாக வெடித்துச் சிதறுவது போல இருந்தது.

உடலிலுள்ள குருதியெல்லாம் ஓடிவந்து இதயத்தினுள் உறைந்து விட்டதைப்போலவும், குருதியிழந்து விறைத்துப்போன உடல் செயலிழந்த மரக்கட்டைபோலாகிவிட்டதைப் போலவும் இருந்தது. தன் இளமைக்காலத்திற்குள்ளேயே இதுவரை எவ்வளவோ சோகங்களை அனுபவித்தும், சுமைகளைத் தாங்கியும் பழகிவிட்ட சுகந்திக்கு இப்போது அதிர்ச்சியோடு வந்த துன்பம் ஒரு கணத்திலேயே தாங்கொணாதபடி அவளின் இதயத்தைத் தாக்கிவிட்டது. முன்னர் அவள் பட்டதுயரெல்லாம் தன்சொந்த நாட்டில், தான் பிறந்துவளர்ந்த ஊரில் வாழ்ந்தபோது ஏற்பட்டவை.

ஊராரும் உறவினரும் அங்கே சூழ இருந்தார்கள்.

இப்போது இங்கே, அந்நிய நாட்டில் அவளுக்கு வந்திருக்கும் அதிர்ச்சியான துன்பத்தைச் சொல்லிப் பகிர்ந்துகொள்ளக்கூட யாருமே இல்லாத நிலை. அவளுக்குப் பயமாகவும் இருந்தது.

*

சுகந்தியின் தந்தை ஒரு வர்த்தக நிறுவனத்தை நடாத்திவந்தார். கொழும்பிலிருந்து பொருட்களை மொத்தமாக கொள்வனவுசெய்து அவற்றை மட்டக்களப்பில் உள்ள கடைகளுக்கு விநியோகம் செய்வதும், மட்டக்களப்பில் உற்பத்தியாகும் பொருட்களை உற்பத்தியாளர்களிடம் இருந்து வாங்கி கொழும்பில் மொத்தவியாபாரிகளுக்கு விற்பனைசெய்வதும் அவரது நிறுவனத்தின் வர்த்தகம். நல்ல இலாபம் கிடைத்தது. பலருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்தார். அத்துடன் அவரது நேர்மையும், எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பும் அவருக்கு சமுதாயத்தில் நல்ல மதிப்பையும் தேடித் தந்திருந்தது. அவரது வளர்ச்சியில் பொறாமை கொண்ட மற்றுமொரு வர்த்தகர் தொழில்போட்டி காரணமாக அள்ளிவைக்க வேண்டிய இடத்தில் அள்ளி வைத்துவிட்டார். அதனால் ஒருநாள் இனம் தெரியாத நபர்களால் அவர் கடத்தப்பட்டதாக செய்தி வந்தது.

அவ்வளவுதான். அதன்பிறகு அவரது உயிரற்ற உடல் காட்டுப்பகுதியொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. அவர் காணாமல் போன நாள் முதல் அவரைக் கண்டுபிடிப்பதற்காக எவரெவருக்கோ எல்லாம் என்று கொடுத்த பணம் இலட்சக் கணக்கில் ஆரம்பித்துக் கோடிக்கணக்காகி அவர்களது குடும்பச் சொத்துக்களைக் கரைத்து அவர்களை வீதிக்குக் கொண்டுவந்தது. அவர்களது வீட்டை விற்கவேண்டி ஏற்பட்டது. பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்த அவளின் தம்பியை நாட்டுச் சூழ்நிலையும், வீட்டு நிலைவரமும் வெகுவாகப்பாதித்தது. அதனால், படிப்பை விட்டுவிட்டு வெளிநாடு போவதற்காக மிச்சம் மீதியிருந்த அவர்களது நகைகளை விற்று கொழும்பில் ஒரு முகவரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்தான்.

ஒருநாள் அவன் தங்கியிருந்த விடுதியில் இருந்து இளைஞர்களையெல்லாம் குண்டுவைக்க வந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அள்ளிக்கொண்டு போனார்கள். அதன்பிறகு அவன் திரும்பிவரவேயில்லை. எங்கே சென்று விசாரித்தாலும் அப்படியொருவர் கைதுசெய்யப்படவேயில்லை என்ற தகவலே கிடைத்தது.

ஒரு வருடத்திற்குள்ளேயே தந்தையையும், மகனையும் இழந்த அந்தக் குடும்பம் நிலை குலைந்தது. தாங்கொணாத சோகம் தாயை மாதக்கணக்கில் படுக்கையில் போட்டுவிட்டது. தாயையும் வயதுக்கு வந்த இரண்டு தங்கைகளையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு சுகந்தியின் தலையிலே விழுந்தது. வாழ்வில் துன்பம் என்பதை என்னவென்றே அறியாதவாறு வளர்ந்த சுகந்திக்குத் தந்தையின் இழப்பினால் துன்பமே வாழ்வாகியது. தாயைக் குணமாக்கி எழுந்து நடமாட வைப்பதற்குள் அவள் பட்ட வேதனைகளும், எதிர் நோக்கிய சவால்களும் செல்வச் செழிப்போடு வளர்ந்த அந்த இருபத்திநான்கு வயதுப் பெண்ணுக்கு மிகவும் அதிகமானது. சமாளித்தாள். தாயைத் தாய்போலப் பேணினாள். அவளின் தந்தையோடு வர்த்தக உறவு வைத்திருந்த கந்தையா முதலாளி தன் கடையில் அவளுக்குக் காசாளர் வேலை கொடுத்தார்.

உண்மையில் அது அவளுக்காகவே உருவாக்கப்பட்ட வேலை. நன்றாயிருந்த நண்பரின் குடும்பம் நலிந்துபோய்க்கிடப்பதைத் தாங்க முடியாமல் அவர்களுக்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்று அவர் செய்த உதவி அது. அந்த வேலையில் கிடைத்த குறைந்த வருமானத்தில் வறுமையிலும் செம்மையாகத் தங்கைகளை வழிநடத்தினாள். இந்த நிலையில்தான் கந்தையா முதலாளி மூலமாக அவுஸ்திரேலியாவில் அவளுக்குத் திருமணச்சம்பந்தம் வந்தது.

கந்தையா முதலாளியின் ஒன்றுவிட்ட தமக்கையின் மகன்தான் சந்திரன். தாயையும் தங்கைமாரையும் விட்டுவிட்டுப் போகவேண்டிவரும் என்பதால் சுகந்தி அதற்குச் சம்மதிக்கவில்லை. ஒருபோதும் தன்னால் முடியாது என்று அவள் மறுத்துவிட்டாள். கடைசியில் அவள் அவுஸ்திலேயாவுக்குப் போனால் தங்கள் வறுமைக்கு விடிவு வரும் என்றும், தங்கைமாருக்கும் ஒரு வழிபிறக்கும் என்றும் இல்லாவிட்டால் இப்படியே எல்லோருடைய எதிர்காலமும் சூனியமாவே போய்விடும் என்றும் தாய் வற்புறுத்தியதால் அரைமனதோடு அவள் சம்மதித்தாள். ஒரு வருடத்திற்குள்ளேயே அவள் அவுஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டாள். அவர்களது குடும்ப நிலைமைகளை நன்கு புரிந்துகொண்டு மாப்பிள்ளை அதுதான் சந்திரனும் தாயும் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டார்கள்.

சந்திரன் அவளோடு மிகவும் அன்பாகப் பழகினான். அவனது தாயும் மருமகள் மாமியார் போலன்றி அவளுக்கு ஒரு தாய்போலவே நடந்துகொண்டாள். இலங்கையிலுள்ள தனது குடும்பத்தினரின் வீட்டுத்தேவைகாக்க கேட்டபோதெல்லாம் சந்திரன் பணம் கொடுத்தான்.

அத்துடன் அவள் வேலையில் சேர்ந்ததும் அவளது சம்பளத்தில் ஒருசதத்தையும் அவன் கேட்டதில்லை. அவளது சம்பளப் பணம் முழுவதையுமே அவளின் குடும்பத்திற்கு அனுப்பும்படி அவன் கூறியபோது அவள் அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு கதறியழுதாள்.

அவளின் மாமியார் அருகே வந்து அவளின் தலையைத் தடவிக்கொண்டே, “இதென்ன பிள்ளை. எங்களிட்டை இருக்குது. அங்க அதுகள் பாவம் கஷ்டப்படுதுகள். அதோடை அவையள் ஆர். உனக்கு அம்மா எண்டால் அவனுக்கு மாமிதானே. நாளைக்கு எனக்கு ஒண்டு எண்டால் நீ உதவி செய்ய மாட்டியோ?” என்று சொல்லவும் அவனைக் கட்டிக்கொண்டு நின்றவள் அப்படியே தாவி மாமியாரின் கால்களில் விழுந்து “ஐயோமாமி. அப்பிடிச் சொல்லாதீங்க..நீங்க எனக்குத் தெய்வம்” என்று சொல்லி அழுதாள்.

தனக்குக் கிடைத்த நல்வாழ்வை எண்ணிச் சுகந்தி பலமுறை ஆனந்தக் கண்ணீர் வடித்திருக்கிறாள். அவுஸ்திரேலியாவுக்கு வந்து ஆறுமாதங்கள் வரை சுகந்தி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எதிர்காலமே இருளாகிவிட்டதாகத் தத்தளித்துக்கொண்டிருந்த தனக்கும் தனது தாய்க்கும் சகோதரிகளுக்கும் இப்படியொரு நல்வாழ்வு கிடைத்தமை அவளுக்குச் சிலவேளைகளில் நம்பமுடியாத வியப்பைத்தந்தது. ஆனால் அவளது அந்த மகிழ்ச்சிக்கு இவ்வளவு விரைவில் முற்றுப்புள்ளி வரும் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை.

*

அன்று தொலைபேசி மணி அடித்ததும் மாடியில் தனது அறையில் இருந்த சுகந்தி சந்திரனாக இருக்கும் என்று ஓடிச்சென்று அதை எடுத்தாள். கீழே வரவேற்பறையில் இருந்த சந்திரனின் தாயாரும் அங்கேயிருந்த தொலைபேசியை எடுத்தாள். மறுபக்கம் ஒரு பெண்ணின்குரல்.

"ஹாய்! ஹலோ அன்ரி ஹவ் ஆர் யூ" என்று கேட்கவே யாரோ தன் மாமியாருக்குத் தெரிந்தவளாக்கும் என்று தொலைபேசியை வைத்துவிட சுகந்தி முயலும்போது மாமியார் அவளை ஆங்கிலத்தில் கோபமாகத் திட்டுவதைக் கேட்டதும் என்ன நடக்கிறது? யாரிது என்று அறிய சுகந்தி தொலைபேசியை வைக்காமல் செவிகொடுத்தாள். அவர்களது தொலைபேசி உரையாடல் நடைபெற்ற ஒவ்வொரு கணத்துளியும் அதில் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் அவளுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியைக் கொடுத்தது.

"ஏய்! உனக்கு என்னவேணும். நீ இங்க கதைக்கக்கூடாது என்று எத்தின தரம் உனக்குச் சொல்றது. சந்திரனோட நீ இனிமேல் தொடர்பு வைக்கக்கூடாது எண்டு நான் எத்தின தரம் சொல்லியிருக்கிறன். அவனுக்குக் கலியாணம் முடிஞ்சி நாங்க நிம்மதியா இருக்கிறம். நீயும் உங்கட ஒரு சீனாக்காறனைப் புடிக்கவேண்டியதுதானே..நாயே.." இப்படியெல்லாம் மாமியார் அவளுக்குத் திட்டியும் அவள் சற்றும் கோபப்படாமல் பேசுகிறாள்.

"அன்ரி..நான் சந்திரனோட கதைக்கிறத்துக்காக இப்ப எடுக்க இல்லை. அவர் இரவு முழுதும் இங்க என்னோடதான் இருந்தவர். அவரோட செல்லை இங்க விட்டுட்டுப் போயிட்டார். அதைச் சொல்லத்தான் எடுத்தனான். என்ன . . .அன்ரி. . . என்ன அன்ரி. . . எதுவும் தெரியாதமாதிரிக் கதைக்கிறீங்க. உங்களுக்கு ஒரு தமிழ் மருமகள் தேவை எண்டு அவருக்குக் கலியாணம் கட்டிக்கொடுத்தீங்க. அதுக்கு நான் ஏதாவது எதிர்ப்புக் காட்டினேனா? நான் நினைச்சிருந்தா சந்திரன் உங்கட பேச்சக் கேட்காம என்னையே கலியாணம் செய்ய வச்சிருப்பன். எனக்கு சந்திரன் வேணும். என்ர பிள்ளைக்கு அப்பா வேணும். அதுக்காக அவர என்னைக் கலியாணம் செய்யச் சொன்னேனா? உங்களுக்கு ஏதாவது கஷ்டம் கொடுத்தேனா? சந்திரனிட்ட இருந்து ஒரு சதமாவது கேட்டேனா? உங்கட விருப்பப்படி அவரைக் கலியாணம் செய்ய விட்ட எனக்கு நீங்க இப்படிக் கதைக்கலாமா? சந்திரன் சொன்னார் உங்கட மருமகள் சுகந்தி மிகவும் நல்லவள் எண்டு. உங்கட மருமகளைச் சந்திரன் மதிக்கிறார். ஆனா என்னைத்தான் அவர் காதலிக்கிறார்." இதைக் கேட்டதுமே சுகந்திக்குத் தலை சுற்றியது.

இதுவெல்லாம் உண்மைதானா? வெறும் கனவாக இருந்துவிடக்கூடாதா என்ற நப்பாசையும் இதயத்தின் ஒரு மூலையில் கடுகளவு கருக்கொண்டு மறைந்தது.

*

முதலிரவன்றே சந்திரன்மேல் அவளுக்குச் சந்தேகம் வந்தது. முதலிரவில், முதன்முதல் அவளோடு அவன் நடந்துகொண்ட முறையில் அவனுக்கு ஏற்கனவே மிகுந்த அனுபவம் இருந்திருக்க வேண்டும் என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். என்னதான் திருமணம் நடந்திருந்தாலும் முன்னர் அதிகம் பழக்கம் இல்லாத தன்னோடு முதன்முதலில் அந்த உறவில் ஈடுபடுவதற்கான எந்தவித தயக்கமும் இல்லாமல், ஏற்கனவே பலதடவைகள் தன்னோடு உறவுகொண்டவன்போல மிகவும் சாதாரணமாக அவன் நடந்துகொண்டமை அவளுக்கு ஏமாற்றத்தையே தந்தது. அறைக்குள் வந்தான். கதவைச் சாத்தினான். "எப்படி இருக்கிறாய்" என்று ஆங்கிலத்தில் கேட்டான். கட்டிலில் படுத்தான். சில நிமிடங்கள் மௌனமாக இருந்தான். அருகே வரச்சொல்லி அழைத்தான். அவளைத் தன்பக்கம் இழுத்து அணைத்தான். விளக்கை அணைக்கக்கூட இல்லை. வெளிச்சத்திலேயே தன் பசியைத் தீர்த்துக்கொண்டான். பின்னர் மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டான். இதுதான் சுகந்தியின் முதல் இரவு.

அன்றைக்கே நெஞ்சில் முள் ஒன்று தைத்ததைப் போன்ற வலியொன்றை அவள் உணர்ந்தாள். ஆனால், வெளிநாட்டில் வாழ்பவர்கள் திருமணத்திற்கு முன்னர் அப்படியிப்படித்தான் இருப்பார்கள் என்று தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டாள்.

திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து, நாளாக நாளாக அவளில் அன்பும், ஆசையும் அக்கறையும் கொண்டவன் போலவே அவன் நடந்துகொண்டமையால் முதலிரவில் அவளுக்கு எழுந்த சந்தேகம், அந்த ஏமாற்ற உணர்வு மெல்லமெல்ல அவளது நெஞ்சைவிட்ட அகன்று விட்டது.

திருமணம் நடந்த புதிதில் தாமதிக்காமல் அலுவலகத்திலிருந்து நேரே வீட்டுக்கு வந்துவிடுவான். அடிக்கடி அவளை வெளியே அழைத்துச்செல்வான்.

கடைத்தெருக்கள், கடற்கரைகள், பூங்காக்கள் என்றிப்படி எங்கெல்லாமோ கூட்டிச்சென்று விதம்விதமான பரிசுப்பொருட்களை அவள் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் வாங்கிக் கொடுப்பான்.

ஆனால், சில மாதங்களில் அவனது போக்கில் சில மாறுதல்களை அவள் உணரத் தொடங்கினாள். அடிக்கடி அவன் வீட்டுக்கு இரவில்தாமதமாக வரத் தொடங்கினான். அவள் காரணம் கேட்காமலேயே அவன் ஏதேதோ காரணங்களை அவளிடம் கூறினான். அவை ஏற்றுக்கொள்ள முடியாதவையாக அவளுக்குத் தோன்றினாலும் அதுபற்றிஅவள் எதுவுமே பேசியதில்லை. சில நாட்களில் இரவு முழுவதுமே எங்கோ தங்கிவிட்டு மறுநாள் மாலை அலுவலகம் முடிந்து வழமையாக வருவது போல வருவான். தொலைபேசியில் தொடர்புகொண்டால் அலுவலக நண்பர்களுடன் ஒரு விருந்து என்றும், தான் சிறிது மது அருந்திவிட்டதாகவும் அதனால் கார் ஓட்டமுடியாது, காலையில் வருகிறேன் என்றும் சொல்வான். அடிக்கடி அப்படி வீட்டுக்கு வராமல் விடுவது வழக்கமாகியது. அவன் எதையோ தன்னிடம் மறைக்கிறான் என்று அவளது உள்ளுணர்வு கூறினாலும் வீட்டில் இருக்கும்போது அவன் அவளில் காட்டும் பரிவிலும் பாசத்திலும் அவளது சந்தேகங்களெல்லாம் கரைந்துவிடும்.

சிலவேளைகளில் காரணமில்லாமல் அவன் அவளுடன் எரிந்து விழுந்தாலும் அவளுடன் அன்பாகவேயிருந்தான். இலங்கையிலுள்ள அவளின் குடும்பத்தார்மேல் உண்மையான அக்கறை காட்டினான். இடிந்து சிதைந்து கிடக்கும் அவளது தாயாரின் வீட்டைத் திருத்துவதற்கு அவள் கேட்காமலேயே பணம் அனுப்பினான். அவளின் கடைசித் தங்கைக்கும் ஒரு காணி வாங்கி வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வான்.

*

என்ன இருந்தாலும் அவன் இன்னொருத்தியைக் காதலிக்கிறான் என்பதை அவளால் தாங்க முடியவில்லை. அவளைக்காதலித்ததுடன் அவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கும்போது தன்னைக் கலியாணம் செய்ததை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

எவ்வளவு நல்லவராக இருக்கும் தன் மாமியார் இப்படிச் செய்திருக்கிறாரே என்பதை அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

மாமியாரிடம் சென்றாள்.

"மாமி. உங்கள நான் என்ர அம்மாவுக்கும் மேலாக நினைச்சன். ஏன்மாமி.. நீங்களும் ஒரு பொம்பிளைதானே? நாங்க ஒண்டுக்கும் வழியில்லாத ஏழைகளாகிவிட்டம் எண்டுதானா நீங்க இப்பிடிச் செய்தனீங்க. ஒரு காலத்தில நாங்களும் பணக்காரராகத்தான் இருந்தம். அப்பாவ அந்தப்பாவிகள் கொலைசெய்தாங்கள். அதனாலதான் நாங்க ஏழையாகினம். நீங்க இப்பிடி என்ர வாழ்க்கையப் பாழாக்கிப் போட்டீங்களே மாமி.." என்று அழுதாள்.

"இஞ்சபார் சுகந்தி. உனக்குக் கெடுதல்செய்யவேணும் எண்டு நான் ஒருபோதும் நினைக்கல்ல. கேள் பிறண்ட் இல்லாத பெடியங்கள் இங்க யாருமே இல்ல. இந்த நாட்டில அது சர்வசாதாரணம். இங்க மட்டுமில்ல. நம்மட நாட்டிலயும் இப்ப அப்படித்தான். அதெல்லாம் ஒரு வயதுக்குத்தான். அதுக்காக சாதிசமயம் பார்க்காம அதுகளையெல்லாம் கலியாணம் செய்ய முடியுமா பிள்ளை?"

சுகந்தி எதுவும் பேசவில்லை. மௌனமாக இருந்தாள். சந்திரனின் தாய் தொடர்ந்தாள்.

"இவனும் அப்படித்தான். அந்தச் சீனாக்காரி இவனோட ஒண்டாப் படிச்சவள். அதில வந்த பழக்கம்"

"நீங்கள் என்ன கதைக்கிறீங்கள்.? அவங்களுக்குள்ள இருக்கிறது வெறும் பழக்கம் மட்டுந்தானா? ஒரு பிள்ளையும் இருக்குதே. அது உங்களுக்கும் தெரியும்."

"பிள்ள!. பிள்ளை பிறக்கிறதொண்டும் இங்க பெரிய விசயமில்ல. கலியாணத்துக்குப் பிறகு எல்லாம் சரியாகிப்போகும் எண்டு நான் நினைச்சன். இப்ப என்ன அவன் உன்னில அன்பாகத்தான் இருக்கிறான். நீ கேட்டபடியெல்லாம் நடக்கிறான்.

*

உங்களின்ர குடும்பத்துக்கு ஆதரவாக இருக்கிறான். பிறகேன் நீ கவலைப் படுறாய். நீதான் அவனைத் திருத்த வேணும்"

இதற்கு மேலும் அங்கு நிற்க அவள் விரும்பவில்லை. இப்படிச் சொல்லுகின்ற தன் மாமியார் முன் இனியும் நின்றால் மரியாதை கெட்டுவிடக்கூடியவகையில் தான் ஏதாவது கதைத்துவிடக்கூடும் என்று அவள் அஞ்சினாள். பொத்துக்கொண்ட வந்த கோபத்தையும், பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையையும் அடக்கிக்கொண்டே மாடிக்குச் சென்று தன் அறையில் கட்டிலில் குப்புற விழுந்து அழுது தீர்த்தாள். எவ்வளவு நேரம் அவள் அப்படி அழுதுகொண்டிருந்திருப்பாள் என்று அவளுக்கே தெரியாது. அப்படியே அயர்ந்து படுத்துவிட்டாள். அது நித்திரையென்று சொல்லமுடியாது. மனமும் உடலும் சோர்ந்துவிட்டதால் ஏற்பட்ட இயலாமையால் அப்படியே கிடந்தாள்.

அவளது தலையை யாரோ தடவும் உணர்வில் திடீரென எழுந்தாள். சந்திரன்! அவள் தன் முகத்தை மறுபக்கத் திருப்பிப் படுத்துக்கொண்டாள்.

"சுகந்தி. அம்மா இப்ப எல்லாம் சொன்னா. இனி உங்களிட்ட நான் ஒண்டையும் மறைக்க விரும்பயில்ல. நானும் லின்னும் படிக்கேக்குள்ள இருந்தே பழக்கம். அது காதலாக மாறிச்சு. இங்க அம்மா ஒரே எதிர்ப்பு. எனக்கு அம்மாவில எவ்வளவு பாசம் எண்டு உனக்குத் தெரியும். அதே நேரம் லின்னும் மிகவும் நல்லவள். அவள் நல்லவளோ இல்லையோ அவளோட நான் உறவு வைச்சிற்றன். அம்மாவுக்காகத்தான் உன்னைக் கலியாணம் செய்தனான். அதுக்காக உன்னை நான் வெறுக்கவில்லை. நீ நல்லவள். உன்னை எனக்கு நல்லாப் பிடிக்கும். உன்னை நான் கைவிட மாட்டன். ஆனால் லின்னை நான் இழக்க முடியாது. ஏனெண்டால் அவள் எனக்காக எவ்வளவோ விட்டுத்தந்திருக்கிறாள். நீ எனக்கு மனைவி என்றதில எந்தப் பிரச்சினையும் இல்லை. உனக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டன். ஆனால். லின்னின்ற தொடர்பைத் துண்டிக்க முடியாது. நீ படிச்சவள். தயவுசெய்து என்னைப் புரிஞ்சுகொள். இவ்வளவுதான் நான் சொல்ல முடியும்" என்று சொல்லிவிட்டுக் கீழே சென்றுவிட்டான்.

சுகந்தியால் எதுவும் பேச முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒவ்வொன்றாகத் தனக்குள்ளேயே எண்ணியெண்ணித் துடித்துக்கொண்டிருந்தாள்.

"என்ன இது தாயும் மகனும் இப்படிச் சொல்றாங்க. இதற்கிடையில மேல்நாட்டுக் கலாசாரத்தில ஊறிற்றாங்களா? தங்கட சுயநலத்துக்காக என்ர வாழ்க்கையை, என்ர வாழ்க்கையை மட்டுமா அந்த லின்னிட வாழ்க்கையையும் வெறும் விளையாட்டுப்போல நினைக்கிறாங்களே. நல்லவங்க நல்லவங்க எண்டு எல்லாரிட்டயும் பேரெடுத்துக்கொண்டு இப்படி வஞ் சகமான நடக்கிறாங்களே. என்னை ஏமாத்திப் போட்டாங்களே. இவங்களைக் கடவுள் மாதிரி எண்ணிக்கொண்டிருக்கிற அம்மாவுக்கும், தங்கைச்சியவைக்கும் இதெல்லாம் தெரிஞ்சால் ஐயோ! அவங்க எப்படித் தாங்கப் போறாங்க? " பொங்கிவந்த அழுகையை அவளால் தடுக்க முடியவில்லை. மீண்டும் அழுது தீர்த்தாள். இரவு முழுவதும் அழுவதும், அடிக்கடி எழுவதும், மீண்டும் பொத்தென்று படுக்கையில் விழுவதுமாக இருந்தாள். மறுநாள் காலை பொழுது விடிந்தபோது அடுத்து என்ன செய்வதென்று அவளது மனதில் தீர்மானம் ஒன்று தோன்றியது. இனியும் சந்திரனுடன் வாழ அவள் விரும்பவில்லை. சந்திரனின் காதலும், பாசமும் லின்னுடன்தான். தன்னிடம் அவருக்கிருப்பது வெறும் அனுதாபம்தான்.

கணவனின் வெறும் அனுதாபத்தின்மேல் குடும்பம் நடத்துவதற்கு அவள் உணர்வுகளற்ற மரக்கட்டையல்ல.

குளியலறைக்குச் சென்று குளித்துவிட்டுத் தன் வழமையான கடமைகளில் ஈடுபட்டாள். சந்திரன் வீட்டிலே இல்லை என்று தெரிந்தது. தன்னிடம் கதைப்பதற்கு அவனுக்குத் தயக்கமாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் வழமைக்கு மாறாகத் தன்னிடம் சொல்லாமலே வேலைக்குப் புறப்பட்டுவிட்டான் என்று நினைத்தாள். அவள் அதை எதிர் பார்க்கவுமில்லை. முடிந்தவரைக்கும் அவனது முகத்தில் விழிக்காமல் விடுவதையே அவள் விரும்பினாள். மாமியார் அவளிடம் பேச்சுக் கொடுத்தாள். அது சுகந்தியின் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை அறிவதற்கான முயற்சியாக இருந்தது. ஓரிரண்டு வார்த்தைகளில் மிகச் சாதாரணமாக அவருக்குப் பதில் கூறினாள் சுகந்தி.

அவள் அலுவலகத்துக்கு வெளிக்கிட்டதைக் கண்ட சந்திரனின் தாய், " என்ன பிள்ளை இண்டைக்கு வேலைககுப் போகப் போறீங்களோ?" என்று கேட்டாள்.

"ஓம்."

"இல்ல..நேற்றெல்லாம் நீங்கள் சரியாக் குழம்பிப் போனீங்கள். சாப்பிடவுமில்ல. இண்டைக்கு லீவு போட்டிட்டு நில்லுங்களன்" உண்மையான அக்கறையோடுதான் அவர் சொன்னார்.

*

"எனக்கொரு குழப்பமும் இல்ல. நான் போயிற்று வாறன்." என்று முகம் பார்க்காமலே பதில் சொல்லிவிட்டு சுகந்தி அலுவலகத்திற்குப் புறப்பட்டாள். அலுவலகத்தில் அவளுடன் வேலைசெய்யும் விஜி அவளுக்கு நல்ல சிநேகிதி. அவளிடம் தனக்கு நடந்தவைகளை ஒன்றும் விடாமல் கூறினாள். அதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அவளின் கணவன் ஒரு சட்டத்தரணி. மிகப்பெரிய சட்ட நிறுவனத்தை நடாத்துகிறார். அவரிடம் தன்னை அழைத்துச் செல்லும்படி சுகந்தி விஜியைக் கேட்டாள். "ஏன்? என்ன செய்யப் போகிறாய்?" விஜி கேட்டாள்.

"வேறென்ன? விவாக ரத்துத்தான்!"

"சுகந்தி நல்லா யோசி. குடும்பம் என்றது சாதாரண விசயமில்ல" விஜி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

சுகந்தி ஒரே முடிவோடுதான் இருந்தாள். "விஜி உன்னால எனக்கு உதவி செய்ய முடியுமா இல்லையா. அதை மட்டும் சொல்லு. என்னுடைய முடிவில மாற்றமில்ல. அதைப்பற்றி எதுவும் பேசாதே"

விஜி தனது கணவனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டாள். சில நிமிடங்களில், மறுநாள் பிற்பகல் நான்கு மணிக்கு சுகந்திக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக விஜி கூறினாள். சுகந்தி அவளைத் தன்னுடன் வரமுடியுமா என்று கேட்டாள். விஜி சம்மதித்தாள். சுகந்தி மறுநாள் வேலைக்கு விடுமுறை போட்டாள். விஜி தான் நேரத்தோடு வேலையிலிருந்து வெளிக்கிட்டு சுகந்தியை வீட்டுக்கு வந்து தனது காரில் கூட்டிச்செல்வதாகக் கூறினாள்.

அன்று இரவு முழுக்கச் சுகந்தியின் மனம் ஒரு நிலையில்லாமல் தவித்தது. ஆனால் விவாகரத்து என்ற தீர்மானத்தில் மாத்திரம் அவளுக்கு எவ்வித குழப்பமும் இல்லை.

தனது எதிர்காலத்தை நினைத்து அவளது மனதிலே பயம் சூழ்ந்துகொண்டாலும், ஒருவித நிம்மதியை அவள் உணர்ந்தாள். நிம்மதியற்ற மகிழ்ச்சியை விட நிம்மதியான துன்பம் எவ்வளவோ மேலானது என்று நினைத்தாள். தான் விவாகரத்துக் கேட்டு வழக்குப் போட்டதும் தன்னைச் சுற்றியுள்ளவர்களிடம் அதன் எதிர் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதையெல்லாம் முன்னேற்பாடாக எண்ணிப்பார்த்தாள்.

"சந்திரன் என்ன சொல்வார்? சிலவேளை அவரது அடிமனதில் சந்தோசம் எழலாம். இனிமேல் தான் லின்னைக் கலியாணம் செய்வதைத் தாய் தடுக்க மாட்டாள் என்று அவருக்கு நிம்மதி வரலாம். தாய்க்காக ஒரு திருமணம், தனக்காக ஒரு திருமணம். ம்....இடையில் நான்தான் பலியாடு. மாமியார் என்ன நினைப்பார்? எதையாவது நினைத்துவிட்டுப் போகட்டும். அம்மாவும் தங்கச்சிமாரும் என்ன செய்வார்கள். விதியை நொந்து வேதனைப்படுவார்கள். வேறென்ன செய்ய முடியும் அவர்களால்? எனது முடிவுக்கான காரணம் என்மேல் அவர்களுக்குக் கோபத்தையோ வெறுப்பையோ வர விடாது."

தாயையும், தங்கைகளையும் நினைக்கும்போதெல்லாம் துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. விக்கி விக்கி அழுகை வெடித்தது. அன்று மாலை சந்திரன் வீட்டுக்கு நேரத்துடனேயே வந்துவிட்டான். சுகந்தியோடு கதைப்பதற்குப் பலமுறை முயன்றான். அதை உணர்ந்துகொண்ட சுகந்தி வேண்டுமென்றே தவிர்த்துக்கொண்டாள்.

மறுநாள் காலை பத்து மணியாகியும் சுகந்தி எழுந்திருக்கவில்லை. மாமியார் கலவரமடைந்தார். சுகந்தியின் அறைக்கதவைத் தட்டி எழுப்பினார். "பிள்ளை..சுகந்தி..நேரமாச்சு எழும்புங்க. வேலைக்குப் போகல்லயோ,' அவள் வேலைக்குப் போகவேண்டுமே என்பது மாமியாரின் கவலை அல்ல. வழமைக்கு மாறாக சுகந்தி இன்னும் எழுந்திருக்கவில்லை என்றதும் அவருக்கு மனதிலே ஒருவகைக் கிலி பிடித்துவிட்டது. அதனால்தான் எழுப்பிப் பார்த்தார்.

“நான் வேலைக்குப் போகல்ல” உள்ளே படுத்திருந்தவாறே சுகந்தி பதில் சொன்னாள்.

“ஆ..அப்ப சரி படுபிள்ளை” பதற்றம் பறந்துவிட்ட நிம்மதியோடு அவர் அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

சுகந்தி படுக்கையிலிருந்து எழுந்தாள். அன்று பிற்பகல் நான்கு மணிக்கு சட்டத்தரணியிடம் என்னென்ன சான்றிதழ்களைக் கொடுக்க வெண்டும் என்று அவளுக்குத் தெரியாது. என்றாலும் அவளுக்குத் தோன்றியவகையில் தனது பிறப்புச் சான்றிதழ், கடவுச்சீட்டு, திருமணச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துத் தயாராக வைத்தாள்.

மனதிலே ஆயிரம் சிந்தனைகள் அலைமோதிக்கொண்டிருந்தாலும் எதுவும் நடக்காததைப்போல வழமையான தன் வீட்டு அலுவல்களில் ஈடுபட்டாள். மதிய உணவுக்குப்பின் அறைக்குள் சென்று படுத்தவள், அசதிமிகுதியால் அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள்.

“சுகந்தி..பிள்ளை...சுகந்தி” மாமியார் கதவைத்தட்டி எழுப்பியதும் திடீரென்று எழுந்து கதவைத் திறந்தாள் மாமியார் கையில் தொலைபேசியுடன் நின்றுகொண்டிருந்தார். “சுகந்தி உங்கட அம்மா..” என்று சொல்லிக்கொண்டே அவர் தொலைபேசியில் சுகந்தியின் அம்மாவுடன் கதைத்துக்கொண்டிருந்தாள்.

“ஓமோம்.. சுகந்தி இந்தா நிக்கிறா....நீங்க ஒண்டுக்கும் யோசியாதீங்க. எல்லா விபரத்தையும் சுகந்தியிட்டச் சொல்லுங்க. சந்திரனிட்ட நாங்க சொல்லுறம். இந்த இடத்தை விட்டுடாதீங்க. காசைப்பற்றியோசிக்க வேண்டாம். கேட்டதைக் குடுக்கத்தானே வேணும். இப்போதைக்கு இருக்கிற வீட்டை எழுதிக் குடுங்க பிறகு வேணுமெண்டால் கட்டிக்குடுக்கலாம்....இந்தா சுகந்தி நிக்கிறா கதையுங்க...” எதைப் பற்றிக் கதைக்கிறார்கள் என்றறியும் ஆர்வத்தின் உச்சத்திற்கு வந்துவிட்ட சுகந்தியிடம் மாமியார் தொலைபேசியைக் கொடுத்தார்.

“அம்மா...!”

"சுகந்தி...எப்பிடி மகள்? என்னெண்டாப் பிள்ள..நிலாந்திக்கு ஒரு நல்ல இடம் வந்திருக்கு. மாப்பிள்ளைய உனக்குத் தெரியும்.

உன்னோட படிச்சவர். சிவலிங்கம் வாத்தியாற்ற மகன், அரவிந்தன். இப்ப எஞ்சினீயரா இருக்கிறார். உனக்குத் தெரியுந்தானே. அவங்க எல்லாருக்கும் நல்ல விருப்பம். அவங்களாத்தான் கேட்டவங்க. ஆனா..அவருக்கு ரெண்டு தங்கச்சிமார் இருக்கிறதால..சீதனம் இருபது லட்சம் கேட்குறாங்க... அதுதான்..."

"இருபது இலட்சமா...திடீரெண்டு என்னெண்டம்மா..."

"அதுதான் உன்னோட கதைச்சிற்றுச் சொல்லுறதா அவங்களுக்குச் சொல்லியிருக்கிறன். இப்ப உங்கட மாமி..அதொண்டும் பிரச்சினை இல்லையாம்..கட்டாயம் செய்யட்டாம்....எண்டு சொன்னவ..அதுக்குப் பிறகுதான் எனக்கு பாரம் குறைஞ்சமாதிரி இருக்கு....நீ என்ன சொல்றா பிள்ள....நிலாவுக்கும் சாந்திக்கும் உன்னப்போல நல்ல வாழ்க்கை கிடைச்சிற்றா நானும் நிம்மதியா அப்பாட்டப் போய்ச் சேர்ந்திடுவன்...என்ன மகள்.. ஒண்டும் பேசாம இருக்கிறாய்...?"

"...ம்..ஒண்டுமில்ல..என்னப்போல வாழ்க்கை அவளுகளுக்கு வரவேணாம் அம்மா" சொல்லிவிட்டுப் பொங்கிவந்த அழுகையை அடக்கிக் கொண்டாள் சுகந்தி.

"என்ன மகள் ஏன் அப்பிடிச் சொல்லுறாய்.."

"இல்லம்மா என்னப்போல வெளி நாட்டு வாழ்க்கை அதுகளுக்கு வேண்டாம். பிறகு அங்க உங்கள ஆரம்மா கவனிக்கிற.... அதைத்தான் சொன்னேன்.." சுகந்தி சமாளித்தாள்.

"அதுதான்..இது ஊரோட மாப்பிள்ளை.. நல்ல பெடியன்... தாய்தகப்பன் நல்ல ஆக்கள். உனக்குத் தெரியுந்தானே.... நிலாந்திக்கும் விருப்பம்....அதுதான்.. அவரிட்டக் கதைச்சு ஒரு நல்ல முடிவைச் சொல்லு பிள்ளை."

"...ம்..." சுகந்தியிடம். நீண்ட ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

" அவரிட்டக் கதைக்கவா...சரி....கதைக்கிறன்"

"உங்கட மாமி ஓம் எண்டு சொல்லிற்றா.....நீ ஒருவார்த்தை சொன்னாத்தானே மகள் நான் ஆகவேண்டியதைப்பார்க்கலாம்..."

"அதுதான் அவ சொல்லிற்றாதானே..பிறகென்ன உங்கட விருப்பம் போலவே செய்யுங்க.." சற்று எரிச்சலாகவும், ஆமோதிப்பதைப் போலவும் சொன்னாள் சுகந்தி.

"அது போதும் பிள்ள..அப்ப சரி. நான் வைக்கிறன். மாமியிட்டச் சொல்லு.."

சுகந்தியின் தாய் தொலைபேசியை வைத்துவிட்டாள். சுகந்தியின் தலை சுற்றியது. அப்படியே கட்டிலில் சென்று அமர்ந்தாள். இனம்புரியாத தோல்வியொன்று வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்டதைப்போன்ற உணர்வு நெஞ்சை அழுத்தியது. ஏதோ நினைவு வந்தவளாக நேரத்தைப் பார்த்தாள். மணி மூன்றைத் தாண்டிக் கொண்டிருந்தது.

ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவள் போல எழுந்து தன் அறைக்குள் சென்றாள். விஜியின் கைத்தொலைபேசியில் அவளைத் தொடர்புகொண்டாள்.

" ஹலோ..சுகந்தி நான் இப்ப அங்கதான் வந்துகொண்டிருக்கிறன். இன்னும் அரைமணித்தியாலத்தில வந்திடுவன்."

"இல்ல..நீ இங்க வரவேண்டாம்."

"அப்ப நீ அங்க நேரே வாறியோ"

"இல்லை. அதுக்கு அவசியமில்லை. உன்ரை அவரிட்ட நான் வரயில்லை எண்டு சொல்லு."

"அப்ப விவாகரத்து?"

"செய்யுறதாக இல்லை. அவரோடதான் இருக்கப் போறன்."

"சுகந்தி நீ...?"

"தயவுசெய்து இப்ப ஒண்ணும் கேட்காதை. எல்லாம் என்ர தலைவிதி. நான்பிறகு நேரில சொல்றன்"

தொடர்பைத் துண்டித்த சுகந்தி தொலைபேசியை வைத்துவிட்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

(srisuppiah@hotmail.com)

# அர்த்தமுள்ள மௌனம்

'நிலக்கிளி' பாலமனோகரன்
டென்மார்க்



. . . . . திமிங்கிலத்தின் கண்கள் ஏன் இத்தனை சிறிதாக உள்ளன? . . . தரைதட்டிய கப்பலாய்க் குடாக்கடலில் மாட்டிக்கொண்ட நிலையில் அதன் மனநிலையை அதன் விழிகள் சிறிதேனும் பிரதிபலிக்கவில்லையே? . . . .

2009 ஜூன் மாதத்தின் இறுதி நாட்கள்.

டென்மார்க்கின் நகரங்களில் ஒன்றான வயில நகரத்தின் குடாக் கடலினுள் திமிங்கிலம் ஒன்று திசைதவறி வந்து தரைதட்டிப் போயிருந்தது. கடல் பெருகும் நேரத்தில் உட்புக நேர்ந்த அதனால் மறுபடியும் கடலுக்குத் திரும்ப முடியாத வகையில் அது சிறைப்பட்டுப் போய்க் கிடப்பதைத் திரும்பத் திரும்பத் தொலைக் காட்சியில் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

கடற்காவலர் உடற் சீதோஷ்ணத்தைப் பேணுவதற்காக அதன்மேல் தொடர்ச்சியாக நீரைப் பாய்ச்சிக் கொண்டிருந்தனர். அது வேதனைப்படுவது போன்று வெளியிற் தெரியவில்லை. ஆனால் அதன் நிலமை கவலைக்கிடமாக உள்ளது என்றே சம்பந்தப்பட்ட வல்லுனர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் குடாக்கடலின் கரையெங்கும் குவிந்திருந்த மக்களையும் பார்க்க முடிந்தது. கையில் தின்பண்டங்களுடன் அவர்கள் வேடிக்கை பார்ப்பதற்கு வந்திருந்தார்கள். அவர்களுள் அந்த உயிரின் வேதனையை உணர்ந்து பரிதாபப்படுபவர்களும் ஒருசிலர் இருக்கவே செய்தனர்.

தொலைக்காட்சியில் இதைப் பார்க்க நேர்ந்த சுமதிக்கு வன்னியில் முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு சிறிய பிரதேசத்தினுள் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ்மக்கள் அடக்கப்பட்டுத் தவித்ததும், பின்னர் அவர்களில் பெரும்பான்மையினர் குண்டு மழையிலும், துப்பாக்கிச் சூட்டிலும், கொலைப் பட்டினியிலும், நோயிலும் செத்து மடிந்ததுமே ஞாபகத்துக்கு வந்தது.

அந்தப் பேரவலத்தை எவருமே அறிய முடியாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தது. செய்தியாளர்களும், ஆய்வாளர்களும், கட்டுரைகள் எழுதுபவர்களும் வன்னிக்கு வெளியேயும், வெளிநாடுகளிலும், பாதுகாப்பான இடங்களில் இருந்தவாறே தத்தம் கோணங்களிலிருந்து, வன்னி நிலமையை நேர்முக வர்ணனை செய்வதுபோன்றே அப்போது சுமதிக்குத் தோன்றியது. அவற்றைக் கேட்கையில் எரிச்சலாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

அங்கு அகப்பட்டுக்கொண்ட தனது தந்தையைப் பற்றிய அச்சமும், வேதனையும் அவளை அந்தளவுக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

*

2009 மே மாத நடுப்பகுதியில் அங்கிருந்து மக்கள் ஒருவாறு வெளியேறி வவுனியா முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தபோதுதான் சுமதியின் தந்தை அவற்றிலொன்றில் இருப்பதாக அறியமுடிந்தது.

முகாமிலிருந்த அவருடைய பழைய மாணவர்கள் சுமதிக்கு அறிவித்ததுமே அவரைத் தங்களிடம் டென்மார்க்குக்கு அழைப்பதற்கு அவளும் கணவனும் முழுமுச்சில் ஈடுபட்டு நேற்றைய தினமே அவர் வந்து சேர்ந்திருந்தார்.

கொப்பன்கேகன் விமானநிலையத்தில் தந்தையைக் கண்ட சுமதி அவருடைய கோலத்தைக் கண்டு அதிர்ந்து போனாள். ஐந்து வருடங்களுக்கு முன் அவர் டென்மார்க் வந்திருந்தபோது அவர் அறுபத்தைந்து வயதாகியும் ஆரோக்கியம் குன்றாமலே இருந்தார். இப்போதோ தோல்மட்டுமே போர்த்த எலும்புக்கூடு போன்ற அவருடைய தோற்றம் அவள் இதயத்தைப் பிசைந்தது. அதைவிட அவருடைய அசாதாரண மௌனமும், கண்களில் தெரிந்த வெறுமையும், இவர் தனது தந்தைதானா எனச் சுமதியை ஒருகணம் எண்ண வைத்தன.

வீட்டுக்கு வந்து பேரப்பிள்ளைகள் இருவரையும் பார்த்து, பயணக் களைப்பும் தீர்ந்ததும் அவர் தனது பழைய நிலைக்குத் திரும்புவார் எனச் சுமதி எண்ணியது நடக்கவேயில்லை. கேட்பதற்கு ஓரிரு வார்த்தைகளில் பதில், இயந்திர கதியில் உணவு அருந்துவது உள்ளிட்ட கடன்களை நிறைவேற்றுவது தவிர மற்றும் சமயங்களில் அவர் அவருடைய அறையிலேயே இருந்தார்.

காலையில் “அம்மா! தாத்தா ஏன் முன்பு இங்கு வந்திருந்தபோது எம்முடன் பேசியதுபோல் பேசாமல் மௌனமாகவே இருக்கின்றார்?” என மகன் சுதன் கேட்டபோது சுமதியினால் உடனேயே பதில் கூறமுடியவில்லை.

இப்போது, இந்த மாலை நேரம் சுமதி அவரைத் தங்கள் வீட்டுக்குக் மிக அருகிலுள்ள குடாக்கடலுக்கு அழைத்து வந்திருந்தமைக்குக் காரணம் இருந்தது.

சென்ற தடவை டென்மார்க் வந்திருந்தபோது தனது நேரத்தில் பெரும் பகுதியை இந்த இடத்தில் கழிப்பதை விரும்பினார்.

இப்போதோ அவர் தனக்கெதிரில் பரந்து கிடக்கும் நீலக்கடலையும் அதன்மேல் அமைதியாக மிதந்து செல்லும்

சில அன்னப்பட்சிகளையும் வெறுமனே நோக்கியபடி மௌனமாக அமர்ந்திருந்தது அவளுக்கு வேதனையாகவிருந்தது.

முள்ளிவாய்க்கால் அவலம் அவரை அடியோடு மாற்றியிருந்தது.

எழுபது வயதிலும், அவர் அங்கிருந்து வெளியேறிய மக்களோடு சேர்ந்து வவுனியாவை வந்தடைந்த பின்னரும் தன்னுடன் தொடர்பு கொள்ளாமல் இருந்தமைக்கும் இந்த மனநிலைதான் காரணமாக இருந்திருக்கவேண்டும் என எண்ணினாள் சுமதி. அவ்வாறு வெளியேற முயன்ற பல வயதானவர்கள் வழியிலேயே இறந்துபோனதையும் அவள் பின் அறிந்திருந்தாள்.

சிறுவயதிலேயே தாயை இழந்துவிட்ட சுமதியையும் அவளுடைய தம்பி சிவாவையும் அவர்தான் அவர்களுக்குத் தாய் இல்லாத குறை தெரியாது வளர்த்து ஆளாக்கியிருந்தார். சிவா தனது பதினான்கு வயதிலேயே விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டபோது அவரால் அதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லைத்தான். வன்னியில் அவருடைய பல பழைய மாணவ மாணவிகளின் பிள்ளைகள் அவ்வாறு இணைந்திருந்தனர்.

சிவா உயிரோடு இருந்தால் இப்போது அவனுக்கு முப்பது வயதாக இருக்கும். 1990 ல் சுமதி டென்மார்க் வந்து குமாரை மணந்த பின்பும் சிவா உயிரோடுதான் இருந்தான். அவள் பலதடவை அவனை இயக்கத்தை விட்டுவிலகி டென்மார்க்குக்கு வந்துவிடும்படி வருந்தி அழைத்தபோதும் அவன் வர மறுத்துவிட்டான்.

சுமதி டென்மார்க்குக்கு வந்து இரண்டு வருடங்கள் முடிவதிற்கிடையில் அவன் போர்க்களத்தில் பலியாகிவிட்டிருந்தான்.

முதன்முதலில் இதே இடத்திற்குத் தன் பிள்ளைகளுடன் சுமதி தந்தையை அழைத்து வந்திருந்தாள். "சரியாய் எங்கடை நந்திக்கடல் கடல் மாதிரி!" என அவர் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருந்தார்.

சைபீரியாவிலிருந்து நந்திக்கடலுக்கு மாரிகாலத்தில் தமக்குகந்த சீதோஷ்ணம் நாடிக் கடல் கடந்து பறந்துவரும் சிறகை மற்றும் குருகு பறவைகளை சுமதியும் சிவாவும் சிறுபிள்ளைகளாக இருந்த காலத்தில் அவர் கூட்டிச் சென்று காண்பித்து அவற்றைப் பற்றிய விளக்கங்களையும் கூறுவதை அவள் இப்போது நினைத்தாள்.

வருடந்தோறும் வன்னியின் பெரும் குளங்களில் தங்கி, கூடுகள் அமைத்துக் குஞ்சு பொரிக்கும் அந்த இடம்பெயர் பறவைகள் யுத்தகாலத்தில் அங்கு வரவில்லை எனத் தந்தை முன்னர் வந்தபோது கூறியிருந்தார். தொலைதூர நாடுகளிலிருந்து வரும் அப்பறவைகள் மாரிகாலம் முடிந்ததுமே தமது குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு தமது சொந்த இடங்களுக்கு பறந்துவிடும்.

. . . இடம்பெயர் பறவைகளுக்கு எதுதான் அவற்றின் சொந்த இடம்? . . . எது அவற்றிற்குப் புலம்? எது தாய்நிலம்? வன்னியா சைபீரியாவா? . . . இது என்ன அசட்டுத்தனமான கேள்வி! பறவைகளுக்குத்தான் நாடுவிட்டு நாடு செல்வதற்கு கடவுச்சீட்டு தேவையில்லையே! அவற்றுக்கு இந்த உலகம் முழுவதுமே சொந்தம் அல்லவா! . . .

. . . மனிதர் அமைத்த எல்லைகளால் இப்பறவைகளைக் கட்டுப்படுத்த முடியாது! இவற்றுக்குப் பழந்தமிழ்ப்புலவன் பாடிவைத்தது போன்று யாதும் ஊரே, யாவரும் கேளிர்தான்! . . .

. . . மனிதர் இடம் பெயர்வதற்குக் காரணங்கள் இரண்டுதானே? . . . ஒன்றில் அவர்கள் ஏதோ ஒன்றினால் சொந்த இடத்திலிருந்து விரட்டப்பட வேண்டும் அல்லது அவர்கள் ஏதோ ஒன்றினால் கவரப்பட்டு வேறிடத்துக்குச் செல்லவேண்டும்! . . . . கணவன் குமார் நாட்டை விட்டு ஓடி வந்ததற்குக் காரணம் தனது உயிரைப் பாதுகாப்பதற்காகவே! . . . நான் வந்தமைக்குக் காரணம் அவருடன் இணைந்து கொள்வதற்காகத்தானே! . . .

. . . இங்கு பிறந்த எங்கள் குஞ்சுகள் இரண்டுக்கும் எதுதான் தாய்நிலம்? டென்மார்க்கா, வன்னியா? . . .

. . . ஆதி மனிதர்களும் இப்பறவைகள் போலத்தானே வாழ்ந்தனர்! ...

தேவை ஏற்பட்டபோது அவர்கள் புலம் பெயரத் தவறவில்லையே? . . . புகுந்த இடத்தில் அவர்களுடைய பிற்காலச் சந்ததியினருக்குத் தமது தாய்நிலம் எதுவென்று தெரியாத அளவுக்கு காலம் கழிந்த நிலையில் அவர்கள் தாமிருக்கும் நாட்டையே தமது தாய்நாடாகக் கொண்டு வாழ்வது கண்கூடல்லவா?. . .

. . . சூதாட்டத்தில் இழந்த தமது இராச்சியத்தைக் கேட்ட பாண்டவருக்கு கௌரவர்கள் அதனைக் கொடுக்கவில்லை ... ஈற்றில் ஐந்து ஊரையேனும் தாருங்கள் என இரங்கிக் கேட்டதற்கும் அவர்கள் இணங்காமற் போனதாலேதானே பாண்டவர் யுத்தம் தொடுக்க நேரிட்டது. . .

. . . அதையொத்த யுத்தம் ஒன்றில் இன்று வன்னி மக்கள் தமது ஊர்கள் அத்தனையையும் இழந்து தவிக்கின்றனரே! . . .

தன்னை அலைக்கழித்த வினாக்களிலிருந்து சுமதி விடுவித்துக் கொண்டு தந்தையை மீண்டும் அவதானித்தாள்.

. . . அப்பா இந்த வினாக்களுக்கு என்ன விடையைச் சொல்வார்? . . . அவரோ கடலில் நீந்திச் செல்லும் அன்னப் பறவைகளையே பார்த்தவாறிருந்தார்.

யுத்தத்தின் இறுதி நாட்களில் மக்கள் பெருந்திரளாக நந்திக்கடலைக் கடந்தபோது எத்தனையோ முதியவர்கள் வழியில் விழுந்து மிதிபட்டும் நீரில் ஆழ்ந்தும் இறந்துபோனதாகச் சுமதி கேள்விப்பட்டிருந்தாள். அவளுடைய தந்தைகூட நடுவழியில் இறந்துபோய்க் கிடந்ததாகவும் ஆரம்பத்தில் ஒரு கதை வந்திருந்தது.

. . . அப்பாவும் ஒரு தடவை இறந்து, பின் பிழைத்துக் கொண்டவரா? அதனால்தான் வாய்பேச முடியாமல் இருக்கின்றாரா? அல்லது அவர் முள்ளிவாய்க்கால் அவலத்தின்போது நேரில் கண்டு அனுபவித்த கொடுமைகளையிட்டுப் பேசவே கூடாது எனத் தன்னைத்தான் ஊமையாக்கிக் கொண்டுள்ளாரா? . . .

. . . அவர் சிவாவையும் அவனது சகபோராளிகளையும் மேலோகத்தில் கண்டிருப்பாரா?

அவர்கள் தந்தைக்கு எதையாவது கூறி அதனால்தான் அவர் மௌனம் காக்கின்றாரா? . . .

அந்த இறுதி நாட்களில் வன்னி மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றிப் பல செய்திகளை சுமதி அறிந்திருந்தாள். அவற்றில் பெரும்பான்மையானவை வவுனியா முகாம்களில் அடைபட்டிருந்த மக்கள், வெளிநாடுகளில் வாழும் தமது பிள்ளைகள், உறவினர்க்குக் கூறியவை.

பத்தொன்பது வயதில், டென்மார்க்கில் ஏற்கனவே அகதி அந்தஸ்து பெற்று வாழ்ந்து கொண்டிருந்த தனது அத்தானையே மணந்து கொண்டிருந்த சுமதியின் முதற் பிள்ளையான சுதனுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் 18 வயது ஆரம்பித்திருந்தது. அந்தப் பிறந்தநாளுக்குத் தந்தையை டென்மார்க்குக்கு அழைக்க அவர்கள் ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தனர். கொழும்பில் உள்ள டென்மார்க் தூதரகம் அதற்கான விசாவையும் வழங்கியிருந்தது. ஆனால் வன்னி மக்களின் மீதான யுத்தம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டிருந்தது. அதன் காரணமாக அந்தப் பிறந்தநாள் கொண்டாட்டமே நடக்கவில்லை.

டென்மார்க்கில் உள்ள எத்தனையோ ஈழத்தமிழர் தமது வயதான பெற்றோரை அழைத்துத் தம்முடன் வைத்திருந்தனர். சுமதி தன் தந்தையைக் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். அதற்குக் காரணம் சிவாவின் கல்லறையும் ஒன்று என்பதனை அவள் அறிவாள்.

அகிம்சை வழிப்போராட்டத்தில் தீவிர பங்கெடுத்த அவர் விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாற நேர்ந்தபோது, அதனை அவரால் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும் அவள் அறியாமலில்லை.

மகன் சுதன் சில நாட்களுக்கு முன்னர் தன் பெற்றோரிடம் பேசுகையில் சில வினாக்களை அவர்களிடம் கேட்டிருந்தான். சிறீலங்காவில் நடைபெற்ற யுத்தம் சம்பந்தமாக அவனை ஒரு கட்டுரை எழுதுமாறு வகுப்பாசிரியர் கேட்டிருந்தார். அதற்காக அவன் தன்னால் இயன்ற அளவுக்கு இணையத் தளங்களில் தகவல்கள் சேகரித்துக் கொண்டிருந்தான்.

"இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில், பொதுவாக சிங்கள மக்களைவிட தமிழர் கல்வியறிவு கூடியவராக இருந்தனர் என அங்குள்ள தமிழர் சொல்கின்றனர். இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலான சிறந்த மொழி, பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம், நாகரிகம் தமிழருக்கு உண்டு எனச் சொல்கின்றார்கள். இந்தத் தமிழரால் ஏன் இன்று வரைக்கும் தமிழருக்கும் சிங்களவருக்குமான பிரச்சனையைச் சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்ள முடியாதிருக்கின்றது?"

"மாகாத்மா காந்தியின் அகிம்சை வழியில் தமது இழந்த உரிமைகளுக்காகப் போராடியபோதும் அன்றைய சிங்கள அரசியற் தலைவர்கள் அதனை உதாசீனம் செய்தது மாத்திரமன்றி, வன்முறையால் அவர்களுடைய நியாயமான போராட்டங்களை நசுக்கினர்! அதனாலேயே இளைய தலைமுறையினர் ஆயுதப் போராட்டத்தினுள் தள்ளப்பட்டனர்!" எனக் குமார் மகனுக்குப் பதிலளித்திருந்தான்.

"அப்பா! அது உண்மையாக இருக்கலாம். ஆனால் நான் இந்த விஷயத்தை வேறொரு கோணத்திலிருந்து பார்க்கின்றேன். சதா மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகில் பிரச்சனைகளும் மாற்றமடைகின்றன என்ற உண்மையைப் பலரும் உணரத் தவறுகின்றனர். பொதுவாக முப்பது வருடங்களுக்கு ஒருதடவை சந்ததி மாற்றம் நிகழ்கின்றது. இலங்கை சுதந்திரமடைந்து முப்பது ஆண்டுகளின் பின்னர் இளைஞர், தமது காலத்துப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஆயுதப் போராட்டமே ஒரே வழியென அதனில் குதித்தனர்.

ஆனால் முப்பது வருடங்கள் கழிந்தும் அவர்களால் தாம் எடுத்துக்கொண்ட இலக்கை அடைய முடியவில்லையே! எனவே வேறு வடிவம் எடுத்திருக்கும் பிரச்சனை என்பது சமாதானக் கதவுக்கோ, புரிந்துணர்வுக் கதவுக்கோ புதிதாக இடப்பட்ட ஒரு பூட்டு என்றே நான் கருதுகின்றேன். இந்தப் பூட்டைத் திறக்கப் பழைய திறவுகோல்கள் எமக்கு உதவப்போவதில்லை! அகிம்சை என்னும் திறவுகோலும், ஆயுதப் போராட்டம் என்ற திறவுகோலும் பயனற்றுப் போய்விட்டன என்பது உண்மையல்லவா?" எனச் சுதன் வினவியபோது குமார் எந்தப் பதிலையும் கூறாது அமைதியாக இருந்தான்.

. . . இன்றைய இளந்தலை முறையினர்தான் புதிய திறவுகோலைக் கையில் எடுக்கப்போகின்றனர் என்றா மகன் எண்ணுகின்றான்? . . .

இருள் மெல்லப் பரவ ஆரம்பித்திருந்தது. "வாருங்கோ அப்பா வீட்டை போவம்!" எனச் சுமதி அழைத்தபோது சொலமன் வாத்தியார் எதுவுமே பேசாது எழுந்து அவளுடன் நடந்தார்.

இரவு படுக்கைக்குச் செல்வதற்கு முன் சுமதி தந்தை தங்கியிருந்த அறைக்குச் சென்று கவனித்தாள். படுத்து ஒரு சொற்ப நேரத்துக்குள்ளகவே எப்படி இத்தனை ஆழ்ந்த தூக்கம்?

*

அன்றிரவு வெகுநேரம் நித்திரை வராது படுக்கையில் புரண்டுகொண்டிருந்த சுமதி, குமாரின் நித்திரையைக் குழப்பிவிட மனதில்லாது மெல்ல எழுந்து வரவேற்பறைக்குச் சென்று தொலைக்காட்சியை இயக்கினாள். குடாக்கடலில் தரைதட்டிய அந்தத் திமிங்கிலம் பற்றிய செய்திகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

இச்சமயத்தில் தந்தை படுத்திருந்த அறையில் ஏதோ ஒலி கேட்கவே சுமதி எழுந்து அங்கு சென்றாள்.

அவர் அங்கு தன் படுக்கையில் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பது போன்றே அவளுக்குத் தோன்றியது.

ஆனால், கட்டிலின் அருகில் உள்ள சின்ன மேசையில் அவருடைய சிறிய பிளாஸ்டிக் கைப்பை இருக்கக் கண்டாள். அது முன்பு அங்கு இருந்ததாக அவளுக்குத் தோன்றவில்லை. அதற்குள்தான் அவர் தனது கடவுச்சீட்டுப் போன்ற முக்கிய ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருந்தார்.

எப்போதுமே அவரைவிட்டுப் பிரியாத அந்த சாயமிழந்த, மூலைகள் நைந்துபோயிருந்த, சிறிய பையைக் கையில் எடுத்துத் தன் விரல்களினால் பரிவுடன் தடவிப் பார்த்தாள் சுமதி. அதை எடுத்துக் கொண்டு, தூங்கிக் கொண்டிருந்த தந்தையை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு வரவேற்பறைக்குள் சென்றாள் சுமதி.

நள்ளிரவு கடந்துவிட்ட அந்த வேளையில் கணவன், பிள்ளைகள் யாவருமே நித்திரையில் இருந்தனர்.

சுமதி அந்தப் பையைத் திறந்தாள். தங்களது விலாசமிட்ட ஒரு கடித உறை அதனுள் காணப்படவே அதனைப் பிரித்துப் பார்த்தாள். அதற்குள் அவர் எழுதிய கடிதம் ஒன்றிருந்தது. மார்ச் மாதத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை அவரால் தபாலில் சேர்க்கமுடியாத அளவுக்கு அங்கு நிலமை மோசமாகியிருக்க வேண்டும் என ஊகித்தபடி அதனைப் படித்தாள் சுமதி.

. . . அன்பின் மகள், மருமகன், பேரப்பிள்ளைகட்கு அன்புடன் எழுதுவது,

என்னால் சுதனுடைய பதினெட்டாவது பிறந்த தினத்துக்கு வரமுடியாத சூழல் இங்கு நிலவுகின்றது. எனது பிரிய பேரன் சுதனுக்கு இங்கிருந்து பிறந்தநாள் பரிசாக எதைத்தான் என்னால் அனுப்ப முடியும்? எனவே அவனுக்கு எனது வாழ்த்தைப் பரிசாக அளிக்கின்றேன்.

அன்புக்குரிய சுதன்!

மேல் நாடுகளில் வயது பதினெட்டாகையில் தரும் பரிசின் சின்னம் திறப்பு!

உனக்கேன் திறப்பு? இருக்கும் சிறையிலிருந்து வெளிவரவா? அல்லது புத்தம் புதியதோர் உலகில் பிரவேசிக்கவா?

திறவுகோல் என்பது சுதந்திரத்தின் சின்னம்.  
ஆனால் அதன் மறுபக்கம் பொறுப்புணர்வுதான்!  
இன்றிலிருந்து உனக்கு நீதான் எசமான்.  
எனவே உன்னை நீயே ஆளுதல் வேண்டும்!  
வாழ்க்கை என்னும் இராச்சியத்தின்  
திறவுகோல் உன்கையில்!  
எந்தவொரு அடையாளத்தையும்  
உன் நெற்றியில் நிரந்தரமாக்காதே!

அவை எதுவுமே இல்லாமல் நீ வாழமுடியும்!

மதமோ மார்க்கமோ அவசியமில்லை, மனிதனாக வாழமட்டும் மறந்துவிடாதே!

மதத்தின் பேரிலும், மொழியின் பேரிலும், இனத்தின் பேரிலும், நாட்டின் பேரிலும், மனிதன் இழந்தவைதான் இன்று அதிகம்!

அன்றும் இன்றும் இவற்றுக்காய்ப் பலர் சிந்திய இரத்தம்
இங்கு எவரையும் மனிதராக்கவில்லையே!

மனிதம் என்ற தன்மையில் மட்டும், மகிழ்ந்து வாழும் ஒரு பிறவியாய் உன்னை நீ ஆக்கிக்கொள்!

அப்போதாவது இந்த உலகில் போரும், துன்பமும், கயமையும், கண்ணீரும் இல்லாமற் போகும் என எண்ணத் தோன்றுகின்றது!"

கடிதத்தைப் படித்து முடித்த சுமதியின் கண்கள் குளமாகி விட்டிருந்தன.

ஏதேச்சையாக நிமிர்ந்தவளின் கலங்கிய விழிகளின் ஊடாகத் தொலைக்காட்சியில் காட்சிகள் தெரிந்தன.

அப்போதும் அந்தத் தரைதட்டிய திமிங்கிலம் பற்றி செய்திகளே போய்க்கொண்டிருந்தன.

அது சிறிது சிறிதாகச் செத்துக் கொண்டிருப்பதாக விலங்கியல் துறைசார் வல்லுனர்கள் சொல்லிக் கொண்டிருந்தனர்.

(balamanoharan@gmail.com)

# தற்கொலை

கலையரசன்
ஹொலண்ட்



பல நாட்களாக இல்லை. . . மாதங்களாக இல்லை. . .வருடக்கணக்கில் யோசித்த பின்பே இந்த முடிவுக்கு வந்தேன்.

நான் எடுத்த இந்த முடிவு பலரை திடுக்கிட வைக்கலாம்.

ஆனால் இதைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதில் எனக்கென்ன கவலை.

நான்தான் சாகப்போகிறேனே.

ஆமாம் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக உத்தேசம்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

தற்கொலைசெய்து கொள்வது கோழைத்தனம் என்று சொல்வீர்கள்!

ஆமாம். . . .கோழைத்தனம்தான் எனக்கும் தெரியும்.

நானும் அப்படித்தான் கூறிவந்தேன்.

எல்லோரும் விரக்தியின் விளிம்பில் நின்றுதான் தற்கொலை செய்துகொள்வார்கள் என்றில்லை.

நாட்டுப்பற்றுக்காகவும் தற்கொலை செய்துள்ளார்கள்.

சரி அவர்கள் தான் பொது நோக்கத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என ஒப்புக்கொள்கின்றோம்.

அப்படி அர்ப்பணம் செய்யும் மனம் உனக்கிருந்திருந்தால் அதை அங்கேயல்லவா சாதித்திருக்க வேண்டும்? என்று நீங்கள் திட்டுவது எனக்கு கேட்கிறது.

என்னைப்பொறுத்தவரை தற்கொலை செய்துகொள்வதால் மூன்றுவகையினர் இருக்கின்றார்கள்.

ஒன்று விரக்தியின் விளிம்பில் நிற்பவர்கள்,

இரண்டு பொதுநலத்திற்காக தம் உயிரை அர்ப்பணம் செய்பவர்கள்.

மூன்று அதைத்தான் இப்போது சொல்லப்போகின்றேன்.

கொஞ்சம் பொறுங்கள்......

'டொக் டொக்'

வாசல்கதவை யாரோ தட்டுகிறார்கள்

'யாரது'

"எமதர்மராஜன்"

"ஒகோ நீங்கள் வந்துவிட்டீர்களா?"

"நீதானே மாதங்களாக வருடங்களாக யோசித்து இந்த முடிவுக்கு வந்தாய். உனது முடிவில் எனது வேலை ஆரம்பம்.

மற்றவர்களுக்கு லெக்சர் அடிப்பதை நிறுத்திவிட்டு சீக்கிரமாக வேலையை முடிப்பாயா மானிடனே?"

"கொஞ்சம் பொறுங்களன். . . . .நான் இருக்கும்வரைதான் என்னை யாரும் மதிக்கவில்லை. இறந்தபின்பாவது நான்கு பேர்கள் பேசும்படி வைக்கவேண்டாமா?"

எரிச்சல் அடைந்த எம தர்மன் தான் கொண்டுவந்த பாசக்கயிற்றை வீசிவிட்டு திரும்பிப் போய்விட்டான்.

இந்த எமகாதகப் பேர்வழிதான் மனிதர்களின் (அப்போ விலங்குகளின் அதையும்தான்) உயிர்களை எடுப்பானாமே? இந்த எமனையே ஒழித்துவிட்டால் அந்த வேலையை செய்வதற்கு ஆளே இருக்காது . நாம் சாகாவரம் பெற்ற நித்திய வாழ்வை அடைவோம்.

ஆனால் எனக்கு அது வேண்டாம். ஏன்? இருக்கிற காலத்துக்குள்ளேயே பட்ட கஸ்ரங்கள் துன்பங்கள் போதாதா? இதை ஆயிரக்கணக்கான வருடங்கள் அனுபவிக்க வேண்டுமா?

முதலில் உலகம் முழுவதும் துயரப்படுபவர்கள் இல்லை என்ற நிலை உருவாகட்டும்.

அதன்பின்பு "நித்திய வாழ்வு" எமக்கு தேவையா தேவையில்லையா என்பது பற்றி பட்டிமன்றம் நடத்தலாம்.

ஐரோப்பியரால் சொர்க்கம் என வர்ணிக்கப்படும் இலங்கைத்தீவில் யாழ்ப்பாண குடாநாட்டில் ஒரு சிற்றூரில் உள்ள ஏழைத்தாய்க்கும் ஏழைத்தந்தைக்கும் புதல்வனாக அவதரித்தேன். எனது தாய்க்கும் தந்தைக்கும் "படைத்தவன் படியளப்பான்" என்ற எண்ணம் போலும் அல்லது எந்தச்செல்வம் இல்லாவிட்டாலும் பிள்ளைச்செல்வம் போதுமென நினைத்தார்களோ என்னவோ எனக்கு முதல் மூன்று அக்காமார்களையும் எனக்கு பின்னர் இரண்டு தங்கச்சிமார்களுமாக மொத்தம் ஆறு பிள்ளைகளைப்பெற்றெடுத்து எமது இனத்தை பெருக்கும் கடமையை நிறைவேற்றிக்கொண்டார்கள். இதில் ஒருபக்கம் மதப்பற்றாளர்களுக்கும் மகிழ்ச்சி. தமது மதம் பல்கிப் பெருகுவதாக.ஆனால் எனக்கு மட்டும் மகிழ்ச்சியே இல்லை.

தந்தைக்கு அடுத்து குடும்பபாரத்தை தனயன் அல்லவா சுமக்கவேண்டும். நல்லவேளை எமது நாட்டில் 'பெண்சிசுக்கொலை சமாச்சாரம்' இல்லாத படியால் தப்பிப்பிழைத்த 5 பெண்பிள்ளைகள் வேறு. பாரமோ பாரம். அந்த ஏழ்மை நிலையிலும் கூலிவேலைசெய்து சம்பாதித்து குடும்பம்நடத்திய எனது தந்தை ஒரு மாதிரி மூத்த அக்காவை கரைசேர்த்துவிட்டார். எதோ கொஞ்ச காசை சீதனமாக காட்டி மிச்ச நான்கு பெண்பிள்ளைகளையும் கரைசேர்க்க எனது உதவியும் அவசியம் தேவை.

பதினாறு வயதிலேயே பாடசாலைப்படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப்போக ஆரம்பித்தேன். எமது குடிசையில் நாம் சில நாட்கள் வெறும் சோறுமட்டும்தான் சாப்பிட்டிருப்போம். ஆனாலும் இரண்டாவது அக்காவின் திருமணம் நடக்கவேண்டுமே. எப்படியோ பணத்தை மிச்சம்பிடித்து இரண்டாவது அக்காவையும் கரைசேர்த்துவிட்டேன். குடும்ப பொறுப்பு இல்லாதிருந்தால் நான் வேலைக்கு போயிருக்கமாட்டேன். சீதனம் கொடுக்கும் வழக்கம் இல்லாதிருந்தால் நமது குடும்பம் நன்றாக சாப்பிட்டு ஆரோக்கியத்துடன் இருந்திருக்கும். எமது வறுமைநிலை சிறிது மேம்பட்டிருக்கும்.

ஆனால் ஏழைகள் தலைநிமிரக்கூடாது என்று சிலர் எண்ணியதாலோ என்னவோ இந்தச் சீதனம் கொடுக்கும் கலாசாரத்தை உருவாக்கிவிட்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் நான் ஒருவன் மாற்ற முடியுமா?

முதன்முதலாக பலம் மிக்க ராட்சதன்போல் நின்றிருந்த கலாச்சாரத்திற்கு முன்னால் நான் ஒரு பலவீனமான எறும்பு போல் நின்றுகொண்டிருப்பதை உணர்ந்தேன்.

எமக்கொரு மாமா இருந்தார். ஒன்றும் நெருங்கிய சொந்தம் கிடையாது. ஆனால் எமது குடும்பம் மீது பாசம் வைத்திருந்தார். அவர் ஒரு வாயுள்ள பிள்ளை. அதனால் வங்காளம் மட்டுமல்ல அதையும் தாண்டி ஜேர்மனி போய்விட்டார். ஜேர்மனியில் என்ன வேலை செய்தாலும் அல்லது சும்மா இருந்தாலும் இலட்சக்கணக்கில் சம்பாதிக்கலாமே?

அப்படியே அவரது குடும்பமும் எமது ஊரில் இருந்த புதுப்பணகாரார்களது பட்டியலில் சேர்ந்து கொண்டது.

தமது வறுமைநிலையை போக்க இப்படியொரு வழி இருப்பதை அறிந்துகொண்ட இன்னும் பலர் ஜேர்மனி போய்ச் சேர்ந்தனர்.

முன்பு சிலகாலம் மத்திய கிழக்கு நாடுகள் என போய்க்கொண்டிருந்தார்கள்..

இப்போது ஐரோப்பா கனடா என்று போகிறார்கள்.

இவ்வாறாக எமது ஊரில் 'பரம்பரைப்பணக்காரரை'விட திடீர்ப் பணக்காரரும் உருவாகினர். இப்படியே போனால் அந்நிய செலாவணியின் தயவில் எமது நாடும் பணக்கார நாடாகிவிடும் எனச்சிலர் பேசிக்கொண்டனர்.

ஒருவேளை மத்திய கிழக்கில் எண்ணைவளம் குறைந்தாலோ அல்லது செல்வந்த மேற்கு நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலோ திடீர்பணக்காரரைபோல திடீர் ஏழைகளும் உருவாகுவார்கள் என்பதை யாரும் நினைத்துப்பார்க்கவில்லை.

அதைப்பற்றி இப்போது கவலை ஏன்?

பல வருடங்களாக அவ்வளவாக தொடர்பற்றிருந்த ஜேர்மன் மாமா அண்மையில் தொடர்பு கொண்டார்.

எம் மீது கழிவிரக்கம் கொண்டு எமது கஷ்டத்தைப் போக்குவதாக உறுதியளித்தார். அதற்காக என்னை ஜேர்மன் கூப்பிட்டு விடுவதாக கூறினார்.

எனது அப்பா அம்மாவுக்கு எந்த ஆட்சேபனையும் இருக்கவில்லை.

அப்பா எனக்கு பாஸ்போட் எடுக்கும் அலுவல்களில் இறங்கினார்.

எல்லாம் சரிவந்து எனது சகோதரிகளும் அம்மாவும் விம்மி விம்மியழுது வழியனுப்பி வைக்க நான் கொழும்பு வந்து சேர்ந்தேன். கொழும்பில் எனது மாமா ஒழுங்கு செய்த ஏஜென்சி எனக்காக காத்திருந்தான்.

இப்போது ஜேர்மனி போவதற்கான பாதைகள் யாவும் சரியான இறுக்கமாம். ஆனால் ஹொலன்டில்போய் இறங்குவது இப்போது சாத்தியமாம் என்று சொன்ன ஏஜென்சி எனது சம்மதத்தையும் கேட்டான்.

நான் சரி என்று சொல்லவே என்னை இன்னும் சிலருடன் சேர்த்து கென்யாவிற்கு அனுப்பிவைத்தான். அங்கே இருவாரங்கள் இருந்திருப்போம்.

அங்கிருந்து ஹொலன்டில் ட்ரான்சிற்றில் இறங்கக்கூடியதாக ஒழுங்குசெய்து ஒரு விமானத்தில் எம்மை அனுப்பிவைத்தான்.

ஆம்ஸ்ரடாம் ஸ்கிப்பொல் விமான நிலையத்தில் வந்திறங்கிய பின்புதான் தெரிந்தது, சோதனைக்காலம் ஆரம்பித்துவிட்டதென்று.

விமான நிலைய மிலிட்டரி பொலிசாரினால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டேன்.

அங்கே என்னவெல்லாம் சொல்லவேண்டும் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென ஏஜென்சி முதலே என்னிடம் சொல்லியிருந்தான்.

அவன் சொன்னபடியே ஒரு கதையை தயாரித்து கொடுத்தேன்.

ஆரம்பமே சரியில்லை. ஏதோ கிரிமினலை பிடித்துவந்ததைப்போல கைரேகை போட்டோ எல்லாம் எடுத்தர்கள். பைகளை சோதனையிட்டார்கள்.

விசாரணை நிலயத்தைச் சுற்றி நான்கு பக்கத்திலும் மதில்கள் கட்டப்பட்டிருந்தன்.

48 மணி நேரத்திற்கு பின்பு ஒரு கைதியை நீதி மன்றத்தில் ஆஜர்செய்வதைப்போல என்னை மற்ற அகதிகளோடு சேர்த்து அகதி முகாமிற்கு அனுப்பி வைத்தார்கள்.

அகதி முகாமிலும் கெடுபிடி தொடர்ந்தது.

பிணையில் விடுவிக்கப்பட்ட கைதி வாரா வாரம் பொலிஸ்நிலையத்திற்கு வந்து பதிவு செய்வதைப்போல. நாம் எம்மைப்பதிவு செய்துகொள்ளவேண்டும்.

மேலும் அகதிமுகாம் இருக்கும் இடத்தை தவிர வேறு எங்கேயும் போகக்கூடதென கட்டுப்பாடு. முகாமைச்சுற்றி வேலிஅடைக்கபட்டு 'தனியார்பொலிஸ்' காவல் போடப்பட்டிருந்தது.

வெளிநாட்டிற்கென புறப்படுவதற்கு முன்பு இங்குள்ள அகதி முகாம்களில் எல்லாம் இலங்கைத்தமிழர்கள் மட்டும்தான் இருப்பார்கள் என நினைத்திருந்தேன்.

ஆனால் இங்கே வந்து உலகின் பல பாகங்களில் இருந்தும் வந்த அகதிகளை பார்த்த பின்புதான் தெரிந்தது. இலங்கைமட்டுமல்ல வேறு பல நாடுகளும் அகதிகளை உற்பத்தி செய்து அனுப்பிக்கொண்டிருக்கின்றன என்பது.

பிறநாட்டு அகதிகளை சந்தித்த பின்புதான் தெரிந்தது அவர்கள் நாடுகளிலும் யுத்தங்கள் நடக்கின்றன பிரச்சனைகள் இருக்கின்றன என்பது. நாட்டுக்கு நாடு வாசல்படிதான் போலிருக்கிறது.

இதிலே இன்னொரு மனதை நெருடும் விடயம் அரசியல் அகதியா பொருளாதார அகதியா என்பது.

ஒரு சிலர் இயக்கத்தில் ஈடுபட்டவர்களாகவும் பிரச்சனைக்குரியவர்களாகவும் இருந்தனர். அவர்கள் அடைக்கலம் புகுந்த நாட்டிலும் அரசியல் பேசினர். இன்னும் பலர் யுத்தத்தின் பயங்கரவாதத்துக்கு முகம்கொடுக்க முடியாமல் ஓடி ஒளிப்பதற்காக இங்கே வந்திருந்தனர்.

இவை எதிலும் பாதிக்கப்படாத மேலும் பலர் ஒரு செல்வந்த நாட்டிற்குள் வந்துவிட்டதில் தமது பொருளாதார நிலை மேம்படுமென நம்பி வந்தவர்கள்.

இந்த கடைசி ரகத்தை சேர்ந்தவர்கள் கூட தாம் 'மண்ணுக்காக இனத்துக்காக மொழிக்காக.. மதத்துக்காக போராடினோம். . . தோள்கொடுத்தோம். . .ஆனால் உயிரைமட்டும் பிடித்துக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தோம்" என நெதர்லாந்து அரசு அதிகாரிகளுக்கு வாக்கு மூலம் கொடுத்தவர்கள்தான்.

இதிலே குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இந்த மொழி, உரிமைக்காக போராடியவர்களின் பிள்ளைகள் இங்கே வந்து நாளடைவில் தமது தாய்மொழியை மறந்து அந்நியமொழி பேசுவதுதான்.

என்ன பரிதாபம். இவையெல்லாவற்றையும் விட இந்த கடைசி ரகத்தை (நான் உட்படத்தான் ஐயா, என் பூர்வீகத்தை தெரியாமல் முன்பே சொல்லி தொலைத்துவிட்டேன்.) சேர்ந்தவர்கள் மொழி, இன, மதப்பிரச்சனைகளை விட பணப்பிரச்சனையை தான் முக்கியம் என்று சொல்லுகின்றார்கள்.

பொருளாதார நெருக்கடிதான் நம்மை இங்கே உந்தித் தள்ளியது எனச் சொல்லுகிறார்கள்.

பொருளாதாரபிரச்சனைதான் காரணமென்றால் தத்தமது நாடுகளில் அதனை தீர்க்கும் வழிகளை ஆராய்ந்திருக்க வேண்டாமா?

அதற்காக போராடி இருக்கவேண்டாமா? நாடோடிகளை போல் நாடுவிட்டு நாடு ஓடுவதுதான் இதற்கு ஒரேயொரு தீர்வா?

இந்தவிடயம் எல்லாம் எனக்கு கூட இப்போதுதான் உறைக்க ஆரம்பித்திருக்கிறது.

இப்போதெல்லாம் செல்வந்த நாடுகளுக்கு செல்வம் தேடி ஓடி வருபவர்களின் தொகை பல்கிப் பெருகிவிட்டதாம்.

சொந்த நாட்டினருக்கே வேலையில்லாத பட்சத்தில் பிற நாட்டவர்கள் இங்கே வேண்டா விருந்தாளிகளென இங்குள்ள அரசியல்வாதிகளும் மக்களும் பேசிக்கொள்கின்றனர்.

நம்மைபோன்ற வேண்டா விருந்தாளிகளை நாட்டுக்குள் வரவிடாமல் தடுப்பது எப்படி என்பதை பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் செய்கின்றனர்.

அகதிகளின் சலுகைகளை குறைப்பது அவர்களை ஆண்டுக்கணக்கில் முகாம்களிலேயே முடுக்கிவைப்பது என்ற முடிவுகள் நடைமுறைக்கு வந்தன.

இதனால் முடிவுகளை எதிர்பார்த்து நான்கைந்து வருடங்களாக முகாம்களில் நிச்சயமற்ற வாழ்க்கை வாழும் அகதிகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது.

இங்குள்ள மோசமான நிலைகுறித்து ஜேர்மனியில் உள்ள மாமாவுடன் தொலைபேசியில் உரையாடினேன். அவர் எதையும் காதிலே போடாது, கடன் காசை திருப்பிச் செலுத்துமாறு வலியுறுத்தினார்.

ஊரிலிருந்து வரும் கடிதங்களும் பணம் அனுப்பும்படிதான் கேட்டு வந்தன.

அவர்களில் யாரும் எனது நிலையை பற்றி யோசித்ததாக தெரியவில்லை.

இங்கே எங்கேயோ பணம் காய்க்கும் மரம் இருப்பதாகவும் பணம் பிடுங்குவதைப்போல் நான் அதில் ஏறி பணம் பிடுங்கி அனுப்புவேன் என்றும் நினைத்துக்கொள்கிறார்கள்.

ஆனால் அப்படியே பணம் காய்க்கும் மரம் இருந்தாலும் அது யாரோ ஒருவரின் தனியுடமையாகவே இருக்குமன்றி பொதுவுடமையாக இருக்காது என்பதை அவர்கள் பாவம் அறியவில்லை.

இவ்வளவு காலம் பட்ட கஷ்டங்கள் போதாதென்று அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை அமைந்தது.

சொத்துக்களை வைத்திருந்தோர் சொந்த ஊர்களிலேயே தங்கிவிட இழப்பதற்கு எதுவுமற்ற ஏழைகள் வன்னிக்கு இடம்பெயர்ந்தனர்.

அப்படி இடம்பெயர்ந்தவர்களில் எமது குடும்பமும் ஒன்று. அவர்கள் இப்போது வசிக்கும் இடம் வேறாக இருந்தாலும் துன்பம் துயரம் குறையவில்லை. இன்னல்கள் அங்கேயும் தொடர்ந்தன.

அங்கே போனபிறகு குடும்பத்திற்கு பாரமாகவிருப்பதைவிட நாட்டின் விடுதலைக்கு உயிர் கொடுப்பது மேல் என நினைத்த கடைசித்தங்கை இயக்கத்தில் போய்ச்சேர்ந்துவிட்டாள்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இதைப்பற்றி கவலைப்படுவதா அல்லது பெருமைப்படுவதா என்று தெரியாத நிலை.

வேறு வழியின்றி தங்கையின் முடிவை ஏற்றுக்கொண்டார்கள்.

என்னோடு முகாமில் இருந்த குர்திஸ் நண்பன் சொன்னான், தங்கள் குடும்பங்களில் இப்படி யாரும் இயக்கதத்திற்கு போனால் அதை மகிழ்ச்சியோடு கொண்டாடுவார்களாம்.

ஒரு போராளியை பெற்றெடுத்தற்காக அந்தக் குடும்பம் பெருமைப்படுமாம். அந்த குர்திஸ் நண்பன் மூலமாக குர்திஸ்தான் விடுதலைப்போராட்டம் பற்றி நிறைய அறிந்து கொண்டேன்.

துருக்கியில் வாழும் குர்திஸ் இனத்தவர் தமது தாய்மொழியை பேசவோ பாடசாலையில் கற்பிக்கவோ முடியாதாம். துருக்கி இராணுவத்தினரால் வீடுகள் மட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான கிராமங்களே அழிக்கபட்டுள்ளதாம்.

பல ஐரோப்பிய நாடுகளில் குர்திய அகதிகள் அரசியல் நடவடிக்கை காரணமாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நெதர்லாந்தில் உள்ள பல அகதிமுகாம்களில் வசிக்கும் சில குர்திய அகதிகள் நீண்டகாலமாக தமக்கு எந்த முடிவும் வராமல் தஞ்சக்கோரிக்கை மனு புறக்கணிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவும் மேலும் சிலர் தஞ்ச மனு நிராகரிக்கபட்டு நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் நிலையில் இருப்பதாலும் தமது வாய்களை தாமே கம்பியால் கட்டிக்கொண்டு உண்ணாவிரதம் இருந்தார்கள்.

பல நாட்களாக அசைந்து கொடுக்காத அரசாங்கம் இறுதியில் அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்தது.

எனக்கு முதன் முதலாக ஒரு உண்மை தெரிந்தது. வாழ்க்கையென்பது சினிமாவில் வரும் கனவுக்காட்சியல்ல. அது போராட்டங்கள் நிறைந்தது. குர்திய விடுதலை இயக்கத் தலைவர் கைது செய்யப்பட்டு விட்ட செய்தி காட்டுத்தீ போல் உலகெங்கும் பரவியது.

ஐரோப்பிய நாடுகளில் குர்திஸ் மக்கள் ஆர்பாட்டத்தில் இறங்கினர். சிலர் தீக்குளித்தனர்.

இலண்டனில் அப்படியான ஒரு தற்கொலை முயற்சியில் இறங்கிய ஒரு இளம் பெண் ஐரோப்பாவில் வளர்ந்த இரண்டாவது சந்ததியை சேர்ந்தவள்.

தற்கொலை முயற்சி தேல்வியடைந்ததும் அவர் பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டியில் சொன்னவை இன்னும் என் காதில் ஒலிக்கின்றன.

நாம் சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு இங்கு வரவில்லை. எமது இனத்தின் விடுதலைக்காக எங்கும் எப்போதும் எமது உயிரைக்கொடுக்க தயாராகவிருக்கின்றோம்.

அடைக்கலம் புகுந்த நாட்டில் அடுத்தடுத்து இடம்பெற்ற சம்பவங்கள் என்மனதை மாற்றின. தற்கொலை என்பது உலகில் பலவீனமான மக்கள் கூட்டத்தின் எதிர்ப்பு ஆயுதமாக பயன்படுத்தப்படுவதை உணர்ந்துகொண்டேன்.

அதன் பிறகுதான் எனக்கும் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் வந்தது. அகதிகளை என்கவுண்டர் விருந்தாளியாக நடாத்தும் அவர்களை தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களில் வருடக்கணக்கில் காத்திருக்க வைக்கும் இவ்வாறு பல மனநோயாளிகளை இந் நாட்டு அரசுக்கு பாடம் புகட்டுவதற்காக என்னாலியன்ற எதிர்ப்பு நடவடிக்கையாக தற்கொலையை தேர்தெடுத்தேன்.

இந்த நடவடிக்கையால் வேறுயாருடைய உயிரோ உடமையோ பாதிக்கப்படப் போவதில்லை. எனது தற்கொலை மரணம் அமைதியான இந்த நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தும். பல உள்ளூர் மக்கள் சிந்திக்க ஆரம்பிப்பார்கள்.

அரசு இயந்திரம் அசைக்கப்படும்.

இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் நான் தற்கொலை செய்யப் போகின்றேன்.

ஆகவே யாரும் பதற வேண்டாம்.

இருந்து ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு எனது செயலின் நியாயம் புரியும்.

அடுத்தடுத்ததாக எங்கே எப்பொழுது எந்த நேரம் இந்த தற்கொலையை செய்வது என்ற திட்டமிடுதலுடன் இன்று நான் உறங்கப் போகின்றேன்.

விடிந்தது!

முகாம் எல்லாம் அல்லோலகல்லோலப்பட்டது. பலர் கத்தியபடி அங்கேயும் இங்கேயும் ஓடித்திரிந்து கொண்டிருந்தார்கள்.

திடுக்கிட்டு எழுந்த நான் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினேன்.

எனது முகாமில் வசிக்கும் குடும்பத்தினரான விநாயகமூர்த்தி நேற்றிரவு கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்திருந்தார்.

அவரது உடலைச் சுற்றி அவர் குடும்பத்தினர் பலர் அழுதுகொண்டு இருந்தனர்.

விநாயகமூர்த்தி நான்கு பிள்ளைகளின் தந்தை. அவரது மனைவி, பிள்ளைகள் இன்னமும் இலங்கையில் வசிக்கின்றனர்.

மற்றும்படி எனக்கும் அவருக்கும் அதிக ஒற்றுமைகள் இருக்கின்றன.

குடும்பத்தின் வறுமைநிலை, கடன் சுமை, இத்தியாதி. . .இத்தியாதி. . .

ஆனால் அவர் இப்போ என்னை முந்தி விட்டார்.

பத்திரிகை நிருபர்கள் வந்தார்கள். முகாம் நிர்வாகிகள், அகதிகள் எனப் பலரையும் பேட்டி எடுத்தார்கள்.

அனேகமாக எல்லா அகதிகளும் விநாயகமூர்த்தியை இந்த நிலைக்கு அனுப்பிய இந்த அரசையும், உதவி மனப்பாங்கற்ற மனித இயந்திரங்களான நிர்வாகத்தையும் குற்றஞ் சாட்டினார்கள். நிர்வாகத்தினரோ தாம் மேலிடத்து உத்தரவுகளை மட்டுமே அமுல்படுத்துவதாயும் மற்றும்படி எதுவும் தங்கள் கையில் இல்லை என கை விரித்தார்கள்.

கிட்டத்தட்ட மனநோயாளியாகி விட்டிருந்த விநாயகமூர்த்தி முன்பொரு தடவை நிர்வாகியிடம் சில உதவிகளை கேட்டுக் கிடைக்காது ஏமாற்றமடைந்திருந்தார். இதனால் சில அகதிகள் நிர்வாகத்தின் அலுவகத்தினை முற்றுகையிடவே நிர்வாகி பின்புற ஜன்னல் வழியாக வெளியேறி விட்டார்.

பிற்பகல் ஆரம்பித்த சவ ஊர்வலம் நகரசபை நோக்கிச் சென்றது. நகரபிதாவிடம் மனு கையளிக்கப்பட்டது.

நாடு முழுக்க பரபரப்பாக பேசப்பட்டு இந்தச் செய்தி பாராளுமன்றத்தை அடைந்தது. சில எதிர்க்கட்சியினர் காரசாரமாக விவாதித்தார்கள். அகதிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடாத்துவதாக ஆளும் கட்சிகளின் மீது குற்றச்சாட்டுகள் வீசப்பட்டன.

இதன் முடிவில் அகதிகளை தாம் மனிதாபிமான முறையில் எதிர்காலத்தில் நடாத்துவோம் எனவும் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவது நிறுத்தப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

தொடர்ந்து சில மாதங்கள் யாரும் பலவந்தமாக திருப்பி அனுப்பபடவில்லை. சில பேருக்கு சாதகமான பதில்கள் விரைவில் வந்தன.

பலர் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அல்லது நிரந்தர அகதிகள் வதியிட உரிமை அளிக்கப்பட்டு முகாமை விட்டு வீடுகளுக்கு சென்றார்கள். மற்ற அகதிகள் மத்தியில் இந்த மாற்றம் நல்ல நம்பிக்கையைத் தோற்றுவித்தது. பலர் தமக்கும் விரைவில் நல்ல முடிவு வருமென எதிர்பார்த்தார்கள்.

இந்த மாற்றமெல்லாம் சிலகாலமே நடந்தன. தற்கொலை செய்தவை மறந்து விட்டாலும், இதற்கிடையில் அரசாங்கம் நல்ல பெயரைப் பெற்று விட்டாலும் நிலைமை பழைய நிலைக்குத் திரும்புவதை யாரும் கவனிக்கவில்லை.

விக்கிரமாதித்தனின் கடும் முயற்சியால் கட்டியிழுத்து வரப்பட்ட வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

நானும் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை விட்டு விட்டேன்.

நன்றி - உயிர்மெய்

(kalaiy26@gmail.com)



# ஜேர்மனியில் ஒரு நகரம்

ரவி அருணாச்சலம்
இலண்டன்

ஓடிக்கொண்டிருந்தபோது பனி முகத்தில் அறைந்தது. நகரத்தில் அப்போது பஸ்ஸைத் தவறவிட்டு விடுவேன் என்றஞ்சி ஓடினேன். பனிச்சேறு என் கால்களின் கீழே அப்பிக் கொண்டு. . . நெரிபட்டுக் கொண்டுமிருந்தன. மிக்க இருட்டான விடியற்புறத்தில். . . நான் ஒரேயொரு நிமிசத்தில் பஸ்ஸைத் தவறவிட்டு விடுவேன். பிறகு அரைமணித்தியாலம் காத்திருக்க வேண்டும். வேலை அரைமணித்தியாலம் அதற்காகக் காத்திருக்காது.

சஞ்சயும் சஞ்சுவும் என்னைத் 'தடியா' என்றனர். சுசி என்னை 'குண்டா' என்றாள். இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னால் அப்படி அழைத்தனர். ஜெர்மனியின் உபசாரத்தில் மேலும் நான் தொக்கையாகி விட்டேன்.

வீதியின் ஓரங்கள் சறுக்குவதற்கு ஏதுவாகப் பனிப்பஞ்சுப் பொதிந்து கல் இறுகிப் பாறையாக மின்னின. நான் அதில் சறுக்கி 'தொபுக்கடி' என விழுவேனாக இருந்தால் நாரி விட்டுப்போவது ஒரு புறம் இருக்கட்டும். பிறேமன் நகரம் ஒருமுறை அதிர்ந்து குலுங்கும். லைற்றில் மஞ்சள் ஒளியில் பனித்துகள்கள் பொன் வண்ணத்தில் மின்னி ஒளிர்ந்து கீழிறங்குகின்றன.

என் ஓட்டம் கண்ட பஸ் சாரதி மெதுவாகப் பஸ்ஸை நிறுத்ததிற்கு கொண்டு வந்தான். நன்றி கூறி ஏறினேன். நானொருவனே பஸ்ஸில் இருந்தேன். வெளியில் பெய்கிற பனியின் குளிருக்குப் பஸ்ஸினுள் இளஞ்சூடு வெதுவெதுப்பாய் இருந்தது. போதாக்குறைக்குக் கையுறைகளைக் கழட்டிக் கைகளைத் தேய்த்தேன். . .

ட்ராம் எடுத்து அரைமணித்தியால ஓட்டம். இருண்டு போய் கிடக்கிற ரெஸ்ரோறண்டினுள் நான் கால் வைப்பேன்.

ஜெர்மனியர்கள் சுத்தமாகக் கால் வைப்பதற்கும், சுத்தமாக அமர்வதற்கும், சுத்தமாக குடிப்பதற்கும், சுத்தமாக உண்பதற்கும் சுத்தமாகச் சலம், மலம் கழிப்பதற்கும் நான் அங்கு தேவை. ஜெர்மன் மகளிர் தம் சுகயீன காலங்களின் கழிவுகளை வீசுவதற்கும் நான் தேவை.

யாவும் முடிய ரெஸ்ரோறண்ட் பளிச் சென்றிருக்கும். இரண்டு மணித்தியாலம் ஆகிவிடும்.

வேலை முடிந்து வெளியில் வருகிறபோது, சுத்தமாகத் துடைத்து மின்னுகிற கண்ணாடியில் முகம் பார்ப்பேன். சரிதான், தெரிந்ததுதான். முகம் விகாரமாய் இருக்கும். பனிக்குளிரினுள் முகம் வியர்வை கசிந்து தெரியும்.

மாதம் முடிகிறபோது 300 மார்க் சம்பளமாக மகான் வாங்கித் தருவார். இந்த வேலையை மகான் எடுத்துத் தந்திருந்தார். மகானின் மனைவி என் நெருங்கின உறவினர். கமலா அத்தையின் மகள். கமலா அத்தையின் சிரிப்பைப் போலவும், கமலா அத்தையின் சந்தோசத்தைப் போலவும், அவர் இருந்தார். இந்நகருக்கான என் வரவு இந்நகரில் பாய்கின்ற 'வெசர்' ஆறுபோல அவர்களுக்கு மகிழ்வை ஏற்படுத்தியது.

சொந்தம் இல்லாது, சூழ நண்பர்கள் மாத்திரமே வாழ்கின்ற இந்த ஊரில், என் வரவினூடாக நான் அவர்களுக்கு மகிழ்வையே ஏற்படுத்தினேன்.

"இந்த வீட்டை உங்களின்ரை வீடு மாதிரி நினையுங்கோ" என்று மகான், அடிக்கடி இராச்சாப்பாட்டிற்கு அழைத்துச் சொன்னார். இராச்சாப்பிட்டால் பால் குடிக்க வேண்டுமென்றார். "இஞ்சை படுக்கலாம்" என்று படுக்கை விரித்தார். அவரின் அழகான சின்னுட்டி வாய்க்கொண்ட ஒற்றை மகளுக்கு ஏதும் வாங்கிச் செல்ல என்னிடம் அப்போது காசில்லை. நான் அதனால் மனம் நொந்திருந்தேன். இந்நகரின் கடைகள் இரவு ஆறரை மணிக்குப் பூட்டுவதும், அதன் பிறகே நான் அவர் வீடு செல்வதும் எனக்கு வாய்ப்பானதாக இருந்தது. ஆனால் அப்படி இருந்து விடமுடியுமா? முகாமில் சாப்பாட்டின் பின் தருகிற பழங்களைச் சேகரித்து போகிறபோது கையில் கொண்டுப்போய்க் கொடுத்தேன்.

"மாமாவிட்டே வாங்கோ..."

"எனக்கு உங்களின்ரை நிலைமை தெரியும். அதெல்லாம் வேண்டாம்" என்றுதான் மகான் சொன்னார். அதற்காகக் குழந்தை இருக்கிற இடத்தில் கையை வீசிச் சும்மா போக முடியுமா?

ரெஸ்ட்ரோறண்டில் கோப்பை கழுவுகிற வேலைக்கு இதுவரை நகர் முழுக்க நான் உலைந்து விட்டேன். ஒரு சீனக்காரன் என் உருவத்தைக் கடைக்கண்ணால் கவனித்துப் போன் நம்பர் தரச் சொன்னான். போன் நம்பருக்கு நான் எங்கு போவேன்? "இளைஞர்களுடன் உன்னால் வேலை செய்ய முடியாது" என்றான் ஈரான்காரன். "இவ்வளவு வயதில் உன்னிடம் எவ்வாறு வேலைகளை ஏவுவது?" என்று துருக்கிக்காரன் கேட்டான். இந்தியனின் கேள்வி இது, "எட்டு மணித்தியாலம் வேலை. இரண்டு மணித்தியாலம்தான் சம்பளம். ஏலுமோ?" ஆலோசனை சொல்ல ஜெர்மன்காரன் தவறவில்லை. 'ஒழுங்காகப் பாஷையைக் கற்றுக்கொண்டு வா.'

இவ்வகைத் துரத்தல்களுக்கும் அப்பால் இந்த வேலையை மகான் முதலாளியுடன் கதைத்து எடுத்துத் தந்திருந்தார்.

முதல் 15 நாட்கள் பயிற்சி என்றார் மகான். "அதுக்குச் சம்பளம் தரான். உங்களின்ரை வேலை பிடிச்சிருந்தால் தொடர்ந்து வேலை. நீங்கள் முதலாளியோடை ஒண்டும் கதைக்க வேண்டாம். உங்களின்ரை பாஷை அவனுக்கு விளங்காது. நான் சம்பளம் வாங்கித் தருவன். 300 மார்க். இஞ்சை ஒருத்தனும் இப்பிடித்தரான். நல்ல சம்பளம், நீங்கள் வேலை ஆக்களோடை சம்பளத்தைப் பற்றி ஒன்றும் கதைக்காதையுங்கோ. எங்களின்ரை சனம் பொறாமை பிடிச்ச நாய்ச்சாதி. தாங்கள் 200,250 மார்க்கிற்குக் குறைஞ்சு வேலை செய்வம் எண்டு கேப்பாங்கள். உதுகள் வெளிநாட்டுக்கு வந்தும் திருந்தாதுகள். யாழ்ப்பாணத்து புத்தியைக் காட்டுங்கள். சரி, அதை விடுங்கோ. நீங்கள் கவனமா இருந்தாச் சரி. இப்ப இந்த வேலையைச் செய்யுங்கோ. பிறகு நல்லதொரு வேலை பாப்பம்."

மகானின் வார்த்தைகள் மனசுக்குத் தெம்பாக இருந்தன. அருமையான மனுசன்! சம்பளம் எவ்வளவு என்று கூறாத என்னையிட்டு முகாமிலுள்ளவர்கள் திருப்திப்படவில்லை அது தாங்காது சம்பளம் பற்றிக் கூறினேன் நான். ஆயினும் வேலை செய்கிற நேரத்திற்குச் சம்பளம் போதாது என்று கூறினர். புளுகுகிறான் என்று அயல் அறைகளில் புறுபுறுத்தார்கள்.

இதனால் மாத்திரம் நான் சஞ்சலமடைந்து போகவில்லை. ரெஸ்ரோறண்டில் அடிக்கடி நான் ஓங்காளிக்கிறேன். ஆரம்பத்தில் சிகரெட் கட்டைகள் இருக்கிற குப்பைத் தொட்டியைச் சுத்தப்படுத்துகிறபோது ஓங்காளித்தேன். ஆனால் தொடர்ந்தும் தீட்டுத்துண்டுகளைத் தூக்கி அப்புறப்படுத்துகிறபோது வருகிற ஓங்காளத்தைத்தான் கட்டுப்படுத்த முடியாமலிருக்கிறது.

இவற்றால் மாத்திரமல்ல பிறகு இரண்டு, மூன்று முறை இவ்வேலை செய்வது தொடர்பாக நான் தடுமாறினேன்.

வெளிப்புறம், முற்றத்தில் குவிந்து கிடக்கிற பனிச்சேற்றினை வாரிக் கொட்டுகிறபோது மகான் வந்தார். வேலை செய்யிற முறை சரியில்லை என்று முதலாளி போன் அடித்ததாகப் பிரஸ்தாபித்தார். மிகச் சுத்தமாக வேலை செய்வதாகவே நான் நினைத்தேன். என் ஓங்காளச் சத்தம் சுவர்களில் பட்டிருக்குமோவென்று சுவர்களைத் துடைத்தேன். நான் கீழிறங்கும் படிகளில் கறுப்புப் படர்வது கண்டு உரஞ்சித் துடைத்தேன்.

இல்லை, என் வேலையில் பழுதிருக்கிறது என்றுதான் மகான் அபிப்பிராயப்பட்டார். "அப்பிடி என்ன பிழை?" என்று நான் கேட்டேன். பிழை இன்னதென்று சொல்ல முடியாவிட்டடலும் பிழை இருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

"உங்களுக்குத் தெரியாதண்ணை. உவங்கள் இப்பிடித்தான். சோனிகளை நம்ப ஏலாது. எவ்வளவு திறமாச் செய்தாலும் சரியில்லாயெண்ணுவாங்கள். இவன் முதலாளி நிலத்திலை கொஞ்சம் மண்ணிருந்தாலும் நாக்காலை நக்கி எடுப்பான்..." இவ்வாறு சொல்லிவிட்டு மகான் போனார்.

மகானின் குரல் தடித்துக் கரடு முரடாய் இருக்கிறது. அச்சுறுத்தும் வகையில் விழியுருட்டி மகான் கதைக்கிறார். அவர் மேல்வரிசைப் பற்களின் இடையே இடைவெளி இருந்தும் அதன் வழியாகப் பொய்களை உதிர்க்கவில்லை என நான் நம்பினேன். சிறு வயதில் நாக்கு வழிக்காததனால் குரல் தடித்து இருக்கிறதேயொழிய அந்நாக்குக் கரடுமுரடாய்க் கதைக்கும் என நான் நம்பவில்லை. அறியாப் பருவத்தில் பேய்களைப் பார்த்துப் பயந்ததாலோ என்னவோ. விழிகள் முழியாகப் பெரிதாக இருக்கிறதேயொழிய, மகான் விழியுருட்டிக் கதைக்கக் கூடியவரல்ல என நான் நம்பினேன். அவரைப்பற்றி எனக்கு நன்கு தெரியும்.

ஆனால் இதற்கு மிஞ்சி எப்படிக் கவனமாகச் செய்ய வேண்டும் என எனக்குத் தெரியவில்லை. எப்படிக் கவனமாகச் செய்யலாம் என எனக்கு ஒப்பிப்பார் யாருமில்லை. நான் ஓடுகிற ட்ராமிலிருந்தபோதும், அழகிய பெண்கள் வந்தபோதும், வண்ணமயமான கடைகள் தெரிந்தபோதும், கவனஞ்சிதறாமல் இன்னும் எப்படி வேலையைத் திறம்படச் செய்யலாம் என்று யோசித்தேன்.

ஒருநாள், குளிர் பிய்த்தெடுக்கிற அந்த விடியற்புறத்திலும் முதலாளி வந்தார். எல்லா இடமும் 'கூவர்' பிடித்த பிறகு. மருந்து விட்டுச் சுடுதண்ணீரினால் 'மொப்' பண்ணிக் கொண்டிருந்தபோது முதலாளி வந்தார். தன் நித்திரையைத் தியாகம் செய்துவிட்டு. என் வேலையில் பிழை கண்டு ஏசுவதற்கு அவர் வருகிறார் என்பது நன்றாகத் தெரியும்.

ஒரு விதத்தில் சந்தோஷப்பட்டேன். பிழை இன்னதுதான் என்று தெரிந்தால் இனித் திருத்தமாகச் செய்யலாம். வந்தவர் அவசரம் அவசரமாக லாச்சியைத் திறந்து ஏதோ எடுத்தார். நான் வேலை செய்கிறதைப் பார்த்து 'குட் குட்' என்றுவிட்டுப் போனார்.

அவர் முகத்தில் திருப்தி நிலவியதாகக் கண்டேன். அவர் தொலைத்து விட்டேன் என்று நம்பி, இராமுழுக்க, விசனப்பட்டுக் கலங்கித் தேடிய பொருள் லாச்சிக்குள் இருக்கக் கண்டதால் முகத்தில் திருப்தி நிலவியது. அந்த நித்திரைத் தூக்கத்தில் விடியற்புறத்தில் என் குறை சொல்ல அவர் விரும்பவில்லை. நான் அப்படித்தான் நம்ப விரும்பினேன்.

இரண்டுகிழமை கழித்து மகான் ரெஸ்ரோறாண்டிற்கு வந்தார். நான் கதிரை மேசைகளில் சிந்தியிருக்கிற கஞ்சல்களைத் தட்டிவிட்டு, அலுமாரிகளின் இடுக்குகளில் இருக்கிற தூசிகளைத் துடைத்துக் கொண்டிருந்தேன்.

"வேலை சரியில்லையெண்டு என்னைத்தான் முதலாளி ஏசுறான்" என்றார் மகான். மெல்லெனவே நான் சொன்னேன், "போனகிழமை நான் வேலை செய்யேக்கை முதலாளி வந்தவர், வேலை சரியில்லையெண்டு ஒண்டும் சொல்லேல்லை" என்றேன். மகான் சடக்கென தடுமாறுவது தெரிந்தது. முகம் கறுத்துப்போவதும் அப்பட்டமாகத் தெரிந்தது.

கதிரை சரியாக வைக்கப்பட்டிருக்கவில்லை. இதில் கையை ஊன்றிய மகான், கதிரை சரியத் தடுமாறினார். அவ்வளவுதான்! மகான் நின்ற இடம் வெளிச்சம் எத்துப்பட முடியாத இருட்டான பகுதி. விடிந்து வெளிச்சம் வராத நேரம். அதுதான் முகம் கறுத்துப் போனதாகத் தெரிந்தது. அவ்வளவேதான்!

"சரியண்ணை. இனிக் கவனமாகச் செய்யுங்கோ" என்றார். "எனக்கு இவ்வளவுதான் செய்யத் தெரியும். கஷ்டமெண்டால் இந்த வேலையை விடுவம்" என்று மட்டும் சொன்னேன்.

"நீங்கள் அங்கை மாஸ்ரா இருந்தனீங்கள். வேலை செய்யத் தெரியாதெண்டால் எப்படி இருக்கும்? நாலைஞ்சு நாளிலையே 'மொப்' பண்ணத் தெரியாதெண்டால்?..." என்றார்.

எனக்கு இப்போது கொஞ்சமாக என்றாலும் சீற்றம் வந்தது. என்னில் கொஞ்சம் கோபமும் தெரிந்தது. சில பேர் சில வேலைக்கெண்டே பிறந்திருக்கினம் என்றேன்.

அப்படிச் சொல்லியிருக்கக்கூடாது என்று தெரிந்தது. நான் சிறியதாக உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். அதுதான் பிசகு, "இப்படிக் கதைக்காதையுங்கோ அண்ணை" என்றார் மகான். வெளிச்சத்தில் திரும்பியபோதுமகானின் சுட்டமுகம் தெரிந்தது. எனக்குப் பிறகு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. அப்பொழுதே மகான் "இரவைக்கு வீட்டை வாங்கோவன்" என்று அழைத்தார். எனக்கு அந்நேரத்தில் மறுக்கவும் தோன்றவில்லை.

'மகான் எவ்வளவு அருமையான மனுசன்!'

இராச்சாப்பாடான பிறகு, மகான் பாலைக் குடித்த பிறகு சொன்னார். "அண்ணை, நீங்கள் வேலை சரியாச் செய்யிறீங்கள்தான். ஆனால் முதலாளி நெடுகப் போன் அடிச்சு வேலை சரியில்லை என்றான். என்னவோ உங்களை அவனுக்குப் பிடிக்கேல்லை." பிறகு ஒரு மிடறு பால் அருந்தினார். அதே மிடறு கதைக்க இன்னும் வலிமையைக் கொடுத்தது. பால் போலவே அவரதும் வெள்ளைச் சொற்களாக இருந்தன.

"உங்களுக்கு எப்படி என் சாத்திரத்திலை நம்பிக்கை இருக்கோ?" கேட்டு என் முகத்தைப் பார்த்தார். நான் ரீவியைப் பார்த்தேன்.

மகானே தொடர்ந்தார். "நான் அதை நல்லா நம்பிறன். என்ரை பெயரிலை 'எச்'சிற்குப் பதிலாக 'கே' போட்டப் பிறகுதான் என்ரை வாழ்க்கையிலை முன்னேற்றம் வந்தது. உங்கன்ரை பெயரை எப்பிடி மாத்தலாம் எண்டு பாப்பம்."

எனக்கு உடம்பு தொக்கையாகிவிட்டது. நான் பாலை மறுத்து கறுத்தக் கோப்பியை குடித்தபடி இருந்தேன். ஒரு மிடறு அருந்த வாய் வைக்கமுன், கசக்கிற அந்த மிடறை விழுங்க முன், நான் ஒரு வரி பேசினேன். "எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை." என்கிறமாதிரி...மகான் குன்றிப்போனார். என்னை நம்பவில்லை. "சாதகம், குறிப்பு ஒன்றிலையும் நம்பிக்கை இல்லையோ?" கேட்டார்.

“இல்லை” என்று மேம்போக்காகக் கூறினேன். இவ்வாறு சொன்னதையிட்டு நான் பயந்தேன். மகான் முகம் கறுத்துப் போனது. பாத்திரங்கள் உருள்கிற சப்தங்கள் நின்று, கமலா அத்தையின் மகளும் குசினிக்குள்ளிருந்து எங்கள் கதைக்குக் காது கொடுத்தார்.

“அதிமேதாவிகள்தான் இப்பிடிக் கதைப்பினம்” என்றார் மகான்.

“அப்படியா?” என்று நான் ஆச்சரியப்பட்டேன். ‘அவுஸ்வைஸை’க் (அடையாள அட்டை) கேட்டார். கொடுத்தேன். புரட்டிப் பார்த்து விட்டுத் திருப்பித் தந்தார். “ஏன் உங்களுக்கு இங்கிலிஷ் தெரியாதோ?” எனக் கேட்டார்.

“நான் தமிழன்” என்று மட்டும் சொன்னேன்.

“நீங்கள் இப்பிடித் தமிழிலை கையெழுத்து வைச்சால் உங்களுக்கு இங்கிலிஷ் தெரியாதெண்டு டொச்சுக்காரர் மதிக்கமாட்டினம்” என்றார்.

“ஏன் டொச்சுக்காரர் இங்கிலீசிலையோ கையெழுத்து வைக்கினம்?”

“அது இங்கிலிஷ் எழுத்துத்தானே?”

“இங்கிலிஷ் வேறை.. டொச் வேறை” என்றேன். இம்முறை மகானின் பார்வையில பயம் தெரிந்தது. கொஞ்சம் யோசிக்கிறார் போலப் பார்த்தார்.

கோப்பி முடிந்து விட்டிருந்தது. எழும்பி நடக்க முடியுமாக உடம்பு இளகி இருந்தது. விடிய வேலை இருப்பதாக நினைவும் வந்தது, புறப்பட்டேன். “போட்டு வாறன்.”

“ஓமண்ணை...” என்று குசினிக்குள்ளிருந்தும் மெல்லிய குரல் வந்தது. எப்போதும் அதுதான். கமலா அத்தையின் மகளை வந்தபோது காண்பதும், பிறகு அவர் மறைவதும், புறப்படும்போது “ஓமண்ணை” என்று குரல் கேட்பதுமாக இருக்கின்றது.

சாப்பாடோ சுட்டபடியும், ருசித்துப்போயும் இருக்கிறது.

*

மரங்கள் யாவும் இலைகளை இழந்திருந்தன. இனி அடுத்த வசந்தம் வரும்வரை காத்திருக்க வேண்டியதுதான். இலைகளை இழந்த மரங்கள், மேகங்களைக் கூட்டி அப்புறப்படுத்த, விளக்குமாறாக நின்றன. பிறகுதான் சூரியன் மெதுவாகத் தயங்கி, முகிற் புகாரினூடாக எட்டிப் பார்க்க முயலும். நான் சூரியனை முழுமையாக இங்குதான் கண்டேன். திரண்டெழுந்த பனிப்புகார்களின் இடையே அதன் வட்டவடிவமான வெள்ளி விளிம்புகளுடன் சூரியனை கண்ணில் எந்தக் கூச்சமுமின்றிக் கண்டேன்.

எனினும் என் மனதில் சிறிது குழப்பம்தான் எஞ்சுகிறது. எல்மேல் துயர் படிந்திருக்கிறது. நகரம் முழுவதும், வீதிகள் வரையும், புல்வெளிகள் யாவும், சிறுமரம் செடி, கொடிகள் மேலும், கூரைகளிலும், காரின் மேற்கூரைத் தகட்டிலும், சுண்ணாம்பு பூசியதுபோல பனித்துகள்கள் படிந்திருக்கக் கண்டேன். அவ்வாறே நானும் ஆகினேன். ஒன்றும் பேசாமல் மொட்டை மரமாக, பனிக்காலத்து மரமாக நானும் நிற்க விரும்பினேன்..

நான் மென்மேலும் சஞ்சலப்படுவதற்கான ஏதுக்கள் என் வாழ்வில் நிகழ்ந்தன. நான் வார்த்தைகளை அளவோடு பயன்படுத்த வேண்டும் என்பதில் உன்னிப்பாகவும் கவனமாகவும் இருந்தேன். நான் கவனமாக இருப்பதற்குச் சாத்தியம் இல்லாமற்கூட சில கருமங்கள் நடந்தேறின.

மகான் அந்த ரெஸ்ரோறண்டின் சுவர்க் கண்ணாடிகளையும், கண்ணாடிக் கதவுகளையும், லைற்சேட்டுக்களையும் மாதத்திற்கு இரண்டு தடவை சுத்தமாகக் கழுவித் துடைக்கச் சென்னார். அதற்கு மேலதிகமாக 40 மார்க் என்றார்.

அதற்கென்று மூன்று மணித்தியாலம் போனது. சிறு ஏணி வைத்து ஏறிப் பளிச்சென்று துடைத்தேன். எனக்கு ரெஸ்ரோறண்ட் இன்னொரு அழகாக இருந்தது. வெளியில் ஏணி வைத்து ஏறித் துடைத்தபோது விறைத்துப் போய்விட்டேன். என் கைச்செலவுக்கு, நான் எழுதும் கடிதங்களுக்கு அனுப்பும் கதைகளுக்கு முத்திரை ஒட்டப்போதுமான அருமையான காசு!

ஆனால் அது வழங்கப்படவில்லை.

"ஏன்" என்று மகானிடம் கேட்டேன்.

"உங்கன்ரை வேலை சரியில்லை. கண்ணாடிகள் சரியாத் துடைபடேல்லை. அதுதான் தரேல்லைப் போலை..." என்று சாதாரணமாகச் சொன்னார். இம்முறை நான் கோபப்படுவதில் தேவை இருந்தது. முதலாளியோடை நான் ஒருக்காக் கதைச்சுப் பாக்கிறன் என்றேன்.

"வேண்டாமண்ணே. கதைக்காதையுங்கோ. உங்களுக்கு டொச் தெரியாது. அவனுக்கு இங்கிலிஷ் தெரியாது. எல்லாத்தையும் குழப்பிப் போடுவியள். மற்றதண்ணை இவங்கள் சரியான தொப்பி பிரட்டிகள். இவங்களை நம்ப ஏலாது. அடுத்த முறை நான் கேட்டு வாங்கித்தாறன்.." என்றார். மகானின் முகத்தை இப்போது நான் அதிகம் கூர்ந்து கவனித்தேன்.

மகானின் குரல் தடித்துக் கரடுமுரடாய் இருக்கிறது. கண்கள் ஒளி வீசாது, உண்மைகள் அற்று, சந்தேகச் சாயல் படிகிறவைகளாக அவ்விழிகள் அக்கம் பக்கம் பார்த்துப் பேசுகிறவைகளாக இருக்கின்றன. அவரது மேல் வரிசைப் பற்களின் இடையே இருந்தும் அதன் வழி பொய்களை உதிர்ப்பவராக அவரை நான் நம்பவில்லை. அவர் கைகள் கறுத்துப்போய் இருந்தன. கைகளில் கறைகள் இருந்தன. அவர் கண்ணின் வெள்ளை மணியில் கறுப்புப் புள்ளி இருக்க நான் கண்டேன். அது ஊரின் பீநாறி மரத்தடியோ, ஈச்சம்முள்ளோ செய்த கொடூரம்.

என்னால் இப்போது ஒன்றையும் ஊகிக்க முடியவில்லை. வேண்டாம் ஒன்றையும் ஊகிப்பதும், அதன் வழி முடிவெடுப்பதும் பிழை.

மகானின் முகத்தை நான் ஊன்றிக் கவனிக்கவும் விரும்பவில்லை. என் ஊகத்தில் தவறு நடக்கச் சந்தர்ப்பம் உண்டு. நான் இவ்வுலகில் வந்து 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டால் என்ன? என் மூளை பெரிதாக விருத்தி அடையவில்லை. என் அறிவும் அவ்வளவாக விசாலமடையவில்லை.

என் ஊகத்தில் தவறு நிகழ்கிற சந்தர்ப்பம் உண்டு. அப்படி நிகழ்ந்தது. பின்வரும் சம்பவத்தைக் கேளுங்கள்.

ஒவ்வொரு நாளும் ரெஸ்ரோறண்டை 'மொப்' பண்ணிவிட்டு, ட்ராம் ஏற நான் வருகிற போதுகளில் அடிக்கடி ஒரு பாகிஸ்தானியைக் கண்டேன். ஒருவரின் உயரம், நிறம், தலைமயிர் இவைகளை வைத்து அவர் எந்த நாட்டவர் என்பதை என்னால் ஊகிக்க முடியும். அதன்படிக்கு அவன் ஒரு பாகிஸ்தானி. அனேகமாக ஒவ்வொரு நாளும் அவனை நான் சந்தித்தேன்.

என்னைக் கடந்து போகிறபோது சிரிப்பமோ, விடுவமோ என அவன் யோசிப்பது தெரிந்தது. இந்தக் குளிருக்குள் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை என்று நான் ஓடிப்போய் ட்ராமில் ஏறினேன்.

"அலாம்" ஒருநாள் விடியற்புறத்தில் அடிக்காமல் விட்டது. பிந்திவிட்டது என்பதால் கக்கூஸ்கூட, இருக்காமல் வெளிக்கிட்டு ரெஸ்றொரண்டிற்கு ஓடினேன். அன்றைக்குத் தான் ரெஸ்ரோறண்டில் முதன்முதலாக ரொய்லட்டில் நான் குண்டி கழுவினேன். பாத்ரூமில் பளிச்சிட்ட கண்ணாடி அன்று என் முகத்தை விகாரமாகக் காட்டவில்லை என்று நான் நம்பினேன். அன்று ஆச்சரியப்படும்படியாக, நான் வழமையாகச் சந்திக்கிற பாகிஸ்தானி நான் சுத்தம் செய்கிற ரெஸ்ரோறண்டிற்குள் நுழைந்தான்.

"நீங்கள் இலங்கையோ?" என்று அவன் சுத்தத் தமிழில் கேட்டான். எனக்கு மிகுந்த ஆச்சரியம். "ஓம்..." என்று பிறகு, "நீங்கள்..?" என்று இழுத்தேன்.

"நானும் இலங்கைத்தான்... யாழ்ப்பாணம்" என்றான். என்னில் அசடு வழிகிறமாதிரி இருந்தது. நான் சொன்னேன், "நான் உங்களை ஒரு பாகிஸ்தானியெண்டு இவ்வளவு நாளும் நினைச்சன்."

"நீங்கள் என்னைப் பாத்துச் சிரிக்காமல் போகேக்கையே நான் வேறை நாட்டவன் எண்டு நீங்கள் நினைக்கிறது விளங்கிட்டுது. எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறது" என்று சிரித்தான்.

அவனது சிரிப்பில் அழகு இருந்தது. கள்ளம் இல்லை.

நான் ஒவ்வொரு நாளும் மேலும் அரைமணித்தியாலம் பிந்தி வந்து அவனுடன் கதைப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். பாத்ரூம் கண்ணாடியும் என் முகத்தை விகாரமாகக் காட்டுவதாயில்லை. அவன் பற்றிய தகவல்களை நான் மேலும் சேகரித்துக் கொண்டேன்.

பெயர் ஞானி, வந்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் அம்மாவிடம் போகவில்லை. அம்மாதான் அவனுக்குத் தெய்வம். பல நாடுகளில், பல நகரங்களில் உலைந்து திரிந்திருந்தான். ‘பவுடர்’ அடிக்கிற பழக்கம் இருந்தது. ‘பவுடர்’ வியாபாரம் செய்தான். அதன் பலனை 4 வருடங்கள் சிறையில் கழித்தான். ஜொ்மனிகாரியை மணம்முடித்து பிள்ளையும் இருந்தது. அவள் சரியில்லை, அவளை விட்டு இப்போ மாதாமாதம் பணம் கட்டுகிறான். இப்போது இன்னொரு ஜொ்மனிக்காரியுடன் சீவியம். அருமையான பெட்டை அவள். இத்தாலியச் சமையலில் கைதேர்ந்திருக்கிறான். இந்த ரெஸ்ரோறண்டின் பிரதான சமையல்காரன். முதலாளி நல்ல சம்பளம் கொடுக்கிறார்.

“செவ்(f) அருமையான மனிசன். நல்ல சம்பளம். வலு ஒழுங்கு. நான் வேறை ரெஸ்ரோறண்டிலை வேலை செய்தனான். இப்பிடி இல்லை” என்று இறுதியாகச் சொன்னான்.

“அண்ணை நீங்கள் இந்த வேலை செய்யாதையுங்கோ. நீங்கள் செய்யிறதைப் பாக்கப் பாவமா இருக்கு. உங்களுக்கு நான் வேறையொரு வேலை எடுத்துத்தாறன்” என்றான் ஞானி.

அருமையான யாழ்ப்பாணத் தமிழில் ஊரில் கேட்குமாப் போல கதைத்தான் ஞானி. இவனையா நான் பாகிஸ்தானி என்று ஊகித்தேன? எனக்கு அது கூச்சமாக இருந்தது.

சுசி எழுதியிருந்தாள், “நீங்கள் ஒருத்தரையும் நம்பாதையுங்கோ. எல்லாரையும் உடனே நம்பிவிடுவீர்கள்.

உங்களுக்கு வந்த கஷ்டம் முழுவதற்கும் அதுதானே காரணம்.

"அம்மாவும் அதையொட்டியே தொடர்ந்தார். "ராசா நம்ப நட நம்பி நடவாதை. இனியாவது கவனமா இரப்பன். நான் உன்னையிட்டு வேண்டாத தெய்வமில்லை." எனது அறையில் இருக்கிற ராஜனும் அதையே ஒருநாள் சொன்னான். "அண்ணை நீங்கள் எல்லாரையும் உடனே நம்பிறியள். என்ரை உண்மையான பெயரை உங்களுக்குக்கூட நான் சொல்லேல்லை..."

இவ்வெச்சரிக்கைகளுக்கும் அப்பால்தான் நான் ஒருமுறை மகானுக்குக் கூறினேன். "நான் மனிசரை நம்பிறன்."

உடனே, மகான் மறுத்துச் சொன்னார். "நான் மனிசரை ஒருக்காலும் நம்பமாட்டன். அதுவும் வெளிநாட்டுக்கு வந்தவங்களை நான் கடைசி வந்தாலும் நம்பமாட்டன். கடவுளை மாத்திரம்தான் நம்புவன்." கடவுளை நம்புவர்கள் மனிதரை நேசிப்பார்கள். அவர்கள் மனசாட்சிக்கு அஞ்சுவார்கள். மேலே ஒருவர் பார்த்து நிற்கிறார் எனும் உணர்வே அவர்களைப் பாவம் செய்ய விடாது. கூப்பிய கைகோபுரம். கும்பிடும் நெஞ்சு ஆலயம்.

"கடவுளை நம்பாத நாட்களிலைதான் நான் பாவம் செய்தனான். பவுடர் வித்தது அந்தக்காலம்தான். இப்ப அப்பிடியில்லை. இப்ப எனக்குக் கும்பிடவேணும் போல இருக்கு. ஓடிப்போய் அம்மாவின்ரை காலிலை விழுந்து கும்பிட வேணும் போல இருக்கு. அம்மாதான் கடவுள்" ஞானி இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது நான் கக்கூஸ் பேசினையும், மூத்திர பேசினையும் கழுவிக் கொண்டிருந்தன்.

பாத்ரூம் வாசலில் ஞானி நின்று சொன்னான், "உங்கன்ரை அம்மா, மனிசி, பிள்ளைகள் எப்பிடி இருக்கினம் அண்ணை? சுகமா இருக்கினமே? நீங்கள் எடுக்கிற 600 மார்க் என்னத்தைக் காணும்? நான் கொஞ்சக் காசு தாறன். அனுப்பி விடுங்கோவன். பிறகு கொஞ்சம் கொஞ்சமா எனக்குத் தாங்கோ. வேறை என்ன மாதிரி நான் உதவலாம்? எது எண்டாலும் என்னட்டைக் கேளுங்கோ."

ஞானி சொன்ன பிறகான வார்த்தைகளில் நான் அக்கறைப்படவில்லை. காற்றில் கரைந்த வார்த்தைகள் அவை. ஒரு வார்த்தைகள் - '600 மார்க் என்னத்தைக் காணும்?'

'600 மார்க்கோ? எனக்கு 300 மார்க்கதான் தாறது' என்று சொல்ல வேண்டிய தேவை வந்தது.

"உங்களுக்கு மகான்தானே காசு தாறவர்? போனமாசமும் மகானிட்டை 'செவ்' 600 மார்க் குடுக்கேக்கை நான் பக்கத்திலை நிண்டனான். பிறகு கண்ணாடி துடைச்சதுக்கொண்டு 40 மார்க்கும் வாங்கினவர்." உயரமாக இருந்த ஞானி இதனைச் சொன்னான்.

"எனக்கு 300 மார்க்தான் மகான் தாறவர்" என்றேன். ஞானி ஆச்சரியப்படவில்லை. அப்படியாகும் என்று ஊதித்தார் போல. நான் மகானிட்டை ஒருக்காக் கதைக்கிறன்.

"வேண்டாம் நான் கதைப்பன்" ஞானியால் சும்மா இருக்க முடியவில்லை. மூடுண்ட, வெக்கையான அடுப்புக்குள் 'பிற்சா' வெந்துகொண்டிருப்பதாக ஞானியின் மனமும் வெந்தது.

மகானுடன் ஞானி கதைத்து விட்டான். மகான் இரண்டொரு நாளில் எதிர்ப்பட்ட போது தான் கதைத்து விட்டதாக ஞானி சொன்னான். சொன்னபோது, ட்ராமின் 'தடக் தடக்' என்றொலி கேட்டது.

"தான் கிழமையிலை நாலுநாள் வேலை செய்யிறனென்று எனக்குத் காதுகுத்துப் பார்க்கிறார். நீர் வேலை செய்யிறதை நான் ஒருநாளும் காணேல்லை எண்டு நான் சொல்லீட்டன." ஞானி வெப்பியாரத்துடன் பேசினான்.

மகான் என்னைச் சந்தித்தபோது "நீங்கள் உங்களின்ரை வேலையைச் செய்யுங்கோ. மற்ற ஆக்களோடை தேவையில்லாத கதை கதையாதையுங்கோ உவங்கள் பொறாமை பிடிச்சவங்கள். தேவையில்லாமல் கொளுவி விடுவாங்கள்." என்று சொன்னார். அன்றிரவு மகானின் மனைவி தந்த சாப்பாட்டில் உறைப்பு அதிகம் இருந்ததாக உணர்ந்தேன். சின்னுட்டி வாய் கொண்ட அந்த அழகிய மகள் என்னுடன் அதிகம் கதைத்தாளில்லை. அன்று மாத்திரமே என்னை வெளியில் வழி அனுப்ப வந்த மகான், "நீங்கள் உங்களின்ரை சம்பளத்தை ஒருத்தருக்கும் சொல்லாதையுங்கோ. மொப் பண்ணுறதக்கு 300 மார்க் தாறது பெரிய காசு.

நீங்கள் சம்பளத்தைச் சொன்னால் நாங்கள் குறையக் காசுக்கு வேலை செய்யிறம் எண்டு மற்றாக்கள் போய் வேலை கேப்பாங்கள்'' என்றார். குளிர் அதிகமென்று மகானை உள்ளே போகச்சொல்லி நான் புறப்பட்டேன். கட்டையான மகான் குனியச் சிரமமின்றித் தன் கதவு திறந்து உட்சென்றார்.

வீதிவழியெங்கும் செம்மஞ்சள் பழங்கள் எரிந்தும், ஒழுங்கை வழி வெள்ளி விளக்குகள் ஒளிர்ந்தும் தெரிந்தன. கம்பங்கள் தவிர்த்து வெளியழாவி இருள் பனியில் தன்னைக் கரைத்துப் பூசியிருந்தது. ''உங்களின்ரை வேலை சரியில்லையெண்டு முதலாளி வேலை ஓராளைப் போடப்போறாராம். நீங்கள் இந்த 30ம் திகதி மட்டும்தான் வேலை செய்யலாம்.''

இதைச் சொன்னபோது என் முகத்தை, மகான் பார்த்தாரில்லை. ஆச்சரியப்படவோ அதிர்ச்சியடையவோ நான் வலிந்து மறுத்தேன்.. ''ம்..'' என்று கேட்டு வைத்தேன். ''உங்களுக்கு வேறை வேலை எங்கையும் நான் பாக்கிறன்'' என்றார். கறுத்தக்கட்டையான காரில் புதைந்து அவர் ஓடிப்போனார்.

ரெஸ்ரோறண்டின் முன்னே காய்ந்து போயிருந்த பூமரங்களின் இடையில் இருந்த கஞ்சல்களை இன்னும் நான் பொறுக்கவில்லை. பொறுக்குவதற்காகக் குனிந்தபோது ஞானி தலைகீழாக வந்தான். நிமிர்ந்து, ''மோர்கன்'' சொல்லிவிட்டு, ஞானியின் முகம் பார்த்தேன். ''இந்த முப்பதாம் திகதியோடை எனக்கு வேலை இல்லை...''

''நல்லதண்ணை இந்த வேலையை விடுங்கோ. நான் 'செவ்'வோடை கதைக்கலாம். ஆனால் மகான் எடுத்துத் தந்த வேலை நான் கதைக்கிறது சரியில்லை. மகான் உங்களின்ரை சொந்தக்காரர் என்றீர்கள். இதுக்குள்ள நானொண்டும் கதைக்க விரும்பவில்லை. அவர் உங்களை நல்லாச் சுரண்டுகிறார். உங்களுக்கு நான் கட்டாயம் வேறை ஒரு வேலை எடுத்துத்தாறன். நீங்கள் யோசிக்காதையுங்கோ'' என்றான் ஞானி.

வேலை முடிந்து வெளிக்கிடுகிறபோது, ஞானி மிசினிலிருந்து பாலை நுரைக்க வைத்துக் கோப்பி போட்டுத் தந்தான், ருசித்தது. ட்ராம் போகிற திசைக்கு எதிர்ப்பக்கம் பார்க்கிற சீற்றில் நான் இருந்தேன்.

எனக்கு சீற் அப்படி வாய்த்தது. நகரம் என்னுடன் ஓடி வரமாட்டேன் என்றது. எதிர்த்து, எதிர்த்து அது என்னை விட்டு நகர்ந்து சென்றது. இரு தண்டவாளங்களும் தம்முடன் தாம் சேர மறுத்து, ஆயினும் என்னைத் தொடர்ந்து வந்தன. நகரம் இப்போது களைத்துக் கறுத்துப்போய்க் கிடந்தது. உயரமான கட்டிடங்களில் சோகத்தின் சாயல் மழை மேகமாகப் படிந்து கிடந்தது.

30ம் திகதி வேலை முடித்து, திறப்பைக் கொண்டுபோய் மகானின் வீட்டில் கொடுத்தேன். மகான் இல்லை. மகானின் மனைவி கீழிறங்கி வெளிக்கதவுக்கு விரைந்து வந்து, அவர் இல்லை. நீங்கள் திறப்பைத் தாங்கோ, குடுக்கிறன் என்றார். பட்டுப்போகிற மரமாக அவர் நின்றார்.

திறப்பைக் கொடுத்து, நான் அப்பால் நடந்தேன்.

பிறகு வானம் குளிரைக் கக்கிக்கொண்டிருந்த மாலையில் மகான் என் முகாமிற்கு வந்து, 'என்ன, அப்பிடியே திறப்பைக் குடுத்திட்டுப் போட்டீங்களாம். கோப்பியாவது குடிச்சிட்டுப் போயிருக்கலாமே' என்றார்.

குளிர் வீசுகிற தேசத்தில் கோப்பியை ரோட்டில் நின்று குடிக்க முடியாது. நான் சொல்ல இவ்வளவும் இருந்தது. கசக்கிற கோப்பியை என் வாய் தொடாது என்று அம்மாவிற்கு மாத்திரம் தெரியும். போக, கோப்பியைத் தருவாரும் அங்கில்லை. ஆயினும் நான் மனதுள் சிரித்து "நான் அவசரமாய் போக வேண்டியிருந்தது" என்றேன்.

'பேர்சைத் திறந்து "கடைசி மாதச்சம்பளம்" என்று தந்தார் மகான். கசங்கிய நோட்டுக்கள்.'

"மற்றது முக்கியமண்ணை, இனி நீங்கள் வீட்டை வாறதெண்டால் எனக்குப் போன் பண்ணிப்போட்டு வாங்கோ" என்றார்.

"நீங்கள் சொன்ன நாளிலைதான் நான் உங்களின்ரை வீட்டை வந்தனான்" என்றேன்.

“சரி. இனி அப்பிடிச் செய்யாதையுங்கோ” என்றார். அவர் வீட்டு வீதியில் இனி என் கால்கள் பயணிக்காது. அழகான, அன்னைப் பொழிந்து பரிமாறுகிற பெண் மகவை இனி நான் வருடமாட்டேன்.

“வேலைக்கு ஆக்களிடம் சொல்லி வைச்சிருக்கிறன். இரண்டு, மூன்று கிழமை செல்லும். வின்ரரும்தானே?” ஞானி சொல்லியிருந்தான்.

காத்திருப்போம். அதற்கிடையில் சுசி நான் எழுதிய கதைகளை அனுப்பிருந்தாள். எவ்வித விக்கினமும் இல்லாமல் அவை என்னிடம் வந்தடைந்தன. மழை தூறிக் கொண்டிருந்த பின்னேரத்தில் நான் போன் பண்ணப் போனேன். “கிடைத்தன.” என்றொரு சொல் கூறவேண்டும். சஞ்சயா, சஞ்சுவா? தெரியவில்லை.

“அம்மா, போனிலை அப்பா! உடனை ஓடியாங்கோ” என்று கத்தினான்.

“சுசி கதைகள் கிடைச்சுது.”

“எப்ப கிடைச்சுது?”

இதற்கு நான் பதில் சொல்வதற்கிடையில் ரெலிபோன் தன் தகவலை அறுத்தது. பிறகு மெல்லிய கீச்சிடம் சத்தம். எனக்குத் தெரியும். என் பதிலுக்காக அவள் ரெலிபோன் அருகே காத்து நிற்பாள். ஒரு ‘பெனிக்’ கையில் இல்லை. அவளை நான் ஏமாற்ற வேண்டிய நிலைக்கு ஆளானேன். இப்படித்தான் மெல்லிய ஏமாற்றம் தரும் தருணங்களை அடிக்கடி நான் அவளுக்கு அளித்தேன்.

முகாம் நோக்கித் திரும்பி வருகிறபோது கடும்துயர் என்னை ஆட் கொண்டது. “போனிலை அப்பா. உடனே ஓடியாங்கோ.” மைந்தனின் குரல் என்னைப் பலமிழக்கச் செய்தது. சரி, இனியாவது ஒரு வாய் அழுவமோ என்று யோசித்தேன்.

நன்றி- இன்னுமொரு காலடி (iravia@hotmail.com)

# அறிவி(லி)ப்பாளன்

வீரகேசரி மூர்த்தி
கனடா



"குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கும் ஒருவரால் சமூக சேவைகளில் ஈடுபட முடியாது. மனைவி மக்களுடன் ஒன்றாகச் சேர்ந்திருந்து நாலைந்து பேரைக் கொண்ட குடும்பத்தைப் பராமரிக்க முடியாதவர்களால் எவ்வாறு பரந்த சமூகத்தைப் பராமரிக்க முடியும்? இது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்'' என வானொலியில் அறிவித்தார் அறிவிப்பாளர் காரைக்குமரன்.

அதனைக் கேட்டுக் கொண்டிருந்த நடராசருக்கு கோபம் சுரீரெனப் பற்றிக்கொண்டு வந்தது. றேடியோவை தூக்கி எறிந்து அடித்து நொருக்க வேண்டுமென எழுந்தவர் மறுகணம் தனது முடிவை மாற்றிக் கொண்டு சடக்கென றேடியோவை ஓவ் பண்ணினார். இருந்தாலும் அவன் கூறிய கூற்று அவரது உள்ளத்தில் குமுறிக் கொண்டே இருந்தது. இவன் யார் இப்படி ஒரு கருத்தை பகிரங்கமாகக் கூறுவதற்கு? இவனுக்கென்ன தகுதியிருக்கிறது? வானொலிச் சேவையை நடத்தினாப்போல தானொரு அறிவாளி என்ற நினைப்பு இவனுக்கு.

புலம் பெயர்ந்த நாடுகளில் குழலைக் கையிலெடுத்தவன் எல்லாம் நாதஸ்வர வித்துவான் என்ற கதையாப் போச்சுது என தனக்குத் தானே கூறிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

நடராசர் ஆத்திரப்பட்டதற்கு ஒரு காரணம் இருக்கிறது. கனடாவில் குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்து வரும் நூற்றுக் கணக்கானோருள் அவரும் ஒருவர். ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த மீனராசிக்காரரான அவர் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித் தான் வாழ வேண்டும் என்ற நேர்மையான கொள்கை வாதி. பொய், களவு, பிறரை ஏமாற்றுதல், பொதுப் பணிகளில் ஈடுபட்டு பொதுப் பணத்தை சுரண்டுதல், சுயவிளம்பரத்துக்காக பொதுப் பணியாற்றுவது எல்லாம் அவருக்குப் பிடிக்காது. அது மாத்திரமன்றி அத்தகைய குணங்கள் உடையோரையும் அறவே பிடிக்காது.

அதனால் அவர் பொதுப் பணிகளில் ஈடு பட்டு கெட்ட பெயர் வாங்காமல் ஒதுங்கி தானும் தன்பாடுமாக இருந்து வருகின்றார். ஆனா இங்குள்ள தமிழ் சமூகத்தினர் மத்தியில் நிலவும் மூட நம்பிக்கைகள், தங்களைத் தாங்களே அறிவாளிகள் எனக்காட்டிக் கொள்ள எத்தனிப்போர், பிறரது பணத்தை சுரண்டுவதற்காகப் பொதுப் பணிகளில் ஈடுபட்டு வரும் சமூக விரோதிகள் ஆகியோரின் தில்லுமுல்லுகளை சிறுகதைகள், கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தி வருகிறார்.

அதனால் எந்தப் பொதுநல அமைப்பிலாவது தில்லுமுல்லுகள் நடந்தால் இவரைப் போன்ற நேர்மையாளர்கள் இவரிடம் தகவல்களைத் தெரிவித்து இதை நீங்கள் பேப்பருக்கு எழுதுங்கோ எனக் கூறுவார்கள். இந்த ஏமாற்றுப் பேர்வழிகளின் தில்லுமுல்லுகளை பொது மக்களுக்கு விளக்கி அவர்கள் ஏமாற்றப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுவே நடராசரினதும் அவருக்கு மோசடி தகவல்களை வழங்கி வருவோரதும் நோக்கமாகும்.

காரைக்குமரனின் அறிவிப்பைப் பற்றி நடராசர் தனது நண்பர் ஒருவரோடும் ஆத்திரத்துடன் கூறினார்,

“இஞ்ச கனடாவுக்கு வந்தவங்கள் எல்லாரும் ஏதோ தமக்கு வாய்த்த தொழில்களை ஆரம்பிச்சு அவற்றில் ஒருமாதிரி காலூன்றத் தொடங்கியதும் தங்களை விட்ட வித்துவான்கள் இல்லை என்ற நினைப்பில தம்பட்டம் அடிங்கிறாங்கள்.

றேடியோக்காரர் மாத்திரமல்ல பேப்பர்காரங்களும் அப்படித் தானே. முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் தங்கட படங்களை பிரசுரிக்கிறதுக்காகத் தானே சிலபேர் பேப்பர் வெளியிடுறாங்கள். ஓசியில வெளியிடுகிறதால சனங்களும் ஒண்ணும் பேசாமல் இருக்குதுகள்.

அவங்கட அக்கிரமங்களைப் பற்றி நாங்க எடுத்துச் சொன்னால் சனங்கள் எங்களைத் தான் புத்தி இல்லாதவங்கள் எண்டு சொல்லுவினம். . . . அப்ப அவங்க செய்கிற பித்தலாட்டங்களைப் பார்த்துக் கொண்டு நாங்க சும்மா இருக்க வேணுமெண்டே சொல்லுறாய்?

நீங்க இதுகளைப் பெரிசுபடுத்தாமல் விடுங்கோ. படிப்பறிவில்லாத எங்கட ஆக்கள் இஞ்ச வந்து பண்ணின கூத்துகளால தானே இனிமேல் படிச்சவங்கள், ஆங்கில அறிவுள்ளவையள் மாத்திரம் தான் கனடாவுக்கு வரலாமென்று கனடா அரசு புதுசா சட்டமே கொண்டு வந்திருக்குது என அவர் நடராசாவுக்கு ஆறுதல் கூறினார்.

குறிப்பிட்ட ஒரு அமைப்பின் பெயரால் சிலர் கனடாவிலுள்ள பொது மக்களிடம் அறவிடப் பட்ட பணத்தை சுரண்டிக் கொண்டார்கள் என்பதற்காக காரைக்குமரன் அந்த அமைப்பை அடிக்கடி தனது றேடியோவில் காரசாரமாக விமர்சித்து வருகிறார். அதால எத்தனையோ சனங்கள் அவன்ர றேடியோவைக் கேக்கிறதையே நிப்பாட்டி போட்டுதுகள். அது தான் சரி அப்படித் தான் செய்ய வேணும்.

ஒரு நாள் ஒரு நேயர் வந்து காட்டிலே சிங்கம், புலி எல்லாம் இருக்கும் போது ஏன் சிங்கத்தை காட்டு ராஜா எனக் கூறுகிறார்கள்? என்ற கேள்வியைக் கேட்டார்.

புலிக்கு புத்தி இல்லை அதனால் தான் சிங்கத்தை காட்டு ராஜா எனக் கூறுகிறார்கள் எனப் பதில் அளித்தார் காரைக்குமரன்.

சிங்கம் எப்பொழுதும் காட்டுக்குள் நடந்து செல்லும் போது, தான் நடந்து வந்த பாதையை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்க்குமாம். அதால தான் சிங்கத்தை காட்டு ராஜா எனக் கூறுகிறார்கள் என கேள்வி கேட்ட நேயரே பதிலையும் சொன்னார்.

நீங்க சொல்லத் தான் எனக்கு மற்றொரு நேயரின் கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் அவர் பட்ட அவஸ்த்தை ஞாபகத்துக்கு வருகுது. கேள்வி நேர நிகழ்ச்சியின் போது ஒரு கேள்வியைக் கேட்ட நேயருக்கு இந்த வித்துவானின் பதில் திருப்தி அளிக்காததினால் சரியான பதிலைப் பெறும் வரை அவர் திரும்பத் திரும்ப வெவ்வேறு கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார்.

ஆனால் சரியான பதிலைக் கொடுக்க முடியாததினால் என்ன மற்ற நேயர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவிடாமல் நீங்களே அதிக நேரத்தை எடுக்கிறீர்கள் எனக்கூறி முற்றுப் புள்ளி வைத்தார் காரைக்குமரன்.

அதன் பின்னர் பிற நேயர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்காது அது வந்து. . .எப்படி என்றால் . . .ம். . ம். . ம். . என அறிவிப்பாளர் காரைக்குமரனே உருப்படியாக எதையுமே கூறாது நேரத்தை இழுத்தடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது அதே நேயர் திரும்பவும் தொடர்பில் வந்து என்ன நான் அதிக நேரம் பேசிக் கொண்டிருப்பதாகக் கூறிய நீங்களே இப்போ அதிக நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் எனக் கேட்டார்.

அதற்கு, இது எனது றேடியோ. நான் எவ்வளவு நேரத்தையும் எடுப்பன் எனக்கூறி தனது அறிவீனத்தை ஒலிபரப்பிக் கொண்டார் காரைக்குமரன்.

அது தானே நீயே இப்படிச் சொல்லுகிறாய். அப்படி முட்டாள் தனமான பதில்களைக் கூறி தனது அறிவின்மையைப் பறைசாற்றிக் கொள்ளும் இவனுக்கு குடும்பத்தைப் பிரிந்திருப் போரைப் பற்றி விமர்சிக்க என்ன தகுதி இருக்கிறது? என்றார் நடராசர்.

அதுமாத்திரமில்லை, ஏதாவதொரு துறையில அனுபவம் உள்ளவர்களை பேட்டி காணும் போது அவர்களிடம் சுருக்கமாக கேள்விகளைக் கேட்டு அதற்கு அவர்களை விரிவான பதில்களை அளிக்க விடாது தானே அவர்களது துறையில் அனுவபம் உள்ளவரைப் போன்று அலட்டிக் கொண்டிருப்பார். அதைப் பொறுக்க முடியாத நேயர்கள் றேடியோவை ஓவ்பண்ணி விடுவதாக என்னிடம் கூறியிருக்கினம்.

செய்திகளை வாசிக்கும் போதுகூட வசனத்துக்கு வசனம் நிறுத்தி முறையாக வாசிக்காது கல் றோட்டில் வண்டில் போனது போலவும், மூத்திரத்தை அடக்கிக் கொண்டிருப்பவன் போலவும் அவதி அவதியாக அதுவும் இரட்டைக் குரலில் வாசித்து முடிக்கும் இவனுக்கு குடும்பம் நடத்துவதைப் பற்றி என்ன தெரியும்? இரண்டு கைகளும் இணைந்து தட்டினால் தானே சத்தம் வரும். அதைப் போலவே கணவனும் மனைவியும் ஒரே கொள்கையோடு ஒற்றுமையாக வாழ்ந்தால் தானே குடும்பம் சிறக்கும்.

பொய், களவு செய்யாத தனது கணவனின் நேர்மையைப் புரிந்து கொள்ளாது அவர் உழைக்கிறது எல்லாத்தையும் தன்ர சகோதரிமாருக்கு கொடுக்கிறார் என சந்தேகப்பட்டு அவரோடு அடிக்கடி வாக்குவாதப்பட்டு வீட்டையே அல்லோல கல்லோலப் படுத்துகிற மனைவியோடு எப்படி ஒத்து வாழ முடியும்?

“சந்தேகப் புயல் எழுந்தால் வாழ்வில் சந்தோஷப் பூ உதிரும்” எண்டு சினிமாப் பாட்டில கூட எவ்வளவு அர்த்த புஷ்டியாகப் பாடி இருக்கிறாங்க.

கனடாவில் கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்று உழைத்தால் தான் குடும்பத்தை ஒழுங்காக ஓட்ட முடியும். ஆனால் தான் வேலைக்குச் செல்லாது வீட்டுக்குள் கிடந்து கொண்டு, மோட்கேஜ், இன்சூரன்ஸ் செலவுகளை சமாளிப்பதற்காக ஒன்றுக்கு இரண்டு வேலைகளுக்குச் செல்லும் கணவனுக்கு சாப்பாடு கூட செய்து வைக்காது தானும் பிள்ளைகளும் சாப்பிட்டு விட்டு படுக்கும் மனைவியோடு எப்படி வாழ முடியும் என்பது இவனுக்கு எங்கே புரியப் போகிறது?

அனுபவப்பட்டால் தானே புரியும்.

அது சரி தான் நடராசா. தவறு செய்யாத ஒருவரை செய்ததாகக் குற்றஞ் சாட்டும் போது அவருக்கு எவ்வளவு தூரம் ஆத்திரம் வரும் என்பதை "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்ற பழமொழி எடுத்துக் காட்டுது. கணவனோடு மனம்விட்டுப் பேசாது, நடக்காத ஒன்றை நடந்ததாகக் கற்பனை பண்ணிக் கொண்டு விதண்டா வாதம் செய்யும் மனைவியுடன் இருந்து குடும்பத்தை போர்க்களமாக விரும்பாத கணவன் ஒதுங்கி வாழ்வதுதான் சரி.

அதுதானே ஆத்திரத்தில நாங்க மனைவியில கைவைச்சாப் போதும். இங்கத்த சட்டப்படி எங்களைக் கொண்டு போய் உள்ள போட்டிடுவாங்க. பொஞ்சாதிக்கும் சரி பிள்ளைக்கும் சரி இஞ்ச புருசன்மார் கைவைக்க ஏலாது. ஏன் வில்லங்கத்தை விலைக்கு வாங்குவான் என்பதற்காக ஒருவர் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்தால் அதற்கான உண்மைக் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாத இவனெல்லாம் ஒரு அறிவிப்பாளனா? அல்லது அறிவிலிப்பாளனா?

ஊரில் இருக்கும் போது தமது கணவன்மாரின் உழைப்பிலேயே முற்று முழுதாகத் தங்கி யிருந்தோர் கணவன்மார் பேசினாலும், அடித்தாலும் இரவு படுக்கைக்குப் போனதும் அனைத்தையுமே மறந்து விடுவினம். ஆனால் இங்கு கனடாவில் கணவனைப் பிரிந்து வாழும் "சிங்கிள் மதேர்ஸ்" மாருக்கும் பிள்ளைகளுக்கும் அரசாங்கம் மாதம் மாதம் சுளையாக பணம் வழங்கி வருவதனால் அநேகமான மனைவிமார்கள் தமிழ்க் கலாச்சாரத்தையும் கண வன்மாரையும் மதிக்காமல் அவர்களோடு வேணுமெண்டே மல்லுக்கட்டி பிரிந்து சென்று "சிங்கிள் மதர்" களாக வாழ்ந்து கொண்டிருக்கினம்.

அதனால் மனைவியை விட்டுப் பிரிந்திருப்பவர்கள் எல்லோரும் இவன் கூறுவது போல் முட்டாள்கள் என்றால் சந்திரமதியைப் பிரிந்திருந்த அரிச்சந்திரன், சீதையைப் பிரிந்திருந்த இராமர், டயானாவை விட்டுப் பிரிந்திருந்து கமீலாவை மறுமணம் செய்து கொண்ட மகாராணியின் முதலாவது மகன் சாள்ஸ் மனைவி பேர்குசனைப் பிரிந்திருக்கும் இரண்டாவது மகன் அன்ட்றூ, ஏன் இங்கு கனடாவில் ஒன்ராறியோ மாகாண முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போதே தனது மனைவியை விட்டுப் பிரிந்த மைக் ஹரிஸ் ஆகிய எல்லோருமே முட்டாள்களா?

உண்மை நிலை இதுவாக இருக்க இந்தப்பேய் பெண்களுக்காக இரங்குவதேன்? இவ்வாறு இரங்கா விட்டால் தானும் தனிக்கட்டையாகி விடுவேனோ என்ற அச்சம் போலிருக்கிறது என்றார் நடராசர்.

வானொலியில் தரமுள்ள நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்காமல் சும்மா நேயர் நிகழ்ச்சி, முதியோர் நிகழ்ச்சி, நாடும் நடப்பும் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் நேயர்களோடு தொலை பேசியில் அலட்டும் நேரடி நிகழ்ச்சிகளையும், அம்பாள் தன்னுடன் நேரடியாகப் பேசுவதாகக்கூறும் குருக்களின் அப்பட்டமான பொய்களை தனது வருமானத்துக்காக விளம்பரமாக ஒலிபரப்பியும், அவரது ஆலயத்தின் நேரடி வர்ணனைகளையும் ஒலிபரப்பியும் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறான் எனத் திட்டினார் நடராசர்.

வேலை வெட்டி இல்லாமல் வீட்டோடு கிடக்கும் வயசு போன பெண்களே பொழுதுபோக்கிற்காக இலவச தொலைபேசியில் அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு காரைக்குமரனைப் பெரிய அறிவாளியெனப் போற்றி, அவரது பிறந்த நாளையும் அவரது குடும்பத்தினரின் பிறந்த நாட்களையும் ஞாபகத்தில் வைத்திருந்து பிறந்த நாள் வாழ்த்தும் கூறி அறுத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் வயோதிப வயதை அடைந்துவிட்ட போதிலும் வேலைக்குப் போய்வரும் நடராசரோ அந்நிகழ்ச்சிகளை செவிமடுப்பதே கிடையாது.

ஆனால் ஸ்ரீலங்காவில் உள்ள உடன்பிறப்புகளுக்கு என்ன நடக்கிறது என்பதனைத் தெரிந்து கொள்வதற்காக செய்தியை மாத்திரம் கேட்டுக் கொள்வது வழக்கம்.

அதைக் கூட ஒழுங்காகக் கேட்க முடியாமல் காரைக்குமரனிடம் வாங்கிய றேடியோவும் அவரைப் போலவே எப்பவும் கிர்.. கிர்... என இரைஞ்சு கொண்டே இருக்கும். றேடியோவுக்கு அருகே அவர் நிற்கும் வரை வடிவாகக் கேட்கும்.

அவர் அவ்விடத்தை விட்டு சற்று விலகியதும் தாயைப் பிரியும் குழந்தையைப் போல் அது மீண்டும் கிர்..கிர்..என இரையத் தொடங்கிவிடும்.

ஈழமண்ணை விட்டு புலம் பெயரும் போதே தமது பண்பாடு, கலாச்சாரம் அனைத்தையும் கைவிட்டு வந்து தாங்கள் தான் கனடாவின் ஆதிவாசிகள் என்ற நினைப்பில் தலைக்கனம் பிடித்து அலையும் அறிவிலிகளின் கொட்டத்தினை அடக்க வேண்டும்.

புலம் பெயர் நாடுகளில் தமிழும், தமிழ் கலாச்சாரமும் அழிந்து விடாது தொடர்ந்தும் பாவனையில் நிலைத் திருக்கச் செய்வதற்கு இந்த அறிவிலிகளை புறந்தள்ளி விட்டு தற்போது ஒதுங்கி இருக்கும் அறிவாளிகள், மொழிப் பற்றாளர்கள், எழுத்தாளர்கள் முன்வந்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அறிவாளிகள் ஒதுங்கி இருப்பதால் அறிவிலிகள் பேயாட்டம் ஆடுதுகள் எனக்கூறி தனது ஆத்திரத்தினை அடக்கிக் கொண்டார் அறிவாளியும் எழுத்தாளருமான நடராசர்.

(moorthy.sella@amd.com)

# அமீருக்கு இரண்டு கேக்

கார்த்திகேசு - மலேசியா



"அப்பா, அமீருக்கு கேக் குடுக்காதீங்க!" என்றாள் மல்லி.

மல்லிக்குப் பிறந்த நாள் வந்திருந்தது. மூன்று வயது நிறைந்து நாலாம் வயதிற்குப் போகும் நாள். மல்லியைப் பொறுத்த வரையில் அது ஒரு மாபெரும் வளர்ச்சி.

இன்று காலை முதலே தன் பிறந்த நாள் பிரதாபங்கள் வீட்டில் அல்லோலகல்லோலப்பட்டன. மல்லியின் முதல் மகிழ்ச்சி தான் நான்கு வயது எல்லையை வெற்றிகரமாக அடைந்துவிட்ட வேளையில் அமீர் அவளுடைய பாலர் பள்ளி சகா மற்றும் தலையாய பகைவன் இன்னும் அதனை அடையவில்லை என்பது.

"அமீருக்கு இன்னும் நாலாவது பெர்த்டே வரல! இன்னும் ரெண்டு மாசம் இருக்கு!"

பிறந்த நாள் ஒரு வார மத்தியில் வந்ததால் மல்லியின் பெற்றோர்களுக்கு அதனை நண்பர்களின் குடும்பங்களை அழைத்துக் கொண்டாட முடியவில்லை.

அநேகமாக வார இறுதியில் பலூன்களுடன் கூடிய ஒரு விழா இருக்கும். ஆனால் பிறந்த நாளான இன்று பெற்றோர்கள் வேலையிலிருந்து அரைநாள் விடுமுறை எடுத்துக்கொண்டு காலையில் மல்லியைக் கோயிலுக்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் மல்லியின் பாலர் பள்ளிக்குச் சென்று அங்கு கேக் வெட்டி கொண்டாடுவதாக ஏற்பாடு.

கோயிலுக்குப் போகும் மகிழ்ச்சியை விட பள்ளிக்குப் போகும் மகிழ்ச்சிதான் மல்லிக்கு அதிகமாக இருந்தது. கோயிலில் அவள் அம்மா பூசிவிட்ட கீற்றுத் திருநீறும் சின்ன சந்தனப் பொட்டும் மல்லிக்கு அழகாக இருந்தன. புதுச் சட்டையெல்லாம் வாங்கி வைத்திருந்தாலும் பள்ளிக்கூட நாளாதலால் வழக்கமான பள்ளிச்சீருடையையே அணிவித்திருந்தார்கள்.

'சீக்ரெட் ரெசிப்பி'யில் வாங்கியிருந்த விலையுயர்ந்த கேக் பெட்டியில் இருந்தது. சீக்ரெட் ரெசிப்பியின் கேக்குக்குத் தனி ருசி உண்டு. ஆனால் அதற்கான விலையும் கொடுக்க வேண்டும். கேக்கில் சுற்றிலும் தென்னங்கீற்றுத் தோரணங்கள் போல அமைத்திருந்தார்கள். நீளப் பாவாடை அணிந்த பெண்ணின் படம் போட்டிருந்தார்கள். எல்லாம் மல்லியின் அம்மா கொடுத்த மாதிரிப் படத்தைப் பார்த்துக் கேக்கை அணி செய்யும் சீனப் பெண் ஐசிங்கொண்டு வரைந்தது. பாவாடை இந்தியத்தனமாக இருந்தாலும் உப்பிய சிவப்புப்பூச்சுடைய கன்னங்களுடனான முகமும் (நெற்றியில் ஒரு பொட்டு இருந்தாலும்) மேல்நோக்கி ஏறி இறங்கும் இரட்டைச் சடையும் சீனர்கள் சாயலில் இருந்தன. சரிதான். இப்படியெல்லாம் இருப்பதால்தான் இது மலேசியா.

மல்லியின் விருப்பத்துக்கு விட்டிருந்தால் கேக்கில் சூப்பர்மேன், ஸ்பைடர்மேன், பென்டென் இப்படி ஏதாவது நவீன கார்ட்டூன் ஹீரோக்களைத்தான் கேட்டிருப்பாள்.

அவற்றையெல்லாம் நட்பான வழிகளில் தட்டிக் கழித்துவிட்டு கேக்கில் இந்தியத் தன்மையைக் கொண்டு வந்தது அவள் அம்மா - என் மருமகள்.

வாழ்க்கையும் சடங்குகளும் எவ்வளவுதான் நவீனமாக ஆகிவிட்டாலும் முடிந்த அளவு அவற்றில் இந்தியத் தன்மைகளை நுழைக்க வேண்டும் என்பது அவரின் கொள்கை. என் மகன் எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுக்கும் ஆள். அந்தக் குணம் என்னிடமிருந்து வந்ததுதான் என்பதும் எனக்குத் தெரியும்.

இந்தக் கேக்கைத்தான் பள்ளியில் வைத்து வெட்ட வேண்டும். நான்கு அழகிய திருகிய குட்டி மெழுகுவர்த்திகளும் வெட்டுவதற்கு ஒரு பிளாஸ்டிக் கத்தியும் கேக் பெட்டிக்குள்ளேயே வைக்கப் பட்டிருந்தன. அதற்குத்தான் இப்போது மகனின் காரில் சென்று கொண்டிருந்தோம். எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுக்க நொறுங்குதீனிப் பலகாரங்களும் விளையாட்டுப் பொருள்களும் அடங்கிய சிறிய பைகள் ஏற்கனவே தயாரிக்கப் பட்டிருந்தன.

இந்தப் பிறந்த நாள் அன்று மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து ஊதி அணைக்கும் வழக்கம் இந்தியத் தன்மைக்கு ஏற்றதல்ல என்ற எண்ணம் எனக்கு என்றும் உண்டு. வாழ்க்கை விளங்க விளக்கை ஏற்றுவதுதான் நமது பண்பு. அணைப்பதல்ல. ஆனால் எத்தனையோ அன்றாட வாழ்க்கைப் பண்புகளை மேற்கத்திய அல்லது உலகளாவியப் பண்புகளாக ஏற்றுக் கொண்டோம். அதிலும் பல இனப் பிள்ளைகள் படிக்கும் இந்த பாலர் பள்ளியிலும் இந்தப் பிறந்த நாள் சடங்கு ஓர் அச்சில் வார்க்கப்பட்ட சடங்காகத்தான் இருக்க முடியும். மெழுகுவர்த்தியைப் பிள்ளை ஊதி அணைக்கும் தருணம்தான் பிள்ளைகள் கெக்கலித்துக் கைதட்டும் தருணம். அதை மாற்றினால் குழந்தைகள் குழப்பமடைவார்கள். ஆகவே இங்கே தமிழ்ப் புனிதத்தைத் தியாகம் செய்தே ஆகவேண்டும்.

மல்லியின் கேக் வெட்டிக் கொண்டாடும் சடங்குக்கு மல்லியின் தாத்தாவான என்னையும் அழைத்தார்கள் மகனும் மருமகளும். எனக்கும் ஆசைதான். சின்னப் பிள்ளைகளுடன் இருப்பது அவர்கள் கொண்டாட்டத்தைப் பார்த்து மகிழ்வது என்னையும் இளமைக் காலத்துக்குக் கொண்டு செல்லும்.

ஆனால் என் காலத்தில் இதெல்லாம் ஏது? பிறந்த நாளைக்கு அப்பா ஒரு சட்டை வாங்கிக் கொடுப்பார். வீட்டில் அம்மா வடை சுட்டுப் பாயசம் செய்வார்.

அடைபட்டுக் கிடக்கும் காரின் கண்ணாடிக்கு வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இந்த வயதில் என்றோ இறந்து மறந்தும் போன என் பெற்றோரின் நினைவு வந்தது ஏதோ காலப் பொருத்தமில்லாத விஷயம் போல் தோன்றியது. அவர்கள் காலம் என் இளமைக் காலம் எங்கே? இப்போதைய காலம் எங்கே!

தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறிய என் தாத்தாவின் மூன்றாம் தலைமுறை வாரிசாக மலேசியாவிலேயே பிறந்த எனக்கு ஒரு மலாய்க்கார கம்பம்தான் பூர்வீகக் கிராமம். மண்ணெண்ணெய் விளக்கில் படித்த காலம், அப்பாவும் சரி, வாத்தியாரும் சரி கண்டிப்பான, இறுக்கமான முகத்தோடும் பிரம்போடும் திரிந்த காலம். பள்ளிக்கூடத்திற்குச் செம்மண்பாதையில் நடந்தும் சைக்கிளிலும் சென்ற காலம். கம்பத்து ஆற்றில் நீந்தி, அங்குள்ள கற்களுக்கு அடியே கிடந்த சிறிய ஊடான்களையும் பிடித்த காலம். சண்டை மீன்களைப் பிடித்து பாட்டிலில் அடைத்து நண்பனின் சண்டை மீனோடு சண்டை போடத் தூண்டிய காலம்.

கம்பத்தில் மலாயும் தமிழும்தான் யார் வாயிலும். ஆங்கிலம் பேசுவோர் யாருமில்லை. ஆகவே நாங்கள் ஒரு மலாய்ப் பூச்சுடன் கூடிய தமிழ்த் தனத்தோடுதான் வளர்ந்தோம். மாதத்துக்கு இரண்டு கருப்பு வெள்ளைத் தமிழ்ப் படங்கள் பார்க்கக் கருப்பு மார்க்கெட்டில் அடிதடி. பாகவதரின் "அன்னையும் தந்தையும்தானே..." ரேடியோவில் ஒலிக்காத நாளில்லை. அண்ணனோடு சேர்ந்து கொண்டு "வதனமே சந்திர பிம்பமோ!" உச்சக் குரலில் பாடியது. அண்ணன்.... ஹூம்!

எங்கே இருக்கிறது அந்த உலகம்? இப்போது செத்துப் போன மீனாக மனதுக்குள் மிதக்கிறது. அடுக்குமாடி வீட்டு வாழ்க்கை, கார், குளிர் சாதனப் பெட்டியால் பதப்படுத்தப்பட்ட அறையின் சொகுசு, கணினி, எல்லாவற்றையும் காசு கொடுத்து வாங்க முடிகின்ற சுகம்! பிறந்த நாளுக்குக் கேக்கும் மெழுகுவர்த்தியும் "ஹேப்பி பர்த்டே" பாடலும்!

எல்லாம் நல்லதுதான். வளர்ச்சிதான். ஆனால் மனம் என்னவோ பழையதற்கு ஏங்குகிறது!

ஆனால் வெறும், அர்த்தமில்லாத ஏக்கம்தான். பத்தாண்டுகளுக்கு முன் ஏதோ ஒரு உந்துதலில் என் பிறந்த ஊருக்குப் போனேன். ஊர் கொஞ்சம் பாழடைந்து போனது போல இருந்தது. நான் அறிந்ததை விடச் சிறிதாக இருந்தது. தெரிந்த முகங்கள் ஏதும் இல்லை. இருந்தாலும் உருத்தெரியாமல் மாறியிருக்கலாம். யாரையும் எதையும் விசாரிக்க மனமும் இல்லை. கொஞ்ச நேரம் காரை விட்டிறங்கி தரை காலில் பட நடந்து மனம் ஏங்கிப் போக விருட்டென்று திரும்பி விட்டேன்.

தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள். ‘பிறந்த ஊருக்கு யாரும் திரும்பப் போக முடியாது’.

இப்படியான எண்ணங்கள் மனதில் அலைமோதப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போதுதான் மல்லி சொன்னாள், “அப்பா, அமீருக்கு கேக் குடுக்காதீங்க!”

“ஏம்மா? ஏன் அமீருக்கு மாத்திரம் கேக் குடுக்கக் கூடாது?” என்று கேட்டார் மல்லியின் அப்பா.

“அவன் என்ன எப்ப பாத்தாலும் அடிக்கிறான் அப்பா!” என்றாள் மல்லி. ஒரு பிறந்த நாளின் போது குழந்தை சொல்லும் இந்தக் குறைபாடு பெற்றோர்களுக்கு மனதில் வலித்திருக்க வேண்டும்.

"அப்படியா! இத்தன நாள் நீ சொல்லவே இல்லியே!" என்றார் அம்மா.

நான் குறுக்கிட்டேன். மல்லியை பாலர் பள்ளியில் கொண்டு விடுவதும் பள்ளி முடிந்துத் திரும்பக் கொண்டு வருவதும் என் அன்றாடப் பணியாதலால், அவள் பள்ளிக்கூட வாழ்க்கை பற்றி அவர்களைவிட எனக்குக் கொஞ்சம் அதிகமாகவே தெரியும். "என் கிட்ட சில தடவ சொல்லியிருக்கும்மா! அது ஏதோ விளையாட்டுன்னு விட்டுட்டேன்!.

"அப்படி விடக் கூடாதப்பா! சிறு வயதில இந்த குழந்தைகள் பிற முரட்டுக் குழந்தைகளால கொடுமைப்படுத்தப்பட்டா அதனால் நீண்ட கால தாக்கம் ஏற்படலாம். நல்ல வேளை இப்ப சொன்னிச்சி. டீச்சர்கிட்ட பேசுவோம்" என்றார் என் மகன்.

அதுவும் சரிதான் என நினைத்துக் கொண்டேன்.

*

கேக்குடன் பள்ளிக்கூடத்தில் நாங்கள் நுழைந்ததும் பள்ளி கலகலத்தது. அது ஒரு முப்பது நாற்பது பிள்ளைகள் மட்டுமே படிக்கக்கூடிய சிறிய பள்ளிக்கூடம்தான். பல்கலைக் கழகத்துக்குப் பக்கத்தில் இருந்ததால் விரிவுரையாளர்களின் பிள்ளைகள் அதிகம் இருந்தார்கள். சீன, மலாய், இந்தியப் பிள்ளைகளின் கூட்டுக் கலவை.

அதோடு அங்கு வெளிநாடுகளிலிருந்து மேல்பட்டப் படிப்பு படிக்க வந்துள்ள மாணவர்களின் குழந்தைகளும் அங்கு இருந்தார்கள். பெரும்பாலும் ஆப்பிரிக்க, மத்தியகிழக்கு மாணவர்கள்.

ஆசிரியை அவர்களை ஓரறைக்குள் கூட்டினார். நெற்கதிர்களை நாடிவரும் குருவிகளைப் போல கீச்சுகீச்சுத்துக்கொண்டே பிள்ளைகள் வந்து கூடினார்கள். ஒரு தாழ்வான மேசையில் ஆசிரியை கேக்கைத் திறந்து வைத்தார். கேக்கில் பாவாடையுடனும் பொட்டுடனுமான பெண்ணின் உருவம் பிள்ளைகளைக் கெக்கலிக்க வைத்தது. “ஹே, சீ மல்லி சோ ஃபன்னி!” என்று ஒரு பையன் கூவினான். எல்லாரும் சிரித்தார்கள். மல்லி அதை ஒன்றும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஆசிரியையின் துணையுடன் மருமகள் மெழுகுவர்த்திகளைக் கொளுத்த மகனின் கேமரா படம் எடுக்கத் தயாரானது. மல்லியைச் சுற்றி நின்ற பிள்ளைகள் ஹேப்பி பர்த்டே பாட நானும் அதில் உற்சாகமாகக் கலந்து கொண்டேன்.

மல்லி சமர்த்தாக மெழுகுவர்த்திகளை ஊதி அணைத்தாள். பிள்ளைகள் கைதட்டிச் சிரித்தார்கள். பின் மல்லி தன் அம்மாவின் துணையுடன் கேக் துண்டை வெட்டியவுடன் அம்மா முதல் துண்டை மல்லிக்கே ஊட்டினார். பின் மல்லி அம்மாவுக்கு ஊட்டி, அப்பாவுக்கு ஊட்டி, எனக்கும் ஊட்டியவுடன் ஆசிரியை கேக்கைச் சிறிய துண்டுகளாக வெட்டி காகிதத் தட்டைகளில் எல்லாப் பிள்ளைகளுக்கும் விநியோகித்தார்.

சில பிள்ளைகள் நளினமாகவும் நாகரிகமாகவும் சாப்பிட சிலர் வாயில் அப்பியும் சாப்பிட்டார்கள்.

எல்லாக் குழந்தைகளின் உதடுகளிலும் சில பிள்ளைகளுக்கு மூக்கிலும் கூடக் கேக் துகள்கள் ஒட்டியிருந்தன. ஆசிரியை டிஸ்யூ எடுத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் அன்போடு துடைத்துவிட்டார்.

பலகாரப் பொட்டலங்களை மல்லி ஒவ்வொருவருக்காக வழங்க ஆசிரியை அந்தப் பொட்டலங்களைப் பிள்ளைகளின் புத்தகப் பைக்குள் வைக்க உதவினார். அமளி கொஞ்சம் குறைந்ததும் மல்லியின் அப்பா மல்லியின் வகுப்பாசிரியரிடம் சென்று தணிந்த குரலில் கேட்டார். "அமீர் என்பது யார் டீச்சர்?"

ஆசிரியை அறையின் மூலையில் உட்கார்ந்திருந்த பையனைச் சுட்டிக் காட்டினார். நானும் பார்த்தேன். என்னை முதலில் வந்து தாக்கியது பையனின் உருவ அளவு. மல்லியின் தோளுக்குக் கூட வரமாட்டான். சிறிய ஒடுங்கிய உருவம். இரண்டாவதாக என்னைத் தாக்கியது அவனது நிறம். இப்படி ஒரு கருப்பு இருக்கிறதா? தொட்டால் ஒட்டிக் கொள்வது போன்ற கருப்பு. கொஞ்சமும் பளபளக்காத கருப்பு. தலைமுடி சுருள்சுருளாக இருந்தது. ஆப்பிரிக்க இனத்தின் அப்பட்டமான அடையாளங்கள் அனைத்தும் இருந்தன.

மல்லி இவனைப் பற்றி என்னிடம் குறை கூறும்போதெல்லாம் இவன் ஒரு தடித்த, உயரமான முரட்டுப் பையனாக இருக்க வேண்டும் என்ற தோற்றமே எனக்கு உண்டானது. இவனுடைய நிறம் பற்றியோ உருவம் பற்றியோ மல்லி ஒரு நாளும் என்னிடம் சொன்னதில்லை. குழந்தைகளுக்கு மற்ற குழந்தைகள் தங்களைப் போன்ற குழந்தைகளாகத் தெரிகிறார்களே தவிர அவர்களுடைய நிற அளவு வேறுபாடுகள் கண்ணுக்குப் பட்டாலும் கருத்துக்குப் படுவதில்லை. காலப் போக்கில் நாம்தான் இந்த வேறுபாடுகளைக் கற்றுக் கொடுக்கிறோம் போலும்.

இந்த நோஞ்சான் பையனா மல்லியைக் கொடுமைப்படுத்துகிறான்? நம்புவது கொஞ்சம் சிரமமாகவே இருந்தது.

"அமீரின் பெற்றோர்கள் சூடான் நாட்டைச் சேர்ந்தவர்கள். அவனது அப்பா இங்கு பி.எச்டி. பண்ணிக்கொண்டிருக்கிறார். ஏன் கேட்கிறீர்கள்?" என்று ஆசிரியை கேட்டார்.

“அவன் மல்லியைக் கொடுமைப்படுத்துவதாக மல்லி கூறுகிறாள். உங்களுக்குத் தெரியுமா?” ஆசிரியை கொஞ்சம் தயங்கிப் பேசினார். “அமீர் கொஞ்சம் மூளை வளர்ச்சி குறைந்த பையன். சாதுவான குணம். பெரும்பாலும் தனித்திருக்க விரும்பும் பிள்ளை!”

எங்களுக்கெல்லாம் இந்த வருணனை ஆச்சரியமானதாக இருந்தது. “அப்படியானால் அவன் மல்லியைக் கொடுமைப் படுத்துகிறான் என்று சொல்வது...?” என்று மகன்கேட்டார்.

“அவன் தனியாக இருக்கவே விரும்புவான். அவன் அப்படியே இருப்பது நல்லதில்லை. நாங்கள்தான் பிற குழந்தைகளை அனுப்பி சேர்ந்து விளையாட அவனை அழைப்போம். சில குழந்தைகள் அவனை அன்பாக அழைப்பதுண்டு. சில பிள்ளைகள் முரட்டுத் தனமாகக் கையைப் பிடித்து இழுப்பதும் உண்டு. அப்படி யாராவது முரட்டுத் தனமாக அவனை இழுத்தால் அவனுக்குக் கடுமையான கோபம் வரும். வெறிகொண்டு தாக்குவான். நாங்கள் போய் சமாதானம் செய்து அழைத்து வருவோம்!”

மகன் கொஞ்சம் வாயடைத்து நின்றது போலத்தான் நானும் நின்றேன். பின் நான் கேட்டேன் “மல்லியை ஏன் அவன் குறிப்பாகக் கொடுமைப்படுத்த வேண்டும்?”

“அப்படி ஒன்றும் இல்லை சார். அவனுடைய பலவீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு அவனைச் சீண்டும் பிள்ளைகளில் மல்லியும் ஒன்று. அப்படிப்பட்ட வேளைகளில் அமீர் எதிர்த்துப் போரிடுவதுண்டு. சண்டைக்கு அதுதான் காரணம். ஆனால் எல்லாம் சிறுபிள்ளை விளையாட்டுக்கள்தான். நாங்கள் நுணுக்கமாகக் கவனித்துக் கொண்டே இருப்போம். அமீரிடம் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எல்லாப் பிள்ளைகளுக்கும் போதித்துத்தான் வருகிறோம்!”

வீட்டுக்குக் காரில் திரும்பிக் கொண்டிருந்த பொழுது அமீருக்குத்தான் இரண்டு பங்கு கேக் கொடுக்க வேண்டும் என்ற பாடத்தை நாங்களும் மல்லிக்குப் போதிக்க வேண்டியது அவசியம் என்ற எண்ணமே எனக்கு உச்சத்தில் இருந்தது.

(karthigesur@gmail.com)

# வள்ளி ஆச்சி செத்துப்போனா

குப்பிளான்
ரவிஜன்
இந்தியா



அந்த செய்தி எல்லா இடமும் கொண்டுலாத்தப்பட்டது.

வயது போனால் சாகத்தானே வேணும்.....

வளைஞ்சு கால் அகட்டி நடக்கும் அந்த கிழவியா? இழுக்காமல் போய் விட்டது...... மனிசி கடைசி வரைக்கும் தன் வேலையை தானே செய்தது... அண்டைக்கு கூட நல்ல மாதிரித்தான் பேசினது. அங்கொன்றும் இங்கொன்றுமாக கொஞ்சப் பேர் சேர்ந்துட்டினம். பிரேதம் இன்றைக்கு எடுத்து விடுவார்கள்.......? சல சல என பெண்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள். . . .சாரயம் எடுத்து வந்து கிழவியின் உடம்பெல்லாம் பூசினார்கள்.

எந்த சலனமும் இல்லாமல் ஒரு ஓரமாய் குந்தியிருந்தார் சுந்தரம் கிழவன் வள்ளியாச்சியின் புருசன்.

இந்த கிழவனிடம் இருந்து அந்த கிழவி தப்பிவிட்டார்.

என்ன வீராப்பு! போன கிழமை கூட அடிக்க போய்விட்டார்... அங்காலை இங்காலை கிழவி போகக்கூடாது...

வள்ளி ... வள்ளி என்று உயிரை எடுப்பார்...

அந்த நாள் தொடக்கம் இந்த நாள் வரை கிழவிக்கு கஷ்டம் தான். சோத்திலே கொஞ்சம் உப்பு கூடினாலே சுந்தரம் கிழவனுக்கு மூக்கு நுனியில் கோபம் வரும்.

சுந்தரம் கிழவனுக்கு எண்பது வயசாகிவிட்டது... நல்லாய் காது கேட்கும் .... ஆனால் யார் சொல்வதையும் கேட்பதில்லை என கங்கணம் கட்டி அலைகின்றார்.

வெள்ளை கிப்ஸ் சாரம் தான் சுந்தரம் கிழவனுக்கு எப்போதும். இந்த வயதிலும் வள்ளியாச்சி தனக்கு ஏலாட்டிலும் முக்கி முக்கி தோய்ச்சு கிழவனுக்கு வெள்ளே வெளிரென கட்ட கொடுப்பார். வடிவாய் தோச்சு குடுக்காவிட்டால் அடிச்சுடுமோ மனுசன் என்ற பயமாக கூட இருக்கலாம்.

இரண்டு ஆண்பிள்ளைகள். ஒரு பெண். மூத்தவன் குடும்பத்தோடு கொழும்பில் இளையவன் லண்டனில்.... நடுவில் பெடிச்சி தான் விரும்பிவனைக் கட்டி பிள்ளைகளுடன் மருதனாமடத்தில். . ..இளையவன் மனிசி பிள்ளைகளோடுதான் திருச்சியில் கிழவனும் கிழவியும் இருக்கினம். மருமகளோடு கிழவன் பேசுவதில்லை.....ஏன் என்று கிழவன் யாருக்கும் சொன்னதும் இல்லை..

இன்றைக்கு கிழவி செத்துட்டாள்...கிழவன் திமிர் அடங்கி விடும். நடக்க கூட முடியாத கிழவி .... ஏலாமல் இருந்தால் கூட கக்கூசுக்கு கூட கிழவனுக்கு தண்ணி எடுத்து வைக்கவேண்டும். முந்த நாள் காய்ச்சல் என்று ஆஸ்பத்திரிக்கு போக முன்பும் வள்ளியாச்சி கிழவனுக்கு சமைச்சு வைச்சுட்டுதான் போச்சுது.

"இஞ்சை பாருங்கோ அங்காலை இங்காலை போகதிங்கோ...வந்துடுவேன் சும்மா ஆட்களோடு ஏறிப்பாயாதிங்கோ.

சாப்பாடு கோப்பைக்குள்ளே போட்டு வைச்சிருக்ககேன் எடுத்து சாப்பிடுங்கோ. பின்னேரத்துக்குள்ளே வந்துடுவேன்" கிழவி சொன்னவுடன் கிழவனுக்கு மூக்கிலே கோபம் வந்துவிட்டது.

"மகராணி ஆளப்போறேன் புருசனை கவட்டுக்கை வையுங்கோ"

எப்போதும் பழமொழிதான். கிழவனுக்கு நக்கல், நாலாந்தர பேச்சு, திமிர் கிழவிக்கு பழகிவிட்டது.

அறுபது வருட குடும்ப வாழ்க்கையை கிழவி எப்படி கொண்டிழுத்ததோ......

கிழவிக்கு எழுபத்தியந்து வயதாம் .... எழுபத்தியஞ்சு வருட அநுபவம் சலனமற்று கிடந்தது.

கிழவன் எங்கேயோ வெறிச்சு பார்த்தபடி இருந்தார்.

தனக்காக வாழ்ந்தவள் என்று ஒரு சொட்டு கண்ணீர்.....

ம்.........ம். . . சும்மா ஊருக்காவது ஒரு சொட்டு கண்ணீர்...

அப்படி அழுதாலாவது கிழவிக்கு கொஞ்சம் நன்றி கடன் தீர்ப்பது போல இருக்கும்...

அவரவர் அவரவர் வேலையை செய்து கொண்டிருந்தார்கள்.. பூவரசம் மரம் வெட்டி... கயிரோடி..வெள்ளை வேட்டி கட்டி பந்தல் அமைத்து... கதிரை போட்டு வெத்திலை, பொயிலை சமாச்சாரம் வைத்து...

ஒரு மரத்தில் ஒரு கயிறு கட்டி கீழ் நுனியில் நெருப்பு வைச்சு... அந்த நெருப்பை அணைச்சு சுடராக்கி பக்கத்தில் சுருட்டு வைத்து.....ஒப்பு வைச்சு...ஐயோ என்று அவரவர் அவர்களை நினைத்து அழுது ...

வரமுடியாத பிள்ளைகளுக்காவும் மற்றவர்களுக்கவும் வீடியோ காரனை மருமகள் ஏற்பாடு பண்ணியிருந்தாள்.

அவனும் சுற்றி சுற்றி எல்லாரையும் படம்பிடித்தான்.

*

இந்த வரமுடியாத பிள்ளை நான் தான்.

இங்கிலாந்துக்கு வந்தும் மனைவியை கூப்பிட முடியவில்லை.

இலங்கையில் இருந்து அவளையும் அம்மா ஐயாவையும், அழைத்து வந்து இந்தியாவில் குடிவைத்து விட்டேன்.

இன்று அதிகாலை தொலைபேசி சிணுங்கியது.

அதிகாலைத் தொலைபேசிகள் பொதுவாக இழவுச் செய்திகளுடன் வரும். . .அல்லது காசு கேட்டு வரும்.

நல்ல செய்திகள் பொதுவாக நாள் பட்டு வரும். அல்லது காகிதத்தில் வரும். . . கொஞ்சம் தயக்கத்துடன் எடுத்தேன்.

மனைவி சிணுங்கினாள்.

நான் அசையாது இருந்து விட்டேன்.

அம்மாவை ஐயா புத்திசாலியாக எப்போதும் ஏற்றுக்கொண்டது இல்லை. அம்மா புத்திசாலியாக தன்னை காட்டிக் கொண்டதும் இல்லை.

அக்கா எப்போதும் புத்தகமும் கையோடும் தான் அலைவா.. தன் நண்பர்களோடு 'லக்ஷ்மியின் பெண்' என்ற நாவலோடு சிலாகித்து கொண்டிருந்தாள். ஏதேச்சையாக வந்த அம்மா, "இன்றைக்கு யாருமே பெரிதாக கதை எழுதுவது இல்லை. தனிமனித புலம்பல். . . வெறித்தனம். . . , விமர்சனத்திற்கு உட்படுத்தல். . . புரியாமை எழுதுதல். . . , சமாளித்தல். . . , கவருதல் இது தானே எழுதுகின்றார்கள்." என்றாள்.

அக்காவுக்கு கோபம் வந்து விட்டது.

"எழுத்தை பற்றி உங்களுக்கு என்ன தெரியும்"? என்ற அக்காவின் கேள்விக்கு அம்மா நிதானமாக தன் சேலைத் தலைப்பால் நெற்றியின் வியர்வையைத் துடைத்தபடி சொன்னாள்.

"ஒவ்வொரு காலகட்டங்களிலும் படும் அனுபவங்களின் சிதறல்களை புத்தகம் எமக்கு ஞாபகப்படுத்த வேணும். எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை என்றால் நாம் போடும் கோலத்தை விட மிக உன்னதம் குறைந்தது தான் அந்த புத்தகம்."

அக்காவின் முகத்தில் தோன்றிய ஆச்சரியக் குறியை கவனிக்காத மாதிரி "புட்டு ஆறக்கும் முன்னம் சாப்பிடுங்கள் புட்டுக்குள்ளே நெத்தலியும்,வெங்காயமும் தாழித்து போட்டுள்ளேன்" என்று விட்டு மீண்டும் குசினிக்குள் நுழைந்தாள்.

அம்மா எந்த புத்தகமும் படித்து யாரும் பார்க்கவில்லை... அம்மாவுக்கு புத்தகம் படிக்கவே நேரம் இல்லை.

அம்மா வெளியே சென்றதை கை விட்டு எண்ணி விடலாம்..

ஆனால் எந்த கடையில் அரிசி மலிவு. . . எந்த தோட்டத்தின் மரக்கறி ருசி. . .புதிசாய் ஊருக்குள்ளே வந்தவர்களின் குணவியல்பு, பரம்பரை, சாதி எல்லாம் அத்துப்படி. . . .

அம்மாவோடு கோபப்பட்டு எப்போதோ சில நாள் அம்மாவோடு பேசாமல் இருந்ததுண்டு. ஆனால் இரவு சாப்பாட்டுக்கு முன்னால் அம்மா பேச வைத்துவிடுவாள்

என்ன தலை போகின்ற விடயமாக இருந்தாலும் அம்மாவின் தொடுதல் பேச வைத்துவிடும்.

எல்லோருடைய மௌனத்தின் அர்தமும் அம்மாவுக்கு புரிந்துவிடும்....? அம்மா பேசுவது குறைவு.

ஆனால் அம்மா பேசத்தொடங்கினால் வீடு அமைதியாகி விடும். ஆனால் அம்மா மௌனமாக சாதித்ததே அதிகம்.

விவரம் தெரிந்த நாள் முதல் அம்மாவை யாரும் மதித்தது கிடையாது. வீட்டில் உப்பு இல்லாவிட்டாலும் அம்மாவின் அன்றைய உணவிலும் உப்பிருக்கும்...

மதிய நேரம். . .சாப்பாட்டு நேரம்.. அப்பா வருகின்ற நேரம். அம்மா அங்கும் இங்கும் ஓடித் திரிவாள்..

சரியாக பண்ணிரண்டு மணிக்கு சமையல் ரெடியாகிவிடும். சமையல் பிந்தினால் தான் அதிகம் பசிக்கும்.

எல்லோரும் சாப்பிட்டு முடிக்கும் வரை அம்மா நிம்மதி இல்லாமல் அலைவார்....ஒவ்வொரு நாளும் என்ன சமைத்தாலும் அம்மாவுக்கு அந்த கவலை இருக்கும்..

சரியான கஷ்ட காலத்தில் வாழைத்தண்டில் வடிச்ச கஞ்சி முசுட்டை இலை இதை வைத்தே அம்மா ருசியாக சமைப்பார்.

ஒருநாள் அப்பா வாசலுக்கு வந்தார். திடீரென அம்மாவின் முடியை இழுத்து ஓங்கி முகத்திலே குத்திவிட்டார்.

"வாங்கோ சாப்பிடுவோம்..."

பிள்ளைகள் பார்க்கவில்லை என்று தான் அம்மா நினைத்தார். ஆனால் மூலையிலிருந்து பார்த்துவிட்டாச்சு...

அம்மாவுக்கு அவமானமா போய்விட்டது...திரும்ப அம்மாவை வாங்க சாப்பிட என்று கூப்பிட முடியாமல் அழுகையை வார்த்தை தின்றது. ஓடிப்போய் கோடிக்கை நின்று அழுதாள். அழுகை ஒலி திமிறித் திமிறி கொஞ்சம் வெளியே வந்தது.

அதற்கு பிறகு அம்மா அப்பாவுக்கு சாப்பாடு போட்டு..தண்ணீர் வைத்து..அடுத்த சோறும் வைத்து...

அடுத்து மாட்டு கன்று, ஆடு என போய்விட்டார். . .நேரம் கிடைத்த போது அம்மா கட்டாயம் அழுதிருப்பார். அப்பா ஏன் அடித்தார்..? இது எத்தனையாவது தடவை அடிக்கின்றார்?

## குப்பிளான் ரவிஜன் - இந்தியா

அம்மா சமைத்த உணவிற்கு எப்போதும் யாரும் நன்றி சொன்னது கிடையாது...நன்றாக இருக்கின்றது எனவும் யாரும் சொன்னது கிடையாது...அம்மா எல்லோரும் சாப்பிட்ட பிறகு அவரவர் முகத்தை பார்ப்பார்.

சாப்பிடும் போதும் கல் கடிபட்டு துப்பும் போதும்,. . சாப்பிட்ட குறையில் கை அலம்பும் போதும் அம்மாவுக்கு குற்ற உணர்வை உண்டாக்கும்..அன்று முழுவதும் ஏதோ தவறு செய்தது போல அம்மா உலாத்துவாள்.

அன்றைக்கு அந்த புட்டுக்குள்ளே தலை மயிர் எப்படி வந்தது என்று தெரியவில்லை. அப்பாவிடம் இருந்து அந்தக் கோபம் என்னிடம் எப்படித் தொற்றிக் கொண்டது.

தட்டோடு தூக்கி நிலத்தில் எறிந்தாகிவிட்டாச்சு.

"பிள்ளை என்று சொல்லி இதை தந்ததை விட ஒரு துளி விசம் தந்திருக்கலாம்"

அம்மா உடைந்த தட்டையும் சிதறிய புட்டையும் வெறித்து பார்த்தார்.. முகம் வெளிறி போய்விட்டது.

குனிந்து தட்டை பொறுக்கிய அம்மா..என்ன நினைத்தாரோ திடிரென தலையில் அடித்து அழத்தொடங்கி விட்டாள்.

சின்ன சின்ன அவமானங்கள் அம்மாக்கு. . . அப்பா, நான், மற்றும் இதர ...

யாரின் கோபத்தை அன்று நான் அம்மாக்கு காட்டினேன். எந்த கோபத்தை அம்மாவிடம் காட்டியது. எல்லோருடமும் பைக் இருக்கின்றது என்னிடம் இல்லை என்பதையா...காதலி இன்னொருவனிடம் அதிகம் பேசுவதையா..,? அப்பா, அக்கா, நான், மற்றும் அனைவரும் அம்மாவிடம் காட்டும் கோபம் உண்மையில் அம்மாவிடமா....?

அம்மா யாரிடம் காட்டுவாள்.....?

நான் பாஸ் ஆனதும் எல்லோரும் எதை எதையோ தந்தார்கள். அம்மா சின்னதாக சிரிப்பை மட்டும் தந்தாள். அதுவும் சிறிது சிறிதாக சேர்த்த சிரிப்புத்தான்.

அக்கா ஓடிப்போன போது அப்பா அம்மாவுக்கு ஒரே அடி. ஐயாக்குள் இப்படி ஒரு மிருகம் இருந்ததை நாங்கள் இதுவரை கண்டதில்லை.

"அம்மாவின் வளர்ப்பு சரியில்லை". . . . "நீதான்டி சேர்த்து விட்டாய்" என நிறைய தூஷன வார்த்தைகள். அப்பா வீட்டை தாண்டி தன் குரல் வெளியே போகுமாறு பேசினார்.

தன் கௌரவம் போய்விட்டதாக நாண்டு கொண்டிருந்தார். அம்மா எதுவுமே பேசவில்லை.

திரும்பத் திரும்ப பேசினால் அப்பாவுக்கு கோபம் வரும் இன்னும் கத்துவார் . . . . எகிறுவார்.

அந்த பையனை வீட்டை கூட்டி வந்தது அப்பா தான். அப்பாவோடுதான் கலகலப்பாக இருப்பான். அம்மா அந்த பையனோடு பேசியதே இல்லை. . . அம்மா முன்பு பல தடவை சொன்னவா. . .

"பொம்பிளை பிள்ளை இருக்கின்ற வீட்டை அந்த பையனை ஏன் அடிக்கடி கூட்டி வாரிங்கள்'.

"ஓமடி உன்ரை கொப்பர் உன்னை வளர்த்த மாதிரியா நான் என்ரை பிள்ளையை வளர்க்கின்றேன்".

அம்மா எப்போதும் யதார்த்தமாக தான் பேசுவார்.

இவள் சொல்லி நான் செய்வதா? இது தான் அப்பாவின் அந்தரங்க பிரச்சனை.

ஆனால் இன்றைக்கு அம்மா அதைப்பற்றி எதுவும் பேசவில்லை. அப்பா அக்காவின் பிரச்சனைக்கு தான் பொறுப்பில்லாத மாதிரி எல்லோருக்கும் காட்டிக்கொண்டார்.

எங்கெங்கு அம்மா சமாதான கொடியைக் காட்டினாவே அங்கெல்லாம் அது அம்மாவில் கோபத்தை உண்டாக்கியது.

அப்புறம் அம்மா அந்த வீட்டை பழையபடி வளைய வளைய வந்தார். அப்பா அம்மா மேலே சொல்லொண்ணா கோபத்தோடு இருந்தார். சின்ன சின்ன பிழைபிடித்து முடிந்தளவு ஏசினார்.

ஆனால் அம்மா முதல் சோற்றில் இருந்து அடுத்த சோறு வரை அப்பாவுக்கு ஆற வைத்தே கொடுத்தார்

அக்காவுக்கு குழந்தை பிறந்த போது அம்மா தான் பிள்ளை பெத்து பார்த்தது. அப்பாவுக்கு அது பிடிக்கவில்லை. தொடர்ந்து திட்டிக்கொண்டே இருந்தார். அம்மா அதை மதிக்காமல் பிள்ளைபேற்று முடியும் வரை அக்கா வீடே கதியென கிடந்தார். அப்பாவால் அம்மாவை அக்கா வீட்டை போவதை நிறுத்த முடியவில்லை. அம்மா அந்த விடயத்தில் பிடிவாதாமாகவே இருந்தார். அம்மா பிள்ளை பெத்து பார்த்த அந்த நேரத்தில் கூட அக்காவோடு பேசியது கிடையாது.

அம்மா ஆசைப்பட்ட மாதிரி பிள்ளைகள் நல்ல இடத்துக்கு வந்துவிட்டோம்.

இப்ப எல்லாம் ஐயாவின் வேலையைத் தவிர அம்மாவுக்கு வேலை குறைவுதான்..

எனது பிள்ளைகளுக்கு அம்மா நிறைய குட்டிகதைகள் சொல்வதிலே காலம் போனது.. கடல் அலை போல நிறைய கதைகள் அம்மாவிடம்..அம்மா எங்களுக்கு இவ்வளவு கதைகள் சொன்னதாக ஞாபகம் இல்லை.. அம்மாவின் கதையில் கம்பீரமான ராஜகுமாரனும், அழகிய ராஜகுமாரியும் உலவுவார்கள்..

அது அம்மாவின் கனவு உலகமாக இருக்கலாம்... ஐயா இப்பவும் அம்மாவை வேலை காட்டுவது அதிகம் தான். ஐயா பொறுத்து கொள்ளுவது ரொம்ப கஷ்டம்.

பிள்ளைகள் பொறுப்பார்கள்...வந்தவர்கள் பொறுப்பார்களா... அப்பா ஏதோ சொல்ல..

"எனது மனைவி எதிர்த்து கதைதத்தாச்சு... எவ்வளவு காலம் ஐயா அம்மாவை கஷ்டப்படுத்துவதை பார்க்க முடியும்...? கட்டன் ரைட்டாக சொன்னாச்சு விரும்பினால் சமாளித்து இருங்கள்."

கோபமாக வெறித்த அம்மா ஐயாவின் வேட்டி சட்டையோடு தன் உடையையும் எடுத்து விறு...விறு என...நடக்க தொடங்கி விட்டார்.

எத்தனை தடவை அம்மாவை ஐயா அவமானப்படுத்தி இருப்பார். அப்பாவுக்கு பின்னால் அம்மா போக வேண்டிய அவசியம் என்ன?

திரும்பத் திரும்ப ஐயாவிடம் மூஞ்சியிலே அடிவாங்க அம்மாவுக்கு என்ன விருப்பமா..?

அம்மா இவ்வளவு கோபத்தை இவ்வளவு நாளும் எங்கே வைத்திருந்தார். ஐயாவால் அம்மாவின் நடைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

பின் நான் தொலைபேசியில் எத்தனையோ கதைத்தும் மன்னிப்புக் கேட்டும் முடியாமல் நான் இங்கிருந்து போய்த்தான் அகதி முகாமில் இருந்து வீட்டை கொண்டு வந்து விட்டன்.

இங்கு எனக்கு 1500 பவுன்ட்ஸ் செலவாயிற்று.

இப்ப. . .இப்ப. . .

இருமாதங்களுக்குள் இந்தியாக்கு மீண்டும் போக விசா கிடையாது.

யார் கொள்ளி வைப்பது?

ஐயா தான் வைக்க வேண்டும்.

*

**வி**டியோகாரனின் கமரா எல்லா இடங்களையும் வளைத்துக் கொண்டு இருந்தது.

இதுக்கெல்லாம் தனக்கு தொடர்பு இல்லாத போல கிழவன் எங்கேயோ பார்த்தபடியே இருந்தார்.

அந்த கிழவிக்கு பக்கத்தில் போகவே இல்லை. மருமகள் வீடியோகாரனை கொஞ்சம் கண்ஜாடை செய்தாள். வீடியோவும் சும்மா அந்த பக்கம் வீடியோவை திருப்பியது தான். . . சுள்ளென்று கிழவனுக்கு கோபம் வந்து விட்டது.

“ஏண்டா என்னை போட்டோ எடுக்கின்றாய். நானா செத்தேன் வடுவா.....? “என்று கிழவன் துள்ளிய போது ஒரு புது சலனம் தோன்றி மின்னலாய் மறைந்தது.

அதற்கு பிறகு யாருமே சுந்தரம் கிழவனுக்கு பக்கத்தில் போகவில்லை.

"செத்த வீட்டில் அசிங்கபட யாருக்கு என்ன தலைவிதி."

மானம் கெட்ட கிழவன் இடம், பொருள், ஏவல் அறியாதவர். அந்த கிழவி எப்படித்தான் இவ்வளவு காலமும் காலம் தள்ளினதோ... முணுமுணுப்புக்கள் ஒப்பாரியாக வந்து தேய்ந்து கொண்டிருந்தது.

கிழவி செத்து விட்டாள் இனி கிழவன் பொல்லாப்பை ஊரோடுதான் முறிப்பார்.

பேச்சுக்கள் ஒப்பாரியை எல்லாம் கிழித்தது.

“கிரியை செய்ய வேணும் போய்க் குளிச்சுட்டு வாங்கோ”

கிழவன் எழுந்து வெளியே வந்தார்.

வந்த கிழவனுக்கு வாளியிலே தண்ணி இல்லாதது மூக்கிலே கோபம் வந்தது.

"சனியன் தண்ணி எடுக்காமல் சாவதற்கு அப்படி என்ன அவசரம்?"

இனி மருமகள் தான் பாவம்... முதியோர் இல்லத்தில் விட வேண்டியதுதான்..

இந்த கிழவனோடு மல்லு கட்ட மருமகளுக்கு என்ன விதியா..?

கிழவனுக்கு கோபம் குறையவில்லை. அதே கோபத்தோடு கிணத்தடிக்கு போனார்.

விறு விறு என தண்ணியை அள்ளி அள்ளி வாளியை நிரப்பினார்.

“ராசத்தி ராணி போனால் ராஜா என்ன கூஜா ஆகிவிடுவேனா...,? சீ... நாயே உன்ரை கோத்திரம் தெரியாதா...?”

கிழவனுக்கு கோபம் அடங்கவில்லை...

இப்படி ஏசி ஏசித்தான் கிழவியை வேலை வாங்கியிருக்கின்றார்.

ஏதோ ஆயுள் எதிரி போல கிழவியின் முகத்தையே பாரமலே சுண்ணம் இடித்து விட்டு தன் கதிரையை ஆக்கிரமித்தார்.

என்னா கங்கணம். இவ்வளவு திமிர் மனிசருக்கு ஆகாது.

இவ்வளவு காலம் ஒன்றாக வாழ்ந்த மனிசி. . .ஓரளவுக்கு என்றாலும் மனிசர் அன்பு பாசம் வைக்க வேண்டும்...

வாய்க்கரிசி போடுபவர்கள் போடுங்கள் அதே வெண்கல குரல்..

குரல் வந்தவுடன் இதற்காவே எதிர்பார்த்த மாதிரி கிழவன் விறு விறு என நடந்து சென்று தூரத்தில் எங்கேயோ பார்த்தபடி எறிந்தார். பின் எழுந்து போனார். அதே வேகத்துடன் திரும்பி வந்தார்.

## குப்பிளான் ரவிஜன் - இந்தியா

பூதாக்கலச் சோற்றுக்குப் பின் கிழவியின் வாயில் அன்னம் இடுவது இது தான் இரண்டாம் தடவை.

ஒரு நிமிடம் ஒரு செக்கன் கிழவன் அந்த கிழவியின் முகத்தை பார்த்து இருக்கலாம்.

ஏனோ தானோ என்று... ஏன் இப்படி மனிதருக்குள் ஏன் இந்த குணவியல்பு..யாருக்கும் விளங்கவில்லை. . .

இதை யாருமே கவனத்தில் எடுக்கவில்லை.

பிரேதம் வீட்டை விட்டு போனல் சரி..

இன்னும் பதினைந்து நிமிடத்தில் எடுத்து விடலாம்.

எல்லோரும் அவரவர் கடமையை செய்த படி இருந்தார்கள்... அழுபவர்கள்... ஒப்பாரி வைப்பவர்கள்...

கிழவன் தான் கொள்ளிக் குடத்தை தூக்கிக் கொண்டு சுடலை வரை வர வேண்டும்.

பெட்டி மூடப்படும் பொழுது அழுகுரல்கள் அதிகமாகின.

அனைத்தும் அகதிமுகாமில் இருந்து வந்து போன சொந்தங்கள் தான்.

'படார் படார்' என பெட்டி மேல் அடிக்கும் சத்தம் கேட்டபடியே இருந்தது.

அந்த வேளையில் ஒற்றைக் கையால் கொள்ளிக் குடத்தைப் பிடித்துக் கொண்டு மற்றக் கையால் கிழவன் தன் தலையில் அடிக்கிற சத்தம் யாருக்குமே கேட்கவில்லை.

(ravijan77@gmail.com)

# சாம்பல்

## வசந்தி

சுவீடன்



எல்லாம் நேற்று முடிவடைந்து விட்டது.

இன்று சாம்பலை வேண்டுவதற்காக கிறிமெற்றோறியத்துக்கு வேணியும் பார்த்திபனும் வந்திருந்தார்கள்.

மரணச்சடங்குகளுக்கு பொறுப்பான அந்த சுவீடிஷ் பிரஜையின் மேசைமீது பல பைல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

பருத்த தேகமும் கையில் சுங்கானுமாக தங்கம்மா இளையதம்பியை உருவி எடுத்தான்.

“உங்களின் தாயாரின் சாம்பலை நாங்கள் மூன்று நிபந்தனைகளின் கீழ் வழங்க முடியும்”, நிமிர்ந்து பார்த்தாள் வேணி.

“முதலாவது நீங்கள் கடலில் கரைப்பதாய் இருந்தால் இந்த நாட்டு சட்டப்படி தேவாலங்களுக்குரிய அமைச்சில் அனுமதி பெற வேண்டும்.

பின்பு கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தொலைவில் கொண்டு சென்று கரைக்க வேண்டும்.''

''எப்படி 200 மீற்றர் தூரம் செல்வது?.. .நீந்தியா'', பக்கத்தில் பார்த்திபன் பொறுமை இழந்தவனாய்.

''இல்லை. . . நீங்கள் வள்ளங்களை வாடகைக்குப் பெறலாம்... அல்லது சுவீடனில் இருந்து டென்மார்க்கிற்கு செல்லும் பயணிகள் கப்பலில் செல்லும் பொழுது அதை கடலில் வீசலாம்''

''இதைவிட கொம்மாவை கடலிலை உயிரோடையே தள்ளி விட்டிருக்கலாம்.''

''கொஞ்ச நேரம் சும்மா இருக்கிறியளோ. . .''

''சுவீடனில் இருந்து கடலுக்கு மேலால் செல்லும் பாலத்தின் கரையில் காரை நிறுத்தி விட்டு கடலில் கொட்டலாம் தானே'' பார்த்திபனின் அறிவு வேலை செய்தது.

''அது அதிவிரைவுப் பாதை. தேவையில்லாது அதில் காரை நீங்கள் நிறுத்தினால் தண்டப் பணமாய் பெரிய தொகை செலுத்த வேண்டும்.''

''கொம்மா உயிரோடை இருந்ததை விட செத்த பிறகுதான் பெரிய செலவு வைக்கப் போறா.''

''ஏன் அம்மான்ரை உதவிப் பணத்திலை தானே நீங்கள் புதுக்கார் வேண்டினனீங்கள். . .அந்த மனுசி சாகும்வரையிலை அதுக்கு தெரியாது தானே தனக்கு காசு வருகுது எண்டு. என்னட்டை பிச்சை வேண்டுறமாதிரித் தானே வேண்டி ஊர்க் கோயிலுகளுக்கு அனுப்புறவா.''

வேணி கண்ணைக் கசக்கினாள்.

''கவலைப்படாதீர்கள் . . மரணம் என்பது யாருக்கும் எப்பொழுதும் வரலாம். . . .அழகிய ரோஜாத் தோட்டத்தில் எந்த மலர்களை, எந்த வேளையில், ஆண்டவனின் பூஜைக்காக பறிக்கின்றோம் என யாருக்கும் தெரிவதில்லை''

மரணச் சடங்கு உத்தியோகத்தர் ஒருகணம் பாதிரியராக மாறி வேணிக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார்.

"நீங்கள் அடுத்த வழியைச் சொல்லுங்கள்."

"உங்கள் அம்மாக்கு என்று ஒரு சிறு துண்டு காணியை விலைக்கு வேண்டி அதனுள் இந்த சாம்பல் நிறைந்த சாடியை புதைத்துவிடலாம். . பின்பு அதில் ஒரு நினைவுக்கல்லை வைத்து விசேட காலங்களில் நீங்கள் வந்து அவரைப் பிரார்த்திக்கலாம்"

"கடைசிவரை ஓம் எண்டு சொல்லிப் போடாதை. . . கடைசி பத்தாயிரம் குறோன்கள் முடியும். இலங்கைக் கணக்குக்கு இந்த 2 இலட்சம் ரூபாய்க்கு ஊரிலை ஒரு சின்னத் துண்டு காணி வேண்டலாம். . .கல்லு வெட்டிற கடைக்காரன் இவனுக்கு ஏதோ கொமிசன் குடுக்கிறான் போலை. . ."

"இல்லை. . அது எங்கள் கலாச்சாரத்திற்கு ஒத்து வராது. . . நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என பஞ்ச பூதங்களால் ஆன இந்த தேகம் அவையிடமே சேர வேண்டும்" பத்தாம் வகுப்பில் இந்துசமயப் பாடத் திரட்டில் கற்றதை இப்பொழுது வேணி தனது உபதேசமாக மரணஅதிகாரிக்கு ஒப்பித்தாள்.

"இதொண்டும் நடக்கிற போலை இல்லை. . . எனக்கும் வேலைக்கு நேரமாகுது. . . செத்த வீட்டுக்கு எண்டு வந்த உன்ரை ஆக்கள் ஊர் சுற்றப் போட்டினம். . . இனி பசிக்குது சமைக்கேல்லையோ எண்டு கொண்டு வருவினம். . . அவை செத்த வீட்டுக்கு வந்தவையோ. . . இல்லை சுவீடன் பார்க்க வந்தவையோ. . . உன்ரை கொண்ணர்ரை மேள் கேக்கிறாள் சுவீடன் மக்டொனசிலிலை ரேஸ்ற் பண்ணிப் பார்க்க வேணுமாம். . . ஏன் இலண்டனிலை மாட்டு இறைச்சியும் இஞ்சை மனுசற்றை இறைச்சியும் போர்ட்டே செய்யுறாங்கள். . . கொண்ணை அங்கை பிள்ளையளுக்கு வேண்டிக் குடுத்திராது. . ."

"கொஞ்சம் நிப்பாட்டுறியளே. . .எங்கடை ஆக்களின்ரை கதையளை. . ."

"உங்கள் கணவன் அவசரப்படுகின்றார் போலும் . . ."

மரண அதிகாரிக்கு தமிழ் அட்சரங்கள் தெரியாவிட்டாலும் அங்க அட்சரங்கள் நன்று புரிந்தது.

“நோ. . நோ.. ” என வேணி நெளிந்தாள்.

“மூன்றாவது நீங்கள் உங்கள் தாயரின் சாம்பலை உங்கள் நாட்டுக்கு எடுத்துச் சென்று அங்கு நீங்கள் விரும்பிய மாதிரி செய்யலாம்”

“ஓம் எண்டு சொல்லு. பிறகு உங்கினேக்கை கொண்டு போய்க் கரைப்பம்”

“அப்படியே நாங்கள் செய்கின்றோம்” வேணி நெளிந்தாள்.

“இல்லை. . .நீங்கள் உங்கள் பயணச் சீட்டு. . .பயணம் செய்யும் நாள் போன்ற விபரங்களை எமக்கு தரும் பொழுது உங்களிடம் விமானநிலையத்தில் வைத்து அதை உங்களிடம் ஒப்படைப்போம். அத்துடன் அதை நீங்கள் கொண்டு செல்லுகின்றீர்களா என நாம் உறுதி செய்ய வேண்டும்”

“ஏன் எங்களை நீங்கள் நம்பவில்லையா?” பார்த்திபன் கொஞ்சம் சூடாகினான்.

“80களில் அதிகமாகவே நம்பினோம். . . சில நாட்களில் உல்லாசப் பிரயாணிகள் வரும் எங்கள் கடற்கரைகளில் வட் இஸ் இற்? உங்கள் நாட்டு கேக்குகள். . .வட்டமாய் நடுவிலை ஓட்டையாய். . . வேறு ஒன்று பெரிதாய் ஊதியிருக்கும்.. ஆனால். அதனுள் எதுவும் இராது . . . பிறகு யங் கொக்கநெற்கள். பூக்கள். . . .இஸ்பெசலி ஹய்பிஸ்கஸ் பூக்கள் . . .நீங்கள் எங்கள் கடற்கரையை அதிகமாகவே அசுத்தப் பண்ணி விட்டீர்கள்.” வேணியும் பார்த்திபனும் தலையைக் குனிந்து கொண்டு நின்றார்கள்.

இறுதியில் முதலில் கூறிய கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் வள்ளத்தில் சென்று வீசுவது என்ற நிபந்தனைக்கு இணங்கி தேவாலயங்களுக்குரிய அமைச்சில் அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்ப படிவத்தில் வேணியும் பார்த்திபனும் கையெழுத்திட்டார்கள்.

அதற்குரிய விண்ணப்பப்பணமாக 300 குறோன்கள் (அன்றைய நாணய மதிப்பில் 5778 ரூபாய் 37 சதம்) செலுத்தினார்கள்.

"உங்கள் தாயாருக்கு பரலோகத்தில் சாந்தியும் சமாதானமும் நிலவுவதாக"

பார்த்திபன் நிமிர்ந்து வேணியைப் பார்த்தான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

கண்களில் மெல்லியதாக நீர் கசிந்தது.

"அம்மாவை இங்கு கூட்டிவந்திருக்கவே கூடாது" மனதுள் அவள் சொல்லிக் கொண்டாள்.

அவர்கள் புறப்பட முதலில், "நீங்கள் இந்த யங் கொக்கநெற்களை எங்கு வேண்டுகின்றீர்கள்"

"தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்கின்றோம்"

பெருமை பட பார்த்திபன் கூறினான்.

"ஆனால் நீங்கள் அதைக் குடிக்காமல் டெட் (b)பொடிக்கு மேலை ஊற்றுகிறீர்கள். . .சிவப்பு, மஞ்சள் கலரைப் பூசி சந்தி வழிகளில் வைக்கின்றீர்கள். . .இற் இஸ் (fa)பனி?."

"நீ வா . .கொஞ்ச நேரம் நிண்டால் இவன்ரை சாம்பலையும் கொம்மான்ரையோடை கரைக்க வேண்டி வரும்", சொல்லிக் கொண்டே பார்த்திபன் வேணியின் கைகளை இழுத்துச் செல்லுமாப் போல் அங்கிருந்து புறப்பட்டான்.

"வீ கான்ற் அன்டஸ்டேன்ட் தெம்"

மரணவிசாரணை அதிகாரி தனது புதுக்காதலியும் காரியதரிசியுமான றிட்டாக்கு சொன்னது நல்ல வேளை பார்த்திபனுக்கு கேட்கவில்லை.

*

கணவன், மனைவி, பிள்ளைகள் என்று குடும்பத்தில் மிக நெருக்கமானவர்கள் இறந்தால் ஒரு நாள் லீவும், அதற்கு அடுத்ததாக பெற்றார்கள், சகோதரங்கள், முன்நாள் கணவன் அல்லது மனைவி இறந்தால் தேவாலயத்தில் சவஅடக்கம் நடக்கும் நேரத்திற்கு மட்டும் கலந்து கொள்வதற்காக அரைநாள் லீவும் வழங்கப்படும்.

அவ்வகையில் வேணிக்கு முழுநாள் லீவும் பார்த்திபனுக்கு அரைநாள் லீவும் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் அவர்கள் இருவரும் தாங்கள் தமது விடுமுறைக்கு இலங்கைக்கு செல்ல வைத்திருந்த சொந்த லீவில் வேணி நாலு நாட்களும் பார்த்திபன் நாலரை நாட்களும் எடுத்து அந்தக் கிழமை முழுவதும் நடக்க வேண்டிய அனைத்து காரியங்களையும் சுமூகமாக நிறைவேற்றி வைத்தார்கள். . . இருவரும் இடைக்கிடை ஆள் மேல் ஆள் ஏறி விழுந்ததை தவிர.

''தங்கச்சிக்கு அம்மாவின் காரியங்களை இறுதிவரை செய்யக் குடுப்பினை இருந்திருக்கிறது'' என்று சொல்லி சொல்லியே அந்தக்கிழமை முழுக்க நின்று விட்டு இறுதிக்காரியங்களுக்கான எந்தச் செலவிலும் தான் பங்கு கொள்ளாமல் வேணியின் தமையனும் லண்டன் போய் விட்டார்.

''அங்கை மோட்கேஜ்க்கும், பிள்ளையளின்ரை ரியூசனுக்குமே உழைக்கிறது போயிடும். . . இப்ப நாங்கள் நாலு பேரும் திடீரென லண்டனிலை இருந்து நோ பே லீவிலை பிளேனிலை வந்தது. . .'' என ஆங்காங்கே சின்ன சின்ன ரெயிலர்களை அண்ணிக்காரி விட்டுக் கொண்டிருக்கும் பொழுது பார்த்திபனுக்கு ஏற்கவே தெரிந்து விட்டது கிளைமாக்ஸ் இவ்வாறு தான் இருக்கும் என்று.

வேணி மீது அவன் இடைக்கிடை சீறி விழுந்து கொண்டு இருந்ததற்கும் இவர்கள் தான் ஒரு வகையில் காரணம்.

இன்று வேணி வேலைக்குத் திரும்பியிருந்தாள்.

இதர உத்தியோகஸ்தர்கள் தங்கள் அனுதாபத்தை ஒன்று அல்லது இரண்டு வரிகளில் தெரிவித்து விட்டு தங்கள் தங்கள் கணனிக்குள் மூழ்கி விட்டார்கள்.

காலை எட்டரை மணிபோல முகாமையாளரிடம் இருந்து ஒரு மின்னஞ்சல் அனைத்து வேலை ஆட்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

வேணியுடன் இணைந்து பணியாற்றும் மேற்றா மிகவும் பாசத்துடன் வளர்த்த நாய் தீடீரென இறந்து விட்டதால் அவள் மிகவும் கவலையாகவும் மன அழுத்தத்திலும் இருக்கின்றாளாம். எனவே நிர்வாகம் அவளுக்கு ஒரு கிழமை லீவு பரிந்துரை செய்கின்றதாம். நாய்க்குரிய இறுதிக்கிரியைகள் வரும் வெள்ளி முடிய அடுத்த திங்கள் வருவாளாம்.

அன்று சாப்பாட்டு இடைவேளை முழுக்க மேற்றாவின் நாயைப்பற்றிய கதைகளாகவே இருந்தது.

யாரும் வேணியின் தாயாரைப் பற்றி அதிகம் கதைக்கவில்லை.

வேணிக்கு அங்கு அதிக நேரம் இருக்கப் பிடிக்காமல் போக எழுந்து தனது சீற்றுக்கு திரும்பி விட்டாள்.

வேணிக்கு அந்த நாயை நன்கு நினைவு இருக்கின்றது. சென்ற கோடையில் மேற்றா இரண்டு கிழமை லீவில் நின்றிருந்தாள். நாயுடன் சிற்றிப் பக்கம் வந்தவள் என்ன நினைத்தாளோ ஆபிசுக்கு வந்து அனைவருக்கும் தனது நாயை பெருமை பொங்க காட்டினாள். அனைவரும் அதனைத் தடவியும் கொஞ்சியும் தம் அன்பைத் தெரிவித்தார்கள். வேணி மட்டும் சும்மா பார்த்துக் கொண்டு நின்றாள்.

சிறிது நேரத்தில் நாய்க்கு தண்ணி விடாய் கண்டது. மேற்றா ஆபீசு குசினியில் இருந்து பெரிய வெள்ளை நிற பிளாஸ்ரிக் குண்டாளச் சட்டியில் தண்ணீர் நிறைத்து அதன் முன் வைக்க அதுவும் தனது தாகத்தை தீர்க்கத் தொடங்கியது.

வேணிக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.

அன்றிலிருந்து ஆபீசில் ஏதாவது செய்யும் பொழுது அந்தச் சட்டியை மற்றவர்கள் பாவித்து இருந்ததால் வேணி அதைத் தொடுவதில்லை. தான் விரதம் என பொய் சொல்லி விடுவாள்.

எத்தனை நாட்களுக்கு இப்படி விரதக் கதை சொல்வது என்று விட்டு ஒரு நாள் மிகவும் வேளையுடன் ஒவ்வீசுக்கு சென்று அந்த குண்டாளச் சட்டியை தூக்கி வெளியே இருந்த குப்பைத் தொட்டியில் போட்டு விட்டாள். அதற்குப் பின்புதான் அவளுக்கு நிம்மதி.

*

**அ**டுத்த திங்கள் வேணி ஆபீசுக்கு சென்ற பொழுது ஒரே ஆரவாரமாய் இருந்தது.

அனைவரும் மேற்றாவைச் சுற்றி நின்று ஆதரவு சொல்லிக் கொண்டும், நாயின் இறுதி நாட்கள் எவ்வாறு இருந்து பற்றி... அதனை புதைக்காது எரித்தது பற்றி... பின் அதனின் சாம்பலின் ஒரு சிறு பகுதியை ஒரு வெள்ளி நிற குண்டு மணிக்குள் அடைத்து தனக்கு அவர்கள் தந்தது பற்றி.. .அதற்கு மட்டும் 3000 குறோன்கள் (60,000 ரூபாய்) கொடுத்தது பற்றியும் பெருமையாக கூறிக் கொண்டு நின்றாள்.

அந்த வெள்ளி மணி கறுப்பு நிறக் கயிறு ஒன்றில் கோர்க்கப்பட்டு அவள் கழுத்தில் தொங்கிக் கொண்டு இருந்தது.

அனைவரும் "சுவீற்" என அதனைத் தொட்டு தொட்டு பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

வேணி மட்டும் "கொன்டோலன்ஸ்" என சொல்லி விட்டு போய் தன் கதிரையில் அமர்ந்து கொண்டாள்.



# வலையில் விழுந்தவள்

**துறையூரான்**
**கனடா**

**முதல் நாள்**

அன்று வழக்கம்போல் அனுஜா படிப்பு முடிந்து கம்பியூற்றரில் 'சாற்' பகுதியில் நுழைந்தாள். வலையில் ஒருவன் வந்தான்

ஹாய் என் பெயர் மதன். நீ யார்?

நான் சுதா! எனக்கு உன்னோடு தொடர விருப்பமில்லை.
(அனுஜாவின் வலைப் பெயர்)

பரவாயில்லை. சும்மா சிறிது நேரம் சாற் பண்ணலாமே .

சரி பரவாயில்லை. நீ என்ன செய்கிறாய் ?

நான் யுனிவேர்சிற்றியில் படித்துக்கொண்டிருக்கிறேன்.

நல்லது. எத்தனையாம் ஆண்டு?

இரண்டாம் ஆண்டு.

நீ என்ன செய்கிறாய் சுதா ?

நானும் படித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

நல்லது. எங்கே என்று அறியலாமா?

கல்லூரியில் பன்னிரண்டாம் வகுப்பில்.

எந்தக் கல்லூரி ?

தொரன்ரொவிலுள்ளது .

தொரன்ரோவில் எங்கே ?

அது தேவையில்லை என நினைக்கிறேன் .

சரி பரவாயில்லை..

உனக்கு விருப்பமான பொழுதுபோக்கு என்ன?

எனக்கு தமிழ் படங்கள் நல்லதாய் இருந்தால் பார்ப்பேன் .

நல்ல படங்கள் என்றால் எப்படிபட்ட படங்கள் ?

நல்ல கதையுள்ள, றியல் சம்பவங்களுள்ள கிராமக் கதைகள் பிடிக்கும்.

நல்லது நீயும் என்னைப் போன்ற ரசனையைக் கொண்டிருக்கிறாய். நல்ல சந்தோசம்.

என்ன மாதிரியான பாடல்கள் பிடிக்கும்?

சினிமாப் பாடல்களில் சோகப் பாடல்கள் மற்றது நல்ல கருத்துள்ள பாடல்கள் பிடிக்கும்.

ஏன் சோகப் பாடல்களில் நாட்டம் என்று அறியலாமோ?

அவைதான் மனதைத் தொடும். மேலும் நினைவிலும் நிற்கும்.

அப்படியா நானும் உனக்கு சப்போட். இருவரது விருப்பங்களும் நல்லாய் ஒத்துப் போகின்றது.

நீர் நல்லாய்த்தமிழ் கதைக்கிறீர். கனடாவுக்கு வந்து கன காலமோ ?

கனடாவுக்கு நான் வரயில்லை .

அப்ப நீர் இங்குதான் பிறந்ததோ?

ஓம்.. அப்பா அம்மா இங்கை வந்து இருபது வருசத்துக்கு மேலாகுது .

அப்படியா. நீர் ஏதோ இலங்கையிலிருந்து கிட்டடியில் வந்தவை மாதிரிக் கதைக்கிறீர்.

நாங்கள் வீட்டிலை தமிழிலைதான் கதைக்கிறது. அதோடை பள்ளீயிலை என்ரை பிற்ண்ட்சும் இடைக்கிடை தமிழிலை கதைப்பம்.

நல்லது. உம்மைப்பற்றி எல்லாம் சொல்லுறீர். . . என்னைப் பற்றி ஒன்றும் கேக்கயில்லை.

எனக்கு அது தேவை இல்லை.

எண்டாலும் நான் சொல்லாம் என்று நினைக்கிறன்.

விருப்பமென்டால் சொல்லலாம்.

நான் ரொறன்ரோ யுனிவெர்சிற்றியிலை தான் படிக்கிறன். எனக்கு அப்பா, அம்மாவை எல்லாம் சிறீலங்காவிலை தான் இருக்கினம்.

நான் இங்கை சொந்தக்காறரோடைத்தான் இருக்கிறன். அவை சரியான கடும்பிடி. கண்டபடி திரியவிட மாட்டினை. எவ்வளவோ கஷ்டப் பட்டுத்தான் இங்கை வந்தனான். எனது சின்னம்மா சுவிசிலை இருக்கிறா. அவ காசு தந்து தான் நான் இங்கை வந்தனான். எந்த நேரமும் அறையிக்கை தான் என்ரை சீவியம்.

பாவம் நீர். கேட்கக் கவலையாய் தான் இருக்குது.

உம்மை எனக்குத் தெரியாது எண்டாலும் இதுகளைச் சொல்லி மனம் ஆற ஆள் கிடைச்சதையிட்டு நல்ல சந்தோசம்.

நாங்கள் கன நேரம் கதைச்சிட்டம். ஆரோ வருகினை போலக்கிடக்குது.

நன்றி நாளைக்கும் இந்த நேரம் கதைப்பமே.

பார்ப்பம். பாய்.

பாய்.

**இரண்டாம் நாள்.**

அனோஜா அன்று கணனியில் ஈமெயில் பார்த்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி மதனின் பெயர் சற்றில் வந்து போய்க் கொண்டிருந்தது . சற் பகுதிக்குப் போகலாமா விடலாமா எனக் கடுமையாக யோசித்தாள். பாவம் என்ன விசயம் எனக் கேட்க மனம் தூண்டியது.

என்ன மதன். யாரென்று அறியலாமோ ?

ஓம் நான் சுதா. என்ன விசயம்.

நேற்று நாங்கள் இன்றைக்கு சாற் பண்ணீறது என்று சொன்னீர் அதுதான் எடுத்தனான்.

ஓம் ஆனால் சும்மா தேவையில்லாமல் சற் பண்ண எனக்கு விருப்பமில்லை .

எனக்கு விளங்குது உமது மனோ நிலை. தெரியாத ஆட்களோடை கதைக்கிறது எப்படி என்று நினைக்கிறீர். நான் யாரென்று சொல்லிப் போட்டன். இதிலை பயப்படுறதுக்கு ஒன்றுமில்லை.

சரியாச் சொல்லிப்போட்டியள். ஒன்லைனிலை இப்ப பல விசயங்கள் நடக்குது. அதுதான் நான் யோசித்தனான்.

ஓம் எனக்கும் தெரியும். நீர் பயப்படத் தேவையில்லை நான் என்னைப் பற்றி எல்லாம் சொல்லிப்போட்டன். விருப்பமில்லை என்றால் விடலாம்.

பரவாயில்லை உங்களை நினைத்துப் பார்த்தன். சொல்லுங்கோ.

உங்களோடை சற் பண்ணீனால் எனக்கு ஒரு நிம்மதி . ஏதோ ஒரு சொந்தக்காரரோடை கதைத்த மாதிரி.

நல்லது. ஆனால் ஒவ்வொரு நாளும் கதைக்க ஏலாது.

பரவாயில்லை. நேரமுள்ள நேரம் கதைப்பம். உமக்கு ஒரு விசயம் தெரியுமோ? இப்ப ஸ்கைப்பிலை எல்லாரும் ஆக்களைப் பார்த்தெல்லே கதைக்கினம் .

ஓம் எனக்கும் தெரியும் . எனக்கு அது விருப்பமில்லை.

பரவாயில்லை.நான் உம்மை கட்டாயப்படுத்தவில்லை.

எப்படிப் படிப்பெல்லாம் போகுது.

படிப்புப் பிழையில்லை . இந்த மத்ஸ்தான் கஷ்டம்.

எனக்கு மத்ஸ் என்றால் நல்ல விருப்பம். நீர் ஒவ்வொரு நாளும் பிரக்ரிஸ் பண்ண வேணும்.

அப்பதான் சுலபமாய்க் கணக்குகள் செய்யலாம்.

கணக்கு விளங்கினால்தானே செய்யிறதுக்கு.

ஏன் ரீச்சரிட்டைக் கேட்கலாம்தானே.

அவ விளங்கப் படுத்திறது தான் விளங்குதில்லை .

நீர் பிறன்ஸ்சிடம் கேட்கலாம்தானே.

அவையும் அந்த நிலைமைதான்.

நான் சொல்லித்தர றெடி. ஆனால், அதுதான் கஸ்டம் என்று நினைக்கிறன்.

அதெல்லாம் சரி வராது. நான் சமாளிக்கிறன்.

எதுக்கும் வீட்டிலை கேட்டுப் பாருமன் .

சீச்சீ அது நடக்காத விசயம். அதை விடுங்கோ.

அது உம்மடை விருப்பம். நான் வில்லங்கப் படுத்தவில்லை.

உங்கடை படிப்பெல்லாம் எப்பிடி.

படிப்பிலை பிரச்சனையில்லை. பணப்பிரச்சனை தான் பெரிய பிரச்சனை.

உங்கடை சித்தி ஏதோ உதவி செய்யிறா என்று சொன்னியள்.

ஓம். அவாவுக்கு இப்ப வேலை போட்டுது. அவாவுக்கும் குடும்பப் பொறுப்புகள் இருக்குத்தானே. அவையைக் கஷ்டப்படுத்தாமல் படிப்பை விட்டுப்போட்டு வேலை தேடுவமோ என்று நினைக்கிறன்.

இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு இரண்டு வருசம் படிச்சிட்டு விடுகிறது நல்ல யோசனை இல்லை . ஏன் ஸ்ருடன்ற் லோன் எடுக்க ஏலாதோ?.

எனக்கு என்னும் பேப்பர் கிடைக்கயில்லை. அகதி விண்ணப்பம் அக்செப்ற் பண்ணியாச்சு. அதுதான் லோன் எடுக்க ஏலாது.

பாட்ரைம் வேலை செய்து படிக்கலாம்தானே.

இப்ப அப்படிச் செய்துதான் சமாளிக்கிறன். ஸ்கூல் பீஸ் தான் கட்டுறது கஷ்டம்.

சொறீ என்னாலை உதவி செய்யமுடியாது.

நான் உம்மை உதவி செய்யச் சொல்லிக் கேட்கயில்லை. என்ர நிலைமையைச் சொன்னன் அவ்வளவுதான்.

எதுக்கும் கேட்டுப் பாக்கலாம்தானே.

பாப்பம் அதுதான் யோசித்தனான். ஆனால் இன்னும் இரண்டு வருசத்துக்கு ஏறக்குறைய பத்தாயிரத்துக்கு மேல வரும். அவ்வளவு தர ஆர் முன்வருவினம் என்றுதான் யோசனை.

எதுக்கும் முயற்சி செய்து பாருங்கோ. நான் நிற்பாட்டப் போறன்.

சரி. நாளைக்குச் சந்திப்பம். பாய்.

பாய். பிறகு பார்ப்பம்.

இவர்களது சற் நிகழ்வு பல நாட்களுக்கு நீடித்தது.

அன்றொரு நாள்.

நான் மதன். யார் அங்கே சுதாவா?

சுதா என்று எப்படித் தெரியும்.

இது கூடத் தெரியாதா. இந்த நேரத்திலை யார் என்னைத் தேடி வருவினம் என்று சாத்திரம் பார்க்கவா வேணும்?

அது சரி. எப்படி நீங்கள் சமாளிக்கிறியள் .

ஏதோ காலம் போகுது. நீங்கள் தான் எங்களைக் கவனிக்கிறியள் இல்லை.

உங்களை நான் கவனிக்க வேண்டிய அவசியமில்லை.

இவ்வளவு நாளும் நாங்கள் நெருக்கமாய் கதைத்துப் போட்டு இப்படிச் சொல்லுகிறீர். எனக்குக் கவலையாய் இருக்குது.

எதற்கும் திடீர் முடிவு எடுக்கக் கூடாது. எல்லாம் யோசித்துத்தான் செய்ய வேணும்.

நீர் சொல்லுரது சரி. முடிவெடுக்கிறது என்றால் நாங்கள் சந்திக்காமல் கதைக்காமல் எப்படி முடிவெடுக்கிறது .

நல்ல கேள்வி. ஆனால் நான் உங்களைச் சந்திக்கிறது முடியாத காரியம். மனமிருந்தால் எல்லாம் முடியும். நீர் நினைத்தால் எவ்வளவோ வழிகள் இருக்கு. நான் சொல்லித்தரத் தேவையில்லை.

அப்படியா சங்கதி. இப்ப என்ன செய்யச் சொல்லுறியள்.

அது தான் உண்மையான அன்புக்கு அடையாளம். நான் சொல்லுறதை வடிவாய்க் கேளும்.

சொல்லுங்கோ.

வாற சனிக்கிழமை மோனிங்சைட் பாக்கிலை சந்திப்பமா?

வேண்டாம் அங்கை எங்கடை ஆக்கள் கனக்க வருவினம் அங்கை நான் வர இல்லை.

அப்ப எங்கை வசதி அப்படி என்றால் காபறோ பிறிம்லி பார்க்குக்கு வாருங்கோ இருந்து கதைப்பம்.

அது எங்கை இருக்குது.

இது தெரியாதா பிறிம்லியிலை எல்ஸ்மியருக்கும் லோறன்சுக்கும் இடையிலை.

எத்தனை மணிக்கு வாறது?

பின்னேரம் மூன்று மணிக்கு வாரும். நீர் தனியத்தானே வருவீர்.

ஏன் வேறை ஆக்களையும் கூட்டிக் கொண்டு வாறதோ? .

நல்ல பகிடி. அப்ப கட்டாயம் வருவீர் தானே.

நான் லேசிலை ஒண்டும் சொல்லுறதில்லை. சொன்னால் செய்வன்.

நானும் அப்பிடித்தான். இரண்டு பேருக்கும் எவ்வளவு பொருத்தம் பாருங்கோ.

நல்லது நான் போகட்டோ.

போட்டு வாறன் என்று சொல்லுங்கோ.

சரி போட்டு வாறன்.

நல்லது சுகமாய்ப் போட்டு வாங்கோ.

பாய். பாய்

அன்று சனிக்கிழமை.

மதன் பார்க்கிலிருந்த கார் தரிப்பிடத்தில் 2.30 மணிக்கே வந்து காவலிருந்தான்.

ஒவ்வொரு நிமிடமும் ஒரு மணித்தியாலம் போல் இருந்தது. 2.45 அளவில் ஒரு 18 வயது மதிக்கத் தக்க அழகான பெண்ணொருத்தி பஸ்ஸிலிருந்து இறங்கினாள்.

அவள் சுதாவாகத்தான் இருக்குமென நினைத்து ஆவலோடு வாசலை நோக்கிச் சென்றான்.

அவள் தெருவைக் கடந்து அடுத்த பக்கம் சென்றாள்.

பெரும் ஏமாற்றம்.

சுதா என்னை ஏமாற்றி விட்டாள். . .இந்தப் பொம்பிளயள் எல்லாரும் இப்படித்தான். . .ஒரு சதத்துக்கும் நம்ப ஏலாது. மிகவும் ஆத்திரத்தோடு காருக்குள் ஏறி இருந்தான்.

3.05 ஒரு சட்டை போட்ட பெண் பஸ்சிலிருந்து இறங்கி பார்க்கை நோக்கி வந்தாள். அவன் காரை விட்டு இறங்காமல் உற்று நோக்கினான். அவள் மெதுவாக நடந்து வாசலுக்குள் நுழைந்தாள்.

காரை விட்டு இறங்கி அவளிடம் சென்று நீர் சுதாதானே என்றான்.

அவள் தலை ஆட்டினாள். நல்ல உருவம். அவ்வளவு அழகில்லை என்றாலும் பரவாயில்லை. அவளை ஒரு நோட்டம் விட்டான்.

அவளும் அவனை ஏற இறங்கப் பார்தாள். அவள் எதிர் பார்த்த மாதிரி அவன் இல்லை. ஒரு முரடனைப் போல் காட்சியளித்தான்.

என்ன பார்க்கிறீர். பயப்பிட வேண்டாம். காருக்கை இருந்து கதைப்பமா?.

பரவாயில்லை இதிலை நிண்டு கதைப்பம்.

பேசிக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தாள்.

என்ன பார்க்கிறீர்?

ஒன்றுமில்லை எங்கடை ஆக்கள் இருக்கினையோ என்று பார்த்தன்.

இந்த நேரத்திலை ஒருவரும் வராயினம். பயப்பிடாமல் காருக்கை ஏறும்.

அவள் தயங்கிக் கொண்டே நின்றாள்.

திடீரென்று ஒரு பொலிஸ் கார் வாசலுக்குள் நுழைந்து கார் தரிப்பிடத்தை நோக்கி வேகமாக வந்தது.

அதைப் பார்த்த மதன் ஓட ஆரம்பித்தான்.

இரு பொலிசார் அவனைக் கலைக்க ஆரம்பித்தனர்.

பொலிஸ் காரிலிருந்து அனுஜாவின் அப்பா இறங்கி வந்தார்.

'பயந்திட்டியா அனுஜா' என்றார்.

'இல்லையப்பா' என்றாலும் அவனைப் பார்க்கவே பயமாகத்தான் இருந்தது.

இன்றைக்கு நீ நல்ல வேலை. துணிந்து செய்து இருக்கிறாய்.

பொலிஸ்காரர் இருவரும் மதனைக் கைவிலங்கோடு கூட்டி வந்தனர்.

"Anuja your are a brave girl. . .You have done a good job. The police department will reward you", என ஒரு பொலிஸ் அவளைப் பாராட்டினார்.

மதன் வேறு யாருமல்ல. பாலியல் குற்றம் புரிந்து சிறையிலிருந்து விடுபட்டு நன்னடத்தைப் பிணையிலிருந்தவன். இப்படிப் பள்ளிப் பிள்ளைகளை ஏமாற்றிக் கூட்டிச் சென்று கற்பழிப்பவன் என்பது தெரிய வந்தது.

(sivasinniah@yahoo.com)

# சலனங்களுக்கு வயதில்லை



நடேசன்
அவுஸ்திரேலியா

காலை எட்டு மணியளவில் ஜெனிவாவில் ஒரு குறுக்குத் தெருவில் சம்பந்த மூர்த்தி நின்றுகொண்டிருந்தார்.

அந்தத் தெருவின் ஒரு மூலையில் ரூரிஸ்ட் அலுவலகம் இருந்தது. அங்கே நின்றால் 'நீங்கள் அல்ப்ஸ் மலைகளுக்கு செல்லும் வாகனத்தை பிடிக்கலாம்', என ஏற்கனவே பஸ் ஸ்ராண்டில் ஒரு பெண் அரைகுறை ஆங்கிலத்தில் கூறி இருந்தாள். பிரெஞ்சும் ஆங்கிலமும் கலந்த அந்த பதிலில் சம்பந்த மூர்த்தி, முடிந்தவரை ஆங்கிலத்தை பிரித்து எடுத்து புரிந்து கொண்டு தெருவைக் கண்டு பிடித்ததையிட்டு தன்னை ஒரு சாதனையாளனாகவே தனக்குள் மெச்சிக்கொண்டார். அவர் மட்டும்தான் அந்த இடத்தில் தனியாக நின்றுகொண்டிருந்தார். அந்த இடத்துக்கு முன்பாக உள்ள இத்தாலிய ரெஸ்ரோரண்டில் இரண்டு பெரிய மீசையுள்ளவர்கள் காலை உணவுக்காக கதவுகளை திறந்து கதிரைகளை தூக்கி அடுக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சென்று பேச முயற்சித்தாலும் அங்கும் சம்பந்த மூர்த்தியின் ஆங்கிலம் அவருக்கு கை கொடுக்கவில்லை.

சிறு வயதில் யாழ்ப்பாணத்தில் பிரன்சிய மொழி படிக்க அலயன்ஸ் பிரான்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஒரு நாள் மட்டும் போய் விட்டு நிறுத்திக் கொண்ட தவறை நினைத்து சம்பந்த மூர்த்தி கவலைப்பட்டுக்கொண்டார். ஐம்பது வயதுக்கு மேல் கவலைப்பட்டு என்னசெய்யமுடியும்?

இலங்கையில் எஞ்ஜினியராக இருந்து ஆங்கிலம் பேசும் நாட்டுக்கு போகவேண்டும் என பிடிவாதமாக அவுஸ்திரேலியா வந்தாலும் இப்பொழுது வேலைசெய்யும் எஞ்ஜினியரிங் கம்பனியிலிருந்து சோலர் ரெக்னோலஜி சம்பந்தமான மகாநாட்டுக்காக ஜெனீவா வந்துள்ளார். மகாநாடு நேற்று முடிந்ததால் இன்று சனிக்கிழமை அல்ப்ஸ் மலைக்கு சுற்றுப்பயணம் போய் வந்து விடலாம் என நினைத்து ஏற்கனவே ரிக்கட்டைப் பெற்றுக்கொண்டு காத்து நிற்கிறார். இன்று இரவு அவுஸ்திரேலியாவிலிருந்து இவரது மனைவி வந்ததும் நாளை பாரிசுக்கு பிரயாணம் செய்வதற்குள் இந்த ஒரு நாள் பிரயாணம் அவசரமாக ஒழுங்கு செய்யப்பட்டது.

'இந்த இடத்துக்கு அல்ப்ஸ் செல்லும் வான் வருகிறதா' என அழகிய ஆங்கிலத்தில் வந்த குரலுக்குரியவரைத் திரும்பிப் பார்த்தார் சம்பந்த மூர்த்தி.

முப்பத்தைந்துக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வயதான பெண் ஐரோப்பிய கோடைகால உடையில் சிறுகைப்பையை சுழற்றியபடி நின்று கொண்டிருந்தாள்.

'நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'

'நன்றி'

'ரிக்கட்வாங்கிவிட்டீர்களா'

'இல்லை'

'சிறிது தூரத்தில உள்ள பஸ் நிலையத்தில் ரிக்கட்டை வாங்குங்கள்.'

'நான் வாங்கிவருகிறேன். என்னை விட்டு போய்விடாதீர்கள்? எனக் கூறிவிட்டு சம்பந்த மூர்த்தியின் தோளில் தனது கையால் தட்டிவிட்டு ரூரிஸட் பஸ் நிலயத்தை நோக்கி அவசரமாக நடந்தாள்.

இவ்வளவு நேரமும் அவளை சாதாரணமாக பார்த்துக்கொண்டிருந்த சம்பந்த மூர்த்தியின் கவனத்தை தூண்டிவிட்டாள். ஐந்தரை அடிக்குமேல் உயரம். தலைமயிர் மங்கி தாமிர நிறத்துடன் சில வெள்ளைமயிர்கள். தலைமயிர் பின்கழுத்துக்கு மேல் வெட்டப்பட்டு இருந்தது. மேக்கப் எதுவும் இல்லை. அத்துடன் ஐரோப்பிய கோடைக்குரிய இறுக்கமற்ற மேல்சட்டையுடன் முழங்கால் வரையான கீழ்பாவாடை அலட்சியமான உடையலங்காரம். இவைகளை மீறி இயற்கையான உடலமைப்பு இன்னும் அவளை அழகியாக காட்டியது. காலில் போட்டிருந்த காலணி சாதாரணமாக தெருவில் நடப்பதற்கு போடுவது அதிலும் குதிக்கால் சிறிது உயர்ந்து இருந்தது. அதிக கவனம் எடுக்காத உடை அலங்காரம் ஏதாவது பெரிய பதவி வகிப்பவளாக இருக்கலாம். ஆனால் எப்படி அல்ப்ஸ் மலைக்கு இந்த உடையில் வருகிறாள். மேலும் நிச்சயமாக குதிக்கால் உயர்ந்த பாதணி பொருத்தமில்லாதது. கையில் ஒரு சிறு கைப்பை மட்டும் இருந்ததால் இவளிடம் வேறு உடுப்பு இருக்கவில்லைப்போலும். ஏதோ ஹோட்டலில் இருந்து கடைவீதிக்கு வருபவள் போல் அல்லவா வந்திருக்கிறாள்?.

இப்படி சம்பந்த மூர்த்தி நினைத்துக்கொண்டிருக்கும் போது ஒரு இந்தியர் வந்து சேர்ந்தார். அவரும் டெல்லியில் இருந்து ஏதோ சேர்ச்சுகளின் மகாநாட்டுக்கு வந்திருந்தவர். அவரிடம் பேசிக்கொண்டிருந்த போது இந்த பெண் ரிக்கட்டை எடுத்துக்கொண்டு மீண்டும் வந்திருந்தாள். இதே நேரத்தில் எங்களது வானும் சாரதியும் வந்து விட்டார். இப்பொழுது மொத்தமாக ஐந்து பேர் அல்பஸ் மலைக்கு அந்த வானில் பிரயாணத்துக்கு பதிவு செய்திருந்தார்கள். மற்றைய இருவரில் ஒருவர் அமெரிக்கர் மற்றவர் ஈரானை சேர்ந்தவர். நான்கு ஆண்களுடன் ஒரு பெண்.

ஏறுங்கள் என சாரதி கூறியதும் சம்பந்த மூர்த்தி தனக்குப் பக்கத்தில் நின்ற பெண் முதலாவதாக ஏறட்டும் என நினைத்து தயங்கினார்.

அந்தப்பெண் வண்டியின் பின் சீட்டில் ஏறிவிட்டு கையை நீட்டி சம்பந்த மூர்த்தியின் பையை வாங்கிய படி தனது அருகில் இருக்கும்படி அழைத்தாள்.

வண்டியின் பின்சீட்டுகள் சம்பந்த மூர்த்திக்கு பிடிப்பதில்லை. தலையை சுத்தும். அதுவும் மலையை நோக்கி செல்வது இந்தப் பிரயாணம் நிச்சயமாக வாந்தி வரக்கூடும் எனப் பயந்தாலும் பெண் ஒருத்தி தன் அருகில் வந்து உட்காரும்படி அழைப்பதை எப்படி மறுப்பது என்பதால் அவள் அருகே உட்கார்ந்தார். முன்பாக உள்ள சீட்டுகளில் அமெரிக்கரும் ஈரானியரும் அமர்ந்தனர். சாரதிக்கு பக்கத்தில் இந்தியர் அமர்ந்து கொண்டார்.

எனது பெயர் நிக்கி. தென் ஆபிரிக்கா. என்று தன்னை அறிமுகப்படுத்திவிட்டு தனது பையில் இருந்து விலைகூடிய லென்ஸ்சுகளுடன் நிக்கோன் கமராவை எடுத்தாள்.

'நான் சம்பந்த மூர்த்தி. எஞ்ஜினியர். அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருக்கிறேன். நீங்கள் படம் எடுப்பவரா?'

'இல்லை. நான் தொழிற்சங்கத்தில் மருத்துவ பகுதியில் வேலை செய்கிறேன். பொழுது போக்காக படம் எடுக்கும் வேலையை செய்கிறேன்.'

'இல்லை நான் ஒரு சிறிய நிக்கோன் வைத்திருக்கிறேன். அதை வெளியில் எடுக்க வெட்கமாக இருக்கிறது.'

'சின்ன கமாராக்களால் நல்லபடம் எடுக்கலாம். எனது படங்களை நான் உங்களுக்கு ஈ மெயிலில் அனுப்புகிறேன்.'

இந்த வேளையில் ஜெனிவா இருந்த பள்ளத்தாக்கை விட்டு எங்களது வான் மலை அடிவாரத்தில் செல்லத் தொடங்கியது. அழகான பகுதிகளை எமது சாரதி விபரிக்க தொடங்கினார். நிக்கியின் கமராவால் வானுக்குள் இருந்த படி கண்ணாடி வழியாக இயற்கை அன்னை தாராளமாக அள்ளித் தெளித்திருக்கும் கண்களை பறிக்கும் காட்சிகளை படம் எடுக்க தொடங்கியபோது பெரும்பாலான தடவைகள் சம்பந்த மூர்த்தியைத் தாண்டித்தான் எடுத்தாள்.

சம்பந்த மூர்த்தி ஒதுங்கி படமெடுக்க வசதியாக இருந்தார். பலமுறை சம்பந்த மூர்த்தி தோள்களில் கமராவை நிலைப்படுத்தி படங்களை எடுத்தாள்.

உயரமான மலைகளின் அடிவாரத்துக்கு வந்ததும் வாகனம் நிறுத்தப்பட்டது. இயற்கையின் உபாதையை தணிப்பவர்களும் கால்களை நீட்டவிரும்புபவர்களும் இறங்கினார்கள். சம்பந்த மூர்த்தி இறங்கி சில பழங்களை வேண்டிவந்து நிக்கியிடம் கொடுத்துவிட்டு அருகில் நின்ற சாரதியிடம் 'மலையின் உச்சியில் என்ன வெப்ப நிலையாக இருக்கும்?' எனக்கேட்டார்.

'24 இற்கு இடையில் இருக்கலாம்.'

'நிக்கி உங்கள் உடைகள் இந்தக் குளிரைத்தாங்கும் என நினைக்கிறீர்களா?' என்று அவளைப்பார்த்துக்கேட்டார் சம்பந்தமூர்த்தி.

அதைப்பற்றி நான் நினைக்கவில்லை. நேற்று முழுவதும் கொன்பரன்ஸ். எதுவும் யோசிக்காமல் படுத்து விட்டேன். அவசரத்தில் எழும்பிவந்துவிட்டேன். மலை உச்சியில் உடுப்புகள் வாடகைக்கு எடுக்க முடியுமா? என திரும்பி சாரதியை கேட்டாள்.

'உடைகள் மற்றும் பனி சப்பாத்துகளை வாடகைக்கு எடுக்கவேண்டிவரும். உங்கள் காலணி மலையேற உதவாது' என கூறியபடி சிரித்தான் சாரதி.

'நிக்கி என்னிடம் ஒரு காஸ்மீர் சுவெட்டர் உள்ளது. உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிடில் அதைத் தரமுடியும்', என்றார் சம்பந்த மூர்த்தி.

'நான் சந்தோசப்படுவேன்' என வாங்கி அணிந்து கொண்டாள்.

மீண்டும் வானில் ஏறி மலையை நோக்கி பயணித்தோம். வளைவானபாதை பச்சைபசேலென்று இருந்தது. இடைக்கிடையே நீர் வீழ்ச்சிகளும் குடி இருப்புகளும் அந்த பிரதேசத்தின் கண்ணுக்கும் கமராவுக்கும் காட்சி வடிவங்களாகின..

சம்பந்தமூர்த்தி பக்கம் பள்ளத்தாக்கானபடியால் நிக்கி சம்பந்த மூர்த்தியில் சாய்ந்தபடி படங்களாக எடுத்துக் கொண்டிருந்தாள். பெண் உடலின் நெருக்கமான நிலையை உணரத் தொடங்கியபோது மலைப்பாதையின் வளைவுகளால் சம்பந்த மூர்த்தியின் தலை சுற்றத் தொடங்கியது.

'நிக்கி எனக்கு தலை சுற்றுகிறது. இந்த வளைவுகளால்.... எதற்கும் கவனமாக இரு. சிலவேளை வாந்தி வரக்கூடும்' என்றார் சம்பந்தமூர்த்தி.

'அதற்கென்ன இப்படியே குனிந்திருங்கள்' என்று சொல்லிவிட்டு மேலாக படங்களை எடுத்துக் கொண்டிருந்தாள்.

அவளது முழங்கைகள் சம்பந்த மூர்த்தியின் முதுகில் பதிந்திருந்தன. இந்த நிலை சம்பந்த மூர்த்திக்கு அவளுடனான அன்னியோன்னியத்தையும் இன்பமான குறுகுறுப்பையும் அளித்ததுடன் கூச்சத்தையும் கொடுத்தது.

வாகனம் மலை அடிவாரத்தில் நிறுத்தப்பட்டது. அங்கிருந்து மலை உச்சிக்கு கேபிள்காரில் சென்றார்கள். கேபிள்காரில் சிறிது விலகி நின்றார் சம்பந்த மூர்த்தி ஆனால் நிக்கி தனது கைப்பையை சம்பந்த மூர்த்தியிடம் கொடுத்து விட்டு தூரத்தில் தெரிந்த பனிபடர்நத மலைசிகரங்களை படம் எடுததுக்கொண்டிருந்தாள். மலை உச்சிக்கு சென்றதும் சம்பந்த மூர்த்தியை காத்திருக்கச் சொல்லிவிட்டு பனிசப்பாத்துகளை வாடகைக்கு எடுக்கும் இடத்தில் மறைந்து திரும்பியபோது மற்றைய மூவரும் சாரதியுடன் முன்னே சென்றுவிட்டனர்.

இப்பொழுது மலையேறும் இடத்தில் திடீரென வீசிய பனிப்புகாரால் மிகவும் சிறிய தூரம்தான் கண்களுக்குப் புலப்பட்டது. சம்பந்த மூர்த்திக்கு சாரதியின் பச்சை மேல்சட்டைதான் அடையாளமாக இருந்தது. சம்பந்த மூர்த்தியின் கையை இறுக்கமாக பிடித்தபடி நிக்கி திரும்பி வந்தபோது 'ஏதாவது பிரச்சனையா... நிக்கி?'' என்றார்.

'இல்லை எனது கண்ணாடி மேல் பனிபடர்ந்து மறைக்கிறது. கண்களுக்கு போடும் லென்சை ஹோட்டலில் விட்டுவிட்டு வந்துவிட்டேன்.'

'மலையேற எந்த ஆயத்தமும் இல்லாமல் வந்திருக்கிறீர்கள்.'

'நல்லவேளை உங்கள் உதவி கிடைத்தது.'

'நான் இல்லாமல் விட்டாலும் எந்த ஆண்களும் உங்களுக்கு உதவி செய்திருப்பார்கள்.'

''சடப்... நான் மேக்கப் கூட போடாமல் வந்திருக்கிறேனே... இரண்டு ரீன் ஏஜ் பிள்ளைகளைப் பெற்றுள்ளேன். அப்படி இருந்தும் நீங்கள் சொல்வது இந்தக் குளிரிலும் என்னை புல்லரிக்க வைக்கிறது.

'நான் உங்களோடு தென் ஆபிரிக்கா வருவதாக தீர்மானித்துள்ளேன்'

'ஆகா ஆகா இப்படி பொய்கள் இந்த இடத்தில் சொல்வது எனக்கு பிடித்திருக்கு.'

இருவரும் மலையின் மீது வந்த போது அங்கே எங்களை பார்த்தபடி மற்றையோர் சாரதியுடன் நின்றார்கள்

சாரதி நகைச்சுவையாக 'இருவரும் எங்களைவிட்டு பிரிந்து விட்டீர்கள் என நினைத்துக்கொண்டு தென் ஆபிரிக்கா துரதராலயத்துக்கா அல்லது அவுஸ்திரேலியாவுக்கா அறிவிப்பது என யேசித்துக் கொண்டிருந்தோம்.

'நிக்கியின் கண்களுக்கு லென்சு இல்லாத படியால் நான் நின்று கூட்டி வரவேண்டி இருந்தது.'

'நான் எந்த ஆயத்தமும் இல்லாது வந்து இவருக்கு பிரச்சினை கொடுக்கிறேன்' என்றாள் நிக்கி.

'எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை'

'இங்கே வந்து பாருங்கள்' சிறுகுழந்தைபோல் கைகளை ஆட்டி எல்லோரையும் அந்த இடத்துக்கு அழைத்தாள்.

நாங்கள் எல்லோரும் அந்த இடத்தை எட்டிப் பார்த்த போது அந்த பனிபடர்ந்த உச்சியில் சரிவாக ஒரு கருங்கல்லுப் பாறை நீட்சியாக இருந்தது. அதன் கூர்மையான முனையில் உறை பனி படரமுடியவில்லை. வழுவழுப்பான பாறையாதலால் அதில் தேங்கி நிற்க முடியவில்லை. அந்த முனையின் பக்க வாட்டில் சிறு வெடிப்பு இருந்தது.அந்த வெடிப்பில் மலர்ச் செடி படர்ந்து அழகான ஊதா நிற மலர்களை பார்த்த படி அந்த பாறையின் முனையை ஆக்கிரமித்தபடி இருந்தது.

எங்கும் உறைபனிபடர்ந்து வெண்மையான எந்த உயிரினமும் உறைந்து போகும் குளிரில் விடாப்பிடியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மலர் செடி வாழ்க்கையின் பிடிப்புக்கு ஒரு முன்னுதாரணமாக பாறை முனையில் வாழ்ந்து காட்டியது.

'இது ஒரு வாழ்க்கையின் தத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது' என கூறி தானும் தனது சிறிய கெமராவால் படம் எடுத்தார் சம்பந்த மூர்த்தி.

'ஒவ்வொரு தற்கொலைப் போராளிகளையும் இங்கே அழைத்துவந்து இந்த மலரச்செடியை காட்டவேண்டும்' என்றார் அந்த ஈரானியர்.

'நானும் அதைத்தான் நினைத்தேன் நண்பரே. அதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள்' என்றார் சம்பந்த மூர்த்தி.

'இப்படியான வாழ்வுக்காகத்தான் நானும் இந்த பனிக்காலத்தில் ஒவ்வொரு நாளும் இந்த மலைக்கு வந்து போகிறேன். வெயில்காலம் நான் மகனிடம் பிரேசில் சென்று விடுவேன். இப்பொழுது இந்த மலை உச்சியில் உள்ள இந்திய உணவுச்சாலைக்குப் போவோம்.'

மலைக்கு ஏறிப்போகும் போதே இந்திய உணவின் வாசனை பனிப்புகாரில் தவழ்ந்து எல்லோரினதும் மூக்கில் நுழைந்தது.

'தண்டூரீ சிக்கனின் மணம்' என்றார் எமது டெல்லிக்காரர். அமைதியாக வந்த கொண்டிருந்தவரது முகத்தில் சிரிப்பும் நடையில் உற்சாகமும் தெரிந்தது.

உணவுச்சாலை உச்சியில் இருந்தாலும் சகலவசதிகளுடனும் இருந்தது. இந்திய உணவுவகைகளுடன் ஐரோப்பிய உணவுகளும் இருந்தன. ஒவ்வொருவரும், தங்களுக்கு பிடித்தமான உணவுகளை தட்டில் போட்டுக்கொண்டு வந்ததும் மீண்டும் தற்கொலை போராளிகள் பற்றிய பேச்சு வந்தது, 'எமது நாட்டில் முல்லாக்கள்தான் இதற்குக் காரணம். மதத்தின் பெயரால் இது நடக்கிறது' என்றார் ஈரானியர்.

மதம் மட்டுமல்ல எங்கள் நாட்டில் இன விடுதலை என்று சொல்லிக்கொண்டு தற்கொலைப்போராளிகள் ஆகிறார்கள். தீவிரமான கோட்பாடுகள் கருத்தியல்கள் மனதில் புகுத்தப்படும் போது மனிதர்கள் வெறும் புள்ளிகளாக ஆக்கப்படுகிறார்கள். தேசியவாதம் மார்க்சியம் மற்றும் மதங்கள் முக்கியத்துவப்படும்போது இந்த நிலை ஏற்படுகிறது. இந்தியாவில் சாதிக்காக உயிரையும் அமெரிக்காவில் நிறத்துக்காக உயிரையும் கொடுக்கும் நிலை இருக்கிறது.' என்றார் சம்பந்த மூர்த்தி

'அமெரிக்கா போன்ற நாடுகள் மற்றைய சிறிய நாடுகளுடன் நடந்து கொள்ளும் முறைகளும் இதற்குக் காரணம்' என்றார் அமெரிக்கர்.

'அரசியல் பேசி பிரயோசனம் இல்லை. எமது நாட்டில் எயிட்சைப்பற்றி நான் தொழிலாளர்களுடன் பேசினாலும் அரசியலாக்கப்படும்' என விரக்தியுடன் சொன்னாள் நிக்கி.

தென்னாபிரிக்காவில் எயிட்ஸ் அரசியலாக்கப்படுவதை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன் என்றார் அமெரிக்கர்.

'உலக காற்பந்து போட்டி தென்னாபிரிக்காவில் நடந்ததால் எயிட்ஸ் கூடி இருக்குமா?' என்றார் ஈரானியர்.

'நீங்களே அனுமானித்துக்கொள்ளுங்கள்' என கண்ணை சுழட்டினாள் நிக்கி.

மலையின் கீழே இறங்கி வரும்போது பனிச்சரிவில் சறுக்கும் இடம்வந்தது பிளாஸ்ரிக்போட்டை எடுத்துக்கொண்டு சிறு குழந்தைகள் போல் எல்லேரும் சறுக்கினார்கள்.

நாய்கள் இழுக்கும் பனிசறுக்கு வண்டியில் சம்பந்த மூர்த்தி நிக்கியுடன் சென்றார்.

'பலநாட்களுக்குப் பிறகு இன்றுதான் சந்தோசமாக இருக்கிறேன் என நிக்கி சொன்னதும் திடுக்கிட்டுத் திரும்பினார் சம்பந்த மூர்த்தி.

'என்ன இப்படிச்சொல்கிறீர்கள்?'

நான் அதைப் பேசி இந்த அழகிய சூழலை கெடுக்க விரும்பவில்லை.

நாய் இழுக்கும் பனிச்சறுக்கு வண்டியின் பயணம் முடிவுக்கு வந்தது. நாய்களுடன் சிறிது பேசிவிட்டு வந்தாள். வண்டி இழுத்த களைப்பில் அந்த நாய்கள் எவரையும் பொருட்படுத்தவில்லை. ஒரு கடுவன் எல்லோரையும் பார்த்து முறுகியது.

மலைப்பிரயாணம் முடிவுக்கு வந்து வானில் ஏறியதும் மீண்டும் ஜெனிவா நோக்கி பிரயாணம் தொடங்கியது. எதுவும் பேசாத நிக்கி தனது கமராவுககு ஓய்வுகொடுத்து விட்டு தனது போனில் சிறு தகவலை அனுப்பிக்கொண்டிருந்தாள்.

'இன்று எனது மூத்த மகனுக்கு ஒரு சோதனை இருக்கிறது. அதுதான் கவனமாக செய்யும்படி தகவல் அனுப்பினேன்.'

அப்பொழுதுதான் சம்பந்த மூர்த்திக்கு வீட்டுக்கு தகவல் அனுப்புவதற்கு நினைவு வந்தது. அவரது மனைவி இன்று இரவு ஜெனிவா எயார்போட் வர இருப்பதும் நினைவுக்கு வந்தது.

'நீங்கள் சொன்னதும்தான் எனக்கும் செய்யவேண்டிய விடயம் நினைவுக்கு வந்தது. இன்று நள்ளிரவுக்கு எனது மனைவியை எயார்போட்டில் சந்திக்கவேண்டும்.'

'ஆண்கனே இப்படித்தான்' என சிரித்தாள்.

சம்பந்த மூர்த்தி சிரித்து விட்டு எதுவும் பேசவில்லை.

அமைதியாக தொடர்ந்தது மிகுதிப் பிரயாணம்.

எமது ட்றைவர் மட்டும் சுவிற்சர்லாந்தைப் பற்றிய விபரங்களை சொல்லிக்கொண்டுவந்தார்.

இறங்கியதும் ஒவ்வொருவரும் விடைகொடுத்து பிரியும் போது, நிக்கி சம்பந்த மூர்த்தியின் சுவெட்டருக்கு 'நன்றி' என கொண்டுவந்து தந்தாள்.

அப்பொழுது பக்கத்தில் உள்ள கபேயில் 'காப்பி குடிப்போமா' என கேட்டுவிட்டு அவளது அனுமதியை எதிர்பார்க்காமல் பக்கத்திலே இருந்த கபேயில் சென்று சம்பந்த மூர்த்தி அமர்ந்தார்.

'நான் சொன்ன ஒரு வார்த்தையால் திரும்பி வரும் பயணம் உங்களுக்கு உற்சாகம் இல்லாமல் போய்விட்டது. எனது பிழை. நீங்கள் மிகவும் மென்மையானவர் போல் தெரிகிறது.'

'எதைச் சொல்கிறீர்கள்.'

'ஆண்கள் எல்லோரும் அப்படித்தான் என்றதை'

'அந்த வசனம் என்னை பாதிக்கவில்லை.'

'பின்பு என்ன?'

'நீங்கள் பலகாலத்துக்குப் பிறகு சந்தோசமாக இருக்கிறேன் என்றதுதான் என்னைப்பாதித்தது.'

வந்த காபியை எடுக்கப்போன நிக்கியின் முகத்தில் இருள் கவிந்தது.

'மன்னிக்கவேண்டும. நீங்கள் கேட்டதால் சொன்னேன்.'

'அது பற்றியென்ன. இன்று என்னை அறிந்திராத ஒர் மனிதரான நீங்கள் எனக்கு சகல உதவியும் செய்தீர்கள். அதை மதித்து நான் கூறியவிடயம்.'எனக் கூறும்போது கண்கள் கலங்கின..

'பிளீஸ்..'

'நான் ஏன் உங்களுக்கு பொய் சொல்ல வேண்டும். எனது கதை ஒரு சோகக் கதை. அதைச் சொல்லி உங்களை பாதிக்க வேண்டாமென நினைத்தேன். ஆனாலும் சொல்லுவது எனக்கு ஆறுதல். எனது கணவர் தென் ஆபிரிக்க விமானத்தில் பைலட்டாக வேலை செய்கிறார். இரண்டு பையன்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு என்னுடன் கட்டிலில் படுப்பதை தவிர்த்துக்கொண்டுவந்தார். இதைப்பொறுக்க ஏலாமல் நான் அவரை எதிர்வு கொண்டபோது தனக்கு எய்ட்ஸ் இருப்பதாக கூறினார்.

இது எப்படி வந்தது எனக்கேட்டபோது ஆண் தொடர்பால் வந்ததாக கூறினார். எனக்கு இதைத்தாங்க முடியவில்லை.

என் பாதிப்பு இரண்டுவிதமானது. நான் காதலித்து மணந்தவர் ஆண்களுடன் படுப்பவர். இத்துடன் நான் எயிட்ஸ் பரவலை தொழிலாளர் மத்தியில் தடுக்க திட்டங்கள் போடும் திணைக்களத்து உயர் அதிகாரி.

நான் விவாக விடுப்பு எடுக்கும் போது இவைகளை வெளிப்படையாக சொல்லவேண்டும். இதனால் மனதில் ஒரு பூகம்பத்தை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறேன். என் மனதின் வெப்பத்தை அல்ப்ஸ மலையில் சொல்லி இருந்தால் அந்தப் பனியை உருக்கி பாரிய பனிச்சரிவை உருவாக்கிவிட்டிருக்கும்.'

'உமது நிலையை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது.'

'நீங்கள் அருமையான மனிதர். நான் போகவேண்டும்.'

'என்னுடன் உணவை அருந்தி விட்டு சென்றால் என்ன நிக்கி.'

'அது அபாயமானது. ஏற்கனவே உங்களை நான் விரும்பத் தொடங்கிவிட்டேன். இதைத் தொடரக்கூடாது என்பது எனது விருப்பம்'

எழுந்து கட்டியணைத்து கன்னத்தில் முத்தத்தை கொடுத்து விட்டு உதடுகளை விரலால் தொட்டு 'இந்த உதடுகளை இன்று வரும் உங்கள் மனைவிக்காக ஈரமாக வைத்திருங்கள்' எனச்சொல்லி அணைப்பிலிருந்து விடுபட்டாள்.

'நிக்கி உங்களை என் வாழ்க்கையில் மறக்க முடியாது.'


'உங்களையும்தான். ஏன் தெரியுமா?'

'இல்லை.'

'எல்லா போட்டோக்களிலும் உங்கள் சுவெட்டரைத்தான் அணிந்திருக்கிறேன்' எனக் கூறிவிட்டு அந்தத் தெருவில் இருந்து, காலையில் வந்ததுபோன்று மறைந்தாள்.

சம்பந்த மூர்த்தியின் சலனங்கள் அல்ப்ஸ் மலையின் உச்சியில் பார்த்த பனிப்புகாரைப்போல் மெதுவாக விலகியது.

(uthayam@optusnet.com.au)




**தா**டகை யாரென மறந்து விட்டீர்களா? இளமையிலே கம்ப ராமாயணத்தைப் படித்துச் சுவைத்த நாட்களின் பின் எனக்குக் கூட ஐந்தாறு தசாப்தங்களாக அவளைப் பற்றிச் சிந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால், எதிர்பாராத விதமாக நாம் இப்போ வசித்து வரும் தட்டு வீட்டு அகத்தினில் அப்படித் தருணம் எம்மைத் தேடி வந்தது. அதன் யுகம் பத்து ஆண்டுகள் நீடித்தது. அந்தச் சஞ்சல நாட்கள் என் வாழ்க்கையில் மறக்க முடியாதவை. அந்தக் கதையையே இன்று நான் வடிக்க முனைகிறேன். "தாடகை தண்டனைக் காண்டம்" என்றும் அதை அழைக்கலாம்.

1998ம் ஆண்டு, என் மனைவியார் பிரிட்டிஷ் தேசியச் சுகாதாரச் சேவையில் தனது மூத்த வைத்திய பதவியை விட்டு விலகி இளைப்புப் பெறும் கட்டம் வந்தது.

எம் நான்கு பிள்ளைகளும் வளர்ந்து, பட்டதாரிகளாகி, உத்தியோகங்கள் பெற்று, லண்டனிலும் அம் மாநகருக்கு அண்மையில் உள்ள இடங்களிலும் வேலை செய்யத் தொடங்கி எம் இருவரையும் எமது பன்னிரண்டு படுக்கை அறைகள் கொண்ட பேர்மிங்காம் இரணை வீடாகிய அந்நாளின் சென்சறி ஹௌஸ் (நூற்றாண்டு வீடு) இல் தனிக்க விட்டுப் பறந்து ஓடியே விட்டனர்.

எனவே நாமும், லண்டனிலே அல்லது லண்டனுக்கு மிகக் கிட்டியதாக, எம் முதிர்ந்த வயதில் சிரமமின்றிக் கூட்டித் துடைக்கக் கூடிய ஒரு சிறிய வீட்டையோ, தட்டு வீடையோ தேடினோம். இதே கருமமாக லண்டனில் வந்திருந்து, இரண்டு கிழமைகளில் எம் இன்றைய தட்டு வீட்டைத் தெரிவு செய்து, 1998ல் வாங்கினோம்.

இங்குதான் எமது தாடகைக் கதாநாயகி தோன்றி நடித்தார். அவர் ஒரு நடுத்தர வயதைச் சேர்ந்த ஆங்கில மாது. அவரை நாம் சூத்தி (ஆங்கிலத்தில் Sooty) என்று அழைத்தல் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

எனக்குத் தட்டுவீடுகளின் குத்தகை ஒப்பந்தங்களைப் பற்றியும் அவற்றைக் கண்காணிக்கும் நபர்களின் குணாதிசயங்களைப் பற்றியும் ஓரளவு தெரிந்திருந்த படியால், ஒப்பந்தத்தின் நகல் ஒன்றை முன் கூட்டியே பெற்றுக் கவனமாகப் படித்தேன். ஹரோ மாநகரசபைக்கும் சென்று வரி, கழிவகற்றல், தெருக்கள் விசாலித்தல், முதலிய திட்டங்கள் எமது வீட்டைப் பாதிக்க முடியாது என உறுதிப்படுத்தினேன்.

அடுத்த கட்டமாக வீட்டையும், விற்பனைத் தரகர் மூலம் இரண்டுமூன்று தடவை பார்த்து, அறைகளின் அளவுகளை நானே எடுத்துப் படங்களும் வரைந்து, பரிசீலனை திருப்தியடைந்தபின், கடைசிக்கட்டமாக, எம் தட்டுவீட்டுக் கட்டடத்தைத் தலத்தில் வசித்து நிர்வாகிக்கும் சூத்தியை சந்திக்கச் சென்றேன். முக்கிய கேள்விகளைக் குறித்துச் சென்று மூன்று தடவைகள் சந்தித்துப் பேசினேன். நாளாந்தக் குடியிருத்தல் சம்பந்தமான சட்டங்களையும் நடைமுறை விதிகளையும் பற்றி விவாதித்துத் தெளிவாக இணங்கினோம். எனக்குத் திருப்தி.

என் மனைவியாரிடம் நான் எல்லா விவரங்களையும் சொல்ல, அவரும் தன் சம்மதத்தையும் தர, அத்தட்டுவீட்டை வாங்கி, குடிவர வேண்டிய ஆயத்தங்கள், தளபாடங்கள் முதலியவற்றை நானே மாதாந்தம் எம் பேர்மிங்காம் நூற்றாண்டு வீட்டிலிருந்து ஒவ்வொன்றாக எனது மகிழூர்ந்தில் ஏற்றி வந்து சேர்த்து அடுக்கி, ஒழுங்கு செய்தேன். பேர்மிங்காம் வீட்டை உடனே விற்பனைக்குப் போட முடிவு செய்தோம். அது பெரியதோர் வீடு. எம் சேமிப்பு எல்லாம் அதில் மாண்டிருந்தது.

எனவே நாம் எம் விற்பனை விலையை இறுக்கிப் பிடித்தோம். அதனால் அதன் விற்பனை மூன்று வருடங்களாக இழுபட்டது. மாதம் ஒருமுறை நானே சாமான்களுடன் எம் புதிய வீட்டுக்குத் தனிய வந்து, அவற்றை இறக்கி அடுக்கி வந்தேன். அந்நாட்களில் முன்வாசற் கண்ணாடி அறையில் என்றும் நந்திபோல் வீற்றிருக்கும் சூத்தியிடம் நட்பாக ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசியவாறு சென்று வந்தேன். சூத்தி இன்பமாகவே சிரிப்பாள், புன்னகிப்பாள். அவளின் அகத்தின் அழகு முகத்திலே தெரிகிறது என்று நாம் ஏமார்ந்துவிட்டோம் என்பதைக் கண்டு பிடித்து உறுதியாக்க எனக்கும் மனைவியாருக்கும் சில வருடங்கள் எடுத்தன.

எமது சந்தேகங்கள், நாம் நூற்றாண்டு வீட்டை விற்று இங்கு முழுநேரமாகக் குடிவந்த 2003 ஜனவரியிலேயே ஆரம்பித்தன. கூடி வசித்தால் அல்லது கூடி வேலைகள், வியாபாரம், தொழில், செய்தாலே ஒருவரை ஒருவர் நன்றாக அறிய முடியும் எனும் பேருண்மை எமக்கு மறுபடியும் நிரூபிக்கப்பட்டது. எப்படி 2008ல் சூத்தி உத்தியோக உயர்வு பெற்று வேறு தலத்துக்குச் செல்வதென, பிரியாவிடை விருந்து கூட வைத்து அனுப்பினோம்? ஆனால் அடுத்த மாதமே நாமிருவர் உட்பட இங்குள்ளோரின் முறைப்பாட்டில், எப்படி சூத்தி வேலைநீக்கம் பெற்றாள்? இனித்தான் இக்கதையின் ருசியான உள்ளுடல் வருகிறது. சப்பிச் சுவையுங்கள்!

சூத்தி, சிரிப்பதில் சரியான சுட்டி என்றேன். அது மிக்க மிக்க உண்மை. இங்கு குடியிருப்புத் தேடி வரும் எவரையும் தனது சிரிப்பாலும், விகடப் பேச்சாலும், எதற்கும் இணங்கும் போக்கைப் போன்ற மாயாசாலத்தாலும் மயக்கி,

எப்படியோ குடிவர வைத்து, வந்த பின் அவர்களை மதிப்பீடு செய்து அவரவர் அடிப்படை இயல்புகளுக்கேற்ப தன் நடைமுறையை மாற்றிப் பிரயோகிப்பாள். இதை நான் கவனித்துச் சிந்தித்துப் பாரபட்சமின்றி ஆராய்ந்து முடிவெடுக்கப் பலமாதங்கள் சென்றன. அவள் ஒரு சிறந்த நடிகை. நானும் நடிப்புப் போன்றவற்றில் குறைந்த ஆளல்ல. அது எனக்குச் சூத்தி, 'பத்தையும் பலதையும் சொல்வதை ஊக்கியது.

எம் முதல் மூன்று சந்திப்பின் போது ஒருநாள் அவளும் நானும் நான் வாங்கவிருந்த வீட்டினைப் பார்த்துவிட்டு ஆள் தூக்கியில் கீழே செல்லும்போது ஏதோ சொல்லிவிட்டுத் தன்மூஞ் சியை என் முகத்துக்குக் கிட்டத் தள்ளி நீட்டிப் பிடித்தாள். நான் அதனைக் கண்டும் காணாமலே, வேறேதோ பேசிப் பிடி கொடாமல் நடந்து. அப்பாடா எனத் தப்பிக் கொண்டேன்.

மேலும், சூத்தி இங்கிலாந்தின் கடலோர நகர் ஒன்றில் இரு சுற்றுலா விடுதலை வீடுகளின் சொந்தக்காரி என்றும், தன் முதலாம் கணவனை ஒதுக்கி இப்போ வேறு ஒருவருடனேயே இங்கு வாழ்வதாகவும், தான் மலிவாக இங்கேயும் தட்டு வீடுகள் வாங்கி வாடகைக்கு விட விரும்புவதைப் பற்றியும் தானாகவே எனக்குச் சொல்லியிருக்கிறாள். அவற்றைக் கேட்டு என் மனக்கோவையில் பூட்டினேன்.

இங்கு நாம் வருமுன்னரே குடிவந்த, என்னிலும் பத்து வயது கூடிய அல்பி எனும் தனி ஆண் ஒருவர் எங்களின் இரண்டாம் தட்டிலேயே சீவித்து வந்தார்.

அல்பி பெற்றோருக்கு ஒரே பிள்ளை. தன் தந்தையார் இறந்தபின் தாயாரும் அவரும் ஒன்றாக வாழ்ந்து, அவள் தன் 91ம் வயதில் இறக்க, அவளின் வீட்டை விற்றுவிட்டு, இங்கு ஒரு ஓரறைத் தட்டுவீடு வாங்கி வசித்து வந்தார். நான் தனியாக வந்து போகும் ஆண்டுகளில் அவருக்கும் எனக்கும் நட்புத் தொடங்கி வளர்ந்து வந்தது. தான் வாழ்க்கையில் என்றுமே ஒரு பெண்ணையும் காதலிக்கவில்லை என்றும் ஒரு தடவையும் மணம் முடிக்கவில்லை எனவும் எனக்குச் சொல்லியிருக்கிறார். அவருக்கும் சூத்தியில் பல சந்தேகங்களும் விரும்பத் தகாத அம்சங்களும் தென்பட்டன என அவரிடமிருந்து அறிந்தேன்.

அல்பி பணக் குறை உடைய மனிதன். ஒரு சிறிய பென்சனுடன், பிச்சைப்பணம் பெற அவரின் தற்பெருமை இடங்கொடாத படியால், எப்போதும் ஒரே உடுப்பை, வீட்டுக்கும் வெளியிலும் போடுவார். 83 வயதுள்ள மனிதனுக்கு மூளை மட்டும் கச்சிதமாகவே வேலை செய்தது.

ஒருமுறை சிகிச்சை மனைக்கு ஏதோ சத்திர சிகிச்சைக்கு என்னையே கூட்டிச்சென்று திரும்பவும் கூட்டிவர ஒழுங்கு செய்து, நான் திடமாக மறுத்தும் ஏற்றுக் கொள்ளாமல் எனக்கு ஒருலீட்டர் விஸ்கி பரிசு தந்தார். அவ்வளவு கண்ணியமும் தற்பெருமையும்! அந்த விஸ்கி இன்றும் என்னிடம் உண்டு.

அல்பியின் குளியலறையில் ஒரு நத்தார் தினத்தன்று தண்ணீர்க் குழாய் பூட்ட முடியாது வந்து, சூத்தி சிபார்சு செய்த கொம்பனியை அல்பி கூப்பிட, எத்தனையோ நாட்கள் வந்து இழுத்தடித்து, ஒருமாதத்தின் பின் அதைத் திருத்தி, கடைசியில் 500 பவுண்கள் அல்பியிடம் கேட்டார்கள். எனது கணிப்பின் படி அந்த வேலைக்கு 50-75 பவுணே வந்திருக்கும். ஆனால் சூத்தி, அல்பியில் இருந்த் புகைச்சலினால், ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்தும், அக் கொம்பனி ஆட்களுடன் ஏதோஒரு வழியில் மூட்டி விட்டுமே, அல்பிக்கு அந்த விலை! நடந்ததை அறிந்தும் எம் இருவராலும் நேரிடையாக அல்பிக்கு உதவ முடியவில்லை. தூர நின்று, ஆலோசனைகள் மட்டும் வழங்கினோம்.

சில மாதங்களுக்குப் பின் என் மனைவியும் நானும் அல்பியின் கதவைத் தாண்டி எங்கோ செல்லும் போது சூத்தி அவரின் மணியை அடித்து விட்டுக் காத்து நின்றாள். எம்மைக் கண்டவுடன் தானாகவே, நான் ஏன் நிற்கிறேன் தெரியுமோ? அல்பி கீழேயுள்ள, எல்லாருக்கும் பொதுவான அறையிலிருந்து இரண்டு மூன்று முறை பிஸ்கிட்டுகள் களவாடியிருக்கிறார். அதை எம் கள்ளக் கமெரா ஒளிப்பதிவு செய்துள்ளது. அவரிடம் நூறுபவுண் குற்றம் கேட்கப்போறேன். தராவிட்டால் பொலீசுக்கு முறையிடுவதெனப் பயமுறுத்தப் போகிறேன் என்றாள். நாங்கள், அவர் எங்களை மட்டும் கேட்டிருந்தால் நாங்கள் வேண்டிய அளவு பிஸ்கிட்டுகள் கொடுத்திருப்போம் என்று சொல்லி விட்டுச் சென்றோம். நாம் திரும்பி வரும்போது வெளியே வந்து கொண்டே, சூத்தி, இதோ நூறு பவுண் காசோலை என்று எங்களுக்குப் புளுகி விட்டுப் பறந்தடித்துக்கொண்டு ஓடினாள்.

அடுத்த நாளே, சூத்தியின் இயல்பை நன்கு அறிந்த அல்பி, வெட்கம் தாங்க முடியாது, அத்துடன் இயல்பாகவே நோயுமுற்று, இலக்கம் 999ஐத் தொலை பேசியில் அழைத்து சிகிச்சை மனைக்குச் சென்றே விட்டார். நாமும் சென்று பார்த்தோம். ஆனால் காசோலை விடயத்தைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லை. சில வாரங்களின் பின் அல்பி பிரத்தியேக இளைப்பாறு மனைக்குச் சென்று அங்கு பணம் கட்ட முடியாமல் அவருடைய தட்டு வீட்டை விற்பனைக்குப் போட்டு விற்று, கெதியில் சிகிச்சை மனையிலேயே மடிந்து விட்டார், என நாம் பின்னர் அறிந்தோம். அவரின் வீட்டை வாங்கியது, சூத்தியும் அவளின் காதலரும்! விலை? 135 ஆயிரம் பவுண்கள் மட்டுமே! ஆனால் அதன் உண்மைப் பெறுமதி? 155 ஆயிரம் பவுண்கள்!! இத் தகவல்களை நாம் பின்னரே அறிந்தோம்.

அல்பியின் வீட்டைச் சூத்தியும் அவளுடன் கூடிச் சீவித்த குடிகார ஆணுமே வாங்கியது என அறிந்தவுடன், அதற்கு ஒருவருடத்துக்கு முன் விலை போன இன்னுமொரு நிலமட்ட வீட்டின் ஞாபகம் எனக்கு வரவே அதைப்பற்றியும் பதிவு கந்தோரில் விசாரித்தேன். அதை வாங்கியதும் சூத்தியே தான் என அறிந்தேன். அதில் வசித்துச் சடுதியாகச் சிகிச்சை மனைக்குச் சென்று நாம் ஒருவரும் அறியாமல் இறந்தது, மிகவும் சுகாதாரத்துடன் சீவித்து எப்போதும் சிரித்துக் கதைத்துச் சீட்டுக் கடுதாசி விளையாட்டில் எம் ஒருவராலும் வெல்ல முடியாத ஓர் 96 வயதுப் பெண். அவளின் சடுதி இறப்பின் மர்மம் அப்படியே இருக்க, அதனால் இன்னுமொரு மர்மத்துக்கு நான் விசாரித்து விடைகண்டேன்.

அல்பியின் வீடு கைமாற ஒரு வருடத்துக்கு முன், எமது ஒரு படுக்கை வீட்டில் என் நூல்களே அதிக இடத்தை எடுப்பதால் இங்கு விலைக்கு வரும் இரண்டுபடுக்கை வீடுகளை நோக்கி விழிப்பாக இருந்தோம். அப்படி ஏதும் வந்தால் எமக்கு அறிவிக்குமாறும் சொல்லி வைத்தோம். ஒரு வீடு வந்தது.

அந்த வீடு விலைக்கு வந்தபோது சூத்தி எமக்குச் சொல்லவில்லை. வேறு மூன்று, இரண்டுபடுக்கை வீடுகள் இங்கு விலைக்கு இருப்பதாக நாம் அறிந்து, அவற்றைப் பார்வையிடக் கேட்ட போதும் (தான் வீடு காட்டும் ஒவ்வொரு தடவையும் அவளுக்கு நூறு பவுண் சன்மானம் கிடைத்தது எனினும்)

எமக்கு அவ்வீடுகளைக் காட்ட மறுத்து விட்டாள். அவை விற்பட்டு விட்டன எனப் பொய் சொன்னாள். ஏன், என்பதன் (நான் முன்னர் கூறிய) மர்மம் பின்னரே எங்கள் மனதில் உதயமாகியது. அவற்றை அவளே வாங்க எண்ணியிருந்தாள்!

இப்படியாக, பொய்கள் சொல்வதில் எங்கள் சூத்தி அகாய சூரி. அந்தந்தத் தருணத்தில் தப்ப, நாக்கின் நுனியில் முதலில் வரும் பொய்யை அப்படியே, சிரித்துக் கொண்டு, ஒரு பகிடியுடன் கக்கி விடுவாள். பிறகு அவற்றைப் பற்றி விசாரித்தால், வேறு பொய்களை லாவகமாக உற்பத்திசெய்து தப்பிக்கொள்வாள். ஏனெனில் அவளுக்குக் கற்பனா சக்தியும் அபாரம். அத்துடன் தனது பொய் அம்புகள் வெளி வந்தாலும், தன்னை ஒருவரும் ஒன்றும் செய்துவிட முடியாது எனும் மமதையும் வளர ஆரம்பித்தது. ஏனெனில், இங்கு பத்து வருடங்களின் மேல் தொடர்ந்து வேலைசெய்து தன் கொம்பனியைப் பற்றியும் இங்கு வசிக்கும் வயோதிபரின் இயல்புகளைப் பற்றியும் கசடறக் கற்றிருந்தாள்.

உதாரணமாக, இங்கு வசிப்பது பெரும்பாலும் பெண்களே. அத்துடன் எல்லோரும் வயோதிபப் பெண்கள். சிலர் நாளாந்தம் ஆண்டவனின் அழைப்பைக் காத்திருப்பவர்கள். அவர்களில், தான் விரும்புபவருக்கு எங்கள் செலவில், பொது வேலை நேரத்தில், சில பிரத்தியேக சேவைகள் செய்து அவர்களைத் தன் கையுக்குள் போட்டு அடிமைகளாக்கி விடுவாள். அதன் பின், அவர்கள் அவளின் தாளத்துக்கே ஆட வேண்டும். அத்துடன், அவளின் நடத்தையைப் பற்றி அவர்கள் சேர்ந்து பேசி உண்மைகளை அறிவதை ஒரு பிரமாண்டமான பொய்யினால் மடக்கி வைத்திருந்தாள்.

அதாவது, அவர்கள் தம் தம் வீடுகளுள் இருந்து நேரில் கூடியோ, தொலை பேசியிலோ, பேசுவதை எல்லாம், தான் மின்னணுக் கருவிகளின் இணைப்பு மூலம் தன் கந்தோரிலும் தன் வீட்டினுள்ளும் இருந்து கேட்க முடியுமென சொல்லிப் பயப்படுத்தி வைத்திருந்தாள். அத்துடன் இங்கு அமுலிலிருந்த வசிப்பாளர் சங்கத்து அமைப்பை இப்படியான குள்ளவழிகளால் மூடச்செய்து, அதன் தலைவரையும் மனைவியையும் இங்கிருந்து தாமாகவே வெளியேறக் காரணியாகவும் இருந்திருக்கிறாள்.

சூத்திக்குத் தனித்த, பிரத்தியேக வாழ்க்கை என்று ஒன்று இருக்கவில்லை. பழைய மண வாழ்வில் பிறந்த ஒரேஒரு மகன், 18-20 வயதில் வெளியே எங்கோ வசித்து, இவளுடன் சிறிது தொடர்பே வைத்திருந்தான். தனக்கும் தன் தகப்பனுக்குமே என்றுமே சரிவரவில்லை என்றும் எனக்கு சொல்லியிருக்கிறாள். மத்திய இங்கிலாந்தில் தனிய வசித்து வந்த தாயாருடன் கூட, தொடர்புகள் அதிகம் வைத்திருக்கவில்லை. கூடி வாழ்ந்த ஆணுடனும், நித்தியசண்டை. அவனும், வருவதும் போவதுமாக இருந்தான். எனவே இங்குள்ள பெண்கள் சிலருடன் நிர்வாக எல்லை கடந்த நட்பை வளர்த்து, வீட்டுக் குழுவென ஒன்றையமைத்து, அவளும் அம் மூவரும் இரகசியமாக முடிவுகள் எடுத்து நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்து, மற்றைய 35 கூட்டுவாசிகளையும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். பொதுப் பணத்தைத் தான் விரும்பியபடி அக் குழுவுடன் சேர்ந்து செலவு செய்யத் தலைப்பட்டாள்.

உதாரணமாக, 15,000 பவுண்களுக்கு எம் பொது இருப்பறை, தேநீர் அறைக்கு புது தளபாடங்கள் வாங்கும் போது, ஒரு கொம்பனியுடன் பிரத்தியேகப் பேரம் பேசி, பழையது எனினும் பாவிக்கத் தக்கதாகவும் பெறுமதி உடையவை ஆகவும் இருந்த தளபாடங்களை இங்கு சிலருக்கு மலிவாக விற்றுவிட்டு, மிகுதியைத் தன் பிரத்தியேக விடுதலைவீடுகளுக்கு அனுப்பி, இலாபமடைந்தாள்.

இவற்றைப் பற்றி இங்குள்ள பெண்கள் உடுப்புத் தோய்க்கும் அறையிலும் இடைவழிகளிலும் இரண்டு மூன்று பேராகக் கூடிக் குசுகுசெனப் பேசினார்கள். ஆனால் அவளின் மேற் கந்தோருக்கு முறையிடவோ எழுதவோ மறுத்தார்கள். நாங்கள் மட்டும் பலதடவை பல விடயங்களைத் தைரியமாக எழுதினோம். சில விடயங்களை சரிசெய்து விட்டு அக் கொம்பனியின் உயர் நிர்வாகிகள் எம்மிடம் மன்னிப்பும் கேட்டனர். ஆனால் பலதடவை, அங்கிருந்து விசாரணைக்கு வரும் பெண் அதிகாரிகளை இவள் ஏதோ வழிகளில் சமாளித்து அனுப்பி விடுவாள். ஆனால், இவற்றிற்கு எல்லாம் ஒரு உச்சக்கட்ட முடிவு 2008 ஆகஸ்டில் வந்தது. எமது சூத்தியாகிய நவீன தாடகை, அவளின் பழைய கூட்டாளிகளின் முறைப்பாட்டால், எம்வாக்குமூலத்துடன், தன்கொம்பனியால் தண்டிக்கப்பட்டாள்.

சூத்தி எவ்வாறு தண்டிக்கப் பட்டாள், அரசர்கள் அன்று கொல்லா விடினும் ஆண்டவன் எப்படி நின்று கொன்றான், என்ற முழு விவரங்களையும் அறிய ஆவலாக இருப்பீர்கள். எனவே தொடர்கிறேன். சூத்தி, என்றோ ஒரு நாள் தன் வாழ்க்கைப் பாதையில் ஆண்களை வெறுக்கும் பெண்ணாக மாறிவிட்டாள். எனவே தான், தன் சொந்தத் தகப்பனையும், பழைய கணவனையும் மட்டுமல்ல, இங்கேயே அவளுடன்கூடிவாழ்ந்து, சேர்ந்து, அல்பியின் தட்டுவீட்டை வாங்கிய காதலனைக் கூட வெறுத்தாள். அக்காதலனை, அவள் வெளியேறு முன்னரே, இங்கிருந்து கலைத்து விட்டாள்.

அப்படியானால் அவள் ஒரு பெண்ணியக்கவாதியாக்கும் என நினைப்பீர்கள். சீச்சீ. அப்படியும் இல்லை. அவள் இங்குள்ள பெண்களைக் கூட, துச்சமாக மதித்ததில்லை. நாம் அறிய, இங்கே வசித்த ஒரு பெண்ணும் பிரத்தியேகமாக, உள்ளுக்குள், அவளை நிரந்தரமாக விரும்பவில்லை. அவள் சுயநல எண்ணத்துடன், பிச்சைவழங்குவதுபோல, எம் பொதுச்செலவிலிருந்து அபகரித்து ஏதும் பிரத்தியேகச் சலுகைகள் செய்திருந்தால் மட்டும், அடுத்து வரும் கூட்டு நிகழ்ச்சிகளில் அவளை வேண்டுமென்றே, சொல்லிச் செய்வது போல, புகழ்ந்து பேசுவர். மறைமுகமாக, எரிச்சலும் புகைச்சலுமாகக் குசுகுசுப்பார்கள். ஒருவர் பற்றி மற்றையோரிடம் அவமதிப்பாக ஏசும் அவளின் துர்க்குணத்தை வெறுத்தார்கள். அவளின் மூட்டிவிடும் குணத்தை மென்று, மென்று, வெறுத்தார்கள். எனினும் நேரில் எதிர்ப்பதற்கோ, மேலிடத்தில் முறையிடுவதற்கோ, அஞ்சினார்கள்.

அப்படி ஒருதடவை செய்த ஹெலன், அதன் பின் ஒவ்வொரு பொதுச் சந்திப்பிலும் பலமாக ஏசப் பட்டு அவமானம் தாங்காமல் அண்மையில் 83 வயதில் இறக்கு மட்டும் கூனிக் குறுகியே வாழ்க்கை நடத்தினாள். போலீன் என்னும் மாது, ஆற்றாமல், எங்கள் வீட்டு மணியடித்து, இன்னொரு மாதுடன் வந்து முறையிட்டு அதை அறிந்த சூத்தியின் கொடுமையால், இங்கு விலை கொடுத்து வாங்கிய வீட்டில் ஒருவருடம் மட்டுமே வாழ்ந்து, நொந்துவெளியேறி, இன்னும் ஒரு சிறு வீடு வாங்கி, அங்கும் ஒரே ஒரு வருடம் மட்டும் வாழ்ந்து இறந்ததெனப் பின்னர்அறிந்தோம். சரி, முடிவில், சூத்தியின் தண்டனை பற்றி..

2008ம் வருடம் புரட்டாசி மாதம், எங்களின் கட்டடங்களை நிர்வாகம் செய்யும் அதே கொம்பனியில், சூத்தி பதவி உயர்வு பெற்றுச் செல்வதாக அறிவிக்கப் பட்டு, அவள் நியமித்த வீட்டுக் குழு, அவளுக்கு ஒரு பிரியாவிடை விருந்து ஒழுங்கு செய்தனர். நாங்களும் ஐந்தைந்து பவுண் கொடுத்து ஒருநாள்மாலை சிற்றுண்டிகள், பானங்கள் அருந்திப் பாடிப்பேசிக் கொண்டாடி ஒரு தன்னியக்கக் கோப்பிபோடும் யந்திரமும் பரிசளித்து வழியனுப்பினோம்.

அப் பிரியாவிடையின் பின் மூன்று கிழமைகள் முடியு முன், ஒரு பொது அறிவித்தல் மூலம், அவளின் அதே வீட்டுக் குழு அங்கத்தினர், எம்மை மிக முக்கியமான, எல்லாரையும் பாதிக்கும் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிற்கு அழைத்தனர். நாங்கள் பொது விசாரணை செய்ததில் சூத்தி 2800 பவுண்களைக் களவாடிக் கொண்டு சென்றுவிட்டாள் என அறிந்து கூட்டத்திற்குச் சென்றோம்.

தம் ஒருவரின் 1800 பவுண்களையும் 1000 பவுண் பெறுமதியுள்ள எமது பொதுவான இருப்பறைக்கென வாங்கிய புதுத் தொலைக்காட்சிப் பெட்டியையும் களவாக அபகரித்துக் கொண்டு சூத்தி கம்பி நீட்டியதாக அறிந்தோம். அவர்கள் தாமே மேலிடத்துக்கு முறையிட்டதாயும் எமது துணையுடன் முறையிட்டால் கொம்பனியார் தகுந்த நடவடிக்கை எடுக்கும் சாத்தியக்கூறு அதிகரிக்கும் என்றும் சொல்லிய படியால், நாங்களும் அவர்களுடன் சேர்ந்து ஒப்பமிட்டதுடன், நாம்இருவரும் தனித்து, வழக்கறிஞர்கள் எழுதும் தொழிற் பாணியில் ஒரு கடுமையான மடலை, ஆகக் கூடிய மேலதிகாரிக்கு அனுப்பினோம். அதற்குப் பதிலும் உடனேயே கிடைத்தது.

அவர்களின் பெரிய கந்தோரிலிருந்து இரு உயர் பெண்ணதிகாரிகள், முன்னறிவித்தல் கொடுத்து இங்குவந்து எல்லாரையும் விசாரித்துச் சென்றனர். நாம் இருவரும் இக் கதையில் வரும் எல்லா விவரங்களையும் ஒன்றும் விடாமல் முடியுமான நிரூபணங்கள், திகதிகள், முதலிய எல்லாவற்றுடனும், ஒரு மணித்தியாலத்துக்கு, வாக்குமூலம் அளித்தோம். பல விவரங்களைக் குறித்துச் சென்றனர். வீட்டுக் குழுவின் அப் பெண்ணின் முறைப்பாட்டின் சாரம் இதுவே.

எங்கள் கட்டடத்தில் எமது விருந்தாளிகள் விரும்பும் போதும், அவசிய தேவைகள் வரும்போதும் தங்க இங்கு ஒரு சிறு வீடு உண்டு. நாள் ஒன்றுக்குப் பதினைந்து பவுண் வீதம் முன்பணம் செலுத்தி அதை எவரும் முன்னுரிமை நிரலின்படி பதிவுசெய்ய முடியும். இவ்வாறாக, சிகிச்சைமனைக்குச் செல்லவெனக் காத்துக் கொண்டிருந்த அம்மாதின் மகள், நாம் எவரும் அறியாமல் பாரபட்சமாக எல்லாமாக நான்கு மாதங்கள் தங்கியிருந்து, 1800 பவுண்கள் கட்டியிருக்கிறாள்.

இது ஓரவஞ்சனையாகிய ஒரு தனிச்சலுகை என்றபடியால், சூத்தியும், சில கட்டணங்களை ஒளித்து, கணக்கில் எழுதாமலும் பற்றுச்சீட்டுக் கொடுக்காமலும், தாமதித்தும், பின்னர் தருவேன் என்று சொல்லியும் மறைத்து, தானே அதில் 1000 பவுண்களுக்கு மேல் களவெடுத்துக் கொண்டு வெளியேறி இருக்கிறாள். இது நிரூபிக்கப்பட்டு, அவளிடமிருந்து அந்தப் பணம் அறவிடப் பட்டு, எங்கள் பொதுக் கணக்குக்குப் பின்னர் சேர்க்கப் பட்டது. தொலைக்காட்சிக் கருவியின் முறைப்பாட்டை நிரூபிக்க, வரும் ஆண்டின் கணக்குகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். உரியதண்டனை, சூத்திக்கு வழங்கியுள்ளதாய் மட்டுமே எமக்கு உத்தியோகப் பூர்வமாகச் சொல்ல முடியும் என்றும், ஆனால் தாம் அவளை வேலை நீக்கியதால், சூத்தி இந் நாட்டிலேயே இன்று இல்லை எனவும், மறைமுகமான செய்திகள் எமக்குக் கிட்டின.

(professorkopanmahadeva@yahoo.co.uk)

# அல்லல்

தியாகலிங்கம்
நோர்வே



ஏற்றமான இடமொன்றில் பரந்து விரிந்து கிடந்த சீக்கயெம்மின் (நேசிங்கோம்) கண்ணாடிக் கதவுகள் செல்வியை உள்ளே விட்டுத் தாளிட்டுக் கொண்டதான உணர்வு. ஆரம்ப காலங்களில் தோன்றாத இந்த உணர்வு இப்போது வாட்டும் நோயாகி வருவதான அவஸ்தையில் உள்ளே வந்த அவள் நெளிந்தாள். தாதி வேலைக்குப் படித்துவிட்டு வேலை இல்லாது இருக்க விடமாட்டார்கள். படித்த வேலையைச் செய்யும்போது ஏற்படும் மனவழுத்தங்களையும் இலகுவாக புறம் தள்ள முடிவதில்லை.

வேலை என்பது ஐரோப்பிய வாழ்வின் உயிர்நாடி. அது நின்றுவிட்டால் குடும்பம் என்னும் சிகரம் சரிந்து, அழிந்து போய்விடலாம். இடி விழுந்தாலும் வேலை செய்தாக வேண்டும் என்பதை உணர்ந்தவளாக உள்ளே சீருடை மாற்றுவதற்காக, விரும்பாத கால்களை வில்லங்கத்திற்கு இழுத்துக் கொண்டு சென்றாள்.

செல்வி இப்பொழுது ஓஸ்லோவில் இருக்கும் பெரியதொரு சீக்கயெம்மில் வேலை செய்து வந்தாள். ஆரம்பகாலத்தில் நோர்வேஜீய வயது வந்தவர்கள் மாத்திரம் இங்கு இருந்தார்கள். அவர்களின் தனிமை, வெறுமை, ஏக்கங்கள், மனவுளைச்சல்கள் என்பன வெல்லாம் இவர்களின் கலாச்சாரத்தின் பக்க விளைவு என்பதாய்... தொழில்ரீதியான நோக்கோடு மனிதர்களைப் பார்ப்பதும், கடமையைச் செய்வதுமாய்க் கவலை இன்றிக் காலத்தைப் போக்கினாள். எப்பொழுது வேலை செய்யும் இடத்தின் வாசலைத் தாண்டுவாளோ, அந்தக் கணமே, அந்த இடத்தை மறந்து, தானும் தனது வீடும், நண்பர்களும் என்றிருப்பாள். அப்போது இது மூளைக்கு ஆக்கினை இல்லாத வேலை என்பதில் அவளுக்கு ஏக திருப்தி இருந்தது. அந்தத் திருப்தி கரைந்து, அழிந்தது. அடியோடு காணாமல்ப் போயிற்று. இன்று எஞ்சி இருப்பது சஞ்சலம் அவஸ்தை மனவுளைச்சல் தப்பு செய்கிறோமோ என்கின்ற ஆதங்கம்.

செல்விக்கு இப்போதெல்லாம் வேலைக்குப் போகாது நின்று விட்டால் நல்லது போன்று இருக்கும். கூடவேலை செய்பவர்கள் செல்விக்கு ஒருபோதும் பிரச்சனையாக இருந்தது கிடையாது. நினைவுகள் அவளைத் துரத்துகின்ற ஆக்கினையில் இருந்து நின்மதி பெறுவதற்கு அவளுக்கு வேறு வழி தெரியவில்லை. ஆரம்பத்தில் அப்பா அம்மாவின் இளமை, எந்த கவலைக்கும் வித்திடாத சுகந்திரத்தில் நின்மதியாக இருந்தாள். அது கால ஓட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டது. நரையும் முதுமையும் நினைவிலும், கனவிலும் ஆட்சி செய்யல் ஆயிற்று. முதுமை அவர்களை மெதுவாகத் அரிக்க, நெஞ்சு படபடக்கத் தொடங்கிவிட்டது. நின்மதி எங்கோ குடிபெயர்ந்து போய்விட்டதான தவிப்பு நிரந்தரமாகிற்று. வேலைக்குப் போய்வந்ததால் அது மேலும் அதீத சக்தியோடு அவளைத் துவட்டி எடுக்கிறது.

எங்கு இருந்தாலும் அவளுக்கு அவர்கள் நினைவாக இருக்கிறது. அது இங்கு வந்துவிட்டால் அதிகம் பெருகிவிடுகிறது. காலத்தோடு கோலங்கள் மாறத்தான் செய்கின்றன. விரும்பியோ விரும்பாமலோ பொருளாதார அழுத்தத்தாலோ, எங்கள் கலாச்சராம் நொய்ந்து, அவர்கள் கலாச்சாரத்தின் ஒரு பகுதியையாவது தழுவவேண்டியது கட்டாயமாகிற்று.

அப்பா அம்மா போன்றவர்கள் யன்னலை வெறித்தவண்ண அழுதுகொண்டு இருக்கும்போது, செல்விக்கு இதயம் அறுந்து விழுவதாக வலிக்கிறது. ஓ வென்று அழுதுகொண்டு சீக்கயெம்மை விட்டு ஓடவேண்டும் போல் இருக்கிறது. 'இன்று யார் எப்படி இருப்பார்கள்?' அவளுக்குப் புரியவில்லை. சீருடையை எடுத்தாலும் கொண்டு சென்று அணிவதற்கு விருப்பமில்லாதவளாய் சிறுகணம் நின்றாள். பின்பும் சொந்த நினைவுகளை விட்டுவிட்டு இங்கு தொழில்ரீதியாக நடக்க வேண்டும் என தனக்குத் தானே கூறியவண்ணம் சீருடையை மாற்றச் சென்றாள்.

செல்வி சீருடையை மாற்றிவிட்டு றிப்போர்ட் எடுப்பதற்காக வக்த் (கடமை) அறைக்குச் சென்றாள். அங்கு நீனா கன்ன, அஸ்திரி ஆகியோர் இருந்தார்கள். நீனாதான் இந்த வார்ட்டிற்குப் பொறுப்பான சீக்கப்பிளையராக இருக்கிறாள். வேலை வேண்டுவதிலும் கதைப்பதிலும் மிகவும் கெட்டிக்காறியாக இருந்தாள். காலையில் வேலை தொடங்கினால் தானே வந்து நின்று வேலை செய்வாள். பின்புதான் அலுவலக வேலைக்குச் செல்வாள். மிச்சம் பிடிக்க வேண்டும் என்கின்ற ஆசையில் சாப்பாட்டிலேயே சிலவேளை மிச்சம் பிடிப்பதும் உண்டு. செல்விக்கு அது பிடிப்பதில்லை. அதை நேரடியாகச் சொன்னால் முகமுறிவாகிவிடும் என்கின்ற அச்சத்தில் அதை அவள் எப்போதும் பின்போட்டு வந்தாள்.

உள்ளே சென்ற செல்வியைப் பார்த்து,

'உன்னைப் பார்க்கிறதே சந்தோசம்' என்றாள் அஸ்திரி.

'அதெண்டா உண்மை' என்றாள் நீனா.

'ஏனப்பிடி' செல்வி கேட்க,

'நீயும் இல்லையெண்டா எங்களுக்குப் பெரிய கொம்னிக்கேசன் பிரச்சனையாய் இருந்திருக்கும். உமக்கே தெரியும்தானே இப்ப தமிழ் ஆட்கள் பாகிஸ்தான்காறர் எல்லோரும் இங்க வருகினமெண்டு. அவைக்கு நொஸ்க் அவ்வளவாய்த் தெரியாது எண்டுறதும் உமக்கு நல்லாத் தெரியும்.

நீர் இருக்கிறதால உதவியா இருக்குது. இல்லாட்டி நாங்கள் பெரிய சிக்கலில் மாட்டுப் பட்டிருப்பம்.' என்றாள் நீனா.

'அது தமிழரா இருந்தா மட்டும்தான் நான் உதவி செய்ய முடியும். அது செரி, அப்ப என்ர சம்பளத்தைக் கூட்டச் சொல்லி சிபாரிசு செய்யலாம்தானே' என்றாள் நீனாவைப் பார்த்து.

'அதுக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்குது. நேரம் வரேக்க நிட்சயமா செய்யிறன் செல்வி.' என்றாள் நீனா.

செல்வியும் அங்கு இருந்த கதிரை யொன்றில் இருந்தவண்ணம்,

'கேட்க நல்லாத்தான் இருக்குது. நன்றி, நீங்கள் றிப்போட்டைத் தாங்கோ' என அதற்கு முற்றுபுள்ளி வைத்தாள்.

'சூல்வைய இண்டைக்கு அன்புலன்ஸ்சில உல்லவோல் கொஸ்பிற்றலுக்கு அனுப்பியாச்சு. அவாவுக்கு காலமை நெஞ்சு வலி அதிகமாகப் போச்சுது. அந்த அறையில இப்ப ஒருத்தரும் இல்லை.' என அஸ்திரி தொடங்கினாள்.

ஒவ்வொருவராக சொல்லிமுடிய கடைசியாக நீனா கதைத்தாள்.

'106 இல புதிதாக ஒரு தமிழாள் வந்து இருக்கிறார். இராமச்சந்திரன் முருகமூர்த்தி எண்டு அவருக்குப் பெயர். சந்திரன் எண்டு கூப்பிடலாமென அவை சொல்லிச்சினம். அதுதான் லேசு. இல்லாட்டி தமிழ்ப் பெயரை உச்சரிக்கிறது கஸ்ரம். மகனும் மருமகளும் அவரோட இருக்கினம். பிரச்சனை என்னெண்டா அவரின்ர கோபம். அவர் அவையோடையும் கதைக்கிறார் இல்லை. எங்களோடையும் கதைக்கிறார் இல்லை. அவர் மிகவும் தெளிவாகச் சிந்திப்பார் கதைப்பார் எண்டு மகன் சொல்லுறார். நடை குறைஞ்சு போச்சுதாம். படியால எல்லாம் ஏறி இறங்கமாட்டாராம். இரவில யூரின் பாஸ்பண்ணப் போத்தல் வேணுமாம். அதோட சிலவேளை இங்க வாறது அவருக்குப் பிடிக்காமல் இருக்க வேணும். மருமகளின்ர கதையைப் பார்க்க அப்பிடித்தான் இருக்குது.

றிப்போட் முடிஞ்சவுடன் நீர் ஒருமுறை அந்த அறைக்குப் போய் அவரை அறிமுகம் செய்து கொள்ளுறதோட, அவரைச் சமாதானமும் செய்ய வேணும். நீ அதில கெட்டிக்காறி. தமிழ் வேற உனக்கு மட்டும்தான் தெரியும்'

'நான் அதில கெட்டிக்காறியோ இல்லையோ, நீ கொப்பில ஏத்திவிட்டு வேலை வேண்டுறதில கெட்டிக்காறி,' எனச் செல்வி மனதில் எண்ணிக் கொண்டாள்.

'என்ன நான் சொல்லுறது செரியே?' என்றாள் நீனா தனது கட்டளையை உறுதி செய்து கொள்ள.

'ஓ, அது சரி. நான் அவரோட கதைச்சுப் பார்க்கிறன்'

'நல்லது, வேற இண்டைக்கு அதிகமாக ஒண்டும் நடக்கேல்ல. நீர்தான் பின்னேரம் மருந்தும் கொடுக்க வேணும்.' என்றாள் நீனா.

'சரி' என்றாள் செல்வி.

'ஓகே, அப்ப நாங்கள் வெளிக்கிடுறம்' என்ற வண்ணம் கண்ணா புறப்பட, அவளோடு அஸ்திரியும் புறப்பட்டுச் சென்றாள். அவர்களுக்கு 'குடே' சொல்லிவிட்டுச் செல்வி முதலில் கோலும் சமையல் அறையும் இருந்த பகுதிக்குச் சென்றாள். அங்கு மாலைக் கோப்பி தயாராக இருப்பதை உறுதி செய்து கொண்டு, மெதுவாக 106 அறையை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். வயிற்றுக்குள் ஏதோ அழைவது போன்று இருந்தது. கட்டாயம் அவளைப் பிடரி பிடித்துத்தள்ள கால்கள் பின்ன நடக்கலானாள்.

அறைக்கதவை மெதுவாக மூன்றுமுறை தட்டிவிட்டு, சிறிது தாமதித்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். 'கொம் இன்' என நோர்வேஜீய மொழியில் குரல் வந்து கொண்டு இருந்தது. உள்ளே அவர்கள் நிறைய உடுப்புகளைப் பிரித்து அடுக்கிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் நோர்வேஜீய தாதியை எதிர் பார்த்து இருக்க வேண்டும். ஒரு தமிழ் பெண் வந்தது ஒருவித நெருக்கத்தைத் தந்ததான உணர்வில் மருமகள் பெண் 'நீங்கள் தமிழ்தானே?' எனத் தமிழிலேயே கேட்டாள்.

'ஓம்' என்ற செல்வியின் பார்வை சந்திரன் என்கின்ற அந்த மனிதர்மேல் பதிந்தது. அவரது கைகள் சாதுவாக நடுங்கிக் கொண்டு இருந்தது.

வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவரின் பார்வை, தமிழ்க் குரலைக் கேட்டவுடன் சடுதியாக செல்வியில் சிறுகணம் பதிந்து, மீண்டும் வெளியே நிலை குத்திற்று.

'உங்களுக்கு என்ன பெயர்?' என்றாள் அந்தப் பெண்.

'செல்வி. உங்களுக்கு?'

'சுலோசனா, அவருக்கு குமரன். நீங்கள் கனகாலம் இங்க வேலை செய்யிறியளோ? எப்பிடி இங்க எல்லாம்

நல்லாப் பார்ப்பினமே?'

'சொந்த உறவை உங்களாலேயே பார்க்க முடியவில்லை. கூலிக்காக வேலை செய்பவர்கள் நல்லாகப் பாப்பினமோ இல்லையோ என்கின்ற கேள்வி வேறு" மனதுக்குள் நினைத்ததை மனதிற்குள்ளேயே இரகசியமாக அடக்கம் செய்துவிட்டு,

'ஓ நல்லாப் பார்ப்பினம்' என்றாள். குமரன் செல்வியைப் பார்த்து ஒருமுறை புன்னகைத்தான். செல்வியும் பதிலுக்கு புன்னகைத்து வைத்தாள். பின்பு அவன் உடுப்புக்களை அடுக்குவதும் மணிக்கூட்டைப் பார்ப்பதுமாக இருந்தான். ஏதோ அவசரத்தில் அவன் இருப்பதாய்ச் செல்வி எண்ணிக் கொண்டாள்.

'மாமாவுக்கு இங்க வாறது பிடிக்கேல்லப் போல இருக்குது. ஒண்டும் சொல்லாமல் வெளியவே பார்த்துக் கொண்டு இருக்கிறார். எங்களுக்கும் வேலையெண்டு அலையவேண்டி இருக்குது. கடன் இருக்கிறதால அவர் இரண்டு வேலை செய்ய வேண்டி இருக்குது. பிறகு பிள்ளையள விளையாட்டுக்கு, நீச்சலுக்கு எண்டு கூட்டிக் கொண்டு போகவேணும். அப்பவெல்லாம் இவர் தனிச்சுப் போயிடுவார். நேரத்திற்கு நாங்கள் சாப்பாடும் குடுக்க முடியாமல் இருக்குது. நாங்கள் சமாளிப்பம். அவர் கஸ்ரம்தானே? அதோட மாமாவால இப்ப ஒழுங்காக நடக்கேலாது.

நாங்கள் இல்லாத நேரத்தில விழுந்து கைகால் முறிஞ்சாலும் ஆபத்து எண்டுதான் இங்க கொண்டு வந்தம். அவருக்கு அது பிடிக்கேல்ல போல இருக்குது.

இங்க நிறையக் காலம் இருக்கவேண்டி வரும் எண்டு நிறைய உடுப்பும் கொண்டு வந்தம்.' கரிசனை வழியவழிய அவள் கதைத்தாள்.

'அப்பா அம்மாவைவிட, காரும் வீடும் அதற்கு வேண்டும் கடனுமாய், வீட்டிலே இருப்பதற்குகூட நேரம் இல்லாது ஓடிஓடி உழைப்பது இவர்களுக்கு முக்கியமாகிப் போய்விட்டது. ஊரிலே சுகந்திரமாய்த் திரியும் மனிதர்களை இங்கு கூட்டிவந்து கூட்டிற்குள் அடைத்துவிட்டு, அவர்களோடு கூடவும் இருக்காது, மனிதம் தொலைத்த மனிதர்களாக, பணத்தைத் தேடும் பிணங்களாக... ஊரிலும் பணத்தைத் தா நான் பிணத்தை தருகிறேன் என்கின்ற பேரத்திற்கு எங்கள் சமுதாயம் மனிதாவிமானத்தை விற்று, பொருளாதாரத்தையே எங்கும் முதன்மைபடுத்துவது அருவெருப்பை ஊட்டுகிறது.' எனச் செல்வி மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

'என்ன பேசாமல் நிக்கிறீங்கள்' சுலோசனா கேட்டபோதுதான் தன் நிலைமையை உணர்ந்தவளாக, 'நீங்கள் சொல்லுறது விளங்குது. நீங்கள் உடுப்புகளை அடுக்கி மாமாவோட இருந்து கதைச்சிட்டுப் போங்க. போகேக்க வந்து ஓபிசில இல்லாட்டிக் கோல்ல சொல்லிப் போட்டுப் போங்க. நான் அதுக்குப் பிறகு வந்து மாமாவைப் பார்க்கிறன்.'

'ஆங்.. செரி' என்றாள் மருமகள். செல்வி மெதுவாக வெளியே வந்தாள். சத்தி வரும்போல இருந்தது. அவள் கழிப்பறையை நோக்கிச் சென்றாள்.

செல்வி மீண்டும் கோலுக்கு வந்தபோது அனா வந்து காப்பியும் கேக்கும் கொடுக்கத் தொடங்கி இருந்தாள். செல்வியைக் கண்டவுடன்.

'ஏதாவது புதுசா நான் அறிய வேண்டியது இருக்கா' என்றாள்.

'பெரிசா ஒண்டும் இல்ல. 106 இலதான் புதிசா ஒரு தமிழ் ஆள் வந்து இருக்கிறார்.'

'ஓ அப்ப நீதான் அவரைப் பார்க்கோணும். அதுதான் சுலபம்.

நீங்கள் வயது போன ஆட்களைப் பார்க்கிறதில உண்மையிலேயே கெட்டிக்காறர். எவ்வளவோ தமிழ் ஆட்கள் இருந்தும் சீக்கயெம்மிற்கு வாற வயது போன ஆட்கள் ஒரு சிலர்தானே? உண்மையிலேயே உங்களைப் பார்த்து நாங்கள் கற்றுக் கொள்ளோணும்.'

'எங்கட சனத்தின்ர சுயநலம் உனக்கு எப்பிடித் தெரியும்? எல்லாம் உண்மை பாதி, பசப்பு மீதி' மனதிற்குள்ளே எண்ணியவள் அந்த ஊத்தையை வெளியே கொட்ட விரும்பாதவளாய், 'மனிதர் எண்டா எல்லா விதமாயும் இருப்பினம். எல்லாச் சமுதாயத்திலும் பெற்றோரை நல்லாப் பார்க்கிறவையும் இருப்பினம், பார்க்காமல் விடுகிறவையும் இருப்பினம். தமிழர் ஒண்டும் வித்தியாசம் இல்லை.' என்றாள் செல்வி.

'ஓ அப்பிடியே? அதுவும் உண்மையாகத்தான் இருக்கோணும்.'

செல்வி மேற்கொண்டு அங்கு நிற்க வில்லை. மாலையில் கொடுக்கப்படும் மருந்துகளை எடுத்து சிறிய பிளாஸ்ரிக் கப்பில் போட்டுப் பெயர் எழுதி வைப்பதற்காகப் போனாள். இப்படிச் செய்வது உண்மையில் தவறாக இருந்தாலும் நேரம் போதாமையால் இது தவிர்க்கமுடியாத வழமையாகப் போய்விட்டது. எங்கும் பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டும் என்கின்ற கட்டாயத்தில் மனிதர்களின் பாதுகாப்பு, சுய விருப்பு வெறுப்புக்களோடு மனச்சாட்சியும் பலியாக்கப்படுவது தவிர்க்க முடியாததாய்ப் போய் விடுகிறது. புத்தகத்தில் கோடி கோடியாய்ப் பணம் புரண்டாலும் சாப்பாட்டில் மிச்சம் பிடிக்கவைக்கும் பொருளாதார விதிகளை எண்ணும் போது செல்விக்கு அனல்கக்கும் கோபம் உடல் எல்லாம் பரந்தோடும். கடைசியில் ஆற்றாமையால் அவள் வாடிவதங்கி போய்விடுவாள்.

சிறிது நேரத்தில் குமரனும் சுலோசனாவும் செல்வியைத் தேடிக் கொண்டு வந்தார்கள். செல்வி மருந்து எடுப்பதை நிறுத்தி விட்டு அவர்களைப் பார்த்தாள்.

'நாங்கள் போயிட்டு வரப்போகிறம். தயவு செய்து அப்பாவை ஒருக்காப் போய்ப் பாருங்கோ. அவர் தொடர்ந்தும் எங்களோட கதைக்க மாட்டன் எண்டுறார்.

அப்பாவுக்குக் கோபம் வந்தா இப்பிடித்தான். கொஞ்ச நாளைக்குப் பேசாமல் இருப்பார். பிறகு சகஜமாகப் பேசுவார். இதுவும் அப்பிடித்தான் இருக்கும். நாங்கள் அடுத்த முறை வரேக்க எங்களோட வாரப்பாட கதைப்பார். அவர் எங்களில ஒரு நாளும் கோபம் வைச்சிருக்கிறேல்ல. அப்ப நாங்கள் வாறம். அப்பாவைக் கொஞ்சம் பார்க்கிறியளே?'

'ஓ... இதெல்லாம் நீங்கள் சொல்லோணுமே?. இதுதானே எங்கட வேலை. நான் அவரைச் சமாதானப் படுத்துறன். நீங்கள் போயிட்டு வாங்கோ.'

அவர்கள் நீண்ட நடைபாதை வழியாக நடந்து மறையும் வரை அப்படியே பார்த்த வண்ணம் செல்வி நின்று கொண்டு இருந்தாள். அவளுக்கு இதயத்தில் சிறிதாக வலிப்பது போன்று இருந்தது. செல்வி மருந்துகளை மீண்டும் எடுத்துப் பெயர் எழுதி வைக்கும் வேலையை முடித்துக் கொண்டு, வண்டிலைப் பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டாள். பின்பு 106 அறையை நோக்கி நடந்தாள். சந்திரன் வெளியே பார்த்துக் கொண்டு இருந்தார். சத்தம் கேட்டதும் இவளை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் யன்னல்ஊடாக வாழ்வின் தத்துவங்களை ஆராய்வது போன்ற பாவனையில் இருந்தார்.

'அப்பா என்ன வெளியால அப்பிடிப் பாக்கிறீங்க. எனக்கும் சொன்னீங்கள் எண்டா நானும் சேர்ந்து பார்ப்பன்.'

அவர் செல்வியை மீண்டும் ஒருமுறை பார்த்தார். அவர் முகத்தில் இருந்த இறுக்கம் சற்று குறைந்ததாய் அவளுக்குத் தோன்றியது. அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் என்பதை நம்பியவளாக,

'எங்களோட உங்களுக்கு என்னப்பா கோவம்? நாங்கள் இங்க வேலைக்கு வந்து இருக்கிறம்.

'நீங்கள் எங்களோட கதைக்காட்டி நாங்கள் எங்கட வேலைய ஒழுங்காச் செய்யேலாது. அப்பிடிச் செய்யாமல் விட்டாலும் தமிழர் வேலைய ஒழுங்காச் செய்கினம் இல்லை எண்டுதானே சொல்லுவினம். அப்பிடிச் சொல்லுறது உங்களுக்கு விருப்பம் எண்டா நீங்கள் பேசாமல் இருக்கலாம்.'

'அப்பிடி இல்லப் பிள்ள. அவனில இருந்த கோபத்தில கதைக்கேல்ல. அவ்வளவுதான்.'

'அது அவரிலதானே உங்களுக்கு கோபம். அதுக்கு எங்களோட கோபிக்காதேங்க.'

'செரியம்மா நான் உன்னோட கோபிக்கேல்ல.'

'தக் அப்பா.'(நன்றி அப்பா)

'இதுக்கெல்லாம் எதுக்கு நன்றி. உண்மையா நான்தான் உனக்கு நன்றி சொல்லோணும்.'

'ம்... நீங்க பார்க்க என்ர அப்பா மாதிரி இருக்கிறீங்கள், அதால உங்கள அப்பா எண்டு சொல்லுறன். நோர்வே காறர் எண்டாப் பெயர் சொல்லித்தானே கூப்பிடுவோம். அப்பிடி உங்கள கூப்பிட மனம் வரேல்ல.' என்றாள் செல்வி.

'செரி நீ விரும்பினமாதிரிக் கூப்பிடம்மா.'

'நான் உங்களிட்ட ஒண்டு கேட்கலாமே அப்பா?'

'ஓ, தாராளமாகக் கேளு பிள்ளை.'

'உங்க மகன்மேல உங்களுக்கு ஏன் அவ்வளவு கோபம்?'

'என்னப் பார்க்கேல்ல எண்டதவிட, தன்னையே பார்க்கிறான் இல்லை எண்டுறதுதான் எனக்குக் இருக்கிற கோபம். யாருக்காக பெரியவீடு, புதிய வென்ஸ் காறெல்லாம் வாங்கோணும்?

விரலுக்கு ஏற்பதானே வீக்கம் இருக்கோணும்? அதைவிட்டிட்டு கடனுக்கு எல்லாத்தையும் வாங்கிப் போட்டு, இரண்டு மூண்டு வேலை செய்யிறதிலயே அவன்ர வாழ்க்கை போயிடுது. வீடு, கார், கத்தை எல்லாம் வாங்கி வைச்சிருக்கிறான். ஆனா அதை அனுபவிக்கிறதுக்கு அவனுக்கு நேரம் இல்லைப் பார். அதை நினைச்சா எனக்கு எப்பவும் நெஞ்சுக்க வலிக்குது அம்மா. போகேக்க ஒண்டும் கொண்டு போறேல்ல. அதை விளங்காமல் மொக்குப் பெடி பாய்ஞ்சு பாய்ஞ்சு உழைச்சு என்ன பிரயோசனம். அதைவிடத் தனக்கே நேரம் இல்லாதவன் எப்பிடியம்மா எனக்கு நேரம் செலவழிக்க முடியும்? அந்திம காலத்தில கிடந்து அலையக்கூடாது எண்டு சொல்லுறது இதுக்குத்தான் போல இருக்குது.'

'அப்பிடியெல்லாம் இல்லை. நீங்கள் பயப்பிடாதேங்கோ. மகன் இல்லாட்டியும் மருமகள் இருக்கிறாதானே?'

'சொந்தப் பிள்ளையே பார்க்குதில்லையாம். ஊரான் வீட்டுப் பிள்ளையைப் பார் எண்டு எப்பிடிக் கேட்கிறது?'

'நாங்கள் இருக்கிறம்தானே' எனச் சொல்ல வேண்டும் என எண்ணியவள், அதன் ஆத்மசுத்தியை எண்ணி மௌனித்தாள். 'ம்... அதுவும் செரிதான் அப்பா. அது சரி, எவ்வளவு நேரம் வெளிய பார்ப்பியள்? ரீவியப் போடட்டுமே?. அதைப் பார்க்கிறியளே?' என்றாள்.

'அதுவும் செரிதான் பிள்ள. ரீவியைப் போடு.'

'அப்பாட்ட இன்னும் ஒண்டு கேட்கோணும்?'

'என்னம்மா அது?'

'பின்னேரம் என்ன சாப்பிடப் போறியள் எண்டு சொன்னா நான் அதை எடுத்து வந்து தருவன்.'

'எனக்கு ஒண்டும் வேண்டாம் பிள்ள.'

'அப்பிடி இல்லையப்பா. ஏதாவது சாப்பிடோணும். பிறகு நாளைக்கு காலமைதானே சாப்பாடு தருவினம்.'

'ம்... அதுவும் அப்பிடியே? செரி பாணுக்கு ஜாம் பூசிக் கொண்டு வாவன் பிள்ள.'

'செரி ரீக்கு சீனி போட்டு கொண்டுவரவா?'

'ஓ பாலும் விட்டா பிள்ள.'

'செரி நீங்கள் ரீவியப் பார்த்துக் கொண்டு இருங்கோ. நான் கொஞ்ச நேரத்தால வாறன்.'

வெளியே வந்தவளுக்கு சற்று நிம்மதியாக இருந்தது. தனது வேலையைச் செய்ய முடிந்ததில் சந்தோசம் வந்து அப்பிக் கொள்ள, நடையில் துள்ளல் குடிபுகுந்து கொண்டது.

அன்று சந்திரனைப் படுக்க வைக்க வேண்டிய பொறுப்பையும் செல்வி ஏற்றுக் கொண்டாள். அவருக்கு உடுப்பு மாற்றிக் கட்டிலில் படுக்க வைக்கும்போது ஏதோ சங்கடப்பட்டவராய்,

'பிள்ள' என்றார்.

'என்னப்பா?' என்றாள் செல்வி.

'இங்க கிட்டவாம்மா' என்று அழைக்க, செல்வி கிட்டே சென்றாள். செல்வியின் கையை மெதுவாகப் பிடித்தவர்,

'எனக்கு இப்பிடி ஒரு மகள் இல்லையே எண்டு ஏக்கமாக இருக்குதம்மா'

'அப்பிடி இல்ல, உங்களுக்கு ஒரு மகள் இருக்கிறா எண்டு நினையுங்க அப்பா.' சொற்களின் உயிர்த்தன்மை பற்றிய கேள்வி ஒன்று அவளைப் பார்த்து நகைப்பதாக இருந்தது.

'இது போதும் அம்மா. நான் இப்ப சந்தோசமாக இருக்கிறன். இன்னுமொரு உதவி செய் பிள்ள?'

'என்னப்பா?'

'இரவில எழும்பிப் போய் யூரின் பாஸ்பண்ணேலாது'

'அது ஒரு பிரச்சனையே இல்ல. நான் போத்தல் எடுத்து வந்து தாறன் அப்பா' கூறியவள் வாசிங் மெசின்கள் இருக்கும் அறைக்குச் சென்று கழுவி வைக்கப் பட்டிருந்த இரு போத்தல்களை எடுத்துவந்து, இரவுமேசையில் வைத்தாள்.

பின்பு குட்நைட் சொல்லிவிட்டு லையிற்றுகளை அணைத்துவிட்டு வெளியே வந்தாள். செல்வி தான் அன்று செய்த வேலையில் திருப்தி கண்டவளாக அலுவலகத்தை நோக்கிச் சென்றாள். அடுத்தநாள் பின்னேரம் வேலைக்கு வரும் போது சீக்கயெம்மில் இருந்து அன்புலன்ஸ் வண்டி ஒன்று திரும்பிச் சென்று கொண்டு இருந்தது. ஒவ்வொருநாளும் அன்புலன்ஸ் வண்டி வருவதும் போவதுமாக இருக்கும். அதில் ஒன்றுதான் இதுவும் என்பதாய் எண்ணியவள், அந்த நினைவை அத்தோடு புறம்தள்ளி சீருடை அணிந்து வருவதற்குச் சென்றாள்.

சீருடை அணிந்து கொண்டு அலுவலகத்திற்கு வந்த போது நீனா அங்கு வந்தாள். அவள் ஏதோ பரபரப்பில் இருப்பதை செல்வியால் உணர முடிந்தது.

'என்ன நீனா... என்ன ரென்சனா இருக்கிறியள்?' என்றாள் அவளைப் பார்த்தாள்.

'ஓ அதுவா, சந்திரன் இறந்திட்டார் தெரியுமா?'

'என்ன?' செல்வி துள்ளி எழும்பினாள்.

'சொறி செல்வி, உனக்கு முதல்லயே சொல்லி இருக்கோணும். மாரடைப்பால அவர் காலம மோசம் போயிட்டார். பேப்பர் வேலையில மறந்து போயிட்டன். போய் வேணும் எண்டாப் பார். றூமுக்கதான் இருக்குது. மகனும் மருமகளும் நிக்கினம். டொக்ரர் வர நேரமாகும் எண்டு நினைக்கிறன்"

செல்வி அதற்கு மேல் அங்கு இருக்க முடியாதவளாய் அவசர அவசரமாய் 106 நோக்கிச் சென்றாள். உள்ளே சென்றதும்... செல்வியைக் கண்ட குமரன் 'அப்பா என்னோட பேசாமலே போயிட்டாரே' என மூஞ்சையில் அறைந்து அழுதான்.

சில கணங்கள் நின்ற செல்விக்கும் அழுகை வருவதுபோல இருந்தது. அவள் மெதுவாக வெளியே வந்தாள். இதயம் அவளுக்கு இலேசாக மீண்டும் வலிப்பதாக இருந்தது. இந்த வேலை எனக்கு வேண்டுமா என்கின்ற கேள்வி பிறந்தது.

நீனாவின் முன்பு போய் நின்ற செல்வி அவளைப் பார்த்து, 'நான் இந்த வேலைய விடப்போறன் நீனா' என்றாள்.

'என்னது?'

'என்னால தாங்க முடியேல்ல. ஒவ்வொருத்தற்ற கவலையையும் பார்க்கப் பைத்தியம் பிடிக்கும் போல இருக்குது' கூறிய வண்ணம் செல்வி சோபாவில் இருந்தாள்.

'ஓ செல்வி... இது எங்கட தொழில். இதை நாங்கள் எங்கட சொந்த உணர்ச்சியாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஆயிரம்பேர் ஆயிரம் விதமான குப்பையை கொண்டு வந்து கொட்டிவினம். நாங்கள் அதைத் தட்டி விட்டிட்டு போய்க் கொண்டு இருக்கோணும். இதையெல்லாம் சொந்த துக்கமாக எடுத்தா உலகத்தில நாங்கள் வாழேலாது. சொந்த மகனுக்கே அப்பாவைப் பார்க்க நேரமில்லாத உலகம் இது. நாங்கள் பணத்துக்காக சேவை செய்யிற தாதிமார்? அவையின்ர துக்கங்களுக்கு ஆறுதல் சொல்லலாம். அதையே தூக்கிக் கொண்டு அலையக்கூடாது. நான் வேணும் எண்டா உன்ன வகுப்புக்கு அனுப்பிறன். உன்ர மனசை தேவையில்லாமல் குளப்பிக்காத. விளங்குதா? சொந்த உணர்ச்சி வேற. தொழில் கருணை வேற. இரண்டையும் குளப்பகூடாது' என்றாள் நீனா.

செல்வி யோசித்துக் கொண்டு நின்றாள்.

குமரன் அவசரமாகக் கடிகாரத்தைப் பார்த்தவண்ணம் வக்த்றுமைக்(கண்காணிக்கும் அறை) கடந்து ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டு இருந்தான். அவன் போவதைப் பார்த்த செல்வி எழுந்து நின்றாள்.

(thiagu@tiscali.co.uk)

# இருத்தலை தொலைத்த தமிழ்

ராம் பிரசாத்

இந்தியா



பிரிட்டிஷ் நாடான ஸ்காட்லாண்டில் ஒரு தொலைக்காட்சி சேவை நிறுவனம் அது. மழை என நினைத்து தவறுதலாய்ப் பனியை அள்ளி அள்ளிப் பொழியும் வானத்தை கூரையாய் கொண்ட தேசத்தில், திக்கெட்டும் பரவிக்கிடந்த பனியினூடே நனைந்து கிடந்த சாலையையும், பனியை இழுத்துப்போர்த்திக்கொண்டு தூங்கும் வீடுகளையும் கொண்டது.

கேன்டீனை ஒட்டிய இடத்தில் அந்த தானே தேனீர் தயாரிக்கும் இயந்திரத்திடம் ஒரு கோப்பையை தந்துவிட்டு அது தேனீர் தயாரிக்கையில் வெறுமனே வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தேன் நான். எனக்கு சர்வ நிச்சயமாய் அது தேனீர் தந்துவிடும் என்று எனக்குத் தெரியும். ஆனால் அந்த தேனீர் நான் இழந்த புத்துணர்ச்சியை மீட்டுத் தருமா என்பதுதான் தெரியவில்லை.

என் புத்துணர்வு கடல் கடந்து, இந்தியாவில் சிங்கார சென்னை மாநகரின் ஒரு ஓரத்தில், சுற்றிலும் ரோஜா, மல்லி, முல்லை மற்றும் இன்ன பிற அழகான பூத்துக்குலுங்கும் மலர்ச்செடிகளுடன், காய்கறி செடிகள், வாழை மரங்கள், இளந்தென்னை மரங்கள் வளர்ந்து சாய்ந்து கிடக்கும் தோட்டத்தின் நடுவில் அமைந்த எங்கள் சொந்த வீட்டில் என் அம்மாவின் மடியிலோ, என் தங்கையின் புண்சிரிப்பிலோ, என் தந்தையின் நட்பான பேச்சிலோ என்னைத் தேடிக்கொண்டிருக்கும். நான் இங்கே தனியனாய் நிற்கிறேன் விட்டு வந்ததை தேடியபடி.

பார்க்கப்போனால் புலம் பெயர்ந்து வாழும் பெருவாரியான தமிழர்களின் நிலை இது தான். எல்லோருக்கும் ஏதோ ஒரு தேவை. ஏதோ ஒரு தேடல். இது ஒரு ஓட்டம். வாழ்க்கை நாடகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாத்திரம். ஏன் இந்த பாத்திரம் எனக்கு என்று ஒருவரும் கேட்கலாகாது. அவரவர்க்கு ஒன்று நிச்சயம் உண்டு. அவரவர்க்கு ஒரு பாதை. சுவாரஸ்யம் என்னவெனில், அந்த பாதை தீர்மானிக்கப்படுவதும் அவரவராலேயேதான். ஆங்கிலத்தில் ரிகர்ஷன் என்பார்கள். தன்னைத்தானே கூப்பிட்டுக்கொள்ளும். எப்போது, எப்படிக் கூப்பிட வேண்டும், கூப்பிட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதனையும் அதுவே தீர்மானிக்கும். கிட்டத்தட்ட அதுபோலத்தான். விளக்கம் சிறியதாய் தோன்றினாலும் இதுதான் வாழ்க்கை என்பதின் அடிப்படை நாதம். பெரியதாய் தோன்றும் அனைத்துமே சிறிதாய்த் தானே தொடங்கும். பிரபஞ்சமே அப்படித்தான் எனும்போது வாழ்க்கை மட்டும் விதிவிலக்கா என்ன?

சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் தேனீர் கோப்பை நிரம்பியதை கவனிக்கவில்லை.

'என்ன, இன்னிக்கு ஈவ்னிங் கெட்டுகெதர்ல 'அது' எப்படி நடக்கப்போகுதுனு யோசனையா?' தோளில் தட்டியபடி என் சுயநினைவை எழுப்பினான் ரமேஷ். ரமேஷ் என்னுடன் வேலை செய்பவன். நானும் அவனும் ஒரே ப்ராஜெக்ட். இல்லை என்பதாய் தலையசைத்தபடி என் தேனீர் கோப்பையை கையிலெடுத்துக் கொண்டு நடக்கையில் பேச்சை தொடர்ந்தோம்.

'கேக்கனும்னு இருந்தேன் ரமேஷ். ஈவ்னிங் என்ன நடக்கப்போகுது?'

'தெரியாத மாதிரி கேக்குற பத்தியா. சத்தியமா தெரியாதா? சும்மா காதுல பூ சுத்தாத பா'

'ச்சீ, இதுல என்ன இருக்கு. சத்தியமா தெரியல. என்னனு சொல்லேன்'.

'அய் அய் அய்... சும்மா உடான்ஸ் உட்றியே'.

'அடப்பாவி, உண்மையாவே தெரியாதுடா. சொல்லேன்'.

இதற்க்குள் எங்கள் இருக்கைக்கே வந்துவிட்டிருந்தோம். நாங்கள் வரவே காத்திருந்தவர் போல், அந்த வெள்ளைக்கார க்ளையன்ட் தொடர்ச்சியாய் ப்ராஜெக்ட் தொடர்பாய் கேள்விகள் கேட்க, ரமேஷ் வேலை செய்யும் மென்பொருள் பகுதி என்பதால் அவன் பதில் சொல்ல நான் கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்கு துளியும் சம்பந்தமில்லாத பகுதி, இருந்தாலும் என்னிடம் கேட்க அவருக்கு எப்போதுமே கேள்விகள் இருக்கும் என்பதால் நானும் அருகேயே நிற்க வேண்டியதாயிற்று.

சென்ற வாரத்திலேயே கூட அன்று மாலை ஏதோ நடக்கவிருப்பதாய் கிசுகிசுப்பாய் பேசிக்கொண்டார்கள் என்பது நினைவுக்கு வந்தது. நான் வேறு ஒரு வேலையில் மூழ்கி இருந்திருந்ததால் சரியாக கவனிக்கவில்லை. என்னவாக இருக்குமென்று யோசனையாக இருந்தது. இந்த நாட்டில் முனுக்கென்றால் தண்ணி, பார்ட்டி, நடனம் என்று இருப்பார்கள். அதனாலேயே, இங்கு சின்னதாய் ஏதேனும் பார்ட்டி என்றால் கூட எல்லோருக்குள்ளும் ஒரு கிசுகிசுப்பு வந்துவிடும். இப்படித்தான், 3 மாதங்கள் முன்பு ஒரு முறை பார்ட்டி என்று பஸ் வைத்து கூட்டிப்போனார்கள். அங்கே, கோழி, ஆடு, பன்றி மற்றும் லாப்ஸ்டர் வகை மீனும், தொண்டை வரை குடிக்க பல நாட்டு மதுபானங்களுமாய் ஒரே கும்மாளம் தான். அதே போல இன்றும் ஏதோ இருக்கப்போகிறது, அதற்குத்தான் இத்தனை கிசுகிசுப்பு என்று பட்டது எனக்கு. எனக்கு தண்ணீ, தம் போன்ற எந்த 'நல்ல(?!)' பழக்கங்களும் இல்லாததால் என்னைப் பொதுவாக இதற்க்கெல்லாம் சேர்ப்பதில்லை. அதனாலேயே இதெல்லாம் எனக்கு நேரத்துக்கு தெரிய வருவதும் இல்லை. நல்லதாயிற்று என்று நானும் என் பாட்டுக்கு இருந்துவிடுவேன்.

அன்றும் அப்படியே இருந்துவிடலாம் என்றிருந்தேன்.

அத்திப்பூ பூத்தாற்போல் என்றைக்காவது அந்த வெள்ளைக்கார க்ளையன்ட் என்னிடம் திரும்புவதற்குள்ளாக வேறு வேலை வந்துவிடும் அவருக்கு. அதன் காரணமாய் நான் தப்பித்துக்கொள்வேன். அன்று அப்படியே நடந்தது.

மாலை ஆறு மணி தாண்டியது.

கூட வேலை செய்யும் வெள்ளைக்கார ஆண்கள், முட்டியோடு நின்றுபோன பாவாடை போன்ற ஒன்றை அணிந்து கொண்டார்கள். மேலுக்கு ஒரு கறுப்பு கோட். அதில் சீராய் இடது, வலது என இருபக்கமும் தங்க நிறத்தில் பெரிய பட்டன்கள் தைத்திருந்தது. தலையில் நம் ஊர் பஞ்சாபிக்கள் கட்டும் டர்பன் போல், அதை விட பெரியதாய் ஆனால், வளைந்த வாயுள்ள வட நாட்டு மன்னர்கள் காலத்து கூஜாவை கவிழ்த்துப் போட்டாற் போன்ற ஒரு தொப்பி, முட்டி வரை நீண்ட இறுக்கமான, கறுப்பு சிவப்பு சாக்ஸ், கறுப்பு நிறத்தில் பூட்ஸ் அணிந்திருந்தார்கள். அவர்களின் பாரம்பரிய உடையாம். அவர்களின் பாரம்பரியம் பற்றி தெரிந்து கொள்ளும் ஆர்வம் மேலோங்கியதால் நானும் சுவாரஸ்யமானேன்.

ப்ரேவ்ஹார்ட் என்னும் ஆங்கில திரைப்படத்தில் நடிகர் மெல் கிப்சனை நேரில் பார்த்த தோரணை தெரிந்தது. அதில் அந்த நடிகர் இப்படித்தான் உடை அணிந்திருப்பார். நாங்கள் எல்லோரும் ஒரு பெரிய ஹாலில் அரை வட்டமாய் அணிவகுத்து வைக்கப்பட்ட இருக்கைகளில் அமரவைக்கப்பட்டோம்.

முதலில், ஒரு இளைஞன், கையில் கறுப்புத் தோல் பையில் காற்று நிரப்பி, அதில் மூன்று குழல்களை இணைத்து செய்த வாத்தியத்தை இசைக்கத் தொடங்கினான். இது நம்மூரில் நாதஸ்வரம் போல் ஸ்காட்லாண்டிற்கு போலும். காற்று தொடர்ச்சியாய் அந்த குழல்களில் சென்று ஓசையெழுப்ப, அந்த பையில் காற்றை சேமிக்கிற வகையில் இருந்ததைப் பார்த்து நம்மூர் நாதஸ்வர இசைக்கலைஞர்கள் எப்படித்தான் இந்த பை சமாச்சாரம் இல்லாமல் வாசிக்கிறார்களோ என்று யோசனை வந்தது எனக்கு.

இதைக் கவனி என்பது போல் நான் ரமேஷைப் பார்க்க அவன், நான் மதியம் கேட்ட 'அதை' பற்றித்தான் கேட்கிறேன் என்று நினைத்துக்கொண்டு எனக்கு சஸ்பென்ஸ் கூட்டுவது போல் 'பொறுத்துருந்து பார்' என்பதாக சைகை செய்தான். நான் என்ன சொல்கிறேன், இவன் என்ன சொல்கிறான் என்பது போல் தோன்றியது எனக்கு. மனத்தில் தோன்றுவதை பிறருக்குச் சொல்வதற்குத்தான் மொழி. ஆனால் அந்த நொடியில் அந்த இசைச் சத்தத்தில் அது பலனளிக்கவில்லை. மௌனமே சிறந்தது என்று அந்த இசையை ரசிக்கத்தொடங்கி இருந்தேன் நான். இப்போது வரை அந்த 'அது' என்னவென்று தான் இன்னமும் எனக்கு தெரியவில்லை. என்னவாக இருக்கும் என்கிற கேள்வி எனக்குள்ளும் எழுந்தது.

சற்று நேரத்தில், இசைக் கச்சேரி முடிந்தது,மதுபானத்துடன் உணவு பரிமாரப்பட்டது. 'இதற்குத்தானே காத்திருந்தாய் ரமேஷா' என்பதுபோல் நான் ரமேஷைப் பார்க்க, அவன் 'பொறு பொறு இது இல்லை' என்பதாக சிரமப்பட்டு அவசரமாய் சைகை செய்துவிட்டு, காலியாக இருந்த வாய்க்குள் மதுக்கோப்பையை அவசரமாகக் கவிழ்த்துக்கொண்டான். இதுவும் இல்லையா, வேறு என்னவாக இருக்கும் என்று யோசித்தபடியே ப்ரட்டில் நனைத்த சிக்கனை ருசிக்க ஆரம்பித்தேன்.

உணவு முடிந்ததும் ஐஸ்க்ரீம் பறிமாறினார்கள். அப்போது ஒரு இளைஞன் வந்து எங்களுக்காக அருகிலிருக்கும் பள்ளிக்கூடத்திலிருக்கும் குழந்தைகள் சில கலை நிகழ்ச்சிகள் நடத்துவார்கள் என்றான். தொடர்ச்சியாக, உள்ளே வந்த பதினெட்டு குழந்தைகள், 6 முதல் 8 வயதிருக்கும் அவர்களுக்கு. 1760 களில் வாழ்ந்த ராபர்ட் பர்ன் என்னும் ஸ்காட் கவிஞரின் கவிதைகளை , ஒருவர் ஒரு பாரா என்கிற முறையில் பாடினார்கள்.

பாடல் வரிகளைக் காது கொடுத்துக்கேட்டதில் அனேக கவிதைகள், நம்மூர் கானா பாடல்களை ஒத்து இருந்தன. பல இடங்களில் எதுகை மோனைக்காக சில வார்த்தைகளை வேண்டுமென்றே இழுத்துக்கோர்த்திருந்தாலும், நான் கவனித்த ஒரே ஒரு தந்திரம், பாமரனுக்கும் புரியும் வகையில், மிக எளிதான, ஆனால் நகைப்புக்குரிய அர்த்தங்களையே பெரும்பாலும் உள்ளடக்கி இருந்தன அந்தக் கவிதைகள்.

எந்த இசங்களின் வாடையும் இல்லை. பெரிதாக அர்த்தங்கள் ஏதும் இல்லை. ஆனால், கேட்கையில் சிரிப்பை வரவழைக்கக்கூடியதாய் இருந்தன பெரும்பாலும். சில நேரங்களில் லேசாக உணர்ச்சிவயப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது.

‘ நாம் சேர்ந்ததும் இல்லை, பிரிந்ததும் இல்லை.
அதனால் தானோ நம இதயங்கள் உடைந்ததில்லை.' என்பனவாக இருந்தது.

இதை விடவும் மிக நுண்ணிய, கருத்தாழமிக்க, சிந்தனைகளே காடுகளாய் மண்டிக்கிடக்கும் கவிதைகளை நம் தமிழில் படித்திருந்ததாகையில், இந்தக் கவிதைகள் அவ்வளவாக என் கவனத்தைக் களவாடவில்லை. ஆனால், என் சிந்தனைகளை வேறொன்று ஆக்கிரமித்திருந்தது.

நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவனும் சரி, கவிதைகளைப் பாடிய குழந்தைகளும் சரி, கூடியிருந்த சக வெள்ளையின மக்களும் சரி, எல்லோரும் ஆங்கிலத்திலேயே பேசினார்கள், பாடினார்கள். ஆங்கிலம் அவர்களது தாய்மொழி. அவர்கள் தாய்மொழியில் அவர்கள் நினைக்கிறார்கள், பேசுகிறார்கள், சிந்திக்கிறார்கள். இதே போன்றதொரு நிகழ்வு இந்தியாவில் எந்த மாநிலத்திலும், ஏன் நம் தமிழகத்திலேயே நடந்திருந்தாலும், கம்பனின் கவிதைகளையும், கண்ணதாசனின் பாடல்களையும் மட்டும் நிச்சயம் கேட்க முடியாது. தமிழையே கேட்டிருக்க முடியுமா என்பதும் சந்தேகமே.

எப்போதிருந்து தமிழ் இலக்கியங்கள் புறக்கணிக்கப்பட்டன. தொழில் நுட்பம் வளரத்தொடங்கிய பின்னாகத்தான் இருக்க வேண்டும். கண்டுபிடிப்புக்களை பெரும்பாலும் வெள்ளையர்கள் மேற்கொள்ள, அதை அவர்கள் அவர்களின் மொழியிலேயே எழுத்தாக்கினார்கள். அதைப் படித்துத் தெரிந்துகொள்ள ஆங்கிலம் படிக்க வேண்டியதாயிற்று.

உலகமயமாக்கப்பட்ட கொள்கைகள், சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிக்க, நாடுகளின் கதவுகள் திறக்கப்பட, வெளி நாடுகளில் சென்று தொழில் செய்ய அவர்கள் மொழி கற்பது அவசியமாகிவிட இப்படித்தான் ஆங்கிலம் காலூன்றி இருக்க வேண்டும்.

பிற்பாடு, கல்வியைக் கொண்டே முன்னேருவதை பிரதானமாகக் கொண்ட நம்மவர்கள், போட்டியை சமாளிக்க, ஆங்கில உச்சரிப்பு மற்றும் சரளமாய் பேசுதல் முதலான கோணங்களிலும் போட்டி போட எத்தனிக்க, அதுவே அதிக அளவில் ஊக்குவிக்கப்பட, தமிழ் மெதுவாக பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அப்படியானால், நம்மவர்கள் எதையும் கண்டுபிடிக்கவில்லையா? கண்டுபிடித்திருக்கிறார்கள். பண்படுத்தப்பட்ட வாழ்க்கைமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அமைதியான வாழ்க்கை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எல்லா துறைகளின் மூலமும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சகல சக்திகளோடு உறுவான பூமியுடன் இணைந்து வாழ்வதெப்படி என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிங்கம், புலி, கரடி, ஆடுகள் , மாடுகள் முதலான விலங்குகளும், மரம், செடி, கொடி, புல், பூண்டு என எல்லாவற்றையும் உள்ளடக்கிய இயற்கையோடு கைக்கோர்த்து வாழ்வதெப்படி என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையோடு பேசுவதெப்படி என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையை நம் தேவைக்கேற்ப இயற்கையின் ஒப்புதலோடு வளைப்பதெப்படியென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

எதிரியைக் கொல்ல வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்தார்கள் அவர்கள். எதிரியுடன் இணக்கமாய்ப் பழகி அவனையும் நண்பனாக்கிடும் வித்தை கண்டுபிடித்தோம் நாம் . இரவெல்லாம் கன்விழித்து ஆராய்ச்சியென்ற பெயரில் எத்தனையோ அழித்து, ரசாயன விதைகளைக் கண்டுபிடித்தார்கள் அவர்கள். சாணத்தையும், ஆடு மாடுகளின் சிறு நீரையும் கொண்டு, இயற்கையை வளர்த்து பருவ காலத்தில் மழை வரவழைத்து முப்போகம் விளைவிப்பதெப்படி என்று கண்டுபிடித்தோம் நாம்.

லாபங்களை மும்மடங்கு ஆக்குவது எப்படியென்று சொல்லி பணத்தைக் கட்டிக்கொண்டு நிம்மதியில்லா இரவுகளைக் கண்டுபிடித்தார்கள் அவர்கள்.

இருப்பதைக் கொண்டு எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுத்து நிறைவாய் நிம்மதியாய், வெளிக்கதவுகளைக் கூட பூட்டாமல் படுத்துறங்குவது எப்படி எனக் கண்டுபிடித்தோம் நாம்.

செயற்கைக்கோள் செய்து விண்ணில் உலவவிட்டு, உலகம் வெப்பமயமானதில் உறுகிய பனியில் சுனாமியும், மழையும், புயலும் எப்போது வரும் என்று முன்னரே சொல்லக் கண்டுபிடித்தார்கள் அவர்கள் . இயற்கையோடு இணைந்து, காடுகள் வளர்த்து, மழை கூட்டி, விவசாயம் செய்து புயலைத் தடுக்க ஓங்கி உயர்ந்த மரங்கள் செய்து, இயற்கையைக் கொண்டே இயற்கை சீற்றங்களை எப்படிக் கையாளளாம் என்று கண்டுபிடித்தோம் நாம்.

கடல் கடந்து, கண்டங்கள் கடந்து வாணிபம் செய்ய விமானங்கள் கண்டுபிடித்தார்கள் அவர்கள். இருக்கும் இடத்திலேயே வாணிபம் செய்து பொருள் ஈட்டி, தனக்கு மிஞ்சியது போக தான தர்மங்கள் கூட செரிவாய்ச் செய்வதெப்படி என்று கண்டுபிடித்தோம் நாம். இன்னும் சொல்லவேண்டுமானால் சொல்லிக்கொண்டே போகாலாம். அத்தனை கண்டுபிடித்திருக்கிறோம் நாம்.

நம் கண்டுபிடிப்புகள் கலாசாரம், பண்பாடு, வாழ்க்கைமுறை, நாகரிகம் என்கிற பெயரில், இலக்கியங்களாக, கதைகளாக எழுத்தாக்கப்பட்டுள்ளன. 21ம் நூற்றாண்டான இன்று இயக்குனர் ஜேம்ஸ் காமரூன் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான 'அவதார்' திரைப்படத்தில், 1ம் நூற்றாண்டில் நம் நம்பிக்கைகளையும், கண்டுபிடிப்புக்களும் நாம் எழுதி இலக்கியாமாக்கிய மகாபாரதத்தில் ஷிரி கிருஷ்ணரின் மொழிகளான 'எதை நீ எடுத்து கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது, எதை நீ கொடுத்தாயோ,அது இங்கேயே கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ அது நாளை வேறொருவருடையதாகிவிடும்' என்பதும், இயற்கையோடு பேசுதல், இயற்கையோடு இணைந்து வாழுதல் என்பன போன்ற கருத்துக்கள் கையாளப்பட்டிருப்பது ஒரு நல்ல சான்று.

நம் கண்டுபிடிப்புக்கள் அவர்களின் கண்டுபிடிப்புக்களை விடவும் உயர்வானது, உன்னதமானது, மேன்மையானது, நிரந்தரமானது. அவர்கள் கண்டுபிடிப்புக்கள் தற்காலிக வெற்றியைத் தந்துவிடலாம்.

ஆனால் நிரந்தர வெற்றியை, வெற்றியோடு கூடிய நிம்மதியை, நம் கண்டுபிடிப்புக்கள் மட்டுமே தர இயலும்.

ஆனால் நாம் அப்படியான கண்டுபிடிப்புக்களை உள்ளடக்கிய நம் இலக்கியங்களை எங்கே திரும்பிப் பார்க்கிறோம்.

சிந்தனையில் மூழ்கியவாறே, மேலோட்டமாய் நான் யதேச்சயாக திரும்புகையில், ஏதோ ஒரு இசையின் தாளத்திற்கு ரமேஷ் ஒரு வெள்ளைக்கார பெண்மணியின் இடையில் கைவைத்தபடி மெதுவாக, தப்பும் தவறுமாக, அவர்கள் நடனத்தை ஆடியவாறே, என்னைப் பார்த்துக் கண்ணடித்தான். நான் வெறுமையாய் சிரித்துவிட்டு, அந்த இடத்தைவிட்டு திரும்பி நடக்கத் தொடங்கினேன். அந்த இசை மெல்ல மெல்ல என் காதுகளை விட்டு அகலத்தொடங்கியிருந்தது.

(ramprasath.ram@googlemail.com)

# இடியும் மின்னலும்



**சரோ வர்ணன்**
**கனடா**

நன்றாக உறங்கிக் கொண்டிருந்த நான் திடீரென பலமாக கேட்ட இடியோசைச் சத்தத்தினால் திடுக்கிட்டு கண் விழித்தேன். மெல்ல போர்வையை விலக்கி ஆமை போல தலையை தூக்கி பார்த்தேன். இடிகள் வானவெளியில் உருண்டு உருண்டு சப்பரித்தன. வானம் அதனது மூடிய விழிகளைத் திறந்து ஒரு முறை பார்த்து விட்டு, பின் பட்டென இமை கதவுகளை மூடிக் கொள்வது போல மின்னல் விட்டு விட்டு பளீச் பளீச்சென பளிச்சிட்டது. நான் பயத்தில் கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டேன். அறைக்குள் மின்னல் பாய்ச்சிய வெளிச்சம் எனக்கு பயத்தை கொடுத்தது. உடம்பு என் அனுமதியில்லாமலே வெடவெட என நடுங்கியது. இதயம் அடிக்கும் டிக்டிக் சத்தத்தைக் கூட என்னல் கேட்க முடிந்தது.

படபடப்புடன் போர்வை இழுத்து உடம்பு தெரியாமல் மூடினாலும், இடி சத்தம் போர்வையை துளைத்துக் கொண்டு காதுக்குள் புகுந்தது. மிரண்ட கண்களால் வெளியில் பார்த்தாலும், என் பார்வைக்கு போர்வை ஆதரவு கரம் நீட்டியது போல் இயற்கையின் சீற்றத்தக்கு தடை சட்டம் போட்டது.

அர்ச்சுனா!அர்ச்சுனா! அம்மா!அம்மா! என மெல்ல என் உதடுகள் முணுமுணுத்தது.என் அம்மா அடிக்கடி அர்ச்சுனா! அர்ச்சுனா என சொல்லுவா ஆனால் ஏன் இப்படி சொல்கிறாள் என்ற காரணம் எனக்கு தெரியாது. இப்போதுதான் அம்மாவின் அருமை தெரிகிறது. பாவம் அம்மா. அவ இப்போது தொழிற்சாலையில் இரவு வேலை செய்துக் கொண்டிருந்தாலும், கட்டாயம் என்னை நினைத்துக் கவலைப்படுவாள் என எனக்கு தெரியும்.

அம்மா வீட்டில் இருக்கும் நேரங்களில் இடி மின்னலுடன் மழை வந்தால் எனது அறைக்கு அம்மா வந்து விடுவாள். அன்று இரவு தன்னுடன் படுக்கும்படி கூறுவாள் .அல்லது என் கட்டிலில் வந்து அம்மா படுப்பா.

" பிரியா குஞ்சு பயமாக இருக்கா?' என அம்மா கேட்க நான் மேலும் கீழும் தலையாட்டுவதுடன் அம்மாவின் கைகளுடன் என் கைகளை கோர்த்துக் கொள்வதில்தான் எத்தனை ஆனந்தம். அப்போதெல்லாம் அம்மா சிரித்துக் கொண்டே சொல்லுவாள் " இது என்ன உடும்பு பிடி. அம்மா பக்கத்தில்தானே இருக்கிறேன்." என மெல்ல மெல்ல தலையை வருடி விடும் போது தொடர்ந்து மின்னல் மின்ன வேண்டும் போலிருக்கும்.

கட்டில் சிறியது என்றாலும் அம்மாவுடன் என் கட்டிலில் நெருக்கிக் கொண்டு படுப்பதிலுள்ள சுகம் அம்மாவினது அறைக்கு போய் அவர்கள் இருவருக்குமிடையில் படுக்கும் போது எனக்கு கிடைப்பதில்லை. காரணம் அப்பா அடிக்கும் குறட்டை சத்தமும், அதனுடன் கலந்து வரும் பீயர் நாற்றமும், வயிற்றை ஏதோ செய்யும். அம்மா எப்படி தான் அப்பாவுக்கு அருகில் படுக்கிறாளோ தெரியாது.

ஒரு நாள் அம்மாவிடம் நேரடியாகவே கேட்டு விட்டேன்.

'அப்பாவின் வாய் மணக்குதும்மா'

'அப்பாவுக்கு வேலை செய்த களைப்பம்மா' என என்னை சாமானப்படுத்தினாலும், அப்பாவின் வாய் மணப்பதை எப்படி மறைக்க முடியும்? எனக்கு ஒன்பது வயதாகிறது அடிக்கடி டிவியில் காண்பிக்கப்படும் சிம்சன் காட்டூனில் வரும் Homer பீயர் குடித்து விட்டு இப்படிதான் கதைப்பார். அம்மா நினைக்கிறா நான் சின்னப் பிள்ளை எனக்கு ஒன்றும் தெரியாது என்று. ஆனால் எங்கள் பாடசாலையில் மதுபானம் குடிப்பது எவ்வளவுக்கு உடல் நலத்துக்கு கெடுதி என பலதடவைகள் ஆசிரியர்கள் கற்பித்திருக்கிறார்கள்

இப்போது அம்மா இரவு வேலைக்கு போகிறாள். பகலில்தான் படுப்பா. என்னை பாடசாலைக்கு அழைத்துச் செல்லவும், ஏனைய டியூசன் வகுப்புக்கு கூட்டிக் கொண்டு போக வேண்டுமென்பதற்காகதான் அம்மா இரவு வேலைக்கு போகிறாள்.

தொடர்ந்து மின்னலும்,இடியும், மழையும் போட்டி போட்டுக். கொண்டு என் சிந்தனையை களைத்தது.

இடியின் சத்தம் என் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து விடுமோ என பயமாக இருந்தது. எழுந்த போய் அப்பாவின் ரூமில் போய் படுப்போமோ என நினைத்தாலும், எழுந்து என்னறையிலிருந்து அப்பாவின் அறைக்கு போக முடியாதப்படி லைட் எல்லாம் அணைந்து விட்டது. பவர்கட் இருள் ஒரு பக்கம், இடி சத்தம் மறுபக்கம் காதுகளை இரு கைகளால் மூடியபடி படுத்திருக்கிறேன்.

அம்மாவுக்கும்,, அப்பாவுக்கு நான் செல்லப்பிள்ளை எது கேட்டாலும், இல்லை என சொல்ல மாட்டார்கள். மற்றவர்களை போல சகோதர்கள் எனக்கு இல்லையே என்ற கவலை இருந்தாலும், ஆரம்பத்தில் நாங்கள் தொடர்மாடி கட்டிடத்தில் இருந்தப் போது எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். நான் அவர்கள் வீட்டுக்கும், அவர்கள் எனது வீட்டுக்கும் வருவதால் தனிமை என்பது அப்போது எனக்கு தெரியவில்லை. தம்பி தங்கைகள் இல்லையே என்ற கவலையும் இருக்கவில்லை.

ஆனால் சொந்தமாக வீடு வாங்கி வந்தப் போதுதான் என்னுடன் விளையாட யாருமில்லையே என அம்மாவை அடிக்கடி நச்சரிக்கத் தொடங்கினேன்.

ஏன் அம்மா எனக்கு மட்டும் தம்பி, தங்கைகள் இல்லை? என நான் கேட்க, அம்மாவின் கண்கள் கலங்கி விடும். கடவுள் கொடுக்கவில்லையம்மா என கவலை படுவதுடன் தனக்கு அடிக்கடி வயிற்று வலி வந்ததால் ஒரு ஆப்ரேசன் செய்ததாக கூறுவா.

அம்மாவின் கண்கள் கலங்குவதைக் கண்டபிறகு இப்படியான கேள்வியை கேட்பதை தவிர்த்துக் கொண்டேன். ஆரம்பக்காலத்தில் அம்மாவும், அப்பாவும் காலையில் வேலைக்குப் போக, என்னை பாடசாலையிலிருந்து அழைத்து வந்து தனது வீட்டில் வைத்து பராமரிப்பது எங்கள் வீட்டுக்கு கீழே basementல் வாடகைக்கு இருக்கும் ரஜனி அன்ரிதான்.. அவ மிகவும் நல்லவா. அங்கிளும் அப்படிதான். அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. அங்கிள் இரவு வேலைக்கு போவதால் பகலில் படுப்பார். எனவே ரஜனி அன்ரிக்கு போர் அடிக்கிறது என்று என்னுடன்தான் அதிக நேரத்தை கழிப்பாள். விளையாடுவாள், நல்ல நல்ல கதைகள் சொல்லுவா. பாட்டு எல்லாம் பாடி காட்டுவாள். நடனம் கூட நன்றாக ஆடுவாள்.நானும் அவவிடம் படித்த பாட்டையும், கதையும் தமிழ் வகுப்பில் படிப்பிக்கும் டீச்சரிடம் பாடி காட்டி, கதையும் சொன்னால் தமிழ் டீச்சர் சுகி ' உங்களுக்கு இவ்வளவு அழகாக பாட்டும், கதையும் யார் சொல்லி தந்தது என கேட்டு சபாஸ் போடுவார்.

திடீரென ரஜனி அன்ரியின் அப்பா இறந்து விட்டார். அன்ரி ஒரே அழுகை இலங்கையில் பிரச்சனை என்பதால் போய் கடைசியாக அப்பாவின் இறந்த முகத்தைக் கூட பார்க்க கொடுத்து வைக்கவில்லையே என அழுவாள். இந்த நேரங்களில் அம்மாதான் அன்ரிக்கு ஆறுதல் கூறி, சமைத்துக் கொடுத்தாள்.. இரவு அங்கிள் வேலைக்கு போவதால். தனியாக படுக்க அன்ரிக்கு பயமென்பதால், அம்மா என்னை அன்ரியுடன் படுக்க அனுப்புவா. அப்போது அன்ரி தனது அப்பாவின் கதைகளை, அவர்பட்ட கஷ்டங்களை சொல்லி அழும் போது நான் அவவின் கண்ணீரை துடைத்து,

‘அழாதீர்கள் அன்ரி. எனக்கும் அழுகை வருகிறது’ என கூற அன்ரி என்னை கட்டிப் பிடித்து கொஞ்சுவாள். அம்மாவுக்கு இரவு வேலை கிடைத்தப் பிறகு அம்மா பகலில் படுத்திருப்பாவென்று சொல்லி வீட்டுக்கு அதிகம் வரமாட்டாள். ஆனால் என்னை அழைத்துக் கொண்டு பார்க்கில் விளையாடவும், கடைக்கெல்லாம் அழைத்துச் செல்லுவாள்.

ஒரு முறை நான் பாடசாலையில் விழுந்து கால் முறிந்து நடக்க முடியால் கஸ்டப்பட்டப் போது அன்ரிதான் என்னை தூக்கிக் கொண்டு திரிந்தாள். இப்படி என் மீது அதிக அன்பு காட்டுவதால் எனக்கும் அன்ரி மீது கொள்ளைப்பிரியம். ஏனக்கு கோபம் வரவேண்டுமென்பதற்காக தானும், அங்கிளும் வேறு வீட்டுக்கு மாற போவதாக கூறுவாள். அப்போது ‘பிளீஸ் அன்ரி போகாதீர்கள்’’என நான் கெஞ்சுவதை பார்த்து அப்பாவும், அம்மாவும் சிரிப்பார்கள்.

எனது மாமா ரகு அமெரிக்காவிலிருக்கிறார். அவரோடு இருக்கும் தாத்தாவுக்கு சுகமில்லை என்று தாத்தாவை பார்க்க அங்கு வரும்படி மாமா போன் பண்ணினார். எனக்கு பாடசாலை லீவு என்பதால் போக சுலபமாக இருந்தது ஆனால் அப்பாவுக்கு விடுமுறை எடுக்க முடியாததால் அவர் எங்களுடன் வரவில்லை. மாலீமாவின் மகன் தனு எல்லா இடங்களையும் சுற்றி காட்டினான். இரண்டு வாரங்கள் அங்கு நிற்பதற்காக அம்மா எல்லா சாப்பாடுகளை சமைத்து பிரீஜில் வைத்த விட்டு வந்தாள். தினமும் அமெரிக்காவிலிருந்து சாப்பிட்டீர்களா? மருந்து எடுத்தீர்களா? ஏன கேள்விக்கு மேல் கேள்வி கேட்பதை கேட்டு மாமா சிரிப்பார். ‘அக்கா அத்தான் என்ன சின்னப்பிள்ளையா? ஏன் இங்கு வந்து அவருடன் தொணதொணத்துக் கொண்டிருக்கிறாய்? ஏன கேட்க ‘ தம்பி உனக்கு என்ன தெரியும்? அவருக்கு சுகர் கூடி விட்டால் யார் பார்ப்பது? அதுதான் சமையல் எல்லாம் செய்து விட்டு வந்தேன் என்றாள்..

பின் மேசை மீது இருந்த ரிசு பெட்டியிலிருந்த ரிசுவை உருவி எடுத்து அம்மா முகத்தை ஒரு முறை சீறி துடைத்தாள். அம்மாவுக்கு நல்ல தடிமன், காய்ச்சல் என கூறி படுக்கப் போய் விட்டாள். மாமாவும், மாமியும் இருவரும் அம்மா அப்பா மீது காட்டும் அன்பை பற்றி பெருமையாக பேசிக் கொள்வதை பார்க்க எனக்கும் சந்தோஷமாக இருந்தது.

இரண்டு வாரம் கழித்து வீடு திரும்பிய போது அப்பா ஒன்றும் சாப்பிடாமல் சமைத்த சாப்பாடு எல்லாம் பிரீஜில் அப்படியே இருக்க, ரஜனி அன்ரி சமைத்த சாப்பாட்டை அங்கிள் சாப்பிடும் படி வற்புறுத்தியதால் அம்மா சமைத்த சாப்பாட்டை சாப்பிடவில்லை என அப்பா கூற, அம்மாவுக்கு வந்த கோபத்தை எப்படி சொல்வது?

காலைப் பிடித்து கெஞ்சாத குறையாகக் கண்களில் நீர் மல்க நின்ற அப்பாவை ஏதோ போனால் போகிறது என அம்மா மன்னித்தார்.

பயங்கர சத்தத்துடன் ஒரு இடி என் காதை செவிடாக்கியது போலிருந்தது.

மெல்ல எழுந்து அப்பாவின் அறைக்கு போனேன். கண்களால் ஒன்றும் பார்க்க முடியவில்லை. தடவி தடவி பார்த்தப் போது அறை கதவு மூடிக் கிடந்தது. திறந்துக் கொண்டு உள்ளே போக பயமாக இருந்தது. நித்திரை கொள்ளும் வேலையில் அப்பாவை குழப்பினால் பூமிக்கும் வானத்துக்கும் குதிப்பார். பேசாமல் ரஜனி அன்ரியுடன் படுப்போம் என மனம் கூற, மெல்ல மெல்ல படிகளில் கால்களை வைக்கிறேன். எத்தனை நாட்களுக்கு பிறகு அன்ரியுடன் படுக்கப் போகிறேன் என்னைக் கண்டால் அன்ரி எவ்வளவு சந்தோஸப் படுவாள்

நினைத்துக் கொண்டே கதவுக்கு அருகில் கையை வைக்கிறேன்.

திடீரென அறைக்குள்ளிருந்து சிரிப்பொலி கேட்க, கதவை தட்ட போன நான் ஓ! அங்கிள் வேலைக்கு போகவில்லை போலிருக்கு என்ன செய்வது எனது அறையில் படுப்போம் என திரும்பிய போது அன்ரியுடன் அங்கிள் சிரித்து பேசும் சத்தம் கேட்டது இது. . .இது அங்கிள் குரலில்லையே அப்பாவின் குரலில்லையா? அன்ரிக்கும் இடி மின்னல் என்றால் பயம் போலிருக்கு என எண்ணிய நான், படிகட்டுகளில் தட்டுதடுமாறி மேலே வரும் போது டெலிபோன் அலறியது.

இருட்டுக்குள் போனை எடுக்க போன போது எனது முழங்காலை மேஜையின் கால் நன்றாக இடித்து விட்டது ஆ! அம்மா என்றேன் அனிச்சையாய்க் கண்களில் நீர் துளித்தது.

ரிஸிவரை எடுத்து "ஹலோ" சொல்வதற்குள் இணைப்பு அறுந்து விட்டது.

சலிப்புடன் போனை வைத்து விட்டு திரும்பும் போது யாரோ வாசல் கதவை திறக்கும் சத்தம் கேட்க ஏற்கனவே இடி, மின்னல் சத்தத்தில் பயந்து போன என் உடம்பு மெல்ல நடுங்கத் தொடங்கியது.

பக்கத்தில் இருந்த மேஜைக்கு அருகில் நான் ஒளிந்துக் கொள்கிறேன்.கண்கள் மட்டும் வாசல் கதவை பார்த்தக் கொண்டிருக்கிறது. திடீரென அம்மா கதவை திறந்துக் கொண்டு உள்ளே வருகிறாள். அவவின் மூக்குத்தி இருட்டிலும் பளபளக்கிறது.

அம்மாவை கண்ட சந்தோஷத்தில் இருட்டையும் பொருட்படுத்தாது ஓடுகிறேன். ஆம்மா ஆச்சிரியத்துடன் என்னை பார்க்கிறாள். லைட் இல்லாததால் வேலை இல்லை. அது சரி அப்பா எங்கே? இவ்வளவு நேரமாக படுக்காமல் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

ரஜனி அன்ரிக்கு இடி, மின்னல் என்றால் பயமென அப்பா கீழே படுக்க போய் விட்டார், கூறி விட்டு அம்மாவின் பதிலுக்கும் காத்திருக்காமல் ஓடுகிறேன் அம்மாவுடன் சேர்ந்து படுக்கும் மகிழ்ச்சியில்..

இப்போது வெளியில் இடியும் மின்னலும் ஓய்ந்து விட்டன.

(sarovarnan@gmail.com)



# அம்மனும் அடியவரும்

மயிலிட்டி சிவபாலன்
சுவிற்ஸ்லாந்து

நான் பாருங்கோ எண்பதுகளில் காசுக்காகதான் இஞ்சை வந்தனான்.

அவனைச் சுட்டனான் இவனைச் சுட்டனான் எனச் சொன்னால் அகதி அந்தஸ்து கிடைக்கும் எண்டினம். அப்பிடியே சொன்னன். அதுவும் கிடைச்சுது. அதுவும் அரசியல் அந்தஸ்து அதாவது பல நாடுகளுக்கு விசா எடுக்காமல் போய் வரலாம் என்றது தான் அதாலை எனக்கு இலாபம்.

வேறை எதுவும் இருக்கலாம். ஆனால் எனக்கு சத்தியமாய் தெரியாது. அந்தளவு படிப்றிவும் எனக்கில்லை. நான் படிச்சது கலட்டிப் பள்ளிக்கூடத்திலை தான். பிறகு எட்டாம் வகுப்புக்கு மேலை ஒண்டுமே ஏறமாட்து எண்டுட்டுது. ஐயாவோடை தொழிலுக்கு போயிட்டன.

அப்பெல்லாம் இப்ப மாதிரி சுவிசிலை தமிழ் படங்கள் பார்க்க ஏலாது.

ஒரு வீடியோ கொப்பியை இரவல் வேண்டி அறையிலை இருந்த ஐஞ்சு பேரும் காசு போட்டுப் பார்ப்பம்.

வெள்ளிக் கிழமையும் சனிக்கிழமையும் புளூபிலிம் பார்ப்பம் எண்டு வெளிக்கிட்டம்.

ஆனால் முதல்நாள் பார்த்ததோடையே சொல்லிப் போட்டன், "உதெல்லாம் பம்மாத்து. . . உப்பிடி எல்லாம் நடக்கேலாது" எண்டு.

அன்றிலிருந்து எனக்கு மற்ற நாலுபேரும் சேர்ந்து எனக்கு 'சாமியார்' என்று பட்டப் பெயர் வைத்து விட்டான்கள். அது இன்றுவரையும் இருக்கு.

படிப்பறிவு இல்லாதவனுக்கு எல்லாம் பல்கலைக்கழகங்களும் ஆளுக்காளும் டாக்டர் பட்டம் கொடுக்கேக்கை குறைந்தது வெள்ளிக்கிழமை ஆவது கோயிலுக்கு போகாத எனக்கு 'சாமியார்' பட்டம் கிடைத்தது பறவாயில்லை எனப்பட்டது.

'சாமியார்', என்றால் சுவிஸ் முழக்கத் தெரியும்.

பின்பென்ன. . . பிற்ஸா கடை தான். இப்பதான் நகைக்கடையும் புடவைக்கடையும் மரக்கறி கடைகளும் வீடியோ கடைகளும் என பல தொழில்கள். . .அப்ப ஒட்டு மொத்த இலங்கை தமிழருக்கும் பிற்ஸா கடைகள் தான்.

காலமை பத்து மணிக்கு போனால் பின்னேரம் மூண்டு மணிக்கு அறைக்கு வருவம். பிறகு ஐஞ்சு ஆறுக்கு போனால் இரவு பதினொரு பன்னிரண்டு மணிக்குத்தான் திரும்ப வருவம்.

வருடம் 365 நாளும் இது தான்.

போனால் காசு. இல்லாவிட்டால் இல்லை. சிக்லீவு, கோலிடே அப்பிடி இப்பிடி எதுவும் கதைக்கேலாது. அதிகமாக கதைத்தால் அடுத்த கடையில் வேலை தேட வேண்டியது தான்.

தேயிலைத் தோட்ட சனங்களுக்கு நாங்கள் செய்த அநியாயம் தான் எங்களை இப்பிடி கொண்டு வந்து விட்டிருக்கு என நினைத்துக் கொள்வன்.

பொதுவாக மதிய, இரவு சாப்பாட்டுகள் அங்கேயே கழிந்து விடுவதால் எனக்கு சாப்பாட்டுச் செலவும் எதுவும் இருக்கவில்லை. பொக்கற்றுக்கை சின்ன மிளகாய் போத்தல் குப்பி வைத்திருப்பன். அதிலை கொஞ்சத்தை தூவிப்போட்டு சாப்பிடுறது தான். ஆனால் நெடுகலும் அதையே சாப்பிட்டுக் கொண்டு இருக்க நாக்கும் சாகத் தொடங்கி விட்டது.

எப்ப தாரிட்டையும் பிறந்தநாள், சாமத்திய வீடு, கல்யாண வீடு வருகிறது என்று பார்த்துக் கொண்டு இருந்து விட்டு அங்கு போய் ஒரு கட்டுக் கட்டினால் அடுத்த ஒரு மாதத்துக்கு அது தாக்குப் பிடிக்கும். அதுக்கும் எப்பிடியும் 20, 25 சுவிஸ் பிறாங் அழவேண்டியிருக்கும்.

இந்த நாக்குச் செத்துவிடும் கதையை ஒரு நாள் கதையோடு கதையாக அம்மாவுடன் மயிலிட்டிக்கு டெலிபோன் போட்டுக் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது சொல்ல அதுவே வினையாகி அந்த வருட கௌரிகாப்பு விரதத்துக்கு வந்த ஒரு பெட்டையை அம்மாவும் தங்கச்சியும் பார்த்து விட்டு எல்லாத்தையும் முடித்து விட்டு நீ இப்ப உடனை சிங்கப்பூருக்கு வா என ஒன்றைக் காலில் நின்றார்கள்.

பின்பென்ன?

அடுத்து வந்த முகூர்த்தத்தில் சிங்கப்பூர் காளி கோயில் வாசலின் சாமியார் சம்சாரி ஆகினார்.

அம்மனுக்கு காப்புக் கட்டியதால் கிடைத்த புண்ணியம் எனஅவள் அடிக்கடி சொல்லிக் கொள்வாள்.

மீண்டும் சுவிஸ் வாழ்க்கை. . .பெரிதாக வித்தியாசம் எதுவும் இல்லை. . .வீட்டில் மணம் சுவையுடன் சாப்பாடு இருக்கும். அத்துடன் அன்றைக்கு ரீ. வி.யில் பார்த்த ஏதாவது சேலைக்கு அல்லது நகைகளுக்கு சின்ன சின்ன அப்பிளிக்கேசன் இருக்கும்.

என்ன?. . .மாதத் தொடக்கத்தில் அப்பிளிக்கேசன் பெரிதாக இருக்கும். . பின்னடியில் சிறிதாக இருக்கும். அப்பிளிக்கேசனை றியெக்ட் பண்ணினால் கண்ணால் பொலு பொலு என்று கொட்டும்.

எங்கையிருந்து தான் இப்பிடி தாரை தாரையாக கொட்டுதோ? நான் வடிவாய் வெளிக்கிட்டு வந்தால் தான் உங்களுக்கும் பெருமை என வக்காலத்து வேறு.

என்ரை அம்மாவும் முந்தி இப்பிடித்தான். அம்மா தற்கொலை எதுவும் செய்து போடுமோ என சின்ன வயதிலை பயப்பிடுவன். அடுத்தநாள் பார்த்தால் ஐயாவும் அம்மாவும் குந்திலை சிரித்து கதைச்சுக் கொண்டு இருப்பினம்.

நாள் செல்ல செல்ல என் மனையின் பெயர் வானொலிகளிலும் ரீ.வி.களிலும் வலு பிரசித்தம் என என் நண்பர்கள் சொன்னார்கள். நான் வேலைக்குப் போனபிறகு அவளுக்கும் பொழுது போகத்தானே வேண்டும். எந்தப் போட்டிகளையும் விட்டு வைப்பதில்லையாம். . .அதே போல் நேயர் விருப்பம், இன்றைய நேயர், பாட்டுக்கு பாட்டு, வெல்ல முடிந்தால் வெல்லுங்கள்...

என்ரை மனுசியின்ரை குரலைக் கேட்க முதலே "வணக்கம். வந்தனம். . திருமதி. வசந்தி சிவபாலன். . .குடும்பத்தில் அனைவரும் நலமா . .சுகமா. . சௌவுக்கியமா" என தீபத்தின் அறிவிப்பாளர் சிவகாமி விநாயகன் தொடக்கம் மற்றைய மற்றைய வானொலிகளின் ஆண் அறிவிப்பாளர்கள் வரை என்ரை மனுசி வலு பேமஸ்.

என்னால் என் மனைவிக்குப் பெயர் என்பது இல்லாமல் அவளால் எனக்கு பெயர் வரத் தொடங்கியது கொஞ்சம் அருவருப்பாய் இருந்தது. அவ்வாறு இருக்கும் சில உரையாடல்கள்.

"உங்கள் கணவர் வேலைக்குச் சென்று விட்டாரா?அல்லது வீட்டில் இருக்கின்றாரா" என ஆரம்பிக்கும் ஆண் அறிவிப்பாளர்களின் சம்பாசணையின் நெருக்கம் அல்லது விலக்கம் நான் வீட்டில் இருப்பதையும் இல்லாததையும் பொறுத்திருந்ததை இரண்டொரு தரம் கண்டும் காணமல் போல் இருந்தேன்.

ஏதாவது சொல்லப் போனால் 'நறோ மைண்ட்', 'அது', 'இது' என வேண்டிக் கட்ட வரும் என விட்டு விட்டு இருந்தேன்.

ஆனால் கடைசியில் பயந்தது மாதிரி ஒரு நாள் நடந்து விட்டது.

கிளி கூட்டை விட்டுப் பறந்து விட்டது.

சம்சாரி பழையபடி சாமியார் ஆகிவிட்டார் அவமானங்களைச் சுமந்தபடி.

அடுத்த ஒன்றிரண்டு மாதங்களுக்கு எங்கள் சிற்றியில் இது தான் தலையங்கம்.

அனுதாபமும் அவமானமும் இரண்டும் எனக்குத் தான்.

இப்பொழுது இருவரும் சேர்ந்து கனடாவில் வானொலி நடாத்துவதாக பின் வந்த செய்திகள் தெரிவித்தன.

முன்பென்றால் வாய் மாத்துக்கு சாப்பிட யாராவது கலியாணம், நல்லது கெட்டதை மனம் நினைத்துப் பார்க்கும். இப்ப எதுவுமே இல்லை. காலை, மதியம், எல்லாம் இத்தாலிகாரனின் பிற்ஸா தான்.

இரண்டு மூண்டு வருசத்து வனவாசத்துக்குப் பிறகு பக்கத்திலை இருந்த கோயிலடிக்கு நேரம் கிடைக்கேக்கை போய் வரத் தொடங்கினன்.

நான் வந்த பொழுது ஒரு வீட்டின் பேஸ்மன்ற்றில் இருந்த கோயில் பிறகு சின்ன மண்டபத்துக்கு இடம் மாறி இப்ப ராஜகோபுரமாய் வளர்ந்து நிற்குது.

சும்மா சொல்லக் கூடாது கூரையைப் பிரிச்சுக் கொண்டு கடவுள் கொட்டும் எனச் சொல்லுவினம். இங்கை கூரையைப் பிச்சுக் கொண்டு சுவிஸ் சனம் கடவுளுக்கு கொட்டிச்சுதுகள்.

என்ன எல்லாம் செய்தால் சனம் வருமோ அது எல்லாம் இங்கு நடந்த்து.

அம்மன் கோயிலிலை காப்பு கட்டலாம், நவராத்திரி கொண்டாடி கன்னி வாழை வெட்டலாம். . . அது பிழையில்லை.

ஆனால் சூரன்போர், விநாய சதுர்த்தி எல்லாம் கூட நடந்தது. காரணம் முருகன் அம்மனின் இளைய பிள்ளையாம். பிள்ளையார் மூத்த பிள்ளையாம்.

பிள்ளைகளின் பிறந்தநாள் கேக் ஒன்று மட்டும் இதுவரை இங்கு வெட்டப்படவில்லை. யாரே சொன்னார்களாம் 'வெஜிரேறியன் கேக்' செய்யலாம் எண்டு.

அடியடா பச்சை மட்டையாலை என மனம் சொல்லிக் கொண்டது.

ஜெகோவா இயக்கங்களில் எவ்வாறு மக்களின் கவனங்கள் அங்கிங்கு திரும்பாமல் அவர்களை ஒற்றை வழியில் வழிநடாத்துவார்களோ. . . அவ்வாறே அம்மன் ஆலயத்தினரும் எவ்வாறு எல்லாம் தங்கள் கோயிலுக்கு கொண்டு வர முடியுமோ அதனைச் முழுமூச்சாக செய்து கொண்டு இருந்தார்கள்.

அதன் அடுத்தபடியாக அம்மன் திருமண மண்டபம், அம்மன் சைவ உணவகம் என அம்மன் வளர்ந்து கொண்டு போக அம்மனின் கல்லாப்பெட்டியின் மீது அடியவர்களின் கண் பட்டதை கோயில் வாசலில் விசரன் போல் இருந்த என் கவனத்தில் பட்டது.

அடுத்த அடுத்த தினங்களில் அம்மன் விவகாரம் கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் ஆகத் தொடங்கியது. அல்லது அரசியல் தனது முதற்காலை உள்ளே வைத்தது.

பின்பென்ன? கூடாரத்துள் நாலு காலும் வரப்போகுது என அடியவர்களுக்கு அபாயமணி அடிச்சொன்னன்.

மனிஷி போனத்திலை சாமியாருக்கு மண்டை பிழைச்சுப் போச்சு எண்டு கதையை கட்டி விட்டுட்டான்கள்.

யாரும் எதிர்த்துக் கதைக்கவில்லை.

எல்லோரும் எமக்கேன் பிரச்சனை எண்டு ஒதுங்கினார்களே தவிர யாரும் அம்மனைப் பற்றிக் கவலைப்படவில்லை.

சனங்களுக்கு என்ன? யார் கோயிலை நடாத்தினாலும் கல்லு ஒன்று மூலஸ்தானத்தில் இருந்தால் போதும் தானே? அருச்சனை செய்து விட்டு தங்கள் பாட்டில் போய்க் கொண்டு இருப்பதற்கு. அப்படி சுவிஸ் அம்மன் போனாலும் ஜேர்மனியில் 'ஹம்' அம்மன் இருக்குது. அல்லது டென்மார்க்கில் 'உயிருள்ள அம்மன்' இருக்கு. கண்ணை மூடிக்கொண்டு 'அரோகரா' சொல்வற்கு சுவிஸ் என்ன? ஜேர்மனி என்ன? டென்மார்க் என்ன? நோயில்லாத வாழ்வும் போதிய பணத்தை எந்த அம்மன் கொடுத்தால் என்ன?

ஆனால் என்னாலை அப்படி இருக்க முடியவில்லை.

'ஏனடா அம்மனிலை கை வைக்கிறியள்' என மனம் பதைபதைத்தது.

யாரிடம் போய் யார் நீதி கேட்பது?

ஆனால் பிழை நடக்கப் போகிறது என்று மட்டும் தெரிந்தது!

உறுதியாக தெரிந்தது!!

முருகண்டிக்கு பக்கத்தில் புத்த விகாரை வரப்போகுது எண்டு படத்தோடை உந்த எல்லா இன்ரநெற்காறன்கள் எழுதுறாங்கள்.

ஆனால் அம்மாளாச்சியின்ரை கதையை மட்டும் அடக்கி வாசிக்கிறான்கள் எண்ட கோபம் எனக்கு.

ரமணா படத்திலை விஜயகாந், ''அங்கை அடிச்சால் இங்கை வலிக்கும்'' எண்டு சொன்ன மாதிரி இவங்களுக்கும் தெரியும், ''எங்கை அடிச்சால் தங்களுக்கு வலிக்கும்'' என்று. அந்த இடத்தில் கண்ணை மூடிக்கொண்டு இருந்து விட்டு ''இலங்கையில் நேர்மையான பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகிறார்கள்'' என கொட்டை அழுத்தில் செய்தியை போடுவாங்கள்.

பத்திரிகையா நடாத்துறான்கள்?. . . போற போக்கில் சிலதுகள் மஞ்சள் பத்திரிகையை தாண்டப் போகுது. . . அதிகநேயர் வாசித்த பக்கங்கள் எண்டு பார்த்தால் ஏதாவது பாலியல் செய்திகளைப் போடுறாங்கள்.

"கருத்தரிப்புக்கு ஏற்ற உறவு கொள்ளும் முறை எது?"

"முதல் இரவின் பாலுறவு அனுபவங்கள்"

இது தான் செய்திகள். தமிழ் பெண்களை கற்பழிக்கிற அவங்களுக்கும் கலாச்சாரத்தை சீரழிக்கும் இவங்களுக்கும் என்ன வித்தியாசம்?

கடைசியாக ஒன்று மட்டும் யோசித்தன்.

அம்மன் உயிருடன் இருந்தால் தானே இந்தப் பிரச்சனையள்?

அம்மன் தோற்றாலும் அவன்கள் வெல்லக் கூடாது.

*

**அ**டுத்த நாள் பூஜை செய்ய மூலத்தானஸ்தானத்துள் சென்ற ஐயருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

மூலஸ்தானத்துள் இருந்த அம்மனைக் காணவில்லை. கூடவே எழுந்தருளி அம்மனையும் காணவில்லை.

செய்தி பரவமுதல் இலண்டனில் உள்ள ஒரு ஆலயத்தினருடன் தொடர்பு கொண்டு மூலஸ்தானத்திலும் வசந்த மண்டபத்தின் உள்ளும் இரண்டு சிலைகளை வைக்க எவ்வளவோ முயன்றார்கள்.

ஆனால் முடியவில்லை.

செய்தி மின்னஞ்சல்கள் மூலம் பரவத் தொடங்கி விட்டது. எந்த கணனியில் இருந்து இந்த செய்தி வெளியாகியிருக்கலாம் என நிர்வாகசபையினர் தேடிப்பார்த்தார்கள்.

அது சுவிஸ் விமானநிலையத்தின் பயணிகள் தங்கிச் செல்லும் கூடத்தின் ஒரு கணனியில் இருந்து அனுப்பப்பட்டிருந்தது.

அது அனுப்பப்பட்ட நேரத்தின்படி அடுத்த அரை மணி நேரத்தில் இலங்கைக்கு ஒரு எயர்லங்கா புறப்பட்டிருக்க வேண்டும்.

அம்மன் தலைமறைவாகிய அந்த கலபுலாவில் அந்த நகரம் சாமியாரை மறந்திருந்தது.

*

பின்பென்ன?

இலங்கையின் இறுதி யுத்தம். . .

போர்க்குற்றங்கள். . .

நாடு கடந்த அரசாங்கம் பற்றிய செய்திகள். . .

எழுத்தாளர் மகாநாடு பற்றிய அறிக்கைகள்..கண்டனங்கள்...

இலங்கையின் உள்ளும் வெளியிலும் இலங்கைத் தமிழர்கள் மோதிக் கொண்டு இருக்கிறார்கள். இந்திய பத்திரிகைகளின் பக்கங்கள் நிரம்பிக் கொண்டு இருக்கின்றன.

மாவீரர் உரைகள் மலிவுப் பதிப்பாக மதராசு பட்டின தெருக்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது மழையிலும் வெய்யிலிலும் தலைவரின் படம். வீதியால் போகும் வாகனங்கள் சிதறியடிக்கும் ஊத்தைத் தண்ணீர் பேமன்றில் கிடக்கும் புத்தகங்கள் மீதும்.

இப்படி ஒரு நிலை எங்களுக்கு வந்திருக்க வேண்டாம்.

வெள்ளைக்காரன் வெளியாலை போனதிலை இருந்து இலங்கையில் மோதல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கு.

குண்டு வீச்சுக்கு பிறகு ஜப்பானும், இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளும் எங்கோ வளர்ந்து கொண்டு போயிற்று.

ஒரு நாள் உதயன் பத்திரிகையிலும் லங்காசிறியிலும் 'சாமி'யாரின் இயற்கை மரணம் பற்றிய மரண அறிவித்தல் வந்திருந்தது.

சுவிஸில் வசித்தவரும். . .மயிலிட்டி அம்மன் பரிபாலகரும்.... என அந்தச் செய்தி ஆரம்பித்திருந்தது.

(myliddysiva123@gmail.com)

# நானும் மனைவியும் திருவள்ளுவரும்

கணேசலிங்கம் - பிரான்சு



இந்த ஆஸ்பத்திரிக் கட்டிலுக்கு வந்து மூன்று நாளாகிவிட்டது.

வேகமாக ஓடி ஓடி உழைத்ததால் ஐம்பது வயதிலேயே உடம்பு ஐம்பத்தைந்து வயதை உணர்கிறது.

மனம் தைரியமாக இருந்ததாலோ என்னவோ இதுவரை தெரியாத ஒரு பலவீனம் உடம்பில் தெரிகிறது.

ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசமாகக் கிடைக்கும் என்று மலிவு விற்பனைக் கடைகளை தேடித் தேடி சாமான்கள் வாங்கிய பழக்கமோ என்னவோ வருத்தங்களும் ஒன்றுக்கு இரண்டாக வேண்டிக் கொண்டேன்.

டயபிட்டீஸ் ஆக இருக்குமோ என டொக்டரிம் செக் பண்ணப் போக கூடவே கொலஸ்ரோலும் பிரஷரும் இருப்பதாக சொன்னார்.

மனைவி கண்ணைக் கசக்கிக் கொண்டு இந்த மூன்று நாளும் என்னருகே.

இந்த மூன்று நாளும் சிந்திக்க போதியளவு நேரம் இருந்ததால் கடந்த காலத்தைப் பற்றி அலசி ஆராயக் கூடியதாக இருந்தது.

எனக்கு எப்ப 50 வயதாகியது. 35 வயசுக்குப் பின்பு இன்றுவரை என்ன நடந்தது? எதுவுமே தெரியவில்லை.

உழைப்பு. . . உழைப்பு. . . உழைப்பு. . .

அது மட்டுமே ஞாபகத்தில் இருக்கிறது. இந்த 15, 20 வருடத்தில் நான் வாழ்ந்ததாக தெரியவில்லை.

கோமாவில் நடமாடியிருக்கிறன்.

கொஞ்சம் பொறி தட்டிய மாதிரி இருக்கின்றது.

பிள்ளைகளுக்கும் எனக்கும் ஏன் இந்த பெரிய இடைவெளி? கேட்டதெல்லாவற்றையும் வேண்டிக் கொடுத்து விட்டு கடமைகளைச் சரியாக செய்திருக்கிறன் என்ற நினைப்பு. கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறன். அதுக்கு மேல். . .. . முதன்நாள் பள்ளிக்கூடம் அப்பாவுடன் தான் போவேனென்று அடம்பிடித்து என் கையைப் பிடித்துக் கொண்டு சந்தோசமாய் வந்ததும். . .விழ விழ தூக்கி விட்டு சைக்கிள் ஓடப் பழக்கியதுக்கும் பின்னால் . . . எதிலுமே பின்னால் எதுவுமே நினைவில் தொங்கவில்லை அவர்களின் பெயருக்கு பின்னால் என் பெயர் தொங்குவதைத் தவிர.

மகள் றைவிங் லைசென்ஸ் எடுத்திட்டன் என்று பூரிப்போடும் பெருமையோடும் வந்து சொல்ல 'நல்லது' என்று சொல்லிக் கொண்டே காரில் ஏறி வேலைக்கு ஓடினதும் இப்பொழுது ஞாபகம் வருகிறது.

மனைவி தந்த சாப்பாட்டுத் தட்டு இப்பொழுது கண்ணில்படுகிறது 'தவிட்டுப்பாண்'.

நல்லாச் சாப்பிட்டு அனுபவிக்க வேண்டிய வயதிலை சாண்ட்விச்சை மட்டும் சாப்பிட்டுக் கொண்டு ஓடி ஓடி வேலை செய்து சரியா சாப்பிட ஏலாத அனுபவிக்க முடியாத வயதுக்கு சேர்த்திருக்கிறன். இப்ப அதிலை மா சத்து இருக்கு . . . இதிலை கொழுப்பு இருக்கு எண்டு எதையுமே சாப்பிட முடியாது கைகள் தவிட்டுப் பாணை வைத்து கொறிக்கிறது.

எவ்வளவு முட்டாள் நான்?

என் முட்டாள் தனங்கள் என் கண் முன்னே ஒவ்வொன்றாய் வருகின்றன.

*

நான் பிரான்சில் தஞ்சம் கோரி 20 வருடங்கள் ஆகின்றன. அன்னிய மண்ணில் அன்னிய மனிதர்களுடன் வேலை செய்கின்றேன் செய்து கொண்டிருக்கின்றேன் என்ற உணர்வு எனக்க என்றைக்குமே ஏற்பட்டதில்லை. ஒன்று பல தமிழர்கள் என்னுடன் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இரண்டாவது பிரான்சுக்காரர் எல்லோரையும் சமத்துவமாக மதிக்கும் பண்பும் தான்.

பிரஞ்சுக்காரரின் தாரக மந்திரமே, ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' தான்.

நாம் செய்யும் தவறுகளைக் கூட இவர்கள் தெரியாமல் செய்துவிட்டார்கள் என்று பெருந்தன்மையுடன் சகித்துக் கொள்வதைப் பார்க்க பெரிய வியப்பாய் இருக்கும். இவர்கள் பொருளாதாரத்தில் மட்டுமில்லை, மனிதாபிமானத்திலும் பின்தங்கிய மற்றும் பல வளர்ந்து வரும் நாடுகளைவிட பல தசாப்தங்கள் முன் நிற்கின்றார்கள். ஆனால் வேகமாக வளர்ந்து வரும் நாடுகள் சில இன்று மனிதாபிமானத்தை மிதித்து அல்லவா தமது பொருளாராத்தை விருத்தி செய்கின்றார்கள்.

இனி என் சொந்தக் கதைக்கு வருவோம்.

எமது ஸ்தாபனத்திலேயே கடுமையான உழைப்பாளி நான் தான் என்பது எனது கணிப்பு. நாளொன்றுக்கு 7 மணித்தியாலம் என்று தான் உழைப்பாளர் தொழிற்சங்கத்துடன் பிரான்சு அரசாங்கம் ஒப்பந்தம் செய்து இருக்கிறது.

ஆனால். . .யாராவது சுகவீனமா? சனி, ஞாயிறு மற்றும் விசேட விடுமுறை தினங்களில் 'டபிள்' செய்ய வேண்டுமா? நான் ரெடி.

5 வார விடுமுறையில் 2 வாரம்தான் விடுமுறையில் செல்வேன் அதுவும் பிள்ளைகளின் ஆக்கினைகளுக்காக. நான் இல்லாத நேரங்களில் மற்றவர்கள் ஓ. ரி. கிங் (ஓவர் ரைம் கிங்) என என்னை அழைப்பதும் எனக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் காதைப் பொத்தும் குரங்குப் பொம்மையாக செய்யும் தொழிலே தெய்வமாக செய்கிற வேலையை சரியாக செய்வதில் எம்மவருக்கு நான் சளைத்தவனும் அல்ல. இதனால் நிர்வாகத்திடம் எம்மவர்க்கு நல்ல பெயர்.

ஆனால் பின் வந்த இளைஞர்களோ கஷ்டப்படாமல் வேலை செய்வது எப்படி?. . . வேலை செய்யாது நிர்வாகத்தை எப்படி ஏமாற்றலாம் என்று அவர்களின் மனிதாபிமானத்தை தப்பாக எடைபோட்டதாலோ என்னவோ வேறு பல நிர்வாகங்களின் வாசற்படிகளில், "இலங்கையருக்கு வேலை இங்கு இல்லை மனம் வருந்துகின்றோம்" எனத் தட்டி வைத்திருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். ஆனால் அது பற்றி நம்ம இளைஞர்கள் நினைப்பதாக இல்லை.

நான் பிரான்சுக்கு வரும் போது எனக்கிருந்த ஒரே ஒரு பிரச்சனை ஒழுங்காக எந்த இடத்திலும் பிடிபடாமல் இங்கு வந்து சேர வேண்டும் என்பது தான். பின்னர் நிரந்தர விசா கிடைக்க வேண்டும் என்று லூட்ஸ் மாதாவிடம் ஒரே வேண்டுதல். பின்னர் வேலைப் பிரச்சனை. பின்பு கல்யாணம் பேசி பொம்பிளையை இங்கு கூப்பிடும் படலம். இதெல்லாம் இனிதே முடிந்து நிம்மதிப் பெருமூச்சு விடும் பொழுது எனக்கு வயது முப்பத்தைந்தை தாண்டியிருந்தது. (இன்னமும் லூட்ஸ் மாதாவிடம் வைத்த நேர்த்திக்கடன் முடிக்கவில்லை என்ற உறுத்தல் எனக்குள் இருந்து கொண்டே இருக்கின்றது)

சரி! இனியாவது நிம்மதியாக வாழலாம் . . பிரச்சனைகள் முடிந்து விட்டது என்று லீவு நாள் ஒன்றில் சோபாவில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டு நினைவில் நிறைந்தவை கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது அருகில் வந்த மனைவி சொன்னாள்,

“உங்கடை பிறன்ட் நவநீதன் வீட்டை டெலிபோன் எடுத்தனானப்பா. அவர் இண்டைக்கும் வேலைக்கும் வேலைக்குப் போயிட்டாராம்”

“அவனுக்கு ஊரிலை ஆயிரம் பிரச்சனை. வேறு வழியில்லை. இரவு பகலாக அடிச்சே தீர வேணும்”

“அதில்லை அப்பா. அவை வீடு வேண்டப் போகினம் போலை”

“அதுக்கென்ன. . . வேண்டட்டுமன்”

“அதென்ன வேண்டட்டுமன் எண்டு சொல்லுறியள். . . நீங்கள் இன்னும் யோசிக்கேல்லையே”

மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கின்றேன். அதில் ஆதங்கம், அதிருப்தி எல்லாம் சேர்ந்து குடிகொண்டு இருந்தது.

“என்னைக் கொஞ்சம் மூச்செடுக்க விடு பிறகு பார்ப்பம்”

“காகம் குருவி கூட தங்களுக்கு என்று சொந்தமாய் கூடு கட்டித்தான் வாழ்க்கை நடத்துதுகள். உங்களுக்கு கஷ்டம் எண்டால் சொல்லுங்கோ நானும் வேலைக்குப் போறன்.”

மனைவி சொன்னதுகளில் நியாயம் இருந்தாலும் அஃறிணைகளுடன் ஒப்பிட்டது என் தன் மானத்தை நன்கு தாக்கியது. வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

“நீயே நவநீதனிடம் அடுத்த முறைக்கும் என்ரை பெயரையும் ஓ. ரி. செய்யுற ஆட்களின்ரை பட்டியலிலை போடச் சொல்லு.”

இப்பிடித் தான் ஓ.ரி. படைக்கூட்டத்துக்குள் நுழைந்து மற்றவனை முந்தியடிச்சு நான் ஒ.ரி. கிங்கான கதை.

காலம் தன் பாட்டில் ஒழுங்காக ஓட இந்த 5 வருடத்திலை நான் ஏழு வருடம் உழைத்திருக்கிறன்.

எனது வருமான பட்டியலைப் பார்த்த வங்கியும் எந்தக் கேள்வியுமின்றி கடன் பத்திரத்தில் கையெழுத்திட வாடகை வீடு சொந்தவீடாகியது.

“சொந்த வீடு வாங்கிப் போட்டம். .. சொந்த வீடு வாங்கிப் போட்டம் “ என்று மனைவியின் ஆனந்த தொலைபேசி அழைப்புகள் அடுத்த ஆறு மாதமாக தொடர்ந்தது. பக்கத்து ஊரில் டெலிபோன் காட் விற்கும் சிவமணி அக்காக்கும் எனது மனைவியினால் நல்ல வருமானம்.

பின்பு ஒருநாள் கல்யாண வீடு ஒன்றிற்குப் போய் விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். மனைவியிடத்து ஒரு அசாதாரண மௌனம். எனக்குத் தெரியும் இது புயலுக்கு முந்திய அமைதி எண்டு.

காரினுள் பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ், சித்ரா, பறவை முனியம்மா எனப் பலர் இருந்தாலும் மோட்டார் விரைவு பாதையில் அந்த மௌனத்தை கலைக்க வேண்டும் என்பதற்காகவே, “என்னப்பா கடுமையாய் யோசிச்சுக் கொண்டு வாறீர்” என்று சிறிய பயத்துடன் காரின் வேகத்தைக் கொஞ்சம் குறைத்து ஓட்டத் தொடங்கினேன்.

“சுரேஷ் ஆக்கள் இரண்டாவது வீடும் வேண்டி வாடகைக்கு குடுத்திருக்கினமாம். இவ்வளவுக்கும் உங்களை விட சம்பளம் குறைவு”

“அப்ப என்னையும் வட்டிக்கு குடுக்கச் சொல்லுறீரோ”

“குடுத்தால் என்ன?”

“அவசரத்துக்கு எண்டு வந்து கேட்டால் குடுத்து உதவுறது மாதிரித் தான் இதுகும். செய்யுற உதவிக்கு வட்டி வேண்டுவம்”

“உதவிக்கு வட்டியா?”

காரில் ஒட்டியிருந்த திருவள்ளுவரின் படத்தைப் பார்க்கின்றேன்.

சிக்கலான சமயங்களில் எல்லாம் இந்தப் படத்தைப் பார்த்து என்ன செய்யலாம் என்று கேட்பன்.

எல்லாக் கேள்விகளுக்கும் அந்த மனுசன் 2 வரிகளில் பதில் சொல்லுவார்.

கடுமையாக யோசித்து மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

இன்றும் அந்த மனிதரிடம் இருந்து ஒரு சுலபமான ஆனால் ஆழமான பதில.

“நன்றி ஒருவர்க்கு செய்தற்கால். . .அந் நன்றி என்று...”

முடிவெடுத்து விட்டேன் வீட்டை போனவுடன் இவர் படத்தைக் கழட்டுவது என்று.

அவர் என்னுடன் பயணம் செய்யும் வரை என்னை உறுத்திக் கொண்டே இருப்பார்.

வட்டி வேண்டாத வரை இரண்டாவது வீடு வாங்குவது எனக்கு இயலாத காரியம். இரண்டாவது வீடு வாங்காத வரை வீட்டில் நிம்மதியாக நித்திரை கொள்வது இயலாத காரியம்.

வீடு வந்தவுடன் திருவள்ளுவரின் படத்தைக் கழற்ற ஆரம்பித்தேன்.

“வழிகாட்டி எண்டியள். . .ஏன் படத்தைக் கழட்டுறியள். . .நல்லாத்தானே இருக்குது படம்”

“இப்ப வழி காட்ட GPS வந்திட்டுது. உனக்கு இரண்டாவது வீடு வேணுமோ. வள்ளுவர் படம் வேணுமோ?”

அடுத்த நொடி ஆளைக் காணவில்லை.

*

ஓ.ரி.யுடன் வட்டியும் சேர்ந்து கொள்ள இரண்டாவது வீட்டுக் கனவு சுலபமாகவே நிறைவேறி அடுத்த வருடமே இன்னெரு வீடும் எங்கள் இருவரின் பெயரிலும் பதியப்பட்டு விட்டது.

மீண்டும் மகிழ்ச்சியின் வரைபில் முன்னேற்றும் ... தொலைபேசி அழைப்புகள் . . .

சிவமணி அக்காக்கு டெலிபோன் காட் வியாபாரங்கள் என அந்த ஆடி விடு முறை மிக மகிழ்ச்சியாக கழிந்தது.

மனைவியின் முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி. இதற்கு திருவள்ளுவர் என்ன சொல்லியிருப்பார்?

வேண்டாம் பிரச்சனை! கேட்கப்போனால் அந்த ஆள் இன்னமும் குளப்பிவிடும்.

அவர் கார் கராஜ்சினுள்ளேயே வாசம் செய்யட்டும்.

இதெல்லாம் அந்த சம்மர் விடுமுறை முடிந்து பாடசாலைகளும் ஆரம்பித்து இரு வாரங்களுக்குத் தான்.

ஒரு நாள் வேலை செய்யும் பொழுது தலை சுற்றின மாதிரி இருந்தது.

சலரோகமாக இருக்குமோ பிரசறாக இருக்குமோ என டாக்டரிடம் போனேன்.

ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்பது போல என் சலரோகத்துடன் சேர்ந்து கிட்னியும் கொஞ்சம் பாதித்திருந்தது.

இனிக் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும் என்ற நினைப்புடன் வீட்டுக்கு வந்தேன்.

வீட்டை வர மீண்டும் ஒரு வித்தியாசமான அமைதி.

"மகள் லைசென்ஸ் எடுத்து ஒரு வருஷமாகுதாம். புதுக்கார் வேண்டித் தரட்டாம்"

இது மகள் கேட்கவில்லை என்பது எனக்கு நூறு வீத உறுதி.

சுரேசின் மகள் கார் வேண்டியதின் எதிரொலி.

மீண்டும் வேதாளம் முருங்கை மரமேறுகிறது என்பது தெரிந்தும் மனம் தளராத விக்கிரமாதித்தானாக நானும்!

ஒரு மாதத்தில் புதுக்காரும் வருகிறது.

புதுக்காரை நான் வேலைசெய்யுமிடத்தில் காட்டி பீற்றிக் கொள்வதற்காக புதுக் காரில் போகும் போதெல்லாம் வாசலுக்கு நேரே இடம் தேடி தேடி 'பார்க்' பண்ணுவேன்.

நவநீதன் மட்டும் "ஏன் இரண்டு வீடு இருக்கு, புதுக்கார் இருக்கு என காட்டிக் கொண்டு திரியுறாய்" எனக் கேட்டான். அவன் கேட்டது எச்சரித்தது போல இருந்தது.

"ஏன் மச்சான் என்ன நான் களவெடுத்தோ எல்லாம் வேண்டுறன். . என்ரை வியர்வையடா"

"இல்லை மச்சான் அது தான் கண்பட்டு விடக்கூடாது எண்டுதான்" சொன்னனான்.

*

நவநீதனும் நானும் கதைத்து ஒரு வாரம் ஆகவில்லை.

வேலைக்குப் போய் இறங்கும் பொழுது அங்கு பெரிய அல்லோல கல்லோலமாய் இருந்தது.

18 பேரை வேலை நீக்கி விட்டார்களாம் என்று சொன்னார்கள்.

எதிர்பார்த்ததுதான்!

அமெரிக்காவில் தொடங்கிய பொருளாதார நெருக்கடி அனைத்து உலகத்தையும் புற்று நோய் போல தாக்கத் தொடங்கியிருந்ததும் பல இடங்களில் ஆட்குறைப்புச் செய்ததும் நான் அறியாதது இல்லை.

எனது மனம் நவநீதனை நினைத்து பயப்பிட்டது. அதிகமான சுகவீன லீவுகள்.

வேலையில் கொஞ்சம் சோம்பேறித்தனம் எல்லாம் சேர்ந்து அவனது வேலைக்கு உலை வைத்து விடுமோ என மனம் கவலைப்பட்டது.

நவநீதனை எங்கும் காணவில்லை.

என் கால்கள் நோட்டீஸ் போட்டை நோக்கிப் போனன.

கண்கள் பெயர்களின் அகரவரிசைப்படி கீழிறங்கிச் சென்றன.

நல்ல காலம் நவநீதனின் பெயருக்கு நேரே சிவப்புக் கோடு விழுந்திருக்கவில்லை.

ஏனோ என் கண்கள் தொடர்ந்தும் கீழே இறங்கின.

எனக்கு சிவப்பு கோடு போடப்பட்டிருந்தது.

என்ன ஏது என்று யோசிக்கவில்லை. நேரே மனேஜிங் டிரக்டரின் அறைக்குப் போனேன்.

அவர் மற்றவர்களுக்கு நிலைமையை விபரித்துக் கொண்டு இருந்தார்.

நான் பொறுமையின்றிக் குறுக்கிட்டு, " நான் பழைய ஆள். ஒரு நாளும் எந்தப் பிழையும் விட்டதில்லை. . .ஏன் என்னை நிற்பாட்டுறியள்."

நிர்வாகி மௌனமாக என்னைப் பார்க்கின்றார்.

அவரின் மௌனம் என்னை மேலும் சூடாக்கிறது.

"என்ரை வசதியைப் பார்த்து உங்களுக்கெல்லாம் புகைச்சல். சந்தர்ப்பம் பார்த்து அனுப்ப பாக்கிறியள்"

என்னை மேலும் பேசவிட்டால் விபரீதம் என உணர்ந்த நிர்வாகி, "கோபப்படாதே. உன் கோபம் தேவையில்லாத பலவற்றை கதைக்க வைக்கிறது.. .

நான் இந்த 30 வருடத்திலை எடுத்த மனவருந்தத்தக்க முடிவு இந்த ஆள் குறைப்புத் தான்''

''அது இருக்கட்டும் என்னை ஏன் நிற்பாட்டினனீங்கள்''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னமே நீ சொன்ன அந்த உன்ரை வசதி. . .இங்கு அதிகம் பேர் மாதக்கடைசியிலை படுகிற கஷ்டம் எனக்குத் தெரியும். .. நேற்றுத்தான் கேள்விப்பட்டனான் உன்ரை இரண்டு வீட்டுலை ஒன்றை வாடைக்கு குடுத்திடுருக்கிறாய் என்று எனது ஆட்கள் மூலமாய் கேள்விப்பட்டனான்.. .உன்ரை பிறண்ட் தன்ரை காரை பின்னேரத்திலை ஸ்டாட் படுகிறதுக்கே படுகிற கஷ்டத்தை நீ பார்த்திருப்பாய். . .உனக்கு அப்பிடி வாழ்க்கை இல்லையே. . .இவ்வளவு வசதியோடை இருக்கிற நீ அடுத்த வேலை கிடைக்கும் வரை கட்டாயம் சமாளிப்பாய். . .''

என்னால் எதுவும் பேச முடியவில்லை. சமயம் பார்த்து எங்கள் ஆட்களில் யாரோ ஒருவன் போட்டுக் குடுத்திருக்கிறான்கள்.

எதிர்காலம் இருட்டாய் தெரிகிறது. வேலையை தக்க வைத்தவர்கள் வந்து ஆறுதல் சொல்லுகின்றார்கள்.

நம்மவர் சிலரின் ஆறுதலில் உண்மையில்லை. புரிந்து கொள்கின்றேன் யாரென்று.

காரினுள் வந்து ஏறினேன்.

கார் எங்கள் ஸ்தாபனத்தை விட்டு வெளி வீதிக்கு இறங்குகின்றது.

நவநீதன் இன்றும் லேற்றாய் வேலைக்கு உள்ளே போய்க் கொண்டு இருக்கிறான்.

றோட்டு வெறிச்சோடியமாதிரி இருந்தது. ஒன்றுமே கண்ணில் தட்டுப்படவில்லை.

வீடு வந்து சேர்ந்ததுதான் தெரியும்.

*

தோல்வியின் வலிகளை என் மனம் ஏற்கத் தயங்கி இருக்க வேண்டும். சாடையாக நெஞ்சுக்கு நோகுது என டாக்டரிம் போக அவர் இங்கு என்னை அனுப்பி விட்டார்.

டயபிற்றீஸ. . பிரசர். . . கொலஸ்ரோல்! மூன்றும் வந்திருக்கிறது.

பிரான்சில் முக்கால்வாசித் தமிழருக்கும் இதே கதிதான். இலங்கைத் தமிழரின் தலைவிதியில் இதுவுமொரு கட்டமோ. . .என்னவோ!

ஆனால் இந்த மூன்று நாள் கட்டில் வாசம் என்னை கணக்க யோசிக்க வைச்சிருக்குது எண்டது தான் உண்மை.

இனிமேலாவது வாழ வேண்டும். எனக்குப் பிடிச்ச மாதிரி வாழ வேண்டும். பிள்ளையளின்ரை எல்லாச் சந்தோஷங்களிலும் பங்கெடுக்க வேண்டும். பள்ளிக்கூட நாடகங்கள், போட்டிகள் எல்லாத்துக்கும் ஒழுங்காய் போய் பார்க்க வேணும்.

சொந்த பந்தங்களின் நல்லது கெட்டதுகளில் தலையைக் காட்ட மட்டும் போய்வராமல் உண்மையான பங்கு கொள்ள வேண்டும்.

என்னிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை என் மனைவி கவனித்திருக்க வேண்டும். அல்லது அவளுக்கு கவலையை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

"என்னப்பா. . உங்கட்டை பழைய வேகத்தைக் காணேல்லை . .நெடுக வீட்டிலை நிக்கிறியள். . .மகளுக்கு கலியாணத்துக்கு நாலு காசு கீசு. . நகை நட்டுச் சேர்க்க வேண்டாமோ. . ."

எந்த நேரத்திலை எப்படி 'போல்' போட்டால் எப்பிடி அவுட்டாக்கலாம் என்பதில் என் மனைவி கில்லாடி.

" நகையைச் சேர்த்து களவு குடுக்கவோ? இருக்கிறது எல்லாம் போதும். இங்கை பிள்ளையளுக்கு நல்ல படிப்பும் நல்ல பழக்க வழக்கமும் கொடுத்தாலே அது பெரிய சீதனம் தான். . . மிஞ்சம் இருக்கிற நாட்களையாவது சந்தோசமாய் வாழவிடு"

மனைவிக்கு கோபம் தலைக்கேறுகிறது.

“இப்ப என்ன சொல்லுறியள். . நீங்கள் என்னோடை சந்தோசமாய் வாழேல்லையோ?”

“உன்ரை நச்சரிப்பாலை தான் காலம் போனதை நான் கவனிக்கேல்லை”

“என்ன விசர்கதை கதைக்கிறியள்!”

ஒரு நாளும் இல்லாதவாறு மரியாதை கொஞ்சம் இறங்கிறது.

‘கொண்டு வந்தால் தான் சகோதரன் எண்ட மாதிரி இப்ப கொண்டு வந்தால் தான் புருஷன்’ எண்டதாகி விட்டது.

“வரவர நீங்கள் ஞானி மாதிரி பேசுறியள்”

வழக்கமாக பொத்துக் கொண்டு வரும் கோபம் இப்பொழுது வரவில்லை. . . அல்லது அவள் சொல்லுறமாதிரி உண்மையில் ஞானி ஆகி விட்டேனோ? இல்லை. .. வாழ்வின் சில அர்த்தங்களைப் புரிந்து விட்டேனோ. . .

அவளைப் பொறுத்தவரை வாழ்க்கை ஒரு ஓட்டப் பந்தயம். சொந்தம் பந்தம் அவை இவை போதாதற்கு கனடாவில் இருக்கும் தகப்பன் வழி ஆட்கள் லண்டனில் இருக்கும் தாய் வழி ஆட்கள் அனைவரையும் முந்தி ஓட வேண்டும்.

சிலவேளை அவளைப் பார்க்க பாவமாக இருக்கும். பக்குவம் போதாது. .. எஞ்சியிருக்கும் இந்த வாழ்க்கைக் காலத்தில் அது அவளுக்கு அது பிறக்குமோ தெரியாது. அப்பிடித் பிறந்தால் தான் என் வாழ்க்கையும் முழுமையடையும்.

காலம் கடந்தாலும் கொஞ்ச நாளாவது வாழ்க்கையை எந்த ரென்ஷனும் இல்லாமல் நாலு பேருக்கு உண்மையாய் உதவி செய்து வாழ்வோம் வா என மனதில் எழுந்தவை வார்த்தையாய் வெளியே வந்து விழுகின்றன.

அவள் விநோதமாக என்னைப் பார்த்த விதம் இந்த மனுசன் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதோ என்று பார்ப்பது போல இருந்தது.

இனி இந்த இடத்தில் இருந்தால் கட்டாயம் ஒரு உள்நாட்டு யுத்தம் பிறக்கும்.

திருவள்ளுவர் படத்தை தேடவேணும்.

நைசாக இடத்தைக் காலி செய்கின்றேன்.

(ganesh859@hotmail.com)



# திருஞானம்

மட்டுவில்
ஞானகுமாரன்
கனடா

தற்கொலை செய்யும் எண்ணத்தை திருஞானம் இன்னும் விட்டுவிடவில்லை. இப்போதைக்கு அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது அவ்வளவும் தான்.

வெள்ளிக்காசாக அனைவரின் கைகளிலும் மின்னியவன் இன்று செல்லாக்காசாக போனதற்கான காரணம் கூட திருஞானத்தின் தவறினாலேயே ஏற்பட்டது.

ஒரு ஈ எறும்பு கூட அவனை இப்போது மதிப்பதில்லை. திருஞானம் என்ற அவனது பெயரிலே இருக்கின்ற திருவுக்குக் கொடுக்கப்படும் மரியாதையைக் கூட அவனுக்கு யாருமே கொடுக்கத் தயாராக இல்லை. நினைவு தெரிந்த நாளில் இருந்து தனது பெற்றோருக்கும் சகோதரங்களுக்காகவுமே அவன் தனது வாழ்கையின் ஒவ்வொரு துளிகளையும் கரைத்தவன்.

பிழைப்புத்தேடி ஐரோப்பா போன போதிலும் அவனது வயதுப்பெடியனுகள் எல்லாம் டிஸ்கோ கிளப்பென்று திரிந்த பொழுதுகளிலே அவன் மட்டும் தனது குடும்ப சூழலை எண்ணிக்கொண்டு அவற்றை எல்லாம் சலரோகக்காரனுக்கு தவிர்கப்படும் நெல்லுச் சோறுபோலவே தவிர்த்தே வந்திருக்கிறான். அங்கு விரயமாக்கப்படும் ஒவ்வொரு மார்க்குமே ஊரிலிருக்கும் தனது தம்பி தங்கைகளின் வாழ்கையை வளப்படுத்த உதவும் என்பதனால் அவ்வாறான வீண் செலவுகளிலிந்து அவன் ஒதுங்கியே இருந்தான்.

அவன்பட்ட பாடெல்லாம் வீணென்று இப்பொழுது தான் அவனுக்கு விளங்கியது. ஆனால் அவற்றை விளங்கியபோது அது தாமதமாகிப்போயிருந்தது. இல்லானை இல்லாளும் வேண்டாம் என்பதும் பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகம் இல்லை என்ற பாடமும் கூட இப்பொழுது தான் அவனுக்கு புரிந்தது. உண்மையைச் சொல்லப்போனால் உலகம் தெரிந்தளவிற்கு அவனுக்கு உலகியலின் நுட்பம் தெரிந்திருக்கவில்லை. பொருளியல் தெரிந்த அளவிற்கு பொருளைப்பற்றிய அறிவு போதாமல் போயிற்று. அவனது கையிலிருந்த காசெல்லாவற்றையும் ஆளாளுக்கு வந்து பங்குபோட்டு கொண்டதனால் உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதரைப் பார்க்கும் போதும் கூட அவன் சந்தேகப்படவே செய்தான்.அவர்களின் முகங்களை மூடியிருக்கும் முகமூடியை அறிந்து கொள்ளவே அவன் ஆசைப்பட்டான்.

துளித்துளியாகச் சேர்த்த பணமெல்லாம் விரயமாகிப் போனதை எண்ணுகையிலே திருஞானத்துக்குக் கவலையே வந்தது. ஒவ்வொரு மார்க்கையும் கைப்பற்ற அவன்பட்ட பாடிருக்கே அவைகளை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. பிழைப்புத்தேடிப்போன அவனது யேர்மன் பயணம் என்பது தீயின் நாக்குகளுக்கு மேலே நிற்பதைப் போலவே இருந்தது. உக்ரைன் லித்துவேனியா போலந்து போன்ற நாடுகளின் எல்லைகளை கடக்க முயன்றபோது அவனது உயிர்கூடு எத்தனை தடவைகள் மூச்சையற்று விழுந்தது என்பதை அவனுக்கும் அவனோடு பயணித்து இடைநடுவிலே செத்துப் போன கோமளாவிற்கும் வாமனுக்கும் மட்டுமே தெரிந்த கதை. கோமளா கைதடியை சேர்ந்த ஆசிரியர். டென்மார்கிலே இருக்கின்ற தனது கணவனிடம் போவதற்காக வந்த வழியிலேயே இந்த அகால மரணம் அவளுக்கு ஏற்பட்டது.

யேர்மனை நோக்கி அவன் விமானத்திலே பறந்த தூரத்தைவிட நடந்து கடந்த தூரமே அதிகமாக இருந்தது. உடலைப் பிழிந்து வாழ்க்கையை வறுத்தெடுத்து அவன் செய்த தவம் இப்போது கலைந்து போனதால் வாழ்க்கையே கரைந்து போனது போன்ற உணர்வு அவனுக்கு உண்டாயிற்று.

*

**சு**மார் இருபது வருடங்களுக்குப் பிறகான அவனது வவுனியா நோக்கிய பயணம் என்பது புதிய அனுபவத்தையே கொடுத்தது. அவ்வாறு யாழ்தேவி ரயிலிலே அவன் பயணம் செய்த போது அவனது பழைய நினைவுகள் அவனோடு வந்து அமர்ந்து பந்தி பரிமாற உட்கார்ந்து கொண்டது. யேர்மனியில் இருந்து கொழும்புக்கு வந்த இந்த 6 வருடங்களும் கட்டடக் காட்டுக்குள்ளே திணிக்கப்பட்ட கோழிக்கூட்டு வாழ்க்கையையினையே அவன் அனுபவித்திருந்தான்.

முட்டை ஓடுகளை மோதி உடைத்துவிட்டு வெளியேறும் குஞ்சு போலவே கிராமத்தை நேக்கி அவன் போய்கொண்டிருந்தான். பச்சை நிற வெல்வேட்டை பெட்டி பெட்டியாக வெட்டி நடவுசெய்யப்பட்டிருந்த மேடைகள் போன்ற வயல்வெளிகள். நீலச்சேலை அணிந்த பூரிப்பிலே சிலிர்த்திருக்கும் வெள்ளாறு. தூர நின்று பார்கும் போது ஒன்று போல தெரிந்தாலும் தமது தனித்துவங்களை இழக்காமல் வாழும் சகோதர இனங்களை போல அருகருகே நிற்கும் தென்னையும் கமுகும் கூட ஒற்றுமையில் வேறுபாட்டையே காட்டிக்கொண்டன.

அவனுக்கிருக்கும் கடைசி தெரிவாகவும் நம்பிக்கையாகவும் இருப்பது சேகர்தான். யேர்மனியில் அவன் இருக்கும் போது பழக்கமானவன் தான் சேகர். தற்போது லண்டனிலே வசிக்கிறான். மிகுந்த பிரயாசைக்காரன் கண்டி தலவாக்கலைதான் அவனது பூர்வீகம்.யேர்மனியிலே இருக்கும் போதே வவுனியவில் கடைவாங்க விரும்பிய சேகருக்கு திருஞானம் தான் அதற்கான உதவிகளையும் ஏற்பாடுகளையும் செய்திருந்தான். தற்போது சேகரின் கடைய அவனது அண்ணன் கணேசன் தான் நடாத்தி வருகிறான். அவனிடமே திருஞானம் வேலைகேட்டு வவுனியா போகிறான்

இடையிடையிடையே தென்பட்ட மலைகள் போலந்து மலைகளை நினைவுபடுத்தியது.

லித்துவேனியாவுக்கும் போலந்துக்கும் இடையே இருந்த அந்த பனி மலையிலேதான் அவனது வாழ்கையினேப் புரட்டிப்போட்ட அந்த விபத்து நடந்தது. அங்கிருந்த புகைவண்டிப்பாதையின் மேலே போலந்தின் தலைநகர் வாற்சாவுக்கான நடை பயணத்தை அவர்கள் மேற்கொண்டபோது தான் அந்தப் பயங்கரம் நடந்தது. அவனது இப்போதைய தற்கொலை முயற்சிக்கும் இந்த விபத்துக்கும் கூட ஒரு வகையில் தொடர்பு இருக்கின்றது. அது ஒரு பனிக்காலம் என்பதனால் எதிரிலே வந்த புகையிரதத்தினை இவனோ அல்லது அவனுடன் கூட வந்த மற்றவரோ கவனிக்கவில்லை கவனித்தபோது திருவுக்கு காலில்லை மற்றவர்களுக்கோ உயிரேயில்லை. கால் இழந்த காரணம்தான் அவனுக்குள் இருந்த தன்னம்பிக்கை இழப்பிற்கும் தற்கொலை முயற்சிக்கும் காரணமாயிற்று.

*

வெள்ளை வெளேர் சட்டையிலே இருந்த கணேசன் திருஞானத்திடம் அவன் செய்யவேண்டிய வேலைகளைச் சொல்லிக் கெண்டிருந்தான்.

"உங்களைப்பத்தி சேகர் நேத்திக்குத்தான் என்கிட்ட சொன்னவன். நீங்கள் விரும்பினால் கடையிலேயே தங்கிக்கலாம். மத்தபடி வேறை ஏதாவது எண்டா என்கிட்ட கேளுங்கோ" வெத்திலையை சப்பியபடி திருஞானத்தைப் பார்த்து பேசினான்.

"நன்றி அண்ணை இதுவே பெரிய உதவி......! வேறை ஒண்டும் வேண்டாம். ஆனா மாசத்திலை ஒரு இரண்டு மூண்டு நாள் லீவு மட்டும் தந்திங்களெண்டால் மகனைப் பாத்திட்டு வந்திடுவன். " தயங்கியபடியே தனது கோரிக்கையை முன்வைத்தான் திருஞானம்.

"ஓம் .......உங்கடை பிரச்சனையைப் பத்தி எங்கிட்ட போன்லை சேகர் சொன்னவன் ..... வாழ்க்கை எண்டா இப்பிடித்தான் மேடுபள்ளம் வரத்தான் செய்யும். சமாளிக்கத் தெரியோணும் தம்பி. " கதிரையை விட்டு எழுந்து கொண்டான் கணேஸ்.

"சரி அண்ணை " பெருமூச்சொன்றை எறிந்தபடி களஞ்சிய சாலையை நோக்கிப்போனான் திருஞானம்.

வேலைக்கு சேர்ந்த சில நாட்களிலேயே அங்குள்ள மற்றைய ஊழியர்களிடம் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொண்டான் திருஞானம். அங்கு வேலை செய்யும் ஏனைய ஊழியர்களிடம் கணேசனைப்பற்றிய நல்ல அபிப்பிராயம் இல்லை என்பதை அவர்களிடம் பேசும் போது தெரிந்து கொண்டான். செய்யிற வேலைக்குரிய சம்பளத்தை ஒழுங்காக கொடுக்கமாட்டானாம் என்பதுடன் வேலையாட்களை இயந்திரத்துள்ளே அகப்பட்ட கரும்பைப்போலவே சக்கை இருக்க சாறாக்கிவிடுவானாம் என்றும் பேசிக் கொண்டார்கள்.ஆரம்பத்திலே திருவிடம் அன்பாக இருந்த கணேசன் தற்போது அவனிடமும் கடுமையாகவே நடந்து கொண்டான். களஞ்சியசாலையிலே சாமான் அடுக்குவதிலிருந்து லொறியிலே சாமான் ஏற்றுவதுவரை எல்லாவற்றையும் பொய்க்காலோடு இருக்கும் அவனையே செய்யச் சொல்லியிருக்கிறான்.

*

விடுமுறைவிட்டு பாடசாலையின் இரண்டாம் தவணை இன்று தான் ஆரம்பமாகியதால் மாணவர்களும் ஆசிரியர்களும் கடையிலே வந்து தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.இப்போது அவனுக்குள் அவனது மனைவியின் நினைவு வந்து புகுந்து கொண்டது. அவனது மூன்றாவது காலாகவும் ஊன்று கோலாகவும் கிடைத்தவள் தான் அவனது மனைவி அகல்யா.

அகல்யாவுக்கு உண்மையிலே பெரிய மனசுதான் இல்லாவிட்டால் அழகான பட்டதாரி ஆசிரியை ஒருத்தி காலிழந்தவனை கலியாணம் செய்ய சம்மதித்திருப்பாளா...? ஆனால் திருஞானத்தை கல்யாணம் செய்ய அவள் சம்மதித்தாள். அவர்களின் அன்புக்கு சாட்சியாகப்பிறந்த மாதவன் கூட அகல்யா போலவே அழகானவன். எப்படி இருந்து என்ன பயன் மாதவனும் அகல்யாவும் இப்போது அவனோடு இல்லையே. இவ்வளவுக்கும் காரணம் அவனது அம்மாதான் என்றால் நம்புவீர்களா..?

*

யேர்மனியிலிருந்து அவன் திருப்பி அனுப்பப்பட்ட போது அவனிடம் ஓரளவு பணம் இருந்தது. அதன் காரணத்தினால் அவனுக்குரிய மதிப்பும் மரியாதையும் முதல் வகுப்பிலேயே அவனோடு கூடப் பயணம் செய்தது.

பனிக்கட்டி தேசத்திலே உயிர் உருக சேர்த்த பணம் தண்ணீராக கரைந்த பின்னாலேதான் அவனது வாழ்கையிலே எல்லாம் தலைகீழாகியது.

இலங்கைக்கு வந்தபின்னர் அவனுக்கு நடந்த அவசரக்கல்யாணம் அதன்பிறகு மாதவன் பிறந்தது என எல்லாமே ஒரு இனிமையான கனவைப் போலவே அவனுள்ளே வந்து தனது ஞாபகக்குடைகளை விரித்துக்கொண்டது.

எவ்வளவு கஸ்டங்களை தாங்கியபோதிலும் கூட தங்களது மகனை சிறப்பாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதிலேயே அவர்கள் இருவரும் குறியாக இருந்தனர். உண்மையில் அகல்யாவினதும் திருஞானத்தினதும் சம்பளப்பணம் என்னவோ கொழும்பிலே எடுத்த வாடகை வீட்டுக்குக் கொடுக்கக் கூட போதுமானதாக இருக்கவில்லை. அவற்றை எல்லாம் ஈடுகட்டுவதற்காகவே அவன் பகலில் கடைச் சிப்பந்தியாகவும் இரவில் தனியார் நிறுவனம் ஒன்றிலே பாதுகாப்பு ஊழியனாகவும் வேலை செய்தான். தனது கனவு நாயகனான மாதவனை கல்லிலே சிலை வடிக்கும் ஒரு சிற்பக்காரனைப் போல அவனது ஆசைப்படியே வளர்த்துக் கொண்டிருந்தான்.

மாதவனும் வகுப்பிலே பயங்கரக் கெட்டிக்காரன். கிரிக்கெட் என்றாலே அவனுக்கு உயிர். திருவின் இந்த ஆசைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டுமெனில் கொழும்பிலே இருக்கின்ற அந்த பிரபலமான பாடசாலை தான் பொருத்தமானது என்பதை அவன் தீர்மானித்துக் கொண்டான். அதற்கு பல இலட்சங்களாவது தேவைப்படும் என்றபோது மிகவும் கவலைப்பட்டான். ஆனல் அதைவிடப் பெரியது அவனது இலட்சிம். அது நிறைவேற வேண்டும் என்பதற்காக எதையும் செய்திடத் தயாராகவே இருந்தான். தனது பெயரிலே செய்து வைத்திருந்த ஆயுள்காப்புறுதியை இடையிலேயே முடித்துக் கொள்ள முடிவெடுத்தான். ஆனாலும் அதன் மூலம் கிடைத்த பணம் அந்தப் பள்ளிக் கூடத்துக்கான டொனேசனுக்கே போதாமல் இருந்தது. மிகுதிப்பணத்தை அவனது முதலாளியிடம் கடனாகத்தான் பெற்றான். மாதாந்தம் தனது சம்பளத்திலிருந்து பகுதி பகுதியாக அதை திருப்பிக் கொடுக்கலாமென்பது அவனது நினைப்பு.

இப்படியே வாழ்கைப்புத்தகத்திலே தாளும் எழுத்தும் போல இரண்டறடிக் கலந்துவிட்ட திருஞானமும் இப்போது இரவும் பகலுமாகிப் பிரிந்து போயினர்.

இதற்கு பலவாறான காரணங்கள் இருப்பினும் கூட முன்னிலையில் நிற்பதென்னவோ திருஞானத்தின் அம்மா தான். சீதனம் கேட்டு அவள் கொடுத்த தொல்லைதான் திருவுக்கும் அகல்யாவுக்கும் இடையே இந்திய சீன எல்லைக்கோடாக எழுந்து நிற்கிறது. பாவம் அவன் என்ன செய்வான் யாரோ எய்யும் அம்புகளால் சிதைந்து போனது திருஞானத்தின் குடும்பம் எனும் பறவைக் கூடல்லவா ...? மூங்கில்களுக்கு என்ன அவைகள் மோதி விளையாடுகின்றன ஆனால் தீப்பட்டுச் சாவது குயில்கள் அல்லவா. அவர்களுக்குள் பிரிவை ஏற்படுத்தினால்தான் தனது கைகளுக்குள் திருவினை வைத்திந்து தங்களது வாழ்கையை வசதியாக ஓட்டலாம் என்பதே அவனது தாயின் கணிப்பு. அதற்காக இரையாகிப்போனவன் தான் திருஞானம்.

தனது மனைவி மகனின் பிரிவை தாங்கமுடியாமாலேயே வவுனியாவுக்கு வேலை தேடிவந்தான். ஆனால் இங்கும் கூட அவனுக்கு நிம்மதி இல்லாமலேயே பொழுதுகள் கரைந்தன.

எல்லோருக்காகவும் தனது வாழ்க்கையினை விரயம் செய்தவன் இப்போது யாருமேயின்று காற்றுப் போன பலூனாக கசங்கிப் போயிருக்கிறான். என்னவோ தெரியவில்லை இப்போதெல்லாம் தனது மகனை பார்க்க வேணுமென்று நினைப்பே இப்பொழுது அவனின் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

*

கொழும்புக்கான புகையிரதத்தை பிடிப்பதற்காக அதிகாலையே எழுந்து கொண்டவன் அங்கிருந்து கொழும்பு வரும்வரை யாருக்குமே தகவல் சொல்லவில்லை. நேராக மாதவன் கல்விகற்ற றோயல் கல்லூரிக்கு போனவன் காவலாளியிடம் கதைத்து உள்ளே செல்வதற்கான விண்ணப்பித்தை நிரப்பி அனுமதியை எடுத்துக்கொண்டான். நேராக மாதவனது வகுப்பாசிரியரிடம் போனான்.

"மன்னிக்கோணும் ஐயா.... மாதவனோடை ஒருக்கா கதைக்கலாமா ...? " அவரோடை பேசிக்கொண்டே திருஞானம் கண்களால் வகுப்பறையை துளாவினான்.

ஆனால் அவனால் அங்கே மாதவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. "உங்களுக்குத் தெரியாதா திருஞானம் ...? மாதவன் ஒரு மாதத்துக்கு முன்னமே பள்ளிக்கூடத்தை விட்டுப் போயிட்டார் என்று. " ஆசிரியரின் பதில் அதிர்சியாகவே அவனுக்கு இருந்தது.

"எங்கை போனவேலெண்டு தெரியுமோ ...? " கண்கள் வெடித்து உதிர்த்துக் கொண்ட நீரை கையாலே துடைத்துக் கொண்டான்.

"கனடாவுக்கு போறமெண்டு தான் சொன்னவை....! " ஆசிரியர் சொல்லும் போதே அவனது தலைக்கு மேலே உலகம் சுழல்வது போலவும் பிரளயம் ஒன்று நிகழ்வதைப்போலவும் ஒரு உணர்வு தோன்றியது. மேலதிகமாக அவன் எதுவும் பேசவில்லை. ஆசிரி யரிடம் இருந்து விடைபெற்றான்.

இந்தப் பள்ளிக்கூடத்திலை ஒரு இடம் எடுக்க அவன் பட்டபாட்டை மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டான். இனி என்ன வாழ்கை என நினைத்தவன் பஸ்சை மறித்து பிற்றகொட்டுவவில் இறங்கி எப்படித் தற்கொலை செய்யலாமென யோசித்துக் கொண்டிருந்தவேளையில் யாரோ ஒருவன் அவனை இடித்துக் கொண்டு போனான். உள்ள ஆத்திரத்தை எல்லாம் இடித்தவன் மீது காட்ட நினைத்தவன் அவனை திட்டித் தீர்ப்பதற்காக அவனை நோக்கித் திரும்பினான். ஆனால் தன்னை இடித்துவிட்டுப் போனவன் கண்பார்வை இழந்தவன் என்பதை அவனது கையிலிருந்த வெள்ளைத் தடி சுட்டிக் காட்டியது. ஏறிய கோபமெல்லாம் ஒரு நொடியிலே இறங்கிக் கொள்ள புகையிரத நிலையத்திலிருந்த இருக்கையிலே இருந்து கொண்டவன் பார்வைப் புலனைத் தொலைத் அந்த சகோதரனை நினைத்தபோது தான் அந்த உண்மையை விளங்கிக் கொள்ள கூடியதாக இருந்தது. ஒரு வெள்ளைத்தடி மூலமாக உலகத்தையே வெல்லலாம் எண்டு அவன் நினைக்கிற போது ஏன் தானும் முயன்று பாக்கலாமே எனும் நினைப்பு வந்துவிட இருக்கையைவிட்டு எழுந்து கொண்டான் இடித்து விட்டுப்போன அந்த சகோதரனுக்கு நன்றி கூறியபடி.

(tamil_araichchi@yahoogroups.com)

# முகவரி தொலைத்த முகம்

இணுவை சக்திதாசன்– டென்மார்க்





தூக்கத்திலிருந்து விழித்த மீனா அதிர்ந்துபோனாள்!

கலைந்து போய்கிடந்த அவளது சேலைத்தலைப்பினூடாக தன் மார்பகங்களை ரசித்தபடி மேயும். கண்களை கண்டவுடனேயே அவளது நித்திரை பாதியிலேயே பறந்து போனது.

அனைவரும் அகதிகள் தான். அனைத்தையும் இழந்தாலும் வக்கிர எண்ணங்களை தொலைத்துவிடாத அகதிகள்.

பக்கத்தில் கிடந்த தன் மகன் செவ்வேளைப் பார்த்தாள்.

அவனையும் காணவில்லை என்றவுடன், 'திக்' கென்றது அவளது நெஞ்சு.

காயங்களுடன் முனகிக்கொண்டிருக்கும் ஒரு சிலரைத் தவிர, மிகுதிப்பேர் நல்ல நித்திரை.

மீனா படுக்கையை விட்டெழுந்து தன் மகனைத் தேடி வெளியே ஓடினாள்.

வழமையாகவே அடிக்கடி அவன் போயிருக்கும் இடம்தான் இப்பவும் அவன் போயிருந்தது.

அந்த அகதிமுகாமின் பின்பக்கத்தின் முட்கம்பி வேலியருகில் ஏதோ பறிகொடுத்தவன் போல குந்தியிருந்ததை கண்ட மீனா துடித்தே போனாள்.

முட்கம்பி வேலியையே வெறித்து பார்த்துக்கொண்டிருந்த, செவ்வேளின் கண்கள் இரண்டிலும் எதனையோ பறிகொடுத்தவன் போல . . .

எப்ப பார்த்தாலும் யாருடனும் பேசாமல் எங்கயேனும் ஒரு மூலையில் தனிமையில் போய் இருப்பது செவ்வேளின் வழக்கமாகிவிட்டது.

தன்னொத்த வயதுப் பிள்ளைகளுடன் ஓடியாடி விளையாடாமல் செவ்வேள் தனிமையாக இருப்பது கண்டு தாய் மீனா சரியாக கவலைப்பட்டாலும் அந்த, கவலையையே சொல்லியாறக் கூட யாருமற்றவளாக அவள்.

'யாரை நம்புவது, யாரை நம்பாமல் விடுவதென்று தெரியாமல்' அன்னிய கண்களுக்கு மத்தியில் வாழ நிற்பந்திக்கபட்டிருக்கும் தன்நரக வாழ்வை எண்ணியெண்ணி தினம்,தினம் தன் மனதுக்குள் அழுது தீர்ப்பாள்.

என் தந்தை வருவார். . ., வருவாரென்று அம்மா சொன்னாலும் எட்டு வருடங்களாகியும் ஏன் இன்னமும் என்னை வந்து பார்க்கவில்லை? அப்படியானால் அம்மா. . ! எதையோ என்னிடம் ஒழிக்கிறாவா? நான் யார்? தமிழனா? அல்லது சிங்களவனா? என செவ்வேள் தனக்குள்ளே பல கேள்விகளுக்கு விடை தெரியாதவனாகஞ் மனதுக்குள் குழம்பியவனாக தனிமையே கெதியென கிடந்தான்.

செவ்வேளுக்கு வயது எட்டுத்தானிருக்கும். தந்தை யாரென்று இன்னமும் அவனுக்கு தெரியாது. அவர் வருவாரென்ற நம்பிக்கையில் தானிருப்பதைவிட, தன் மகனையும் நம்பவைத்து கொண்டிருக்கின்றாள் செவ்வேளின் தாய் மீனா!

ஆனாலும் இந்த நிலையில் கூட வந்து பார்க்காத தந்தை எனி வந்தும் பிரியோசனமில்லை என்பதுதான் செவ்வேளின் வாதம்.!

வன்னிக்காட்டில் போர் உக்கிரமடைந்த நிலையில், அதற்குள் மனைவி, பிள்ளை சிக்குண்டு தவிப்பார்களே அவர்கள் உயிருடனிருக்கிறார்களா? இல்லையா? என அறிய அக்கறைப்படாத 'புருசன்' இனி வந்துதானென்ன வராமல் விட்டால்தானென்ன ?

எத்தனை வகைத்துன்பங்கள் அனுபவிக்க வேண்டுமோ அத்தனையும் அனுபவித்து, "மறுபிறவி எடுத்து வந்தது போல வந்துள்ள எம்மைப் பற்றி அக்கறைப்படாதவரைப்பற்றி தாய் மீனா பேச்செடுத்த போதெல்லாம் செவ்வேளுக்கு கோபம் வருவதில் நியாயமில்லாமலுமில்லை.

ஆனாலும், தாய் மீனா குறுக்கிட்டு தாயாக தன் நியாயத்தை நியாயப்படுத்தினாள்

"சும்மா வாயில் வந்தபடி கதைக்கக்கூடாது கண்டியோ! எங்களைப்போல 'அவரும்' கண் காணாத தேசத்தில் என்னென்ன பிரச்சனைகளோடு இருக்கிறாரோ! . . "நாங்கள் அவரைத் தேடிப் பார்த்தோமா? என்று, தாய் மீனாவும் கோபமாக முடிக்க முன்னம் "தேடிப் பார்ப்பதற்கு அவருடைய 'அட்றஸ்' 'ரெலிபொன் நம்பர்' ஏதாவது இருந்தால்தானே தேடிப்பார்க்கலாம், என செவ்வேள் கோபமாக நிற்பதைக் கண்டு, வயதுக்கு மிஞ்சிய கெட்டித்தனம் தன் பிள்ளையிடம் இருப்பதையுணர்ந்த மீனா மனதுக்குள் பெருமிதங்கொண்டவளாய் தான் உடுத்திருந்த கிளிந்த சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த கசங்கிய ஒரு கடதாசியை எடுத்து செவ்வேளிடம் நீட்டியபடி இதிலேதான் அவர் தந்திட்டுபோன விலாசமும், தொலைபேசி இலக்கமும் இருக்குது' என்றாள் மீனா.!

கடந்த எட்டு வருடங்களுக்கு முன் இலங்கையில் இடம்பெற்ற சமதானஒப்பந்தங்களை காரணம் காட்டி வெளிநாடுகளிலிருந்து பெருவாரியான புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு வந்து போய்க்கொண்டிருந்த நேரம்தான் டென்மார்க்கிலிருந்து வந்த ஜனகனுக்கு சொந்தமென்று அங்கு 'கிளிநொச்சியில்' யாரும் இருக்கவில்லை

அவனுடைய சொந்தமெல்லாம் யாழ்ப்பாணத்தில் தான்.

சும்மா ஊர் பார்க்கவென்று வந்த ஜனகன் மீனா இருந்த வீட்டுக்கு அருகிலுள்ள தெய்வேந்திரமண்ணை வீட்டில் தான் வந்து தங்கினான்.

தெய்வேந்திமண்ணையின் வீடும் பெரிய வீடு.

ஜனகன் பார்ப்பதற்கு எடுப்பான தோற்றம் கூர்மையான கண்கள் வசீகரப்பார்வை என்பதற்கும் மேலாக மனிதாபிமானம் கொண்டவன் என்பதற்கு, அவன் அந்த ஊர் மக்களோடு பழகியவிதம் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களோடு ஒப்பிடும் போது அவர்களிலிருந்து ஜனகன் பலபடி உயர்ந்தே மீனாவின் பார்வைக்கு தென்பட்டான்.

ஏழையெழிய மக்களோடு அவன் பழகிய விதம், அவர்களுக்கு செய்த உதவிகள். தொழில்கள் தெரிந்தும் சிலர் அதைச் செய்ய பொருளாதார வசதிகளற்று இருந்தவர்களுக்கு தன் சொந்த பணத்தில் பொருளாதார வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து, சிறுசிறு கைத்தொழில்களை உருவாக்கி கொடுத்து, அதனை எப்படி நடாத்துவது போன்ற இலவச ஆலோசனைகள் வழங்கி. . .அதனூடாக வேலையில்லாத சிலருக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்து ஒரு சமுதாயம் செய்ய வேண்டிய வேலையை தனியொருமனிதனாக ஜனகன் செய்துகொண்டிருந்தான் .

அந்த ஊரே அவனை பெருமிதமாக பார்த்தது.

ஜனகன் தனது சொந்தப்பணத்தில் செய்த தர்ம காரியங்கள் அத்தனையையும் பார்த்துக்கொண்டிருந்த மீனா மனதிலும் ஜனகன் சிம்மாசனம் போட்டு உட்கார காரணமாகிவிட்டது.

அடிக்கடி ஜனகனின் கண்ணிடுக்கினுள் தடக்கி .. விழுந்தாள் மீனா!

இது மீனாவுக்கே .. ஆச்சரியமாக இருந்தது. எத்தனையோ இளைஞர்கள் மீனாவுக்கு காதல் கடிதம் கொடுத்தும் அதை அலட்சியமாகவே தூக்கியெறிந்த மீனாவுக்கு தனக்கு ஜனகன்மீது ஏற்பட்டது காதலா?

நம்பமுடியாமலிருந்தது அவளுக்கு. ஜனகனை அடிக்கடி பார்கவேணும் போலிருந்தது மீனாவுக்கு.

சிறு வயதிலேயே தன் தந்தையையும் தாயையும் இழந்துவிட்ட மீனா தன் பாட்டியாருடனேயே வளர்ந்து வருகிறாள். சிறு வயதிலிருந்தே வறுமை, சோகம், விரக்தி இதன் காரணமாகவோ என்னமோ . . . இவளுக்கு யாருடனும் அதிகம் பேசப்பிடிக்காது. 'ஏனோ தானோவென' பாட்டியுடன் ஒரு 'கொட்டில்' வீட்டினில் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தவளுக்கு ஜனகனின் 'சந்திப்பு' ஏதோ தன் வாழ்க்கைக்கு புது அர்த்தத்தை சொல்லுவது போல இருந்தது மீனாவுக்கு.

ஒரு நாள் ஜனகன் எதிர்பார்க்காமல் மீனா வீட்டு வாசலில் வந்து நின்றான்.

மீனாவுக்கு என்ன கதைப்பதென்று தெரியாமல் கையிரண்டும் நடுங்கியது.

'பாட்டி, பாட்டி. . . ', என்று அழைத்த வார்த்தைகளும் நடுங்கியது.

'பாட்டி நிற்கிறாவா?' என ஜனகன் பதட்டமேதுமில்லாமல் கேட்க ஓமோம் வாங்க உள்ளேயென அழைத்தபடி அவனை இருக்க சொல்லுவதற்கு ஒரு கதிரை கூட இல்லையே என்று மனதுக்குள் வெட்கப்பட்டபடி தான் படுக்கும் பாயை அவசரமாக விரித்து அதற்குள் இருந்த தலையணையை தூக்கி ஒரு மூலையில் வைத்து விட்டு அதில் இருக்கம்படி சொல்வதற்குள் கொட்டில் வீட்டுக்குள் நுழைந்த ஜனகன் எதிர்பாரத விதமாக

அவனது தலை வாசல்படியுடன் அடியுண்டதில் ஜனகனின் நெற்றியில் மெல்லிதாக வெடித்துவிட்டது.

துடிதுடித்தே போனாள் மீனா !

உடனே தன்பாவாடையின் தலைப்பை கிளித்து ஜனகனின் தலையில் கட்டுப்போடடுக்கொண்டே “சொறி, சொறி என பலதடவை சொல்லியிருப்பாள்”

சீ பரவாயில்லை என்று ஜனகன் சொல்லியும் மீனாவின் கண்களில் பனித்திட்ட கண்ணீர்த்துளிகளை பார்த்தவுடன் ஜனகனுக்கு என்னவோ போலிருந்தது.

என் மேலே இப்படியொரு அன்பு வைத்த பெண்ணை இப்பதான் பார்க்கிறேன்!

தன் நெற்றியில் விழுந்த அடி அடிக்கடி விழுந்தாலென்ன என்பது போலிருந்தது ஜனகனுக்கு!

‘என்ன தம்பி வாசற்படி அடித்தட்டுதா? உங்களுக்கு பழக்கமில்லைத்தானே இஞ்ச உள்ளுக்க வரேக்க குனிந்துகொண்டுதான் வரவேணும் தம்பி’ என்று சொல்லிக்கொண்டு பாட்டி ‘தாவரத்தில’ இருந்து உள்ளுக்குள்ள வந்து நிலத்தில அமர்ந்தார்.

‘அது பரவாயில்லைப் பாட்டி! நான் வெளிநாட்டில இருந்து வந்தனான் உந்த முன் வீட்டிலதான் வந்து நிற்கிறன். உங்களைப்பற்றியும் தெய்வேந்திரமண்ணை சொன்னவர். அப்ப என்னால முடிந்த உதவிகளை கஷ்டப்பட்ட சிலபேருக்கு செய்கிறன் அதுதான் உங்களுக்கும் கொஞ்ச காசு கொடுப்பமென்று வந்தனான்’ என்று சொல்லியவாறு தன் பொக்கேற்றிலிருந்து எடுத்து ஒரு கட்டு தாள்களை பாட்டி கையுக்குள் திணித்தான் ஜனகன்.

‘யார் பெத்த பிள்ளையோ! நீ மகராசனாக இருக்க வேணும்’ என்று பாட்டி சொல்லி முடிக்கமுன்னம் தேத்தண்ணியுடன் வந்து நின்றாள் மீனா.

‘என்ன பிள்ளை சீனி இல்லையென்றனி வெறுந்தண்ணிய கொண்டு வந்தனி தம்பிக்கு?’ என்று பாட்டி கேள்வியை துழாவ, ‘இல்லைப்பாட்டி சும்மாயிருங்கோ பூமணியக்காவிட்ட வாங்கினனான்’ என்று மீனா முடிக்க முன்னம் ‘ஏன் மீனா? அப்படி கட்டாயம் தேத்தண்ணி தரவேணுமோ!’ என, ஜனகன் மீனாவைப் பார்க்க இருவர் கண்களும் வார்த்தைகளின்றி பேசிக்கொண்டன.

பாட்டியிடமும் மீனா விடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான் ஜனகன்!

‘இனி எப்ப வருவிங்கள் இந்தப்பக்கம்? ’ என வார்த்தையாலும் விழியினாலும் கேள்வி தொடுத்தாள் மீனா.!

‘புன்சிரிப்போடு’ விடைபெற்ற ஜனகனுக்கு நாளைக்கு பின்னேரம் வாங்கவன் பனங்காய் பணியாரம் சுட்டுவைக்கிறேனென்று மீனா சொல்ல என்ன விசேசம் நாளைக்கு? என்று ஜனகன் கேட்டுவிட்டான்.

ஒன்றுமில்லை சும்மாதான் வாங்கோ என்று மீனா சொல்ல பார்ப்போம் நேரமிருந்தாலென கொஞ்சம் மவுசு காட்டி வெளிக்கிட்டான் ஜனகன் .

“உள்ளிருந்து ஒரு குரல், கட்டாயம் வாங்க தம்பி நாளைக்கு என்ர பேத்தியின்ர ‘பேத்டே’ அதுதான் ஆசையாய் உங்களை கூப்பிட்டிருக்கிறாள் . கட்டாயம் வாங்க!” என்றாள் பாட்டி.

சாறி.. பஞ்சாபி சட்டைகளென விதம்விதமான உடுப்புக்களென பெண்களுக்கு தேவையான சாமான்களோடு மறுநாள் மாலை ஒரு ஆட்டோவில் மீனா வீட்டு வாசலில் வந்திறங்கினான் ஜனகன்.

இறக்கை கட்டி பறந்தாள் மீனா!

ஜனகனின் பேச்சு, பார்வை எல்லாமே புதுசாகத்தானிருந்தது மீனாவுக்கு புதிராகவுந்தான் நாட்கள் நகர்ந்தன.

கொட்டில் வீடு ஒரே அமர்களமாகத்தானிருந்தது.

காலங்கள் உறுண்டு ஜனகனின் பயணமும் நாட்களாகி மணித்துளிக்குள் வந்து நின்ற போதுதான் மீனா மீண்டும் தரைக்கு வந்து நின்றவளாக பிதுங்க , பிதுங்க முழித்தாள்.!

ஜனகனின் பிரிவைத் தாங்க முடியாதவளாக அவள் விம்மத் தொடங்கினாள்.

இந்த ஓரிரு மாத சந்தோசகக் களிப்பினில் மீனாவின் வீட்டுக்கு விலக்கு தள்ளிப்போளிருந்தது.

பேசும் வார்த்தையற்று நின்ற மீனாவின் இரு கரங்களுக்கும் ஒரு கட்டு பணத்தை திணித்து வைத்தான்.

இப்போ, வாய் விட்டு கதறினாள் மீனா எனக்கு பணம் வேண்டாம் நீங்கள் தான் வேணும்.!

எடியே அசடு நான் வரும்வரையில் உம்முடைய செலவுக்குத்தான் இந்த காசு. நான் போனவுடனே முதல் வேலையாக உம்மை கூப்பிடுகிற அலுவல்தான் பார்க்க போறன். அப்படி பிந்துமென்றால் வெளிநாடே வேண்டாமென்றிட்டு இஞ்ச வந்து உம்மோடுதான் இருப்பனென்று அள்ளி வீசிய உறுதி மொழிகளுடன் ஜனகன் விடைபெற்ற காட்சிதான் இன்னும் மீனாவின் கண்களில் காட்சிகளாய் விரிந்துகொண்டிருந்தது.

தாயிடமிருந்த விலாசத்தையும் ரெலிபோன் நம்பரையும் வாங்கிய செவ்வேள். கோபத்துடனும், ஆத்திரத்துடனும். மீண்டும் விறுக்,விறுக்கென்று நடந்தான்.

பாவம் அவனால் அந்த முட்கம்பி வேலிவரைதான் போக முடிந்தது. விரக்தியுடன் அந்த முட்கம்பி வேலியருகில் குந்திய செவ்வேள் முட்கம்பி வேலியையே பார்த்தபடி பல மணி நேரங்கள் அதில் இருந்திருப்பான்.

தூரத்தில் ஒரு வெளிக்காணிக்குள் ‘புட்போல்’ விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களின் பந்து உயர்த்தி அடித்ததில் அது முட்கம்பி வேலிக்குள் வந்து விழுந்தது. அதை கலைத்துக்கொண்டு ஓடி வந்த சிறுவர்கள் உள்ளே வரமுடியாததால் ..

## இணுவை சக்திதாசன் - டென்மார்க்

தங்களுக்குள் சிங்களப் பாசையில் ஏதோ குசுகுசுத்துக்கொண்டார்கள். செவ்வேளுக்கு எதுவுமே புரியவில்லைத்தான் ஆனாலும் இந்தப்பந்தை எடுப்பதைப்பற்றித்தான் கதைக்கிறார்கள் என ஊகித்தவனாய் அந்த பந்தை எடுத்து அவர்கள் பக்கமாக சுழட்டி எறிந்தான் செவ்வேள்.

பந்து திரும்பி வந்த சந்தோசத்தில் பந்தையெடுத்துக்கொண்டு ஓடிய ஒருவனுக்கு பின்னால் மற்ற சிறுவர்கள் எல்லாம் ஓட ஒருவன் மட்டும் தன்னை நோக்கி வந்து உனக்கு சிங்களம் தெரியுமா ? என கேட்க ‘ இல்லையென்று தலையாட்டிய செவ்வேளைப்பார்த்து நன்றியென தமிழில் சொல்லியவாறு என் பெயர் ‘காமினி’ நான் தமிழும் பேசுவன்.

உனக்கு என்ன உதவி வேண்டுமென்றாலும் சொல்லு என்னால் முடிந்தளவு உதவி செய்கிறனென்று காமினி சொல்லிவிட்டு நகர்ந்தான்.

எதுவுமே பேசாமல் காமினியையே பார்த்துக்கொண்டிருந்த செவ்வேள். தூரத்துக்கு சென்றும் திரும்பி,திரும்பி செவ்வேளை பார்த்துக்கொண்டு சென்ற காமினியை திடீரென்று கைகாட்டியழைத்தான் செவ்வேள்.

செவ்வேளின் கைகாட்டலைக் கண்டதும் போன வேகத்திலிலும் பார்க்க வேகமாக மீண்டும் முட்கம்பி வேலியை நோக்கி ஓடி வந்தான் காமினி.

எனக்கொரு உதவி செய்வாயா? எனக் கேட்ட செவ்வெளைப்பார்த்து என்ன என்பது போல காமினி பார்த்துக்கொண்டிருக்க என்னுடைய அப்பாவிற்கு நாங்கள் இஞ்சை இருக்கிறது தெரியாது!

அவர் இந்த நாட்டிலேயும் இல்லை. அவர் வெளிநாட்டில் டென்மார்க்கில் தான் இருக்கிறார்!

என்னட்டை காசும் ஒரு சதமுமில்லை, நான் அவருடன் ஒருக்கா ரெலிபொனில கதைக்க வேணும்.

உம்மால எனக்கு இந்த உதவியை செய்ய முடியுமா ? எனக் கேட்ட செவ்வேளைப்பார்த்து, கவலைப்படாதே நாளைக்கு இதே நேரத்துக்கு ரெலிபோனோடு வர முயற்சிக்கிறன் என்று சொல்லிய காமினியை பார்த்து கையெடுத்து கும்பிட்டான் செவ்வேள்!

மறுநாள் மாலை செவ்வேள் முட்கம்பி வேலியருகில் வருவதற்கு முன்பே காமினி ஒரு கைத்தொலைபேசியுடன் நிற்பதைக் கண்ட செவ்வேளுக்கு அளவிடமுடியாத சந்தோசம் மனதில் பொங்க முட்கம்பி வேலிக்கருகில் ஓடி வந்தான்.முட்கம்பி வேலிக்கு மறுபுறம் நின்ற காமினி முட்கம்பியூடாக கையை எட்டி தான் கொண்டு வந்த ரெலிபோனை செவ்வேளிடம் கையளித்தான்.

இரு கரம் நீட்டி வாங்கிய செவ்வேளிடம் 'இது என் அம்மாவினது ரெலிபோன்' டென்மார்க்கு அடிக்கிறதென்றால் 0045 அடித்துப்போட்டு நீ வைச்சிருக்கிற நம்பரை அடியென சொல்லியபடி முட்கம்பிக்கு அந்தப்பக்கமாக யாரும் பார்க்காதபடி குந்தியிருந்தான் காமினி.

செவ்வேளும் அவசர.. அவசரமாக காமினி சொன்னதின்படி நம்பரை சுழட்டி.. லைன் கிடைத்து விட்டது என்ற சந்தோசத்தில் கலோ . . . கலோ! என்றால் அங்கே மறுமுனையில் 'டென்மார்க்கில்' இருந்து கதைப்பதை செவ்வேளால் விளங்கிக்கொள்ள முடியாமலிருந்தது.

அதாவது தொலைபேசி தெளிவில்லாமல் அதில் கதைத்த பெண் வேறு ஒரு மொழியில் பேசினாள். இவன் கதைத்தது அவளுக்கோ அன்றி அவள் கதைத்தது இவனுக்கோ புரிந்துகொள்ள முடியாமலிருந்தது.

இவன் தமிழில் கதைக்க அவள் டேனிசில் கதைக்க செவ்வேளின் கண்களில் பளிச்சிட்ட கண்ணீர்த்துளிகளை பார்த்தவுடன் காமினி கேட்டான் "நீ தப்பாக நினைக்கவில்லையென்றால் நான் ஆங்கிலத்தில் கதைத்து விபரத்தை அறியவா? "

தன்கையில் இருந்த ரெலிபோனை காமினியிம் கொடுத்துவிட்டு வைத்தகண் வாங்காமல் காமினியையே பார்த்துக்கொண்டிருந்தான் செவ்வேள் காமினி மீண்டும் அவ் இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஆங்கிலத்தில் கனநேரமாக உரையாடினான்.

ஆங்கிலம் விளங்கிக்கொள்ளாவிட்டாலும் தந்தையின் பெயரைச் சொல்லி,சொல்லி காமினி உறவாடியதிலிருந்து, அது சரியான நம்பராகத்தானிருக்கும் என்பதையுணர்ந்து செவ்வேள் சந்தோசப்பட்டான். ஆனாலும் அந்த சந்தோசம் அதிகநேரம் நீடிக்கமுயாமல் இருக்கப்போகிறதே என்பதை நினைத்து காமினி கவலையடைந்தான்.

காமினி ரெலிபோன் கதைத்துவிட்டு வைத்தவுடன் பரபரப்பாகிவிட்டான் செவ்வேள்.

தான் யாருடன் கதைத்தேன். என்னத்தை கதைத்தேன் என்பதை மொழிபெயர்த்து தமிழில் சொல்வதற்கு காமினி தயங்கிக்கொண்டு நின்றான். யாருடன் நீ கதைத்தாய் ? அது என் அப்பாவின் ரெலிபோன் நம்பர் தானா? நீ ரெலிபோனில் கதைத்த அந்த வெள்ளைக்காறப் பெண் என்ன கதைத்தாள். தயவு செய்து என் பொறுமையை சோதிக்காமல் சொல் காமினி.

பிளீஸ்... பிளீஸ் ... என்று செவ்வேள் கேட்டுக்கொண்டேயிருக்க மெளனமாவே நின்ற காமினி தன் மெளனத்தையும் கலைத்துக்கொண்டு சொன்னான். நீ சொன்ன அப்பா அந்த வெள்ளைக்காரப் பெண்ணின் கணவனாம்.

ஆயதங்கள் மெளனிக்கப்பட்ட அந்த பூமியில் மீண்டும் ஒரு குண்டு வந்து விழுந்தது.

செவ்வேள் சுக்கு நூறாய் போனான்.

(sakthy-@hotmail.com)



# அ...ஆ...இ...

## சிவனேசன்
### இத்தாலி

சுமன் நாளை தற்கொலை செய்ய இருக்கின்றான்.

தனது வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இது நடக்கப் போவதில்லை.

கிழமை நாட்களில் அரசின் இத்தாலிய தனியார் பாடசாலையாகவும் சனி ஞாயிறுகளில் தமிழ்ப் பாடசாலையாகவும் நடைபெறும் அந்த மில்லான் நகரப் பாடசாலையில் அது நடக்க இருக்கிறது.

தான் கல்வி கற்கும் பாடசாலையில் காலையில் மாணவர்கள் கூடும் மண்டபத்தில் அதிகாலையில் இது நடக்க இருக்கின்றது. பாடசாலை ஆரம்பமாகும் பொழுது மண்டபத்தின் ஏதோ ஒரு வளையில் தொங்கப் போகின்றான். இத்தாலி அல்லோலகல்லோலப்படப் போகின்றது.

“இத்தாலியில் தமிழன் தற்கொலை”, என பத்திரிகைகளில் செய்தி வரப்போகின்றது.

இத்தாலியில் தமிழர்கள் என்ற தலையங்கங்கள் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றது.

காதல் காரணமாக இரு இளைஞர்கள் ஆளை ஆள் கொலை செய்யும் வரை சென்றதும் கைது செய்யப்பட்டதும் மிக அண்மைச் செய்தி.

அரசியல் தஞ்சம் கோரிய ஒன்பது தமிழர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டார்கள் என்பது சில நாட்களுக்கு முன்வந்த அடுத்த செய்தி.

இலங்கைப் போராட்டத்திற்கு நிதி திரட்டினார்கள் என 33 தமிழர்கள் இத்தாலிப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டது இரு வருடங்களுக்கு முன் நடந்தது.

தமிழர்கள் வாழும் நாடுகளில் அவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இவ்வாறு சின்னதும் பெரியதுமான பிரச்சனைகள் எங்கும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

சிலது பத்திரிகைளில் வரும். சிலது வராது. ஆனால் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

அவன் இத்தாலிக்கு வரும் பொழுது வயது பதின்மூன்று. இப்பொழுது பதினாறு.

தகப்பன் தாய் இருவரும் வன்னியில் இருக்க தனியே ஏஜன்டுடன் வந்து இறங்கினான். ஒரே பிள்ளை வேறு. வன்னியில் வைத்திருக்கவும் பயம். கொழும்பில் வைத்திருக்கவும் பயம். நாட்டுச் சூழல் காரணமான இத்தாலியில் இருந்த பெரிய தகப்பனிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தான்.

மூன்று வருடத்திற்கு முதல் அகதி அந்தஸ்து கோரி இத்தாலிக்குப் போனபோதும் சென்ற வருடம் தான் அவனுக்கு வதியிட உரிமை கிடைத்தது.

தனது கனவு நிறைவேறும் காலம் வந்துவிட்டது என அக மகிழ்ந்திருந்தான்.

பிறந்தது தொடக்கம். . .படிப்பு. . .படிப்பு. . .படிப்பு . . .

நினைவும் கனவும் அதுவாகவே இருந்ததனால்தான் இத்தாலிக்கு எதற்கு வந்தாய் என அதிகாரிகள் கேட்ட பொழுது படிக்க வந்தேன் எனப் பதில் சொல்லியதால் முதல் சுற்றில் அவனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

பின்புதான் நாட்டுப் பிரச்சனைகள், பாடசாலையில் குண்டு விழுந்தது என்ற உபகதைகளும் இணைந்து இறுதியில் வன்னியில் பெற்றோர்கள் மரணமடைந்த செய்திகள் வந்த பொழுதுதான் சட்டபூர்வமான அகதி அந்தஸ்து கிடைத்தது.

அதுவரையில் சனி ஞாயிறுகளில் தமிழ் வகுப்புகளுக்கு மட்டும் போய் வந்தான். அங்கே தான் அவனுக்குப் பிரச்சனை தொடங்கியது.

சுயமாகவே அதிகமாக சிந்திக்கும் அவனுக்கு அங்கு கற்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் புத்தகங்களில் ஈடுபாடு இருக்கவில்லை.

இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ அறிந்திராத தமிழ்ச் சொற்களை இத்தாலி நாட்டில் வந்து கற்க அவன் மனம் ஏற்கவில்லை.

தமிழ் ஆசிரியையிடம் நேரடியாக கேட்டான், "ரீச்சர் வீட்டிலை நீங்கள் ஐஸ்கிறீம் என்று சொல்லுறனீங்களோ. . .குளிர்களி என்று சொல்லுறனீங்களோ" என்று.

ஆசிரியருக்கு ஒரு மாதிரிப் போய் விட்டது. ஆனாலும் அடக்கிக் கொண்டு "குளிர்களி" என்று தான் சொல்லுறனான் என்று சொல்லி முடிக்க முதல், பின் வாங்கில் இருந்த ஆசிரியையின் சுட்டித்தனம் மிகுந்த மகள், "இல்லை. . .அம்மா பொய் சொல்லுகிறா" எனப் பலத்துச் சொல்ல வகுப்பு 'கொல்' எனச் சிரித்தது.

ஆசிரியைக்கு முகம் சிவக்க சுமனைக் கூட்டிக் கொண்டு தலைமை ஆசிரியரிடம் சென்றார்.

இந்த வகுப்பாசிரியரோ அன்றில் தலைமை ஆசிரியரோ இலங்கையில் ஆசிரியராக இருந்தவர்கள் இல்லை. ஒருவர் சிறுவர் பாடசாலை (நேஸரி) நடத்தியவர். மற்றவர் இங்குள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் கதை, கவிதை எழுதுபவர். அடிப்படைத் தமிழ் தெரியும் என்பதும் தொடந்து இங்கு ஐந்து வருடம் தமிழ் கற்பிப்பதாலும் தலைமை ஆசிரியர் என்ற தகுதியையும் பெற்றிருந்தார். தன்னை மற்றவர்கள் தலைமை ஆசிரியர் என்று சொல்வதை விட பிறின்சிப்பல் என்று சொல்ல வேண்டும் என்பது அவர் விருப்பமாம்.

“மடம். . . சுமன் படிப்பீக்க விடாமல் வகுப்பைக் குழப்பிக் கொண்டு இருக்கிறார். எனக்கு படிப்பீக்கேலாமல் இருக்கு”

”சுமன், ரீச்சர் சொல்லுறது உண்மையோ?”

“நான் கேள்வி கேட்டனானோ தவிர வகுப்பைக் குழப்பவில்லை”

“என்ன கேட்டனீர்”

“ஐஸ்கிறீமை வீட்டிலை எப்பிடிச் சொல்லுறனீங்கள் என்று கேட்டனான். . . அதுபிழையே?”

“அதேன் உமக்கு அந்தக் கேள்வியள்?”

“என்ன கேள்வி என்றாலும் கேளுங்கோ என்று நீங்கள் தானே சொல்லுறனீங்கள்”

“சரி. . .சரி. . .இனிமேல் கணக்க கதைச்சு வகுப்பைக் குழப்பாதையும்”

அந்த சம்பாஷனை அத்துடன் முடிந்து விட்டது.

ஆனாலும் தலைமை ஆசிரியரும் தன்னை குற்றவாளி போல் பார்த்தது அவனுக்குப் பிடிக்கவில்லை.

அடுத்த அடுத்த வாரங்கள் சுமன் வகுப்பில் எதுவும் கதைக்கவில்லை.

ரீச்சர் சுமனுக்கு கிட்டவாக வந்து, "ஏன் மௌமாக இருக்கிறீர்" எனக் கேட்க "உங்களுக்குத் தான் கேள்வி கேட்க கோபம் வருதே" என்று விட்டு தனது கொப்பியில் கொம்பியூட்டரின் படத்தைக் கீறி அதனை வைரஸ்கள் தாக்க வருமாப் போல் வரைந்திருந்தான்.

"இல்லை நீ கேள்விகள் கேட்கலாம்", என்று சொல்ல ரீச்சர் சொல்ல முதல் "ஹாட் டிஸ்க்கை வைரஸ் தாக்கிவிட்டது என்பதை எப்படி தமிழில் சொல்லுவது" என சுமன் கேட்டான்.

ரீச்சர் முழிக்கத் தொடங்க, "டே சுமன் அம்மாக்கு கொம்பியூட்டர் பற்றி எதுவும் தெரியாது. அப்பா தான் அம்மாக்கு வாற மெயில் வாசிச்சு சொல்லுறவர்". அதே சுட்டிப் பெண் வகுப்பின் பின் வரிசையில் இருந்தபடி சொல்ல வகுப்பு மீண்டும் 'கொல்' எனச் சிரித்தது.

ரீச்சர் அன்று வருத்தம் என வீட்டை போய் விட்டார்.

ஆனால் மற்றைய பெற்றார்கள் ஆசிரியர்களிடம் இது ஒரு சலசலப்பை ஏற்படுத்தி விட்டது.

இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆங்காங்கே பல அதிருப்தியீனங்கள் இருந்தாலும் பிள்ளைகள் படிக்கும் இடத்தில் தாம் ஏன் பிரச்சனைப்படுவான் என பல பெற்றோர்கள் மௌனமாக இருக்க, ஒரு மாணவன் இவ்வாறு கேள்விகள் கேட்பது பலருக்கு மனத்துள் மகிழ்ச்சியாக இருந்தது.

இதன் அடுத்த கட்டமாக அடுத்தமாதம் நடந்த பாடசாலையின் பொதுக்கூட்டத்தில் இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி பல விளக்கங்கள் அளிக்கப்பட்டது. குறிப்பாக தமிழ்ஈழம் அமையும் பொழுது இந்தப் பாவனைதான் அங்கும் வரும் என சொல்லப்பட்டது.

யாரும் கேள்விகள் கேட்கவில்லை.

சுமன் தனது கையை உயர்த்த வெளிக்கிட பக்கத்தில் இருந்த பெரிய தந்தையார் அவனின் கையைப் பிடித்துக் கொண்டார்.

*

இறுதி யுத்தம் ஆரம்பமானது.

வன்னி யுத்தத்தில் பெற்றார் இருவரும் மடிந்து போன மரணச் சான்றிதழ் இத்தாலி அரசாங்கத்திற்கு அனுப்பப்பட அடுத்த நாளே அகதி அந்தஸ்துக் கிடைத்த அவனுக்கு அங்குள்ள ஒரு தனியார் பாடசாலை ஒன்றிலும் கல்வி கற்க வாய்ப்புக் கிட்டியது.

அவன் கற்பனை பண்ணிய பாடசாலையாக அது இருக்கவில்லை.

வகுப்பாசிரியர் வரும் போது இவன் மட்டும் எழுந்து நின்றான். மற்றப் பிள்ளைகள் சிரித்திருந்தனர்.

வகுப்பில் மாணவர்கள் மேசை மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தார்கள். ஆசிரிய ஆசிரியைகளை அனைத்து மாணவர்களும் பெயர் சொல்லி அழைத்தார்கள்.

இடைவேளையின் பொழுது அனைத்து மாணவரும் ஆசிரியையரும் வகுப்புக்கு வெளியில் நின்று கொண்டு சிகரட் குடித்துக் கொண்டு நின்றார்கள்.

அல்லது தங்கள் தங்கள் ஜோடிகளுடன் வகுப்பறைக்கு போகும் வாசல்களில் நின்று உதட்டோடு உதடு பொருத்தி முத்தமிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

சுமனால் எதையும் ஜீரணிக்க முடியவில்லை.

பாடசாலைக்குப் போக பிடிக்கவே இல்லை.

பெரிய தந்தையார் தான் சமாதானமும் உலக நடப்புகளையும் சொல்லி பாடசாலைக்கு அனுப்பிக் கொண்டு இருந்தார்.

இவ்வாறே ஒரு அரைவருடம் கழிந்த பொழுது சென்ற வெள்ளி அது நடந்தது.

கடைசிப்பாட நேரம். விளையாட்டுப் பாடம். அது முடிந்த நேரம்.

விளையாட்டாசிரியருக்கு துணையான பந்துகளை பொறுக்கி கூடைகளுக்குள் போட்டுக் கொண்டு நின்றான். மற்றைய மாணவ மாணவிகள் குளித்து உடை மாற்றப் போய் விட்டார்கள்.

விளையாட்டுக்கூடத்துள் அவனும் அந்த இளவயது இத்தாலி ஆசிரியையும் தனித்திருந்தார்கள். அவளது கணவன் கார் விபத்து ஒன்றில் சென்ற வருடம் காலமாகிவிட்டான். அவன் உதவி செய்ததற்காக அவனுக்கும் தனக்குமாய் இரு கோலா போத்தல்களை எடுத்து வந்து அவனுக்கு ஒன்றைக் கொடுத்து விட்டு தானும் மற்றதை அருந்தத் தொடங்கினாள்.

சில நிமிடங்கள் போயிருக்கும்.

ஆசிரியையின் கை அவனது கால் தொடையில் விழுந்தது.

பொறியால் தாக்குண்டவன் போலானான்.

என்ன நடக்கின்றது என்று தன்னைச் சுதாகரிக்க முதல் ரீச்சர் அவனை அழைத்துக் கொண்டு பின் அறை ஒன்றினுள் சென்று தாழிட்டுக் கொண்டாள்.

வாழ்க்கையில் எது சரி, எது பிழை என்பதை தீர்மானிக்க முதலே சில சரி, பிழைகள் நடந்து விடுகின்றுது.

சுமனுக்கு அந்த அதிர்ச்சியில் இருந்து அன்று மீளமுடியவில்லை.

ஒரு இளம் விதவையின் விரகதாபத்திற்கு ஒரு ஆண்மகன் பலியாகுவது உலகநடப்பாக இருந்தாலும் ஒரு ஆசிரியை தன் மாணவனை. . . அல்லது மாணவனுடன். . .

இருள் கவிந்த காட்டின் நடுவில் இருப்பது போல தன் அறையுள் இருந்த பொழுது வெளியே பெரிய தந்தையும் தாயாரும் சுமனின் தாய் தந்தையர்கள் எவ்வாறு வன்னியில் இறந்தார்கள் என்று கதைத்துக் கொண்டு இருப்பது சாட்சியம்

இல்லாத மரணங்கள் போல சிலசமயம் தெளிவாயும் சிலசமயம் தெளிவற்றும் கேட்டுக் கொண்டு இருந்தது.

சுமன் வெளியில் வந்த பொழுது இருவரும் தம் கதையைக் குறைத்துக் கொண்டார்கள். "அது தான் அவர்களின் விதி" என தங்களின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தாலும் சுமனின் மனதுள் எழுந்த பல கேள்விகளுக்கு அவனால் விடை காண முடியவில்லை.

இரவு பல பயங்கரக் கனவுகளுடன் கழிந்தது.

அடுத்தநாள் சனிக்கிழமை. தமிழ்பாடசாலைக்கு போகவே பிடிக்கவேயில்லை. முதன்நாள் பாடசாலையில் நடந்த நிகழ்ச்சி, தாய் தந்தையரின் மரணம் பற்றி சில சந்தேகங்கள், கண்ட கனவுகள, தமிழ் படிப்பீக்கும் வகுப்பாசிரியை இவை அனைத்தும் காரணமாக அமைந்திருந்தது.

அடுத்த நாள் தமிழ் பாடசாலையில் வகுப்பு தொடங்கும் சமயம் ஆசிரியர் புதிதாக வரவழைப்பட்டிருந்த தமிழ் பாடப்புத்தகங்களை விநியோகித்துக் கொண்டிருந்தார்.

மீண்டும் அதே குளிர்களி, வெதுப்பகம், எக்ஸ்செற்றா. . எக்ஸ்செற்றா .

"ரீச்சர் எனக்கு வேற தமிழ் புத்தகங்கள் தாங்கோ"

"இது தமிழ் புத்தகம் போலை உமக்குத் தெரியேல்லையோ"

"இதை படிச்சு விளங்க உலகத்திலை யாரும் இல்லை. இலங்கையில் இதை என்றைக்குமே நீங்கள் படிப்பீக்கேலாது. . இந்தியாவிலை படிப்பீக்கேலாது . .சிங்கப்பூரிலை படிப்பீக்கேலாது. .மலேசியாவிலை படிப்பீக்கேலாது. . .நீங்கள் தமிழ் படிப்பிக்கிறதாலை நீங்களே எல்லாத்தையும் தீர்மானிக்க முடியாது. . .எல்லாம் முடிஞ்சு போச்சுது. . ."

கதைக்க கதைக்க அவன் மூச்சு மேலும் கீழும் வாங்கியது.

“சுமன். . .நீர் என்ன நெடுகலும் வகுப்பை குழப்பவோ வாறனீர்”

“இந்தாங்கோ நீங்களும் உங்கடை புத்தகமும்” என புத்தகத்தை தூக்கி எறிந்து விட்டு வகுப்பறையை விட்டு வெளியில் போய் தோட்டத்தில் அமர்ந்து கொண்டான்.

இப்பவும் அவன் மூச்சு வாங்கிக் கொண்டு இருந்தது. சிறிது நேரத்துள் தலைமையாசிரியர் பின் தொடர வகுப்பாசிரியர் பின்னால் வந்தார்.

“சுமன் நீர் இனிமேல் எங்கடை பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டாம்”

சுமன் நிமிர்ந்து பார்த்த பார்வை அவர்கள் இருவருக்கும் அச்சத்தை உண்டு பண்ணியது.

“பள்ளிக்கூடங்கள் அசிங்கம்” என வாய்க்குள் சொன்னபடி வெளியேறினான்.

அதன் அர்த்தம் இருவருக்குமே விளங்கவில்லை.

“பள்ளிக்கூடம் சுமனை விலத்தி விட்டதாம்” என்றது அன்று அனைத்து வீடுகளிலும் கதைக்கப்பட்டது.

சரி, பிழை என்ற விவாதம் பாடசாலைக் கதவுகளுக்கு வெளியே மட்டும் கதைக்கப்பட்டது.

பெரிய தந்தையாருக்கு அது பெரிய அவமானமாகபட்டது.

*

**நா**ளை சுமன். . . நாளையின்ற பத்திரிகைகளில் “இத்தாலியில் தமிழ் மாணவன் ஒருவன்” என.

மாற்றங்களை விரும்பாத பூமி அடுத்தொரு மரணம் வரை சுற்றிக் கொண்டு இருக்கும்.

(tamilsivanesan@hotmail.com)

# வரம்பு உடைதல்

## மேழிக்குமரன்
## சோஸ்ற் - ஜேர்மனி



நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேள் அனுசியா. அவசரப்படாதை.

இல்லயைப்பா என்னுடைய முடிவிலை மாற்றமில்லை. எனக்கு எல்லாமே வெறுத்துப் போச்சு.

இந்தா பாரடி இப்ப நாங்கள் என்ன சொல்லிப் போட்டம் எண்டு உப்பிடிக் குதிக்கிறாய். நான் சொன்னதிலை என்ன தப்பு. ஒரு தாய்க்கு பிள்ளையை இப்படிப் பேச உரிமையில்லையே. நீ என்ர எதிர்பார்ப்பிலை மண்ணை அள்ளிப் போட்டிட்டாய்.

உங்களுக்கு ஒண்டுமே விளங்கயில்லை. என்னாலை இனி முடியாது.

இது என்ன பிரச்சனை? ஒரு தாய் தகப்பன் பிள்ளைக்கிடையில் என்ன வாய்த்தர்க்கம்? சரி உள்ளே போய் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம்.

*

நான்தான் அனுசியாவின்ர அப்பா சிவலோகன். நானும் பாரதியும் பேச்சுக்கால் மூலம்தான் கலியாணம் செய்தனாங்கள். எனக்கு ஏழிலை செவ்வாய் எண்டு அலைஞ்சு திரிஞ்சுதான் பாரதி பொருந்தினவ. நான் ஜேர்மனியிலை இருந்து பாரதியை ஸ்பொன்சரிலை எடுத்தனான். அப்ப அது சரியான இலகு. நண்பி எண்டு கூப்பிட்டு கலியாணம் செய்தம்.

நான் பெரிசாய்ப் படிக்கேல்ல. பிரச்சனை தொடங்கினவுடன் ஓ.எல். (பத்தாம் வகுப்பு) அரைவாசியிலை விட்டிட்டு ஜேர்மனிக்கு ஓடிவந்திட்டன். பிறகு இஞ்ச தோட்டவேலை செய்து காசு சேர்த்துக் கொண்டுதான் பொம்பிளை தேட வெளிக்கிட்டனான். நான் படிக்காததால ஒரு படிச்ச பொம்பிளை வேணுமெண்டு வெளிக்கிட்டால் கோதாரி ஏழில் செவ்வாய் குறுக்காலை வந்திட்டிது. பெரிய கஷ்டப்பட்டு பாரதியை ஏழில் செவ்வாயும் பட்டதாரியுமாய் ஒரு கல்லிலை இரண்டு மாங்காயாய் பிடிச்சன். வைக்கல் அடிச்சு, கோவா வெட்டிச் சேர்த்த காசிலை கூப்பிட்டிட்டன்.

கலியாணம் முடிஞ்ச கையோட ஒரு றிங்காலை (பெட்டிக்கடை) திறந்து போட்டன். பாரதியின்ர அதிஷ்டம் எனக்கு கடைபோட்டுக் குடுத்திட்டுது எண்டு எல்லாரும் பேசேக்க எனக்குப் பெருமைதான். பாரதி அப்படி ஒண்டும் அழகில்லை எண்டாலும் அது ஒரு குறையில்லை. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதானே. அனுசியா பிறந்ததோட பாரதியின்ரை குரலும் மேல போட்டுது. வளரத்தொடங்க அனுசியாவின்ர படிப்பைப் பற்றித்தான் பாரதி எந்த நேரமும் கதைச்சபடி. அதில சிலதுகள் எனக்குப் பிடிக்காது, சிலது விளங்காது எண்டாலும். நானும் படிக்கையில்லை பிள்ளையாவது படிக்கட்டும் எண்டு பாரதியின்ர உடுக்கடிக்கெல்லாம் ஆடினன்.

கொஞ்சம் அதட்டிப் பேசினால். இரவு திரும்பிப் படுத்திடுவள் பாவி. கற்போட இருந்து கண்டறியாதன கண்ட நான், என்ர இரவுத் தேவையை விடமுடியாமல் தவிச்சதாலை. பகலிலை பாரதியின் பார்வைக்கு அடங்க வேண்டியவனாய் போனன்.

அது இப்படிப் பிரச்சனையாய் வந்து முடியுமெண்டு நான் நினைக்கயில்லை. ஒரு பக்கம் பாத்தா பாரதி சொல்லுறது சரிமாதிரிக் கிடக்கு.

இன்னொரு பக்கம் பாத்தா அனுசியா சொல்லுறது சரிமாதிரிக் கிடக்கு. இதிலை எனக்கு நிறைய விசியம் விளங்கேல்லைத்தான். ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளக் கூடாது.

ஒண்டு மட்டும் நிச்சியம். பொம்பிளைப் பிள்ளை பெரிசா படிக்க வேணுமெண்டில்லை. அப்பர் ஊரிலை சொல்லுவர். அடுப்பூதுறவள் நாலெழுத்துப் படிச்சா போதுமெண்டு. இஞ்சையும் அது சரிதான் போல கிடக்கு. ஆனால் பாரதியிட்ட சொன்னால் சன்னதம் ஆடி தன்ர பரம்பரைப் புகழ் பாட வெளிக்கிட்டிடுவள் பாவி.

வெளியில ஏன் போவான் எங்கட ஸ்ரட்டிலயே(நகரம்) இராசன்ர பெட்டை நல்ல உதாரணம். அவள் வியற்சாவ்றிலை பச்சுலர் (வர்த்தக இளமானி B.com) படிச்சவளாம். இப்ப பாங்கிலை நல்ல வேலையும் செய்யிறாள். பிரச்சனை என்ணெண்டால் அவளின்ர படிப்புக்கு மாப்பிளை சரி வருகுதில்லை. அவையும் தேடாத இடம் இல்லை. அவளின்ர வயசிலை இஞ்ச பொடியள் பெரிசாயப் படிக்கேல்ல. பிள்ளைக்கு வயது 35 ஆகுது. ஏறாத கோயில் இல்லை. பார்க்காத சாத்திரி இல்லை. சாதகம் கொடுக்காத புறோக்கர் இல்லை. பாவங்கள் பெரிய கடப்படுகுதுகள்.

மக்டொனால்சிலை வேலை செய்யிற பொடியளுக்கே சீதனம் எக்கச்சக்கமாய் கேட்கினம். பிள்ளைக்கு படிக்கவும் செலவழிச்சு, சீதனத்துக்கும் எண்டால் எங்க போறது. ராசன்ர பிள்ளையோ தான் படிச்சிருக்கிறன் தனக்குப் படிச்ச மாப்பிளைதான் வேணுமெண்டு நிக்குதாம்.

ஆருக்கு இதைச் சொல்ல. இந்த வீட்டிலை. என்ர சொல்லை ஆர் கேட்கினம். கடையைப் போய் திறக்கலாம் எண்டால் இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு வந்த பாடில்லாமல் கிடக்குது. பிரச்சனை முத்தி பாரதிக்கு ஏதும் ஆயிடுமோ எண்டு பயமாய் கிடக்கு. அனுசியா ஏதும் ஏறுக்கு மாறாய் செய்திடுவாளோ எண்டும் பயமாய் கிடக்கு. நான் என்ன செய்ய.

*

**நா**ன் பாரதி. அனுசியாவின்ர அம்மா. ஊரிலை பி.ஏ. முடிச்சிட்டு ரீச்சராய் வேலைசெய்து கொண்டிருந்தனான்.

வெளிநாட்டு மாப்பிளை தேடுறது எண்டிற காத்தடிக்கத் தொடங்கின காலம். ஊரிலை பிரச்சனை ஒரு புறத்தாலை கலைக்க. வெளிநாட்டு மோகம் அக்கம் பக்கத்திலை எல்லாம் கதைக்க கதைக்க என்ர அப்பாவுக்கும் தொத்திக் கொண்டுது. அம்மாவும் சேர்ந்து சங்கூத நானும் கனவு காணத் தொடங்கினன். எல்லாருக்கும் உள்ளது போல நியாயமான கனவாய்த்தான் எனக்கும் பட்டுது. சாதகத்திலை ஏழில் செவ்வாய் என்னை அலைக்கழிச்சுப் போட்டுது. கடைசியிலை இந்த மனுசன்தான் அகப்பட்டுது.

என்ர அப்பா றிட்டயட் பிரின்சிப்பல். அம்மா றிட்டயட் ரீச்சர். மூத்தண்ணை லண்டனிலை டொக்டர். சின்னண்ணை கனடாவிலை இன்சினியர். நாங்கள் பெரிய படிச்ச குடும்பம். இவரை நான் போட்டோவிலதான் பார்த்தது. சுமாராய்தான் இருந்தார். புறோக்கர் மூலம்தான் வந்தது. பொருத்தம் ஒன்பது உத்தமம் எண்டு வினாசித்தம்பி சாத்திரி சொன்னதோட முடிவாய்ப் போச்சு. இவற்றை சாதகப்படி இவர் சனங்களோட புளங்கி பணம் தேடுறவராய் இருப்பர் எண்டு சாத்திரி சொன்னார். நான் ரெலிபோனிலை கதைக்கேக்க கேட்டன் என்ன வேலை செய்யிறியள் எண்டு. றிங்காலே வச்சிருக்கிறன் பிசினஸ் அந்தமாதரி எண்டார். றிங்காலே எண்டால் சுப்பர் மார்கற்றோ எண்டு கேட்டன். கொஞ்ச நேரம் பேசாமல் இருந்திட்டு அதுமாதிரித்தான் எண்டார்.

நிறையக் கனவுகளைச் சுமந்து கொண்டு வந்து இறங்கினன். எல்லாமே புஸ் வாணமாய்ப் போச்சு. இஞ்ச வந்து பாத்தா அது பெட்டிக்டை. என்ர படிப்பு, என்ர குடும்பக் கவுரவம் எல்லாமே காத்திலை கலைஞ்சு போனதாய் உணர்ந்தன்.

கலியாணத்துக்குப் பிறகுதான் உணர்ந்தன். இவரிலை நான் தோத்துப் போனன் எண்டு. இவர் வெறுமனே மரபணுக்ளைப் பரப்ப என் கருப்பையைப் பயன்படுத்துகிறவர் மட்டுந்தான். அதனாலை எனக்கு கிடைச்சது அனுசியா ஒண்டுதான்.

எங்கயாவது படிச்சு வேலைக்குப் போவமெண்டா. அதைப்பற்றி மூச்சுக் காட்டக் கூடாது. அக்கம் பக்கத்திலை என்ர மரியாதை போகும் எண்டு கறாறாய் நிண்டிட்டார்.

அழுது குழறி சண்டை பிடிச்சு, சாப்பிடாமல் கிடந்து பார்த்தன். மனுசன் ஒண்டுக்கும் மசிஞ்சு குடுக்கயில்லை. ஏழில் செவ்வாயாலை காட்டு மிராண்டியைக் கட்டிக் கொண்டனெண்டு நினைச்சு மனசைத் தேற்றிக் கொண்டன்.

என்ர ஆளுமையை இந்தாளிட்டக் காட்டி தேவைகளை ஒண்டும் பெரிசா சாதிக்க முடியேல்ல. அந்தக் குறையை ஒரு ஆம்பளைப் பிள்ளையைப் பெத்து முடிப்பமெண்டா அது பேடாய் வந்து பிறந்திட்டுது. அதை வச்சாவது அப்பாவைக் குத்திக்காட்டி என்ர தாகத்தைத் தீர்ப்பமெணடா அதுவும் சரிவராது போலக் கிடக்குது.

உன்ர அப்பாவாலை எனக்கு ஒரு பிரயோசனமும் இல்லை. நீயும் அப்பிடி இருந்திடாதையம்மா. உன்னை நம்பித்தான் இருக்கிறன். நீ டொக்டருக்குப் படிச்சுத்தான் என்னைக் கரை சேர்க்க வேணும் எண்டு அழுது மூக்குச் சிந்திப் பார்த்தன் பிள்ளையாலும் ஒரு பிரயோசனமும் இல்லைப் போல கிடக்கு.

இதுகளை என்ர ஆழ்மனசு சொன்னாலும் வெளிப்பாட்டுக்கு என்ர பிள்ளையைப் படிப்பிக்கிறதிலை குறியாய் இருந்தன். அதுவும் டொக்டருக்கு படிப்பிக்க வேணும் எண்டுறதுதான் என்ற கனவிலும் நினைவிலும் கலந்து கிடக்குது. அதுக்காக நான் படாத பாடெல்லாம் பட்டன். ஜேர்மன் தமிழ்க் கோயிலுகளுக்கெலாம் நேத்தி வைச்சுப் போய் வந்தன்.

ஒண்டு சரிவரயில்லை அவளும் என்ர கனவுகளைக் கலைச்சுப் போட்டாள். எல்லாத்திலையும் தோத்துப் போன எனக்கு யோசிக்க யோசிக்க பைத்தியம் பிடிக்கும் போல கிடக்கு. இப்ப இவள் சொல்லுற மாதிரி செய்து போட்டா நான் வெளியிலை தலை காட்ட முடியாது. என்ன செய்யப் போறனோ தெரியேல்லை.

*

**நா**ன்தான் அனுசியா முதலிலை தங்கடை கதையைச் சொன்னவைதான் என்ர அப்பா அம்மா. எனக்கு இப்ப இருவது வயசாகுது. என்னுடைய அம்மா மாதரி யாருக்கும் அம்மா இருக்கக் கூடாது எண்டு நினைக்கிறன்.

அம்மாவின்ர ஆக்கினையாலை. இல்லையில்லை அதை ஆக்கினை எண்டு சொல்லேலாது. சித்திரவதை எண்டுதான் சொல்லலாம். எனக்குத் தெரிஞ்ச நாளிலை இருந்து அம்மாவின்ர வாயிலை வாறதெல்லாம் படி.. படி. படிதான்.

சின்ன வயசிலை எனக்கும் சந்தோசமாகத்தான் இருந்தது. நாள் செல்லச் செல்ல எனக்கு வெறுத்தே போச்சுது. காலையிலை வெள்ளென எழுப்பி படிக்கச் சொல்லி சொல்லுவா. காலையிலை படிச்சால்தான் மனதிலை நிக்குமென்பா.

சாப்பாட்டு மேசைக்குப் போனா புத்தகத்தைக் கொண்டு வா என்பா. புறோச்சினிலை(பாண்) மம்மலாட (ஜாம்) பூசித்தந்திட்டு படி படி என்பா. பள்ளிக்கூடத்துக்கு பஸ்சிலை போகும்போது. எங்கையுமே பார்க்க விடமாட்டா. பிராக்குப் பார்க்காமல் புத்தகத்தை எடுத்துப் படியென்பா. மிற்றக்குக்கு (மத்தியானச் சாப்பாட்டுக்கு) வீட்டை வந்தாலும் ஒரே படி படிதான். நான் பயத்தலை மத்தியானம் வாறதை தவிர்த்தன். அம்மா காரணம் கேட்டால் பொய் சொல்லத் தொடங்கினன். எனக்கு வேற வழி தெரியேல்ல.

வகுப்பிலை பிள்ளையள் வேர்ன்சேனிலை(தொலைக்காட்சி) அந்தப் புறோக்கிறாம் பார்த்தியா இந்தப் புறோக்கிறாம் பார்த்தியா எண்டு கேட்டால் எனக்கு அழுகை அழுகையாய் வரும். வீட்டிலை அம்மா ரிவி போட விடவே மாட்டா. அதுபார்த்தால் நீ கெட்டுப் போவாய். படிக்க மாட்டாய் எண்டு பேசுவா.

அதுவும் சனி ஞாயிறு எண்டால் நான் வீட்டிலையே இருக்கேலாது. பரதநாட்டியம் படி எண்டா. அவவின்ர நண்பியின்ர மகள் பரதநாட்டியத்துக்காக சங்கீதம் படிக்கிறாவாம். படிச்சா நல்லதாம் எண்டு சொல்லி சங்கீதம் படியெண்டா. அம்மாவின்ர சொந்தக்காரரின்ர பிள்ளை ஒண்டு வயலின் படிக்குதாம் எண்டு என்னையும் வயலின் படிக்க அனுப்பினா. பக்கத்து வீட்டு ஆரதி கீபொட் பழகுறா எண்டு கேள்விப்பட்டு கீபோட் வகுப்பு அனுப்பினா. அதோட தமிழ் வகுப்புக்கும் போக வேணும்.

எனக்கு டொச் பள்ளிக்கூடத்திலை படிக்கிறதோட தமிழ் படிச்சா காணும் எண்டுதான் நினைக்கிறன். அம்மா விட்டால்தானே.

இதைவிட எங்க பரதநாட்டிய போட்டி, சங்கீதப் போட்டி, பேச்சுப் போட்டி, திருக்குறள் போட்டி நடந்தாலும் என்னைக் கேளாமலே விண்ணப்பம் அனுப்புவா. பிறகு அதுக்கும் ஆயுத்தம் செய்ய வேணும்.

அம்மா என்னாலை முடியேல்ல சிலதை விடுவம் அம்மா

என்ன விசர்க்கதை கதைக்கிறாய். ஆரதி படிக்கிறாள். அகல்யா படிக்கிறாள். லக்சி படிக்கிறாள் உனக்கென்ன பிரச்சனை பேசாமல் படி என்பா. அதுகளின்ர வீடுகளிலை போய்ப்பார் எத்தின பொகாலுகள் (வெற்றிக்கிண்ணம்) அடுக்கி வைச்சிருக்குதுகள்.

நான் எப்ப வீட்டுக்கு வந்தாலும் ரெலிபோனிலை தன்னுடைய நண்பிகளோட என்ர படிப்புகளைப் பற்றித்தான் கதை. அவை என்ன சொன்னாலும் அதுகளை நானும் செய்ய வேணும் எண்டு அடம் படிப்பா. காலையிலும் இரவிலும் ஒரு நாளைக்குப் பத்து தரம்ஞ். நீ டொக்டாய் வரவேணும். நீ டொக்டராய் வரவேணும் எண்ட புராணம்தான். பள்ளிக்கூடாத்தாலை வந்தால் நஹ்கெல்வ (ரியூசன்) வேற. வேரியன்(விடுமுறை) விடும்போது யாராவது சொந்தக்காரர் வீட்டை போவம். அம்மாவின்ர ஒண்டவிட்ட அக்கா எனக்கு பெரியம்மா முறை. அங்கைதான் அதிகமாகப் போவம்.

அப்பாவின்ர தங்கச்சி சீதா அத்தை பிரான்சிலை இருக்கிறா. அங்க போறதை அம்மா ஏதோ காரணம் சொல்லித் தட்டிக் கழிச்சுப் போடுவா.

எனக்கு சின்ன வயசிலை ஒண்டுமே விளங்கயில்லை. இப்ப இப்பதான் எல்லாம் விளங்குது.

பெரியம்மா வீட்டை பேர்லினுக்குப் போக காரிலைதான் போவம். அறுநூறு கிலோமீற்றர். காரிலை அப்பாவை றேடியோ கேக்க விடமாட்டா. தமிழ், சங்கீதம், திருக்குறள், பேச்சு போட்டிக்கான பேச்சு எண்டு எல்லாம் அடுக்கி வைச்சிருப்பா. தொடர்ந்து அதைச் சொல்லு இதைச் சொல்லு எண்டு கேட்டுக் கொண்டே வருவா.

பேச்செல்லாம் கசெற்றிலை றைக்கோட் பண்ணிக் கொண்டு வருவா. பேச்சைப் போடுங்கோ. திருக்குறள் சீடியைப் போடுங்கோ எண்டு அப்பாவிட்டை சொல்லிப் போடுவா. நான் கேட்டுக் கொண்டே வரவேணும்.

பெரியமமா வீட்டை போனால். பெரியம்மாவின்ர மகள் கல்யாணி அக்கா ரிவியிலை என்னையும் கூட்டிவைச்சு மானாட மயிலாட பார்ப்பா. அம்மா கடைக்கண்ணாலை பார்த்துக் கொண்டேயிருப்பா. இரவு படுக்கும்போது பல்லை நெருமிப் பேசுவா.

அடுத்தநாள் கல்யாணி அக்கா கேட்டால் நான் போகமாட்டன். பெரியம்மா வீட்டிலை படிக்கவெண்டு புத்தகங்கள் கொண்டு வந்திருப்பா. அங்கையும் படிப்புதான். எனக்கு இப்ப வேரியன்(விடுமுறை) போகவே வெறுப்பாய் இருக்கு.

அம்மாவின்ர விருப்பம் ஒரு பக்கம். உறவுக்காரரின்ர பிள்ளைகளுக்கு மேலாக அல்லது அவையளைப்போல வரவேணும் எண்ட வரட்டுக் கௌரவம் ஒரு பக்கம். ஜேர்மனியிலை வந்தாப் பிறகு ஏற்படுத்திக் கொண்ட நண்பர் வட்டத்தில தான் சோட போகக்கூடாது எண்ட எதிர்பார்ப்பு ஒரு பக்கம். அப்பாவின்ர ஆட்களைவிட தான் மேல எண்டு காட்டவெண்டு சொல்லிப் பலபக்க எறிகணைகளாலை அம்மா என்னைச் சித்திரவதை செய்தா.

இரவு சாப்பிடும்போதே களைச்சு தூங்கி விழுவன். சிலவேளை சாப்பாட்டு மேசையிலேயே நித்திரையாய் போவன். தலையைப் பிடிச்சு உலுக்கி பேசுவா. கழுதை படிக்கிற வயசிலை தூங்குமூஞ்சி மாதிரி நித்திரை கொள்ளுறாய். போய் படியடி.

ஏனப்பா இந்தப் பிஞ்சுக் குழந்தையை போட்டுக் கரிச்சுக் கொட்டுறாய் போய் படுக்கட்டும் விடன் எண்டு அப்பா சொன்னால் போதும்.

வாய் பொத்திக் கொண்டு பேசாமல் போய்ப் படுங்கோ உங்கட பரம்பரையிலை ஆர் படிச்சவை. உங்களுக்கு படிப்பின்ர அருமை தெரியுமோ. பேச வந்திட்டார்.

பெரியண்ணையின்ர மகள் தமிழினி டொக்டர். சின்னண்ணையின்ர மகள் யாழினி டொக்டர். உவள் டொக்டராய் வராட்டி என்ர மானம் போயிடும்.

அப்பா தன்ரை இயலாமையை நொந்து கொண்டு என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு படுக்கப் போயிடுவர்.

நான் அறையுக்க போய் லைற்றை எரிய விட்டு புத்தகத்தை வைச்சுக் கொண்டு இருப்பன். படிக்க மாட்டன். அம்மாவின்ர அதீத கெடுபிடியாலை நான் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கினன். பொய் சொல்லத் தொடங்கினன். ஏமாற்றத் தொடங்கினன். எல்லாத்துக்கும் மேலால எனக்குப் படிப்பெண்டாலே கசக்கத் தொடங்கியது.

ஆரம்பத்தில் தரத்தில் முன்வரிசையிலிருந்த நான் என்னையுமறியாமலேயே கீழே இறங்கத் தொடங்கினன். எனக்கு இன்வோமற்றிக் (கணணித்துறை) படிக்கத்தான் விருப்பம். அம்மாவின்ர ஆக்கினையால மெடிசின் படிக்க வெளிக்கிட்டு சரியான புங்ற்(புள்ளிகள்) எடுக்க முடியவில்லை. அதுதான் அம்மா கோபத்திலை பேசுறா.

எனக்குப் இருபது வயசாச்சு. என்ர விருப்பப்படி முடிவெடுக்க எனக்கு உரிமையிருக்கு. நான் வெளியிலை போயிருந்து இன்வோமற்றிக் (கணணித்துறை) படிக்கப் போறன்.

என்ன இன்வோமற்றிக் படிக்கப் போறியோ அதுமட்டும் நடக்காது. நீ டொக்டராய் படிக்கேல்லையெண்டால் நான் எப்பிடி வெளியிலை தலை காட்டுறது. எல்லாம் இந்த மனுசனாலை வந்தது. படிக்காத குடும்பத்திலை வாழ்க்கைப்பட்டு பிள்ளையைப் பெத்ததாலை. அதுவும் பெயிலாப் போச்சு.

அம்மா அழுது குழறி என்னைப் போட்டு அடிச்சா. தனது எதிர்பார்ப்பு தோற்றுப் போனதை அம்மாவால் இப்படித்தான் காட்ட முடிஞ்சிது.

எல்லாத்துக்கும் நீங்கள்தான் காரணம். அக்கறைப்படுறன் எண்டு சொல்லி என்னைப் பிழையான வழிக்கு கொண்டு போட்டியள். எதுவும் அளவோடதான் இருக்க வேணும்.

நான் வளர்ந்திட்டன். எனக்கு யோசிக்கத் தெரியும். பிழையான வழிக்குப் போகமாட்டன்.

எங்கட குடும்பத்திலை இல்லாத பரிசுகேடடி இது.

அம்மா நீங்கள் எனக்குச் செய்த ஒரே நன்மை. தமிழ் படிப்பிச்சது. எனக்கு எங்கட கலாச்சாரம் பண்பாடு எல்லாம் தெரியும். நீங்கள் இருபத்தோராம் நூற்றாண்டுக்கு உங்களை மாற்றிக் கொள்ளுங்கோ.

என்னெண்டாலும் படி பிள்ளை. அதை இங்கையிருந்து படியன். அப்பா வாஞ்சையுடன் கேட்டார்.

எனக்கும் விருப்பம் இல்லைத்தான் அப்பா. ஆனால் இங்கையிருந்தா அம்மாவோடயிருந்து படிக்கேலாது. வோகன்எண்டவுக்கு(வாரவிடுமுறை) வந்து போறன். என்னைத் தடுக்காதேயுங்கோ.

அனுசியா அமைதியாக வெளியேறினாள். தோற்றுப்போன பாரதி ஜீரணிக்க முடியாமல் இடிஞ்சு போனாள். சிவலோகன் தன் இயலாமையுடன் பிள்ளையைப் பிரிஞ்ச சோகத்திலை அனுசியா போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அளவுக்கு மிஞ்சினால் வரம்புடைதல் வயலில் மட்டுமல்ல வாழ்க்கையிலும்தான்.

(rajah27@hotmail.com)

# தடை முகாம்



**நவஜோதி யோகரட்னம் இலண்டன்**

உணர்வுகள் ஒன்றாகியதால் அவரில் ஏற்பட்ட ஒரு இனந்தெரியாத அன்பு. அவரின் திறமைகளை என்னால் இனங்காண முடிந்தது. அவரிடம் பிரகாசித்த மனித நேயம். எல்லோரிடமும் அன்பாகப் பேசும் அந்தப் பண்பு. அவரின் அறிவாற்றல். அவரின் குரல். அவரின் தோற்றம். அத்தனையும் அந்தக் காரியாலயத்தில் அவர்தான் எனக்கு மிடுக்கானவர் போல் இருந்தார். அவருக்கு நான் தான் அவரது மன உணர்வுகளை புரிபவளாக இருந்திருக்க வேண்டும். அன்பானவளாகவும் தெரிந்திருக்கவேண்டும். அழகானவளாகவும் இருந்திருக்க வேண்டும். இருவரும் அன்பால் சிறைப்பட்டோம். திருமணமாகி இரு குழந்தைகளையும் பெற்றெடுத்தோம்.

ஒரு நாள் இரவு. மங்கிய வெளிச்சத்தில். அந்தச் சயன அறையில். அந்தரங்க அமைதியான சூழ்நிலையில். அவரது மார்பில் சித்திரம் வரைந்துகொண்டிருந்த வேளை. மௌனமாகி தன் விழிகளால் பேசிக் கொண்டிருந்தார். ஆத்மார்த்தமான இரகசியக் குரலில் அவர் என்னைக் கேட்டார்.

சந்தோஷமாக இருக்கிறீயா?

முகம் மலர்ந்த சிரிப்போடு என்னைக் கேட்டார். என்னைக் கட்டி அணைத்தபடிதான். அந்த இறுக்கம். அந்தச் சிரிப்பு. இன்றும் எனக்கு அலை மோதுகிறது. ஏன் அப்படிக் கேட்டார் என்று இன்னும் யோசிக்கிறேன்.

ஓம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்.

நமது இரு குழந்தைகளோடு, அன்றுதான் நாம் இருவரும் மகிழ்ச்சியாக இருந்த நாளாக இருக்க வேண்டும். அன்று இரவுதான் வாழ்வின் கொடூரமான நாள் ஆரம்பித்திருந்தது. இராணுவத்தினர் வந்து அவரைக் கைது செய்தார்கள்.

அவர் என்ன குற்றம் செய்தார் என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. விசாரணைக்காகக் கூட்டிச் சென்றவர் இன்று வரை விளக்க மறியலில் தான். வெலிக்கடைச் சிறைச்சாலையில்தான் வைத்திருக்கிறார்கள். சந்தேகம், விசாரணை என்ற மாயையில் சிறையில் இருக்கும் எத்தனையோ ஆண்களை நினைத்துப் பார்க்கிறேன். அவர்களை நேசிக்கின்ற ஒவ்வொரு பெண்களும் என்போன்று நம்பிக்கையில் தான் வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

நீண்ட அடுக்குகளாக கட்டில்கள் போடப்பட்டிருக்கின்றன. நீளமான பெரிய கட்டிடம். லண்டனில் சிறைக் கைதிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கும் 'ஒக்கிங்ரன்' தடை முகாம் அது. அதிகாரி போட்ட சட்டம். அங்குள்ள கட்டிலில் நான் படுத்திருக்கிறேன். என்னோடு பல நாட்டுப் பெண்கள் அங்குள்ள கட்டில்களில் இருக்கிறார்கள். அவர்களும் என்போன்று மண்டையைப் பிசைந்துகொண்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது. அந்தக் கட்டில்கள்தான் மூளையைப் பழுதாக்கும் தடைமுகாம் வாழ்க்கை என்று நினைக்கிறேன்.

நான் முழிச்சிக் கொண்டுதான் படுத்திருக்கிறேன்.

என்னைப் போல் வேறு தமிழ் கைதிகளும் இருக்கிறார்கள். என்னைப் போலவே பயந்த கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன குற்றங்கள் செய்தார்களோ தெரியவில்லை. தடைமுகாமில்கூட கைதிகள் போலல்லவா அந்த அதிகாரிகள் எம்மை நடத்துகிறார்கள். என்னால் எவரைப் பற்றியுமே சிந்திக்க முடியவில்லை. லண்டன் எனக்குப் புதிய நாடு. புதிய சூழல். மொழி, கலை, கலாச்சாரம் எல்லாமே எனக்குப் புதிதுதான்.

லண்டனுக்கு வந்து இரண்டு மாதங்கள் தான் ஆகின்றன. எனது பத்திரங்களை கையளித்துக் கொள்வதற்காக அவர்களிடம் வந்தபோது என்னை இந்தத்தடை முகாமில் தடுத்து விட்டார்கள். அந்தத் தொலைககாட்சி இருக்கிற மண்டபத்தில்தான் நாம் எல்லோரும் இருக்க முடியும். அங்கு நாம் ஒருவரோடு ஒருவர் கதைத்தக் கொள்ளலாம்.

அதிகாரிகள் பூட்டி வைத்த கமராக்களினூடாக நோட்டம் விட்டுக்கொண்டிருப்பார்கள். எங்களின் அங்க அசைவுகளைக் கூட நோட்டம் விட்டுக் கொண்டிருப்பார்கள். இலங்கை ஆட்கள் என்றால் இன்னும் கேவலமான கவனம். நாங்கள் என்ன கொலைக் குற்றமா செய்தோம்? அகதிகள் தஞ்சம் தானே கேட்டோம்.

இவவைப் பார்க்க தமிழ் பெண் போல இருக்கு. எப்படிக் கதைப்பது? பயமாக வேற இருக்குது. கட்டிலில் இருந்தாலும் சுற்றி சுற்றிப் பார்க்கிறாங்கள். பரவாயில்லை கதைத்துப் பார்ப்போம்.

நீங்கள் எந்த நாடு?

இலங்கை.

மனதிற்குள் மகிழ்ச்சி வருகிறது. ஆனால்...

அப்போ நீங்கள்?

இலங்கைதான்.

இந்தத் தடுப்பு முகாமுக்கு வந்து கன நாட்களோ?

பத்து நாட்கள் ஆகின்றன.

நீங்கள் வந்து?

பன்னிரண்டு நாட்கள்.

உங்கட பெயர் என்ன?

'மிஸிஸ் கமலா சுரேந்திரன் கம் இயர் குயிக்ளி' அங்குள்ள பெண் அதிகாரி அதட்டும் குரலில் கத்தினாள். என்னுடன் கதைத்துக் கொண்டிருந்த பெண் பாய்ந்து எழும்பிப் போய்விட்டாள்.

நானும் சற்று வெருண்டுபோய் இருந்தேன்.

நான் ஏன் லண்டனுக்கு வந்தேன்? எனது இரண்டு பிள்ளைகளை பரிதவிக்க விட்டுவிட்டு வந்தேனா?... இல்லை இல்லை. என்னைப் பெற்ற தாய் என்னைவிட என் குஞ்சுகளைக் கண்காணிப்பார். என் கணவர் வெலிக் கடைச் சிறையில்' என்ன பாடு படுகின்றாரோ!

லண்டனில் டாக்டராக வேலை பார்க்கும் என் உடன் பிறந்த அண்ணாதான் என் மன வேதனைகளை அறிந்து லண்டனுக்கு அழைத்திருந்தார். என் அண்ணா என் மீது உயிரையே வைத்திருந்தார் என்பது எனக்குத் தெரியும். இப்போதும் அப்படித்தான். அவரது திருமணத்தின் பின்னர் எதனையும் வெளிக்காட்டமுடியாது வேதனைப்படுவதை என்னால் உணர முடிகின்றது. அண்ணியும் டாக்டர்தான். லண்டன் வைத்தியசாலையில் வேலை பார்க்கின்றார்.

தடைமுகாம் மண்டபத்தில் ஓடுகின்ற நினைவுகள் நீர் ஓடைபோல் நெளிந்து கொண்டிருந்தன. என் கண்கள் கத கதப்பான நீரை உறுத்துவது போலிருந்தது. ஆழ்கடலில் சீறி எழும் அலைபோன்ற எனது ஆத்ம வீரமும் துணிச்சலும் அடங்கிப்போய் கிடந்தது. என்னுள் எழுகின்ற அந்த சூடான பெருமூச்சு என்னுள் புகையாகிச் சுழல்கின்றது.

எனது துணைவரை திடீரென வந்து கைதாக்கித் திகலூட்டிய இரவு வேளை போன்ற இன்னொரு இரவு வேளை. என் பிளைளைகளோடு நான் நித்திரையாகவிருந்தேன். எங்களை விசாரிக்கவேண்டுமென்று பொலிசார் அழைத்துச் சென்றார்கள்.

அங்கே கொண்டு சென்ற எம்மை என் துணைவர் முன் நிறுத்தினார்கள். என்ன கொடுமை! அங்கே என் துணைவர் நின்ற கோலத்தை இன்னும் என் கண்களால் நம்பமுடியவில்லை. எங்கள் முன்னால் அவரை துன்புறுத்தினார்கள். அவர்களின் சப்பாத்துக் கால்களினால் அவரை அடித்து உதைத்தார்கள்.

எமது பிள்ளைகள் கதிகலங்கி வீறிட்டு அழுதார்கள். என்ன அநியாயமான செயல் இது! எனது இரத்த நாளங்கள் கொதித்துக் கொண்டிருந்தன. எம்மால் அந்த அரக்க மனிதர்கள் முன்னால் என்னதான் செய்ய முடியும்?... நானும் பிள்ளைகளும் அணைந்தபடி அநாதைகள்போல் அவதிப்பட்டு அழுதோம். பின்னர் திருப்பி எங்களை எமது வீட்டில் கொண்டுவந்து விட்டார்கள். அன்றிலிருந்து என் பெற்றோருடன் என்பிள்ளைகளோடு வாழ்ந்துகொண்டிருந்தேன்.

திரும்பவும் ஒரு நாள் அந்தப் படையினர் பிசாசுகள் மாதிரி வந்தார்கள். அவர்களைக் கண்டதும் எனது பிள்ளைகள் பெரிய சத்தம் போட்டு பயந்து அழத்தொடங்கினார்கள். எனது பெற்றோர்கள் நடுங்கித் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏய் இப்போது ஏன் கத்தித் தொலைக்கிறீர்கள்?

எனது பிள்ளைகளைப் பார்த்து உறுமினார்கள். ‘நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம். உங்கள் அம்மாவைத்தான் அழைத்துக் கொண்டு போகப் போகிறோம். விசாரித்துவிட்டு விரைவில் கொண்டு வந்து விடுவோம்’ துப்பாக்கிகளை தாங்கிய வண்ணம் நின்ற பொலிஸ் படையினரில் ஒருவனின் கடுமையான குரல் கணீரிட்டது.

என்னை கூட்டிச் சென்று அந்த ‘ஜீப் வாகனத்தில்’ ஏற்றினார்கள். எனக்கு எதிராகத் துப்பாக்கிகளைத் தாங்கிய வண்ணம் அந்தப் படையினர் அமர்ந்திருந்தனர்.

நான் கூனிக் குறுகி தலையைக் குனிந்த வண்ணம் நடைப்பிணமாக இருந்த நிலை... அவர்கள் ஏதோ தங்களுக்குள் குசு குசுத்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் உடம்பு கிடுகிடுத்து நடுங்குவது போல் இருந்தது. அந்த ஜீப் வண்டி நெடுந்தூரமாக ஓடுகிறது. ஓடிக்கொண்டே இருக்கிறது.

இடையில் அந்த ஜீப் வண்டி நிறுத்தப்பட்டது.

‘சத்தம் போட்டியோ இது பதில் சொல்லும்’ அந்தப் படையினரில் ஒருவன் துப்பாக்கியைச் சுட்டிக் காட்டினான். அது ஒரு காடாக இருக்கவேண்டும். என் தலை மின்விசிறி போல் சுற்றியது. நான் அதிர்ந்து போய் அமைதியாக இருந்தேன்.

எனது உடம்பு பட படத்துக்கொண்டிருந்தது. இதயத்தின் வேகமான ஒலி காதில் அதிர்ந்துகொண்டிருந்தது.

ஒருவன் வந்து என்னை இங்காலே வா என்று கொண்டே இழுத்துச் சென்றான். ஆ. . என்ன கொடிய வேதனை என்னை வேதனைப் படுத்தி என் உடலை அனுபவித்துக் கொண்டிருந்தான். பூமிப்பந்தம் சுற்றுகிறது தலை கிறு கிறுத்து பல நிறங்களாகிக் கொண்டிருந்தன.

‘ஐயோ இது என்ன கொடுமை!’ என்று குழற வேண்டும் போலிருந்தது. ஆனால் என்னால் அப்படியெல்லாம் அழவும் முடியவில்லை. எதுவுமே செய்ய முடியவில்லை. ஒருவன் மட்டுமா என்னுடன் மிருகத் தனமாக நடந்துகொண்டான்?...

கேவலம் இவர்கள் பெண் சகோதரிகளுடன் வாழ்ந்தார்களா? ஒரு தாயை எப்படி மதித்திருப்பார்கள்? ஒரு மனைவியின் மனதை எப்படியெல்லாம் நோகடித்திருப்பார்கள்?...

பெண்கள் ஆண்களைவிட மனவலிமையில் கூடியவர்கள் என்பார்களே! அதனால்தானோ என்னவோ இன்றும் நான் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இப்போது இந்த தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டும் இருக்கிறேன்.

உடைந்து நொறுங்கிய கண்ணாடி போன்று ஊசலாடும் என் உடம்பு மீண்டும் என் பெற்றோர் பிள்ளைகளோடு சேர்க்கப்பட்டது. எல்லாமே இழந்த என் உடற் கவர்ச்சியும் உடற் கட்டும் பெருவலி எடுத்துக் குமுறியது. சீ என்ன வாழ்க்கை. மனம் அருவருத்துக் கொண்டது. என் உருவம் அனாதையாகி அவதிப்பட்டது.

என் தாயாரால் இரத்தம் கொதித்து அழ மட்டும்தான் முடிந்தது. லண்டனில் இருக்கும் என் அண்ணா ஒவ்வொரு வாரமும் தொலைபேசி மூலம் எமது சுக துக்கங்களை விசாரித்து ஆறுதல் தருபவர். என் வாழ்வையே செழுமைப்படுத்தியவர் என் அண்ணாதான். என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்த அண்ணாவுக்கு எப்படி இதனை எடுத்துக் கூறுவேன்?...

சிறுவயது முதல் நானும் என் அண்ணாவும் அடிக்கடி சண்டைகள் பிடிப்போம். அவை அன்புச் சண்டைகள்தான். ஆனால் அண்ணாவின் தலைவலியைக்கூட என்னால் தாங்கமுடியாது. அண்ணாவும் என் மீது அப்படித்தான்.

பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த என் இளமையான வயதில் பெண்பிள்ளைக்குரிய அமைதியான பக்குவம் அப்போது எனக்குக் கிடையாது. எந்த நேரமும் துள்ளிக் குதித்தபடிதான் ஓடித்திரிவதுண்டு. சும்மா நடந்தாலும் துள்ளல்தான். துலாக் கிணற்றில் தண்ணீர் அள்ளினாலும் துள்ளிப் பாய்ந்து தான் தண்ணீர் அள்ளுவது.

‘கொஞ்சம் அமைதியாக இரடியம்மா’ என்று அண்ணா அடிக்கடி கூறுவார். ஒருநாள் எமது வீட்டுக் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தவேளை துள்ளிப் பாய்ந்து நான் துலாக் கயிற்றை இழுத்துத் தண்ணீர் அள்ளியபோது எனது கால்கள் இலக்குத் தவறிவிட்டன. பிறகு என்ன ‘தொம்’என்று கிணற்றுக்குள் என் உடம்பு மூழ்கி விட்டது. தண்ணீருள் நான் மூச்சை அடக்கிவிட்டேன். ஒரு தடைவ நீருக்குள் மூழ்கி எழும்பியதுதான் எனக்குத் தெரியும். அண்ணாதான் வீட்டிலிருந்தார். எனது பெரும் வீரிட்ட சத்தத்தோடு கிணற்றின் எதிரொலியும் சேர்ந்து அண்ணாவை அதிரவைத்திருக்க வேண்டும். ஏதோ நல்ல காலம் நான் துலாவின் கயிற்றைக் கைவிடவில்லை.

இறுக்கிப் பிடித்தபடிதான் இருந்தேன். அண்ணா வந்து என்னைத் தூக்கிக் காப்பாற்றிய வேகத்தை என்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை.

என்னைக் கன்னங்கள் பூத்துச் சிவக்க முத்தமிட்டதும் என்னைக் கட்டி அணைத்தபடி 'தங்கச்சி தங்கச்சி'என்று பதைபதைத்து அழுததையும் எப்படி என்னால் மறக்க முடியும். எப்படி எல்லாம் நாங்கள் பாசமாக வளர்ந்திருந்தோம் எல்லாம் நினைவில் வந்து வதைபடுகிறது.

வீட்டில் தொலை பேசி அலறிக்கொண்டிருந்தது.

அண்ணாவின் தொலைபேசி அழைப்புத்தான் அந்தநேரங்களில் வருவதுண்டு. அன்று என்னால் தொலைபேசியில் அண்ணாவோடு கதைக்கமுடியாது மனம் விம்மிக்கொண்டிருந்தது. அம்மா எல்லாவிடயங்களையும் அண்ணாவுக்குக் கூறியிருக்க வேண்டும். திடுக்கிடும் செய்திகளினால் அண்ணா நிலை குழம்பிப்போயிருக்க வேண்டும். லண்டன் வந்த பிறபாடுதான் அண்ணா திருமணமும் செய்திருந்தார். அவரது துணைவியும் லண்டனில் டாக்டராக இருந்ததால் அவரது திருமணத்தால் நாம் எல்லோரும் மகிழ்ச்சியாகவே இருந்தோம்.

'தங்கச்சி' மீண்டும் லண்டனில் இருந்து தொலைபேசி அழைப்பு.

என்ன அண்ணா?

தங்கச்சி ஒன்றுக்கும் யோசித்துக் கவலைப்பட வேண்டாம். அப்பா அம்மாவுடன் பிள்ளைகளைப் பாதுகாப்பாக விட்டுவிட்டு நீ லண்டன் புறப்படுவதற்கு ஆயத்தம் செய். நீ மேலும் உங்கு இருப்பது நல்லதல்ல.

எப்படி அண்ணா அவரின் நிலைமைகளும் எனக்குத் தெரியவில்லை. பிள்ளைகளையும் இப்படி அந்தரத்தில் விட்டுவிட்டு தங்கச்சி நீ இங்கு வந்ததின் பின்னர் பிள்ளைகளைப் பற்றி நாம் யோசிக்கலாம். முதலில் நீ பாதுகாப்பாக இருக்கவேண்டும். நீ இங்கு வருவதற்கான எல்லா ஆயத்தங்களையும் மேற்கொள்கின்றேன்.

அண்ணாவின் வார்த்தைகள் பெரியதொரு மன ஆறுதலையும் நம்பிக்கையையும் தந்தன. லண்டனுக்கு அவர் வந்து எட்டு வருடங்களுக்கு மேலாகின்றன. டாக்டராக வேலை செய்து நல்ல வசதியாகவும் இருக்கிறார். அதனால் அவர் லண்டனுக்கு அழைப்பதில் சிரமம் இருக்க வில்லை. இலங்கையில் சுனாமியின் தாக்கமும் சற்றுச் சாதகமாக அமைந்தது என்று கூறலாம்.

லண்டனுக்கு வந்து அண்ணாவீட்டில்தான் தங்கியிருந்தேன். அண்ணி நான் வந்த முதல் நாட்களில் அன்பாகக் கதைத்தார். பின்னர் வேலை என்றே போய் விடுவார். தினமும் தனது வேலைகளைக் கவனித்துவிட்டு தனது அறையினுள் இருந்து விடுவா.

தங்கச்சி சாப்பிட்டியா?

அண்ணா வேலைக் களையோடு வந்தாலும் கண்டிப்பாக என்னைக் கேட்பார். ஏதாவது கதைத்து எனது மனதைக் கலகலப்பாக்க முயலுவார்.

அண்ணி நான் வீட்டிற்கு வந்த சில நாட்களிலேயே முகத்தை வேறுபக்கம் திருப்பத் தொடங்கிவிட்டா. ஏன் என்று எனக்குப் புரியவில்லை. எத்தனையோ குடும்பங்கள் எமது நாட்டுப் பிரச்சனைகளால் புலம் பெயர்ந்து வந்த தமது பெற்றோர், சகோதரர்கள், உறவினர்களுக்கு தம்மால் முடிந்த உதவிகளால் பங்களிப்பைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். சுனாமிப் பேரலைகள் வந்துபோது உலகமே உதவி செய்யவில்லையா? எமது உள்நாட்டுப் பிரச்சனைகள் வேறு. உதவிகள் உரியவர்களுக்குச் சென்றடையவில்லை என்பது வேறு பிரச்சனை. ஆனால் உலக மக்களின் அந்த மனித நேயத்திற்கு நாம் தலை வணங்க வேண்டும்.

ஆசிரியத் தொழிலோ அல்லது டாக்டர் தொழிலோ செய்யும்போது அடிப்படையில் அவர்களுக்கு மனித நேயம் இருக்க வேண்டும். உளவியல் ரீதியான மனநிலைகளைப் புரிந்து நடந்து கொள்ளத் தெரியவேண்டும். அப்படித்தான் அவர்களைப் பார்த்திருக்கிறேன். அன்பான வார்த்தைகள் எதை எதையோ சாதித்துவிடும்.

ஆனால் எனது அண்ணி என்னோடு ஏன் கடுகடுப்பாக முகத்தை நீட்டிக்கொள்கின்றா. வேலை செய்யும்போது நோயாளிகளோடு இப்படித்தான் கடுவீயாக முகத்தைக் காட்டுவாரோ?

உயிர்களைக் காப்பாற்றுகின்ற இந்த வைத்தியத் தொழிலை பணத்துக்காக மட்டும் செய்கின்றாரா?

என்னுள் அண்ணி குறித்துப் பல கேள்விகள் எழுந்து கொண்டேயிருந்தன. அண்ணாவுக்கும் அண்ணிக்கும் இரண்டு வீடுகள் இருக்கின்றன. என்னவோ தெரியவில்லை அண்ணாவும் அண்ணியும் அறையினுள் வாக்குவாதப் பட்டுக் கொள்வது போலவும் இருந்தது. நான் இங்கு வந்ததினால்தான் அவர்களுக்கிடையில் பிரச்சனையோ என்று யோசித்துக் கவலைப்படுவேன்.

அண்ணாவைப் பார்க்க துக்கம் மேலிடுகிறது. இப்போது அண்ணி வீட்டில் நிற்கும் வேளைகளில் என்னோடு கதைக்கவே மாட்டார். மத்தளம் போன்ற நிலை போலிருக்கிறது. அப்படித்தான் என்னால் சிந்திக்க முடிகிறது.

பெண்ணாக இருந்துகொண்டு அண்ணிக்கு ஒரு பெண்ணின் மனவேதனைகள் புரியவில்லையா? அதுவும் மனித உயிர்களுக்கு வைத்தியம் பார்க்கிற பெண்ணுக்கு. நாம் தேடி வைத்த சொத்துக்களை எல்லாம் இறுதியில் விட்டு விட்டுத்தான் போகப் போகிறோம். சுனாமி வந்தபோதும் கூட அதிகமாகப் பெண்கள்தான் ஆண்களைவிட உயிர்களை இழந்தார்களாம். அலை அடித்துச் சிறிது ஓய்ந்துபோய் இருந்தவேளை அடுத்த அலை வருவதற்குள் இருந்த நேர இடைவெளிக்குள் அவர்கள் ஓரளவு தப்பி ஓடியிருக்கலாம். ஆனால் தாம் வைத்திருந்த நகைகளை எடுக்கச் சென்ற பெண்கள்தான் அநியாயமாக உயிர் இழந்தார்களாம்.

அந்த மண்டபத்தில் இருந்துகொண்டே உலகை வலம் வந்துகொண்டிருந்த என்னைக் குறிப்பாக அந்த வெள்ளைக்கார அதிகாரி வந்து கட்டளையிட்டான்.

என்னைத் தொடர்ந்து வா.

பிரத்தியேகமான அறைக்கு என்னைக் கூட்டிச் சென்றான். இன்று நீ வீட்டுக்குப் போகலாம். இந்தப் பத்திரங்களில் உனது கையொப்பங்களை வைக்கவும். பத்திரங்களைத் தூக்கிப் போட்டான். என்னால் நம்பவே முடியவில்லை.

அண்ணாதான் சட்டத்தரணிகளோடு தொடர்பு கொண்டு ஆவன செய்துள்ளார் என்பதை அவரை அங்கு பார்த்தபோதுதான் புரிந்துகொண்டேன். சட்டத்தரணி ஒருவரோடு அண்ணா நின்றுகொண்டிருந்தார்.

தங்கச்சி வாம்மா வீட்டை போவம்!

என் உள்ளம் கரைந்து வடிந்தது. என் அண்ணாவைக் கட்டி அணைத்து கன்னங்களில் முத்தங்களாகப் பதித்தேன். இருவரும் கட்டியணைத்தபடி கணநேரம் அழுதோம்.

சரி காரில ஏறு தங்கச்சி

அப்பாடி அண்ணாவின் கார் லண்டனுக்குள் ஒரு சுற்றுப்போட்டு உறுமிக்கொண்டு அவர்கள் வீட்டடியில் வந்து நின்றது.

அண்ணாவிற்குப் பின்னால் நான் வீட்டிற்குள் போய்க்கொண்டிருந்தேன். எதிராக வந்த என் அண்ணி என்னைக் கண்டதும் முகத்தை நீட்டிக்கொண்டு உள்ளே போய்விட்டா.

மனது கரையத் தொடங்கியது.

நான் இந்த வீட்டிற்கு வந்ததை விட அந்தத் தடை முகாமிற்கே திரும்பிப் போக வேண்டும் போல் இருந்தது.

(navajothybaylon@hotmail.co.uk)

# சக்கரம்

## ஜெயந்தி சங்கர்

### சிங்கப்பூர்



வீட்டுவேலைக்காக ஆள் எடுப்பதற்காக இந்தியா வந்திருப்பதாகச் சொல்லிக் கூட்டிக் கொண்டு ஒரே வாரத்தில் மூன்றாவது முறையாக வியாழனன்று வந்திருந்தார் கோகிலா அக்கா. பழங்கதைகள் ஏதேதோ பேசிவிட்டு, கலாவின் முகத்தையே உற்று உற்றுப் பார்த்தார். "சாந்தி வெளிநாடு போகணும்னு சொல்லிட்டே இருக்காக்கா", என்றவளைப் பார்த்து, "நீ வரதானா சொல்லு. இன்னும் ஒரே வாரத்ல திரும்பிப் போகும் போது உன்னையக் கூடக் கூட்டிக்கிட்டே போயிருவேன்", என்றார் செருப்பை மாட்டிக் கொண்டே.

"யோசிக்கறேங்கா. காபி கூட சாப்டாமக் கெளம்பிட்டீங்களேக்கா", என்றவளிடம், "உன் முடிவச் சொல்லு கலா. அதக்கப்புறமா சாப்பாடே சாப்டறேன். நல்லாத் தெரிஞ்சவங்களா இருக்கட்டுமேன்னு பாக்குறேன். உன் வீட்டுக்காரரு கூட சரிண்டாரு. மாமியாரும் கொழந்தையப் பாத்துக்கறேன்டாங்க.

கையில பாஸ்போர்ட்டும் ரெடியா இருக்குது. ஆனாலும், நீதான்...'' என்று அலுத்துக் கொண்டவாறு இழுத்தார். "பிள்ளைய விட்டிட்டு வரணுமேன்னிருக்குகா. அதான்'', என்றாள் கலா. "பிள்ளைக்காக தான சம்பாதிக்கவே போற? கிடுகிடுன்னு வளந்து நின்னிருவா உன் மவ. ஒருகல்யாணம் காட்சி செய்ய திடீர்னு பணத்துக்கு எங்க போவ?''

"சரிதான். பணம் சேக்கணும், நாலு பேரப் போல வாழணும்னு எனக்கும் கொள்ள ஆச தான். ஆனாலும், பிள்ளைய நெனச்சா ரொம்ப யோசனையாயிருக்குது. ஏங்கா, பக்கத்து வீட்டு சாந்தியக் கூட்டிட்டு வரட்டுமா? வேல முடிஞ்சி வந்திருக்கும்னு நெனைக்கிறேன். பேசறீங்களா?'', என்றதுமே, "போன வாட்டி வந்தப்பயே பாத்திட்டனே'', என்றார் கோகிலா. கலா, "உங்களப் பாக்கணும்னிட்டிருந்துச்சுக்கா'', என்றபிறகும் கோகிலா பேசாமல் இருக்கவே, "ரொம்ப நல்லா வேல செய்யும்கா. நல்ல பொண்ணு. இங்கிலீசெல்லாம் புரியும் அதுக்கு'', என்றாள் மிக உற்சாகமாக. ''சாந்திய வுடு. மொத உன்னப்பத்தி யோசி கலா. ரெண்டு நாள்ள சொல்லு. எத்தனையோ பேரு இன்னைக்கே கௌம்பத் தயாரா இருக்காங்க. ஆனா, நல்லாத் தெரிஞ்ச குடும்பம்னு உனக்கு உதவ நெனைக்கிறேன்.''

*

**வே**லைசெய்யும் வீட்டில் ஒரு திருமணத்துக்காக வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூருக்குச் சென்றிருந்ததால், அன்றைக்கு அவளுக்கும் ஞாயிற்றுக் கிழமை கலாவுக்கு வேலையில்லை. கலாவின் கணவனும் வீட்டில் இருந்தான். கோகிலா வந்திருந்தார். "ஒருவழியா கலா சிங்கப்பூருக்கு உங்க கூட வர ஒத்துக்கிச்சு'', என்றான். "அப்பா, ஒருவழியா முடிவெடுத்துச்சா. நல்லது'', என்றார். "வேல சுலபமா இருக்குமாக்கா?'', என்று கலா கேட்டதுமே, "பதினோரு வருசமா அங்கயே இருக்கனே,.. கஷ்டமா இருந்திச்சுன்னா எப்பயோ திரும்பி வந்திருக்க மாட்னா?''

"ரெண்டு வருசத்துக்கு ஒரு தடவ தானே எல்லாரும் ஊருக்கு வராங்க. நீங்க எப்டிகா வருசத்துக்கு ரெண்டு மூணு தாட்டி வரீங்க?

"என்னோட மொதலாளி ரொம்பப் பெரிய பணக்காரரு.

பெரிய பிஸினஸ். டிக்கெட் காசெல்லாம் அவருக்கு ரொம்பச் சின்ன விசயம்.''

''எனக்கு சம்பளம் எவ்ளோ தருவாங்கக்கா?''

''மாசம் பத்தாயிரம் ரூபா. நீயும் எப்டியும் எட்டோ ஒன்பதோ மாசமானதும் வீட்டுக்கும் அனுப்பிரலாம்'', என்று சொல்லிக் கொண்டே மூவரின் முகங்களைக் கூர்ந்து நோக்கினார். ''ஒரு முக்கியமான விஷயம் கலா, உன்னைய நா சிங்கப்பூருக்குக் கூட்டிட்டுப் போறத அக்கம் பக்கம் யார்கிட்டயும் சொல்லிராத. ஏகப்பட்ட ஆளுங்க நா நீன்னு காத்துட்டிருக்காங்க. தெரிஞ்சா என்னையப் பிச்சே எடுத்துருவாங்க.''

''ம், சரிக்கா.''

''நா நாளைக்கே டிக்கெட்டெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டு சொல்றேன்.''

*

சென்னை மீனம்பாக்கம் வரும் வழியெல்லாம் பேருந்தில் குழந்தையை நினைத்து வருந்தியபடியே இருந்தாள். விமானத்தில் ஏறியதும் கலாவுக்கு புதிய அனுபவங்களும் காட்சிகளும் கொடுத்த பிரமிப்பு அடங்கவே வெகுநேரமானது. சன்னலையொட்டிய இருக்கை கலாவுக்கு. வெளியே எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து வியந்தாள். பறக்க ஆரம்பித்த இரண்டாவது மணியில் அவளுக்கு லேசாகத் தூக்கம் வந்தபோதிலும் இருந்தபடியே சரியாக உறங்கவும் முடியாதிருந்தது. அவள் அசந்து தூங்குவதாக நினைத்து கோகிலாக்கா யாரிடமோ பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. ''நா நெனச்சிருந்த பொண்ணு மூஞ்சே மாறிப் போச்சிக்கா. ரெண்டு மாசம் முன்ன அம்மை போட்ருந்துச்சாம். மூஞ்சப் பாக்க ஒரே கோரம். இருட்லகூட எவனும் கிட்ட கூட வரமாட்டான். அதான் வேற தேட்னேன். ஒண்ணும் மாட்ல. உங்களுக்கு கெடச்ச பொண்ணு எடுப்பா நல்லா தான் இருக்குது. இருபத்தெட்டு வயசின்னீங்க. பாத்தா அப்டித் தெர்ல. பத்து வருசத்துக்குக் கவலையில்ல'', என்று அந்தாள் பேசியதிலிருந்து சிங்கப்பூரில் தான் செய்யவிருந்த வேலை பற்றி லேசாக சந்தேகம் தட்டியது. கழிவறைக்குப் போனால் கூட இருவரில் ஒருவர் அவள் பின்னாலேயே வந்தார்கள்.

விமானம் தரையிறங்கியதுமே, "என்ன உம்முன்னு இருக்க?", என்று கோகிலா கேட்டதற்கு, "வீட்டு வேலைக்கி தான என்னையக் கூட்டிட்டு வந்தீங்க?", என்று மெதுவாகக் கேட்டதும், "எந்த வேலயா இருந்தா என்ன உனக்கு? நல்ல காசு கெடைக்கும்", என்றபோது சற்றே அதிர்ந்து விழித்தாள்.

கோகிலாவின் பேச்சும் தோரணையும் முற்றிலும் வேறு மாதிரி இருந்தது. "என்ன முழிக்கிற? நாங்க பேசுனதக் கேட்டியாக்கும்? ஆமா, உன்னையக் கூட்டிட்டு வந்தது அதுக்கு தான். பாக்க பளிச்னு நல்லா இருக்கனு தான் உன்னையக் கூட்டிட்டு வந்தது", என்றதும் ஆடியே போனாள்.

வந்த வழியே திரும்பிப் பார்த்தபடி இரண்டெட்டு பின்னோக்கி வைத்தவள் அங்கே விரிந்திருந்த பரப்பைக் கண்டு மிரண்டாள். "அப்டியே ஓடிரலாம்னு ஆசையா? கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட்னு நெனச்சியா? நிக்கிற பஸ்ல ஏறித் திரும்பிப் போயிரலாம்னு நெனப்போ? பேசாம கூட வா. எவ்ளோ காசிருக்குது என்கிட்ட. உனக்கிருக்கற நெறத்துக்கும் அழகுக்கும் சீக்கிரமே இதவிட பத்துமடங்கு காசப் பாத்ர்லாம்." புதுப்புது முகங்கள் புதுப்புது மொழிகள் என்று எல்லாமே அவளை மிரட்டின. எவரிடமும் அணுகி உதவி கேட்க அவளுக்கு ஆங்கிலமும் தெரியாது. பயமாக இருந்ததால் வெறுமன அழுதாள். பெட்டியை இழுத்துக் கொண்டே, "ஏய் டிரமா பண்ணாதடி. கண்ணத்தொடச்சிகிட்டு பேசாம வா", என்றவளைப் பாய்ந்து பிராண்டத் தோன்றியது. உடன் வந்தவன் கோகிலாவுக்குக் கையசைத்து விட்டு விருட்டென்று போய்விட்டான்.

இருவரையும் அழைத்துப் போக இளவயதில் ஒருவன் வந்திருந்தான். அவர்கள் பேசியதிலிருந்து அவன் பெயர் சேது என்றறிந்தாள். அவன் கலாவைப் பார்த்த பார்வையிலேயே விகாரமும் விரசமும் ஆபாசமும் அப்பட்டமாக அப்பியிருந்தது. சீன ஓட்டுனர் ஒரு சொல் கூடப் பேசவில்லை. "கேலாங்", என்றதும் நேராக சென்றது டாக்ஸி. சடாரென்று கதவைத் திறந்து குதித்து விடமுடியாதபடி இருவருக்கும் நடுவில் உட்கார்ந்திருந்தாள். வாகனத்தின் வேகத்தைப் பார்த்தபோது அவ்வாறு குதித்தாலும் இறப்பது நிச்சயம் என்றே தோன்றியது. குழந்தையின் முகம் நினைவிலாடியது. கண்கள் பனித்தன. உள்ளுக்குள் வெறுமையேற்பட்டது.

ஒன்றுமே யோசிக்க முடியவில்லை. ''கண்ணத் தொட மொத'', என்று காதருகில் சொன்ன கோகிலா முகத்தில் ஒரே பெருமையுடன் தானும் பல வருடங்களாகவே தொழிலில் இருந்து வந்ததாகச் சொன்னபோது அப்படியே அவளது கழுத்தைத் திருகிவிடலாமென்று ஆத்திரம் வந்தது.

முதலில் வந்தபோது பணிப்பெண்ணாக வந்தாலும், ஒரே வருடத்தில் திரும்பிப் போகும் நிலை ஏற்பட்டபோது, டெஸ்கர் ரோட்டில் பார்த்த ஒரு தரகன் தான் வழிகாட்டினான். கலா வெளியே பார்த்தாள். ஒரே மாதிரி சாலைகளும் உயர்கட்டங்களும் அவளை மேலும் அச்சுருத்தின. எலும்பும் தோலுமாக பார்க்க எந்தவித கவர்ச்சியுமில்லாதிருந்த பக்கத்து வீட்டு சாந்தியைக் கூட்டிக் கொண்டு வர ஒத்துக் கொள்ளாததன் ரகசியம் அப்போது தான் அவளுக்குப் பிடிபட்டது. சாந்தி கொஞ்சம் படித்தவளும் கூட.

டாக்ஸி நின்ற இடத்தில், ''என்னைய இப்டியே அனுப்பி விட்ருங்க, உங்களுக்கு புண்ணியமாப் போவும்'', என்றவளைக் கடுகடுவென்று பார்த்தாள் கோகிலா. ''அதோ நிக்கிறாம்பாரு சீனப் போலீஸ். சந்தேகப் பட்டான்னா வையி, இப்டியே இழுத்துகிட்டி போயிருவான். காலத்துக்கும் கம்பி தான் எண்ணிட்ருக்கணும். யாராச்சும் கிட்ட வந்து கேட்டா 'மெயிட்'னு சொல்லு. இப்ப பேசாம வா. திரும்ப அனுப்பவா செலவு பண்ணி உன்னையக் கூட்டிட்டு வந்தது?''

இருவருமாக இருளடைந்த அறைக்குள் தள்ளிக் கொண்டு போனார்கள். அவள் ஒத்துழைக்க மறத்தவளாக முண்டிக் கொண்டு வெளியேற முயன்றாள். ''சொல்ற பேச்சக் கேளு கலா. இல்லைன்னா, வீணா அடி தான் விழும்'', என்று சொல்லிக் கதவை வெளியே பூட்டிவிட்டனர். வெளியில் நின்றபடி, ''அதோ, அங்க மேசமேல ரொட்டி இருக்குது பார். எடுத்து தின்னுக்க'', என்று சொன்ன பிறகு சத்தமே இல்லை. அழுது அழுது எப்போது உறங்கினாள் என்றே தெரியாத தருணத்தில் தூங்கியிருந்தாள்.

*

**அ**டுத்த நாளன்று வந்து, ''இதா, இந்தச் சேலையக் கட்டிக்க. உன் ஜாக்கெட் வேணாம். புடவையோடயே இருக்குது அதப் போட்டுக்க'',

என்று ஒரு பையை அறைக் கதவுக்கருகில் நின்றபடி வீசினாள். "என்னைய ஊருக்கே அனுப்பிருங்க. உங்களுக்கு ஆன செலவ ல்லாம் வீட்ட வித்தாச்சும் குடுத்துருவேன்", என்று சொல் கொண்டே கலா விட்ட கண்ணீர் அவளைக் கரைக்கவில்லை. "உன்னோட வீடு என்ன பெரிய பங்களாவா?", என்று நக்கலாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

எப்படியாவது ஊருக்கு ஒருமுறை அழைக்க முடிந்தால் போதுமென்று தோன்றியபடியே இருந்தது. அழுத்த வேண்டிய பத்திலக்க எண்ணுக்கு முன்னால் உள்ளிட வேண்டியது 91 என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. ஆனால், அவ்வறையில் தொலைபேசியே கண்ணில் படவில்லை. அந்த வீட்டில் வேறு எங்காவது இருக்குமா என்றும் தெரியவில்லை. ஊருக்குக் கூப்பிட முடியுமா என்றே தெரியாமல், சாத்தியிருந்த சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள். கடந்து சென்ற ஒரு வாகனத்தில் இருந்த எண்ணை மனதுக்குள் குறித்துக் கொண்டாள். எப்படியாவது வெளியேறிவிட நினைத்தாள். அறையோ எப்போதும் வெளியே பூட்டியிருந்தது.

மீண்டும் வந்த போது முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த கலாவைப் பார்த்து கோபத்துடன், "அழிச்சாட்டியமா பண்ற? இரு இதோ கூப்டறேன் சேதுவ", என்று சொல்லிவிட்டுத் திரும்பி வந்தபோது உடனிருந்த சேது, "சொன்னபடி கேளு. அடிவாங்கிச் சாவாத. புரியிதா?", என்றபடி அவளை அறைந்தான். கன்னத்தைப் பிடித்துக் கொண்டு சுவரில் போய் முட்டியவளுக்கு கண்களில் பூச்சி பறந்தது. "கால்லவுழுந்து கெஞ்சறேன். என்னைய வுட்ருங்க."

வீதியோரம் நிற்க வைத்தனர். பொருந்தாத ஜாக்கெட்டும் பழக்கமில்லாத துணியிலமைந்த சேலையும் உடுத்திக் கொண்டிருந்த கலாவுக்கு அழுகை நிற்கவேயில்லை. கண்ணில் படும்படி தொலைவில் நின்று பார்த்தபடியே இருந்தான் சேது. தெருவில் ஆட்கள் வரப்போக இருக்கவே, அவன் பார்க்காத வேளையில் யாராவது ஒருத்தரிடமும் உதவி கேட்கலாமென்று நினைத்தாள்.

அவ்வழியே போய்க் கொண்டிருந்த இளம்பச்சை வண்ணச் சேலையணிந்த ஒரு பெண்ணைச் சடாரென்று கையைப்

பிடித்து உள்ளே இழுத்து, காலில் விழுந்து அழுது கொண்டே, "காப்பாத்துங்க, என்னைய அடச்சி வச்சிருக்காங்க", என்று கூறி உதவச் சொன்னாள்.

"எங்க?"

"இந்த வீட்டு மாடில இன்னும் அஞ்சு பேர என்னைய மாதிரி வலுக்கட்டாயமா அடச்சி வச்சிருக்காங்க."

"போலீஸ் சுத்திகிட்டே தான இருக்கும். ஏன் நீங்க போலீஸ்குப் போகல்ல?"

"பாக்கல்லயே. பாத்திருந்தா ஓடிப்போயி உதவி கேட்டிருப்பேனே. இங்கிலீஷும் தெரியாது."

"என்னால ஒண்ணும் செய்ய முடியும்னு தோணல்ல."

"உங்க நம்பராச்சும் எழுதித் தாங்களேன். இந்த விஷயத்த போலிஸுக்குச் சொல்வீங்களா? உங்களுக்குப் புண்ணியமாப்போவும். ஐயோ, யாரோ வர மாதிரி இருக்கு,,.."

சேது முறைத்துக் கொண்டே அங்கு வந்து, "யெஸ், வாட் டு யூ வாண்ட்?", என்று அதட்டினான். எதற்குப் பிரச்சனை என்று நினைத்தாரோ என்னவோ அந்தப் பெண் அடுத்த நொடியே விட்டால் போதுமென்று சடாரென்று நடந்து விலகிப் போய்விட்டாள்.

*

"**நா** உன்னைய சென்னைக்கி ப்ளேன் ஏத்தி வுடறேன். நீ அழுவுறதப் பார்த்தா எனக்கு ரொம்பப் பரிதாபமா இருக்குது", என்றான். விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றான். ஏன் என்று கேட்டதற்கு, "ஃப்ளைட்டுக்கு இன்னும் நெறைய நேரமிருக்கில்ல, அதான்", என்றான். "டிக்கட் எடுத்தாச்சா?", என்று கேட்க நினைத்து, சட்டென்று மனதை மாற்றிக் கொண்டாள்.

விடுதியில் ஊழியர்களுக்கு சேதுவை மிக நன்றாகத் தெரிந்ததிருந்தது. அங்கே போனதுமே கைபேசியில் அழைத்து, "லாக் மை ரூம். டோண்ட் ஓபன் அன்லெஸ் ஐ கால் யூ", என்று சொன்னதைக் கவனித்தாள்.

பொருள் புரியாமல் விழித்தாள். சேது தானாகவே, ''நீ இருக்கற எடம் தெரிஞ்சா கோகிலா இங்க வந்துருவா. அதான்'', என்றான். அங்கிருந்த ஒரே சன்னல் இறுக மூடியிருந்தது. திறக்கப் போனவளை, ''ஏர்கோன் ரூம்ல, தெறக்காத'', என்றான்.

விழித்தபடி திரும்பி அவன் முகத்தைப் பார்த்தபோது, ''ஏஸி ரூம். தெறக்கக் கூடாது'', என்றான். சரியென்று தலையாட்டிக் கொண்டாள்.

தான் செய்த உதவிக்குப் பதிலாக அவளைப் படுக்கைக்குக் கூப்பிட்டபோது தான் நல்லவனென்று நம்பியது முட்டாள்த்தனமோ என்று பட்டது. முடியாதென்று மறுத்தாள். ''சரி, உன்னைய அக்கா கிட்டயே கூட்டிட்டுப் போயி விட்டர்றேன்'', என்றான். இனி மறுபடியும் அதே இடத்தில் போய் மாட்டிக் கொள்வதை விட இவனுக்கு இணங்குவதே மேலோ, விமானம் ஏற்றி விடுவதாச் சொல்கிறானே என்று யோசித்தாள். 'மல்லாந்து படுத்து வாயத் தெற', என்றும், 'குனிஞ்சி உக்காந்து பின்னாடிக் காட்டு', என்றெல்லாம் கொடூரமாக அடித்தபோது பீதியில் வீரிட்டாள். மூலையில் போய் ஒடுங்கியவள் அருகில் வந்து பலமுறை கண்டபடி அறைந்தான். மீண்டும் கத்த வாய் திறந்தவளை அறைந்து வாய் பொத்தினான். வாயைப் பொத்திக் கொண்டு முழங்கால்களைக் கட்டியவாறு அமர்ந்து அழுதாள். கண்ணீர் பட்டு கன்னமிரண்டும் எரிந்தன. கொஞ்ச நேரத்தில், ''ஊருக்குப் போக வேணாம்?'', என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு. அழுதுகொண்டே, ''போகணும்'', என்றாள். ஒன்றும் பேசாமல் கட்டில் மீது படுத்திருந்தான். தரையில் சுருண்டு கிடந்த சேலையை மெதுவாக நகர்ந்து போய் எடுத்தாள்.

கழிவறைக்குப் போய் முகங்கழுவி, மூத்திரம் பெய்துவிட்டுத் திரும்பிய போது மேசையில் இரண்டு தம்ளரில் ஆரஞ்சுப்பழச் சாறு இருந்தது. ஒன்றை எடுத்துக்கொண்டவன், ''குடி'', என்று இன்னொன்றை நீட்டினான். தொண்டை வறண்டிருந்தவளுக்கு ஏதாவது குடிக்க வேண்டும் போலத் தான் இருந்தது. தரையில் உட்கார்ந்து பாதி குடித்துக் கொண்டிருந்த போதே வித்தியாசமாக ஏதோ உணர்ந்தாள். மீதியை முழுவதும் குடிக்காமல் வைத்த கணத்தில் அப்படியே சாய்ந்து விட்டாள்.

*

மறுபடியும் அவள் விழித்தபோது உடன் குளிரில் நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். உடம்பில் துணியே இல்லாமல் ஒற்றைப் போர்வை போர்த்தியிருப்பது புரிந்தது. இருட்டில் எங்கிருக்கிறோம் என்று ஞாபகம் வரவே நிமிடங்களாகின. எழ முயன்றபோது காலிடுக்கில் ஒழுகியது.

தோல் அனண்டு போயிருப்பதை உராய்வில் உணர்ந்தாள். கட்டில் மீது சேது மறுபுறம் ஒருக்களித்துப் படுத்திருந்தது சில நொடிகளில் கண்ணுக்குப் புலப்பட்டது. சிரமப்பட்டு எழுந்து உடுத்திக் கொண்டு கழிவறைக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு அறைக்கதவைத் திறக்கிறதா என்று பார்த்தாள். திறந்தது. சின்ன நம்பிக்கை வந்தவளாக தாழ்வார வெளிச்சம் அறைக்குள் நுழையும் முன்னர் கதவைச் சாத்தினாள். அடுத்த அறைக்கு அருகில் கடந்து சென்றவன் அவளைப் பார்த்து ஏதோ கேட்டான். என்ன மொழியென்றும் என்ன கேட்டான் என்றும் ஒன்றுமே அவளுக்குப் புரியவில்லை.

கிடுகிடுவென்று நீள நடந்து திருப்பத்தில் இருந்த படியில் மளமளவென்று இறங்கினாள். அடுத்த தளத்திற்கும் அடுத்த தளம் விடுதியின் முன் வாயிலையும் வாகனங்கள் கடந்தோடிய தெருவையும் காட்டியது. அருகில் வானைத் தொட்டு உயர்ந்து நின்ற அடுக்கு மாடிக் கட்டடத்தை நோக்கி நடந்தவள் அங்கே மின்தூக்கியில் ஏறியவர்களுடன் ஏறி இறங்கியவர்களுடன் இறங்காமல், பன்னிரெண்டாவது மாடிக்குப் போனாள். நள்ளிரவு கடந்திருந்த நேரம். வீடுகள் எல்லாமே அடைக்கப்பட்டு அமைதியில் உறைந்திருந்தன. கட்டைச் சுவரின் மீது ஏறிக் கீழே குதிக்கும் எண்ணம் மட்டுமே அவளுக்குள் எழுந்தது. குழந்தையின் முகம் நினைவில் வந்ததும் தொண்டை அடைத்து மளுக்கென்று மீண்டும் கண்கள் பெருகின. கட்டைச் சுவரின் மேல் விளிம்பு உட்புறமான சரிவுடன் இருந்ததால், அவளால் கால்வைத்து நிற்கவே முடியவில்லை.

ஒரு காலைத் தூக்கி மீண்டும் முயன்றபோது பின்னால் சேது வந்து நின்றதை அவள் கவனிக்கவில்லை. கையைப் பிடித்து முன்னுக்கு இழுத்து குரோதத்துடன் அறைந்தான். அவளுக்கு அழுகை பீரிட்டது. விடுவித்துக் கொண்டு ஓடமுயன்றாள். அவளது கைப்பிடியை விடாமல் கைபேசியில் இலக்கத்தை அழுத்தி,

“கொஞ்சம் லேட்டா வந்திருந்தாலும் இன்னேரம் கீழ குதிச்சிருப்பா. வழிக்குக் கொண்ட்டுவான்னு தானே என்கூட அனுப்புனீங்க. ஆனா, இது பெரிய தலவலியாயிரும் போலயிருக்கே. இதெல்லாம் எனக்கு வேணாம். மொத வந்து இவளக் கூட்டிட்டுப் போயிருங்க”, என்றபோது தான் உதவுவதாகச் சொல்லிக் கூட்டி வந்ததே கூட்டுச் சதி என்று அவளுக்குப் புரிந்தது.

அறைக்கு இழுத்துக் கொண்டு வந்தான். வழியில் பார்த்த ஒரே ஒரு முகம் இந்திய முகம் போலத் தெரிந்தது. கைப்பிடியை உதறிவிட்டு ஓடி அந்த ஆள் அருகில் சென்று, “காப்பாத்துங்க. ஏமாத்தி கூட்டிட்டு வந்துட்டாங்க”, என்றாள். அவனோ திருதிருவென்று விழித்து, “வாட்?”, என்று திரும்பக் கேட்டான். பாய்ந்து வந்து, “நதிங்லா. பிட் க்ரேஸிலா, திஸ் வுமன்”, என்று சொல்லி அறைக்கு இழுத்துக் கொண்டு போனான்.

சில நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்த கோகிலாவிடம், “என்னைய ஊருக்கு அனுப்பிருங்க. கெஞ்சிக் கேட்டுக்குறேன்”, என்றழுதாள். “என்னைய விட நாலஞ்சி மடங்கு காசு வரும்டி. கசக்குதா உனக்கு”, என்றாள். “காசெல்லாம் வேணாம். ஊருக்கே போயிர்றேன்”, என்றதும், “சரி, உன்னையக் கூட்டிட்டு வரதுக்கு ஆன செலவையெல்லாம் மட்டும் சம்பாரிச்சு குடுத்துட்டு அடுத்த வருசமே ஊருக்குப் போய்க்க”, என்றாள். “எத்தனை பேத்துக்கு நா காசுன்னு பாக்காம நீட்டியிருக்கேன். அதையெல்லாம் சம்பாதிச்சிக் குடு. அப்புறமா, நீ உங்க ஊருக்கே போயிரலாம்.”

அவர்களை ஏற்றிக் கொண்டு கேலாங் நோக்கிச் சென்ற வாகனத்தில் எதிர்காலம் என்ன என்பதைப் பற்றி ஒன்றுமே அறியாது ஓட்டுனரிடம் காப்பாற்றச் சொல்லலாமா என்று யோசித்தபடியே மிரண்டு போய் உட்கார்ந்திருந்தாள். கோகிலா தொடர்ந்து, “இவ்ளோ சொல்றேன், புரியல உனக்கு? நாலஞ்சி வருசம் தானேடி. அதுக்கப்புறம், உங்க ஊரே உனக்கு அந்நியாமத் தோணிரும். என்னைய மாதிரியே நீயும் வருசத்துக்கு ரெண்டு மூணு வாட்டி அங்கைக்கிம் இங்கைக்கிம் பறந்திட்டே இருந்தர்லாம்”, என்றாள், மிகச் சாதாரண தொனியில்.

(jeyanthisankar@gmail.com)

# பேரழகியும் அரபு நாட்டு பாதணிகளும்

எம்.ரிஷான் ஷெரிவ்
இலங்கை



எனக்கு முன்னால போய்க்கொண்டிருந்த பெண் சடாரெனக் கீழ விழுந்ததுல எனக்குச் சரியான அதிர்ச்சியாகிப் போச்சுது. சொந்த ஊரிலெண்டால் ஓடிப்போய் உதவியிருக்கலாம். என்ரை மனசு ஒரு கணம் பதறிப் போச்சுது. இப்பொழுது என்ன செய்றதெண்டு தெரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தன். என்ரை கண்ணுல ஆருமே தட்டுப்படேல்ல. ஒரு ஈ, காக்கை கூடக் காணக் கிடைக்கேல்ல..

அரபு நாட்டுச் சூடான பகல் வேளையது. கடும் வெக்கை.காத்துக் கூட கடும் சூடாத்தான் வீசும். அவசரத் தேவையில்லாம ஆரும் வெளிய இறங்கமாட்டினம். வெயில் ஆரையும் வெளியில் இறங்கவிடாது. பன்னிரண்டு மணிக்கு அத்தனை அலுவலகங்களும் பகலுணவு இடைவேளைக்காக மூடப்பட்டதெண்டால் மூன்று அல்லது நான்கு மணிக்குத்தான் மீண்டும் திறக்கப்படும்.

நான் கடும் பசியிலிருந்தன். சூட்டையும், வெக்கையையும் பொருட்படுத்தாமல் மதிய உணவுக்காகப் போய்க் கொண்டிருந்தன். அப்பதான் என் முன்னால போன அவ விழுந்தவ.

அது ரெண்டு வங்கிகளுக்கு இடைப்பட்ட சிறிய ஒழுங்கை. வருகிறவங்கள் வங்கியின் பின்புறத்தில வாகனங்கள நிறுத்துறதுக்காகக் கட்டப்பட்டிருக்குற இடத்துல வாகனங்களை நிறுத்திவிட்டு வருவினம். கீழே விழுந்து அறபுமொழியில் முனகிக் கொண்டிருந்தவளுக்கு இருபது வயதுக்குள்ள தானிருக்கும். நல்ல வடிவாக இருந்தவள் ஈரான் இல்லாட்டி லெபனான் தேசத்தவளாக இருக்கவேணும். அவங்களது உடுப்புக்கள்தான் இந்த நாட்டில இப்படி அரையும் குறையுமாக இருக்கும்.

ஒரு கூலித் தொழிலாளியாக இந்த நாட்டிற்கு வேலைக்காக வந்திருக்கிற நான் ஏற்கெனவே லேசாக் கருப்புத்தான் எண்டாலும் பாலைவன வெயில் என்னை இன்னும் கருப்பாக்கிட்டுது. ஏற்கெனவே தன்ட அழகினால் பெருந்திமிர் பிடிச்சவள் போலக் காணப்பட்டவள் எழுந்து கொள்ளச் சிரமப்பட்டு இயலாதவளாக என்னை நோக்கிக் கை நீட்டியதில எனக்குப் பெரும் சங்கடமாப் போச்சுது.

ஒரு பெண் அதிலும் வடிவான பெண் என்னை நோக்கிக் கை நீட்டியதுல சங்கடமாப் போச்சுதெண்டாலும் அந்த இடத்துல அவளுக்கு உதவுறதுக்கு ஆருமில்லையெண்ட காரணத்தினால அவளைக் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டன். அவளின்ர கைகள் கடும் மென்மையாக இருந்ததில எனக்கு ஒரு மாதிரியாகிப் போச்சுது. இதுவரையில எந்தப்பெண்ணினதும் கைகளைத் தொட்டிராத என்ரை கைகள் காய்ச்சுப்போய்க் கரடுதட்டி இருந்திச்சுது. தங்கச்சிகள் ரெண்டு பேரும் வயசுக்கு வந்த பின்னால அவங்களது கைகளைக் கூடத் தொட்டதில்ல. ஊரில கல்லுடைக்கப் போற அவங்களிண்ட கைகளும் கூடக் காய்ச்சுப்போய்த்தான் இருக்கும்.

நல்ல வாசனையோடு இருந்தவள் ஜீன்ஸும், சட்டையும், அரை அடிக்கும் சற்றுக் குறைவான அடி உசந்த செருப்புக்களும் போட்டிருந்தவ. எனக்கு அந்தச் செருப்புக்கள் கனக்க ஆச்சரியத்தைத் தந்தன.

என்ரை அம்மாவோ, தங்கச்சிகளோ இது போன்ற அடி உசந்த செருப்புக்களை அணிந்த பெண்களைப் பார்த்திருக்க மாட்டாங்கள். அவங்களெண்டு மட்டுமில்ல. கூலி வேலைகளுக்காக மட்டுமே வீட்ட விட்டு வெளியே கிளம்புற என்ரை ஊர்ப் பெண்களெவரும் கூடப் பார்த்திருக்க மாட்டாங்கள்.

நான் இந்த நாட்டுக்கு வந்த கொஞ்சநாட்களுக்குள்ளேயே இது போல அடி உசந்த செருப்புக்கள் போடுற பெண்பிள்ளைகள் கனக்கப்பேரைப் பார்த்தாச்சுது. ஆனாலும் அதுக்கான வியப்பு மட்டும் என்னை விட்டும் இன்னும் விலகேல்ல. மாபிள்கள் பதிக்கப்பட்ட தரையில புது லாடமடிச்ச குதிரை போற சத்தமிருக்கேல்லே? அதே மாதிரியான சத்தத்தோட சிலர் நடக்கேக்க பார்க்க வினோதமாயிருக்குமெனக்கு.

என்ரை சிறு அறையில அந்த மாதிரி உசந்த செருப்புக்களைப் போட்டுக் கொண்டு நடப்பதாக நினைச்சிக் கொண்டு கால் முன்விரல்களால மட்டும் நடந்து பார்த்து நொந்திருக்கிறன். என்னைப் பொறுத்தவரையில அந்த மாதிரியான செருப்புக்களைப் போடுறவங்கள் கடும் திறமை வாய்க்கப்பெற்றவங்கள்.

எனக்கு நினைவு தெரிஞ்ச காலந்தொட்டு என்ரை அம்மா என்றைக்குமே சாதாரண ரப்பர் செருப்புக் கூடப் போட்டதை நான் கண்டதில்ல. அவரின்ற அடிக்கால்கள் ரெண்டும் பித்தவெடிப்பாலும், கல்குவாரியில் நிறைஞ்சிருக்கும் சில்லுக் கல்லு இருக்கேல்ல? அது குத்தியும் காய்த்துத் தடித்துப் போய்க் கிடக்கும். அதில எந்த உணர்ச்சிகளும் தெரிவதில்லை எண்டுகூடச் சொல்லுவா அம்மா.

தங்கச்சிகள் ஸ்கூலுக்குப் போட்டுப் போறதுக்கெண்டும் கூலி வேலைக்குப் போகேக்க போட்டுக் கொண்டு போறதுக்கெண்டும் ரெண்டு சோடி றப்பர் செருப்புக்கள் வேற வேற கலர்கள்ல வச்சுக் கொண்டிருக்கினம். ஸ்கூலுக்குப் போட்டுப் போகும் செருப்புக்கள் மட்டும்தான் ஒரே நிறத்தில ஒரே அளவோடு இருக்கும். அதையும் வீட்டுக்கு வந்ததுமே கழுவி மூலையில் பத்திரமா வச்சிடுவினம்.. மற்றைய சோடி எப்பொழுதோ ஸ்கூலுக்குப் போட்டுச் சென்று வார் அறுந்ததாகவோ, இல்லையெண்டால் நன்றாகத் தேய்ஞ்சு போனதாகவோதான் இருக்கும்.

நான் கூட அப்படித்தான். என்ரை ஆறு வயசில முதன்முதலா என்ரை அப்பா என்னை ஊர் ஸ்கூலுக்குச் சேர்க்கப் போகேக்க தான் கால்ல றப்பர் செருப்புப் போட்டன். அந்த ஊரில பதினோராம் வகுப்பு முடியுமட்டுக்கும் செருப்பு மட்டும் தான். மேல படிக்குறதுக்காக பக்கத்துப் பெரிய ஊருக்குப் போகச் சொல்லி எல்லோரும் சொல்லேக்க எனக்கு செருப்புப் போட்டுக் கொண்டு அங்கேயெல்லாம் படிக்கப் போகப் பெரும் தயக்கமாயிருந்துச்சுது.

அப்ப என்ரை ஊர் ஸ்கூல் அதிபர்தான் நான் பதினோராம் வகுப்புச் சோதினையில நல்லாப் பாசாகி ஊர்ப்பாடசாலைக்கு நல்லபெயர் வாங்கித் தந்தனெண்டு சொல்லி ஒரு சோடிச் சப்பாத்துக்களைப் பரிசளிச்சவர்.

அண்டைக்கு எனக்கு சப்பாத்துப் போட்டுக்கொண்டு வானத்துல நடக்குறது போலத் தாங்கொணாத களிப்பு. அந்தச் சோடியை வீட்டுக்குக் கொண்டுவந்த நாள் என்ரை தங்கச்சிகளும் ஆசையோடு அதைப் போட்டுப்பார்த்தவள்கள். இந்த மாத சம்பளத்தில அவையள் ரெண்டு பேருக்கும் நல்ல செருப்பு இரண்டு சோடி வாங்கி வைக்கவேண்டுமென நினைச்சுக் கொண்டன்.

அந்த உசந்த செருப்புத் தடுக்கியதிலதான் இவள் விழுந்திருக்கவேணும். எழுந்து நிண்டுகொள்ளச் சிரமப்பட்டவள், ஒரு அடிபட்ட பாம்பினைப் போல 'ஸ்ஸ்ஸ்' எண்டு முனகினாள். ஒரு அடி எடுத்துவைச்சவள் மேலும் நடக்க முடியாமல் அவளாகவே பக்கத்திலிருந்த என்ரை தோளினைப் பிடிச்சுக்கொண்டாள். பின்னர் அறபு மொழியில் அவள் சொன்னதெதுவும் எனக்குப் புரியேல்ல.

நான் புரியேல்லை என்டது போலச் சாடை செய்தன். பிறகு அவள் ஆங்கிலத்தில கூறியதை வைச்சும் தூரத்து நிழலில நிறுத்தியிருந்த சிவப்பு நிறக்காரினைக் காட்டியதைக் கொண்டும் அவளிண்ட கார் வரையில நடந்து போக என்னை உதவும் படி கூறுகிறாள் என்றதப் புரிஞ்சுகொண்டனான்.

'தயக்கமில்லாமல் வெளிநாட்டுக்குப் போ ராசா.. நீ எங்கேயோ போயிடுவாய்' என்டு விசா வந்த அண்டைக்கு

அம்மாவுடன் ஊர் ஜோஸியக்காரரைப் பார்க்கப் போன போது ஜோஸியக்காரர் சொன்னது சம்பந்தமேயில்லாமல் இப்பொழுது என்ரை நினைவில வந்துச்சுது.

அவள் என்னை விடவும் உயரமானவளாக இருந்ததுல என்ரை தோளைப் பற்றியிருந்தாள். அவளது மற்றக் கை என்ரை கைகளைப் பற்றியிருந்துச்சுது. என்ரை வாழ்வின் மிகப்பெரும் தயக்கம் என்னைச் சூழ்ந்தது போல இருந்துச்சுதெண்டாலும் அவளை நான் கார் வரைக்கும் கூட்டிப் போனன்.

காரின் அருகினில் போய்ச் சேர்ந்ததும் அதுக்கான சாவியை விட்டுத் திறந்து சாரதி இருக்கையில மெதுவாக அமர்ந்து கொண்டவள், நான் நகர முற்பட்ட வினாடி 'மீண்டும் ஒரு உதவி' என்றாள். அவள் தன்ட கைப்பையிலிருந்து பேனையை எடுத்து என்ரை உள்ளங்கையை நீட்டச் சொல்லி அதில நான்கு இலக்கங்களை எழுதினாள். எனக்கு இண்டைக்கு நடப்பதெல்லாம் பெரும் வியப்புக்குரியதாகவும் குழப்பமளிப்பதாகவும் இருந்துச்சுது. என்ரை வாழ்விலேயே இன்றுதான் பெரும் அதிர்ஷ்டம் வாய்ந்த நாளெண்டு எண்ணிக் கொண்டன்.

அவள் திரும்பவும் தன்னோட கைப்பையிலிருந்த வங்கியிலிருந்து காசெடுக்கும் ஏடீஎம் கார்டினை எடுத்து நீட்டினாள். நான் புரிஞ்சு கொண்டவனாக எவ்வளவு எனச் செய்கையில கேட்டன். அவள் மீண்டும் என்ரை உள்ளங்கையினை வாங்கி 5000/= என எழுதி காசு எடுத்து வரும்வரையில் காரில காத்திருப்பதாகச் சொன்னாள்.

அவள் காசு எடுப்பதற்காகத்தான் அந்த ஒழுங்கையால போயிருக்கவேணும். ஒழுங்கையின் மூலையில் வங்கிக்கு முன்னால் இரு ஏடீஎம் மெஷின்கள் இருக்குது. நான் என்ரை அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்தவாறே மீண்டும் ஒழுங்கையால் ஓடினன். வங்கிகள்ல இருந்து நானிப்படிக் காசு எடுப்பது இதுதான் முதல் முறை. மெஷின்கள் கொடுத்த அறிவுருத்தல்களின் பிரகாரம் நான் என்ரை உள்ளங்கையைப் பார்த்தவாறு செயல்பட வேண்டியிருந்திச்சு. அந்த வங்கியில் ஆகக் கூடுதலாக ஒரு நாளைக்கு எடுக்கக் கூடிய தொகை 5000/- மட்டும் தான்.

கார்டினைப் போட்டுக் காசு எடுக்குறதுவும், இவ்வளவு பெருந்தொகையை ஒரே முறையில் எண்ணிப்பார்க்குறதுவும் எனக்கு இதுதான் முதல் முறை. ஏடீஎம் மெஷின் இருந்த அறைக்குள்ளே பல தடவைகள் அக்காசுத்தாள்களை எண்ணிப்பார்த்தன். புது உலகத்தில மிதக்குற மாதிரி உணர்ந்தன். திரும்பவும் அவளின்ரை காரை நோக்கி ஓடிப்போனன்.

அவள் உள்ளங்கை அளவேயான சின்னக் கண்ணாடியொன்றில பார்த்துத் தன் உதடுகளுக்குச் சாயமிட்டுக் கொண்டிருந்தாள். என்னிட்டயிருந்து பணத்தினை எண்ணி வாங்கியவள் கணக்கின் மீதியைக் கேட்டாள். எனக்கு அவள் கேட்பது புரிந்தும் புரியாமலுமிருந்திச்சு. மீண்டும் என்னிட்ட கார்டினைத் தந்தவள் 'பேலன்ஸ் ரிஸீட்' எனச் சொல்லி லேசாச் சிரிச்சாள். மறுக்க வழியின்றி அதனை வாங்கிக் கொண்டு மீண்டும் மெஷினுக்கு ஓடினன்.

கடும்பசி ஒரு பக்கம் வயிற்றில தாளம் போட்டுக் கொண்டிருந்துச்சு. என்ரை மேலேயே எனக்கு ஒரு கணம் கோபம் கூட வந்துச்சுது. மறுகணம் 'எத்தனை பேருக்கு வாய்க்கும் இப்படிப்பட்ட வடிவான பெண்ணின்ட நம்பிக்கை? ஆரென்றே அறியாத என்னிடத்தில எவ்வளவு நம்பிக்கையோட கார்டினையும் ரகசிய இலக்கங்களையும் தருகிறாள்?' எண்டு நெனச்சிக் கொண்டே பேலன்ஸ் ரிஸீட்டோடு ஓடி வந்து பார்க்க, கார் அங்கிருக்கேல்ல.

என்னவாச்சுது இவளுக்கு? எங்கே போனவள் ?அப்படியென்ன அவசரம் அதற்குள்? எனக்கு எதுவும் புரியேல்ல.வெயிலால கடுமையா வியர்த்து வழிஞ்சது. சில நிமிஷங்கள் அங்கு நின்று பார்த்தன். பின்னர் அவள் என்னைத் தேடி வங்கியின் முன்பக்கமாக வந்திருப்பாளோ எண்டு நெனச்சு மீண்டும் மெஷினுக்கருகில ஓடிவந்தன்.

அங்கேயும் அவள் இல்லை. பசியும், வெயிலும் என்ரை உடலுக்கு ஒரு உதறலைத் தந்து கொண்டிருந்துச்சுது. அவள் மீண்டும் என்னைத் தேடிவருவாள் எண்டு நம்பினன்.வெயிலிலிருந்து தப்பிக்க ஏடீஎம் மெஷினிருந்த சிறு அறைக்குள்ளேயே சில நிமிஷங்கள் காத்துக் கொண்டிருக்கேக்க முன் வீதியில அந்த வாகனம் வந்து நிண்டுச்சுது.

அதிலிருந்து நாலு பேர் இறங்கி மெஷினிருந்த அறைக்குள் வருவதைக் கண்டு, அவங்களுக்கு இடம் கொடுத்து வெளியேற முற்பட்ட என்னை அவங்கள் இறுகப்பிடிச்சுக் கொண்டாங்கள். தடித்து, உயர்ந்திருந்த அவங்கள் சூடான் தேசத்தவராக இருக்கவேணும். பெரிய உதடுகள் துடிக்க மிரட்டும் தொனியில் விசாரிக்க ஆரம்பிச்ச அவங்கள் பொலிஸ்காரர்கள். அது பொலிஸ் வாகனம்.

அந்த ஏமஎம் கார்ட் ரெண்டு நாட்களுக்கு முன்பு திருடு போனதொன்று எண்டும், மெஷினிருந்த அறையின் கேமராவின் மூலம் நான் மாட்டிக் கொண்டனெண்டும், ஒரு அறபி ஷேக்குக்குச் சொந்தமானதை எப்படித் திருடினாய் எண்டும் விசாரித்ததில எனக்கு எதுவும் விளக்கிச் சொல்ல பாஷை தெரியேல்ல.

ஆங்கிலத்தில 'எனக்கொண்டும் தெரியாது' எண்டு மட்டும் திக்கித் திணறிச் சொல்லமுடிந்தது என்னால. என்ரை கையிரண்டையும் இறுக்கமாகப் பிடிச்சு இழுத்துச் சென்று பொலிஸ் வாகனத்தில ஏற்றினாங்கள். திடீரென எனக்கு இழைக்கப்பட்ட அநீதியிண்ட பாரத்தாலயும், கடும் பசியினாலயும் நான் கண்கள் மயங்கிச் சரியும் இறுதிநொடியில பொலிஸாரின் அடி உயர்ந்து தடித்த சப்பாத்துக்களைத்தான் கடைசியாக் கண்டன். ஜோஸியக்காரனிண்ட குரலும் காதுக்குள் ஒலிச்ச மாதிரிக் கேட்டது.

(mrishanshareef@gmail.com)

# பாவம்

நோர்வே நக்கீரன்

நோர்வே



(உண்மைக்கதை)

அழகு என்பது அகிலத்தில் எவருக்கும் சொந்தமானது அல்ல, ஆனால் அவளுக்கு மட்டும் அது சொத்தாகிப்போனது ஏன்? காணும் கண்களில்தானே அழகும் அசிங்கமும் என்பார்கள். காணும் கண்கள் எதுவானாலும் அவள் அழகாகவே இருப்பாள்.

இவ்வளவு அழகை அள்ளிக்கொடுத்த இறைவன் வாயைமட்டும் ஏன் ஊமையாக்கினான்? எதைச் சொன்னாலும் விளங்கிக் கொள்ளும் அவள், சொல்வது மற்றவர்களுக்கு விளங்குவதே இல்லை. எமக்கு விளங்காவிட்டால் மற்றவர்கள் மடையர்கள், ஊமைகள் தானே. மற்றவர்களில் பழியைப் போட்டுத் தம்பிக் கொள்ளும் மனிதகுலத்தின் முன்னால், காலால் கல்லுக்கு அடித்துவிட்டு கல்லடித்தது என வாயில்லாக் கல்லைச்சாட்டும் சமூகவாரிசுகள் முன்னால் அவள் ஊமை தான். கல்லு என்றும் ஒன்றும் சொல்லாது என்பதனால்தான் கல்லைக் கடவுளாக்கினார்களோ? சமூகத்தில் எதிர்த்து நின்று சான்று பகரமுடியாத அனைத்தும் மனிதமற்ற மனிதர்களின் முன்னால் குற்றவாளிகளே.

அவள் சுவீட்டி எனும் தன்பெயருக்கு ஏற்றால் போல் அழகிய பருவமடைந்த நாய்குட்டி.

ஊமையாயினும் ஆசா, பாசம் கொண்டவள் என்பதால் மாப்பிளை தேடும் படலம் ஆரம்பமானது. பப்பிலோன் எனும் சாதியைச் சேர்ந்த சின்னச்சாதி நாய் பெரியநாய்களுக்கு ஈடானது. சாதி மனிதரில் மட்டுமா? இல்லவே இல்லை அது மிருகங்களைக்கூட விடவில்லை.

சாதிநாய் என்பதால் மாப்பிளைப்பகுதியில் ஆயிரம் கேள்விகள். எந்தநோய்களும் இல்லை என்ற வைத்தியசான்றிதழ்கள், பெற்றோர் பேரன் பூட்டன் என்ற வம்சாவளிகள் அப்படி இப்படி எனப் பேப்பர்களைத் தேடித்தேடியே அவளது உணர்வுகளின் முதலாவது கல்யாணக்காலம் கடந்தது.

அடுத்த கல்யாணப்பருவம் வரும்போது பெரும்பணச்செலவில் சாதிமாறிப் போகக்கூடாது என்பதில் மிகக்கவனமாக இருந்தார்கள் வளப்புப் பெற்றோர். காரணம் கலப்பு நாய்களுக்கு மவுசு கம்மி. நாய்களுக்கும் சீதனம் சீர்வரிசை என்று பணம் கொடுக்காமல் கல்யாணமே இல்லை. சாதி சாதி என்று பார்த்து சாதிக்குள் திருமணம் செய்து, சாதியால் சாதித்த சாதனை சாதிநோய். சாதிக்கென ஒருநோய் உருவாகி, சாதியால் செத்துக் கொண்டிருக்கிறது மிருகங்களும் மனிதர்களும். இன்று உலகமே சாதியின் சாக்கடை

திருமண ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்தேறின. தமிழன் வீட்டுநாய் என்பதால் அதற்கும் பேசித்தான் திருமணமோ?

தன்வாழ்க்கைத்துணை யாரென்பதைத் தெரிவு செய்யும் காட்டுவிலங்குகளுக்கு இருக்கும் சுதந்திரம் மனிதருடன் கூடிவாழ்வதால் வீட்டுமிருகங்களுக்கு இல்லாது போனதே. மாப்பிள்ளைவீட்டுக்கு கண்ணீர்மல்க நம்பிக்கையுடன் அனுப்பிவைத்தார்கள் வளப்புப்பெற்றோர். அழுதனர், எண்ணித் துடித்தனர் இருப்பினும் வளர்ப்புமகள் வாழப்போகிறாளே என்ற மனத்தைரியத்தில் மௌனமாயினர். மீண்டும் வீடுதிரும்பிய நாய்க்குட்டிக்கு எதுவும் சரியாக நடந்தேறியதாகத் தெரியவில்லை. மீண்டும் சுவீட்டிக்கு ஏமாற்றம்தான்.

எதிர்பார்த்து, எதிர்பார்த்து எதுவுமே ஈடேறாது ஈற்றில் ஏக்கத்தின் தாக்கத்துடனே வாழ்ந்து முடிக்கும் சமூகமாய் போனதோ பெண்மை. பெண்மையின் பேதமையை பேருலகம் என்ன சொல்லும்?

இருமாதங்கள் உருண்டோடின, சுவீட்டி பெருத்துச் சோர்வாக இருந்தாள். நோய் நொடியோ என்றெண்ணி வைத்தியரிடம் கொண்டோடினர். வைத்தியசோதனைகள் முடிந்தபின், சோதனை ஒருசாதனையைச் சொன்னது. சுவீட்டி கருத்தரித்திருந்தாள் என்றும், வயிற்றில் ஒருகுட்டி இருப்பதாகவும் அதற்கான கணனிப் படமும் வழங்கப்பட்டது. வளர்ப்புக் குடும்பத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரேகொண்டாட்டம் தான்.

புதியவகை உணவுகள், முத்தமாரிகள், புதிய மெத்தைகள் இன்னும் இன்னும்... தாய்மைக்குக் கிடைத்த பரிசா இது? பெண்மைக்குக் கிடைத்த சிறப்பா இது? சுமப்பதற்கு வழங்கும் சன்மானமா இது? சுமப்பதால் சோர்வும், தாய்மையால் பூரிப்பும் இருந்தபோதிலும் சுவீட்டி தன் கடமையில் இருந்து எள்ளளவும் விலகியதில்லை. அன்னியர்கள் வாசல் வந்தால் அவள் விமானமாய் பறப்பாள், குரைப்பாள், கலைப்பாள். தாய்மையால் களைத்தாலும் காவலால் களைத்ததில்லை, திளைத்தாள். கடமை, கண்ணியத்திற்கு நாயை விடச் சிறந்த ஒரு நாயைச் சொல்லமுடியுமா மனிதா?

சுவீட்டி என்று குட்டிபோடுவாள் என்ற ஆர்வமும், ஏக்கமும் குடும்பத்தின் குழந்தைகளுக்கு மேலிட்டுக் கொண்டே இருந்தது. பங்குனி 13 அன்று சிவராத்திரி. சுவீட்டி மிகமிகச் சோர்வாகவும், பெற்றோரின் அரவணைப்பையும் அடிக்கடி நாடினாள். பிள்ளைப்பேற்றின் நெருக்கத்தை பெற்றோர் உணர்ந்திருந்தனர். வைத்தியர்களால் கொடுக்கப்பட்ட தேதிக்கு மேலும் ஒருகிழமை இருந்தது. குடும்பமே சிவராத்திரி என்பதால் இரவு 3மணிவரை விழித்திருந்து விட்டு படுக்கைக்கு சென்றனர். 14 பங்குனி 2010 காலை விடிய எட்டுமணி கண் விழித்துப் பார்த்தபோது சுவீட்டி ஒரு அழகிய தன்நிறத்தில் அல்லாத குட்டியை நக்கிக்கொண்டிருந்தாள். தந்தையின் நிறத்தில் ஒருகுட்டி. அதைப் ஈன்றதற்கான சத்தமோ, குட்டி பிறந்ததற்கான இரத்தமோ காணப்படவில்லை.

தன் குட்டியை மட்டுமல்ல கூட்டையும் துப்பரவாக்கி வைத்திருந்தாள். அவள் பெயருக்கு ஏற்றால்போல் சுவீட்டியாகவும் சுட்டியாகவும் இருந்தாள். துப்பரவுபற்றிக் பேசும் மனிதர்கள் இனித் துப்பரவாகப் பேசுவதை நிறுத்துங்கள்.

நாய் தன் நம்பிக்கை குடும்பத்தவர்கள் குட்டியைத் தொட, தூக்க அனுமதித்தாள். நாய்க்குக் கை கொடுக்கக் கையில்லாவிட்டாலும் நம்பிக்கை இருந்தது. கடனை வாங்கிவிட்டுக் கணக்குக் காட்டும் தமிழர்கள் உலகில், நாயின் நம்பிக்கை உன்னதமானதே. மானிடர் கருத்தரித்தால் எத்தனை பராமரிப்பு, ஆர்ப்பரிப்பு கொண்டாட்டங்கள், சீர்கள் சிறப்புக்கள் என என்ன என்ன எல்லாமோ செய்வார்கள். தான் விரும்பிய குட்டியை தானே சுமந்து, தனக்கு தானே பிள்ளைப்பேறு பார்த்து, தானே அனைத்தையும் துப்பரவாக்கி உயர்ந்து நிற்கும் இந்த நாய்கள் முன்னால் மனிதன் எம்மாத்திரம்.

போட்ட குட்டியின் முதுகுத்தோல் பிரிந்திருந்தது. தனிக்குட்டி என்பதால் பெரியகுட்டியாகவே இருந்தது இதனால் ஏதாவது நடந்திருக்கலாம் என்று கருதி வைத்தியரிடம் கொண்டு சென்றனர். தன்குட்டியைக் காப்பாற்றப் போகிறார்கள் கடவுளுக்கு அடுத்ததாக நாம் நம்புவது வைத்தியரைத்தானே என்று எண்ணியபடி சுவீட்டியும் குடும்பத்தினருடன் ஆவலாகக் காத்திருந்தாள். குட்டி குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பாகப் பிறந்ததனால் முதுகின் நரப்புகள் மூடப்படவில்லை. பின்கால்கள் இரண்டிலும் உணர்வில்லை. ஆதலினால் குட்டியைக் கொல்லவதே சிறந்தது என வைத்தியர் அறிவுறுத்தினார். இன்பம், துன்பம் இரண்டும் ஒரே நேரத்தில். இன்பத்தைக் கண்டு பூரிக்கும் மனிதன் துன்பத்தை தாங்கத்தயாராக இல்லை. சிரித்தவாய் மூடு முன்னர் கவலையில் கண்ணீர் உப்புக்கரித்தது. வேதனையுடன் வேறுவழியின்றி கொலைக்கான அனுமதி வழங்கப்பட்டது. பெற்றவளிடம் ஒரு கேள்வி...? கேட்டால் அது மிருகம் என்பர் இந்த மானிடர்.

கொலைசெய்வதற்கு பத்துவருட பல்கலைக்கழகப்படிப்பு, டாக்டர் என்ற பட்டம் வேறு. கொல்வதற்கு 300குரோண்கள். உயிரின்விலை இதுதானா? தாய்மையின் விலை? காசுவாங்கிக் கொலை செய்யும் தொழிலுக்குப் பெயர்தான் வைத்தியமா?

என்ன நடக்கப் போகிறது என்பதை அறியாத சுவீட்டி பெற்றோரையும் வைத்தியரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு நோயுள்ள தன்பிள்ளையை நக்கிக் கொண்டிருந்தாள். மனிதமொழி அதற்குத் தெரிந்திருந்தால் அது அன்றே அவர்களைப் பாய்ந்துக் கடித்துக் குதறியிருக்கும். தன்முன் இருகால்களாலும் குட்டியை பிடித்தவண்ணம் நக்கிக்கொண்டே இருந்தாள் சுவீட்டி.

கொல்வதற்கு அனுமதி, மரணசாசனம்!

வைத்தியரால் எழுதப்பட்டு வளர்ப்புப் பெற்றோரிடம் கையெழுத்துக்காகக் கொடுக்கப்பட்டது. குழந்தைகளும் பெற்றோரும் அழுது கொண்டிருந்தனர். நாய்களை இங்கு நாய்களாக வளர்ப்பதில்லை பிள்ளைகளில் ஒன்றாகவே கருதுகிறார்கள். கையெப்பமிட்டுவிட்டு வளர்ப்புத்தாய் திரும்பியபோது தாய்நாய் சுவீட்டி தன்பிள்ளையை தானே கழுத்தில் கடித்துக் கொன்றுவிட்டு பரிதாபமாக அங்கு நின்றவர்களைப் பார்த்தது. அனைவரும் முழித்த கண்களுடன் மூச்சடைத்து நின்றனர். வைத்தியர்களில் இருந்து நின்றவர்கள் அனைவரும் அதிர்ந்தே போனார்கள். கையொப்பமிடும் வரை காத்திருந்து தன்குட்டியை நக்கிக்கொண்டிருந்த சுவீட்டி, கையெப்பமிட்டதும் தன்குட்டியை கொன்றதற்கான காரணம் என்ன? மனிதர்களின் மொழி நாய்க்குப் புரிந்திருந்ததா? மனிதரது எண்ணங்களை அது உணர்ந்திருந்ததா? டாக்டர் என்ற கடவுளே கைவிட்ட பின் என்னைப் பாசம் பரிவுடன் வளர்த்து பெற்றோர்கள் தன் பழியைச் சுமக்கக் கூடாது என்பதால் தான் கொன்றதா? பிள்ளைப்பாசத்திலும் மேன்மையானது நன்றி என்றதா?

''நான் பெத்தபாவத்தை நீங்கள் யாரும் சுமக்கவேண்டாம். நான் பெத்த நொண்டிக் குட்டியை நானே கொன்று விடுகிறேன்'' என்று குட்டியின் கழுத்தைக் கடித்துக் கொன்றுவிட்டு பாவப்பட்ட மனிதா என்பதுபோல் மனிதரைப் பார்த்தது. குலம் கோத்திரம் எதுவானாலும், நிறம் குணமெதுவானாலும் மிருகங்கள் பாரபட்சம் பார்ப்பதில்லை. உணர்வுகளால் நிற, மத, சாதி பேதமின்றி வாழும் மிருகங்கள், மனிதர்கள் போல் தன்னினத்தைத்தானே அடித்துக் கொல்வதில்லை.

மனிதமொழி நாய்க்குப் புரிந்தது.

ஆனால் நாயின்மொழி யாருக்குப் புரிந்தது?

நாய்கள் வாய்திறந்தால் மனிதப்பேய்கள் வாய் மூடவேண்டி யிருக்கும். அதிஸ்டம் மனிதனின் பக்கமே இருந்திருக்கிறது. பாவத்தை நீங்கள் செய்யாதீர்கள் அதை நானே செய்து நன்றியையும் நன்றிவிசுவாசத்தையும் உயர்நட்பையும் காட்டியது. நன்றி, நேர்மை, மனிதாபிமானம், உண்மை உறவு, உயர்நட்பில் நாய் உயர்ந்தே நிற்கிறது. நாய்களின் உலகில் மனிதமும் மனிதரும் நாறியே கிடக்கின்றனர்.

(nackeera@gmail.com)

# இது இவர்களின் காலம்

அகிலேஸ்வரன்
கனடா



நேரம் இரவு பன்னிரண்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அபார்ட்மெண்ட் பல்கனியில் நின்றுகொண்டு ரோட்டை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் கௌரி.

தீபாவை இன்னும் காணவில்லை. வீட்டிற்குள் இருக்கவும் முடியாமல், பல்கனியில் நிற்கவும் முடியாமல் இருதலைக்கொள்ளி எறும்பாக தவித்துக்கொண்டிருந்தாள் கௌரி. உள்ளே இரண்டாவது மகள் துளசி உறங்கிக் கொண்டிருந்தாள். நேரம் நகர்ந்துகொண்டே போனது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மனித நடமாட்டமே இல்லாமல் எங்கும் ஒரு நிசப்தம். மெல்லிய குளிர் காற்று உடலை தழுவிச் செல்ல பல்கனியில் கிடந்த கதிரையில் சாய்ந்துகொண்டாள் கௌரி. தீபாவை இன்னும் காணவில்லை.

பத்து வருடங்களுக்கு முன்னர் திடீரென்று கணவன் மாரடைப்பால் இறந்து போக இரண்டு பெண் குழந்தைகளையும் வளர்த்தெடுக்க கௌரி பட்ட சிரமம் அவளுக்குத்தான் தெரியும்.

அன்பும், அளவான கண்டிப்போடும் தான் பிள்ளைகளை வளர்த்தாள். 'தகப்பன் இல்லாமல் வளர்ந்த பிள்ளையள். நாளைக்கு ஒரு கெட்ட பெயரையும் சம்பாதிக்கக் கூடாது' என்பதை சொல்லிச் சொல்லியே வளர்த்தாள். 'சிங்கிள் மதராக'ப் பதிஞ்சதில் அரசாங்கம் இருக்க இடமும், வசிப்பதற்கு கொஞ்சம் பணமும் தந்தது. போதாததற்கு கௌரி ஒரு துணிக்கடையில் தையல் வேலைக்கும் போய் வந்தாள். மனத்தைரியமும், நேர்மையும், துணிச்சலும் உள்ளவள் தான் கௌரி. அதனால்தான் அவளால் இவ்வளவு காலமும் கண்ணியமாக தன்னையும், தன் பிள்ளைகளையும் கவனித்துக்கொள்ள முடிந்தது.

தீபா கல்லூரிப் படிப்பை முடித்து, இப்போது பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருக்கிறாள். கணணித்துறையை அவள் விருப்பம் போலவே தெரிவு செய்ய அனுமதித்தாள் கௌரி. இளையவள் துளசி. அடுத்த வருடம் கல்லூரிக்குச் செல்லப் போகிறாள்.

'பிள்ளைகள் படித்து நல்ல ஒரு நிலைக்கு வரவேண்டும். அவர்களை நல்ல இடத்தில் கட்டிக்கொடுத்து நல்லபடியாக வாழ வைக்கவேண்டும்' இதுதான் கௌரியின் மண்டைக்குள் குடைந்துகொண்டிருக்கும் ஒரே சிந்தனை. அப்போதுதான் தனக்கும், தன் தையல் இயந்திரத்திற்கும் ஓய்வு கிடைக்கும் என்பது அவள் நம்பிக்கை.

'கிரீச்' என்ற காதைப் பிளக்கும் ஓசையில் திடுக்குற்றுக் கண்விழித்தாள் கௌரி. காலை ஐந்து மணிக்கு இயங்கத் தொடங்கியவள் பல்கனியில் ஓய்ந்திருந்தவேளை கண்கள் சொருக கண்ணயர்ந்து விட்டிருந்தாள்.

அப்பார்ட்மண்டுக்கு முன்பாக கார் ஒன்று வந்துநிற்பது தெரிந்தது. கூடவே காதைப் பிளக்கும் ஓசையில் ஏதோ ஐரோப்பிய இசையின் அதிர்வுகள். தீபாவின் நினைவுகள் எழ அவசரமாக எழுந்து எட்டிப்பார்த்தாள்.

'முன் சீட்டில் இருக்கிறவள் தீபா போல இருக்கே' கௌரியின் நெஞ்சில் பயம் தீயாய் பற்றிக்கொண்டது. கௌரியின் நினைப்பைப் பொய்யாக்காது தீபா கார்க் கதவைத் திறந்துகொண்டு இறங்கினாள்.

அவளுடைய வயதை ஒத்த வாலிபன் ஒருவன் உள்ளிருந்து கையசைத்து தீபாவுக்கு விடைகொடுத்தான். தீபா காரின் பின்பக்கக் கதவைத் திறந்து தனது புத்தகப் பையை எடுத்து தோளில் கொழுவிக்கொண்டு அப்பார்ட்மண்டுக்குள் நுழைவது தெரிந்தது.

கௌரிக்கு அந்த வானமே இடிந்து தன் தலையில் விழுந்துவிட்டது போல் இருந்தது.

'யார் இந்தப் பொடியன். . .?'

கல்லூரியில் படிக்கும் காலத்தில் தீபாவுக்கு கஜன் என்ற 'போய்பிரண்ட்' இருந்தது அவளுக்குத் தெரியும். இரண்டு, மூன்று தடவைகள் தீபாவை 'பிக்கப்' பண்ண கல்லூரிக்கு சென்றவேளைகளில் தீபா கஜனுடன் பேசிக்கொண்டிருப்பதையும், தாயைக் கண்டதும் அவசரமாக அவனிடம் விடைபெற்றுக்கொண்டு ஓடிவருவதையும் கௌரி கண்டிருக்கிறார். அவனுடன் தீபா ஒருநாளும் வீட்டுக்கு வந்ததில்லை. அப்போதெல்லாம் இப்படி நேரம்தாழ்த்தி அவள் வீட்டுக்கு வருவதும் இல்லை. கஜன் தீபாவின் கல்லூரியில் ஒரே வகுப்பில் படிப்பவன் என்றும், படிப்பில் கெட்டிக்காரன் என்றும் தீபா தாயிடம் சொல்லியிருந்தாள். மகளிடம் பக்குவமாக சொல்லிப் பார்த்தாள்.

அவளோ, "ஹீ ஈஸ் மை போய் பிரண்ட். நீங்க சொல்லுற மாதிரி ஆம்பிளைப் பிள்ளைகளைக் கண்டதும் பயந்து, நிலத்தைப் பார்த்துக்கொண்டு நடந்து வந்தால் எல்லாரும் என்னைப் பார்த்து சிரிப்பீனம். திஸ் ஈஸ் கனடா" என்றாள்.

'இந்த நாட்டு கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் அப்பிடி. ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் நண்பர்களாக பழகிற நாடு இது. ஒருத்தரை ஒருத்தர் தொட்டுப் பழகினாலும் கெட்ட எண்ணத்தோட பழகிற ஆட்களை அடையாளம் காணுற அளவுக்கு பிள்ளைகளுக்கு அந்த அறிவும் இருக்கிறது.' கௌரி தன்னைத் தானே தேற்றிக்கொண்டாள்.

'ஒரு அளவுக்கு மேல பிள்ளைகளைக் கண்டிக்கக் கூடாது' என்று நினைத்த கௌரி மகள் மீதிருந்த நம்பிக்கையால், அவளை அவள் போக்கில் விட்டிருந்தாள்.

தீபா கஜன் நட்பும் ஒரு அளவோடு இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

'ஆனால் இவன். . .?'

'புதியவன். . .'

பல்கலைக்கழகத்திற்கு போகத் தொடங்கி ஒரு வருடம் வரை தீபா ஒழுங்காகத் தான் இருந்தாள். இப்போது இரண்டு, மூன்று மாதங்களாகத் தான் அவளது போக்கில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது. நண்பிகளுடன் பேசுகிறேன் என்று கைத்தொலைபேசியில் நீண்ட நேரமாக அரட்டையடிப்பதும், நேரம் தாழ்த்தி வீட்டிற்கு வருவதும் என்று தாயிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகிக்கொண்டிருந்தாள் தீபா. ஜாடை மாடையாக கௌரி கண்டித்தும் தீபா தன் போக்கிலேயே இருந்தாள். அவள் வீட்டிற்கு வரும்போது தீபா அநேகமாக தூங்கிக்கொண்டிருப்பாள். காலையில் எழுந்ததும் அவரவர் தன்பாட்டில் தங்கள் தங்கள் அலுவல்களை நோக்கி பறக்கும் அவசரம்.

தாய் பிள்ளைகளுக்குள் கூட ஒருவரோடு ஒருவர் பேச எங்கே நேரம்?

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த தீபா, தாய் தன்னை உறுத்துப் பார்ப்பதைக் கண்டும் காணாதவளாக தனது அறையை நோக்கி நடந்தாள். கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு மகளை விசாரித்தாள் கௌரி.

"அம்மா, இன்றைக்கு 'ஸ்பெஸல் கிளாஸ்' இருந்தது. அது முடிஞ்சு ஒரு 'பிரெண்ட்' வீட்ட போயிற்று வாறன். அதுதான் கொஞ்சம் லேட்டாகீட்டுது. . ."

"கொஞ்சம் லேட். . .? இப்ப எத்தினை மணி தெரியுமா?' என்றாள் மகளை ஆத்திரத்துடன் நெருங்கிய கௌரி.

"ஓ. . . அம்மா. எனக்கு உங்களோட கதைச்சுக்கொண்டிருக்க நேரமில்லை. நாளைக்கு எனக்கு 'எக்ஸாம்' இருக்கு. பிளீஸ். . நாளைக்கு கதைப்பம்."

“நாளைக்கு என்ன கதைக்கிறது? இப்ப எனக்கு மறுமொழி சொல்லு” என்றாள் கௌரி.

திரும்பி தாயின் முகத்தைப் பார்த்தாள் தீபா. தாயின் முகத்தைப் பார்த்ததும் சற்றே தணிந்து “சொல்லுங்க இப்ப உங்களுக்கு என்ன தெரியவேணும்?” என்றாள்.

“அது ஆரு பிரண்ட்? இப்ப உன்னை கொண்டுவந்து ட்ரொப் பண்ணினவனா அந்த பிரண்ட்? இவ்வளவு நேரமும் அப்பிடி என்ன கதை உங்களுக்கு?” கௌரியிடமிருந்து சீறிப்பாய்ந்தது கேள்விக்கணைகள். ஒன்றும் பேசாமல் சுவரைப் பார்த்தபடி நின்றாள் தீபா. மகளின் தோள்களை வருடியபடி அவளுக்கு கொஞ்சம் புத்திமதிகளைச் சொன்னாள் கௌரி. எரிச்சலாக உணர்ந்தாள் தீபா. அவள் முகம் இருண்டு கறுத்தது.

“ஸோ வட்? இப்ப நான் என்ன பெரிய பிழை செய்துட்டன். ஹீ ஈஸ் மை போய் பிரண்ட்”

“நானும் அவரும் கதைச்சுக்கொண்டு இருந்தம். இன்டைக்கு கொஞ்சம் லேட் ஆகீட்டுது. அதுக்கேன் இவ்வளவு அட்வைஸ் பண்ணுறீங்க. நான் மற்ற நாட்களில இப்பிடி லேட்டா வந்திருக்கிறனா? இன்றைக்கு மட்டும்தான் கொஞ்சம் லேட்டாகீட்டுது”

மகளின் வார்த்தைகளைக் கேட்டதும் உடைந்துபோனாள் கௌரி. ஏழு அல்லது எட்டு மணிக்குள் வீட்டுக்கு வந்து சேரவேண்டும் என்பது அவளது கட்டளை. அதை மீறி பிள்ளைகள் இருவரும் செயல்ப்பட்டதே இல்லை. தோழிகளின் வீட்டில் சேர்ந்து படிக்கப் போவதாகக் கூறினால் கூட நன்றாக விசாரித்து, அதை உறுதி செய்தபின்னரே அவர்களை அனுப்புவாள். தன்னுடைய கட்டுப்பாட்டில் பிள்ளைகள் நல்ல முறையில் வளர்ந்துவருகிறார்கள் என்றுதான் கௌரி நினைத்தாள். ஆனால் தீபா இன்று கதைத்த விதம் அவளது உறுதியை உடைத்துவிட்டது.

“முந்தி அந்தப் பெடியன் கஜனோட ‘போய்பிரண்ட்’ என்று சொல்லிக்கொண்டு திரிஞ்சனியல்லோ. அது என்ன மாதிரி?” சந்தேகத்துடன் கேட்டாள் கௌரி.

“அம்மா அது. . . அவர் கொலிஜ்ஜில படிக்கேக்க அவன் என்ர ‘போய்பிரண்டா’ இருந்தார். பிறகு அவன நான் விட்டிட்டன். அவன் ஒழுங்கா படிக்கிறதில்லை. அவனுக்கு சரியான முறையில உடுப்பு உடுக்கக் கூடத் தெரியாது. இவரின்ர பெயர் பிரதீபன். நல்ல பெடியன். படிப்பு. . . விளையாட்டு. . . கராட்டி என்று சரியான ‘அக்டிவ்’. அவையளின்ர குடும்பமும் நல்ல குடும்பம். நல்ல வசதியான ஆட்கள். நான் அவையளின்ர வீட்ட போயிருக்கிறன். நல்லா ஆக்களோட பழகத் தெரிஞ்ச ஆக்கள். பிரதீபன்ர அம்மா பார்மஸியில வேலை செய்யிறா. அப்பாவும் ஒரு எக்கவுண்டன். நல்ல சனங்கள். நல்ல வசதியா இருக்கீனம்.”

மகள் அவர்களின் புகழ் பாடுவதை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள் கௌரி.

“அதெல்லாம் சரி. உனக்கு இப்ப என்னத்துக்கு உந்த சினேகிதங்கள் எல்லாம். முதல்ல படிப்பை முடி. அதுக்குப் பிறகு மற்ற விசயங்களை பார்க்கலாம். உனக்கு ஒரு தங்கச்சி இருக்கிறாள். நாளைக்கு அவள் உன்னப் பார்த்துத்தான் பழகப் போறாள்.” என்ற தாயை கடுமையாகப் பார்த்தாள் தீபா.

“அப்ப ஒரு பெடியனோட சுத்தித் திரிஞ்சாய். இப்ப வேற ஒருத்தனோட சுத்திக் கொண்டு திரியுறாய். ஆரும் இதுகளை கேள்விப்பட்டால் எவ்வளவு வெக்கக் கேடு. உங்களை எல்லாம் வளர்க்க நான் எவ்வளவு கஸ்டப்படுகிறன்...” விசும்பினாள் கௌரி.

தாயின் கண்கள் கலங்கியதும் ஓடி வந்து அணைத்துக்கொண்டாள் தீபா.

“அம்மா இப்ப ஏன் அழுகுறீங்க. இது என்ர வாழ்க்கை. என்ர வாழ்க்கை எப்படி இருக்க வேணும் என்று நான் தான் முடிவெடுக்க வேணும். எனக்கு ஒரு ஆளைப் பிடிக்காட்டில் நான் எப்பிடி அவரோட வாழ ஏலும்? ஒருத்தருக்கு ஒருத்தர் ஒத்து வராட்டில் விட்டுட்டு, எனக்கு பிடிச்ச ஒரு ஆளை தெரிவுசெய்யுறதில என்ன பிழையிருக்குதம்மா. இன்றைக்கு நான் லேட்டாக வந்தது பிழைதான். இனி நான் லேட் பண்ண மாட்டன்”

தீபா ஏதேதோ சொல்லி தாயைத் தேற்றத் தொடங்கினாள்.

நாட்கள் நகர்ந்தன. தீபா தாய்க்கு கொடுத்த வாக்கை தவறாமல் கடைப்பிடித்தாள். எப்போதும் போலவே வேளைக்கு வீட்டிற்கு வந்துவிடுவாள். ஆனால் அவள் நடை, உடையில்தான் அதிக மாற்றங்கள் தெரிந்தன. மகளுக்கு அதிகம் கட்டுப்பாடுகளை விதிக்க கௌரியால் முடியவில்லை.

யூனிவேர்சிட்டி முடித்து தீபா நல்ல வேலையில் சேர்ந்துகொண்டாள். இளையமகள் துளசியும் யூனிவேர்சிட்டிக்குப் போகத் தொடங்கியிருந்தாள். தீபாவுக்கு திருமணத்தை முடித்து வைத்துவிட்டால் ஒரு பெரிய பாரம் குறைந்துவிடும் என்று தீர்மானித்தாள் கௌரி. அப்போதுதான் தீபா அவள் தலையில் பெரிய கல்லைத் தூக்கிப்போட்டாள்.

அன்று வழமைபோல வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பியிருந்தாள் கௌரி. அவள் வந்து சிறிது நேரத்திற்குள்ளாகவே தீபாவும் வீட்டிற்கு வந்துவிடுவாள். நண்பர்களுடன் விருந்து, அல்லது எங்காவது போகிறாள் என்றால் முன்கூட்டியே தாயிடம் சொல்லிவிடுவாள்.

மாலை மயங்கும் வேளையாகியும் மகள் வீடு திரும்பவில்லை. யோசனையுடன் சென்று தொலைபேசியை சோதித்தபோது தீபாவின் கைத்தொலைபேசியிலிருந்து ஒரு செய்தி அனுப்பப்பட்டிருந்தது.

“அம்மா நான் தீபா பேசுறன். பிரதீப் வேலை அலுவலாக அமெரிக்கா போறார். நானும் அவரோட போறன். நீங்க யோசிக்க வேண்டாம். நாளைக்கு வந்துடுவன்”

அதிர்ந்துபோய் உட்கார்ந்து விட்டாள் கௌரி.

‘தீபாவுக்கு எப்படி இவ்வளவு மனத் தைரியம் வந்தது?’

‘ரெண்டு பேருமாகப் போய் அங்க ஒருநாள் தங்கியிருந்துபோட்டு வரப்போகீனம் என்று கொஞ்சம் கூட கூச்சம் இல்லாமல் சொல்லிப்போட்டு போயிட்டாளே’

'ஏதாவது நடந்துதென்றால் என்ன செய்ய.?' தன்னையே நொந்துகொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

'என்ர சம்மதம் கூட அவளுக்குத் தேவையில்லாமல் போயிட்டுது'

'பொத்திப் பொத்தி வளர்த்தன். ரெக்கை முளைச்சவுடன தங்கட இஷ்டத்துக்கு பறக்க வெளிக்கிட்டுட்டாள்'

கௌரி தனக்குள் புலம்பினாள்.

'இன்னும் முறையாக கலியாணம் பேசி முற்றாக்க இல்லை. அதுக்குள்ள பறக்கிறாள். இது எங்கபோய் முடியப்போகுதோ?' ஒரே கலக்கமாக இருந்தது கௌரிக்கு.

திடீரென்று எதையோ நினைத்து எழுந்த கௌரி குளியல் அறைக்கு சென்று முகத்தைக் கழுவி வெளியில் செல்லத் தயாரானாள். துளசியை கதவை தாழ்ப்பாள் போட்டு பூட்டச் சொல்லிவிட்டு வெளியேறினாள்.

அண்மையில் பிரதீப் வீட்டிற்கு அவனுடைய பிறந்த நாள் விழாவுக்காக தீபா தாயை அங்கே அழைத்துச் சென்றிருந்தாள். பிரதீபின் பெற்றோரைச் சந்தித்து பிரதீபனையும், தீபாவையும் கண்டித்து வைக்கும்படி கேட்டுக்கொள்வதற்காகவே அவள் இப்போது புறப்பட்டு வந்திருந்தாள். அவள் சொல்வதை அவர்கள் எப்படி புரிந்துகொள்ளப் போகிறார்களோ? என்று அவளுக்கு அச்சமாகவும் இருந்தது. திருமணத்திற்கு முன் பிள்ளைகள் இப்படி ஒன்றாக ஊர் சுற்றுவதை எந்தப் பெற்றோர்களும் அனுமதிக்க மாட்டார்கள் என்ற சிறுநம்பிக்கையுடன் தான் அவள் அவர்களின் வீட்டைத்தேடி வந்தாள்.

'தீபா இப்பிடி அடங்காமல் அவனோட வெளிக்கிட்டுத் திரியுறதைப் பார்த்து அவையள் எவ்வளவு அசிங்கமாக கதைக்கப் போகீனம். ஆத்தைக்காரியும் விட்டிட்டாள் என்று என்னைத் தான் வாய்க்கு வந்தபடி சொல்லுவீனம்' கௌரியின் மனம் எதையெதையோ நினைத்து சங்கடப்பட்டுக்கொண்டது.

கௌரி 'கோலிங்' பெல்லை அழுத்தியபோது பிரதீப்பின் அம்மா கதவைத் திறந்தார். ஆச்சரியத்துடன் அவளை வரவேற்று உபசரித்தார். உள்ளே பிரதீபன் தந்தையார் அமர்ந்திருந்தார். தான் வந்த விசயத்தை எப்படி கதைப்பது என்ற தயக்கத்துடன் 'லிவிங்ரூமில' கிடந்த சோபாவில் அமர்ந்துகொண்டாள் கௌரி.

"எங்க தீபா வரேல்லையா?" என்று அந்த அம்மாள் கேட்டபோதுதான் அவர்களுக்கும் தீபா பிரதீபுடன் சென்ற விசயம் தெரியாது என்பது புரிந்தது. தயங்கியபடி விசயத்தைச் சொன்னபோது அவர்களுக்கும் அதிர்ச்சிதான்.

"பிரதீப் இதைப்பற்றி எங்களோட ஒன்றும் சொல்ல இல்லை. தெரிஞ்சிருந்தால் நாங்கள் இப்பிடிப் போக விட்டிருக்கமாட்டம்" என்றார் சற்றே கோபம் தோய்ந்த குரலில் பிரதீபின் அப்பா. பிள்ளைகளின் காதல் விவகாரம் ஏற்கனவே அவர்கள் அறிந்ததுதான்.

மேலைத்தேய நாடுகளில் பதின்மவயதுகளிலேயே தங்களுக்கு உரிய துணையை தாங்களே தேடிக்கொள்கிறார்கள். அவர்களுடன் பழகும் எமது தமிழ் தலைமுறையும் அதையே தான் விரும்புகிறது. பெற்றோர் தடை விதித்தாலோ அவர்களையும் மீறிக்கொண்டு செயல்பட பிள்ளைகள் தயங்கவே மாட்டார்கள். பெற்றோர்களுக்கு பிள்ளைகளுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதே நாகரிகமாகவும், ஒரே வழியாகவும் இருக்கிறது.

இந்த நிலையில்தான் இப்போது கௌரியும், பிரதீபனின் பெற்றோர்களும் இருந்தார்கள். விரைவிலேயே பிள்ளைகளுடைய திருமணத்தை நடத்தி விடுவதென முடிவெடுத்தனர்.

"நீங்க தீபாவின்ர குறிப்பை ஒருக்கா எங்களுக்கு ஈமெயில் பண்ணிவிடுங்கோ. நான் நாளைக்கே கோயில்ல ஐயரிட்ட குடுத்து ஒரு நல்ல நாளாகப் பார்க்கிறன்" என்றார் பிரதீபனின் அம்மா.

"கலியாணச் செலவையெல்லாம் இரண்டு பகுதியும் ஆளுக்கு அரைவாசியா பிரிச்சுக்கொள்ளுவம்.

எங்களுக்கு மகன் ஒரே பிள்ளையென்றதால பெரிய மண்டபமாக எடுத்துச் செய்யவேணும். கலியாணத்தை கோயில்ல சிம்பிளாக முடிச்சிட்டு, வரவேற்பை மண்டபத்தில வைச்சிருவம். பிள்ளையளும் அதைத்தான் விரும்புவீனம்'' என்றார் பிரதீபனின் தந்தை.

''எங்கட பக்கத்தில இனசனம் அவ்வளவாக இல்லை. நான் கொண்டாட்டங்களுக்கு போறதும் குறைவு. என்னுடைய சகோதரர்களும், ஒரு பதினைஞ்சு, இருபது குடும்பங்களும் தான் எங்கட பக்கத்தில வருவீனம்'' என்றாள் கௌரி. மகளின் திருமணம் திடீரென்று முடிவானதும் சந்தோசமும், ஒருவித பதட்டமுமாக இருந்தது.

அவர்களே எல்லாவற்றையும் பொறுப்பாய் பேசுவதும், பங்குகொள்வதும் கௌரிக்கு சந்தோசமாக இருந்தது. 'தீபா சொன்னது உண்மைதான். நல்ல சனங்கள்' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டாள். வீட்டிற்குத் திரும்பும்போது அவள் மனம் இலேசாக இருந்தது. எதையெதையோ நினைத்துப் பயந்துகொண்டு வந்தாள். எல்லாம் நல்லபடியாகவே நடந்து முடிந்து, தீபாவின் கலியாணமும் நடக்கப் போகிறது. இந்த விசயத்தை மகளிடம் உடனேயே சொல்லவேண்டும் என்று பரபரத்த உள்ளத்தை கட்டுப்படுத்திக்கொண்டு அவர்கள் வரவுக்காக காத்திருந்தாள்.

மறுநாளே பிரதீப்பின் தாயார் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

''வார ஆவணிக்கே கலியாணத்தை வைக்கலாம். ஐயர் ரெண்டு திகதி குறிச்சுத் தந்திருக்கிறார். தீபாவோட கதைச்ச பிறகு எந்த நாள் வைக்கலாம் என்று முடிவுசொல்லுங்கோ''

கௌரிக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. இவ்வளவு விரைவிலேயே மகளுக்கு திருமணம் நடக்கப் போவதை அவள் நினைத்தும் பார்க்கவில்லை. மாதங்களை எண்ணிப்பார்த்தாள். அவள் விரைவாகச் செயல்ப்பட வேண்டியிருந்தது. உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்தது போன்ற உற்சாகம் தொற்றிக்கொண்டது.

மற்ற தமிழ் குடும்பங்களைப் போல அவள் தன் பிள்ளைகளுக்கு அவர்கள் பெரிய பிள்ளைகளானபோது செய்யும் கொண்டாட்டத்தைக் கூட செய்யவில்லை. சாதாரண சடங்கோடு நிறுத்தியிருந்தாள். அவள் வீட்டில் நடக்கப் போகும், அவள் நடத்தப் போகும் முதலாவது விசேசம் இதுதான்.

'இப்பவே சொன்னால்தான் வேலையில் லீவெடுக்கலாம்...'

'யார்யாருக்கு சொல்ல வேணும் என்டு லிஸ்ட் போட வேணும்..'

'தீபாவுக்கும், துளசிக்கும் கொஞ்சம் நல்ல உடுப்புகள் எடுக்க வேணும்..'

செய்ய வேண்டிய காரியங்களைப் பட்டியில் போட்டபோது தலைக்கு மேல் பெருஞ்சுமை ஏறிவிட்டது போல் தோன்றினாலும், அது சுகமான சுமையாகவே இருந்தது. சந்தோசமாய் தலை நிமிர்ந்தபோது சுவரில் மாட்டியிருந்த புகைப்படத்திலிருந்து தீபாவின் அப்பா தன்னைப் பார்த்து முறுவலிப்பது போல ஒருகணம் அவள் உணர்ந்தாள். அவள் உடல் பரபரத்தது.

"அம்மா.." என்று அழைத்தபடி தீபா உள்ளே வரும்போது தான் அவள் சுயஉணர்வுக்கே வந்தாள். கூடவே பிரதீப். இருவரையும் அன்புடனும், ஆவலுடனும் நோக்கினாள் கௌரி.

வீட்டிலே பெரிய பூகம்பம் வெடிக்கப் போகிறது என்ற பயத்தில்தான் தீபா பிரதீபனை துணைக்கு அழைத்து வந்திருந்தாள். தாயின் முகத்தில் காணப்பட்ட சந்தோசத்தின் ரேகைகள் அவளுக்கு நம்பமுடியாமல் இருந்தது. தீபா மெல்ல உள்ளே நழுவ, தயங்கியபடி நின்ற பிரதீபை அமரச்சொன்னாள் கௌரி.

சற்றும் எதிர்பாராமல் திடீரென்று திருமணத்தைப் பற்றி கௌரி பேசவும் பிரதீப் சங்கடத்துடன் நெளிந்தான். மௌனமாக கௌரி சொல்வதையெல்லாம் கேட்டுத் தலையாட்டினான்.

"ரெண்டு பேருன்ர படிப்பும் முடிஞ்சிட்டுது. நீங்கள் நினைச்ச மாதிரியே ரெண்டு பேருக்கும் வேலையும் கிடைச்சிட்டுது.

இனி இப்பிடி சுத்தித் திரிஞ்சுகொண்டு இருக்கக் கூடாது. நேரகாலத்தோட உங்கட கலியாணத்த முடிக்க வேணும்'' என்ற கௌரி தங்களது திட்டத்தையும் சொல்லிமுடித்தாள். தீபாவும் அதிர்ச்சியும், ஆச்சரியமுமாய் தாய் சொல்வதையெல்லாம் கதவருகில் நின்று கேட்டுக்கொண்டிருந்தாள்.

''அன்ரி, எங்கட கலியாணத்தைப் பற்றி நாங்கள் 'ஆல்ரெடி' கதைச்சிருக்கிறம். நீங்க தீபாவோட இதைப்பற்றி கதையுங்கோ'' என்ற பிரதீப் அவசரமாக வெளியேறினான்.

பிரதீபனின் கார் புறப்பட்டுச் செல்லும்வரை காத்திருந்த தீபா தாயின் முன் வந்து நின்றாள். ''அம்மா உங்களை நாங்கள் கேட்டனாங்களோ எங்களுக்கு கலியாணம் செய்து வையுங்க என்று. எங்களுக்கு இப்ப கலியாணம் வேண்டாம்'' என்றாள் பிடிவாதமாக.

புன்முறுவல் மாறாமலேயே ''இப்ப இப்பிடித்தான் சொல்லுவாய். கலியாணம் முடிஞ்சாப் பிறகு பார்.'' என்றபடி மகளின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள் கௌரி.

''இல்லையம்மா. நான் சீரியஸா சொல்லுறன். எங்களுக்கு கலியாணம் வேண்டாம். நானும் பிரதீபனும் இதைப் பற்றி ஏற்கனவே கதைச்சிருக்கிறம். எங்களுக்கு கலியாணம் செய்யுற ஐடியாவே இல்லை''

''என்ன பிள்ளை? அப்ப என்ன கலியாணம் கட்டாமல் குடும்பம் நடத்தப் போறீங்களோ? சீச்சீ. . என்ன அசிங்கமான கதை கதைக்கிறாய்? அதுதான் ரெண்டுபேருமாச் சேர்ந்து ஒன்றா வெளிக்கிட்டுத் திரியிரியளோ..''

''ஓம் நாங்க இப்போதைக்கு கலியாணம் செய்ய மாட்டம். உங்களுக்கு நாங்கள் ஒன்றா இருக்கிறது பிடிக்க இல்லையென்றால் நாங்கள் ஒரு அபார்ட்மெண்ட் எடுத்துக்கொண்டு போய் இருப்பம். 'லைப்ல செட்டில்' ஆகிறதுக்கு முதல் நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுகொள்ள வேணும். 'லைப் இஸ் லோங்' நான் அவரோட வாழுறதுக்கு அவர் சரியான ஆளா என்று நான் டிசைட் பண்ண வேணும்.

வாழ்க்கையை நல்லா ‘என்ஜாய்’ பண்ண வேணும். அதுக்குப் பிறகு... வேணுமென்டால் கலியாணம்...” தங்கள் திட்டத்தை விளக்கினாள் தீபா.

“இவ்வளவு காலமா போய் பிரண்ட், போய் பிரண்ட் என்று சுத்தித் திரிஞ்சாய். இன்னும் அவரை நீ புரிஞ்சுகொள்ள இல்லையா..? ஒன்றா இருந்து குடும்பம் நடத்திப் பார்த்துத் தான் தெரிஞ்சுகொள்ளுவியோ...?”

“அப்ப பிரதீபன் உனக்கு ஒத்துவராட்டில் இன்னொருத்தனை பார்ப்பியா?” நெஞ்சுகொதிக்க மகளைப் பார்த்துக் கேட்டாள் கௌரி. இனம் புரியாத பயத்திலும், அதிர்ச்சியிலும் அவள் உடல் லேசாக நடுங்கியது. மகள் சொன்ன செய்தி அவளுக்கு புதிதாக இருந்தது.

“அம்மா நான் அப்படிச் சொன்னனானோ? எங்களுக்கு இப்ப கலியாணம் செய்யுற ஐடியா இல்லை. இன்னும் ரெண்டொரு மாதத்தில நாங்கள் ஒரு அபார்ட்மென்டுக்கு போகப்போறம். அங்கதான் எங்கட ‘லைப்ப ஸ்டார்ட்’ பண்ணப் போறம்” என்றாள் தீபா.

“சீச்சீ என்ன கேவலமான கதை கதைக்கிறாய். என்ன ஆட்டக்காரத்தனம் இது? உந்த விளையாட்டெல்லாம் இந்த வீட்டில நடக்காது. ஒழுங்கு மரியாதையா நடக்கவேணும். எங்கட பண்பாடு, கலாச்சாரம் எல்லாத்தையும் மறந்திட்டியா? உனக்குப் பிறகு நான் துளசிய ஒருத்தனுக்கு கட்டிக்குடுக்க வேணும்” என்ற கௌரி முகத்தில் அறைந்தபடி அழத்தொடங்கினாள்.

“அம்மா திஸ் ஈஸ் மை லைப். நான் தான் ‘டிசைட்’ பண்ண வேணும். நான் மற்றவைக்காக பார்க்க ஏலாது.” என்ற தீபாவின் கன்னத்தை கௌரியின் கைகள் பதம் பார்த்தன.

“மரியாதையாக நான் சொல்லுறதைக் கேட்டு நட.” என்ற தாயை ஒருபுறமாக விலக்கிக் கொண்டு தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டாள் தீபா.

மகளின் பேச்சிலும் செயலிலும் அதிர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள் கௌரி.

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அமைதியாக இருந்த துளசி, தாயை அணைத்து ஆறுதல்ப்படுத்தினாள். மகளிடம் சண்டை போட்ட களைப்பிலும், அதிர்ச்சியிலும் கண்களை மூடி சோபாவில் சாய்ந்து உயிரற்ற பிணமாகக் கிடந்தாள் கௌரி. புயலுக்குப் பின்னான அமைதியைப் போல வீட்டின் உள்ளே பேரமைதி நிலவியது.

வெளியே கிரீச் என்ற சத்தத்துடன் கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து காதை அடைக்கும் ஆபிரிக்க நாட்டு இசை. கௌரி மெல்ல நடந்து பல்கனியைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். பிரதீபனுடைய கார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

‘‘யேஸ் பிரதீப்.. ஓகே.’’ என்றபடி தன் கைத்தொலைபேசியை அணைத்தாள் தீபா. அரவம் கேட்டுத் திரும்பியபோது, தீபா தன் தோள்களில் ஒரு டிரவலிங்க் பையை மாட்டிக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு வெளியே போவது தெரிந்தது.

பல்கனிக்கு வெளியே பிரதீபன் கார் டிக்கியைத் திறந்து தீபாவின் கைகளில் இருந்த பையை வாங்கி உள்ளே திணித்துக்கொண்டான். முன்கதவு வழியாக தீபா காரில் ஏறி அமர்ந்துகொண்டாள். பிரதீபன் மறுபுறம் ஏறிக்கொள்ள கார் காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தது. நடப்பவை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றாள் கௌரி.

நேரம் இரவு பன்னிரண்டு மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. அபார்ட்மெண்ட் பல்கனியில் நின்றுகொண்டு ரோட்டை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் கௌரி. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மனித நடமாட்டமே இல்லாமல் இரவு நீண்டுகிடந்தது.

கௌரிக்கு அழ வேண்டும் போலவுமிருந்தது. . . அழக்கூடாது போலவுமிருந்தது. . .

(editor@tamilauthors.com)

கௌரி - மலேசியா

# வேர் பிடிக்க இயலாத அழுகும் மனங்கள்

கௌரி - மலேசியா



'மூக்கா மாசாம்'

மூன்றாவது வீட்டு அண்டியைக் காண நேரும் பொழுதெல்லாம், அவள் சொன்ன, அந்த வார்த்தைதான் எனக்கு சட்டென்று ஞாபகத்துக்கு வரும்.

'மூக்கா மாசாம்' என்றாள் என்னவென்று ஆரம்பத்தில் எனக்குத் தெரியாது. ஆனால் என்னை ஏதோ சொல்லுகின்றாள் என்பது மட்டும் புரிந்தது.

ஒருநாள் அம்மா அவளோடு கதைத்துக் கொண்டு இருக்கும் பொழுது, 'மூக்கா எண்டால் என்ன பிள்ளை அர்த்தம்?' என்ற அம்மா தான் கேட்டாள்.

'மூக்கா எண்டால் முகம்...'

'ஓ'

'ஏன் மலாய் கற்கப் போறீங்களா?'

'கத்துக் குடுப்பியள் எண்டால் கத்துக்கலாம்'

'கேளுங்கோவன்'

'எங்களுக்கு இல்லை. . எங்கட பொடியளுக்குத்தான் கத்துக் கொள்ள வேணுமாம்'

'கேக்க சொல்லுங்கோ. . .'

'ஏதோ. . .ஒரு வார்த்தை சொன்னவன் பிரவாகன். . . என்ன வார்த்தை அது?'

அம்மா என் அறையை நோக்கி குரல் கொடுக்க, பதில் சொல்லாமல் அழுத்தமாய் அமர்ந்திருந்தேன்.

சில சமயங்களின் நான் அப்படித்தான்!

கதிரையை விட்டெழும்பி, என் அறைக்கு முன்னால் வந்து நின்றபடி மறுபடியும் கேட்டாள்.

'ஏண்டா தம்பி. . . என்ன வார்த்தை அது. . .முக்கா. . .முக்கா. . மசம் எண்டுதானே ஏதோ சொன்ன நீ?'

அடுத்த நிமிடம் அந்த அண்டியின் குரல் இடைவெட்டியது.

'இங்கால வாங்கோ தேவி! எனக்குப் புரிஞ்சிப் போச்சுது அது என்னெண்டு'

'அப்ப சொல்லுங்கோ'

'முக்கா மாசம் இல்ல! மூக்கா மாசம்'

'ஆமா. .அப்பிடியென்டால் என்னது?'

'சிரிப்புக் காணத மூறுசிகளையெல்லாம் நாம அப்பிடித்தான் சொல்லுவோம்! கேன்னாபுபா மூக்கா மாசாம்? எண்டு கேட்பம். . . .அப்பிடியெண்டா. . .'ஏன் உனக்கு முகம் உர்ரென்று இருக்கு என்று அர்த்தம்? ''மாசாம் எண்டால் புளிப்பு என்று அர்த்தம்! இப்ப புரிஞ்சிட்டுதா?'

‘ஓ’

அண்டியோட மலாய் விளக்கத்திற்குப் பின்பும் அம்மா இரண்டு நாளாய் அப்படித்தான் இருந்தவள். . ஏதோ என்னுடைய முகத்தை பிடுங்கி அவளுக்கு ஒட்டி விட்டது போல.

கோபமா? அல்லது வேதனையா என்று சொல்ல முடியாத முகபாவம் அது? இரண்டு நாட்களுக்குப் பிறகும் அந்த முகமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள இயமால் நேரடியாக அம்மாவைக் கேட்டேன்.

‘ஏனம்மா இப்பிடி விசர் புடுச்சி கெடக்கீறீங்க’

நான் கேள்வியை முடிக்க முன்பே அம்மா அழுகையில் வெடித்து சிதறினள்.

‘என்னாலதானடா இப்பிடி போன நீ?’

ஒரு வினாடியில் அம்மாவின் நோக்கத்துக்கு அர்த்தம் புரிந்தது எனக்கு!

வாய் வார்த்தை தொலைத்த குழந்தையாய் ஒரு நிமிடம் நானும் கூட தடுமாறித்தான் போனேன்.

‘இருபத்தி மூண்டு வயதுப் பொடியனுக்கு வாழ்க்கையில் எந்த சுகமும் கிடைக்காதபடி செய்திட்டன். எங்கடை துன்பங்கள் எங்களோடையே முடியாமல் வாசல் வரைக்கும் வந்ததை தட்டி நாசப்படுத்தி விட்டு விட்டேன்’ அம்மாவின் ஓலம் சகிக்கக் கூடியதாக இல்லை.

வீட்டுக்குள் இருந்த அனைவரும் அம்மாவை கட்டிக் கொண்டு அழுதோம்.

அம்மாவை அனைவரும் சேர்ந்து தேற்றினோம்.

‘இல்லையடா. .ஒண்ட சந்தோசத்தை பிடிங்கி போட்டு பாவியடா நான்! ஒரு நிமிசம் சுயநலமாய் யோசித்ததாலை அது உண்டை சுபீட்சத்தை சுட்டுப் போட்டுதடா’

'அப்பிடியெல்லாம் இல்லை.. . .சும்மா பையித்தியம் போலை கதையாதையுங்கோ'

அம்மா எங்கே வருகின்றாள் என்று தெரியும்.

முடிந்து விட்டுப் போனதென்று விட்ட காலவதியான சங்கதி அது. அதை எதற்கு கிண்டி கிளறி அம்மாவின் மனதை மேலும் நோக செய்ய. . ?

என் முதல் காதலே எந்த வலுவான காரண காரியமும் இல்லாமல் தோல்வியில் முடிந்ததை எந்த வாலிப மனதால் தாங்கிக் கொள்ள முடியும்.

கையாலாகாத ஏமாற்றத்தில் மனம் சோர்ந்து 'கெக்கலி' கொட்ட ஆரம்பித்தது என்றால் அது ஆமிக்காரனின் 'போமை' விட மோசமானதாக இருக்கும்.

குடும்பத்திற்கு மூத்த மகனாய் வீட்டைப் பார்க்கும் கடமைகள் இருந்தாலும், ஏதும் செய்ய முடியாத சவலைப் பிள்ளையாக ஒரு மூலையில் முடிங்கிக் கிடப்பது ஓர் அகதி முகாமில் அடங்கிக் கிடப்பது எந்த விதத்திலும் குறைந்தது இல்லை.

இது போன்ற ஆக்கமில்லாத சிந்தனை ஏதும் வேண்டாம் என்று, நான் லெப்டெப்பில் தலைமூழ்கிக் கிடக்க அம்மாவும் அத்தையும் நான் நித்திரை என்ற நினைப்பில் கதைத்துக் கொண்டிருப்பது அத்தனையும் என் காதில் தெளிவாக விழுகின்றது.

'எங்கட வாழ்க்கை தான் கொட்டிக் கவுந்தாச்சு என்றால், பிள்ளையின்ரை வாழ்க்கையின்ரை வாழ்க்கையையும் சீரழிச்சுப் போட்டன். அவன்ரை படிப்புக்கும் வழி செய்ய ஏலல்ல. . .அவன் ஆசைப்பட்ட தொழிலியையும் விடலல்ல. . .அங்கேயே கிடக்கிறன் எண்டான். அதுக்கும் இடம் கொடுக்கேல்ல. . .கடைசியிலை அமைஞ்சு வந்த நல்ல வாழ்க்கையையும் தட்டி விட்டுட்டுன். எங்களோட விதி! எங்க பிள்ளையளுக்கு நாங்களே பெரிய பிழை செஞ்சிட்டம்'

அம்மா விசும்புவது காதில் விழுந்தாலும் எழுந்து போய் அவளுடன் கதைக்க இயலவில்லை.

அத்தை வாயைத் திறக்காமல் இருக்கின்றாள் என்றாள் உள்ளுக்குள் கிடந்து புளுங்குகின்றால் என்று அர்த்தம். தன் தம்பி குடும்பம் இப்படித் தத்தளிக்க தான்தான் காரணம் என்ற குற்ற உணர்ச்சி அவள் கழுத்து மட்டத்திற்கு.

மறுபடியும் மறுபடியும் எதற்றாக முடிந்து போன சங்கதிகளை அம்மா கதைத்துக் கொண்டு கிடக்கின்றாள்? நான் மயூரியை கல்யாணம் முடித்திருந்தால் இன்னேரத்துக்கு 'பைலட்' படிப்பில் ஒரு வருசத்தை முடிச்சிருப்பேன். இப்படி ஏதும் செய்ய முடியாத அகதியாக முடங்கியிருக்கத் தேவையில்லை. ஒவ்வொரு மாதமும் அம்மாக்கு பணத்தை அனுப்பிக் கொண்டு இருந்திருப்பேன். இப்பொழுது கனடாவில் இருக்கிற மாமாவும், அமெரிக்காவில் இருக்கிற மாமாவும் முறை போட்டு மலேசியாக்கு காசு அனுப்பிக் கொண்டு இருக்கின்றார்கள்.

மயூரியைக் கட்டிக் கொண்டு அவுஸ்திரேலியாக்குப் போயிருந்தால் யாரோ ஒருவனுக்கு சீதனமாக கொடுத்த அவரின் அத்தனை பணமும் மிஞ்சியிருக்கும்.

'ஒரே பெண். . .அத்தனையும் உங்களுக்குத் தான்' என் கரங்களைப் பிடித்துக் கொண்டு சொன்ன பொழுது மாமாவின் கண்ணில் கண்ணீர் தான். ஆனால் அன்றைய கண்ணீருக்கும் இன்றைய கண்ணீருக்கும் எவ்வளவு வித்தியாசம்.

'ஆரோடையும் கதைக்கிறான் இல்லை. . .எத நாங்கள் ஆக்கி வைச்சாலும் திங்கிறான் இல்லை. . . இந்தக் கொடுமையை விட அங்கை இருந்து செத்திருக்கலாம்'

அம்மா இன்னமும் அமைதியடையவில்லை.

மொழி தெரியாத நாட்டில் யாருடன் நாம் கதைக்க முடியும்? அப்படிக் கதைக்க முடிந்தாலும் எதைக் கதைப்பது? நாடு விட்டு நாடு ஓடி வந்ததையா? 'அகதிகளா' என்றுதான் அடையாள முத்திரை குத்துவோம் என ஐ.நா.க்காரன் முத்திரை குத்தியவீயலா? எத்தனை நாட்களுக்கு இதுகள் பற்றி பேச முடியும்?

செக்கைச் சுற்றிவரும் மாடுகள் போல அம்மா, அத்தை, பிள்ளை என்று நாங்கள் மூவரும் திரும்ப திரும்ப கதைத்து கதைத்து எங்கள் மனம் வலுக்குன்றிப் போவதை விட வேறு எதுவும் ஏதுமில்லை.

சாப்பாட்டையும் தூக்கத்தையும் தவிர இப்போதைக்கு ஏதுமில்லாமல் இயந்திரமாய் மாறிப்போன வாழ்க்கையில் இயல்புத் தன்மையை எங்கிருந்து கொண்டு வர முடியும்?

எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

அந்த மூன்றாவது வீட்டு அன்ரி ஒரு நாள் அம்மாவிடம் சொன்னாள், 'ஏ பிள்ளை. . .எங்காவது வெளிக்கடுகிறதெண்டால். . .கையிலை பாஸ்போட்டைக் கொண்டு போகச் சொல்லு. எங்கட நாட்டிலை வெளிநாட்டுக்காரன்கள் பெருகிட்டான்கள். . .எவனாவது பொலிஸ்காரன் நிறுத்தி வைச்சு மலாயழலை கேட்டான் எண்டால், பதில் சொல்ல ஏலாம, பையிலை பாஸ்போட்டுமில்லாம உங்கட பொடியங்கள் முழிசுதுகளெண்டா, ரெண்டு தட்டுத் தட்டி லோர்ரியிலை ஏத்திடுவான்.. .கவனம்!'

'இல்லைப் பிள்ளை. .அவன்கள் பாஸ்போட் கொண்டுபோறதில்லை. .. ஆனால் யு. என். லேற்றர் எப்பவும் இருக்கும்'

'யூ. என். லேட்டரா.அது என்ன அது?'

'இங்க. .உங்க நாட்டுக்கு வந்தப்பிறம் யு. என். சேன்டர்களிலை ரிவீயியாக பதிந்து கொண்டம்'

'ஏன்?. .. நீங்க ஒண்டும் இந்தோனேசியாக்காரன் மாதிரி கள்ளத்தோணிபோலை வரேல்லையே?'

'ஒம் பிள்ளை. .எங்கடை மச்சாளின்ரை ஸ்பொன்சரிலைதான் வந்தனாங்கள். .இப்ப பாதுகாப்புக்காக இதைச் செய்திருக்கிறம்'

'ஓமா. . இப்பதான் இப்பிடிச் சங்கதிகளைக் கேக்கிறம்'

'இந்த நாட்டிலை குடியிருக்க முடியாது எண்டு உங்க அரசாங்கம் சொன்னால் வேற நாட்டுக்கு போக அரசாங்கம் உதவி செய்யும்'

'சரிதான்'

ஆமாம்! எந்த நொடியும் நாங்கள் அகதி என்ற நினைவோடைதான் ஜீவிக்க வேண்டியிருக்கிறது. இந்த மானம் போன வாழ்க்கைக்குப் பதிலாக சொந்த மண்ணிலேயே சாகலாம் என்றால், அம்மா என் பேச்சைக் கேட்கிறாள் இல்லை.

ஒவ்வொரு மனுஷனுக்கும் உடம்பிலை இரண்டு விடயம். ஒன்று உயிர். மற்றது சூடுசுரணை. சூடுசுரணை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. . உயிரோடை வாழ்ந்திட்டால் போதும் என்பது அம்மாவின் போராட்டம்!

அது இன்னமும் எத்தனை நாட்களுக்கு என்று தான் எனக்குப் புரியவில்லை. இந்த உயிர்வாழும் போராட்டத்திற்காக நாம் நிறையவே இழந்திருக்கின்றோம்.

இந்த உயிர் நிலைச்சிருக்கும் காலமெல்லாம் எந்த எந்த நாடுகளில் எத்தினை நாட்கள் சூடுசுரணை இல்லாமல் வாழ்ந்திருக்கின்றோம் என்பதுதான் ஞாபகத்தில் முந்திக் கிடக்கும்.

அம்மாவின் கைவசம் இந்த வேதனைக்கு என்ன தீர்வு உண்டு?. ..அது எனக்குத் தெரியவில்லை.

"ஊரிலை. . எங்கட சனங்கள் இன்னமும் 'முகாமிலை' முடங்கி கிடந்து சாகவும் ஏலாமல் வாழவும் வழியில்லாமல் கிடக்க, உயிருக்கு பயந்து வந்த நாட்டிலை, சொகுசா ஒரு பதினைஞ்சு மாடிக் கட்டிடய பிளாட்டிலை சொகுசாய் இருந்து கொண்டு காதல் தோல்விக்காக வெசர் புடிச்சு புலம்புறிறே...' என்ற யாரோ என்னை இடிச்சுக்காட்டுவதும் நடக்காமல் இல்லை.

நாட்டை விட்டுப் புறப்பட வேண்டும் என அம்மாவும் ஐயாவும் முடிவெடுத்த பொழுது அப்பாவைத் தவிர நான் அம்மா எல்லோரும் எங்கள் தொழிலை இழந்தோம். ஐயா கணக்கில் புலி. ஆனால் அந்த வேலையிலும் நிரந்தரமில்லை. பிள்ளைகளுக்கு ரியூசன் கற்றுக் கொண்டு இருந்தார் என்பதால் அவருக்கு துறப்பதற்கும் இழப்பதற்கும் அதிகமாய் அவரிடம் எதுவுமில்லை.

ஆனால் மலேசியா வந்த கொஞ்ச நாளிலேயே அம்மாவை விட்டுத் தொலைந்து போனார்!

அன்று தான் நான் என் சிரிப்பைத் தொலைத்திருக்க வேண்டும்.

ஐயாவின் மூத்த சகோதரி மலேசியா என்றபடியால் அவருடைய உதவியால் தான் அனைவரும் கொழும்பை விட்டு இங்கு வந்தோம்.

'அடுத்து என்ன' என்று நானும் அம்மாவும் யோசித்துக் கொண்டிருக்க ஐயா மட்டும் இங்குள்ள ஒன்றுவிட்ட, இரண்டு விட்ட சகோதரங்களைத் தேடிக் கண்டடைந்து பழம் பெருமைகள் பேசி களிப்புற்று இருந்தார்.

ஆனால் ஆறே மாதத்தில் அகதி அந்தஸ்தில் இருந்த எங்கள் தூர உறவுக்காரப் பெண்ணுடன் ஐயா இந்த நாட்டை விட்டுப் போய்விட்டார் என்ற செய்தி வந்தது.

அன்று தான் மயூரியின் அம்மா என்னிடம் பேசினார், 'உங்களை மாப்பிளை பார்க்க மலேசியா வரப்போகின்றோம்' என்று.

என்னுடைய லப்டெபப்பில், 'ஸ்கைப்பி' இணைப்பில் சிரித்துக் கொண்டு அவர் பேச, வெட்கத்துடன் சிரித்துக் கொண்டிருந்த மயூரியின் முகத்தை, இன்னமும் நான் மறக்கவில்லை.

அம்மாவின் கண்ணீரில் இருந்து வந்த கண்ணீரையும் தான்.

அம்மா வாய் திறந்து ஏதும் சொல்லவில்லை. 'உன்ரை ஐயாவை இழந்திருக்கிற இந்த சமயத்திலை உன்னையும் இழக்கவா?' என்பது தான் அவள் சிந்திய கண்ணீரின் செய்தியாக இருந்தது. மயூரியிடம் எல்லாவற்றையும் சொன்னேன்.

'எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை பிரவாகன். நீங்கள் அம்மாவை முதலிலை கவனியுங்கோ. எனக்கு இன்னொரு 'அலையன்ஸ்' வெயிட்டிங்கில் இருக்கிறார். அவரும் நல்ல கொட்டிக்காரன்' மயூரியின் முடிவு இந்த மெட்டீறியல் உலகில் எனக்கு எந்த பெரிய அதிர்ச்சியையும் கொடுக்கவில்லை. அம்மா அன்று எதுவும் பேசவில்லை. ஆனால் இன்று அதற்காக பெரிதும் அழுகிறாள். அழுது கொண்டே இருக்கின்றாள்.

இருபத்தைந்து வருடம் உடனிருந்த புருஷன் செய்த தவறால் இருபத்தைந்துநான்கு வயது மகனின் வாழ்வைப் பாழாக்கி விட்டேன் என அவள் மனதுக்குள் புகைந்து கொண்டு இருக்கிறாள்.

உலகத்தில் 'எக்ஸ்பைரி டேட்' இல்லாதது கவலை மட்டும் தானே?'

கனடாவிலும் அமெரிக்காவில் உள்ள அம்மாவின் அண்ணன்மார்கள் முயற்சித்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

இனி எந்த மண்ணில் எங்கள் கால்கள் வேருன்றப் போகின்றன?

போகின்ற நாட்டில் உடன் பிறந்தவர்களின் அருகாமையில் அம்மா கொஞ்சம் ஆறுதலாக இருக்கலாம்.

அதுவரை தமிழ் பேசும் இந்த நாட்டில் நாங்கள் அகதியாய். அகதியாய்..

(tmellisai@yahoo.com)

# சக தர சய சமன்

கோசல்யா சொர்ணலிங்கம்
ஜேர்மனி



தொலைபேசி இனிமையாகப் பாடி அழைத்தது.

அதையெடுத்து 'வணக்கம்' என்றேன்.

'வணக்கம் அக்கா இங்க, குகன் மாப்பிள்ளையின்ர மச்சான்'. . . ஒரு விநாடி திகைத்து, யார் அந்த உறவை ? இவ்வளவு சீக்கிரம் கொடுத்தது என்ற நினைவோடு ..

'சூரியா வெளியில போயிருக்கிறார்'

'இல்லையக்கா இன்றைக்கு மூன்றுமணிக்கு கல்யாண விசயமாகக் கதைக்க சூரியா நேரம் தந்தவர். அது விடயமாகக் கதைக்கிற. . .சந்திக்கிற இடத்தைச் சொல்லத்தான் எடுத்தனான்'

'சரி சொல்லுங்கள் குறிக்கிறன்'

'உங்களிடம் லைசன்ஸ் இருக்கிறதா? ரோட்டு எழுத வேணும்'

அடக்க முடியாத சிரிப்பை அடக்கியபடி, ஏன் ரோட் எழுத லைசன்ஸ் தேவையா ? கேட்க வேண்டியதை, இதையும் அடக்கி.. சூரியா நினைவில் வந்து விட, எப்பவும் கதைக்குக் கதை சொல்லதேயும். சொல்லும் பதம் வெருட்ட 'நீங்க சொன்னால் குறித்து சூரியாவிடம் சொல்ல முடியும் ' என்றதுமே ..

அப்ப சரி .. உங்கட இடத்திலிருந்து நூறு கிலோ மீற்றர் தூரம் வரும். அங்கயிருந்து நாற்பது எடுத்து, இரண்டு காட்டுவான், அது கண்டு தாண்ட உன்ராத் வரும். . . உன்ராத் அவுஸ்பாட் இல் (வெளியேறும் பாதை) இறக்கி வலது கைப்பக்கம் திரும்ப ஒரு மஞ்சள் நிறப் பாலம் வரும். . .அதைத் தாண்டிக் கொஞ்சம் வர பிஷா கட் இருக்கிறது. நான் அங்கதான வேலை செய்கிறனான். அங்க சந்திக்கலாம். மாப்பிள்ளையும் வருவான்.

இத்தனையும் சொல்லி முடித்த வாயோடு, என் குறிப்பில் சந்தேகம் கொண்டு 'அக்கா சூரியா வரவிட்டு எடுக்கவா ' குகன் கேட்டதும் ..

'இல்லை ..இல்லை நாங்க வருவம். ' என்ற அந்தப் பக்க அடுத்த கதைக்கு இடம் கொடாது.தொலைபேசியை வைத்த கையோடு அந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டேன்.

திருமணம் தங்கை யாழினிக்குத்தான். அதற்கான ஒழுங்குதானிது. ஒழுங்கில் பலத்த வித்தியாசம். நல்லூர் தேரடி, சிவன் கோவில் வீதி, நாற்சார வீடும் போய் இங்க இப்போ பிஷா கட், மெக்டோனால்ட் மாறி மாறி மின்னியது.

ஒரு நாள் முழுவதும் நடந்த என்ர திருமணம். எனக்குள் அந்த நிகழ்வுகள் நீண்டன. தோழனாய் நின்ற அண்ணா என்ர கையைப்பிடித்து தன்ர கன்னத்தில் வைத்து அழுதது. . . இரண்டாம் நாளே மூத்த அண்ணா என்னைப்பார்க்க வந்து மாப்பிள்ளை வீட்டாரிடம் கேலிக்குள்ளானது...

'வெற்றிலையில்வைத்து பெண்ணை தந்த விட்டு, எங்கு வந்தீர்கள், தங்கச்சியைக்கொண்டு போகவா? அவருடைய அத்தனை பட்டபடிப்பும் பாசத்தில் பதிலற்றுப்போகவே அப்பாவும் தடுமாறி நிற்க, அம்மா எல்லோரையுமே சமாளித்தது. இத்தனையும் ஒவ்வொன்றாக கண் வழிய. . .அந்தக் காலம் இனித்தது.

எனக்கிருந்த இந்த உறவுகள் யாழினிக்கு, இந்த உறவுகளும், உகந்த இடமும் இல்லை என்ற தவிப்பிலாழ. . . என்ன இருந்தாலும் நானும் சூரியாவும் முழுதாக அக்கறை எடுக்க வேணுமென வாய்விட்டு சொல்லி எழ. . . யாழினி தலையைத் துடைத்தபடி 'அடிவானம் வானம் கடலோடு உறவாடுமா '? என்ற பாடலைப் பாடிய படியே குளியலறையால் வந்து தன் அபிமான , அந்தப் பாடகியின் மீதிப் பாடலையும் தொடர்ந்து எனக்கு முன் வந்து நின்று பாடிக் கொட்டிக் கொண்டிருந்தாள்

சூரியா வருகிற காலடியோசை கேட்டு கதவைத் திறந்தேன்.

தொலைபேசியில் குகன் சொன்ன விடயத்தை சூரியாவிடம் சொன்னதும் 'ஓமோம் ..சந்திக்க நேரம் கொடுத்தனான் ' என்றதுமே. . .

'அப்ப எனக்கேன் சொல்லேல்ல ? அப்ப நீங்களே போய் எல்லாம் பேசி முடித்து வாருங்கள் சரியா ?

'இங்க, யாழினிக்குக் கேட்கப் போகிறது... என்ன பருப்பில்லாமலா கல்யாணச்சோறு' என்று தன் வழமையான பகிடியை விட்டபடியே போனவரை மீண்டும் ஒரு தொலைபேசி அழைப்பு அருகழைத்ததும் சூரியாவின் கவனம் திசைமாறியது.

யாழினி ஜேர்மனி வந்து மூன்று மாதங்கள். . . அவள் அங்கு ஆசிரிய சேவையிலிருந்தவள். . .அங்கேயுள்ள தனிமையால் அவளை எம்முடனே அழைத்த போது,அவளும் உறவுகளோடு ஒன்றியப்பட்டு வாழவேண்டுமென்ற உந்துதலால் வந்து சேர்ந்தாள் .

நானும் சூரியாவும் குகன் சந்திக்க வரச்சொன்ன குறிப்பிட்ட இடத்தைக் கண்டடைந்தோம். சூரியாவுக்கு இந்தத் திருமணத்தில் நல்ல விருப்பமாக இருந்தது. காரணம் மாப்பிள்ளை என்ர ஊர். சுரேசின் குடும்பம். தெரிந்தவர்கள் பிரச்சனையிராது என்ற நம்பிக்கைதான்.

தேசம் விட்டு தேசம் வந்தாலும் தெரிந்தவரைச் செய்ய வேணும் என்ற விருப்பம்.

சுரேஷ் மரியன் வைத்திய சாலையில் மருத்துவ தாதியாக வேலை செய்கிறான். என்ர அம்மாவுக்கு ஒரு டொக்டரைத் தன்ர பிள்ளைகளில் ஒன்றுக்கு எடுக்க வேணுமென்ற ஆசையிருந்தது. வெளி நாட்டில் மருத்துவ தாதி என்றால் தாய் நாட்டில் டொக்டர் மாதிரித்தான் என்று கதைப்பார்கள், போகும் போது வழியெல்லாம் அங்கய நினைவுகள் நகைச்சுவையோடு வழிந்தது.

சின்னப் பொடியனாய் ஊரில் பார்த்த சுரேஷ் கொஞ்சமாய் பருத்தும், மினு மினுப்பாயும் இருந்தான். குறுந்தாடி ஒன்று நாடியில் ஒட்டியும் ஒட்டாமலுமிருந்தது.

ஒரு வேளை சுரேசுக்கு இலக்கிய இரசனை இருக்க வேணும். அல்லது சோம்பேறியாக இருக்க வேணும். எனக்குள் நினைவுக் களமோடி பயமுறுத்தியது.

கல்யாண விடயத்தைப் பேச ஆயத்தமாக எங்கட முகக் குறியை அறிந்த பாவனையோடு, தான் ஆயத்தப் படுத்தி கொண்டு வந்த மாதிரியை, பக்குவமாய்த் தன் படிப்பு, பதவி பற்றி ஒப்பிவித்து மாப்பிள்ளை முடிக்கவே 'யாழினியும் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி அங்க படிப்பித்துக் கொண்டிருந்தவா, அவவை அங்க தனிய விடேலாது எண்டு கூப்பிட்டிற்றம்', என்று சூரியா சொல்லிக் கொண்டு போக , சுரேஷ் தன்னிடமிருந்த ஒரு பேனையால் வெள்ளைத்தாளென்றில் சகவும் சயவும் போடுவதை அவதானித்தபடி நானிருந்தேன்.

சிலர் ஏதாவது கீறிக் கொண்டுதான் கதைப்பார்கள் .அந்தப் பழக்கமோ என்ற நினைப்பிலும் நானிருந்தேன்.

குகன் குறுக்கிட்டு 'பொம்பிள்ளையின்ர படம் ஏதாவது இருக்கா, அல்லது வந்து பார்க்கலாமா என்றதும் நான் யாழினிக்குத் தெரியாமல் எடுத்த வைத்திருந்த அவளின் புகைப்படத்தை மேசையின் மேல் வைத்தேன்.

குகன் அதையெடுத்து சுரேஷிடம் கொடுக்க, நான் சுரேஷின் முகத்தையும், அவனது கையையும் மெல்ல மெல்லவே கவனித்தேன் . அவனுடைய முகம் மலர்ந்தது . அதே வேளை கை தாளில் சக அடையாளம் போட்டதை கை அசைவில் அவதானித்தேன்.

இதற்குள் சூரியா 'யாழினி நல்ல வெள்ளை , நல்லாப் பாடுவா ' மீண்டுமொரு சக அடையாளம் அத்தாளில் விழ சூரியா பக்கம் திருப்பி ஓங்கியொரு குட்டு ஒன்றைப் போட்டேன் . நிஜமற்ற நினைவில் தான்.

பத்து நிமிடங்களால் வாறதெனக் கூறிக்கொண்ட குகனும், மாப்பிள்ளையும் தனியாகச் சென்று தமக்குள்ளாய் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர்.

எனக்கும் இது வசதியாகப் போகவே, அவசரமாக யாழியின் படத்தை எடுத்து என்னிடம் வைத்துக் கொணடேன்.

இதற்கிடையில் சூரியாவிடம் 'எல்லாத்துக்கும் தலையாட்டாதேங்க. . .சீதனம் கேட்கத்தான் தனியாப் போய்க் கதைக்கினம்..ம் ..ம்.. இந்தா வருகினம். . .வருகினம்.'

சூரியா சொல்லுங்கள் .என்றதும் 'இப்ப சுரேஷ் நேர்ஸாகத்தானிருக்கிறார், பிறகு டொக்டராகவும் படித்து வரலாம் .இங்க அந்த வாய்ப்பிருக்குத்தானே படிப்பு விடயத்தில்.. நான் அவசரமாகப் குறுக்கிட்டு 'அப்போ இப்ப கல்யாணம் வேண்டாம், பிற்போடவா' என்றேன்.

'இல்லை.. இல்லையக்கா' என்ற குகன் 'வேறிடத்தில் ஐம்பது ஆயிரம் மார்க்கும், யாழ்ப்பாண வீடும் தாறதாய் நெருக்கினம் ..யாழினியை மாப்பிள்ளைக்குப் பிடிச்சுப்போட்டுது.

அதோட படிச்சிருக்கிறதால இங்க வேலையும் செய்யலாம், அதோட உங்கட யாழ்ப்பாண வீட்டையும், ஒரு நாற்பது ஆயிரம் டொச் மார்க்கும்.... தரச்சம்மதமாயின் நாளைக் குறிக்கலாம்', என்றதுமே குகனைப் பார்த்த சூரியாவின் முகம் கொஞ்சம் மாறியது.

'யாழப்பாண வீடுகள் இப்ப அங்க இருக்குதா? அதில யார் இருக்கினமோ .. என்ன இருந்தாலும் சுரேசுக்கு டொச் பிராஜாவுரிமை இருக்கிறது. சிலவேளை அங்கு போய் வர வாய்ப்புண்டு. ' என்று குகன் அதையும் ஒரு தகுதியாகக் கூறவே . . . 'அப்ப ஏன் பிரஜாவுரிமையெடுத்தவர்?' என்று சூரியா கேட்க, எனக்கு சபாஷ் போட்டு அள்ளிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது. ஆசையை அடக்கிக் கொண்டேன்.

'யாழினியும் மாப்பிள்ளைப் பார்க்க வேணும்தானே' என்று குகன் சொன்னதும், நாண்டு கொண்டு இவரைத்தான் வேணும் என்று யாழினி எங்களிடம் கேட்கலாம் என்ற நினைப்பு அவர்களுடையது.

நான் பத்தடி பாய்ந்தால் அவள் இருபதடி பாய்வாள். என் இரத்தமல்லவா அது. இன்னும் இள ரத்தமல்லவா என்ற நினைப்பு எனக்குள் வந்து வந்து போயின. . .

பேச்சுவார்த்தை முடித்து விடை சொல்வதாய் அவர்களிடம் விடைபெற்று வீட்டுக்கு வரும் வழியில் ஒரு 'பார்க்' அருகே காரை நிறுத்திய சூரியா, வீட்டை போய்கதைக்கேலாது சுசி இங்கேயே கதைக்கலாம். உன்னிடம் எவ்வளவு இருக்கிறது? ஏன்றதுமே ஏன் பெற்றொல் அடிக்கவா? காடை கொடுங்களேன், அல்லது பிலிம்றோல் வாங்கவா? என்னிடம் 10 மார்க்தான் இருக்கிறது. சூரியாவிற்க்கு படம் எடுப்பது ஒரு பொழுதுபோக்கு. அதனால்தான் கேட்டேன்.

சூரியா சிரிப்போடு இல்லை சுசி. . . எனக்கு லோன் எடுக்கலாம், மிச்சம் ஒரு பத்தாயிரம் சேர்க்கவேணும் எனக்கு மெல்ல விளங்கியது. முடிவு எடுத்துவிட்டீர்களா? கலியாணம் செய்ய.. யாழியின் அபிப்பிராயமில்லாமல் என்னண்டு முடிவெடுப்பீங்கள்? முதலில வீட்டபோவம். வீடு வந்துசேர ஒன்பது மணியாயிற்று.

யாழ்ப்பாண சொதி இடியப்பத்துடன் எமக்காக காத்திருந்தாள்.

மூவரும் பேசிக்கொள்ளவில்லை. யாழினி சாப்பாட்டை போட்டபடி என்ன அடிச்சு பறந்து கொண்டு போனீங்க இப்ப அமைதியாபோனீங்க என்றபடி என்னைப்பார்த்தாள் நான் சூரியாவை பார்த்தேன். சூரியா கதைக்கத்தொடங்கினார். சுரேஷ் படித்து வேலை செய்கிறார். அவரை எங்களுக்கு பிடிச்சிருக்கு. யாழினி நீயும் ஒருக்கா பார்த்து சொன்னாச்சரி.

ஏனக்கா, உனக்கென்னமாதிரி?

எனக்கா கல்யாணம்? நீ ஒருமுறை பாரன். சொல்லி முடிக்க முன்னே ஏனக்கா, நீ அத்தானைபார் எண்டு போகவிட்டு துரத்தினதை மறந்திட்டியோ? எனக்கு சுள்ளெண்டது. அது சரி பிறகு மற்றதெல்லாம் என்னமாதிரி அதுதான் எங்கட காலச்சாரம் சீதனப்பேச்செல்லாம் என்னமாதிரி?

அவசரமா யாழினி அதேன் உனக்கு?

நல்ல கதை இது என்னைக்கொண்டுபோய் காசிட்டு விலங்கிட ஓம்மெண்ட்டு வந்திட்டீங்களோ? அவையொண்டும் கனக்காகேக்கல்ல... ஒரு நாற்பதும் வீடும்தான்.

ஏன் யாழ்ப்பாணம் போய் வாழப்போறாரோ? என்ன பவுனில அவனைசெய்திருக்கினம்? பூவரசும் புழுதிக்கு கீழே சைக்கிள் வளையம் உருட்டின பொழுதெல்லாம் மறந்துபோச்சோ? ஏனக்கா உனக்கு வெட்கமில்லையா அத்தானிட்டை திருப்பித் திருப்பி கடன்பட இதுகளை எப்ப தீர்க்கப்போறாய்?

இடையிட்ட சூரியா அடுத்தபிறப்பிலும் என்றார்.

நான் அப்பவே சொன்னான் இதில எனக்கு விருப்பமில்லையெண்டு அவன் ஒரு பேப்பரோட வந்து சகவும் சயவும்போட்டுக்கொண்டிருந்தான் நான் அப்பவே அவனுக்கு பூச்சியம் போட்டிட்டன்.

தட்டில இருந்த இடியப்பத்தை இழுத்து சொதியோட குழைச்சு என்வாயினுள் வைத்தாள். அதுதானே அத்தான் என்னை எங்காயாவது தள்ளிவிடலாம் எண்டு நினைச்சிருக்கிறார்.

சீ யாழினி நான்உன்ரை அபிப்பிராயம் அறியத்தான்... எனக்கு சிரிப்புத்தான்வந்தது. சரி இதைவிடுவம் இப்ப சாப்பிடுவம்.

சுரேஷக்கு நல்ல விலைவந்தால் எங்கேயும் பார்த்து விற்கலாம்தானே என்றபடி படுக்கைக்குப்போனவேளை இரவுபூரவும் என் கண்முன்னே சகவும், சயவும் வந்து வந்து போனது. இங்கே எப்பவோவரும் பதவிக்காக விலை கேட்கும் என் மண்ணின் மைந்தன் ஒருவன்

காலையில் எழுந்ததும் தொலைபேசி பாடி அழைத்தது. அதைஎடுக்க "நான் நேசன் கதைக்கிறன்". சூரியாவின் ஒன்றுவிட்ட சகோதரன் நேசன். சுகம் கேட்டான். சூரியாவோடும் கதைத்தான். பின் தொலைபேசி யாழினியின் கைமாறியது அரைமணிநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பின் என்னைக்கூப்பிட்ட யாழினி நேசன் கதைக்கவேணுமாம் என போனைத்தந்தாள்.

"அண்ணி... நாளொன்று பாருங்கள் நானும் யாழினியும்...." எனக்கு புரிந்தது. போனை சூரியாவிடம் கொடுத்துவிட்டு யாழினியிடம் போனேன். "அக்கா இப்ப சகவும் இல்லை சயவும் இல்லை ஊரிலை நேசன் என்னைட்டை விருப்பம் கேட்டவர் அப்ப ஏற்க்கேல்லை இப்பவும் அந்த விருப்பம் நேசனுக்குள்ள இருக்கு. நாளைப்பாருங்கள்."

"புரிந்துகொண்டவர்கள்தான் புருஷன் மனைவியாக முடியும் எண்டு எப்பவும் நீதானே சொல்லிறன். நீ சொல்வதும் எனக்கு வேதம்தான்."

பெருமிதத்தால் என் நெஞ்சம் நிறைந்தது.

நன்றி - பூவரசு

(links555@aol.com)

# தலைமுறை இடைவெளிகள்

ஏன்.முரளி-டென்மார்க்



சிவலிங்கத்தார் இருப்புக் கொள்ள முடியாமல் குதித்தார். படுக்கவும் நித்திரை கொள்ளவும் மறந்தார். வழமையாக அதிகாலை வேளை எழும்பும் மனைவி கூட இன்னும் கண் விழிக்கவில்லை. லீவு காலம் தானே, பிள்ளைகள் கொஞ்ச நேரம் படுக்கட்டும் என்று நினைத்தாலும் மனம் சிறகு கட்டிப் பறந்தது. பிள்ளையை எழுப்பிக் கலகலப்பாய் கதைக்க வேண்டும் என்றே அவர் விரும்பினார்.

மெல்லென ஐன்னல் வழியே எட்டிப் பார்க்கின்றார் வழமையை விட நிலம் நன்றாகவே வெளித்திருந்தது. மனுசிக்காரி வாங்கி வந்து நட்டிருக்கிற பூ மரங்களின் அழகும் பெயர் தெரியாத அந்தப் பூக்களின் சிரிப்பும் சிவலிங்கத்தாரை மேலும் மேலும் ஆனந்தப்படுத்தின. இவ்வளவு காலமும் கண்ட கனவு நிறைவேறி விட்ட வெற்றியில் திளைத்துக் கொண்டிருந்தார்.

ஆமாம்! இவ்வருடம் நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் சுயாந்தினி எடுத்த புள்ளிகள், இன்று டென்மார்க் முழுவதும் பரவும் அளவிற்கு ஒரு பெரிய செய்தியாகி விட்டது. அவள் படித்த அந்தக் கல்லூரிக்கும் அவர்கள் வாழும் நகரத்துக்கும், ஏன்... இன்று டென்மார்க் வாழ் தமிழ் மக்களுக்குமே பெருமை சேர்க்கும் ஒரு சாதனையாகி விட்டது. நகரில் சிவலிங்கத்தார் குடும்பம் பற்றியே தமிழ் மக்கள் பரபரப்பாகப் பேசினர்.

மூன்று வருடக் கடும் படிப்பு. மகிழ்ச்சியளிக்கும் பொழுது போக்கு ஆசைகளைத் தியாகம் செய்து, இரவு பகல் என்று பாராமல் விழித்திருந்து, தாய் தகப்பனின் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சுயாந்தினி படித்திருந்தாள். எல்லாத் தமிழர்களையும் போல் இறுகிப் போன அந்த யாழ்ப்பாணத்துச் சிந்தனையாலும் எப்படியாவது நீ ஒரு டொக்ரராகத்தான் வர வேண்டும் என்ற தந்தையின் கனவை நனவாக்கி அவரது ஆசையை நிறைவேற்ற சுயாந்தினி பிரதிக்னை பூண்டிருந்தாள்.

கிம்நாசியம் (gymnasium) என்று சொல்லப்படும் அந்த உயர்தரப் படிப்பின் கடைசி நாளன்று வெள்ளைப் பட்டியுடன் கூடிய அந்த கறுத்த தொப்பி போட்ட நேரத்தில் சிவலிங்கத்தார் ஆனந்தக் கண்ணீர் பெருகி அழுதே விட்டார். அந்த நேரத்தில் அவரின் கைகளைப் பிடித்தபடியே தன் கண்களையும் துடைத்துக் கொண்டாள் மனைவி சந்திரா. அங்கே நின்ற பலர் அந்தக் காட்சியை கண்களால் விழுங்கிக் கொண்டனர்.

“இஞ்சையப்பா உனக்குத் தெரியும் தானே. . . இங்கே டென்மார்க்கில் இப்படி தொப்பி போட்ட பிறகு பிள்ளைகளெல்லாம் குதிரை வண்டியிலே தங்களுடைய வீடு வீடாகத் திரிஞ்சு குடிச்சு கும்மாளமடிச்சு திரிவது ஒரு பெரிய சம்பிரதாயம். வழி தெருவெல்லாம் கொடிகள் ஏற்றி அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் சேர்ந்து ஆரவாரப்படுவார்கள். இந்தக் காலகட்டத்தில் டென்மார்க்குக்கு ஒரு தனி அழகு தான். பிள்ளைகள் இரவு பகல் என்று பாராது தொப்பிகளுடன் திரியும் அந்தக் கண்கொள்ளாக் காட்சி எல்லோரது மனதையும் மகிழ வைக்கும். இந்தப் பிள்ளைகள் எல்லாம் எங்கள் வீட்டுக்கு வரும் போது நினைக்காத அளவிற்கு மரியாதை செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

அது எங்கடை பிள்ளைக்கும் நல்ல கௌரவமாயும் மதிப்பாயும் இருக்கும். உண்மையிலே அந்த நேரத்திலை என்ரை பிள்ளை குடிச்சாக் கூட பரவாயில்லை எனக்குச் சந்தோசம் தான'', என்று ஒரு விதப் புழுகுடன் சிவலிங்கத்தார் சொன்ன போது சந்திரா மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

''எனக்கெல்லாம் தெரியுமப்பா அதுக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து போட்டன். ஆனால் எனக்குள்ள முதற் பிரச்சினை உந்த பிள்ளையார் கோவிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் போய் ஒரு தேங்காய் உடைச்சு அர்ச்சினை செய்து விட வேணும். ஊருக்கும் கொஞ்சக் காசனுப்பி அன்னதானமும் செய்ய வேண்டும்'' என்று சந்திரா கரம் குவித்தாள். கண்கள் பனித்திருந்தது.

*

வெளிவீதியில் மாணவர் குழுவொன்று கலகலப்புடன் சென்றது.

''பிள்ளையையும் ஒருக்கா எழுப்பப்பா'', என்றார் சிவலிங்கத்தார்.

''ராத்திரி நல்லா நேரம் செல்லத்தானே வந்து படுத்தவளப்பா. கொஞ்ச நாளா ஒரே பார்ட்டியும் கூத்தும் கும்மாளங்களும் தானே. கொஞ்ச நேரம் படுக்கட்டுமப்பா பாவமப்பா பிள்ளை. இவ்வளவு காலமும் இரவு பகலென்று பாராமல் நித்திரையும் இல்லாமல் என்ரை பிள்ளை எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படிச்சது'', என்று பெருமூச்சு விட்டபடியே தேங்காயைத் திருவத் தொடங்கினாள் சந்திரா. இருவர் மனதிலும் அளவு கடந்த மகிழ்ச்சியும் பெருமையும். ''உண்மையிலே சுயாந்தினி நல்ல கெட்டிக்காரி தான். இன்று இனி ஒரு கவலையும் இல்லையப்பா பிள்ளை ஒரு டொக்ராக வந்துவிடுவாள். . . எந்த யூனிவசிற்றியிலும் அவளுக்கு இடம் கிடைக்கும். பிள்ளையைப் பார்த்து இனி இவன் தம்பியும் கவனமாகப் படிச்சுப் போடுவான்'' என்ற நம்பிக்கையும் எனக்கு இப்ப வந்திடுத்து என்றாள் சந்திரா.

சிவலிங்கத்தார் தீபம் ரி.வி.யின் இன்றைய பலன்களுடன் ஒன்றினார்.

“நேரம் காலை பத்து மணியைத் தாண்டிட்டுது. எழும்பிப் போய் குளி பிள்ளை” எனக் கூறிக் கொண்டே குசினிக்குள் போய் திரும்பவும் புகுந்து கொண்டாள் சந்திரா.

நேரம் மெதுவாகக் கரைந்து கொண்டிருந்தது. குளித்து முடித்த சுயாந்தினி கோலுக்குள் வந்து அமர்ந்து கொண்டாள். குளிச்சு இருந்தாலும் அலுப்பு இன்னும் மாறவில்லை. கண்களும் இரண்டும் இரத்தப் பழமாய் சிவந்திருந்தன. இந்தா இந்தக் கோப்பியைக் குடி எல்லா அலுப்பும் எடுபடும் என நீட்டியபடியே தாய் மகளின் அருகே வந்து அமர்ந்து கொண்டாள்.

சோபாவில் நிமிர்ந்து இருந்து கோப்பியைக் குடிக்கும் சுயாந்தினியை கண்ணிமை வெட்டாமல் பார்க்கிறாள் சந்திரா.

ஒரு நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மகளை நேருக்கு நேர் பார்க்கிறார் சிவலிங்கத்தார். தனது பிள்ளை ஓய்வாயும் ஆறுதலாயும் இருக்கிறதை எண்ணி மனதில் பெருமிதம் கொள்கிறார்.

“ஏதோ நினைத்த சிவலிங்கத்தார் பிள்ளை இனி உன்ரை பிளான் என்ன? என்ன செய்யலாம் எண்டு யோசித்திருக்கிறாய்”, என மிகுந்த அக்கறையோடு வினவினார்.

தனது பாதங்கள் இரண்டையும் கைகளால் பிடித்திருந்த சுயாந்தினி ஒரு கணம் தன் தலையை உயர்த்தி அப்பா எனக் குரலை உயர்த்தி, “நான் முன்பு சொன்னது போல் ஒரு வருஷம் ஒரு சின்ன இடைவெளி இருக்கு பிறகு தான் யூனிவசற்றிக்குப் போகப் போறன். இந்த இடைவெளியில் ஒரு சின்ன வேலை செய்து அதில் அனுபவமும் திறமையும் பெற வேணும் என ஆசை. பிறகு தான் என்ரை படிப்பைத் தொடங்ககப் போறன்”, என மகிழ்ச்சியோடு அழுத்தமாகக் கூறினாள்.

“அதுவெல்லாம் சரி பிள்ளை அப்படி என்ன வேலை செய்யப் போகிறாய்”

“மலினாவும் நானும் சேர்ந்து ஒரு பிளான் போட்டோம் அவளின்ரை தாய் தகப்பனும் உதவி செய்யப் போகினம்.

மலினாவும் நானும் ஒரு பிறிசுய (salon) லிலே வேலை செய்யப் போகிறம். சமர்காலத்து லீவுக்குப் பிறகு கொஞ்ச நேர வேலையும் பழகிக் கொண்டு மிகுதி நேரம் அங்கே வேலையும் செய்யலாம்,'' என முடிப்பதற்குள் "என்ன? என்ன? சொல்லுறாய் பிள்ளை. . .? பிறிசுயவிலையோ. . . என்ன மயிர் வெட்டும் வெலையோ . . . ? அம்பட்ட வேலையோ'', எனப் படபடத்தபடியே அவசரப்பட்டார் சிவலிங்கத்தார்.

தான் சொன்னது தகப்பனுக்கு தெளிவாக விளங்கவில்லையோ என நினைத்து மிகவும் ஆறுதலாகவும் மிகச் சாதாரணமாகவும், "ஓமப்பா ஹெயர் ஸ்ரையில் செய்யும் தொழில் தான் செய்யப் போகின்றேன்'' என்றாள் சுயாந்தினி.

சிவலிங்கத்தாருக்கு தலையெல்லாம் சுற்றியது.

இந்த இருபத்தினாலு வருட டென்மார்க் வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த சந்தோசமும் மகிழ்ச்சியும் சிவலிங்கத்தாருக்கு ஒரு நொடியில் சுக்குநூறாய் போனது. சுனாமி அடித்தது போல் ஒரு கணத்தில் எல்லாமே அள்ளுண்டு தொலைந்து போனது. மனவெளியில் சிவலிங்கத்தார் குரல் ஓவென்று அலறியது.

என்ன என்ரை பிள்ளை போயும் போயும் ஒரு அம்பட்ட வேலை பார்ப்பதா? எங்கடை குலம் என்ன? கோத்திரம் என்ன? நாங்கள் எல்லாம் யார் எப்படி எப்படியெல்லாம் வாழ்ந்த பரம்பரைகள் எங்களுக்கும் இந்த அம்பட்டத் தொழிலுக்கும். . ! என நினைவுகள் எங்கேயோ போக எங்கேயோ ஒரு மூலையில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு மிருகம் மெல்லென விழித்துக் கொண்டது போல உறுமினார். சும்மா இவ்வளவு காலமும் சும்மா கிடந்த அந்த மிருகத்தை சுயாந்தினி தட்டி எழுப்பி விட்டாள்.

இவ்வளவு காலமும் என்ரை மகளின் படிப்பு சந்தோசம் என இருந்து இவ்வளவு புகழையும் பெருமையையும் சேர்த்துத் தந்த மகளின் இந்த நிலையை உடன் குழப்பக் கூடாது. . . இவ்வளவு காலமும் கட்டிக்காத்துக் கொண்டிருக்கும் மானம் மரியாதையெல்லாம் ஒரு நொடியில் காற்றாய் பறந்திடும் இந்த விடயத்தில் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள வேண்டும் என்று மனதை திடப்படுத்திக் கொள்ள முயன்றார்.

"பிள்ளை உந்த யோசினையை விட்டிட்டு வேறு ஏதாவது ஒரு வழியைத் தேடு பிள்ளை. ஆனால் உந்த மயிர் வெட்டிற வேலை எங்களுக்கோ எங்கடை குடும்பத்துக்கோ ஒத்து வராது பிள்ளை" என இழுத்தபடி தயங்கிய படியே கதைக்கத் தொடங்கினார் சிவலிங்கத்தார்.

"ஹெயர் ஸ்ரையில்! சிகை அலங்காரம்! நாகரீகம் விரும்புகின்ற முடிதிருத்தும் கலையது ஆயிரம் ஆயிரமமாய் சம்பாதிக்கும் அழகுக்கலையப்பா"

சொல்ல முடியாத அடக்க முடியாத கோபம் வேதனையாய் வெடித்து இதயம் அதிவேகமாய் இடிக்கத் தொடங்கியது ஒரு போதும் தன் கோபத்தைக் காட்டிக் கொள்ளாது நடந்து கொள்ள வேண்டும் என நினைத்து நிதானமாகவும் பணிவாகவும் கதைக்கத் தொடங்க. . .

"என்ன பிள்ளை குழந்தைப் பிள்ளை போல் கதைக்கிறாய் இவ்வளவு படிப்பு படிச்சும் உனக்கென்ன புத்தி வரேல்லையோ..? இஞ்சை பார் பிள்ளை இது எங்கடை ஆட்கள் செய்யிற வேலையில்லைப் பிள்ளை இதை கொஞ்சம் விளங்கிக் கொள் பிள்ளை. எங்களுக்கு காசுப் பிரச்சினையோ? இல்லை. உதென்டால் நீ உழைக்கவே போக வேண்டாம். வீட்டிலேயே இரு. உனக்கு தேவையான காசு நான் தருவேன். இதைத் தொழில் எண்டு நீ இறங்கி விட்டால் பிறகு நாங்கள் ஒரு இடத்திலேயும் தலைகாட்ட முடியாமல் போய் விடும். பிறகு எங்கடை சொந்தக்காரர் ஒருவரும் எங்களை மதிக்க மாட்டினம் நல்லது கெட்டதுகளுக்குக் கூட சேர்க்க மாட்டினம். கடைசியிலே உன்னை எங்கடை ஆட்களுக்கை கட்டிக் குடுக்கக் கூட முடியாமல் போய் விடும். இதை நல்லா யோசி பிள்ளை."

சுயாந்தினி தன்னையறிந்து வளர்ந்த காலம் தொடக்கம் இன்று வரையும் தாயோ தந்தையோ இப்படி ஒரு நாளும் மனம் நோகப் பேசியதில்லை.

சுயாந்தினி பணிவோடு சொன்னாள். "அம்மா மயிர் வெட்டினால் என்ன? அதுவும் ஒரு தொழில் தானே. இதிலே என்ன குறை கிடக்கு வார்த்தைகள் மெதுவாக வந்தன.

அப்பா இதிலே என்ன பிழை கண்டு விட்டையள்'' என நிமிர்ந்து நின்றாள். அவளது வாயிலிருந்த வந்த வார்த்தைகளின் தொனிப்பும் அவள் நின்ற நிலையும் கண்களில் தெறித்த ஏளனமும் ஒரு கணம் இருவரையும் திக்குமுக்காடச் செய்து விட்டன.

தாயை விட தகப்பனுக்கே சுயாந்தினியின் குணம் நன்கு தெரியும். தான் ஒன்றை நினைத்து விட்டால், இதைச் சரியென முடிவெடுத்தால் கடைசி வரையும் ஒரு துளி கூட அரங்கமாட்டாள் என்பது அவருக்கு நன்கே தெரியும். இதில் நான் எதிர்த்தால் என்ன யார் எதிர்த்தால் என்ன பெரிய விளைவுகள் வருவதற்கே நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றது . இதைப் புத்திசாலித்தனமாய் கையாள வேண்டும் என்பதில் சிவலிங்கத்தார் மீண்டும் மீண்டும் உறுதியாகவே நின்றார்.

``பிள்ளை உனக்குத் தெரியும் தானே. நாங்களெல்லாம் நல்ல சாதிக்காரர், நல்ல பரம்பரை, இது உனக்குத் தெரியும். எங்களுக்கெண்டு சில கௌரவங்களும் மரியாதை மதிப்புக்களும் இருக்குது பிள்ளை. இந்தத் தொழில் எல்லாம் நாங்களோ அல்லது எங்கடை பரம்பரையோ செய்த, அல்லது செய்யிற தொழிலும் இல்லை. எங்கடை நாட்டிலே அடிமை குடிமை என்று இருப்பவர்கள் தான் இதைச் செய்வினம் அவை தான் கட்டாயமாகச் செய்யவும் வேணும். இதுக்கெண்டு ஆட்கள் இருக்கினம். இதை நாங்கள் செய்ய வெளிக்கிட்டால், பூமி கூடத் தாங்காது. . . இதை நினைச்சுப் பார்க்கவே மனம் கூனிக்குறுகிப் போகிறது. எங்கடை மானம் மரியாதையெல்லாம் கப்பலேறிப் போய் விடும். இது எங்கடை குடும்பத்துக்கு ஏற்றதில்ல பிள்ளை'' என விளக்கினார்

``அப்பா அம்மா இது என்ரை நீண்ட நாள் ஆசை. இது ஒரு அழகுக் கலை ஒரு மனிதனை அழகுபடுத்தும் அற்புதக் கலையப்பா. நீங்க இரண்டு பேரும் இதை நல்லா விளங்கிக் கொள்ளுங்கோ. இந்த ஒரு வருட இடைவெளியில் இதைக் கொஞ்சம் கற்றுக் கொள்ளலாம் என நினைக்கின்றேன். தயவு செய்து என்னுடைய இந்த நிலையை இந்த ஆசையை கொஞ் சமாவது விளங்கிக் கொள்ளுங்கோ.

எனக்கு பிடித்த ஒரு படிப்பைப் படிப்பதற்கு மனம் விரும்பியிருந்தும் நீங்கள் இருவரும் விரும்பிய ஒரு காரணத்துக்காகத்தான் நான் மெடிசின் படிக்கச் சம்மதித்தேன். அதற்காக என்னைத் தாயார் படுத்தியுள்ளேன். நான் கட்டாயமாகப் படிச்சும் காட்டுவேன். ஆனால் இதிலை மட்டும் தடுக்காமல் விட்டிடுங்கோ. இந்த வட்டாரத்தின் அதி உயர் வங்கியொன்றின் முக்கிய பொறுப்பாளராக இருக்கும் ஒருவரின் ஒரே மகள் மலினா என் நண்பி அவளே பிறிசுயவுக்குப் போகும் போது நான் என்ன பெரிய கௌரவக் குடும்பத்திலேயா பிறந்திருக்கிறேன்'' திறந்து விட்டிருந்த ஜன்னலைப் பூட்டியபடியே யோசிக்கத் தொடங்கினார் சிவலிங்கத்தார்.

ஊரிலுள்ள அம்பட்டக் கணபதி வீட்டுக்கு வந்து எனக்கும் அப்பாவிற்கும் மாமாக்களுக்கும் மயிர் வெட்டவரும் போது அவன் கொடுக்கும் பணிவும் மரியாதையும் வயதானவனாக இருந்தாலும் என்ரை அப்பாவுக்கு முன் கை கட்டி வாய் பொத்தி கூனிக் குறுகி நிற்கும் அந்த நிலையும் மனதில் வந்து போக அப்படியான ஒருவன் செய்யும் அந்தத் தொழிலையா என்ரை பிள்ளையும்,.? எப்போவோ ஒரு நாள் எங்கடை வீட்டு வேலைக்கு நின்ற அந்த தோட்டக்காட்டான் எங்கடை கிணற்ரடியிலே கால் வைத்ததற்கே அவனுடைய காலை அடிச்சு முறிச்சவர் என்ரை அப்பா. வீட்டுக்கு விறகு கொத்தவாற நளக்கந்தையன் வேலியடைக்கவாற பள்க்கந்தசாமி துணி எடுக்கவாற கட்டாடிசந்திரன் அம்மாவுக்கு உதவி செய்ய வாற கோவியச்சின்னாள் என ஒவ்வொருவராக நினைவில் வந்து போனார்கள்.

எப்படி எப்படியெல்லாம் அடக்கி ஒடுக்கியெல்லாம் ஆண்டனாங்கள் ஆனால் இண்டைக்கு இவள் மகளின் இழிசெயலால் நானும் எனது பரம்பரையினரும் இந்த எளிய சாதியளுக்கு சமமாகிப் போடுவேனோ என்ற பயம் இறுக்கிப்பிடிக்க சிவலிங்கத்தாரின் இதயக்குலை ஒரு கணம் குலுங்கிக் குலுங்கி இறுகிக் கொண்டது. உடம்பிலுள்ள அனைத்து நரம்புகளும் புடைத்தெழுந்தன. கோபமோ ஆத்திரமோ அல்லது ஆவேசமோ அவரால் இனம் காண முடியாமல் இருந்ததது. இவ்வளவு நேரமாய் காத்திருந்த அந்தப் பொறுமையும் அமைதியும் உடைத்தெறிந்து வெடித்ததுச் சிதறியது

மேசையிலிருந்த கண்ணாடிப் பூச்சாடியை எடுத்து என்னென்று வீசினாரோ. . . கண்ணாடித் துண்டுகள் சில்லம்பல்பமாய் நாலா திசையும் சிதறிப் பறந்தது. கண்கள் நெருப்புக் கனலாய் சுகித்தன. கால்கள் பதறிப் பதறித் துடித்தது. "இனிமேல் இங்கே ஒரு கதையும் இருக்கப்படாது. உந்த அம்பட்ட தொழில் பற்றி வாயெடுக்கப்படாது. என்ரை சுய குணத்தைக் கிளற வேண்டாம். உந்த டொக்ரருக்கும் படிக்காட்டிப் பராவாயில்லை உந்த மானம் கெட்ட சீவியத்துக்கப் போகப்படாது" என விசுவ ரூபம் எடுத்தார் சிவலிங்கத்தார்.

ஒரு ஆண்மகன் என்ற ஆதிக்கத்திலும் தகப்பன் என்ற உரிமையிலும் குடும்பத் தலைவன் என்ற பொறுப்பிலும் எல்லாவற்றுக்கும் மேலாக உயர்சாதிக்காரன் என்ற வெறியிலும் சிவலிங்கத்தார் குணம் கொண்டு நின்றார்.

"அப்பா" என சுயாந்தினி வாயெடுக்க, "பொத்தடி வாயை நானும் கன நேரமாய் பார்த்துக் கொண்டுதான் நிக்கிறன் நல்லாக் கதைச்சு நீட்டிக் கொண்டு போறாய் உனக்குத் தெரியுமே நாங்கள் இங்கே வந்து பட்ட.. படுகிற மன உழைச்சல்களும் வேதனைகளும்" என விம்மினார்.

"எத்தனை நாள் எத்தனை தரம் நினைச்சு நினைச்சு அழுதிருப்பம். ஏதோ இங்கை வந்திட்டம் கண்ட கண்ட சாதிக்காரரோடு பழகிக்கொண்டிருக்கிறம் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏதோ நாட்டுப் பிரச்சினை என்ற படியால் கண்ணை மூடி வாயைப் பொத்தி ஒரு மாதிரி சமாளிச்சுக் கொண்டிருக்கிறம். ஆனால் நீ என்னெண்டா எல்லாத்தையும் கட்டி கப்பலேற்றிப் போடுவாய் போலே கிடக்கு. உனக்குத் தெரியுமே இவள் உன்ரை கஸ்த்தூரி அன்ரி ஏன் தன்ரை மகளுக்கு வெள்ளைக்காரப் பொடியனைக் கட்டிக் கொடுத்தவள் என்று. ஏதோ அந்தப் பிள்ளை விரும்பிப் போட்டாள் என்ற காரணத்துக்காக மட்டுமல்ல. உந்தக் கண்ட கண்ட சாதியளுக்கை போய் விழுறதை விட அப்படி விழுந்து போட்டு உதுகளோடை பழகிறதை விட வெள்ளைக்காரர் எண்டால் பிரச்சினை இல்லையெண்ட ஒரு காரணத்துக்காகவும் தான் ஓம் எண்டு முடிச்சுக் கொடுத்தவள். ஏதோ நாங்கள் மட்டும் தான் இப்படியிருக்கிறம் எண்டு மட்டும் நினைச்சு விடாதே.

நாங்கள் இவ்வளவு காலமும் இந்தச் சாதி விடையத்தில் மிக நிதானமாகவும் அவதானமாகவும் பரம ரகசியமாகவும் நடந்து கொண்டிருக்கின்றோம். அப்படித்தான் வாழ்ந்து கொண்டும் இருக்கிறம். ஆனா நீயோ எல்லாம் போட்டு உடைச்சுப் போடுவாய் போல இருக்கு. நீயும் உன்ரை கண்டறியாத படிப்புக்களும். உதுகள் ஒண்டும் உனக்கு விளங்குதில்லை என்னெண்டு போய் வாசிற்றியிலே கிழிக்கப் போறாயோ தெரியவில்லை'', சந்திரா பத்திரகாளி போல் உருவெடுத்து ஆடத் தொடங்கினாள்.

''சும்மா சத்தம் போட்டு கத்தாதே பக்கத்து வீட்டு டெனிஸக்காரன் பொலிசுக்கு போன் பண்ணப் போறான். நானும் விளங்காமல் தான் கேக்கிறன் இங்கே இவ்வளவு காலமும் தமிழ் எண்டும் கலாச்சாரம் எண்டும் என்ன செய்து கொண்டு இருந்தனீங்கள். இதுகளை மட்டுமா வைச்சுக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறையள். எங்கடை நாட்டிலே சனங்கள் எல்லாம் சாகுதுகள்.. இப்ப கூட ஒரு தமிழனும் ஒற்றுமைப்படுறானில்லை. இவ்வளவு நடந்தும் கூட தமிழருக்கு விளங்கவில்லை மற்றச் சனங்களெல்லாம் என்ன சந்தோசமாயும் ஒற்றமையாயும் வாழுதுகள் என்று குறை சொன்னியள் ஆனால் நீங்கள் மட்டும் என்ன ஒற்றுமையையும் சந்தோசத்தையுமா வளர்க்கிறையள்.

தெரியாமல் கேட்கிறன் உதிலே நிண்டு கண்டபடி நீ துள்ளுறாய் எந்த அறிவின் அடிப்படையில் உந்தக் கிளீனிங் வேலைக்கு (cleaning) போய்க் கொண்டிருக்கிறாய். அங்கே நாட்டிலேயும் இதைச் செய்திருக்கலாம் தானே? கஸ்தூரி அன்ரியின் புருஷன் சிவா மாமா இங்கே என்ன செய்கிறார். மாடு வெட்டும் வேலை செய்கிறார். எங்கடை நாட்டிலே மாடு வெட்டினா அநாகரீகம் அதை இங்கே வெட்டினா நாகரீகமும்.. கை நிறையக் காசும் ஊரிலே இருந்தா சிவா மாமா செய்திருப்பாரோ.. இல்லாட்டி கஸ்த்தூரியன்ரி தான் விட்டிருப்பாவோ இல்லை அவ தான் கலியாணம் கட்டியிருப்பாவோ நீங்கள் எல்லோரும் இங்கே வந்த நேரத்திலே டெனிஷ்க்காரர்கள் உங்கள் எல்லோரையும் அகதிகள் எண்டு தான் வரவேற்றார்கள். ஒரே மாதிரியே எல்லோரையும் பார்த்தார்கள் பார்க்கிறார்கள். அவர்கள் அன்றும் அப்படித் தான் இன்றும் அப்படித்தான். ஆனால் நீங்கள், தமிழர்கள் அப்ப வந்த நேரம் எல்லாம் ஒன்றாய் இருந்தையள் பழகினையள் அதோடு காசு மட்டும் உங்களுக்கு முக்கியமாய் இருந்தது.

எதுவெண்டாலும் ஓடி ஓடி முறிஞ்சு முறிஞ்சு செய்தையள் ஆனால் இப்ப காலம் போகப் போக காசும் பிடிபட இப்ப கௌரவமும் அந்தஸ்த்தும் உங்களுக்குத் தேவைப்படுகின்றது. என்ன. . .?''

சந்திரா விறைச்சுப் போய் அசையாது சிலையாய் நின்றாள்.

சுயாந்தினி விட்ட ஒவ்வொரு அம்புக்கணைகளும் ஏகலைவன் விட்ட பாணங்களைப் போல் அவள் உடம்பு முழுவதும் சல்லடைகளாயத் துளைத்துக் கொண்டிருந்து. மகளை நிமிர்ந்து பார்க்க திராணியற்று கூனிக்குறுகினாள். கோபம் எல்லாம் அடங்கி சோகமாய் சோர்ந்து துவண்டாள்.

''அப்பா உன்னையும் கேட்கிறன் சாதி சம்பிருதாயம் குடும்பம் கௌரவம் என்றெல்லாம் கதைக்கிறீர்கள் என்ன துணிவிலே கொடிகள் பிடிச்சுக் கொண்டு ஊர்வலமாய் திரிந்தீர்கள். நாங்கள் எல்லோரும் தமிழர்கள் எல்லோரும் ஒரு கொடியின் கீழ் ஒற்றுமைப்பட வேண்டும் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கத்தித் திரிந்தது வெறும் பொய்யும் புரட்டும் போலியும் தானே. உங்களுடைய சுயநலத்தையும் வரட்டுக் கௌரவத்தையும் மனதிலே வைத்துக் கொண்டு இவ்வளவு காலமும் நடிச்சுக் கொண்டிருந்திருக்கிறீர்கள். ஆனால் இப்பொழுது தான் உங்களுடைய உண்மை வேசம் கரையத் தொடங்கியிருக்கின்றது.''

அம்மா. . . அப்பா. . . சொல்லவே எனக்கு வாய் கூசுகிறது. உங்களைப் பற்றி என்னுடைய நண்பர்கள் மத்தியில் என்னென்ன பெருமையாய்க் கதைத்திருப்பேன் உங்களைப் பற்றி புகழ்ந்திருப்பேன். ஆனால் இனி மேல் அவர்கள் முன் எப்படிப் போய் நிற்பேன். உங்களைப் பற்றி இனிமேல் என்ன சொல்ல இருக்கு. உங்களை நினைத்து நினைத்தது வேதனைப்படுகிறேன். என்னுடைய அப்பாவும் அம்மாவுமா..இப்படியா என்று? ''எங்களுடைய பள்ளிக் கூடத்திலேயும் வேறு இடங்களிலேயும் நடக்கின்ற நிறத் துவேஷத்துக்காக எத்தனை தடவை மற்றவர்களுடன் சேர்ந்து குரல் கொடுத்திருப்பேன் நிறவெறி பிடித்த எத்தனை நாய்களுடன் மல்லுக் கட்டியிருப்பன்

ஆனால் இவையெல்லாம் என்ரை வீட்டுக்குள்ளே. . . உங்கள் இரத்தமா என உடம்பிலும் சீ சீ நினைக்க அசிங்கமாய் இருக்கிறது.''

கொளுத்திப் போட்ட சரவெடியாக தொடர்ந்தாள்.

''ஊரில் தான் சாதி என்ற பெயரிலே எத்தனை கொடுமைகளையும் அநீதிகளைச் செய்திருப்பீர்கள் ஆனால் அதை இங்கேயும் வந்து கடைப்பிடிக்கிறீர்களே. சிங்களவன் அடிக்கிறான் கொல்லுறான் எண்டும் சத்தம் போடுறையள். ஒரு தமிழன் இன்னொரு தமிழனை மனிதனாக மதிக்காமல் இருக்கும் போது அப்படிச் சிங்களவன் என்ன பெரிதாகச் செய்து விடடான். இண்டைக்கு இந்த உலகம் எவ்வளவோ மாறி விட்டது இன்னும் மாறிக் கொண்டிருக்கிறது''

சிவலிங்கத்தார் ஏதோ சொல்ல வாயெடுக்கிறார். ஆனால் முடியவில்லை.

(nmuralitharan@hotmail.com)

# கலாச்சார அதிர்ச்சி

யோகா பாலச்சந்திரன்
கனடா



"மனிதர்களின் உண்மையான படிப்பு என்பது, அவர்கள் செய்த பிழைகள், தப்புகளிலிருந்து கற்ற பாடங்களே. விட்ட பிழைகள் எல்லாமே தோல்விகள் எனக்கருதினால், வாழ்வில் முன்னேற்றமே இல்லாமல் போகும்"

Buckminister Fuller

பகல் பன்னிரெண்டு மணியாகிவிட்டது. சுமார் ஆறு மாதங்களாக கனடாமீது அப்பிக்கிடந்த கடும்பனியும் குளிரும் மெள்ள மெள்ள நாட்டையும் மக்களையும் விடுவித்து விலகத்தொடங்கியிருக்கிறது. வசந்தத்தின் வருகைக்கு கட்டியம் கூறுவதுபோல, பனிப்படலங்களுக்குள் முடங்கிக்கிடந்த தாவரங்கள் இலேசாக துளிர்க்கத்தொடங்கியுள்ளன.

மண்ணில் பசுமைப்பூச்சோடு உயிரினங்களின் நடமாட்டமும் உயிர்ப்புப்பெறுகின்றன.

பாடசாலை பஸ்ஸிலிருந்து பிள்ளைகளை இறக்கி, சார்மிளாவையும் ஷிராஜையும் வீட்டுக்கு அழைத்துவந்த பிந்து, அவர்களின் கை, கால், முகங்களை கழுவி உடுப்பு மாற்றி உணவருந்தச் செய்த பின்னர், அவர்களை வீட்டின் அடித்தளத்தில் (basement) விளையாட விட்டுவிட்டு, வீட்டுக்கு பின்புறத்தில் உள்ள வெளிமேடைக்கு வந்தாள். அங்கு சௌந்தரா அம்மா ஊஞ்சலில் அமர்ந்தவாறு வழக்கம்போல ஏதோ புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தா.

தரையில் அமர்ந்த பிந்து, " என்னம்மா... என்ன படிக்கிறீங்க?" எனக்கேட்க, " வாழ்வின் சாரம், அதன் அர்த்தம் இதைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறேன். வேறு என்ன... இந்தவயதில் ஶ்ரீதரின் காதலிக்க நேரமில்லையா வாசிப்பேன்." எனச்சொன்ன சௌந்தரா, தொடர்ந்து, " அது சரி பிந்து, உங்க புதுவீட்டு விஷயமெல்லாம் எப்படி? எல்லாம் சரியா? எப்ப குடி போகப்போறீங்கள்?" எனக்கேட்டார்.

"அடுத்த மாசக்கடைசியிலதான் சாவி கிடைக்குமாம். அதன்பிறகுதான் வீடுகுடிபோகோணும்." என்ற பிந்து, பெருமூச்சொன்றையும் உதிர்த்தாள்.

சௌந்தரா அவளை ஏறிட்டுப்பார்த்தார். பிந்துவின் முகத்தில் வாட்டமிருந்தது.

"அம்மா, உண்மையாய்ச்சொல்றன்... எங்க ஊர், எங்க கிராமம் என்று அதே உலகத்தில் வாழ்ந்த எனக்கு, இங்கே வந்தபிறகு, இப்படியும் ரொம்ப ரொம்ப வித்தியாசமான உலகம் இருக்குங்கிறது இப்பத்தான் அம்மா புரியுது." என்றாள் பிந்து.

வயது எழுபதைக்கடந்த சௌந்தரா அம்மாவோடு இருப்பது பிந்துவுக்கு தாய்மையின் பரிவை அருகிருந்து அனுபவிப்பதுபோன்ற உணர்வையே தருவதனால் அவரிடமே எதனையும் மனம்விட்டுப்பேசுவாள்.

எவருடனும் பவ்வியமாக உரையாடும் வழக்கமுள்ள சௌந்தரா, புத்தகத்தை வைத்துவிட்டு, "பிந்து... காலம் போகப்போக, பல்வேறு சமூகங்களுடன் உறவாடும் சந்தர்ப்பங்கள் உனக்கு நிறைய வரலாம்.

இந்த உலகத்தை நீ மேலும் மேலும் அறிந்துகொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். அதிகம் அறிந்துகொள்வாய். அத்துடன் படிப்பாய். அனுபவங்களை படிப்பினைகளாகப்பார்க்க, மாற்றிக்கொள்ள தெரிந்தவர்களுக்குத்தான் அவை, படிப்பாக அறிவாகப்புரியும் பிந்து. விளங்குதா பிந்து நான் சொல்றது?'' எனச்சொன்ன செளந்தரா, அவளது முகத்தை பரிவோடு பார்த்தார்.

பிந்துவுக்கு முப்பத்தியைந்து வயது. தமிழ்நாட்டில் தென்பகுதி இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுகிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். எப்படியோ கனடா வந்து, மொன்றீயல், வன்கூவர் என நகர்ந்து குடியேறியது பிந்துவின் குடும்பம். எட்டு, பத்து வயதுகளில் ஒரு மகளும் மகனும் ரகுமான் பிந்துவின் வாரிசுகள். பழமையின் பண்பாடுகளைப்பேணி, கிராமத்து மக்களாக உற்றார் உறவினரோடு வளர்ந்த பிந்துவுக்கு அங்கே வீடுதான் உலகமாக இருந்தது. ஆனால் இங்கே, கனடா முற்றிலும் புதிய உலகமாகவே தென்படுகிறது.

செளந்தரா, மீண்டும் பிந்துவுக்கு தெம்பளிக்கும்விதமாக, ''பிந்து... தமிழைக்கூட ஓரளவு நாடோடிப்பாஷையாக மட்டுமே பேசும் நீ, இப்போது இங்கு ஆங்கிலத்தையும் சுமாராகப்பேசக்கூடியவளாக மாறிவிட்டாய்தானே? உன்னளவில் கடந்த மூன்று வருஷங்களில் பெற்றுக்கொண்ட மாற்றங்களை உன்னால் உணரமுடிகிறதா?''

செளந்தராவின் இத்தகைய ஆழ்மனதைத்தொடும் கேள்வி, பிந்துவின் மனக்கதவைத் திறந்துவிட்டிருக்கவேண்டும்.

அவள் தனது மனக்குமைச்சல்களை செளந்தராவிடம் கொட்டினாள்.

''அம்மா, எனக்கு இந்த மேல்நாட்டு கலாச்சாரம் பற்றி எதுவுமே தெரியாது. உண்மையைச்சொல்லப்போனால், எனது கணவர் எனக்குச்சொல்லும் வரையில் கனடா என்று ஒரு நாடு இருப்பதையே நான் அறியேன். இங்கு எனக்கு எல்லாமே புதுசுதான். பற்பல ஜாதிகள், நெறம், பேச்சுவழக்கு வாழும் முறைகள் எல்லாமே' எனக்குப் புதுசும் அதிர்ச்சியும்தான்.'' என்றாள் பிந்து.

“மத்தவங்க வாழ்ற முறை உனக்கு எப்படி அதிர்ச்சி தரமுடியும்.?” செளந்தரா ஆச்சரியத்தோடு கேட்டார்.

“மூணு வருஷத்துக்கு முன்னாடி நாங்க மொன்றீறியல்ல வந்து எறங்கினோம். அங்கை என் கணவர் ஒரு அப்பார்ட்மன்ட் வீட்டை எடுத்திருந்தார் பொதுவாக அங்கே எல்லாரும் பேசுறது பிரெஞ்சுமொழி. ஆதனால ஆஸ்பத்திரிக்கோ ஸ்கூலுக்கோ எங்கை போனாலும் ஒண்ணுமே புரியிறது கெடையாது.

நாங்க குடியிருந்த இடத்தில ஆசிய நாடுகளை சேர்ந்தவங்களே அதிகம். அதனால அது ஒரு வெளிநாடுபோல தெரியவே இல்லை. இதனால நம்ம இந்தியாக்காரங்க அதாவது தமிழ்நாட்டு ஆட்கள், அதோடை கொஞ்சம் புரியக்கூடிய தமிழ்பேசுற சிலோன்காரங்க கூடத்தான் ஆரம்பகால தனிமையை போக்கவேண்டியிருந்தது. அதுலயும் எங்களுக்கு எக்கச்சக்கமான படிப்பினைகள் கிடைச்சுது.”

“ஒரு தமிழ் பேசுற வீட்டில அவுங்க பிள்ளைக்கு ‘போர்த் டே’ விருந்துன்னு எங்களை அழைச்சாங்க. போனா... அங்கே ஆண்களும் பெண்களும் சேர்ந்து பியர் குடிக்கிறது, பெத்த தாய்க்கு முன்னால உக்காந்துகொண்டு பதினாறு வயதுப்பெண்ணும் பதினெட்டு வயது மகனும் பியர் குடிச்சிக்கிட்டு தாம் தூம்ணு ஆடுறது, இதெல்லாம் பாரக்க எனக்கு சகிக்கல்ல. அதிர்ச்சின்னா அதிரச்சி... இப்படிப்பட்ட ஊருக்கா வந்திருக்கோம்? இதல்லாம் பார்த்து நம்ம பிள்ளைகளும் கெட்டுப்போயிடுவாங்களோங்கிற பயம் என் மனசை அப்படியே அப்பிச்சு அம்மா. இப்படி பல சம்பவங்கள். தமிழ் பண்பாடு, கலாச்சாரம் என நினைச்சு நாங்க வாழ்ந்த வாழ்க்கை இப்படி ஆச்சே என்கிற கவலையை என்னால சகிக்க முடியலை. பெறகு பார்த்தா இதுவே நாகரீகம், பாஷன் அது இது என்கிறாங்க.”

செளந்தராவுக்குப்புரிந்தது. பிந்து எதனால் பாதிக்கப்பட்டிருக்கிறாள்.? அவளுக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியின் தன்மை யாவும் புரிந்தது.

செளந்தரா நிதானமாக அவளை அருகே அழைத்து அணைத்துக்கொண்டார்.

“பிந்து காலம் மாறுகிறது. மனிதர்களும் மாறுகிறார்கள். ஏன்.. இந்தியாவில்கூட மாற்றங்கள்...சினிமா பார்க்கிற உனக்கு புரிஞ்சிருக்கும். நடை, உடை, பாவனைகளில்தான் எவ்வளவு வேகமான மாற்றங்கள். எல்லாவற்றையுமே தப்பு, தவறு என்று சொல்லி தள்ளி ஒதுக்கவும் முடியாது. பிந்து... உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த மூன்று வருட அனுபவங்களை எடுத்துக்கொள். அதிர்ச்சிகள் அனுபவங்களாகி... அறிவாகி... எந்தளவுக்கு உன்னை திடமான தைரியமான பலமான பெண்ணாக்கியுள்ளது? இந்தக்கேள்வியை சாதாரணமான பெண்களிடம் கேட்கமாட்டேன். நீ பெரும்படிப்பு படிக்காத சாதாரண இந்திய கிராமத்துப்பெண்ணாக இருந்தாலும் அறிவுபூர்வமான தேடல்கொண்ட பலதும் பத்தும் அறியும் ஆர்வம் மிக்க ஆர்வமான உற்சாகமான பெண் என்பதால்தான் கேட்கிறேன். மொன்றீயலில் கனடாவில் முதல் முதலாக வந்து இறங்கிய பிந்துவுக்கும் இப்போது வன்கூவரில் வாழும் இந்த பிந்துவுக்கும் என்ன வித்தியாசம்? எந்த பிந்து அறிவும் பலமும் புத்தியும் மிக்கவள். சொல்லு பார்ப்போம். என் கேள்வி புரிகிறதா பிந்து?” என்றார் செளந்தரா.

பிந்துவின் முகம் சிவந்தது. ஆழ்மனதில் உறங்கிக்கிடந்த ஏதோ ஒன்று குமுறிக்கிளம்பி சிதறியது போன்ற உணர்வுடன் செளந்தராவை பார்த்தாள்.

“பிந்து When you go Rome Be a Roman என்று ஒரு ஆங்கில முதுமொழி இருக்கிறது. கேள்விப்பட்டிருக்கிறாயா? நீ ரோமாபுரிக்குப்போனால் ரோமர்கள் போல நடந்துகொள் என்கிறது இந்த முதுமொழி. இதனை எத்தனைபேர் கவனத்தில் எடுத்துக்கொண்டார்களோ தெரியாது. சிலரது கண்மூடித்தனமான செயல்கள் உனக்கு அதிர்ச்சி தரலாம். உலக பரிணாம வளர்ச்சியும் இப்படித்தான். குகைகளில் காடுகளில் ஏறக்குறைய மிருகங்களைப்போல இதர உயிரினங்களுடன் வாழ்ந்த மனிதர்கள் நாகரீகத்தின் உச்சத்துக்கே சென்று இப்போது விண்வெளியைக்கூட துழாவிக்கொண்டிருக்கும் காலம் இது.”

பிந்துவுக்கு செளந்தராவின் விளக்கம் சற்று ஆறுதல் அளித்தது. சிறிதுநேர மெளனத்துக்குப்பிறகு, “ அம்மா... வெளிப்படையாகச்சொன்னால்... எனக்கு இங்குள்ள மனுசரைப்பிடிக்க இல்லை.” பிந்துவின் கண்கள் பனித்தன.

“ஏன். பிந்து? எதற்காக இப்படிச்சொல்கிறாய்?”

“எங்கட வீட்டுக்குப்பக்கத்தில் இரண்டு சிலோன் குடும்பங்கள். ஆயிஷா அக்கா. அவங்கட வீட்டுக்காரர் சமீம். இரண்டு டீன்ஏஜ் பிள்ளைங்க. அங்கால பளீலா அக்கா. அவுங்கட வீட்டுக்காரர் ரோஷான் அண்ணா. மூணு சின்னப்புள்ளைங்க.. இவங்க எங்க மதம். தமிழ் கொஞ்சம் வித்தியாசம்னாலும் தமிழ்தான் பேசுறாங்க. இதனால நாங்க மூணு குடும்பமும் ரொம்ப நெருங்கிப்பழகினோம்.

“நான் கனடா புறப்பட்டபோது எங்க அம்மா திருப்பித்திருப்பி சொன்னது, இதைத்தான். ‘ பிந்து, இனி ஒனக்கு தாய், தகப்பன், தம்பி, தங்கச்சி, அக்கா, அண்ணா, உற்றார், உறவினர் சொந்தக்காரர் என்று யாருமே அங்கை இருக்கமாட்டாங்க. இனி, உன்னோடை அங்க பழகுறவங்க கிட்ட உள்ளவங்க, அறியிற தெரியிறவங்கதான் இனி ஒனக்கு சொந்தம் உறவு எல்லாமே... ஆகையினால் அவங்களோடை நீங்க உண்மையா நேர்மையா எங்களோடை வாழ்ந்தமாதிரி நல்லாய் பழகிக்கோ’ என் அம்மா சொன்னபடிதான் நான் இங்கே அந்தக்குடும்பங்களுடன் பழகினேன். நானும் அவரும் அந்தக்குடும்பங்களுடன் சகோதர பாசத்துடன்தான் பழகினோம். என்ர அவரும் பல சமயங்களில் அவுங்களுக்கு ரொம்ப உதவியாக இருந்திருக்கிறார்.

ஆனால் அவுங்க சிலநேரங்கில் நடந்துகொண்டவிதம் என்னை ரொம்ப வருத்திவிட்டது. உங்களிடம் ஒரு சம்பவத்தை சொல்லவேண்டும். போன கிழமை பளீலா அக்கா இரவு ஏழு மணிபோல எனக்கு டெலிபோன் பண்ணினா. அப்போ ஆயிஷா அக்கா எங்க வீட்டில இருந்தா. பளீலா அக்கா கேட்டா, ‘ஒங்க வீட்டில ஆயிஷா இருக்கிறாவா’ என்று. நான் ‘ஆமா’ என்றதும், “ஆயிஷா கிட்ட சொல்லுங்க, இங்க வந்து சூப் குடிச்சிட்டுப்போகச்சொல்லி. இப்பதான் சூப் செய்தேன்.”

எப்படி இருக்கு? பளீலாஅக்காவின் அந்தக்குரல் என்னை ஏனோ புறக்கணிப்பதுபோலத்தான் தோணிச்சுது. என் மனம் தாங்கமுடியாத வேதைனப்பட்டது அம்மா.”

“ அட அசட்டுப்பிள்ளையே...இதுக்குப்போய் ஏன் அலட்டிக்கொள்கிறாய். இது மிகவும் சாதாரண விஷயம்.

பளீலா சூப் தயாரிச்சா. வந்து குடிச்சிட்டுப்போகச்சொல்லி உன் மூலமாக ஆயிஷாவுக்கு தகவல் கொடுக்கிறா. இது சர்வசாதாரணமான விஷயம். இதனையிட்டு அவ உன்னை சூப் குடிக்க அழைக்க இல்லை என்று ஏன் வீணாக உன்மனதை நோகடிச்சுக்கொள்கிறாய் என்பதுதான் எனக்குப்புரியவில்லை பிந்து.'' என்று சொன்னார் சௌந்தரா அம்மா.

''என்னம்மா இப்பிடிச்சொல்றீங்க... இது சாதாரணமான விஷயமா? என்னையும் அழைச்சிருக்கலாம்தானே?''

இதனைக் கேட்டதும் சௌந்தரா சில கணங்கள் மௌனமாகி இந்த பிந்துவுக்கு நேர்ந்துள்ள மனஉளைச்சலின் தீவிரத்தை தனது ஆழ்மனதிலிட்டு ஆராய்ந்தார். கனடா வந்தும் இன்னமும் தாய்நாட்டின் பிறந்து வளர்ந்த ஊரின் மீதான பாதிப்பிலிருந்து பிந்து மீளவில்லை என்பது சௌந்தராவுக்குத் தெளிந்தது. இது ஒருவகை தாழ்வுச்சிக்கல. இங்கே சூப் அல்ல முக்கியம். பளீலா பிந்துவை புறக்கணித்துவிட்டாளே என்ற தன்னிலை கழிவிரக்கம்தான். தன்னையும் இந்த அற்ப சூப்பின் பொருட்டு மதிக்கவில்லையே என்ற ஆழ்மன ஏக்கம் பலதரப்பட்ட தனக்கே நியாயமான காரணங்களுடன் புழுங்கித்தவிக்கிறாள் இந்த அப்பாவிப்பெண் பிந்து என்ற முடிவுக்கு வந்தார் சௌந்தரா.

''இங்கே பார் பிந்து.. அவுங்க ரெண்டு குடும்பமும் ஒரே நாட்டில இருந்து வந்தவங்க. கொஞ்சம் அந்நியோன்யம் இருக்கத்தான் செய்யும். அதனால அவ இவவை கூப்பிட்டிருப்பா. இதனை, நீதான் வீணாக மனதை அலட்டிக்கொண்டு பெரிசுபடுத்துறாய்.''

''இருக்கலாம் அம்மா... ஆனா நான் ஒருநாளும் அப்பிடி அவுங்க ரெண்டு குடும்பத்தையும் புறக்கணிச்சு நடந்ததில்லை அம்மா'' பிந்து விம்மி அழுதாள்.

''பிந்து பிளீஸ்.. முதல்ல அழுகையை நிறுத்து. கண்ணைத்துடை.'' என்றார் சௌந்தரா.

''இல்லையம்மா... இன்னுமொரு சம்பவம் சொல்றன் கேளுங்க...'' பிந்து கண்களைத்துடைத்துக்கொண்டு தொடர்ந்தாள்.

"முன்பொருநாளும் இப்படித்தான். ஒரு கடுங்குளிர் காலத்தில ஒருநாள் என்ற மகன் ஷிராஜ் பளீலா அக்கா வீட்டுக்குப்போய் கதவைத்தட்டி தங்கச்சி வந்தாளா? எனக்கேட்டபோது கதவைத்திறக்காமலேயே 'இல்லை' எனச்சொல்லியிருக்கிறா. மகன் குளிருக்குள்ள நடுங்கியபடியே திரும்பி வந்தான்."

சௌந்தரா பிந்துவை ஏறிட்டுப்பார்த்தார். "பிந்து முன்பும் இதைப்ற்றி எனக்கிட்ட சொல்லி இருக்கிறாய். நான் அப்போது சொன்ன பதிலைத்தான் இப்பவும் சொல்ல முடியும். உன் மகனை உதாசீனம் செய்யும் நோக்கம் பளீலாவுக்கு இருந்திருக்காது. அச்சமயம் அவ வீட்டுக்குள்ள என்ன நிலைமையோ யார் கண்டது. இந்த அற்ப காரணங்களுக்காக மனதை அலட்டிக்கொள்ளாத என்றுதான் இப்போதும் சொல்லுவேன். உங்கட வாழ்வு முறைக்கும் அவர்களது வாழ்வுக்கோலங்களுக்கும் நிரம்பவேறுபாடு இருக்கிறது என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும்."

"இல்லையம்மா... எனக்கு இப்போது இந்த நாடே பிடிக்க இல்லை. பேசாமல் திரும்பி ஊருக்கே போயிடலாமா என்று தோணுது. நாம நூத்துக்கு நூறு உண்மையாக நடக்கிறோம். ஆனா, மத்தவங்க கொஞ்சமும் விசுவாசம் இல்லாம நடந்துகொள்றாங்க. தாங்க முடியல்ல அம்மா"

"பிந்து மீண்டும் சொல்றன். முதல்ல இந்த அழுகையை நிறுத்து. உள்ளே பாத்ரூம் போய் முகத்தை கழுவி துடைச்சி புத்துணரச்சியோட வா. அதுக்குப்பிறகு பேசுவோம்" எனச்சொன்ன சௌந்தரா பிந்துவை உள்ளே அனுப்பிவிட்டு ஆழமாக சிந்தித்தார். பிந்துவுக்கு ஏற்பட்டுள்ள மனச்சிக்கலும் இந்தச்சிக்கலின் முடிச்சை அவிழ்க்கும் வழிமுறையும் தென்பட்டது.

பிந்து திரும்பி வந்தாள். அவளது முகம் சிவந்திருக்கிறது. பாத்ரூமிலும் அழுதிருக்கவேண்டும்.. ஆனாலும் முகத்தில் கொஞ்சம் தெளிவிருந்தது. மனக்குறைகள் அழுகையாக வடிந்து ஓடிவிடலாம். ஓடவேண்டும். மனம் கவலைகளை மாத்திரம் சுமக்கும் கூடை அல்லவே.

பிந்து, சௌந்தரா அம்மாவின் அருகில் வந்து அமர்ந்து புன்னகைத்தாள். சௌந்தரா அவளது தலையை வருடினார். அந்த ஆறுதல் வருடலில் பிந்து நெகிழ்ந்தாள்.

“பிந்து.. அறிவை ஆவலோடு தேடும் பெண் அல்லவா நீ...? உனது வெளிப்படையான மனோபாவத்தையும் மற்றவர்களை உளமாற நேசிக்கும் இயல்பையும் நான் பாராட்டுகின்றேன். ஆனால், உலக மாந்தரின் இயல்புகள் அனைத்தும் அப்படித்தான் இருக்கும் என்றோ இருக்கத்தான் வேண்டும் என்றோ நாம் எதிர்பார்க்க முடியாது. இந்த உண்மைகள் வெகுகாலமாகவே விஞ்ஞானிகளினால் கண்டறியப்பட்டவை. நான்கூட பலவற்றை படித்துத்தான் தெரிந்துகொண்டேன். வியன்னாவைச்சேர்ந்த அல்பிரட் அட்லர் புகழ்பூத்த ஒரு மனோவியலாளர். 1902 இல் பிறந்தவர். நீண்ட காலமாக தனிநபர்களின் உளவியல் போக்குகள் பற்றி ஆய்வுகள் அவதானிப்புகளில் ஈடுபட்டார். பின்னர் அவர் வெளியிட்ட ‘மனித இயல்பினை புரிந்து கொள்ளல்’ என்னும் தலைப்பில் ஐம்பது மனோவியல் காப்பியங்கள் எழுதப்பட்ட நூலை வாசித்திருக்கிறேன். அதில் சொல்லப்பட்ட சில அம்சங்களை நான் இப்போது உனக்குச்சொல்கிறேன்.”

“ஒரு தனிநபரின் குறிக்கோளை நிர்ணயிப்பதும் தீர்மானிப்பதும் அவனுக்குள்ள தாழ்வுணர்ச்சி., பற்றாக்குறைகள், ஆதியனதான். சகலவிதமான போலிப்பகட்டு மனோபாவப்போக்குகளுக்கும் ஒரு பொதுத்தன்மை உண்டு. அதாவது மேம்போக்கான பகட்டுத்தன்மை. வாழ்நாளில் அடைய முடியாத ஒரு குறிக்கோளை அடைய முயற்சிக்கும் இயல்பு. உலகிலுள்ள சகலரையும் விட மிக வல்லவனாக அதிசிறந்தவனாக வெற்றியாளனாக வேண்டுமென விரும்பும் இயல்பு. பாதுகாப்பின்மை சார்ந்த உள்ளுணர்வின் நேரடி விளைவுதான் இந்த இயல்புகள்.

“மானுட அறிவுணர்ச்சியை அளவிட, உண்மையான, சரியான, பாரம்பரிய முறை ஒன்றும் கிடையாது. மானுட இயல்பினைக்காட்டுவதற்கு விஞ்ஞானம் இன்று நாடும் முறை, உலக வரலாற்றில் இடைக்காலத்தில் இரசாயனத்தின் மூலம் நாடப்பட்ட வேதியல் (Alchemy) முறைதான். அதாவது மட்டரகமான உலோகங்களை பொன்னாக்கும் முயற்சிதான் அல்கமி. சுருக்கமாகச்சொன்னால், பிந்து, சரியாகக்கேட்டுக்கொள்... வாழ்வில் எதை நாம் சிந்திக்கின்றோமோ அதுவே நம் வாழ்க்கை ஆகும். பிறந்த நாட்டிலும் சரி புகலிடம்தேடி வந்த நாட்டிலும் சரி மனிதர்கள் மானுடப்பண்பாட்டோடு உயர்ந்து நன்றாக வாழவேண்டுமானால் அவர் தம் நெஞ்சில் நற்சிந்தனை பயிராகவேண்டும்.

பிந்து உனக்கேற்பட்டிருப்பது.. கலாச்சாரா அதிர்ச்சி. இது அநேகமாக குடியேற்ற வாசிகள் அனைவருக்கும் இருக்கலாம். பாவனைப்பொருள் மோகம் என்பதனை வாழ்நாளில் அறியாமலேயே வந்தோர் பலர். ஆணும் பெண்ணும் திடீர் எனக்கிடைத்த பணம் பண்டங்களால் மோதுண்டு மானுட பண்புகளை இழப்பதும் அதனால் வாழ்க்கையை முற்றாக இழப்பதும் நாம் பரவலாக காணும் காட்சிகள். படாத பாடுபட்டு உழைத்துவரும் கணவனை துச்சமாக மதிக்கும் மனைவியர், பணம் தேட தொழிற்சாலைகளில் இரவு பகலாக பாடுபடும் பெண்களை தப்பான கண்ணோட்டத்துடன் பார்த்து கொடுமைப்படுத்தும் கணவர்கள், பெற்றோரின் வெளியுலக மோகங்களினால் புறக்கணிக்கப்படும் பிள்ளைகள்... இப்படி பற்பல சமூக வியாதிகள் தோன்றியிருக்கின்றன.

பணத்தைக்கண்டதும் மானிதம் மாய்ந்துவிடுகிறது. இதுதான் பெருந்துயரம். இப்படி எத்தனையோ சிக்கல்களினால் சூழப்பட்டதுதான் இந்த உலகம். இது மாறுவதற்கு மண்ணில் மானுடம் துளிர்க்கவேண்டும். மனிதர்கள் தர்ம நியாயங்களுடனும் பகுத்தறிவுடனும் வாழ்ந்து அன்பே தெய்வம் என்ற உண்மையை புரிந்து நடக்கவேண்டும். இந்த வாழ்க்கை எமக்குக்கிடைத்த அருங்கொடை. இதனை உணரும்போது இந்த உலகம் சிறக்கும் பிந்து. நீ சும்மா மனதை அலட்டிக்கொள்ளாதே. நிறையப்படி. மற்றவர்களின் இயல்புகளை முடிந்தவரையில் புரிந்துகொள்ள முயற்சி செய். பிறகு காலப்போக்கில் நீயே எனக்கு பலவிதமான புதிய சிந்தனைகளை சொல்லும் காலம் வரலாம். என்ன நான் சொல்வது சரியா?" சௌந்தரா அம்மா பிந்துவை மீண்டும் ஏறிட்டுப்பார்த்தார்.

பிந்து புன்னகையுடன் எழுந்தாள்.

அதில் தெளிவு இருந்தது.

(jemo1999@rogers.com)



# ...சாத்திரம் உண்டோடி?

ஆசி கந்தராஜா
அவுஸ்திரேலியா

சுந்தரமூர்த்திக்கு இருப்புக் கொள்ளவில்லை. உண்மையாகவே அது நடந்து விட்டால் என்ன செய்வது என்கிற பயம் அவரை வாட்டியது. இந்த அவதியில் நாலு தடவைகளுக்கு மேல், அலுவலகத்தில் இருந்து மனைவியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அது பற்றிக் கேட்டுவிட்டார். தொலைபேசியின் மறுமுனையில், மனைவி சூடான எண்ணையில் போட்ட கடுகாக வெடித்தாள்.

'நான் சொல்லுறதைக் கேட்டால் ஏன் இந்தப்பாடு? வைச்சுக் கொண்டிருங்கோ ஊர்ச்சனம் குண்டியாலை சிரிக்கப் போகுது' என்கிற வார்த்தைகளை இணைத்துப் பொரிந்து தள்ளினாள். கடைசி இருமுறையும் சுந்தரமூர்த்தியின் குரலைக் கேட்டதுமே, மௌனமே பதிலாகச் சடக்கென தொடர்பைத் துண்டித்து விட்டாள்.

சுந்தரமூர்த்தியின் சிந்தனையில் மனக்கணக்கு ஒன்று ஊர்ந்தது. அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளின் படி, அது நடக்கக்கூடிய சாத்தியமில்லை. ஆனாலும் 'விதிவிலக்குகள்' உண்டல்லவா?

என்ன, கொலைக்குற்றமே செய்திருக்கிறன் என்று சிலசமயம் மனதை ஆறுதல்படுத்தினாலும், அதையும் மீறி பயம் பல வழிகளிலும் அலைகக்கழித்தது. எல்லா விதிகளையும் மீறி அது நடந்துவிட்டால், என்னென்ன பரிகாரங்கள் சாத்தியம் என்பது குறித்து மனதில் பட்டியலிடத் துவங்கினார்.

'நான் கொஞ்சம் கவனமாக நடந்திருக்கலாம். அவசரப்பட்டு விசர்வேலை பாத்திட்டன்' என அவரது சிந்தனைப்பட்டம் வால் இழந்து, குத்துக்கரணமடித்து மண் கவ்வியது!

''நடந்தது நடந்து போச்சு. இனி நடக்கப் போறதைப் பாப்பம்'' என்ற நினைப்பில் பரிகாரம் செய்பவர்களின் தொலைபேசி இலக்கங்களையும் முகவரிகளையும் இணையதளத்தில் சேகரித்து, கணிணியில் இதற்கென ஒருபக்கம் திறந்து பதிந்து கொண்டார். மேலதிக தகவல்களை அவ்வப்போது சேர்த்துக் கொள்வதற்காக தனது கனிணி அறிவைப் பயன்படுத்தி, அட்டவணைப்படுத்திக் கொண்டார். கை தன்னை அறியாமல் மீண்டும் தொலைபேசி எண்களை அழுத்தியது.

'என்னப்பா. . .' என்று சுந்தரமூர்த்தி துவங்க முன்னரே மனைவி ரெலிபோனை 'டங்' என்று வைத்த சத்தம் கேட்டது.

'வரல்லைப் போல கிடக்கு' என்ற எண்ணம் மேலோங்க, சுந்தரமூர்த்திக்கு இரத்தக் கொதிப்பு அதிகமாகியது.

'என்ன சுந்தா பேயறைஞ்ச மாதிரி இருக்கிறாய், ஏதாவது பிரச்சனையா?' என ஆங்கிலத்தில் விசாரித்தவாறே அலுவலக கண்டீனுக்கு போனான் தோமஸ். அவன் அவருடன் பணிபுரியும் சகா.

சுந்தரமூர்த்தி அவனைத் தொடர்ந்து கன்டீனுக்கு போவது வழக்கம்.

கடந்த இரண்டு நாள்களாக அவருக்கு பசிதூக்கமில்லை.

நாலு பிள்ளைகள், வயதான பெற்றோர், வீட்டு மோட்கேஜ் என அவரது குடும்பம் இயந்திர கதியில் இயங்குகிறது. அத்துடன் மனைவி இரண்டு இன்வெஸ்ற்மென்ற் (investment) வீடுகளையும் வாங்கிவிட்டிருக்கிறாள், வருமான வரியை குறைக்கலாமென்று.

ஆஸ்திரேலியாவில் நாலு பிள்ளைகளுக்கும் படிப்புச் செலவு, உடுப்பு ரியூசன், சங்கீதம், டான்ஸ், விளையாட்டு எனப் பல உபரிச் செலவுகள். கோவிலுக்கு, நாட்டுக்கு என நன்கொடைகள் கொடுப்பதிலும் அவர் முந்தி நின்றார். இல்லாவிட்டால் சமூகத்தில் யாரும் மதிக்கமாட்டார்கள். மூத்தது இரண்டும் பொம்பிளைப்பிள்ளைகள். அடுத்தடுத்து பிறந்ததுகள். பல்கலைக்கழகத்தில் படிப்பு நடக்கிறது. படிப்பு முடிய, மூன்று வருடத்தில் அதுகளின் கல்யாணச் செலவுகள். மற்றதுகள் கொஞ்சம் இடைவெளிவிட்டு, அவரது ஆஸ்திரேலியப் புலம் பெயர்வுக்குப் பின்னர் பிறந்ததுகள். மூத்தது பெடியன், அடுத்தது பெட்டை. இரண்டும் இப்போது High school. சுந்தரமூர்த்தியின் மனைவிக்கு நல்ல வேலை. அவள் கொண்டு வரும் சம்பளமும், அவர் மிதப்புக்கு ஒரு காரணம் என்பதை அவர் நிதமும் மனசிலே வைத்திருப்பவர். இதற்குள் இந்த சிக்கல் வந்து இப்போ சுந்தரமூர்த்தியின் நிம்மதியை காவு கொண்டிருக்கிறது.

கன்டீனிலிருந்து தோமஸ் திரும்பி வந்தான். "You are not normal" என்று கூறியபடி தன் இருக்கைக்குச் சென்றான். தொலைபேசி இலக்கங்களை அழுத்தித் தொடர்புப் பெற்று சிரிக்கத் துவங்கினான்.

'இந்த அறுவான் காதலியோடை ரெலிபோனிலை சல்லாபம் செய்து கொண்டிருக்கிறான். இவங்களைப் போல இருந்திட்டால் பிரச்சனை இல்லை. நேரம் ஒரு பெட்டையெண்டு ஜாலியாய் சுத்திக் திரியலாம். சமயம், சம்பிரதாயம், கலாச்சாரம் எண்டு இரண்டு தோணியிலை கால் வைச்சுக் கொண்டு நாங்கள் அல்லல்படுகிறோம். இங்கு வந்து குடியேறின முதல் சந்ததிக்குத்தான் இந்தப் பிரச்சனை.

எங்கடை பிள்ளையள் இதுகளைப் பார்க்கவா போகுதுகள்? சுந்தரமூர்த்தியின் மனதிலே பலவிதமான சிந்தகைள் குதியாட்டமிட்டன. ரெலிபோன் மணி அடித்தது. மனைவியாய் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் அதைப் பாய்ந்து எடுத்தார். ஏமாற்றம்!

மறுமுனையில் சந்திரசேகரம். சிட்னியிலுள்ள சமூக அமைப்புகளில் சுந்தரமூர்த்தியுடன் ஒரு கன்னைக்கு நின்று காய் நகர்த்துவன்.

ஊர்விடுப்பு கதைக்க தனது அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தான். பலருக்கும் வம்பளக்க தோதான இடம் அலுவலகம்தான்.

போதாக் குறைக்கு e-mail மூலமும் ஒரே முறையில் பலருக்கு புதினம் பரப்புதலும் இப்போது பிரபல்யமாகி விட்டது. 'சனிக்கிழமை நடந்த கலைநிகழ்ச்சி கூட்டம் குறைவாம்!' என்றபடி சந்திரசேகரம் கதையைத் துவங்கினான்.

வேறு நேரமாக இருந்திருந்தால் சுந்தரமூர்த்தியும் வலு சந்தோசமாகக் கதைத்திருப்பார். இவர்களது சம்பாசனையில் ஊரில் உள்ள பல தலைகள் உருண்டிருக்கும். இன்று ஊர்ப்புதினச் சல்லாபத்தில் இறங்கும் 'மூட்' சுந்தரமூர்த்திக்கு இருக்கவில்லை. தனக்கு ஏற்பட்ட சிக்கலுக்கான பரிகாரத்தை சந்திரசேகரிடம் கேட்போமா என்ற யோசனை சட்டென்று தலை தூக்கியது.

"இவன் ஊர் முழுக்க சொல்லித்திரிவான். இந்த விசயங்களை ஆளை நம்பேலாது..." என அதே வேகத்தில் அவர் அறிவு எச்சரித்தது.

சுந்தரமூர்த்தி சில மாதங்களுக்கு முன்பு தான் ஐம்பது வயதைத் தாண்டினார். தலையும் மீசையும் நரைக்கத் துவங்கினாலும் மாதம் இருமுறை கறுப்பு மையடித்து கனகச்சிதமாக இளமைத் தோற்றம் பேணுகிறார். ஊரில் தலைமை எஞ்சினியராக இருந்த காலங்களில் பெரியதொரு இலாகாவையே தன் ஆளுமைக்கு கீழ் வைத்திருந்தவர்.

இளநிலை பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள், தொழிலாளர்கள் என்று அனைவரும் ‘சலாம்’ போட்ட தனிக்காட்டு ராஜா.

இவர் யாழ்ப்பாணத்துக்கு அரசாங்க ஜீப்பில் வரும் காலங்களில் பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வேலை கேட்டு இவரின் வீட்டு வாசலில் தவமிருப்பார்கள்.

சகல அதிகாரங்களையும் இலங்கையில் அனுபவித்த சுந்தரமூர்த்தி, ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்ததும் மாநகர சபையொன்றில் பொறியியலாராக சேர்ந்து கொண்டார்.

நிலைமை இங்கு ஊர் மாதிரி இல்லை என்பதைப் புரிந்து கொள்ள இவருக்கு அதிக நாள்கள் செல்லவில்லை. சகல மரியாதைகளுடன் ஊரில் வலம் வந்த சுந்தரமூர்த்திக்கு ஆஸ்திரேலியாவில் தான் ‘என்ஜினியர்’ என்று அழைக்கப்படாதது மாத்திரமல்ல, சாதாரண ஊழியருக்கும் தனக்கும் கையில் கிடைக்கும் சம்பளத்தில் அதிக வித்தியாசமில்லை என்று உணர்ந்ததும், தன்னை யாரோ அதாள பாதாளத்தில் தள்ளிவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

தொழில் ரீதியாக இவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள சமூக அமைப்புகள் வடிகால் அமைத்தன. மாறி மாறிப் பல்வேறு சமூக, சமய, கலாச்சார அமைப்புகளில் பங்கேற்றுப் பல தடவைகள் தலைமைப்பதவியையும் தனதாக்கிக் கொண்டார். இதன் மூலம் தான் இழந்த அதிகாரமும், பெருமையும் சமூகத்தில் நிலைநாட்டப்படுவதாக திருப்திப்பட்டுக் கொண்டார். அடிக்கடி பொது நிகழ்ச்சிகளில் மங்களவிளக்கேற்றவும், உரையாற்றவும் வாய்ப்புகளை வலிந்து ஏற்படுத்தி பிரமுகராக வலம் வரும் நேரத்தில் அவருக்கு இப்படியொரு வில்லங்கம் வந்திருக்கிறது.

அவருடைய கவலைகளுள், இது விஸ்வரூபம் எடுக்கவே, மணி ஐந்தானதும் கொம்பியூட்டரை மூடிவிட்டு வீட்டுக்குப் போகத் தயாரானார். பணிக்கென மாநகர சபை கொடுத்த கார். பெற்றோல் செலவும் இல்லை.

போகும் வழியில் 'எல்லாம் நல்லபடியாக நடக்க வேணும்' என நெஞ்சுருக வேண்டிக்கொண்டு, தனது பெயரிலும் மனைவி பெயரிலும் அருச்சனை செய்ய கோவிலை நோககிக் காரைச் செலுத்தினார். கோவில் ஐயர் இவரைக் கண்டதும் பாய்ந்து ஓடி வந்து தட்டை வாங்கி இரண்டு மந்திரத்தை அதிகமாகச் சொல்லி சுந்தரமூர்த்தியின் மனதைக் குளிர்விக்க முயன்றார். ஐயருக்குத் தெரியும் அடுத்த முறை கோவில் தலைவராக வர சுந்தரமூர்த்திக்கு அதிக வாய்ப்பு இருப்பது.

இப்போது ஏற்பட்டது போன்ற சிக்கல் சுந்தரமூர்த்திக்கு முன்பும் ஏற்பட்டதுண்டு. சிக்கல் தீர்ந்ததும் 'இனி மிகக் கவனமாக இருக்க வேண்டும்' என சூளுரைத்துக் கொள்வது வழக்கம்.

ஆனாலும் தக்க தருணங்களிலே இந்த சூளுரை அவரை 'அம்போ' எனக் கை விடுவதும் உண்டு. இப்படியான சிக்கல் வரும் போதெல்லாம் நிலைமையை அறிந்து கொள்ள சில சங்கேத வார்த்தைகள் (code words) வைத்திருப்பார். இந்த சங்கேத வார்த்தைகள், பிள்ளைகள் முன்னிலையில் மனைவியிடம் உரையாட அவருக்கு மிகவும் உதவியாக இருந்தன.

காரை கராஜுக்குள் நிப்பாட்டி விட்டு வீட்டுக்குள் நுழைந்ததும், மனைவி குசினிக்குள் தேநீர் தயாரித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவளுடைய முகம் வாடியிருப்பதாக அவருக்குத் தோன்றியது. கொண்டு வந்த brief caseஐ கீழே வைக்காமலே 'என்னப்பா சிவப்புக் கொடியா?' என தனது சங்கேத மொழியை மெதுவாக அவிழ்த்து விட்டார்.

எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க நிமிர்ந்தாள் மனைவி. 'ஊரிலே பெரிய மனிசன். வீட்டிலை குமரன் துள்ளி விளையாடுது. நானும் இது நடக்கவேணும் எண்டு தான் விரும்பிறன். அப்ப தான் உங்கடை கொட்டமடங்கும்' என உஷ்ணம் கக்கி வெடித்தாள்.

சகலவற்றையும் ஆண்டவனிடம் ஒப்புக்கொடுத்து, சுரத்தற்று இயந்திர இயக்கத்தில் அன்றைய இரவு கழிந்தது. அடுத்தநாள் அலுவலகத்தில் பணியைத் துவங்கியதும் சுந்தரமூர்த்தியை பழைய அச்சங்களும், உளைச்சல்களும் படாதபாடுபடுத்தியது.

மனைவியுடன் தொடர்பு கொண்டு, வாங்கிக் கட்டிக் கொள்வதை மிகுந்த மனவுறுதியுடன் தவிர்த்துக் கொண்டார்.

மூன்றாம் நாளிரவு அவர் வீட்டிலே கலாச்சார சங்கத்தின் செயல்குழு உறுப்பினர்கள் கூடியிருந்தனர். சுந்தரமூர்த்தியை கலாச்சார சங்கத்தின் நடப்பாண்டுத் தலைவர். கலைவிழா பற்றிய நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்கு அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இடையில் ஏற்பட்ட மன உளைச்சலிலே இந்தக் கூட்டம் பற்றி அவர் துப்பரவாக மறந்து போனார். கூட்ட நடவடிக்கைகளிலே சுந்தரமூர்த்தி வழக்கமான பதவி மிடுக்குடன் அன்று நடந்து கொள்ளவில்லை.

'நீங்கள் திட்டமிட்டால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும்' என்று சகாக்கள் தலைகளிலே பெரிய ஐஸ்கட்டிகளை வைத்து கூட்டத்தினை முடித்து வைத்தார். வந்தவர்கள் போன பின் செயற்குழு கூட்டம் பற்றி மனைவிக்கு விடும் வழக்கமான 'பீலா' கதைகள் நிகழவில்லை. சாப்பாடு என்று ஏதோ சம்பிரதாயத்துக்குக் கொறித்து விட்டு படுக்கைக்குச் சென்றார்.

தூக்கம் அவரைத் தழுவுவதுபோலவும்... கெட்ட கனவுகள் அவரைத்துரத்தின. எப்போதோ அவர் மறந்துபோன, கல்லூரி நாள்களில் அவர் துரத்திய பெண்கள் திடீரெனத் தோன்றி மேனகைகளாக அவரைப்படுத்தினார்கள். பெண்களிடம் அவர் தோற்றுப் போனதாகவும், அவரது பலவீனத்தை ஊர்மக்கள் கூடி நின்று சிரிப்பதாகவும் காட்சிகள் வந்து போயின. அந்த ஊரவர்கள் முகங்களிலே, கலாச்சார சங்க செயற்குழு உறுப்பினர்களின் முகங்கள் அவரை கேலி செய்வதும் குசுகுசுப்பதுமாக தெரிந்தன.

குழந்தை ஒன்று அவரை நோக்கி தவழ்ந்து வருவது மங்கலாகத் தெரிந்தது. உடல் வேர்த்துக் கொட்டுவதான உணர்வு தோன்ற விழித்துக் கொண்டார்.

மனைவி சுவர்ப்பக்கமாகத் திரும்பிப் படுத்த கோலத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். சிறுநீர் கழிக்க வேண்டும் போன்றதோர் உணர்வு, எழுந்து உட்கார்ந்தார். கனவுகளில் இருந்து விடுபட்டதான ஒரு நிதானம்.

சுந்தரமூர்த்தி தம்பதிகள் மட்டும் பாவிக்கும் 'மாஸ்டர்' படுக்கை அறையுடன் (master bedroom) இணைந்த பாத்ரூமை நோக்கி நடந்தார். நீள் சதுர துண்டுக் காகிதம் ஒன்று கொமொட் (commode) அருகே கிடந்தது. அதனைப் பார்த்ததும் பொறி தட்டியது. மனைவியின் குளியல் உபகரணங்கள் அடைந்து கிடக்கும் 'கபேட்டைத் திறந்தார். ஆம் அவர் ஊகம் சரியே! அந்தப் பொட்டலம் பிரிக்கப்பட்டிருந்தது. அவசரமாக பாத்ரூம் binஐ திறந்து பார்த்தார்.' பாவித்த 'மாதவிடாய் கச்சை'யொன்று பேப்பரில் சுற்றிப்போடப்பட்டிருந்தது.

இவள் ஏன் இப்படி என்னைத் தவிக்க விட்டாள்...?

பாரதியார் பாடல் வரி ஒன்றின் நினைவு அவர் தலையிலே பலமாகக் குட்டியது! குட்டுப்பட்டாலும் தலை தப்பிவிட்ட நிம்மதி.

'விமுக்தி' என்ற சொல்லின் முழு அர்த்தத்தையும் சுகித்தவராக சுந்தரமூர்த்தி தமது கட்டிலை நோக்கி நடக்கலானார்.

('மர்ம முடிச்சு' அவிடிநந்த நிலையில் கதையை மீண்டும் வாசித்துப் பாருங்கள். மீள வாசித்தல் 'கதைக்காக' மட்டும் உரியதன்று)

நன்றி: ஞானம்

(a.kantharajah@uws.edu.au)

# இரண்டாம் யாஸிர் அரபாத்

அஷ்ரப் சிஹாப்தீன்
இலங்கை



தலைப்பைப் பார்த்ததும் இங்கிலாந்தின் இரண்டாம் ஜோர்ஜ், பிரான்ஸின் ஆறாம் பிலிப் மற்றும் ஜோர்ஜியாவின் மூன்றாம் டேவிட் போல் இரண்டாவது யாஸிர் அரபாத் என்று ஒருவர் இருந்திருக்கிறார், நாம்தான் தெரியாமல் இருந்திருக்கிறோம் என்ற அவசரப்பட்ட ஒரு முடிவுக்கு நீங்கள் வந்துவிடக் கூடாது.

எந்தவொரு வரலாற்று நூலிலும் நீங்கள் இரண்டாம் யாஸிர் அரபாத்தைச் சந்திக்க முடியாது. அவரது வரலாறு இனிமேல்தான் எழுதப்படவேண்டியிருக்கிறது. இந்தக் கதைதான் அதற்கான தோற்றுவாய். முழுமையாக இல்லாவிடிலும் என்னால் முடிந்த வரை இந்தக் கதையில் அவரைப் பதிந்து விடுவதுதான் எனது நோக்கம். ஓர் எழுத்தாளன் என்ற வகையில் அது எனது சமூகக் கடமையாகும்.

தவறவிடுவேனாகில் இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு துரோகத்தை இழைத்து விட்டதற்காக எனது மனச் சாட்சி என்னை மரணம் வரை துரத்தக் கூடும்.

பிற்காலத்து வரலாற்று மாணவன் இந்தக் கதைக்குக் கை, கால், மூக்கு வைத்து ஒரு பெரும் சரித்திரப் புத்தகத்தையே எழுதி விட முடியும். இக் கதாநாயகன் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்தால் நிச்சயமாக இந்தக் கதையின் தகவல்கள் பிழையானவை என்று அவர் சொல்ல இடமுண்டு. ஆனால் அதை அவரால் நேரடியாக மறுக்க முடியாது. அதற்கான காரணங்களைக் கதையை வாசித்து முடித்ததும் நீங்களே அறிந்து கொள்வீர்கள். எனவே இந்தக் கதையில் சொல்லப்படுபவன் நானல்லன் என்பதைத் தெரிவித்து விடுவது அவருக்குப் பெரிய ஒரு காரியம் இல்லை. அதை ஒரு கட்டுரையாகவே புத்தகமாகவோ எழுத யாராவது ஓர் இளநிலைப் படைப்பாளி அவருக்குச் சிக்காமலா போய் விடுவான்.

நான் எழுத்தாளனுக்குரிய கடமையை நேர்மையாகச் செய்கிறேன் என்பதை மட்டும் இவ்விடத்தில் சத்தியம் செய்து தெரிவித்துக் கொள்கிறேன்.

யாஸிர் அரபாத் என்ற பெயரைக் கதையில் அடிக்கடி எழுதவேண்டியிருக்கிறது. அரபாத் என்ற பெயரில் எனது நண்பர்களும் நல்ல படைப்பாளிகளும் இருக்கிறார்கள். ஒரு வசதிக்காக யாஸிர் என்று மட்டும் பயன்படுத்த முனைகிறேன். யாஸிர் என்ற பெயருடையவர்கள் என்னைக் கோபித்துக் கொள்ளக் கூடாது.

யாஸிர் எழுபதுகளில் கிழக்கின் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றில் பிறந்தவர். எந்த வகையிலும் பெரும் பின்னணியில்லாத குடும்பத்தில் அவர் பிறந்ததால் வறுமையுடன் போராடும் வாழ்க்கையாயிருந்தது. படிப்பில் சுட்டியாக இருந்த போதும் அவரை விட வயதில் கூடியவர்களுடயே அவரது சகவாசம் இருந்தது. எனவே, விரலை விடப் பெரிய வீக்கமடைந்தவராயிருந்தார். இதனால் பொதுவாக ஒரு மாணவனுக்கான நன்மதிப்பு அவருக்குக் குறைவாக இருந்தது. மேல் வகுப்புப் படித்து முன்னேறுவதில் அவருக்கு வறுமையும் அவருடனேயே பிறந்த கோணல் புத்தியும் இடைஞ்சலாயிருந்தன.

பன்னிரண்டுக்கும் பதின்மூன்றுக்கும் இடைப்பட்ட வயது வரை சாதாரண முஸ்லிம் கிராமத்தின் ஏழைச் சிறுவன் ஒருவன் எதிர் நோக்கும் சங்கடங்கள், பிரச்சினைகளோடு அவரது வாழ்வும் கழிந்தது.

1983க்குப் பிறகு தமிழ் மக்களின் விடுதலைக்கான முனைப்பு வீறு கொண்டது. ஆயுதங்கள் தமது பலத்தை அதிகரித்துக் கொண்டே வந்தன. பல விடுதலை இயக்கங்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் சில இயக்கங்கள் அவ்வப்போது தமிழ் பேசும் சமூகத்துக்கும் விடுதலை வாங்கித் தருவதாகப் பிரகடனப்படுத்தின. பிரபலமான தமிழ் அரசியல்வாதிகள் அடக்கி வாசித்தார்கள். சிலர் தமது இருப்பிடங்களை மாற்றிக் கொண்டார்கள். இன்னும் சில இயக்கங்கள் ஆயுதம் ஒன்றே விடுதலையைப் பெற்றுத்தர வல்லது என்ற ஏகமான ஒரு முடிவுக்கு வந்து சேர்ந்திருந்தன.

ஆயுதங்களை முன்னிலைப்படுத்திய சில இயக்கங்கள் சாகசங்கள் புரிந்தன. அவற்றின் அங்கத்தவர்கள் பொலிஸாரின் துவக்கைப் பறித்துக் கொண்டு ஓடினார்கள். பொலிஸ் நிலையங்களைத் தாக்கினார்கள். இராணுவ வாகனங்களுக்குக் குண்டு வைத்தார்கள். இச்செயற்பாடுகள் காரணமாக அவை மக்களிடம் கவனிப்பைப் பெற்றன. மேல் தட்டுத் தமிழர்களும் சாதியில் உயர்ந்த வர்க்கத்தினரும் சாப்பிடவும் கொட்டாவி விடவும் வாய் திறந்து மூடினார்கள்.

மார்க்ஸிய வழியில் போராட்டம் குறித்துச் சில இயக்கங்கள் வகுப்புக்களை நடத்தின. சமத்துவமான தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டினூடு தமது போராட்டத்தை நகர்த்த அவை முடிவு செய்திருந்தன. ஆனால், சாதாரண மக்களோ ஆயுத சாகசங்களால் கவரப்பட்டார்கள். ஆயுதங்களை முன்னிலைப்படுத்திய இயக்கங்கள் ஏனையவற்றுக்கு அச்சுறுத்தலாகவும் மாறின. இதன் காரணமாகத் தாமும் ஆயுதங்களை ஏந்துவது என்ற முடிவுக்கு அவை வந்து சேர்ந்தன. இவற்றில் அஹிம்சாவாதிகள் அரசியல் பிரிவானார்கள். சற்று உஷார் ஆசாமிகள் ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டார்கள்.

*

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக யாஸிர் வளர்ந்தார். பாடசாலைப் படிப்பைக் கைவிட்ட அவர் தனது முன் கட்டிளமைப் பருவத்தில் இருந்தார். தமது பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட மாறுதல்களை அவதானித்துக் கொண்டு வந்தார். செய்திப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் அத்துடன் போராட்ட இயக்கங்களின் பத்திரிகைகளையும் ஆர்வமுடன் படித்துத் தனது அறிவை விருத்தி செய்து வந்தார். அதே வேளை தனக்கு நன்கு அறிமுகமான, தன்னை விட இரண்டொரு வயது மூத்த தமிழ்ச் சகோதரர்கள் துப்பாக்கிகளுடன் நடமாடுவதைக் கண்டார். அவர்களைக் கண்டு சிலர் மரியாதை செய்வதையும் அவதானித்தார்.

ஆயுதங்களுக்குச் சமமாக சில சஞ்சிகைகளும் இயக்கங்களின் பத்திரிகைளும் பேசத் தொடங்கின. நியாயம் என்பது ஆயுதம் வைத்திருப்பவன் சொல்வது என்ற நிலை ஏற்பட்டதும் அதிசிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்று கருதப்பட்டவர்கள் மூசாந்து போனார்கள். இவர்களில் சில முக்கியஸ்தர்கள் கையெழுத்து வைக்கவும் கடிதம் எழுதவும் மட்டுமே பேனாவைப் பயன்படுத்தினார்கள். கடிதங்களைக் கூட ஒரு நல்ல சிறுகதையைத் திருத்துவது போலத் திருத்தித் திருத்தித் திருப்பி எழுதினார்கள்.

இன்னொரு புறம் பெரும்பான்மைக்கெதிரான அரசியல் கட்டுரைகளும் கவிதைகளும் கதைகளுமாகச் சிலர் தூள் பரத்தினார்கள். உலகளாவிய சிறுபான்மைப் போராட்டங்கள் குறித்துப் படித்தார்கள். அதன் வெற்றி தோல்விகள், தலைமைகளின் வீரமும் துணிவும், ஆட்சியாளர்களின் அராஜகமும் அடாவடிகளும், போராட்டங்களின் விளைவான பிராந்திய, கண்ட, உலகளாவிய மாற்றங்கள் என்று பல நூறு படைப்புக்கள் எழுதப்பட்டன. இவை பற்றி எழுதப்படுபவை மாத்திரமே அவசியமானதும் உண்மையானதும் சரியானதுமான இலக்கியம் என்ற ஒரு நிலை தோன்றிற்று.

ஒரு பெண்ணை அல்லது காதலியை வர்ணித்து எழுதுபவன் ஒரு பத்தாம் பசலிப் பயல் என்று நோக்கப்பட்டான். போராட்டமும் இன வேறுபாடும் பற்றியதல்லாதவற்றை எழுதும் ஒருவன் தொடை நடுங்கி அல்லது எதை எழுத வேண்டுமென்று தெரியாத முட்டாள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டான்.

போராட்டம் குறித்து எழுதப்படாத எதுவும் இலக்கியமாகாது என்ற போக்கு மேலெழுந்தது. இதனால் அற்புதமான படைப்பாளிகள் அமிழ்ந்து போனார்கள்.

யாஸிருக்குக் கவிதை வந்தது. அதாவது கவிதை போல வந்தது. டெப்ளோயிட் சைசில் திடீர்த் திடீரென முளைத்து மறைகின்ற பத்திரிகைகளுள் ஒன்றுக்குத் தனது கவிதையை அனுப்பினார். பிரசுரமானது. யாஸிர் கவிஞனாகி விட்டார். அவ்வப்போது சிறுபான்மை மக்களின் உள்ளக் கிடக்கை, ஆட்சியாளர்களின் வன்மம், அதனால் தனது உள்ளச் சோர்வு மற்றும் இருள் கலையும், காலை விடியும், காலச் சக்கரம் சுழலும், புழுதி கிளம்பும், புயல் வீசும் என்றெல்லாம் அவ்வப்போது எழுதி வந்தார். சில பிரசுரம் கண்டன. அவர் கவிதை அனுப்பிய பத்திரிகைகளில் சில மீண்டும் வெளிவரவே இல்லை. இருக்கும் கவிதைகள் பிரசுரம் காண வேண்டும் என்ற உத்வேகம் அவரைப் பிடித்துக் கொண்டது. தன்னை முன்னிலைப்படுத்துவதற்கு அவருக்கு ஏதாவது ஒரு வழி தேவைப்பட்டது. தனது சிந்தனைப் போக்குக்கு ஈடு கொடுக்கப் பத்திரிகைகள் இல்லை என்ற முடிவுக்கு வந்தார். அவருக்கு புதிய யோசனை ஒன்று வந்தது. நாமே ஏன் புதிய பத்திரிகை அல்லது சஞ்சிகை ஒன்றை வெளியிடக் கூடாது?

இதுதான் 'நிமிர்வு' என்ற அந்தச் சஞ்சிகை வெளிவந்த கதை.

இந்தச் சஞ்சிகை வெளிவந்ததும் முஸ்லிம் சமூகத்தின் புதிய எழுத்தாளர் படையை மிகவும் ஆகர்ஷித்தது. கற்றுக் குட்டி எழுத்துக்களாக இருந்த போதும் விடுதலைப் போராட்டங்களை மேவிய படைப்புகளே அதில் இடம் பெற்றிருந்தன. புதிய படை யாஸிரைச் சுற்றிச் சுற்றி வந்தது. பணஞ் சேர்த்தார்கள். இரண்டாம் இதழ் வெளியானது. இலங்கையில் வெளிவரும் ஒரு முக்கியமான இலக்கியச் சஞ்சிகையாக அதில் எழுதியவர்கள் தாமாகவே இறுமாந்தார்கள். யாஸிர் அதிசிறந்த ஓர் இலக்கியவாதியாக, சிந்தனையாளராக கூடத் திரிந்த வாலாந்தவக்கைகளால் முடி சூட்டப்பட்டார்.

யாஸிர் ஒரு தமிழ் விடுதலை இயக்கத்து நண்பர்களுடன் நல்லெண்ண நண்பராக இருந்தார்.

இயக்கத்தினர் விவாதிக்கும் இடங்களில் சென்று அமர்வதற்கும் கருத்துச் சொல்வதற்கும் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர் அவ்வியக்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்திருக்கவில்லை. தனது முஸ்லிம் நண்பர்களுக்கும் அவருக்குப் பின்னால் திரிந்த சிஷ்ய கோடிகளுக்கும் அவ்வியக்கத்தில் ஆலோசகர் மட்டத்தில் இருப்பவர் போல் பாசாங்கு பண்ணினார். இதனால் படிப்பு வராத, கிறுக்குத் தனம் கொண்ட சில இளையவர்களிடம் ஒரு பெரும் போராளியாக அவர் உலா வந்தார்.

தமிழர் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளை இலங்கை முஸ்லிம்களின் கதி குறித்துக் கட்டுரைகள் எழுதினார். அவரது கட்டுரைகள் புத்தி ஜீவிகள் படிக்கும் பத்திரிகைகளில் வெளிவந்தன. சகல முஸ்லிம் அரசியல்வாதிகளையும் நார் நாராய்க் கிழித்தார். அரசியல் கட்டுரையில் எவர் ஒரு சமூகத்தின் விதி இப்படி முடியும் என்று எழுதினாலும் அதே போல ஒரு போதும் நிகழ்வதில்லை. ஆனால் யாஸிரின் எழுத்துக்கள் பலரைக் காயப்படுத்தின. அவரது நோக்கமும் அதுவே. இக்கட்டுரைகளை வாசித்த அவரது நண்பர்கள் அவரை வானளாவப் புகழ்ந்தார்கள். யாஸிரின் எழுத்துக்கள் படித்தவர்களின் சிந்தனைக்குரியவை அல்ல. ஆனால் சாதாரண மக்களுக்குக் குழப்பம் ஏற்படுத்தக் கூடியவை. எனவே அரசியல்வாதிகள் இவரைக் கட்டுப்பாட்டுள் கொண்டு வர நினைத்தார்கள். பணத்தை வீசுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள்.

கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கும் போது யாஸிர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுவதாக தனது சிஷ்ய கோடிகளுக்குக் கதை விட்டார். அப்படி விட்டால்தான் அவர்களைத் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று யாஸிர் நினைத்தார். பொலிஸில் அவ்வப்போது சென்று தனக்குப் பயமுறுத்தல் விடுக்கப்படுவதாக முறைப்பாடு செய்தார். அதன் பிரதிகளை எடுத்துக் கோப்புப் படுத்தி வைத்துக் கொண்டார்.

அவரது சிஷ்ய கோடிகள் ஊரின் ஒதுக்குப்புறமாக ஒரு பெரிய வீட்டைத் தேடிப் பிடித்தார்கள். அந்த வீட்டின் பின்புறம் இரண்டு அறைகளில் வீட்டின் பழைய பொருட்களைப் போட்டு வைத்திருந்தார்கள்.

அந்த அறைகளை வாடகைக்குப் பிடித்து அதில் தலைவருக்குக் காரியாலயம் அமைத்துக் கொடுத்தார்கள். அங்கு நுழைவதானால் நாலைந்து காசான் பற்றைகள், சில ஈச்சம் புதர்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.

அந்த அறையில் ஒரு மேசை மற்றும் மூன்று பிளாஸ்டிக் கதிரைகள் போடப்பட்டன. யாஸிர் அதில் அமர்த்தப்பட்டார். ஒரு கட்டுக் காகிதம், சில பேனைகள், சிகரட் தூள் கொட்டுவதற்கான சாம்பல் கிண்ணம், தினசரிகள், நீர் அருந்துவதற்கான நான்கு கோப்பைகள், நீர் வைப்பதற்கான பெரிய இரண்டு போத்தல்கள் ஆகியன வைக்கப்பட்டு ஒரு சுபமுகூர்த்தத்தில் யாஸிர் அங்கு வந்து சேர்ந்தார்.

அன்றிலிருந்து தன்னை ஒரு யாஸிர் அரபாத்தாக அவர் நினைத்துக் கொண்டார். அவரை யாரும் சந்திப்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. யாஸிருக்குக் கடன் கொடுத்தவர்கள் அவரைத் தேடித் திரிந்தார்கள்.

*

யாஸிரிடம் ஆட்களை அடையாளம் காணும் திறமை இருந்தது. இலக்கியத்தில் யார் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறார்கள், அரசியலில் யார் சக்தியுடையோராக இருக்கிறார்கள் என்பதைச் சரியாக நாடி பிடித்து இயங்கும் திறமை அவருக்கிருந்தது. இலக்கிய முக்கியஸ்தர்களை நெருங்கிப் பேட்டியெடுத்துப் பிரசுரித்தார். இதனால் பல இலக்கிய விற்பன்னர்கள் தமிழ் இலக்கியம் என்றால் யாஸிரின் பெயரை ஒரு முறை சொல்லிக் கொள்ளத் தயங்குவதில்லை.

அதற்குக் காரணம் யாஸிர் ஒரு பெரிய இலக்கியவாதி என்று அவர்கள் கருதினார்கள் என அர்த்தம் ஆகாது. யாஸிரின் பெயரைச் சொன்னால்தான் தனது பேட்டி பற்றியும் அதில் தான் சொல்லியிருக்கும் கருத்துக்கள் பற்றியும் சொல்ல முடியும் என்று அவர்கள் கருதியதுதான்.

இலக்கிய விற்பன்னர்கள் யாஸிரின் பெயரை அடிக்கடி குறிப்பிடுவதால் அவருக்கு அவரது சகாக்கள் ஓர் ஒளிவட்டத்தை உருவாக்கினார்கள். இந்தப் பிரபல்யத்தை வைத்துத்தான் அவர் அரசியல்வாதிகளைத் தனகினார்.

அதன் விளைவாகத்தான் அவர் இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் விடுதலை வீரனாகத் தன்னைக் கட்டமைத்துக் கொள்ள வேண்டி வந்தது.

இவ்வாறு யாஸிர் முஸ்லிம் மக்களுக்காக இயங்க ஆரம்பித்த போது இவருடன் உள்ள உறவை இவரது நண்பர்களாக இருந்த தமிழ் இளைஞர்கள் அறுத்துக் கொண்டார்கள். தமிழ்ப் பாஸிஸம் பற்றி யாஸிர் எழுதத் தொடங்கிய போது ஜிஹாத் குழு இயங்குகிறது என்று அவர்கள் மாறி எழுதத் தொடங்கினார்கள். இத்தனைக்கும் யாஸிரிடம் ஒரு விளையாட்டுத் துப்பாக்கி கூடக் கிடையாது.

இவ்வாறு அவர் எழுதுபவற்றையும் அவருக்கு எதிராக எழுதப்படுவனவற்றையும் கோப்பு வைத்துப் பத்திரப்படுத்தினார் யாஸிர்.

ஏற்கனவே தமது அரவணைப்புக்குள் யாஸிரை வைத்திருந்த அரசியல்வாதிகள் பின்னர் கைவிட்டார்கள். 'நக்குண்டார் நாவிழந்தார்' என்ற நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். இரவில் ஜால்ராக் கோஷ்டியுடன் குழுமியிருந்து சமூகத்தைக் காப்பது பற்றிக் கதைக்கும் போது எல்லோரும் அரை மயக்கத்தில்தான் இருப்பார்கள். கஞ்சா அல்லது அபின் பாவித்தால்தான் சமூகத்தைப் பாதுகாக்கும் சிந்தனை வரும் என்பது அவர்களின் சித்தாந்தமாக இருந்தது. ஆனால் இதற்காகச் செலவழிக்க அதிக பணம் தேவைப்பட்டது. கடன் பெறுவதற்கும் வழியற்றுப் போன நிலை உருவானது.

தங்களைப் பேட்டி கண்டதாலும் தங்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியதாலும் இலக்கிய விற்பன்னர்களிடம் யாஸிருக்கு இருந்த மதிப்புக் குறையவில்லை. ஆனால் தம்மைப் பற்றி மேலும் யாஸிர் எழுத வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பார்களே தவிர கஞ்சா, அபின் செலவுகளுக்கெல்லாம் பணம் கொடுக்க மாட்டார்கள் என்பது யாஸிருக்குப் பின்னர் புரிய வந்தது.

தனது பொலிஸ் முறைப்பாடு, பத்திரிகைகளில் தனக்கு எதிராக வந்த செய்திகள் அனைத்தையும் இணைத்துக் கோப்பு ஒன்றைத் தயார்படுத்தினார் யாஸிர்.

ஒரு மேலை தேச நாட்டுத் தூதுவராலயத்தில் அகதி அந்தஸ்துக் கோரி ரகசியமாக விண்ணப்பித்தார்.

அவருக்கு அதிர்ஷ்டம் இருந்தது. இரண்டு வருடங்களுக்குத் தற்காலிகமான விசா வழங்கப்பட்டது. இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளப் போவதாக சிஷ்ய கோடிகளுக்குத் தெரிவித்துவிட்டு விமானமேறினார்.

அவரால் கைவிடப்பட்ட முஸ்லிம் சமூகம் இலங்கையில் இன்னும் சீரழிந்து போய்க் கிடக்கிறது. இந்த சமூகத்தையும் தம்மையும் ரட்சித்து அருள அவர் மீண்டும் வரமாட்டாரா என்ற ஏக்கத்துடன் கஞ்சாவுக்கும் லேகியத்துக்கும் வழியின்றி அவரது சிஷ்ய கோடிகள் அலைந்து திரிகிறார்கள்.

காலத்தின் கட்டாயத்தில் அவர் சென்று சேர்ந்த நாட்டில் பகுதி நேரம் பெற்றோல் நிரப்பும் நிலையம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருக்கிறார் யாஸிர். அவ்வப்போது நடக்கும் இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றித் தற்போது குரல் கொடுத்து வருகிறார்.

இங்கிலாந்தின் இரண்டாம் ஜோர்ஜ் போலவோ பிரான்ஸின் ஆறாம் பிலிப்பைப் போலவோ ஜோர்ஜியாவின் மூன்றாம் டேவிட் போலவோ அவரால் செயற்பட முடியாமல் போயிருக்கலாம். ஆனால் இம்சை அரசன் இருபத்து ஐந்தாம் புலிகேசி ரேஞ்சுக்காவது அவர் இருந்தார் என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். இல்லையென்றால் உங்களைப் போன்ற மனச்சாட்சியற்ற மனிதர்கள் உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது.

(ashroffshihabdeen@gmail.com)

# இது எனது நகரம் இல்லை

**இவள் பாரதி**

**இந்தியா**



'இது எனது நகரம் இல்லை' - தஸ்லீமா நஸ்ரீனின் கவிதைத் தொகுப்பின் தலைப்பு மனதைக் கனக்கச் செய்தது. தலைப்பு மட்டுமல்ல.. கவிதைகளும்தான். அவரது கவிதைகளின் வெளிப்பாட்டில் எவ்வளவு நுட்பமான பார்வை இருக்கிறது. அவரது 'அம்மாவின் மரணம்' என்ற கவிதைத் தொகுப்பில்தான் முதன் முதலில் தஸ்லீமாவுக்கும் எனக்கும் எழுத்து ரீதியிலான ஒரு உறவு ஏற்பட்டது.

எந்தவொரு இலக்கிய படைப்பும் வெறும் வார்த்தைகளை அல்லது எழுத்துக்களைக் கோர்த்துப் பின்னப்பட்டதல்ல. அது ஒருவரின் உள்ளுணர்வுகளை எங்கோ இருந்து எப்போதோ எழுதப்பட்ட வார்த்தைகளால் அசைத்துப் பார்க்கும் ஒரு மாய விளையாட்டு.

அந்த எழுத்துக்கள் எங்கெங்கு பயணிக்கிறதோ அங்கெல்லாம் நாமும் சென்று வரும் அனுபவத்தைக் காட்சி ஊடகம் கூட கொடுக்க முடியாது. காட்சிகள் ஒரு எல்லையை வகுத்து தந்து விடுகின்றன. இதுதான் சிரபுஞ்சி என்றால் அந்த காட்சி மட்டுமே நமக்குள் தேங்கி விடுகிறது. ஆனால் எழுத்துக்களில் உலவும் ஒவ்வொரு மனதுக்கும் ஒவ்வொரு விதமாக சிரபுஞ்சியின் காட்சி மனக்கண்ணில் ஓடிக் கொண்டிருக்கிறது. இதுதான் எழுத்தின் வலிமை.

எழுத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றைப் பெற்றுத்தந்திருக்கும். எனக்கும் ஒன்றைப் பெற்றுத் தந்திருக்கிறது. யாராலும் பெற முடியாத எனக்கு மட்டுமேயான ஒரு உறவை பெற்றுக் கொடுத்திருக்கிறது.

முதலில் இந்த புத்தகத்தை கைப்பைக்குள் வைத்துக் கொள்கிறேன். ஏனெனில் நாளை தாத்தாவுக்கு இந்த தொகுதியை வாசித்துக் காட்ட வேண்டும். அவருக்கு கவிதைகள் மிகவும் பிடிக்கும். அத்துடன் கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள், குறும்படங்கள் இப்படி அனைத்து இலக்கிய வகைமைகளையும் விரும்பக்கூடிய கலைமனம் தாத்தாவுக்கு உண்டு.

இருபது வருடங்கள் பத்திரிகை ஆசிரியராக இருந்திருக்கிறார் என்றால் எவ்வளவு படித்திருப்பார். அவர் அடிக்கடி சொல்வதுண்டு. வாரத்துக்கு ஒரு கதை தேர்வு செய்வதற்கு வந்திருக்கும் அத்தனை கதைகளையும் படிப்பாராம். நான் நினைத்துப் பார்ப்பேன். குறைந்த பட்சம் வாரத்துக்கு 10 கதை படித்திருந்தாலும் வருடத்திற்கு 52 வாரங்கள், 520 கதைகள் படித்திருக்கக்கூடும். அப்படியென்றால் 20 வருடத்திற்கு பத்தாயிரத்து... நானூறு.. அடேயப்பா. குறைந்தபட்சமே இவ்வளவு எனில் அதிக பட்சம் நினைத்துப் பார்க்கவே தலை சுற்றியது.

மணி 8.35 என்று காட்டியது. பேருந்திலிருந்து ஜன்னலுக்கு வெளியே எட்டிப்பார்த்தேன். காவிரிப்பாலத்தின் மீது சென்று கொண்டிருக்கிறேன் என்று தெரிந்தது. மலைக் கோட்டை பிள்ளையார் கோவிலின் வெளிச்சம் பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது. சற்று ஜன்னலை திறந்து வைத்துக் கொண்டேன்.

இன்னும் இருபது நிமிடத்தில் மத்திய பேருந்து நிலையம் சென்று விடலாம். அங்கிருந்து புதூர் செல்வதற்கு இருபது நிமிடமாகும்.

எப்படியும் பத்து மணிக்குள் வீட்டிற்கு சென்று விடலாம். எங்கேனும் வெளியூர் சென்று விட்டு ஊருக்குத் திரும்பும் போது அவ்வளவு குதூகலமாக இருக்கிறது.

ஒரு பறவை எவ்வளவுதான் உயரப் பறந்தாலும் தன் கூட்டுக்குத் திரும்பும் போது குதூகலத்துடன் திரும்பும். அது போல ஒவ்வொரு முறை சென்னையிலிருந்து திருச்சிக்கு வரும் போதும் எனக்குள் ஒரு குதூகலமும், சிறு கவலையும் ஒட்டிக் கொள்கிறது.

திருச்சியில் இருக்கும் போது கல்லூரி முடிந்து நேரே தாத்தா வீட்டுக்குச் சென்று விட்டுத்தான் என் வீட்டிற்குத் திரும்புவது வழக்கம். இப்போது முனைவர் பட்டத்திற்காக சென்னையில் தங்கிப் படிப்பதால் தாத்தா வீட்டிற்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறைதான் செல்ல முடிகிறது. அதனால் தாத்தாவைப் பார்க்கப் போகிறோமே என்ற மகிழ்வினூடே தாத்தாவின் அனுபவங்களை உள்வாங்க முடியாத, அடிக்கடி பார்க்க முடியாத தூரத்தில் இருக்கிறோமே என்ற கவலையும் சேர்ந்தே வந்துவிடும். சற்றே கண் மூடுகிறேன்.

5 வருடத்திற்கு முந்தைய அந்த காட்சி மனதில் விரிகிறது. அது ஒரு இலக்கிய நிகழ்வு. செங்கை ஆழியானின் ‘ஆயிரமாயிரம் ஆண்டுகள்’ என்ற நூலை அறிமுகப்படுத்தி தாத்தா பொன்னீலன் பேசிக் கொண்டிருக்கிறார். எல்லோருக்கும் அவர் எழுத்தாளர் பொன்னீலன் என்றால் எனக்கு தாத்தா பொன்னீலன் தான். கூட்டங்களில் பேசும் போது கூட வாய் நிறைய என்னைப் பேத்தி என்று கூப்பிடுவார். அந்தக் கூட்டத்திலும் செங்கை ஆழியானின் குறுநாவல்கள் பற்றி சொல்லிக் கொண்டிருக்கையில் ‘என் பேத்தியைப் போன்ற ஒரு தமிழச்சி சொல்கிறாள்’ என்று என்னைக் கைகாட்டிப் பேச மொத்தக் கூட்டமும் என்னைத் திரும்பி பார்த்தது.

அந்த கூட்டத்தில் இருந்த மூன்று நான்கு பெண்களில் நானும் ஒருத்தி. எனவே தனித்து அடையாளம் காணப்பட்டேன்.

அப்போதுதான் அந்த முதியவரும் என்னைக் கண்டார். மெலிதாகப் புன்னகைத்தார். நானும் சிரித்து வைத்தேன். அதற்குப் பிறகு அந்த முதியவர் பேச வந்தார். அவரது பேச்சு ஒரு குழந்தை பேசுவதைப் போன்ற மழலையிலும், ஈழத்தமிழின் தொணியிலும் அமைந்திருந்தது.

நிகழ்ச்சி முடிந்ததும் ஒவ்வொருவரும் யாரிடமாவது பேசிக் கிளம்ப அரை மணி நேரம் ஆகிவிடும். இலக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதன் நோக்கமே நண்பர்களை சந்தித்து பேசுவதற்கும் புதிய நண்பர்களைப் பெறுவதற்கும் தான் என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படும் உண்மை. நட்புக்கு இலக்கிய நிகழ்வு முக்கியமான பாலமாக இருக்கிறது. நானும் அந்த முதியவரை சந்தித்து பேசினேன்.

கருத்த தேகம். ஆஜானுபாகுவான உயரம். தலையில் ஆங்காங்கே நீட்டிக் கொண்டிருந்தாலும் காதோரத்தில் மட்டும் கொசகொசவென வளர்ந்திருக்கும் வெள்ளிக் கம்பி முடிகள். தொப்பையை மறைக்கும் வெள்ளை குர்தா. மூக்கில் ஒட்டிக் கொண்டிருக்கும் கண்ணாடி. மஞ்சள் கறை படிந்த பற்கள். இவையே தாத்தாவின் புறத்தைப் பற்றி நான் தெரிந்து வைத்திருப்பவை.

மெல்ல எழுந்து வெளியே செல்ல இருந்தவரிடம், ‘தாத்தா உங்களது பேச்சு நல்லா இருந்தது’ என்றேன்.

சிரித்துக் கொண்டே ‘நன்றி அம்மா, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?’ என்றார்.

‘நான் புதூர்தான் தாத்தா’

‘நீங்கள் எங்கே இருக்கீங்க தாத்தா. யார் கூட வந்தீங்க?’

‘நான் தனியாதான் வந்தேன், ஆட்டோவில போயிடுவேன். நிறைய படிங்க. உங்கள மாதிரி இளம்பிள்ளைகள் இந்த மாதிரி இலக்கிய விழாவில கலந்துக்கிறது மகிழ்ச்சியாயிருக்கு.’

‘ஆனா, தாத்தா எந்த மாதிரி புத்தகங்கள் படிக்கிறதுனு சொன்னீங்கன்னா, நல்லாயிருக்கும்’

'ஒரு நாளைக்கு நேரம் கிடைக்கும் போது எங்கட வீட்டுக்கு வாங்க. நான் உங்களுக்கு சில புத்தகங்கள் தர்றேன்' என்று சொல்ல முகவரி வாங்கிக் கொண்டேன்.

இலவசமாக பிறரிடம் புத்தகம் கடன் வாங்கி படிப்பதென்றால் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் படிப்பது வழக்கம். அதனால் அவர் வீட்டிற்குச் செல்லலாம் என அப்போதே தீர்மானித்து கொண்டேன்.

அந்த வாரத்தில் வந்த சனிக்கிழமையில் அவரது வீட்டிற்குச் சென்றேன். வீட்டின் முன் புறத்தில் ஒரு புன்னைமரம் இருந்தது. தொட்டிச் செடிகள் சிலவும், மாதுளை, முருங்கை மரங்களும் பார்ப்பதற்கு அழகாய் இருந்தது.

வாயிலில் வெளிர் சிவப்பு நிறத்தாலான திரை இருந்தது. விலக்கினால் கதவு தாழிடப்படாமல் சாத்தப்பட்டிருப்பது தெரிந்தது.

'தாத்தா' என்று குரல் கொடுத்தேன்.

'யாரது' என்று அங்கிருந்த சோபாவில் படுத்திருந்த 70 வயது மதிக்கத்தக்க பாட்டி கேட்டார்.

பாட்டிக்கு சுருங்கிய வெளுத்தத் தோலும், குழிவிழுந்த கன்னங்களும் சொந்தமாயிருந்தன. முழங்கால் அளவிற்கான ஒரே ஆடை உடுத்தியிருந்தார். முகத்தில் புன்னகை எப்போதும் தவழ்ந்த படியிருந்தது.

என்னைப் பார்த்ததும் 'உட்காருங்கோ.. அவர் உள்ளே காலுக்கு மருந்து கட்டிக்கிட்டிருக்கார்' என சொல்லி விட்டு 'ஏதாவது சாப்பிடுறீங்களா?' என்றார்.

'ஒண்ணும் வேணாம் பாட்டி, இப்பதான் சாப்பிட்டு வரேன்' என்றேன்.

என்னதான் இருந்தாலும் இலங்கைத் தமிழில் ஒரு ஈர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. ஆங்கிலமே கலக்காத தமிழ்.

அதிகப்படியான அடர்த்தி மிகுந்த சொற்பிரயோகங்கள். அதன் தொனி. சிறியவர், பெரியவர் யாராயினும் மரியாதையுடன் விழிக்கும் பாங்கு.

மனதுக்குள் இலங்கைத் தமிழினை நினைத்து வியந்து கொண்டிருந்தேன். இலங்கைத் தமிழ் நன்றாக இருக்கிறது. பாவம் இலங்கைத் தமிழர்கள்தான்... நினைத்துக் கொண்டிருந்த போது பாட்டி ஏதோ சொன்னது காதின் நுனி வரையிலே நின்று விட 'என்ன கேட்டீங்க பாட்டி?' என்றேன்.

'வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?'

'அப்பா, தம்பி, தங்கச்சி, பாட்டி, சித்தி' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது வலது பக்க அறையிலிருந்து தாத்தா வந்தார். எழுந்து நின்றேன் 'உட்காருங்கோ' என்றார்.

'கால்ல என்ன தாத்தா?'

'எனக்கு சர்க்கரை வியாதியம்மா. ஒருமுறை காலில் புண் வந்தது. அது இன்னும் ஆறாமல் ரணமாகியிருக்கு.' என்றவரின் காலைப் பார்த்தேன். கட்டு போடப்பட்டிருந்த இடது காலை நீட்டி அமர்ந்தார்.

கட்டுபோடப்பட்ட இடத்தின் வெளிப்பகுதி கரிக்கட்டை போல் இருந்தது. கருவேலமரத்தின் தூரினை பாதி எரித்தது போல் இருப்பதைப் பார்த்து மனம் கலங்கினேன்.

'ஏன் தாத்தா உங்க பிள்ளங்க எல்லாம் எங்க இருக்காங்க'

'எனக்கு ஆறு பிள்ளைகளம்மா. எல்லாரும் திருமணமாகி லண்டன், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளில் இருக்கிறார்கள்'

'அப்ப யாரு உங்கள கவனிச்சுக்குவாங்க?' என்ற என் கேள்விக்கு 'ஒருத்தருக்கொருத்தர்தான் துணை' என்று பாட்டியை பார்த்து புன்னகைத்தார். அதில் வறட்சியும், வலியும் ஒரு சேர வெளிப்பட்டது.

அவர் இருக்கைக்கு நேராக இருந்த புத்தக அலமாரி கண்ணாடி கதவால் மூடப்பட்டிருந்தது. அதில் 500க்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்திருக்கும். டால்ஸ்டாய், ஜெயக்காந்தன், கு.ப.ரா., ராமகிருஷ்ணன், பிரமிள் போன்ற பல புத்தகங்களோடு ஒரு தமிழ் அகராதியும், ஆங்கில அகராதியும் இருந்தது.

புத்தகங்கள் ஒரு பொருளாகக் கருதப்படுவதில்லை தேர்ந்த வாசகரிடத்திலும் சரி.. படைப்பாளியிடமும் சரி.. அது ஒரு பொக்கிஷமாகப் போற்றப்படுகிறது. மௌனமாக மனதோடு பேசும் ஒரு தோழமை. எந்த நேரத்திலும் முன்னர் சொன்னதை மாற்றிப் பேசாத நேர்மை.

புத்தகம் ஒரு போதிமரம்தான். அந்த அலமாரியிலிருந்த ஒரு புத்தர் சிலை அழகாக இருந்தது. அதன்பக்கத்தில் வள்ளுவர் சிலை. அதைச் சுற்றிலும் புத்தகங்கள்தான்.

‘தாத்தா, எனக்கு ஏதாவது ஒரு புத்தகம் தாங்களேன்’ என்றேன்.

‘எதுவேணாலும் எடுத்துக்கம்மா, ஆனா ஒரு புத்தகம் எடுத்துப் படிச்சுட்டு அடுத்த முறை வேறு புத்தகம் எடுத்துக்கலாம். ஒரு காலத்துல என்கிட்ட ஐயாயிரத்துக்கும் மேலான புத்தகங்கள் இருந்தது.’ என்று பெருமூச்செறிந்தார்.

‘எங்க தாத்தா அந்த புத்தகங்கள்லாம்?’

‘அது எங்கட சொந்த நாட்டுல விட்டுட்டு வர வேண்டிய சூழலாயிடுச்சு’ என்று சொல்லும் போது அவரது கண்கள் கலங்கியிருந்தது.

தன் நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு புலம்பெயர்ந்து செல்வது எவ்வளவு வேதனைக்குரியது.

பொருளாதாரத்தை முன்னிட்டு இடம் பெயர்வதே ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வருத்ததை நிரந்தரமாக தங்க வைத்து விடுகிறது எனில் தன்னிடத்தில் வாழ முடியாமல் பெயர்த்து எறியப்படுவது இன்னும் கொடுமையான வலியைத் தந்திருக்கும்.

‘அங்கிருந்து வரும் போது எல்லா புத்தகங்களையும் எடுத்து வர முடியல...‘அதனால பக்கத்துல இருந்த நண்பர்கள்கிட்ட கொடுத்துட்டு வந்தோம்’ என்றார். ‘சரி, தாத்தா அடுத்த வாரம் வறேன்’ என்று கிளம்பினேன்.

அடுத்தடுத்த முறை செல்லும் போது தாத்தா என்னிடம் நிறைய பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார். வாரம் ஒரு முறை என்பது இருமுறை ஆனது. பின்னர் இரண்டு நாளுக்கொருமுறை சந்திப்பு நிகழ்ந்தது.

தாத்தா - பாட்டியின் தனிமையில் சிறு சலனத்தை என் வரவு நிகழ்த்தியிருந்தது என்பதை என்னால் உணர முடிந்தது. அவருக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் சொல்லும் அளவுக்கு எனக்கான உரிமை அங்கிருந்தது.

ஒருமுறை தாத்தாவின் மருமகன் லண்டனிலிருந்து பேச வழக்கம் போல் நானே எடுத்து ‘யார் பேசுறீங்க’ என்று சொல்ல ‘நீங்கள் யார்’ என்று மறுனையில் கேட்கப்பட்டது.

‘நான் தாத்தாவின் பேத்தி பேசறன்’ என்றேன். பிறகு பாட்டி எடுத்துப் பேசி என்னைப் பற்றி அவர்களுக்குச் சொன்னார். மாதாமாதம் பிள்ளைகளிடத்தில் இருந்து வரும் பணம் மட்டுமே இந்த வயோதிக காலத்தில் கைகொடுக்குமா? என்ற கேள்வி எனக்குள் சுற்றி வந்தது.

தாத்தா திருச்சிக்கு வந்து 20 வருடங்கள் ஆகியிருந்தது.

எல்லா பிள்ளைகளும் தன்னிடத்திற்கு இருவரையும் அழைத்த போதும், ‘இல்ல.. மீண்டும் தாய்மண்ணுக்கு செல்லும் காலம் வரும். அதனால் இங்கேயே இருந்துவிட்டு போகிறோம்’ என்று சொல்லி விட்டாராம்.

ஏழு பிள்ளைகளுக்கும் பிறந்த பேரப்பிள்ளைகளைக் கொஞ்ச கூட கொடுத்து வைக்காத நிலையில் அவரது உணர்வுகளை எந்த வார்த்தையில் வெளிப்படுத்துவது என தெரியவில்லை. ‘உணர்வுகள் சாகடிக்கப்படுவதுதான் முதல் மரணம்’. தாத்தாவும், பாட்டியும் பலமுறை மரணத்தை சந்தித்து விட்டார்கள்.

புத்தகங்கள் படிப்பதற்காக தாத்தா வீட்டிற்கு அடிக்கடி சென்ற நான் விரைவில் தாத்தாவே மிகப் பெரிய புத்தகம் என்று உணர்ந்து அவரிடம் அதிகம் பேசிக் கொண்டிருக்கவே செல்ல ஆரம்பித்தேன். பாட்டி எனக்கு தேநீர் பிடிக்காதென்று அறிந்து பவுடர் பால் கொண்டு வந்து தருவார். அப்போது என்னை 'என்ன குஞ்சு, சோர்வா இருக்கா குஞ்சு?' என்று கேட்பார் பாட்டி.

இன்றைக்கு நினைத்தாலும் இதழோரத்தில் தித்திக்கிறது அவர்களது வார்த்தைகளும், பரிவும்.

'திருச்சி இறங்குங்க' நடத்துனரின் குரல் கேட்டு கண் திறந்தேன். வீடு வந்து சேர பத்து மணியானது. குளித்து சாப்பிட்டு விட்டு என் அறைக்குள் செல்கிறேன். காலையில் சீக்கிரம் எழுந்து தாத்தாவைப் பார்க்கப் போக வேண்டும்.

பயணக்களைப்பு மேலிட எப்போது உறங்கிப்போனேன் என்று தெரியவில்லை. 6 மணிக்கு அப்பாவின் குரல் கேட்டது. அப்பாவிற்கு எத்தனை மணிக்கு உறங்கினாலும் காலை ஆறு மணிக்கு எழுந்துவிட வேண்டும்.

அதனால் இரவில் பத்து மணிக்கெல்லாம் உறங்கிவிட வேண்டும் என்பது அப்பாவின் ஆணை. நான் மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல. இதோ அப்பா என் அறைக்கதவைத் தட்டுகிறார்கள்.

'இதோ வந்துட்டேன்பா'

'எவ்ளோ நேரம்.. தூங்குற.. காலைல சீக்கிரம் எந்திரிக்கனும்னு தெரியாதா?'

'அப்பா, கொஞ்சூண்டு தூக்கம் கண்ணுக்குள்ள நிக்குதுப்பா..'

'நிக்கும் நிக்கும்.. சேத்து வச்சு இன்னக்கி தூங்கலாம். எந்திரிச்சு வா' என்று சொல்ல 'சரி, அப்பதான் தாத்தா வீட்டுக்கு சீக்கிரம் போகலாம்' என நினைத்தபடி காலைக் கடன்களை முடித்து விட்டு காலை பத்து மணியளவில் தாத்தா வீட்டிற்குப் புறப்பட்டேன்.

செல்லும் வழியில் இப்போது தாத்தா எப்படி இருப்பார்? என்று எண்ணிப் பார்க்கிறேன். அப்படியேதான் இருப்பார். வயதானவர்கள் ஒருபோதும் மாறுவதில்லை. நாம் தான் அவ்வப்போது சிலவற்றை மாற்றிக் கொள்கிறோம்.

பாசத்தை வெளிக்காட்டுவதில் மட்டுமல்ல. பாரம்பரியத்தைப் பின்பற்றுவதிலும் தாத்தா.. தாத்தாதான். போன பொங்கலுக்கு சந்தனக் கலரில் கத்தரிப்பூ நிற பார்டர் வைத்த பட்டுப்புடவை வாங்கிக் கொடுத்தது இன்றும் என் நினைவில் மகிழ்ச்சித் தரக்கூடிய சில நினைவுகளில் ஒன்றாக சேகரமாயிருக்கிறது. காரணம் இதுதான்.

'சுண்டைக்காய் கால் பணம், சுமைகூலி முக்கால்பணம்' என்று கிராமப்புறங்களில் பழமொழி சொல்வதுண்டு. அதுபோல அன்று எனக்கு பட்டுப்புடவை எடுக்க கே.கே.நகரிலிருந்து சத்திரம் பேருந்து நிலையத்திற்கு ஆட்டோவிலே போய் வந்திருக்கிறார்கள். சேலை என்னவோ 650 ரூபாய்தான். ஆனால் ஆட்டோ காத்திருந்தற்கு எல்லாம் சேர்த்து 400 ரூபாய் வந்திருக்கிறது.

இதை அந்த ஆட்டோ ஓட்டுநர் ஒருமுறை வழியில் சந்திக்கும் போது சொன்னார்.

தாத்தா வீட்டிற்கு செல்லும் மண் பாதை தார் சாலையாக மாறியிருந்தது.

மூன்று மாதத்திற்குள் இவ்வளவு பெரிய மாற்றங்கள் நிகழுமா.. என்ன?.. பணமிருந்தால் மாற்றங்கள் சாத்தியம்தான்.

தாத்தா வீட்டின் முன்புறமிருந்த புன்னை மரத்தில் இலைகள் பட்டுப் போயிருந்தன. மாதுளை செடிகளும், கொய்யா செடிகளும் சற்று வாட்டமாயிருந்தன. கதவு திறந்தே இருந்தது.

'தாத்தா.. தாத்தா' என்று ராகம் போட்டுக் கொண்டு அவரது அறைக்குள் நுழைந்தேன்.

'வாங்க.. இப்பதான் உங்களுக்கு வழி தெரிஞ்சதா?'

‘ஏன் தாத்தா..இப்டி கேக்குறீங்க.. உங்க நினைப்பு இல்லாமலா இருக்கேன்? பாட்டி எங்க?’

‘அவா ஹொஸ்பிட்டலுக்குப் போயிருக்காங்க.’

‘ஏன் என்னாச்சு?’

‘ஒரு வாரத்துக்கு முன்னால பாத்ரூம்ல வழுக்கி விட்டு விழுந்துட்டாள். ரொம்ப நேரமா ஆளக் காணமேனு போய் பாத்தேன். கதவைத் தட்டினா சத்தமே வரல. பயந்து போய் பக்கத்துல இருக்கிறவங்கள கூட்டி வந்து கதவை உடைச்சு பாத்தா.. மயக்கமாகி கிடக்கா.. அவளப் பாத்ததும் எனக்கு உயிரே போயிடுச்சு. அப்புறம் ஹொஸ்பிட்டல் போய் சேத்தோம்...

...சுகர் பேஷண்ட், லோ பிபி, அதான் காரணம்னு டோக்டர் சொன்னார். கவனிச்சுக்க ஆளே இல்ல. பக்கத்து வீட்டுக்காரவங்க தான் ரெண்டு நாளைக்கு ஒரு தடவை வந்து பாத்துக்கிட்டாங்க. நேத்து தான் வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தோம். இன்னும் பத்து நாளைக்கு காலையிலயும், மாலையிலயும் ஊசி போட வரச் சொல்லிருக்காங்க.’ என்று அவர் சொன்னதும் எனக்கு அவரைப் பாக்க வரும் போது இருந்த சந்தோஷம் மெல்ல வடியத்தொடங்கியது.

இத்தனை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இருந்தும் அருகிலிருந்து கவனிக்க முடியாத ஒரு நிலை. உறவினர்கள் பக்கத்தில் இல்லாத சூழல்.. நினைத்துப் பார்த்தால் வேதனையாக இருந்தது.

அதைக் கவனித்த தாத்தா ‘உன்னோட படிப்பெல்லாம் எப்டி இருக்கு?’ என்னை திசை திருப்பினார்..

‘ம்ம்..நல்லா போகுது தாத்தா..சப்பிட்டீங்களா?’

‘இப்பலாம் கடையிலதான் வாங்கிக்கிறோம்.. சரி..நீங்க சமீபத்துல எதாவது புத்தகம் படிச்சிங்களா?’ மீண்டும் என் கவனத்தை மாற்ற முயற்சித்தார்.

‘ம்ம்.. படிச்சேன்..தாத்தா..‘இது எனது நகரம் இல்லை’னு தஸ்லீமா நஸ்ரீனோட புத்தகம் உங்களுக்குக் கொண்டு வந்திருக்கேன்’

ஆசையாக வாங்கிப் பார்த்தார். ஒரு குழந்தையைக் கையில் எடுப்பதைப் போன்று தான் புத்தகத்தை கையில் எடுப்பார். புத்தகங்களின் முனைகள் மடங்கி இருந்தாலோ, பக்கங்கள் கசங்கியிருந்தாலோ அவருக்குப் பிடிக்காது. திட்டுவார். புத்தகங்களை குழந்தைகள் என்று சொல்வார். கையில் எடுத்த புத்தகத்தை மடியில் வைத்துக் கொண்டார். ‘வேற என்ன படிச்ச?’ என்றார்.

‘தாத்தா எஸ்.ராவோட ‘நகுலன் வீட்டில் யாருமில்லை’னு ஒரு குறுங்கதைத் தொகுதி படிச்சேன். ரொம்ப நல்லா இருந்தது’

‘ஒஹோ..இப்பலாம் குறுங்கதை எழுதுறது குறைஞ்சு போச்சு. அப்படியே எழுதுனாலும் அதை கால்நிமிடக் கதை, அரை நிமிடக் கதைனு கொலை பண்ணி எழுதுறாங்க‘ என்று வருத்தப்பட்டார்.

தாத்தா ஒரு குறுங்கதை தொகுதி வெளியிட்டுள்ளார். அந்த புத்தகத்தின் தொகுதி பெயர் ‘மனிதன்’. அந்த புத்தகம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பட்டிருந்தது. என்னையும் குறுங்கதை எழுதச் சொல்லுவார்.

‘சரி அதுல எதாவது ஒரு கதை சொல்லுங்க’ என்றார். பேரன், பேத்திகளுக்கு தாத்தா பாட்டி கதை சொல்லும் வழக்கம் மாறி பேத்தி நான் தாத்தாவுக்கு கதை சொல்லும் காலத்தை வளர்ச்சியாக பார்க்க முடியவில்லை.

தாத்தாவுக்கு கதை சொல்ல ஆரம்பித்தேன்.

‘தாத்தா ஒரு முள்கரண்டிக்கும், வெள்ளி ஸ்பூனுக்குமான ஒரு காதல்தான் கதை தாத்தா. அந்த முள் கரண்டிக்கு ஸ்பூனை ரொம்ப பிடிக்குது. ஸ்பூனுக்கோ முள் கரண்டிய சுத்தமா பிடிக்கல.

உன்னைய எனக்கு ரொம்ப பிடிக்குது, உன்னோட நளினம், அழகு எல்லாமே அப்டினு முள்கரண்டி சொல்ல ஸ்பூனோ உன்னைய எனக்கு பிடிக்கவே இல்ல. உணவக் குத்திக் கிழிக்குறதுதான் உன்னோட வேலை. உன்னை வெறுக்குறேன்னு சொல்லுது. ஒரு கட்டத்துல முள்கரண்டியும் கோபபட்டி நீ மத்தவங்க வாய்க்குள் போய்ட்டு வர்ற அருவறுப்பான வேலையதானே செய்றனு கத்துது. ரெண்டும் டேபிள்ல தான் இருக்கு. மேஜைல அந்த முதலாளி வந்து சாப்பிடுறான். முள்கரண்டிய வச்சு கறியக் குத்திக் கிழிச்சும், ஸ்பூனால எடுத்தும் சாப்பிடுறான். சாப்பிட்டுட்டு ரெண்டையும் ஒரே வாளில போட்டுட்டு போய்டுறான். இந்த தருணத்திற்காகத்தானே காத்திருந்தேன்'னு ரெண்டும் கட்டித் தழுவிக்குது'

சொல்லி முடித்ததும் வியந்து வியந்து விழுந்து விழுந்து சிரித்தார். அந்த சிரிப்பில் அவரது கவலைகள் சற்று மங்கிப் போனதைக் கவனித்தேன். தனிமையில் வா(ழு)டும் மனிதனின் துயரங்களை எப்படி அழித்தெடுப்பது? அந்த தனிமையில் சலனம் ஏற்படுத்துவதைத் தவிர. அருகிலே இருக்க முடியா நிலைக்கு வருந்தியும், அவ்வப்போது நாமாவது சந்திக்கிறோமே என்ற நிறைவும் எனக்குள் ஊடாடின.

'பாட்டி எப்ப வருவாங்க?'

'ரொம்ப நேரமாகும்னு நினைக்கிறேன்'

'நீங்க எத்தனை நாள் விடுமுறைல வந்திருக்கீங்க' என்றார்

'நாலு நாள்'

'அப்ப நாளைக்கும் வருவீங்களா?'

'நிச்சயமா தாத்தா'

'வரும் போது எஸ்.ராவோட அந்த குறுங்கதை தொகுதிய வாங்கிட்டு வரணும்' என்றார்..

சிரித்துக் கொண்டே தலையாட்டினேன்.

ஏற்கனவே ஒருமுறை சென்னையிலிருந்து வரும் போது ஹிக்கின்பாதம்ஸிலிருந்து 'இருபத்தொன்றாம் நூற்றாண்டின் ஈழப் படைப்புகள்' என்ற நூலைப் பரிசாகக் கொண்டு வந்து கொடுக்க அதை வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒரு எழுத்தாளர் கேட்டாரென்று கொடுத்துவிட்டார். அதனால் முக்கியமான புத்தகங்களை வாசித்துக் காட்டிவிட்டு எடுத்து வந்துவிடுவேன்.

பின்புற வாசலில் ஏதோ சத்தம் கேட்டது. தாத்தா 'சத்தமிட்டது புலுனிக்குஞ்சுதா போய் பாருங்க' என்றார். ஒருமுறை புதுவை ரத்தினதுரையின் 'பூவரச வேலிகளும் புலுனிக்குஞ்சுகளும்' என்ற தொகுப்பைப் பற்றி பேசிக் கொண்டிருந்த போது புலுனிக்குஞ்சை பார்த்ததில்லை என்று சொன்னதை நினைவுபடுத்தி இப்போது அவர் சொன்னது அவரது நினைவுத்திறனை வியக்க வைத்தது. தாத்தாவுக்கு அடிக்கடி ஞாபகமறதி ஏற்படும் என பாட்டி சொன்னதும் நினைவுக்கு வந்து போனது.

எழுந்து பின்புற வாசலுக்குச் சென்றேன். கண்ணுக்கு தென்படவில்லை. சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது. அங்கிருந்த முருங்கை மரத்தின் உயரத்தில் பட்டுப் போன முருங்கைக்காய் ஒன்று இருந்தது. ஏதோ மனதில் சிறுவலி ஏற்பட வீட்டிற்குள் வந்து தாத்தாவிடம் 'புறப்படுகிறேன்' என்றேன்.

வாசலுக்கு சென்று வாயிற் கதவை மூடும் நேரத்தில் 'மறந்துடுவிங்களாா?' என்றார்.

'இல்லை' என தலையசைத்தேன்.

'எதை?' என்றார்..

'நகுலன் வீட்டில் யாருமில்லை' என்றேன். கண்சிமிட்டி குழந்தை போல் குதுகலித்தார். அதில் தனிமையின் சலனம் தெரிந்தது.

(devathaibharathi@gmail.com)



# ஆதலினால் காதல் செய்வீர்!

## சுந்தராம்பாள் பாலச்சந்திரன்

**ஜேர்மனி**

அந்தநாட்களை மறப்பது மிகமிகக் கடினம். அன்று போலவே இன்றும் அரக்கப் பரக்க ஓடுகிறேன். ஆனால் ஓட்ட மைதானம் மட்டும் மாறிக்கிடக்கிறது. தடங்களும் முற்றிலும் மாறுபட்டவை.

அலாரமணி அடித்ததும் அவசரமாகக் கண்திறந்து குளியல் அறைக்குள் புகுந்தால் அங்கும் அவசரம். அடுத்தவர் கதவைத் தட்டுமுன், இயல்பாக நடக்க வேண்டிய காலைக் கடன்களைக்கூட கடுகதி வேகத்தில் நடந்தேற்ற வேண்டிய கட்டாயச் சூழல்.

நாள் முழுவதும் நடந்து திரிவதற்கு ஆதாரமான காலை ஆகாரத்தில் கடித்தது பாதி குடித்தது மீதியென விட்டுத் தள்ளி, காலுறை மாட்டி,

கையுறை தேடி, அடுக்கடுக்காக ஆடைகள் சுமந்து யாருக்குமே போய் வருகிறேன் என்று சொல்லிக் கொள்ளாமல் மெதுவாக வாசல் கதவை மூடிவிட்டு ஓடத்தொடங்குவேன்.

ஓடத்தொடங்கினால் நின்று, நிதானித்து முன்னே பின்னே நடப்பதைக்கூடக் கவனிக்க முடிவதில்லை. ஓடிப்போய் பேருந்திலேறி உம்மென்று ஒரு மூலையில் உட்கார்ந்து, உடம்பில் சூடேற்றிக் கொள்வதற்கு முன்னாடியே பேருந்தை விட்டிறங்கி ஓட்டமும் நடையுமாக வேலை செய்யும் இடத்தை அடைந்து ஒரு இயந்திரம் போலவே ஓய்வின்றி உழைத்து வீடு திரும்பும் நேரம் மீண்டும் ஓட்டம். இவ்வாறு பொழுதுகள் ஒவ்வொன்றும் ஊமையாய்க் கழிகிறது.

ஆனால் அன்று . . . சேவல்கள் கூவியழைக்க பறவைகள் பாடியெழுப்ப ஒவ்வொரு தினமும் புதிதாய்ப் பிறந்தது. இனிதாய் மலர்ந்த அந்த நாட்களில் கதிரவன் கூடவே நானும் கண் விழித்து கப்பி இழுத்தொரு காலைக் குளியல். கதகதப்பான கிணற்று நீரில் சுதந்திரக் குளியலைச் சுகமாய் நடத்திச் சுற்றிக் கொள்ளும் சேலையின் வண்ணம் மற்றவர் கண்ணைப் பறித்திடச் செய்யத் தினமொரு நிறத்தில் தேர்வுகள் செய்து வண்ணத்துப் பூச்சியாய் வட்டமடித்த வாலிப வயதை எண்ணிடும்போது ஏக்கமே இன்று மிச்சமாயுண்டு.

ஒப்பனை செய்த ஒவ்வொரு சிலையும் ஒருங்கே கூடிய அந்த அலுவலகம் எங்கே? இன்று சின்னாபின்னமாய் சிதைந்து கிடக்காம். . . சிலைகள் எங்கே?. . . நினைவுகள் கனக்கின்றன. நிஜவாழ்க்கையில் நான் கரைந்து போகிறேன். . . கணங்கள் ஒவ்வொன்றும் கர்ணகடூரமாக என் உயிர்மூச்சை உரசிச் செல்கின்றது. ஆறி அமர்ந்து யாரோடாவது பேசவேண்டும் என்று மனம் அங்கலாய்க்கிறது. ஆனால் அதற்கான நேரம். . ? தேடுகிறேன் இங்கு எவருக்குமில்லை. சுமைகள் தேங்கி வழியும்போது ஓவென்று அழத்தோன்றும். ஆனால் முடிவதில்லையே!. . . எதற்கெடுத்தாலும் மனநோய் என்று மருத்துவர் போலச் சொல்லிவிடும் இந்த மாயாஜால உலகில் மனம் விட்டுக் கதறுவது மரணவீட்டிலும் கூடக் காணமுடியாத நிலைதான் என் கண்ணீரும் இங்கு மையாக மாறி வழிகின்றது. துடைப்பம்தான் என் கையிலுள்ள தூரிகையாகும்.

டொக்.. டொக்.. டொக். . . தட்டிய மறுவினாடியே கதவைத் திறந்து உள்ளே போனேன். கோட்டும் சூட்டும் அணிந்த அந்த மனிதர் வழமைபோலப் பத்திரிகைப் பக்கங்களை உருப்பெருக்காட்டி ஊடாகப் பார்த்துக் கொண்டிருந்தார். வணக்கம் என்று என் வாய் சொல்லிக் கொண்டிருந்தபோதே கைகள் அறையைச் சுத்தம் செய்யத் தொடங்கியிருந்தன. கண்கள் பம்பரம் போலச் சுழன்று அறை முழுவதும் சுத்தமாய் உள்ளதாவெனச் சோதனை செய்தன. இடையிடையே வழமை போல சில கேள்விகள். . . பதில்கள் என உரையாடலுமிருந்தது.. . . நான் மறந்து விட்டேன். . .நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்? இந்தியாவா? இரண்டு கேள்விகள் இணையாக அந்த முதியவரின் வாயிலிருந்து வந்து விழுந்தன.

நான் யார்? எனக்குள்ளேயும் ஒரு கேள்வி மின்னலாக வந்து மறைந்தது. ஐரோப்பியப் பெண்போல நீளக் காற்சட்டை, நெற்றியில் பொட்டு, நிறமோ மண்ணிறம். வீட்டிற்கு வெளியே பேசும் மொழி ஜேர்மன். சரியோ தப்போ அன்றாட வாழ்வியலை ஜேர்மன் மொழி பேசியபடிதான் நகர்த்த வேண்டிய கட்டாய நிலை.

நான் பணி செய்யும் முதியோர் காப்பகத்தில் வசிக்கும் அத்தனைபேரும் ஜேர்மனியர். அவர்கள் என்னோடு அளவளாவும் மொழி அவர்கள் தாய்மொழி. அதற்காக நான் ஜேர்மனியப் பெண் ஆகிவிட முடியுமோ? அப்போ நான்.? கேள்வி கேட்டிருந்த அந்தப் பெரியவர் முகத்தைப் பார்த்து சைலோன்(சிலோன்) என்றேன். என்ன நினைத்தாரோ என் முகத்தைப் பார்த்து, சைலோன் சைலோன் என முணு முணுத்துவிட்டு உங்கள் பெற்றோர் எங்கே? அங்குதானா எனக்கேட்டார்.

இக்கேள்வியை முன்பும் பலர் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே இவர் கேட்டதும், சாம்பல் நிறமாக வெளிறிக் கிடந்த அவர் கண்களிலே என் தந்தையைக் கண்டேன். வேறு எதுவும் தெரியவில்லை. ஒரு நொடியில் என்னைச் சுதாகரித்தபடி, “ஆமாம் அங்குதான் இருக்கிறார்கள்” என்றேன்.

பத்திரிகை படிக்கும் பாவனையிலிருந்த அவரோ எனக்குத் தெரியும் வீட்டுக் கவலை எப்படியிருக்குமென்று” என்று சொன்னது என் காதில் தெளிவாக விழுந்தது.

எனக்கும் தெரியும் அது வெறும் வார்த்தையல்ல இங்கு வாழும் அத்தனை பேருக்குள்ளும் உறைந்தேயிருந்தது.

இந்த மூத்தோர் காப்பகத்தில் வசிப்பவர்களில் பெரும் பங்கினர் தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கப்பால் இந்த இல்லத்தில் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பபட்டிருப்பதை நானறிவேன்.

இவரிடம் நான் கண்டது நடப்பட்ட நெற்பயிர்போலச் செறிவில்லாத அவரது நரைமுடி எப்போதும் அழகாக வாரப்பட்டிருக்கும். கையில் கோல் இருந்தாலும் நிமிர்ந்தநடை , நேர்த்தியான உடை. வெளியழகு போலவே அவரது அறையும் மிக நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அவரிடம் நான் கண்ட ஒரேயொரு குறை சுருட்டுப் புகைக்கும் பழக்கம்தான். அது அவரது ஆசையென்று விட்டுத் தள்ளவும் முடியவில்லை. அவரது அறைக்குள் மாட்டப்படடிருந்த புகைப்படங்கள், சான்றிதழ்கள், பட்டயங்கள் எல்லாமே அவர் வாழ்ந்த படாடோப வாழ்வைப் பறைசாற்றின. அவரது இளமைக் காலத்தின் இனிய நினைவுகள் இன்று ஞாபகச் சின்னங்களாக மாறிவிட்டன. இந்தப் பொருட்கள் என்னையும் உரசி வலிக்கச் செய்தன.

அவரும் வாழ்வின் வலி மறக்கத்தான் இவ்வாறு புகை பிடிக்கிறாரோ என்று பலதடவை சிந்தித்ததுண்டு. உடல் நலத்திற்கு கேடானவையென்று தெரிந்தும், மதுவுக்கும் சுருட்டுக்கும் அடிமையாக வாழும் பலகோடி மனதரில் இவரும் ஒருவர். இவர் புகைப்பிரியர் என்று எனக்குத் தெரிந்தது போலவே என் தந்தையும் மதுப்பிரியர் என்பதைப் பலர் அறிந்திருந்தனர்.

ஐயாவின்ரை கூத்து உங்களுக்கு எங்கை தெரியப் போகுது. இந்தத் தள்ளாத வயதிலையும் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியிலை ஓடுறார். . . தங்கை சொன்ன குற்றச்சாட்டை எனக்குள்ளேயே ஒருதடவை பரிசீலனை செய்து பார்த்தேன். என் மனதில் பட்டதை எடுத்துச் சொல்ல முடியாத இக்கட்டான நிலையில் தவிக்க மட்டுமே முடிந்தது. கூட்டுக் குடும்பமெனும் உன்னத வாழ்வு உருக்குலைந்து திசைக்கொருவராகச் சிதறிப் போனபின் இடைவெளிகள் பெரிதாகின. அதுவும் பல்லாயிரம் மைல் தொலைவில் வாழும் எனது இத்தீர்வை தொலைபேசிவழி திணிக்க முடியுமோ?

எண்பது வயதை எட்டிப் பிடிக்கப்போகும் என் தந்தை தன் மகளின், மருமகனின், பேரப்பிள்ளைகளின் முன்பு மதுவைத்தொட மனதின்றி எங்கெங்கோ ஓடி மறைகிறார்.

இங்கோ பதினெட்டு வந்துவிட்டால் போதும் புகை இழுப்பதும், மது உறுஞ்சுவதும்தான் நாகரீகமென்று நம்பி நாசமாகப்போகும் இளசுகளைப் பார்க்கிறேன். ஐரொப்பிய வாழ்வியலில் இவை சாதாரண விடயம்தான். ஆனால் என் தாயக வாழ்வே பெரிதென்று சொல்லவும் முடியவில்லை. எல்லாவித விருப்பு வெறுப்புகளும் திரைமறைவில் நடந்து வருவது மனதை வருடவே செய்கிறது. ஏனிந்த முரண்பாடு.

ஜேர்மனியில் எனக்குப் பிடித்த பல சங்கதிகள் உண்டு. வயோதிப வயதிலும் காதலர்கள் போலக் கைகோர்த்துச் செல்லும் தம்பதியரைப் பார்க்கும்போது பலதடவை சிந்தித்திருக்கிறேன். இவர்களிடமுள்ள இந்த அந்நியோன்யம் என் ஐயா அம்மாவிடமில்லையே. இவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும் ஒருவர்க்கொருவர் துணையாகத் தாங்கி நடக்கிறார்களே. அங்கே ஐயாவுக்கும் அம்மாவுக்கும் இடையில் பத்தடியாவது இடைவெளியிருக்கும். ஏன்?

அரைநூறு ஆண்டுகளுக்குமுன் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் என ஒரு சிறு கிராமத்தையே உருவாக்கியிருக்குமளவுக்கு நீண்ட தாம்பத்திய வாழ்வு கொண்டவர்கள். ஆனால் அவர்களுள். . . . பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள் என்று சொல்லிச் சொல்லியே தமக்கிடையில் ஒரு மதிலெழுப்பி அந்நியர் போலவே எட்டி நின்று பேசும் தாம்பத்திய வாழ்வு அவர்களுடையது.

இங்கே அறுபதைத் தாண்டிய வயதிலும் தோலை மினுக்கி தூங்கும் மார்புகளை தூக்கிக் கட்டிக் கொண்டு துள்ளல் நடைபோட்டு என்றும் இளமையாய் வாழத்துடிக்கும் பெண்களைப் பார்க்கும் பொழுது என் அம்மா என்ன சடப்பொருளோ என யாரோ அறைந்து விட்ட ஒரு வலியை உணர்கின்றேன்.

எங்களுக்காக தங்கள் சுகம் மறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு என்ன செய்யப் போகின்றோம்?

அப்பப்போ ஐந்தோ பத்தோ செலவுக்கு அனுப்புகின்றோம். இடையிடையே தொலைபேசியில் பேசுகின்றோம். ஆனால் அவர்கள் மட்டும் அடிக்கடி மடல் எழுத மறப்பதில்லை. கடைசியாக வந்த மடலில், பிள்ளை இருந்தால் எழும்பேலாமல் இருக்கு. ஒண்டுக்கு வந்தாலும் அவசரமாய் எழும்பி ஓட ஏலாது.

சிலவேளை துணி மணியோடை போயிடுது. இதுகளை மற்றவையிட்டை எப்படியம்மா சொல்லுறது. ஆரும் பார்க்க வேண்டும் எண்டு நான் நினைக்கேல்லை.. . அந்தக் கடவுள் கைநீட்டி என்னைத் தூக்கிவிட்டால் போதும்.'' என்று எழுதியிருந்ததை பார்த்து விக்கித்துப் போனேன்.

கூட்டுக் குடும்பம் என்ற எங்களின் பாரம்பரியம் மண்ணாகிப் போவதை யாராலும் தடுக்க முடியாது. இது என் அம்மாவும் அறியாததல்ல. . .அம்மாவின் அம்மா. . . எங்கள் அம்மம்மாக்கும் நடந்தது இதுதான். நேற்றுப் பார்த்தது போல பசுமையாய் தெரியுது.

தம்பி! அம்மா உன்னோடை இருக்கிறது தான் நல்லது. அம்மாவைப் பார்க்கிற கடமை கடைசிவரை உன்னுடையது என்று நான் சொல்லத் தேவையில்லை. . . என்று பெரியம்மா பூரணம் சட்ட மூலம் பிறப்பித்து மெல்ல நகர்ந்து விட்டாள்.

நீங்கள் சின்னன்ணா வீட்டை இருந்தாலும் நான் அடிக்கடி வந்து பார்ப்பன். உங்களை என்னோடை வைச்சுப் பார்க்க ஆசை. என்ன செய்யுறது. நானே அங்கை புறத்தி மாதிரி. எப்பிடி அங்கை உங்களை வைச்சு? தான் பார்க்க மாட்டேன் என்பதை பக்குவமாய் சொல்லிவிட்டு நழுவினாள் என் அம்மா.

எல்லாம் கேட்ட சின்ன மாமா துள்ளியெழுந்து ''என்ன ஆளாளுக்கு நியாயம் சொல்லிக் கொண்டு இருக்கிறியள். என்ரை அம்மாவை நான் பார்ப்பன். உங்களிட்டை விடவே போறன்.'' என்று சொல்லி விட்டார். பாவம் அம்மம்மா மாமா வீட்டில் முடங்கிக் கொண்டார். வேண்டாத விருந்தாளி போலத்தான் அம்மம்மாவை ஏற்றுக் கொண்டாள் என் சின்ன மாமி.

அம்மம்மாவை பார்க்க வேணும் என்ற ஆசையில் நானும் அடிக்கடி ஓடிக்கொண்டிருந்த வேளையில் ஒருநாள். . விடிய வெள்ளெனவே முகத்தை துடைச்சு பூச்சு மட்டும் பூசிப் போடுவா. ஆனால் துணிமணியிலடிக்கிற நாத்தம். .. என்று பொரிந்து கொட்டியது என் காதில் விழுந்தது.

அன்று மாமி சொன்னதில் உண்மையும் இருந்தது. அம்மம்மாவில் அப்பப்போ மூத்திரவாடையடித்ததை நானும் உணர்ந்திருந்தேன். ஆனால் அது ஏன் என இப்போ புரிகிறது. இன்று என் அம்மா படும் துன்பம் அன்று அவா பட்டிருக்க வேண்டும். ஒருவேளை அதே மணம் இன்று அம்மாவிலும் உணரப்படலாம்.

நான் என்ன செய்ய?. . . முதியோர் காப்பகத்தில் விடுங்கள். நான் பணம் அனுப்புகின்றேன் என்று சொல்லலாம். அது அவாவை என்ன பாடு படுத்துமோ.

ஆரம்ப காலத்தில் நான் கூடச் வெள்ளையர் வாழ்க்கை இதுதானோ. . சீ வெட்கக்கேடு. எவ்வளவு வசதியிருந்தும் இப்படி தள்ளி விட்டிட்டனமே என ஆதங்கப்பட்டதுண்டு. இப்போ எங்கோ வாழும் யாரோ ஒருவருடைய பெற்றவர்களை ஆறுதல்படுத்துபவளாக. . .அன்பு செலுத்துபவளாக மாறிவிட்டேன். என் தாய்..அங்கே அன் அரவணைப்புக்காக ஏங்கித் தவிக்கின்றாள்.

எனக்காக அவள் செய்த வேலைகளை இங்கு நான் பட்டியல் இடப் போவதில்லை. இருந்தாலும் ஒன்று. . .நான் குழந்தையாக இருந்த போது மட்டுமில்லை. . .குமரியாகிய பின்பும் என் துணிமணிகளைத் துவைத்தாள். நானே எனது பிள்ளைகளது என ஒரு சாண்சீலை கழுவியதில்லை. எல்லாமே இயந்திரம் செய்கிறது. போடுவதும் எடுப்பதும் தான் என் வேலை. அதற்காகவும் அரசு பணம் தருகிறது.

கணவனுக்கும் எனக்கும் உள்ள அன்பும் அரவணைப்பும் வெறும் படுக்கையறைச் சமாச்சாரம் இல்லை. சமையலறை முதல் எல்லா இடங்களுக்கும் சோர்ந்தே நடக்கின்றோம். அவருக்குள்ளே நானும் எனக்குள்ளே வாழும் இந்த அழகிய வாழ்வு என் அம்மாக்கு கிடைக்கவில்லையே.

ஒரு பொழுதாவது அம்மா அப்பாவின் கை பிடித்து நடந்தறியாள். கை நீட்டிப் பேசியறியாள். நாங்கள் சிரித்தால் தான் தான் சிரிப்பாள். நாங்கள் அழுதால் தானும் அழுவாள். அவளது அந்த சின்ன உலகில் தனக்காக எதையும் செய்யாது வாழ்ந்து கழித்து விட்டாள்.

பிள்ளைக் குருவிகள் நாங்கள். நம் வாழ்வில் காதல் கொண்டு கண்டம் பல கடந்து பறக்கின்றோம். தாய்பறவையங்கே! முதுமைக்கு கிடைத்த சாபம் என அலறுகிறது. ஆறுதல் சொல்ல என் அம்மாக்கு அருகிலா இருக்கின்றேன். இருந்தாலும் சொல்லுகின்றேன்.

அம்மா! முதுமை என்பது நமக்கு இறைவன் தரும் வரமே.

உங்களின் இளமைக்காலத்தை எண்ணியெண்ணி ஒவ்வொரு பொழுதையும் காதல் செய்வீர்.

# பிர்ஸோ!



## நடராஜா முரளிதரன்
கனடா

நான் வேலைக்குச் சென்ற போது அங்கே அவன் நின்றிருந்தான். தலைமயிர் ஒட்டவெட்டப்பட்டுச் சொக்கைகள் அல்லது கன்னங்கள் பருத்து அழுக்கான உடைகளோடு அலங்கோலமான "பூட்ஸ்களையும்" அணிந்திருந்தான் அவன். எங்கேயோ வெறித்துப் பார்த்தவாறு "குத்துக்கல்லாக" ஆடாமல் அசையாமல் சிறிது நகர்ச்சிக்கும் தன்னை ஆட்படுத்திவிடாதவாறு அவன் அமர்ந்திருந்ததாகவே எனக்குப்பட்டது.

எப்போதும் உரிய நேரத்தில் வேலைக்குப் போய்ப் பழகியிராத நான் அன்றும் பிந்தியே வேலைக்கு வந்திருந்தேன். வந்தவுடன் அவன் குறித்து பெரிதும் அக்கறைப்பட எனக்கு நேரம் கிடைக்கவில்லை. ஏதாவது "டிலிவறி" இருக்கிறதா என்று பார்த்துவிட்டு கையுறைகளை மாட்டிக்கொண்டு இருபது கிலோ கொண்ட ஒரு பெட்டி "சிக்கின்விங்ஸை" "மரனைட் சோஸில்" கலந்து குழைத்து நீண்டு, அகன்ற பெரிய அலுமினியத்தட்டுக்களிலே

வரிசையாக நிரைப்படுத்த ஆரம்பித்த போது ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கும் "24 மணி" நேர தமிழ் வானொலிப்பெட்டியையும் முறுக்கி விட்டேன். வழமையாக இவ்வாறுதான் எனது நாளாந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துக் கொள்வேன். நான் பணிபுரியும் இடம் "பீஸா" மற்றும் "சிக்கின்"(கோழி) போன்ற வகையறா உணவுகளைத் தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் வீடுகளுக்கே கொண்டு சென்று விநியோகம் செய்யும். அத்துடன் நேரில் வருபவர்களுக்கும் தயார் நிலையிலுள்ள உணவுப் பட்டியலுக்கிணங்க அவர்களுடைய தேர்வுப்படி உணவுகளைத் தயாரித்து வழங்கும்.

முதலாளியும் தன்பாட்டுக்கு ஒவ்வொரு நாளும் பாடும் பல்லவியை அன்று மீண்டும் பாட ஆரம்பித்தான். "அண்ணை எக்கச்சக்கமான வேலைகள் கிடக்குது. கெதியாய் முடியுங்கோ. முடிச்சுப்போட்டு ஒருபெட்டி 'பிறைசும்'(உருளைக்கிழங்கு நீள்நறுக்குகள்), 'ஒனியன்றிங்சும்' (வெண்காய வளையங்கள்) வேண்டி வரவேணும். அதோட 'பாங்கில' காசும் 'டிப்போசிற்' பண்ண வேணும். இல்லாட்டில் 'செக்' துள்ள வேண்டியதுதான். காசையும் முதல் போட்டதுமல்லாமல் எவ்வளவு முறி முறிஞ்சும் ஒரு பிரயோசனமும் இல்லாமல் இருக்கு. வியாபாரத்தை வித்துப்போட்டு எங்கையாவது போய் வேலை செய்தால் சம்பளமாவது மிஞ்சும்" என்ற வகையில் விரிந்து செல்லும் நீண்ட பல்லவி அது. "முதலாளிமார் எண்டால் இப்பிடித்தான் அழுவினம். உதுகளையெல்லாம் நம்பக்கூடாது. கள்ளப் பயலுகள்" எண்டு எனது உள்மனம் சொல்லிக் கொண்டாலும் வளர்ச்சியடைஞ்ச கனடா மாதிரியான நாடுகளிலை சிறுவியாபாரம் செய்வதென்பது கஸ்ரமான விசயமாயும் தோன்றியது. ஆனாலும் முதலாளியட்டை இருக்கிற வைப்புச்சொப்பு கனக்க எண்டில்லை. இருக்கிறது சும்மா மூண்டு வீடும், மூண்டு வாகனமும் மட்டுந்தான். அதிலையொண்டு புத்தப்புது "பென்ஸ்", மற்றதொண்டு "லீசிலை" எடுத்த "ரொயொட்டா" ராவ் மொடல் ஜீப். கடைசியாய் வேண்டின வீடு சுமார் 4000 சதுர அடிக்கு மேலை.

அதற்கிடையில் புதிதாய் வந்து "குத்துக்கல்லாய்" குந்தியிருப்பவனின் ஞாபகம் வரவே "உதார் புது ஆளாய் கிடக்குது" எண்டு முதலாளியை நோக்கி ஒரு கேள்விக்கணையை வீசினேன்.

அந்தக் கேள்வியின்ரை வீச்சிலை "என்ர வேலையைப் புடுங்கிக் கொண்டு போக அவன் வந்திருப்பானோ எண்ட ஐமிச்சமும்" உள்ளடங்கியிருந்தது. முதலாளி ஒரு காலை இழுத்தவாறே நடப்பான். அவ்வாறு நடந்துகொண்டே "உந்தாள் எங்கடை தமிழ் பெடியன்தான், பக்கத்திலை இருக்கிற "ஷெல்ரரிலை" இருக்கிறார். சாப்பாடு, படுக்கையெல்லாம் குடுக்கினம். கிழமையிலை ஒருக்கா 25 டொலரும் கிடைக்கும் குடுத்து வைச்ச ஆள். நாங்களெண்டால் எவ்வளவு "பில்லுகளைக்" கட்டவேணும். இந்த நாட்டு அரசாங்கம் இப்பிடியான ஆக்களுக்கு எவ்வளவு உதவிகளைச் செய்யுது. அவருக்கு ஒரு பிரச்சினையும் கிடையாது. கவலை இல்லாத மனிசன்" என்ற அறிமுக விளக்கத்தை எனக்குத் தந்தான் .

அப்போது மீண்டுமொரு தடவை அவனைப் பார்ப்பதற்காக அவனை நோக்கி எனது பார்வை நீண்ட போது அவனது கண்கள் என்னை நோக்கியே நிலை கொண்டிருந்ததை என்னால் உணரமுடிந்தது. நான் அதை அவதானித்த அக்கணத்தில் உண்மையில் தடுமாறிப் போய்விட்டேன். ஆனாலும் அதனை வெளிக்காட்டாமல் ஒருவாறு சமாளிப்பில் ஈடுபட்டவாறே அவனை நோக்கிச் சிரிப்பொன்றை உதிர்த்தேன்.

அவனும் மெலிதாகத் தலையை மேலும் கீழும் ஆட்டிக்கொண்டான்.

நான் மூன்று வேலைகளை ஒரு கணத்தில் நிகழ்த்தும் வித்தைக்காரனாகக் கைகள் "சிக்கின்விங்சுடனும்", ஓர் காது "24 மணி நேர வானொலிப்பெட்டியின் காற்றலைகளிலும்" மறு காது முதலாளியின் "கதைகளை" உள்வாங்கியும், இவை எல்லாவற்றிற்கும் மேலதிகமாக மூளை தன் ஆளுமையின் மேலாண்மையினை நிலைநாட்டும் பொருட்டு இவ்வாறான வினைத்திறன்களுக்கு ஏற்றபடியான கருத்தாடல்களுக்குத் தன்னைத் தயார் நிலைப்படுத்தியும் அதிஉச்ச வேலைகளைச் செய்து கொண்டிருந்தன.

இடையே தொலைநகலியில் "டிலிவறி ஓடர்" வருவதற்கான சப்தம் எழஆரம்பித்து அதற்கான "கட்டளை" அச்சாகும் ஒலி தெளிவாகக் கேட்க ஆரம்பித்தது. எனது பிரதான பணி "டிலிவறி ஓடர்களை" காரில் எடுத்துச் சென்று விநியோகிப்பதே.

அதை விடுத்து மற்றவைகள் எல்லாம் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக மேலதிகமாக இடப்பட்ட பக்கப் பணிகளாகும். முதலாளிதான் பிரதான சமையற்காரன். அவன் தொலைநகலியில் வந்த “ஓடரைக்” கிழித்தெடுத்துப் பின் அடிமட்டத்தை வைத்து அரைவாசியாகக் குறுக்கறுத்து ஒருபாதியைத் தனக்கும் மறுபாதியை எனக்கும் தந்துகொண்டான். இரு பாதிகளும் ஒரே தகவல்களையே கொண்டிருக்கும். உணவு விநியோகம் செய்யவேண்டியவரின் பெயர், முகவரி, தொலைபேசிஇலக்கம், வழங்கப்பட வேண்டிய உணவுவகைகள் என அந்த வரிசை அமைந்திருக்கும்.

முதலாளி தான் எடுத்துக் கொண்ட பாதித்துண்டில் குறிப்பிட்டிருந்த உணவுகளைத் தயாரிக்க ஆரம்பித்திருந்தான். நான் எனக்கான பாதியில் குளிர்பானங்கள், “சோஸ்” போன்ற சில்லறைச்சாமான்கள் கேட்கப்பட்டுள்ளனவா என்பதைப் தேடிப்பார்த்துத் பிடித்து “பொலித்தீன்” பையொன்றுள் அவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டேன். முதலாளி “பீஸா” ஒன்றையும், இரண்டு ‘பவுண்ட்ஸ்’ “சிக்கின் விங்ஸையும்” சமைத்து முடித்து அதற்கான பெட்டிகளுக்குள் அவற்றை நுழைத்தான். நான் சகல உணவுப்பொருட்களையும் சூடாக வைத்திருப்பதற்காகவெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட சிகப்புநிற நீள் சதுரப்பையினில் பத்திரப்படுத்திக்கொண்டு புறப்படத் தயாரானேன். எனது “கொண்டா” நீலநிறக் கார் கடையின் பின்புறம் அமைந்துள்ள தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமயம் பார்த்துக் “குத்துக்கல்லாய்” குந்தியிருந்தவன் இருக்கையில் இருந்து எழும்பியவாறே “அண்ணை நானும் உங்களோடை வரட்டே” என்று கேட்டான். “அதுக்கென்ன பிரச்சினையில்லை. வாங்கோ கதைச்சுக்கொண்டே போய்க் குடுத்திட்டு வருவம்” என்று பதில் கூறினேன். அவனும் மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக்கொண்டு காரின் கதவினைத் திறந்து முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டான். நான் காரினை இயக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் விநியோகப்படுத்த வேண்டிய உணவுகள் உள்ளடங்கியிருந்த சிகப்புநிற நீள்சதுரப்பையினை அவனிடம் நீட்ட அவன் அதனை வாங்கித் தனது மடியினில் வைத்துக்கொண்டு “சீட்பெல்ற்றினால்” தன்னை இறுக்கிக் கொண்டான்.

நான் காரை ஆறுதலாகப் பின்வழமாகச் செலுத்திப் பக்கவாட்டுச் சாலை வழியாகப் பிரதான வீதியான ‘‘புளொருக்குள்’’ நுழைத்து வலப்பக்கமாக வெட்டித் திருப்பினேன். பொங்கிப் பிரவாகித்திருந்த சூரியனின் ஒளிக்கதிர்கள் கார்கண்ணாடியூடே பாய்ந்து வந்து என் கண்களைக் குத்திக் கூசச்செய்தன. நான் மடிந்து கிடந்த சூரிய ஒளித்தடுப்பினை விரித்து விட்டவாறு வளைந்து, நெளிந்து கிடந்த சாலையில் தொடர்ந்து காரைச் செலுத்திக் கொண்டிருந்தேன். அடர்ந்து செறிந்த சூரியஒளிப்பாய்ச்சல் சாலையின் இருபுறத்தையும் மஞ்சள் மயப்படுத்தின. அந்த வெய்யில் குளியல் ஏற்படுத்திய வெக்கையின் மணம் என் நாசித்துவாரங்கள் வாயிலாக நுரையீரலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சாலையோரங்களிலே ஆங்காங்கே தென்பட்ட நிழல்பரப்ப முடியாத இலைகளை இழந்த மரங்கள். வானமும், பூமியும் ஓடிச்செல்லும் வாகன இரைச்சல்களாலும், வெளித்தள்ளப்படும் புகைகளாலும் மாசுபடுத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் கனடாவில் குடியேறிய போர்த்துக்கீசக்குடியேறிகளும், அவர்களின் சந்ததியினரும் பெருமளவில் அந்தப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். பழைய ‘‘பிரிட்டிஷ்’’ கட்டடக்கலை சார்ந்து செங்கற்களைக் கொண்டு கட்டியமைக்கப்பட்ட குடியிருப்புக்களே பெரும்பாலும் வீதியின் இரு புறங்களிலும் அமைந்திருந்தன. பல்லாண்டு காலப்பழமை வாய்ந்த அந்தச் செங்கற்கள் மீது ஐதான கருமை நிறம் படர்ந்திருந்தது. வெடித்தும், பிளந்தும் காணப்பட்ட சில சுவர்கள் சீமெந்து பூசப்பட்டுச் சரிசெய்யப்பட்டிருந்தன. அவ்வாறான பழம்பெருமை வாய்த்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட கட்டடங்களின் வெளிப்புறம் திருத்தவேலைகளுக்கு உட்படுத்தப்படும்போது அவற்றின் வடிவம் மாற்றியமைக்கப்படக் கூடாது என்ற ‘‘ரொறொன்ரோ மாநகரசபையின்’’ கடும் நிபந்தனையும் வழமையான முதலாம் உலக நாடுகளின் நகரங்களுக்கே உரித்தானமுறையில் இங்கும் கடைப்பிடிக்கப்பட்டது..

ஒரு வருடத்துக்கு மேலாக இந்தக் கடையின் உணவு விநியோக கார்ச்சாரதி வேலையில் இருப்பதனால் அந்தப் பிரதேசத்துக்குள்ளே அமைந்துள்ள ஒவ்வொரு சந்துபொந்துகளும் எனக்குத் தண்ணிபட்டபாடுதான்.

ஆனால் கனவுகளிலே திளைத்துக்கொண்டும், சஞ் சரித்துக்கொண்டும், நண்பர்பளோடு கைத்தொலைபேசியில் அரசியல், கலை, இலக்கியம் போன்ற வாதப்பிரதிவாதங்களை நிகழ்த்திக் கொண்டும் இவ்வாறான கடமையைப் புரியும் எனக்கு உணவு விநியோகம் செய்யவேண்டிய சரியான முகவரியைத் தவறவிட்டு மூன்று, நான்கு முறையென்று ஒரேயிடத்தையே சுழன்றுசுழன்று வட்டமடிக்கும் சூழ்நிலையும் அவ்வப்போது ஏற்படுவதுண்டு.

அப்போது "புளோர்" வீதியில் வாகனங்கள் நிறைய ஓடிக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் வாகனத்தை என்னால் வேகமாகச் செலுத்த முடியாது, ஏனெனில் பாதசாரிகள் வீதியைக் குறுக்கறுக்கும் விசேடவழிகளும், "சிக்னல்" ஒளிவிளக்குகளுமாகவே அவ்வீதி அமையும். எனவே ஆறுதலாகக் "காரினை" செலுத்திக் கொண்டிருந்தேன். பக்கத்தில் அமர்ந்திருந்த "குத்துக்கல்லு" இளைஞன் எந்த வார்த்தையும் பேசாமல் முகத்தில் எத்தகைய பிரதிபலிப்புக்களையும் வெளிப்படுத்தாது உறைந்தநிலையில் காட்சி புரிவதாகவே எனக்குத் தோன்றியது. எவ்வாறு உரையாடலை இன்னொருவரிடம் ஆரம்பிப்பது என்பதில் எப்போதும் எனக்குச் சங்கடம் நேர்ந்துவிடுவதில்லை. எந்தவிதக் கூச்சமும், தயக்கமும் இல்லாமல் முன் தயாரிப்பு ஏற்பாடுகள் இல்லாமல் என்னால் எந்த அந்நியரோடும் சம்பாசித்துவிட முடியும்.

எனவே எந்தப் பீடிகையுமில்லாமல் "எப்பிடித்தம்பி இருக்கிறியள்" என்று உரையாடலைத் தொடங்கினேன். அவன் அதற்கு வாயைத்திறந்து பதிலளிக்காமல் முகத்தைச் சிறிதாக அசைவுக்குட்படுத்தி, கண்களைச் சிறிது விரித்து, உதடுகளைச் சுருக்கி எதையும் பேசாமல் மௌனத்தில் ஆழ்ந்தான். ஆனாலும் நான் விடுவதாயில்லை, "தம்பி யாழ்ப்பாணத்திலை எந்த ஊர்" என்று தொடர்ந்தேன். அப்படி ஊரைப்பற்றி நான் விளிக்கையில் "உப்பிடியெல்லாம் கேள்வி கேக்கிறது படுபிற்போக்குத்தனமானது, "யாழ்ப்பாண மையவாதம்" தனது மேட்டுக்குடி மேலாதிக்கத்தைத் தொடர்ந்தும் புலம்பெயர் வெளிகளிலே தக்கவைப்பதற்கான அணுகுமுறைகளில் ஒன்றாகவே இவ்வகையான உரையாடல்களைப் பகுப்பாய்வு செய்து கட்டுடைத்தல் வேண்டுமென்று"

அண்மையில் நான் சென்றிருந்த ஏதோ ஓர் தமிழ் கலை இலக்கிய ஒன்றுகூடலிலே யாரோ ஒருவர் அறைந்து கூறியது என் ஞாபகப்பரப்பில் விரிந்தது. மேலும் அந்தப் பேச்சாளரின் சொல்லாடல்களில் கூறுவதாயின் என்னுடைய "பரவணிப்" பழக்கம் அந்தக் கோட்பாட்டுக்கு இசைய மறுத்தது. மேலும் மனம்தளராது என்னால் மேற்கொள்ளப்பட்ட வலிந்த முயற்சிகளால் அவன் தொடர்பான சிறிதளவான தகவல்களையே அவனிடமிருந்து திரட்டிக்கொள்ள முடிந்தது உணவு விநியோகத்தைச் செய்துமுடித்துத் திரும்புவதற்குள்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அவனது தாயும், தந்தையும் இலங்கை அரசாங்கத் திணைக்களமொன்றில் எழுதுவினைஞர்களாகப் பணியாற்றியவர்கள். தற்போது இருவரும் உயிருடன் இல்லை. ஏறத்தாள இருபது வருடங்களுக்கு முன்னமே தான் கனடா வந்து விட்டதாகவும் அதற்கு முன்னரான இறுதிக்காலங்களில் தான் யாழ்பாண நகரத்திற்கு அண்மையில் உள்ள திருநெல்வேலிப்பகுதியில் வசித்து வந்ததாகவும் மிகவும் சுருக்கமாகவே தான் தொடர்பான விபரங்களை எனக்கு ஒப்புவித்தான். இந்த ஒப்புவிப்புக்கு இடையிடையே வாழ்க்கை குறித்த தனது சலிப்பையும் அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். அவனை உத்தியோகபூர்வமாக அத்தாட்சிப்படுத்தக்கூடிய அடையாள அட்டை உட்பட வங்கிக்கணக்கு இலக்கம், தொலைபேசி இலக்கம் என எதனையும் அவன் கொண்டிருக்கவில்லை. அதெல்லாம் இருப்பதும், இல்லாமல் விடுதலும் அவனைப் பொறுத்த வரையில் ஒன்றுதான் போலும். அன்று எங்கள் கடைக்கு வரஆரம்பித்தவன் ஒவ்வொரு நாள் காலையிலும் நான் வேலைக்கு வரமுன்பே அங்கு எழுந்தருளியிருந்தான்.

இடைக்கிடை இவ்வாறு என்னோடு உரையாடிக் கொண்டான். "ஏன் நீங்கள் இந்த வேலை பாக்கிறியள், வேறை ஏதாவது நல்ல வேலை எடுக்கலாந்தானே?" "சும்மா தேவையில்லாமல் இதுக்குள்ளை நிண்டு கொண்டு வாழ்க்கையை அநியாயமாக்கிறியள்." இதை விட்டுவிட்டு வேறை நல்ல வேலை எடுக்கலாமோ, எடுக்கேலாதோ என்பது குறித்த சரியான விடை எனக்குத் தெளிவில்லாததாக இருந்தபோதிலும் எனதுநிலை குறித்துச் சற்று அவனுக்கு விளக்குவது எனது கடனாயிற்று.

“தம்பி பத்து வருசத்துக்கு மேலை இந்த நாட்டிலை வாழுறன். இன்னும் நான் அகதியாய் இந்த நாட்டிலை ஏற்றுக்கொள்ளப்படாததாலை வதிவிட அனுமதியோ, எதுவுமோ கிடைக்கேல்லை. அதைவிட “இமிக்கிறேசன்” சம்மந்தப்பட்ட வழக்குகள், அதுக்கும் மேலாலை இந்த நாட்டு அரசாங்கம் என்னைப் பிடிச்சு வைச்சுக் கொண்டு அனுப்ப வெளிக்கிட்ட வேளையிலை எல்லாம் அதனைத் தடுத்து நிறுத்திறதுக்காய் நீதிமன்றத்தின் தடைஉத்தரவைப் பெற என்ரைமனிசி பின்ளையளையும் இழுத்துக் கொண்டு உந்த உலகமெல்லாம் ஓடித்திரிஞ்சது. ‘இமிக்கிறேசன் பேப்பர்’ இல்லாத மகளை யூனிவர்சிற்றியிலை படிப்பிக்கப் பட்டபாடு ஞ்ஞ்ஞ். இப்படியான கனவிசயங்கள் காரணமாய் நானும் என்ரைகுடும்பமும் என்ன பாடுபட்டிருப்பம் எண்டு நினைக்கிறியள். நல்லாய் படிச்சுப்போட்டு வதிவிட அனுமதியோடை வந்த சனங்களே இங்கை தங்கடை தொழில்சார் பயிற்சிக்கேற்ற வேலையெடுக்காமல் ‘கோப்பை’ கழுவிக்கொண்டும், ‘ராக்சி’ ஓடிக்கொண்டும், ‘பேப்பர்’ போட்டுக்கொண்டும் திரியிறது உங்களுக்குத் தெரியுந்தானே. அதுக்காண்டி உந்தவேலையளைச் செய்யிறதை தரக்குறைவாய் பாக்கிற ஆளும் நானில்லை” என்று என்ரை முழு விசயங்களையும் அவனுக்கு அக்குவேறை, ஆணிவேறையாய் ஒரேயடியாய் சொல்லமுடியாட்டிலும் கொஞ்சமாய் சொன்னன். இன்னும் கொஞ்சம்கூடச் சொல்லியிருக்கலாம்தான்,

ஆனால் அவனுடைய பாவனைகள் எண்டு சொல்லும்போது உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய அவனது உடல்மொழியைக் கண்டுகொள்வதிலை அல்லாவிடில் அதனைப் பின்தொடர்ந்து கலைச்சுக் கொண்டு போறதென்பதிலை என்னைப் பொறுத்த வரையிலை அது எனக்குச் சாத்தியாமாய் இருக்கேல்லை எண்டு சொல்லிறது இன்னும் கூடப் பொருத்தமானது. அத்தோடு அவனது சிலநடவடிக்கைகள் எனக்கு விசித்திரமாகவும் பட்டது.

அவன் தான்அணிந்திருந்த அழுக்கான உடைகளை மாற்றுவது குறித்தோ அல்லது குளித்துத் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்வதென்பதிலோ அக்கறை கொண்டிருக்கவில்லை. ஆனால் நேரத்துக்குநேரம் நன்றாய்ச் சாப்பிடவேண்டும். அவனுக்குச் “ஷெல்ரரிலையும்” சாப்பாடு கிடைத்தது. அந்தச் “ஷெல்ரரும்” கூட எங்கடை கடைக்குப் பக்கத்திலைதான் இருந்தது.

அதைவிடவும் அந்தப் பகுதியிலை இருந்த சில தேவாலயங்களிலை இலவசஉணவு வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததனால் சில சமயங்களிலை அதையும் அவன் பயன்படுத்திக் கொண்டான். ஆனாலும் எங்கடை கடையிலை சமைக்கப்படும் "சிக்கின் விங்ஸ்" அவனுக்கு ருசியாய் இருந்திருக்க வேண்டும். எனவே ஒவ்வொரு நாளும் அதைச் சாப்பிடுவதிலை அவன் குறியாய் இருந்தான். அவன் கடையிலை ஒருவரோடையும் பேசாமல் தனியே அமர்ந்திருந்த வேளையிலெல்லாம் அவனுடைய கண்கள் "சிக்கின் விங்ஸையே" குறி வைத்தபடி இருந்தன.

கிழமை நாட்களில் நானும் முதலாளியும் பகலிலை வேலை செய்தாலும் மாலை நேரங்களிலை இன்னொரு "வேலையாள்" எங்களோடு இணைந்து கொள்வார். முதலாளி நிலைமையைப் பார்த்து ஏழு அல்லது எட்டு மணிக்கு கிளம்பி விடுவான் வீட்டுக்கு. அந்த வேலையாள் சகலகலா வல்லவர். இருபது வருடமாக இந்தத் தொழிலிலை இருப்பதாலை அவரால் சமைக்கவும் முடியும். மேலதிகமாகத் தேவைப்படும் போதெல்லாம் சமைத்துக் கொண்டே "டிலிவரிச்" சாரதியாகவும் பணி புரிவார். அவர் முதலாளி இல்லாத வேளைகளில் அவனுக்கு மிகவும் பிரியமான "சிக்கின் விங்ஸை" நன்றாகச் சுடவைத்து ஒரு துண்டு பீஸாவுக்கு மேலே ஏற்கனவே சிறுதுண்டுகளாக வெட்டப்பட்ட வெண்காயத்தையும், மிளகாயையும் தூவி ஒரு காகிதத்தட்டிலே வைத்துக் கொடுப்பார்.

எனவே ஒவ்வொரு நாளும் இறுதிவரை அந்தச் சாப்பாட்டை அவன் எதிர்பார்த்துக் காத்துக்கிடப்பதாகவே எனக்குத் தோன்றும். அதை நினைத்துப் பார்க்கும் போது பகிடியாகவும் இருக்கும் சில வேளைகளில். ஆனால் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து ஒரே உடுப்பையே தோய்க்காமல் அவன் உடுத்திக்கொண்டு திரிவது எனக்குச் சிலவேளைகளில் எரிச்சலை ஏற்படுத்தியது. ஏனெனில் கடை திறந்து மூடும் வரை பெரும்பாலான நேரம் எங்களோடுதான் அவன் தனது பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான்.

உடுப்பு என்பது வெளிவேசம் தான். பல வேளைகளில் இந்த வேசத்தையே சமூகம் முன்னுரிமை கொடுத்து எடைபோட முயலுகிறது.

அப்படி வெளிவேசம் என்றால் ஒவ்வொருவரினதும் உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுகள் ஏற்படுத்தும் உந்துதலினால்தானே இந்த வேசம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுவதாகக் கொள்ளலாமா? பற்றுக்கள் குறைந்த ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு உடை குறித்த நாட்டம் ஒப்பீட்டுஅளவில் மற்றையோரைக்காட்டிலும் தாழ்ந்ததாக இருக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்ற வகையில் எழுந்துநின்ற கூற்றுக்கள் என் மூளைநரம்புகளை ஊடறுத்தபடி இருந்தன.

எப்படியாயினும் அணிந்திருக்கும் உடைகளைத் தோய்த்து, உலர்த்தி போட்டுக் கொள்ளலாம்தானே, அதிலென்ன பிரச்சினையிருக்கிறது, உடல்நலத்திற்கும் அதனால் நன்மை பயக்கும், மற்றவர்களுக்கும் அது அசௌகரியத்தைத் தராது என்றே நான் கருதினேன். அதை அவ்வப்போது நினைக்கும் போதெல்லாம் அதை அவனிடம் நேரில் போட்டு உடைத்துவிட வேண்டுமென்ற உத்வேகம் கிளர்ந்தும், அடங்கியும் என்னுள் உழன்றபடி அலைந்து திரிந்தது. அன்று அதற்கான வாய்ப்புக் கிடைத்தது போலும். நான் உணவுப் பொதிகளைத் தயார்படுத்திக் கொண்டு “டிலிவறி” செய்வதற்காக எனது காரை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தவேளை பார்த்து அவன் நானும் வரட்டுமா? என்று என்னைக் கேட்டான். ஏதோ தெரியவில்லை நானும் திடீர் ஆவேசப்பட்டவனாக “நான் இனிமேல் உம்மைக் காரில் ஏத்திறதாய் இருந்தால் நீர் குளிச்சு, தோய்ச்ச உடுப்புகளை மாத்திக்கொண்டு வரவேணும், அதுவரைக்கும் என்ர ‘காரிலை’ உம்மை ஏத்தப்போறதில்லை” என்று உரத்த குரலில் கூறிவிட்டு அவனது பதிலுக்குக் காத்திராமல் விசுக்கென்று கிளம்பிவிட்டேன்.

நான் காரை எடுத்துக்கொண்டு உணவுவிநியோகத்தை முடித்து மீண்டும் கடைக்குத் திரும்பும் வரைக்கும் எனது மனதுக்குள் நான் நடத்தி முடித்திருந்த சம்பவம் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தது என்னை நோக்கி. எனது அகத்தனிமையில் “நான் அப்படி அவனை நோக்கிக் கூறியது சரியா? பிழையா?” என்பது குறித்து எழுந்த விவாதமே அது. அது குறித்த முடிவான தீர்மானத்திற்கு என்னால் இலகுவில் வந்துவிட முடியவில்லை.

ஆயினும் அந்த நிகழ்வு தந்த பாதிப்பிலிருந்து என்னால் மீள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இந்தக் கனடா நாட்டுக்குள் நான் புகுந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் எனது அகதிக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும் கூறுவதாயிருந்தால் எனது அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதன் தொடர்ச்சியாக நான் தலைமறைவாகிப் போய்விடலாம் என்ற காரணத்தை முன்வைத்து கனடியஅரசால் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்படுவதற்காகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தேன். பின் அந்த நாடுகடத்தல் உத்தரவுக்கெதிராக என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த சமஷ்டிநீதிமன்ற நீதிபதியின் உத்தரவினால் தற்காலிகமாக அந்த வெளியேற்றத்திலிருந்து தப்பிப்பிழைத்து எனது குடும்பத்தோடு இணைந்து வாழ்கின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் மீண்டுமொருமுறை நான் கைது செய்யப்படலாம் கனடாவை விட்டுத்துரத்துவதற்காக. அதற்கு இந்த நாட்டுச்சட்டத்திலே இன்னும் இடமிருக்கிறது.

எனக்கு இந்த நாட்டிலே வேலை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் இன்னும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இங்கு வாழும் சகலருக்கும் உரித்தான இலவச மருத்துவச்சிகிச்சை பெறுவற்கான சான்றிதழ் பத்திரம் கூட என்னிடம் இல்லை. இவை குறித்த நான் தொடர்பான சில தகவல்களையாவது அவன் அறிந்து வைத்திருக்க வேண்டுமென்றே நான் எண்ணியிருந்தேன்.

நான் "டிலிவறியை" முடித்துக்கொண்டு வந்து கடையின் பின்புறம் அமைந்திருந்த கார்த்தரிப்பிடத்தில் எனது "காரை" நிறுத்திவிட்டு சிறிது நேரம் "காரை" விட்டு வெளியே இறங்காமல் உள்ளே அமர்ந்து கொண்டிருந்தேன். மீண்டும், மீண்டும் எனது நினைவுப்பொறிகளுக்குள் சுழன்று கொண்டிருந்தது அவன் குறித்த சிந்தனைகளே. வெண்பஞ்சு மேகங்கள் வானத்தில் நகர்ந்து கொண்டிருந்தன. அதற்குக் கம்பளம் விரித்தாற்போன்று பின்னணியில் இளநீலம் பரந்த வான்பரப்பில் அப்பிக்கிடந்தது. அதற்கும் கீழே நெரிசல்களாய் காணப்பட்ட வீடுகளின் கூம்பு வடிவில் அமைந்த கூரைகள் முளைத்திருந்தன. எனது பார்வையைத் தரையை நோக்கித் தாழ்த்தினேன். அவன் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவ்வாறே எனக்குப்பட்டது. நான் எனது பக்க கார்க்கண்ணாடியைத் பதித்துக்கொண்டேன்.

என்னிடம் வந்த அவன் மிக நிதானமாக என்னை நோக்கிக் கூறிய வார்த்தைகள் "உங்களுக்கு எப்ப 'வேர்க் பெர்மிட்' (வேலை அனுமதிப்பத்திரம்) கிடைக்குதெண்டு சொல்லுங்கோ, அண்டைக்கு நான் குளிச்சுப்போட்டு என்ரை உடுப்புக்களைத் தோய்ச்சுப் போட்டுக்கோண்டு வாறன்".

(nmuralitharan@hotmail.com)

# புதிய பாடம்

அருண் விஜயராணி
அவுஸ்திரேலியா



“பிலோமினா... மகள் வந்திட்டாவே...?” டேவிட் ஈனஸ்வரக்குரலில் முனகினார்.

நித்திரையின்றி முழித்தபடி அவர் அருகே படுத்திருந்த பிலோமினா மிருதுவாக அவரது நெற்றியைத்தடவினாள்.

“Doctor எல்லோ சொன்னவர்... ‘இப்படி யோசித்துக்கொண்டு கவலைப்படுறதால உங்கடை இருதயத்தைத்தான் பழுதாக்கப்போகிறீங்கள்’ எண்டு. சொல்வழி கேட்கமாட்டீங்களே..? ஒரு முறை mild attack வந்ததோட... கொஞ்சமாதல் திருந்துவீங்கள் எண்டு எதிர்பார்த்தன்.”

“ மகள் திருந்துகிறாள் இல்லை. இப்படியே யோசித்து...யோசித்து மூளையை விடுறதைவிட இதயம் ஒரேயடியாய் நிண்டுட்டால் சந்தோஷப்படுவேன்.” தழுதழுத்த குரலில் சொல்லிக்கொண்டு திரும்பிப்படுத்தார் டேவிட்.

கண்களிலிருந்து வழியும் கண்ணீர் அந்த மெல்லிய வெளிச்சத்திலும் பிலோமினாவுக்கு தெரியக்கூடாது என்று எண்ணினார்போலும்.

பிலோமினா மணிக்கூட்டைப்பார்தாள். இரவு நள்ளிரவைத்தாண்டி இரண்டுமணியாகிவிட்டிருந்தது.

இன்று நேற்றா...கடந்த ஒன்றரை வருடங்களாக இதே பிரச்சினை. மகள் கத்தரின் 11 ஆம் வகுப்பை என்று எட்டினாளோ... அன்றுதொடங்கியது இந்தத்தலையிடி. ஒவ்வொரு வெள்ளி இரவும் அவர்களுக்கு சிவராத்திரியாகிவிட்டது.

அழகான முகத்தில் இரு கருவண்டுகள் குடிபுகுந்தனவோ என்றவகையில் அழகிய கண்களுடன் கூரிய மூக்குடன் துடிதுடிக்கும் இதழ்களுடன்... செக்கச்செவேலென்று... மகள் வளர்ந்ததும் வயதுக்கு வந்ததும் டேவிட், பிலோமினா இருவருமே பூரித்துப்போனார்கள்.

இறைவன்... படைப்பில் இப்படி ஓர் அழகா? அவர்களுடன் மகன் அன்ரூவும் சேர்ந்துகொண்டான்.

“அம்மா... தங்கச்சியை ஒரு இடமும் தனித்து அனுப்பாதேங்கோ... யாரும் கடத்திக்கொண்டு போயிடுவாங்கள்” அன்ரூவின் வார்த்தையில் பெருமிதம் வழிந்தது.

மூவருமே அவளைக்கையில் வைத்துப்பொத்தினார்கள். அழகில் மட்டுமல்ல படிப்பிலும் நடனத்திலும்கூட அவள் கெட்டிக்காரியாக விளங்கினாள் கத்தரின். படிப்பிற்கும் பேச்சுத்துணைக்கும்கூட அன்ருதான் அவளுக்கு உலகமாகினான்.

அவள் பதினோராம் வகுப்பை எட்டி இரண்டு மாதங்கள் ஆகின. உடையலங்காரத்தில் சிறிது மாற்றம்.

பிலோமினா பதறிப்போனாள்.

“என்ன கத்தரின் இந்த உடுப்பு? மேல் உடம்பு, தோள் எல்லாம் தெரியிறமாதிரி?”

அவள் வெட்டெனத்திரும்பினாள்.

“பின்ன என்ன மாதிரி…உடுக்கச்சொல்றீங்கள்? எப்ப பார்த்தாலும் பாவாடை … சட்டை… தாவணிதான் போடவேணுமே? பட்டிக்காடு மாதிரி. என்ட சிநேகிதிகளை வந்து பாருங்கோ… எப்படியெல்லாம் உடுக்கினம் எண்டு” இதைக்கேட்டு பிலோமினா அடிக்க கை ஓங்கியபோது, டேவிட் அவளைத்தடுத்தார்.

“கத்தரின்… நெடுக இதுமாதிரிப்போடுறதை வழக்கமாக்கிக்கொள்ளாதை மகள்.”

“ தாங்கியூ டாட்” என்று சொல்லிக்கொண்டு சிட்டாகப்பறந்தாள் கத்தரின். திகைத்துப்போய் நின்ற மனைவியை டேவிட் ஆறுதல்படுத்தினார்.

“ பிலோமினா சின்னச்சின்ன விஷயத்துக்கெல்லாம் கட்டுப்பாடு வைச்சம் எண்டால் பெரிய விஷயங்கள் வரும்போது எங்களுக்கு கட்டுப்பாடு வைக்கமுடியாது போயிடும். இளவயது… இந்தமாதிரி உடுப்புகளைப்போடத்தான் சொல்லும். இனியும் அவளுடைய வகுப்பு மாணவிகள் கூடுதலாக வெள்ளைக்காரப்பிள்ளைகள். அவள் எங்கடை கொண்டாட்டங்களுக்கு இப்படி வெளிக்கிட்டால் நாங்கள் கண்டிக்கலாம்.” டேவிட் பிலோமினாவை ஆறுதல்படுத்தினாலும் மகள் தந்த முதல் அதிர்ச்சி அவருக்கு.

எங்குபோனாலும் பிலோமினாவோடு சென்று உடுப்பு வாங்கிப்போடும் கத்தரின்… இந்தமாதிரியான அரைகுறையான உடுப்பை எங்கு சென்று யாருடன் சென்று வாங்கியிருப்பாள்? இரவு முழுவதும் நித்திரையின்றி புறண்டு புறண்டு படுத்தார். தன்னைப்போலவே பிலோமினாவும் யோசித்துக்கொண்டிருக்கிறாள் என்பது அவளது படுக்கை நிலை அடிக்கடி மாறுவதில் இருந்து அவருக்குப்புரிந்தது.

சில மாதங்கள் சென்றன.

கத்தரின் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வருவதும் தாமதமாகியது. பிரத்தியோக வகுப்பு (extra class) அல்லது என்றோ… நூலகத்திலிருந்து சகமாணவிகளுடன் படித்தேன் என்றோ…

maths செய்தனான் என்றோ பொய்களை அடுக்கினாள்.

வேலைத்தலத்திலிருந்து மகள் வீடு திரும்பிவிட்டாளா என்று ரெலிபோன் எடுத்துப்பார்ப்பதிலும் அவர்களுக்கு பாதிநேரம் கரைந்துவிடும்.

ஒருநாள் அன்ரூ பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பி, அவளைப்பார்க்க அவளது பாடசாலைக்குச்சென்றபோது அவள பிரத்தியோக வகுப்பு (extra class) என்பது பொய்யாகிவிட்டது.

"எங்க ஊர் சுத்திப்போட்டு வாறாய்?" அன்ரூ கோபமாக கத்தியபோதும் அவள் பயப்படவில்லை.

" நீ என்ன என்னுடைய body guard என்ற நினைப்போடா கேட்கிறாய்?" அவளும் பதிலுக்கு கத்தினாள்.

அன்ரூ திகைத்துப்போனான். அண்ணா…அண்ணா என்று அவனைச்சுற்றிசுற்றி வந்தவள். அவனோடு இருந்து ஒன்றாகப்படித்தவள். அரட்டை அடித்தவள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக்கூட ஒரு சிநேகிதியைப்போல அவனுடன் விமர்சித்தவள். இப்போது 'நீ' என்று ஒருமையில் விளிக்கிறாள். அவன், அவளை ஏறிட்டுப்பார்த்தான். அவனது பார்வையில் கனிவும் கோபமும் இணைந்திருக்கிறது.

" என்ன பார்க்கிறாய்? எத்தனைநாளாக என்னை பின்தொடர்ந்து வேவு பார்க்கிறாய்? அம்மாவும் அப்பாவும் இந்த வேலைக்கு எவ்வளவு சம்பளம் தருகினம்.? இப்படி எனக்குப்பின்னால் திரியிறதில உனக்கு வெட்கம் இல்லையா?" கத்தரின் பேசிக்கொண்டு போவதைப்பார்த்து அன்ரூவுக்கு ஆத்திரம் கூடியது.

அவளது கன்னத்தில் அன்ரூ மாறி மாறி அறையும்போது டேவிட் வீட்டுக்குள் வந்துசேர்ந்தார். அவரைக்கண்டதும் கத்தரின் 'ஓ'வெனக்கத்தினாள்.

"என்னை அடிக்க இவனுக்கு என்ன உரிமை இருக்கு?

நீங்கள் இப்ப வராட்டில் நான் பொலிஸ்க்கு போன் பண்ணியிருப்பன்.''

அன்று நடந்ததை விபரித்தபோது பெற்றவர்கள் அதிர்ந்தார்கள் தங்கள் அருமை மகள் தங்களுக்கு பொய் சொல்லவும் தொடங்கிவிட்டிருப்பதே கவலையின் தொடக்கமாக அமைந்துவிட்டது.

அவர்கள் இரவில் நித்திரையை இழந்தார்கள். பெற்றவர்களுக்கு பிடிக்காதவற்றையே அவளும் தொடர்ந்து செய்தாள்.

சிநேகிதிகளின் வீடுகளுக்குப்போவதும் 'மூவி நைற்' எனச்சொல்லி காலம்தாழ்த்தி வீடு திரும்புவதும் சிநேகிதிகளின் பெற்றோர் விடுமுறையில் செல்லும்போது அந்த வீடுகளில் பார்ட்டி வைத்து கும்மாளம் அடிப்பதுமாக அவளது பேச்சில் செயலில் நடை, உடை, பாவனைகளில் தீவிர மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன.

பெற்றவர்களின் கண்டிப்போ கண்ணீரோ புத்திமதிகளோ அவளது மனதை அசைக்கவில்லை.

மாதங்கள் சில கழிந்தன.

ஒரு நாள், வெள்ளிக்கிழமை பதினொரு மணியளவில் தன்னை அலங்கரித்துக்கொண்டு அவள் புறப்படும்போது, பிலோமினா ''இந்த நேரத்தில் எங்கே போறாய்?'' எனக்கேட்டபோதுனீ அவள், சர்வசாதாரணமாக ''நைற் கிளப்புக்கு'' என்றாள்.

பெற்றவர்கள் பதறியடிப்பதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அவள் கொடுத்தாள்.

''கத்தரின் there is a limit for everything என்ன நினைச்சுக்கொண்டாய்... friends உடன்தான் கூத்தடிக்கிறாய் என்று நினைச்சால் இப்போது நைற்கிளப்புக்குப்போகும் அளவுக்கு வந்துவிட்டதோ? இனி ஒரு அடியெடுத்து வைச்சியெண்டால் கால் அடிச்சு முறிப்பன்.'' என்று கத்தினார் டேவிட்.

''stop it dad...எனக்கு இதுகளுக்கெல்லாம் பயமில்லை.

பிள்ளைகளை அடிக்கிற பழக்கத்தை உங்கட நாட்டோடு வைச்சுக்கொள்ளுங்கோ... நான் நல்ல பிள்ளையெண்டதாலதான் உங்களுக்கு சொல்லிப்போட்டுப்போறன்.''

''என்ன கதைக்கிறாய்... நீ...'' டேவிட் அவளை எட்டி இழுக்க, அவரைத்தள்ளிவிட்டு வீட்டு வாசலில் தரித்து நின்ற காரை எடுத்துக்கொண்டு சிட்டாகப்பறந்துவிட்டாள்.

அன்று அதிர்ச்சியால் நெஞ்சைப்பிடித்தவர்தான் டேவிட். அம்பூலன்ஸில் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இரண்டு நாட்கள் அங்கிருந்தவர் mild attack என்ற செய்தியோடு வீடு திரும்பினார்.

தகப்பனின் எதிர்பாராத நிலைகண்டு கத்தரின் கலங்கி நின்றாலும்... அவளது ஆசைகளும் சிநேகிதிகளின் அழைப்புமே எல்லாவற்றையும் வென்று நின்றன.

பிலோமினா தாய்நாட்டு கலாசாரத்தையும் தமிழ்ப்பண்பாட்டையும் பற்றிக்கதைக்கும்பொழுதெல்லாம் கத்தரின் சீறி விழுந்தாள்.

'' சும்மா.. கற்பு...கற்பு... என்று ஓலமிடாதை அம்மா, நான் இன்னமும் 'வேர்ஜின்'தான். இதை என்ற சிநேகிதிகளிட்ட சொல்லப்போக சிரிக்கிறாளவை. அப்பா, அம்மா பார்க்கிற மாப்பிள்ளைக்காக இருபத்திநாலு வயது வரையில் கொட்டாவி விட்டுக்கொண்டு இரு எண்டு பகிடி பண்ணேக்கை எனக்கு எவ்வளவு வெட்கமாக இருக்குத்தெரியுமே? ஏன் பொம்பிளைப்பிள்ளைகளை இப்படி அடிமையாக நடத்துறீங்கள்.? நில்.. நட.. இரு... என்று எவ்வளவு காலத்துக்கு சொல்லிக்கொண்டு இருக்கப்போறீங்க அம்மா,?''

''மகள்... அது அடிமைத்தனம் இல்லை. பொம்பிளைப்பிள்ளைகளை பொத்திவைச்சு பாதுகாக்கினம் அவ்வளவுதான்.'' பிலோமினா தழுதழுத்த குரலில் கூறியதைக்கூடக் கத்தரின் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

அடுத்தடுத்து வெள்ளி இரவுகளின் நேரங்களும் நீண்டுகொண்டே சென்றன.

ஒரு நாள் சனி காலை... சிநேகிதி ஒருத்தி கைத்தாங்கலாக அவளை வீட்டுக்கு கொண்டுவந்து கிடத்தினாள்.

“கத்தரின் சற்றுக்கூடக்குடித்துவிட்டாள்” எனச் சொல்லிச்சென்றாள். வீடு சண்டைகள்... சத்தங்கள்..குழப்பங்களாக மாறியது.

டேவிட் அடிக்கடி மருத்துவமனைக்குச்சென்று திரும்பினார். அவரது நண்பர்களும் இடைக்கிடை வந்து அவரது சுகநலன் விசாரித்து ஆறுதல் சொல்லிச்சென்றனர்.

“ டேவிட்... டீன். ஏஜ்... கொஞ்சம் அப்படியும் இப்படியுமாகத்தான் இருக்கும். நாம்தான் விட்டுப்பிடிக்கவேண்டும்.” என்று சிலர்.

“ உயிரைக்காப்பாற்ற வெளிநாட்டுக்கு ஓடிவந்த நாங்கள்... உதுகளையும் எதிர்பார்க்கத்தான் வேண்டும்.” என்று சிலர்.

யார் என்ன சொன்னபோதும் டேவிட்டின் மனம் அமைதியின்றியே தவித்தது.

நைற்கிளப்பில் நடக்கும் எத்தனை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பியிருக்கிறார்கள். பெண்களை போதை நிலையில் ஆண்கள் அழைத்துப்போய் தம் இச்சைகளை நிறைவேற்றிக்கொள்வதும், ஆண்களும் பெண்களும் தன்னிலை மறந்து மயங்கிக்கிடப்பதும் அவர் அறியாதததது அல்ல. யார் யாரோ பெற்ற பிள்ளைகள் இப்படி சீரழிகிறார்களே எனக்கவலைப்பட்ட டேவிட், இப்போது தமது அருமை மகளும் இப்படியொரு பாதையை தேர்ந்தெடுத்து அதற்கு ‘சுதந்திரம்’ என்ற கோலத்தை வரையும்போது அவர் விக்கித்துப்போனார். இரவுப்பொழுதுகள் அவருக்கு நித்திரையின்றி நீண்டன.

சிலநாட்கள் கத்தரின் பெற்றவர்களின் கண்ணீருக்காக வீட்டில் தரித்து நின்றாலும் அவளுக்கு வரும் தொலைபேசி அழைப்புகளை நிராகரிக்க முடியாமல் பறந்துவிடுவாள்.

இப்படி வெள்ளி இரவு கேளிக்கைகளினால் மறுநாள் சனிக்கிழமை செல்லவேண்டிய நடன வகுப்புகளையும் தவிர்க்கத்தொடங்கினாள் கத்தரின்.

“எவ்வளவு ஆசையாக உன்னை டான்ஸ் கிளாஸில் சேர்த்தனான். எவ்வளவு ஒழுங்காக போய்வந்தாய். ஆனால் இப்ப.. எல்லாவற்றையும் விட்டுப்போட்டிருக்கிறாய். எங்கட கண்ணீர் கவலை உனக்கு இன்னுமா புரிய இல்லை.” என்று பிலோமினா சொன்னதற்கு, ஒரே வரியில், ” உங்களுக்கு விருப்பமெண்டால் போய் டான்ஸ் பழகுங்க...” என்று சொல்லி நடனவகுப்புக்கும் முற்றுப்புள்ளியிட்டாள்.

உயர்தர பாடப்பரீட்சையில் கத்தரின் பெற்ற புள்ளிகள், மிகவும் குறைவாக இருந்தமையால் அவளது கல்வியில் அக்கறையுள்ள ஆசிரியர்கள் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சந்திப்பின்போது “உங்கட குடும்பத்தில் ஏதும் பிரச்சினைகள் இருந்தால் தாமதிக்காமல் தீர்த்துக்கொள்ளப்பாருங்கள். இல்லையேல் அது மகளின் கல்வியை பாதிக்கும்.” என்றனர்.

‘பிரச்சினையே மகள்தானே...’ அதனை எப்படிச்சொல்வது?’ பிலோமினா மனதுக்குள் குமுறினாள்.

டேவிட்டை மருத்துவரிடம் அழைத்துச்செல்லும் சந்தர்ப்பங்களிலும் அவரும் கிளிப்பிள்ளைபோன்று ஒரு விடயத்தையே திரும்பதிரும்ப சொன்னார்.

“மிஸ்டர் டேவிட்.. நீங்க உங்கட உடல்நலத்தை முதலில் கவனிக்கவேண்டும். எப்பொழுதும் மகளைப்பற்றியே யோசித்துக்கொண்டிருந்தால் உங்கட மனைவியை தவிக்கவிட்டுப்போய்ச்சேர்ந்திடுவீங்க...” பிலோமினா அனைத்துக்கவலைகளையும் தாங்கினாள். டேவிட் வெகுவாக சோர்ந்துபோனார். மகன் அன்ரூவின் முகமும் களை இழந்துபோனது.

பிலோமினா மாத்திரம் கத்தரினை கண்காணிப்பதையும் அவளுடன் வாதிடுவதையும் புத்தி புகட்டுவதையும் ஒருநாளில் நியமிக்கப்பட்ட கடமைகளாக செய்துவரலானாள்.

மகளுக்கு தொலைபேசி அழைப்பு வரும்போதெல்லாம் மறுமுனையில் மற்றுமொரு தொலைபேசி ஊடாக ஒற்றுக்கேட்கவும் பிலோமினா தன்னை தயார்படுத்திக்கொண்டாள்.

மகள் தவறான வழிகளில் பயணித்துவிடுவாளோ என்ற பயமும் பிலோமினாவை தொற்றிக்கொண்டது.

ஒருநாள் கத்தரினின் சிநேகிதி அவளுடன் பேசியதை ஒற்றுக்கேட்ட பிலோமினா முன்பையும்விட அதிகம் பயந்தாள்.

"கத்தரின் எங்கடை பெற்றோர்... எல்லோரும் வீட்டை விட்டு வெளிக்கிடு... வெளிக்கிடு... எண்டுதான் சொல்லுவினம். ஆனால் ஒருநாளும் வெளிக்கிட அனுமதிக்க மாட்டினம். அது அவையின்ட மானப்பிரச்சினை. ஆண்பிள்ளை வெளியில போனால் பிரச்சினை இல்லை. ஆனால் பெண் பிள்ளை போனால் ' ஓடிப்போய்விட்டாள்' என்று தமிழ் உலகம் பேசும். அதுக்குத்தான் எங்கட பெற்றோர் பயம். புரியுதா? உன்ரை அம்மா, அப்பா வீட்டை விட்டு வெளிக்கிடு எண்டு பயப்படுத்தினாலும் அதுக்காக கவலைப்படாமல் வாரும். நாளைக்கு 'நைற் கிளப்பில்' விமலாவின்ட லவ்வருக்கு பேர்த்டே பார்ட்டி. மிஸ் பண்ணிடவேண்டாம்."

'இதென்ன கலிகாலம். இப்படியும் பிள்ளைகளா? பிள்ளைகள் பெற்றவர்களுக்கு பயப்படும் காலம் போய்விட்டது. இது பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு பயப்படும் காலம்.. பல தடவைகள் மகளுடன் வாதிடும்போதெல்லாம் " இருந்தால் ஒழுங்காக இரு... இல்லையேல் வீட்டை விட்டுப்போய்விடு"என்று தான் சொன்னபோதெல்லாம் கத்தரின் அலட்சியமாக இருந்ததன் தாற்பரியம் இப்போதுதான் பிலோமினாவுக்குப்புரிந்தது.

அடுத்த வாரம் பிலோமினா நைற்கிளப்புக்கு புறப்பட்டபோது பிலோமினா உறுதியாகவே சொன்னாள் " இண்டைக்கு இரவு நேரம் கழிச்சு வந்தாயெண்டால் அதுக்குப்பிறகு வராமலேயே வெளியிலேயே நிண்டுகொள். இனி இங்கே வராதே. உன்னுடைய உடுபுடவைகள் சாமான்களையும் எடுத்துக்கொண்டு போய்விடு. இல்லையேல் உன்ர சூட்கேஸ் நீ வரும்போது வெளியில இருக்கும். எடுத்துக்கொண்டு போகவேண்டியதுதான். இதுதான் நான் உன்னுடன் பேசும் கடைசி சந்தர்ப்பம்"

பிலோமினா கண்கள் சிவக்க உதடுகள் துடிக்க மகளுக்கு எச்சரிக்கை விடுத்தாள்.

அப்பொழுதும் கத்தரின் அலட்சியப்புன்னகை சிந்தியவாறே வெளியே போனாள்.

இரவு நகர்ந்தது. நடுச்சாமமும் கடந்தது. நேரம் அதிகாலை 4 மணியாகிவிட்டிருந்தது.

பெற்றவர்கள் உறக்கமின்றி தவித்தார்கள். பிலோமினா கணவனை திரும்பிப்பார்த்தாள்.

"இங்க பாருங்க... ஏதோ எங்கட பலன்... இப்படி தவிக்கிறோம். அதற்காக அவளைப்பற்றியே யோசித்து உங்களை நீங்கள் இழந்திட வேணாம். நான் ஒருத்தி உங்களுக்காக இருக்கிறன். என்பதை மறந்திடாதீங்க. நான்தான் பிறகு அநாதையாகிப் போவேன்."

டேவிட் மறுபக்கம் திரும்பிப்படுத்தார்.

பிலோமினா ஓசைப்படாமல் எழுந்துவந்து, கத்தரினின் அறைக்குச்சென்று அவளது உடுப்புகளை ஒரு சூட்கேஸினுள் திணித்தாள். சொற்பவேளையில் கத்தரின் வீடுவந்து சேர்ந்தாள்.

" நில். உள்ளே வராதே... இனி இங்கே உனக்கு இடமில்லை. எவ்வளவு சொல்லியும் நீ கேட்கவில்லை. புறப்படு. இந்தா உன்ர உடுப்புகள். " பிலோமினா மறுபுறம் முகத்தை திருப்பிக்கொண்டே சொன்னாள்.

" என்ன.. விளையாடுறீங்களோ.... இந்த நேரத்திலை நான் எங்கை போறது அம்மா?"

" எங்கையெண்டாலும் போ.... எனக்கு கவலை இ.ல்லை. இங்கே இருந்து எங்கட நிம்மதியை குலைச்சது போதும். வீட்டை விட்டு உன்னை வெளிக்கிடுத்த மாட்டினம் என்று உனக்கு புத்தி சொல்லித்தந்த சிநேகிதிமாரின்ட வீட்டில போய் நில்லு. அல்லது " வீட்டுக்கு அடங்காத பிள்ளையா இருந்தன். பெற்றவர்கள் துரத்திப்போட்டினம். வாழுறதுக்கு வழி சொல்லுங்கோ என்று உதவிவழங்கும் சென்றலிங் நிறுவனத்துக்கிட்டபோய் பிச்சை கேள்."

நிதானமாக பிலோமினா சாட்டை அடி கொடுத்தாள்.

கத்தரின் சூட்கேஸை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

பொழுது விடிந்தது. கத்தரின் வீட்டைவிட்டுச்சென்று சில மணிநேரங்களில் பிலோமினா வீட்டு தொலைபேசி

அடுத்தடுத்து ஒலிக்கிறது.

வரும் தொலைபேசி அழைப்புகள் யாவும் "என்ன... மகள் கத்தரின் விட்டை விட்டு ஓடிப்போய்விட்டாளா?" என்றுதான் கேட்கின்றன.

"தனியாகத்தான் ஓடி இருக்கிறாள். களைத்துத் திரும்பி வீட்டுக்குத்தான் வருவாள்" பிலோமினா ஒரே பதிலையே நிதானமாக சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

(vijayarani16@gmail.com)

# யாகாவாராயினும் நாய் காக்க!



கனடா மூர்த்தி
சிங்கப்பூர்

அமைதிப்படுத்தி வைத்திருந்த கைத்தொலைபேசியை மீண்டும் இயங்கினேன். அலுவலகத்தில் இருந்து பதினொரு தடவை அழைத்திருப்பது தெரிந்தது. அட.. அரை மணிநேர மீட்டிங்கை முடிப்பதற்குள் இத்தனை அழைப்பா?

அலுவகத்தில் ஏதோ நடந்துவிட்டது என்பது மட்டும் புரிந்தது. என் கம்பனியின் டெலிபோன் ஆப்பரேட்டருக்கு போன் பண்ணினேன்.

விவரம் கிடைத்தது.

கர்ம வீரர் என்று அலுவலக நேரத்தில் எங்களால் ரகசியமாகவும், செல்லமாகவும் அழைக்கப்படும் வாசுதேவனை பாக்டரி வாசலில் கட்டாக்காலி நாய் ஒன்று கடித்துவிட்டதாம்... கடி வாங்கிய இடத்திலேயே வாசுதேவன் இன்னும் உட்கார்ந்திருக்கிறாராம். டெலிபோன் ஆப்பரேட்டர் சொன்னாள். விரைந்தேன்.

கடி வாங்கிய கர்ம வீரர் வாசுதேவன் அப்படியொன்றும் பெரிய நாயகன் அல்ல. தமிழ்நாட்டிலிருந்து வந்து எங்கள் கம்பனியில் இன்ஜினியராக வேலை பார்க்கும் மிகச் சாதாரண ஆத்மாதான். எங்கள் கம்பனியும் அப்படியொன்றும் நாய் வளர்க்கும் பண்ணையுமல்ல. சிங்கப்பூர்-மலேசிய எல்லையருகே ஒரு தொழில்பேட்டையில் அமைந்திருக்கிறது எங்கள் கம்பனி. இது ஒரு ஒதுக்குப்புறம் என்பதால் கட்டாக்காலி நாய்களும் இங்குகூட்டம் கூட்டமாக நடமாடுகின்றன. அந்தக் கூட்டத்தில் ஒரு நாய்க்கு பைத்தியம் பிடித்து, அந்த நாய் வாசுதேவனைக் கடித்து - இன்று இந்த பரபரப்பு உருவாகிவிட்டது.

ஜோகூர் நகர வீதிகளில் மாலைப்பாம்புத் தைலம் விற்பவரை சுற்றி ஒரு கூட்டம் நிற்குமே அதைப்போல பலர் கூடி நிற்க, நடுவில் நடுநாய்யகமாய் நாயால் கடிவாங்கிய வாசுதேவன் இரத்தக் கறையோடு உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் நாய் கடித்ததால் வரும் வேதனையை காட்டுவதாக நினைத்து முகத்தை மேலும் கோணலாக்கிக் கொண்டார். காயம்பட்ட காலைக் காட்டினார். காயத்திற்கு வெறுமனே ஒரு துணியால் கட்டு மட்டும் போடப்பட்டிருந்தது. அடடே.. உடனே டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமே...

“வலிக்கிறதா?” என்று கேட்டேன். “வலி இல்லைங்க. ஆனா பயமா இருக்கு.. நாய்க்கடி விஷம் இல்லீங்களா? பைத்தியம் பிடிக்குமோ...? செத்துடுவேனோ...?” என்றார்.

“சே... சே... இது சிங்கப்பூர்... இந்த ஊர் நாய்க்கடி ஆபத்தில்லாதது...” என்று தைரியம் கொடுத்துவிட்டு செக்ரடரியிடம் நானே இவரை கம்பனி டாக்டரிடம் அழைத்துச் போவதாகச் சொன்னேன். டாக்டரிடம் கொடுக்கத் தேவையான பத்திரங்களை தயாரித்து வருமாறு கேட்டுக்கொண்டேன். அவள் கொஞ்சம் பலமாகவே அலுத்துக்கொண்டு உள்ளே சென்றாள். இந்த செக்ரடரி என்றழைக்கப்படும் உயிரினங்கள், பத்திரங்களை தயார் பண்ணி எடுத்து வரும் நேரம் ஊகிக்க முடியாது. ஆகவே அவள் வரும்வரை நேரத்தை வீணாக்காது, இவரை கடித்த உயிரினத்தையாவது பார்த்து வைப்போமே என்று நினைத்து, கம்பனியின் காவலாளியிடம் அந்த நாயை காட்டுவாறு கேட்டேன், காட்டினான்.

அவன் காட்டிய பகுதியில் பல நாய்கள் நண்பநாய் காதலநாய் ஓடிக்கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்றோடு ஒன்றாகி சந்தேக நபரான நாயும் நின்று கொண்டிருந்தது. அதன் உரோமங்கள் உதிர்ந்து, வயிறு, கால் போன்ற இடங்களில் ஆங்காங்கே ரப்பர்போல உட்தோல் தெரிந்தது. காதின் ஒரு முனை கறுத்திருந்தது. பைத்தியம் பிடிப்பதெல்லாம் என் பிறப்புரிமை என்பதுபோல்ல அது ஒரு அலட்சிய பாவத்துடன் என்னை ஒரு பார்வை பார்த்துக்கொண்டு நின்றது. பார்க்கிறாயா.. பார் மகனே பார்... உன்னை மாதிரி எத்தனை நாய்களைப் பார்த்திருப்பேன்...

'சேப்டி ஆபிஸரிடம்' இந்த நாய்களையெல்லாம் முற்றுமுழுதாக விரட்டிவிடத் தேவையானவற்றை உடனே செய்யுமாறு உத்தரவு இட்டுக் கொண்டிருக்கும்போதே செக்ரடரி வந்தாள். அவளிடம் பத்திரங்களை வாங்கிக்கொண்டு வாசுதேவனையும் அழைத்துக் கொண்டு எனது காரில் ஹாஸ்பிடலை நோக்கி விரைந்தேன். பயத்தாலோ என்னவோ வாசுதேவன் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டு இருக்கையில் சாய்ந்தார். கண்ணைத் திறந்து என்பைப் பார்த்தார். கம்பனியின் எல்லைக்குள்ளே நாயால் கடிபட்டிருப்பதால் இன்ஸூரன்ஸ் பணம்போல எதாவது நஷ்டஈடு கம்பனியிலிருந்து கிடைக்குமா என்று கேட்டார். கொஞ்சம் எரிச்சலுடன் "முதலில் டாக்டரிடம் போவோம் ஸாரே.. பிறகு இவற்றைப்பற்றி யோசிக்கலாமே" என்றேன். கண்ணை மூடிக்கொண்டு மௌனமாகிக் கொண்டார். இது நாய்க்கடி.. மகனே.. நாய்க்கடி.. இலங்கைத் தமிழில் சொன்னால் 'விசர்' நாய்க்கடி...

கார் ஓடிக்கொண்டிருந்தது.

*சின்ன வயது முதற்கொண்டே எனக்கு நாய்கள்மீது தனி அபிமானமும், பயம் கலந்த மரியாதையும் உண்டு. நான் பிறந்ததும், வளர்ந்ததும் யாழ்ப்பணத்துக்கு பக்கத்தில் உள்ள ஒரு கிராமத்தில் என்பதால் நாய்களின் 'சைக்காலஜி' எனக்கு ரொம்ப ரொம்ப பரிச்சியம். எங்கள் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்த பட்சம் ஒரு நாயாவது இருக்கும். அல்லது ஒவ்வொரு நாய்க்கும் குறைந்த பட்சம் ஒரு வீடாவது இருக்கும் என்றும்கூட மாற்றிச் சொல்லலாம்.*

இயக்கங்கள் ஒண்டோடை ஒண்டு அடிபட்டாலும் இந்த நாய்கள் மட்டும் எங்கள் ஊரில் ரொம்ப ஒற்றுமையாக இருப்பார்கள். ஒற்றுமையோ ஒற்றுமை...! அப்படி ஒரு ஒற்றுமை...

உதாரணத்திற்கு நடு இரவில் ஒரு நாய் ஏதாவது ஒரு கெட்ட கனவு கண்டுவிட்டார் என்று வைத்துக் கொள்ளுங்களேன். அவ்வளவுதான்.. உடனே அவர் விழித்தெழுந்து ஒரு விதமான குரலில் ஊளைவிட ஆரம்பித்து விடுவார். அந்த முதல் ஊளையை கேட்டதும் தொடர்ந்து அடுத்தவீட்டு நாயும் அதே சுருதியில் ஆரம்பித்து விடுவார். பிறகு அடுத்த வீடு... அடுத்த வீடு.. கடைசியில் ஊரெல்லாம் ஊளை.. வெகு காலத்தின் பின்னர் 'அட்டாமிக் பிஸிக்ஸ்' படிக்கும்போது 'செயின் ரியாக்ஷன்' என்று புரபஸர் சொன்னாலே எனக்கு இந்த நாய்கள்தான் ஞாபகத்திற்கு வருவார்கள்.

அதுமட்டுமா.. 'கம்பியூட்டர் ரிஸேர்ச்சில்' இருந்தபோது 'பட்டேர்ன் ரெக்கக்னைஸேஷன்' என்ற பாடம் படிக்கும்போதுகூட எனக்கு எங்கள் ஊர் நாய்களின் ஞாபகம்தான் வரும்.. 'பட்டேர்ன் ரெக்கக்னைஸேஷன்' எல்லாம் நம்ம ஊர் நாய்களுக்கு அந்தக் காலத்திலேயே அத்துபடி. எப்படியென்கிறீர்களா..? ஊரிலுள்ள அத்தனைபேரின் உருவத்தையும் ஊரிலுள்ள ஒவ்வொரு நாயும் தங்கள் 'மெமரி'யில் பதிவு செய்து வைத்திருக்கும். அந்த 'பட்டேர்ன்களை' அதாவது அந்த உருவங்களை மட்டும்தான் ஊருக்குள் நடமாட அனுமதிக்கும். நாய்களின் 'டேடாபேஸி'ல் இல்லாத யாரும் ஊருக்குள்ளே நுழைய முடியாது. ஒருமுறை நம்ம ஊர் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டரின் மருமகன் கோர்ட், ஸூட் அணிந்தபடி ஊருக்குள் வந்துவிட்டார். அவ்வளவுதான். நாய் 'மெமரி'யிலிருக்கும் 'பட்டேர்னு'க்கு பொருந்தாத உருவமாகிவிட்ட அவரை ஒரு நாய்ப் பட்டாளமே துரத்தித் துரத்தி விரட்டிய காட்சியால் நம்ம ஊரில் கோர்ட், ஸூட் போடுவதற்கே ஒரு பெரும் பயம் உருவாகி, அதனால் ஐரோப்பிய கலாச்சாரம் உள்ளே வர வெகுகாலமாயிற்று.

அப்போதெல்லாம் இரவு நேரத்தில் எங்கள் ஊர் ரோட்டில் வாகனப் போக்குவரத்து இருக்காது. தார் போட்ட ரோட் கதகதப்பாக இருக்கும். அதனால் நம்ம ஊர் நாய்களில் பெரும்பான்மையோர் ரோட்டிலேயேபடுத்துக்கொண்டு விடுவார்கள். மின்சார வெளிச்சம் அப்போதெல்லாம் இல்லை. நிலவு வெளிச்சத்தில் ஒவ்வொரு வீட்டிற்கு முன்னாலும் வெள்ளை வெள்ளையாக திட்டுக்கள் போல நாய்கள் ஜொலிப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவற்றின் நிஷ்டையை கலைக்காது ரோட்டில் அவற்றிற்கிடையே நடந்து போவதென்பது ஒரு தனிக்கலை.. இக்கலை தெரிந்திருந்தாலுங்கூடகறுப்பு நிற நாய்கள் படுத்திருக்கும்போது கண் தெரியாமல் அவற்றை மிதித்துவிட்டு காலில் கடி வாங்கியவர்கள் எங்கள் ஊரில் ஏராளம். (பின்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபலமான கண்ணிவெடி 'டெக்னோலொஜி' இதிலிருந்துதான் உருவாகியிருக்க வேண்டும் என்பது என் ஊகம்.) இதனால் இரவில் யாரும் எங்கள் ஊர் ரோட்டில் கால் காட்டுவதில்லை. அதாவது தலை காட்டுவதில்லை. ஒரு வகையில் கிராமத்தின் பாதுகாப்புக்கான போலீஸ்காரர்களே இந்த நாய்கள் தான் என்றாகிவிட்டது. ஆனால் எங்கள் ஊர் நாய்களுக்கும் எங்கள் ஊர் போலீஸுக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் போலீஸ் திருட்டுக்குப் பின்னர்தான் வரும். நம்ம நாய்களோ திருட்டுக்கு முன்னரே அந்த இடத்தில் ஆஜராகிக் கொள்ளும். ஆனால் இரண்டுமே லஞ்சம் வாங்கிவிட்டு திருட்டைக் கண்டுகொள்ளாது. திருட்டுக்கு சம்பந்தமே இல்லாதவர்களை கண்டால் தொலைந்தது.. மிரட்டு மிரட்டென மிரட்டித் தள்ளிவிடும்!

இன்னொரு சுவாரஸ்ய வரலாறு.. என் குடும்பத்தில் என் அண்ணனுக்கும் நாய்களுக்கும் எட்டாம் பொருத்தம். நான்கு வயதாக இருக்கும்போது (அவனுக்குத்தான்) அவன் ஒரு நாயின் வாலை நல்லூர் முருகன் கோவில் தேர் இழுப்பதுபோல இழுக்கப்போய், அது திரும்பிக் கடித்ததற்கான ஆதாரம் அவனது வயிற்றில் தழும்பாகி இன்னும் இருக்கிறது.

*அதனால் நான்கு வயது ஒரு மாதத்திலிருந்து அவன் நாய்களை தீண்டத்தகாதவர்களாகக் கணித்து வெறுக்க ஆரம்பித்து விட்டான். 'நாய்கள் கடிக்கும், கவனம்' என்று ஒரு 'போர்ட்' எழுதி வீட்டுக்குள்ளேயே மாட்டி வைத்தான். இரவில் ரோட் பக்கமே போக மாட்டான். அட.. பைரவரின் வாகனம் நாய்தான் என்பது தெரிந்ததிலிருந்து பைரவர் கோவிலையே பகிஷ்கரித்துவிட்டான் என்றால் பாருங்களேன்.. இப்படியான அண்ணன் சைக்கிள் விடக் கற்றுக்கொண்டான்.*

*கால ஓட்டத்தில் இரவில் சைக்கிள் ஓடுவதும் அவனுக்குப் பழக்கமாகிக் கொண்டது. இரவு நேரத்தில் சைக்கிள் ஓட்டுவதை அவன் ஆரம்பித்ததிலிருந்து, நாய்களை வினோதமாகப் பழிவாங்கும் ஒரு பழக்கமும் அவனுக்கு வந்துவிட்டது. இரவில் சைக்கிளில் வரும்போது தூரத்தே நாய்கள் ரோட்டில் படுத்திருப்பதை பார்த்துவிட்டால் போதும்... மறுகணம் சைக்கிள் பெடலை மிதிமிதி என மிதித்து வேகம் எடுக்க ஆரம்பிப்பான். வில் என அம்புபோல் வந்து கொண்டே சைக்கிளிலிருந்தவாறு கீழே படுத்திருக்கும் நாய்க்கு 'புட்போல்' அடிப்பதுபோல காலால் ஓங்கி ஒரு அடி விடுவான். பாவம்... நிம்மதியாக தூங்கிக்கொண்டிருந்த நாய் அடி விழுந்ததும் அலறியடித்து எழும். துள்ளி எழுந்து வலிக்கு கத்துவதா துரத்திக் கடிப்பதா என புரியாமல் சில நிமிடம் திணறியடித்து, பக்கவாட்டில் சில கரணங்கள் போட்டு முடிப்பதற்குள் அண்ணனின் சைக்கிள் 'ஜெட்' வேகத்தில் நாயால் மோப்பம்கூட பிடிக்க முடியாத தூரத்தில் பறந்துவிடும். ஆனாலும், தாக்குதலுக்கு உள்ளான நாயோ தூரத்தே தெரிந்த உருவத்தை வைத்தே (பட்டேர்ன் ரெக்கக்னைஸேஷன்) என் அண்ணனை தன் விரோதியாக வரித்துக்கொண்டுவிடும். அதன் பிறகு சமயம் கிடைக்கும்போதெல்லாம் ஓட்டப்போட்டிதான். யார் முந்துகிறாரோ அவர் மற்றவதைத் துரத்துவார்.*

*இந்த நாட்களில்தான் விதி வீதிகளில் வைத்து அண்ணனோடு விளையாடியது.*

*அது ஒரு சிவராத்திரி நாள். இரவு யாரோ சில குறும்பர்கள் வீதியோரத்தில் இருக்க வேண்டிய ஒரு பெரிய கல்லை தூக்கி நடு வீதியில் வைத்துவிட்டுப் போய் விட்டார்கள். இந்த சிறு விபரம் தெரியாத அண்ணன், கோவிலுக்கு போவதாக வீட்டில் சொல்லிவிட்டு சிவராத்திரி விசேசக் காட்சியாக நள்ளிரவு காட்டப்பட்ட ஏதோ ஒரு தமிழ் சினிமாவை பார்த்த எரிச்சலோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். காலைக் கருக்கலில், தூக்கக் கலக்கத்தில், தூரத்தில் ஏதோ மசமசவென வெள்ளையாக நடு வீதியில் தெரிந்திருக்கிறது. ஆகா அதிகாலையில் இப்படி அதிஷ்டம் அடித்திருக்கிறதே என்று மகிழ்ந்துபோய் சைக்கிளை உற்சாகமா மிதிக்க ஆரம்பித்தான். சாதா சைக்கிளையே ஒரு 'ஸ்டெல்த்' விமானம் போன்ற வேகத்திற்கு இயக்கி, அதே வேகத்தில் சைக்கிளில் இருந்தவாறு காலை ஓங்கி அந்த 'நாயை'த் தாக்க...*

*"ஐயோ..."*

*கல்லைக் கண்டால் நாயைக் காணோம் என்ற ஞானோதயம் பின்னணியில் புரிய சைக்கிள் ஒருபுறமாகவும் ஆள் ஒருபுறமாகவும் அண்ணன் விழுந்து போயினன். அதன் பின் ஒருமாத காலத்திற்கும் மேலாக அவன் கால்கட்டோடு அலைந்தது கண் கொள்ளாக் காட்சி.*

கார் ஓட்டிக்கொண்டிருந்த நான் பெருமூச்சு விட்டுக்கொண்டேன். ம்... அதெல்லாம் ஒரு காலம்.. இனி அந்த வாழ்க்கை கிடைக்கவே கிடைக்காது... அந்த வாழ்க்கையின் வெப்பம் தாளாது வெளியே ஓடி ஐரோப்பாக் குளிரிலும், வட அமெரிக்கப் பனியிலும் அலைந்துவிடும். கடைசியாக இப்போது நான் சிங்கப்பூரில் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறேன். எங்கிருந்தாலும் எனது ஊர் சொறிநாயைக் கற்பனையில் பார்ப்பதுகூட மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ம்... பெருமூச்சுத்தான் விட முடிகிறது. ஆனால் ஊருக்கு திரும்பி போக முடியாது. குரைக்கவும் இனி அங்கே முடியாது. கடிக்கவும் முடியாது.

*

டாக்டரை பார்ப்பதற்காக அமர்ந்திருந்தோம்.

இந்த மருத்துவமனை சிங்கப்பூரில் பிரபலமான மருத்துவமனை. எங்கள் கம்பனியோடு இந்த மருத்துவமனைக்கு குறைந்த கட்டண ஒப்பந்தம் இருக்கிறது. அதனால்தான் இங்கு வரவேண்டியிருக்கிறது. இங்கு எப்போது வந்தாலும் கந்தசஷ்டி கவசம்தான்...! காக்க காக்க காக்க காக்க காக்க... காத்துக் கொண்டு இருந்தோம்.

வெள்ளையுடைப் பணியாளர்கள் பரபரத்துக் கொண்டிருந்தனர். இன்று நோயாளர் கூட்டம் அதிகமாகத்தான் இருக்கிறபோலும். டாக்டரை ஒருமுறை கண்ணாலாவது பார்த்து விடுவோமா என தவம் இருப்பதுபோல சீனர்கள், மலாய்க்காரர்கள் நிறையப்பேர் சோகமாக காத்திருந்தார்கள். முன்னால் ஒரு தமிழ் ஜோடியும் காத்துக் கொண்டிருந்தது. இங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள் என்பது அந்த ஜோடியைப் பார்க்கும்போதே தெரிகிறது. இருவருக்கும் வயது இருபதுக்குள்தான் இருக்கும். இருவரும் குச்சிபோல நீண்டு தெரிந்தனர். பெண் முடியை ஒட்ட வெட்டியிருந்தாள். ஆனால் ஆண் கூந்தலை அள்ளி முடிந்திருந்தான். அவன் குங்குமப் பொட்டுகூட வைத்திருந்தான். கறுப்பு நிற 'லெதர்கோர்ட்' போல ஒன்றும் அணிந்திருந்தான். மோட்டார் பைக் வைத்திருப்பான்போலும். இரண்டு ஹெல்மெட்கள் பக்கத்தில் இருந்தன. அவள் உடலோடு ஒட்டிய நீலநிற நீளக்கை 'பனியனுடன்' ஜீன்ஸ் அணிந்திருந்தாள். அவனது தோளில் அவள் தலையை வைத்து சாய்ந்திருந்தாள். அவனது ஒரு கை அவனை ஆதரவாக அணைத்திருந்தது. அவள் முகத்தில் சோகம் சற்று தூக்கலாகவே தென்பட்டது.

எதேச்சையாக வாசுதேவன் பக்கம் திரும்பினேன். அவரும் அவர்களை விழுங்குவதுபோல பார்த்துக் கொண்டிருந்தார். நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். என் பக்கம் திருப்பியவர் நான் அவரையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்ததும் அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார். என் காதுப் பக்கமாக தன் வாயை கொண்டு வந்து "அபோர்ஷன் பண்ண வந்திருப்பா..." என கிசுகிசுத்தார்.

எனக்கு தூக்கி வாரிப்போட்டது. சற்றே கடுப்புடன் "இயோவ்... அதெல்லாம் உமக்கெப்படித் தெரியும்?" என்றேன்.

'இச்' என வாயால் ஒரு சத்தம் வைத்தார். அதற்கு அர்த்தம் 'அர்த்தமில்லாத கேள்வி கேட்காதே' என்பதாக இருக்கக்கூடும். கொஞ்சநேரம் மௌனமாக இருந்தார். தலையை ஆட்டிக்கொண்டார். பிறகு "பொதுவா இந்த ஊரு பொண்ணுங்க சரியே இல்லீங்க..." என்றார்.

"இந்த ஊர் பொண்ணுங்களா...? அப்படீன்னா யாரு...? சைனீஸ் பொண்ணுகளை சொல்றீரா...? மலாய்க்கார பொண்ணுகளை சொல்றீரா...? தமிழ்ப் பொண்ணுகளைத்தான் சொல்றீரா? அல்லது எல்லாரையும் சேர்த்து சொல்கிறீரா?"

"சீனத்திகளைப் பற்றி யாரு கவலைப்பட்டா... அவங்களும் அவங்க ட்ரஸூம்... தொடை தெரிய ட்ரஸ்பண்ணுவாளுக... அதுக அப்படித்தான்... ஆனா இங்கேயிருக்கிற தமிழ் பொண்ணுகக்கூட சின்ன வயசிலேயே அவளுவ மாதிரியே தொடை தெரியிற மாதிரி சின்னதா ட்ரஸ்போட்டு நடக்கிறத பார்க்கும்போதுதான் கடுப்பாயிடுது..."

இவரது பேச்சை ரசிக்க முடியவில்லை. ஆயினும் சிரித்துக்கொண்டேன். அவர் எனது சிரிப்பை எப்படி அர்த்தம் பண்ணிக்கொண்டாரோ தெரியவில்லை.. சற்று கோபமாக தொடர்ந்தார்.

"சைனீஸ் பொண்ணுக ஒல்லியா வெள்ளையா இருக்காங்க... காலு கூட வெள்ளை... பாத்தா சிகரட் மாதிரி இருக்கு... அவங்களுக்கு இந்த மாதிரி காலு தெரியிற ட்ரெஸ் நல்லாவே இருக்குங்க... ஆனா தமிழ் பொண்ணுங்க காலு கறுப்பு... பார்த்தா சுருட்டு மாதிரி இருக்கு... இவங்களும் சைனீஸ் மாதிரியே காலு தெரிய ட்ரஸ் போடப்போ கண்ராவியால்ல இருக்கு.. சகிக்கல்ல..."

"உம்மை யாருய்யா அவங்க காலை பார்க்க சொன்னது....? நீர் உம் பாட்டுக்கு போக வேண்டியதுதானே..." என்றேன். ஆனால் அவர் இதை காதில் போடாமல் அந்த தமிழ் ஜோடியையே முறைத்துப் பார்த்ப்பதில் முனைந்திருந்தார். அப்படி என்னதான் பார்க்கிறார் என்று அறியும் ஆவலில் நானும் ஜோடியை பார்த்தபோது அங்கே அவளும் அவனும் குலாவிக் கொண்டிருந்தார்கள்.

அவன் அவனை கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஏதோ சொல்ல.. அவன் செல்லமாக பிணங்கிக் கொள்ள.. அவன் அவளுக்கு 'படக்' என்று உதட்டில் முத்தம் கொடுத்தான். அவளும் அதே வேகத்தில் திருப்பி முத்தம் கொடுத்து வைத்தாள். இங்கே நம்மாளு அதிர்ந்து போனார்...

"பாத்தீங்களா சார்... சிங்கப்பூர் தமிழ்ப் பொண்ணு... இவங்க பண்பாட்டை பாத்தீங்களா சார்.. பட்டப்பகலில் நாலுபேர் மத்தியில இந்த சின்னப் பொண்ணு கிஸ் பண்ணிக்கிறதா.. இப்படி ஆரம்பிக்குது.. அப்புறம் நேரே படுக்கைக்கு போயிடுறாளுவ... இங்கேல்லாம் சின்ன வயசிலேயே கெட்டுப்புடுறாங்க பாருங்க... என்னங்க இது...?" என்று புகார் செய்வதுபோல முறையிட்டார்.

"அதனால என்னங்க?" என்றேன்.

"ஐயோ.. கெட்டுப் போயிடுறாங்களுங்களே..." என்று பதறினார் அவர்.

"கெட்டுப் போகட்டுமே.. பெண்கள் அப்படிக் கெட்டுப் போனாத்தான் பெரிதாக என்ன கெட்டுவிடப்போகிறது? ஒவ்வொரு பொம்பிளையும் தனியாவா கெட்டுப்போறாங்க...? ஆம்பிளைங்களோட சேர்ந்துதானே கெட்டுப்போறாங்க..." ஆம்பிளபோலவே பொம்பிளையும் கெட்டுப்போறா அப்படீண்ணு வச்சுக்கங்களே... என்றேன் வேகமாக...

"அதெப்படீங்க...? ஆம்பிளையும் பொம்பிளையும் ஒண்ணா...? பொம்பளைங்களும் ஆம்பிளைக மாதிரியே நடக்கப் போனா நம்ம தமிழ் பண்பாடு என்ன ஆகிறது?"

தனக்குத் துணையாக அவர் தமிழ் பண்பாட்டை இழுத்ததும் எனக்குப் பொறுக்கவில்லை. தனக்குப் பிடித்தால் தமிழ் பண்பாடு என்பார்கள். பிடிக்காவிட்டால் சீரழிவு என்றுவிடுவார்கள். வாடா மச்சான்... இன்று உன்னை சும்மா விடக்கூடாது. நானும் உன்னைக் கடித்தே தீர வேண்டும்.

"தமிழ் பண்பாடு.. தமிழ்பண்பாடு அப்படீங்கிறீங்களே... தமிழ் பண்பாடுண்ணா என்னங்க...?

தயவு பண்ணி கொஞ்சம் சொல்லுங்க வாசுதேவன்''.. என்றேன். என் குரலில் எரிச்சலோடு கலந்த கோபம் தொனிப்பது எனக்கே தெரிந்தது.''

பதிலை இசகு பிசகாக சொல்லக்கூடாதே என்று பயந்ததுபோல அவர் கொஞ்சநேரம் மௌனமாக இருந்து யோசித்துவிட்டு ''எங்க பாட்டி காலத்துக்கும் முந்திய காலத்துப் பழக்க வழக்கங்கள் நம்ம காலத்திலும் தொடர்வதைத்தான் பண்பாடு அப்படீன்னு சொல்லணும்...'' என்றார்.

''அது ஏன் தொடரணும்?'' என்று கேட்டேன் நான்...

''நல்ல விஷயங்கள் தொடரணும்தானே...''

''அப்படியா? அதெல்லாம் நல்ல விஷயம் அப்படீன்னு உங்களுக்கு யார் சொன்னது?''

''இதென்னங்க கேள்வி?'' என கேள்வியையே ஆட்சேபித்தார் அவர். ''அந்தக் காலத்தில பெரியவங்க சொன்னது எல்லாமே சரியாத்தானுங்களே இருந்திருக்கு... அதைப்போயி...''

''அப்படியா?.... கொஞ்சம் பொறுங்க வாசு... அந்தக் காலத்தில பெண்ணுகளுக்கெல்லாம் பன்னிரண்டு பதின்மூணு வயசிலேயே கல்யாணம் பண்ணி வச்சிடுவாங்க இல்லியா.. அப்படீன்னா சின்னப் பொண்ணுங்களாக இருக்கப்போவே பெரியவங்க சின்னப்பொண்ணுகளை படுக்கைக்கு அனுப்பியிருக்காங்க.. அதாவது உங்க பாட்டி காலத்துக்கு முந்திய சின்ன வயசுப் பொண்ணும் சரி இப்ப நீங்க பாக்ற மாதிரியான இந்த இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்ணும் சரி ஒண்ணையேதான் செஞ்சிருக்காங்க... அதாவது சின்ன வயசில சின்னப் பொண்ணுங்களாக இருக்கப்போவே படுக்கைக்கு போயிடுறாங்க.. சரியா?''

என் 'லாஜிக்'கை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''அதெப்பிடீங்க.. அவ குடும்பப் பெண்ணாகின பிற்பாடு படுக்கைக்கு போனா.. இவ ·குடும்பம் ஆகாம படுக்கைக்கு போகிறா.. அது சரி.. இது தவறு...''

நான் விடுவேனா?

"சரி.. அப்படியே இருக்கட்டுமே.. அந்தக் கால சின்னப் பொண்ணு குடும்ப சுமையை ஏத்திட்டு படுக்கப் போனா.. இந்தக்கால சின்னப் பொண்ணு குடும்ப சுமை இல்லாம படுக்கப் போகிறா.. எந்தப் பெண்ணுக்கு அதிக சந்தோஷம் கிடைக்கும்கிறீங்க?"

"நீங்க விதண்டாவாதம் பண்றீங்க சார்..." என்று என் மீது குற்றம் சாட்டியவர் அது பழைய காலங்க.. அந்தக் காலந்தான் இப்ப மாறிடிச்சே.. திருமண வயது உச்சவரம்பு சட்டம்போட்டு அதை தடுத்திட்டாங்களே.. என்றார்.

அவர் முகம் மாறிவிட்டது. என் பேச்சு பிடிக்காததால், அலுத்துப் போனவர்போல குரலை வைத்துக் கொண்டு "எது நல்லதோ அதை எடுக்கணுமுங்க... அதை விட்டுட்டு நாய்கள்போல நடு வீதியில கட்டிப் பிடிக்கிறாங்க, கிஸ் பண்ணுறாங்க.. இதெல்லாம் நல்லதுங்கிறீங்களா...?" என்றார்.

"இதை நல்லதுண்ணு ஏன் நினைக்கமாட்டேங்கிறீங்க, வாசுதேவன்? நடு வீதியில கட்டிப்பிடிக்கிறதோ.. முத்தம் கொடுக்கிறதோ.. அவரவர் சொந்த விஷயம்...! இதில உங்களுக்கு என்ன குறை?" என்றேன் நான் விடாப்பிடியாக..

"இவங்க சின்னப் பிள்ளைங்க சார்... இதையெல்லாம் அனுமதிச்சா நாளைக்கு இவங்க எப்படி நம்ம பண்பாட்டைக் காப்பாற்றுவங்க..? நீங்க சொல்றது சரின்னா, சின்னப் பசங்க 'செக்ஸ்லைஃபுக்கு' போறதை தடுக்க சட்டங்களே இருக்கே... இங்கே.. இங்கே.. இதே சிங்கப்பூரிலேயே இருக்கே.." என்றார் அவர்.

பண்பாடா.. மவனே.. கடித்துக் குதறிவிடுவது என்று முடிவு செய்ததுபோல நான் தொடர்ந்தேன்.

"ஆமா வாசு... அப்படிப்பட்ட சட்டங்கள் இருக்கு.. ஆனா அவை 'செக்ஸ்லைஃபுக்கு' ஏற்ற உடல் பக்குவமோ, மனப் பக்குவமோ இல்லாதவங்க அதற்கு போறதைத் தடுக்க நிர்ணயிக்கப்பட எல்லைக்கோடுதான்.

பொறுப்புக்களை ஏற்கக்கூடிய அளவுக்கு வயதுவராத சிறுவர்கள் கல்யாணம், குடும்பம், குழந்தை போன்ற சுமைகளை தாங்கக்கூடாதுங்ற நல்லெண்ணத்தால் உருவானவைதான் அவை... அந்த சட்டங்கள், 'பாதுகாப்பாயிரு' அப்படீன்னு சொல்லித்தருகிறதே தவிர பண்பாட்டை காப்பாற்று அப்படீண்ணா சொல்கிறது...? இரண்டுமே வேறு வேறு விஷயம் வாசுதேவன்..."

அவர் எதுவும் பேசவில்லை. இதற்கிடையே வாசுதேவன் என்று பெயரை சொல்லி ஒலிபெருக்கியில் அழைத்தார்கள். அவரை உட்கார்ந்திருக்கச் சொல்லிவிட்டு நான் மட்டும் எழுந்துபோய் தேவையான பத்திரங்களைக் கொடுத்துவிட்டு வந்தேன். வந்த வேகத்தோடு மீண்டும் தொடர்ந்தேன்.

"பொதுவாவே ஆணும் பெண்ணும் சேர்வது என்பது அறிவுப்பூர்வமா இருக்கணும்... அந்த அறிவு இந்தக்காலத்து இளையர்களிடம் நெறையவே இருக்கு... சுருக்கமா சொன்னா ஆணுக்கும் பெண்ணுக்கும் அந்த அறிவை விரைவாக வர வைக்க வேண்டியதுதான் சமூகத்தின் கடமை... வாழ்ந்து ர்க்கப்பட வேண்டியதுதானே மனித வாழ்க்கை... அந்த வாழ்க்கையின்போது எந்த ஆசையையும் ஏன் அடக்கி வைக்கணும்....? அதுக்கு பதிலா ஆசையை பாதுகாப்பா... முறையா... இப்பவே அனுபவிக்க சொல்லிக் கொடுங்க.. இந்த வளர்ந்தவிட்ட குழந்தைகள் தங்கள் அன்பை பகிரங்கமாக பிரகடனப்படுத்துவதுபோல பொது இடத்தில் அன்பாக முத்தமிடுகின்ற மென்மையான உணர்ச்சிகளை பண்பாடு என்ற பூச்சாண்டி காட்டி கொச்சைப்படுத்தாதீங்க... இந்தக் காலத்து இளைஞர்கள் பேதைகள் இல்லை, வாசுதேவன்.. அட.. அவங்க காதலால சேர்ந்தாலும் சரி காமத்தால சேர்ந்தாலும் சரி பண்பாட்டைப் பற்றி அவர்களுக்கு தெரியல்லைண்ணு மட்டும் நெனக்காதீங்க... நாம வாழுற இந்த வாழ்க்கையே காமத்தால கிடைச்ச வாழ்க்கைத்தானே... அப்புறம் ஏன் காமத்துக்கு பயந்து, பயமுறுத்தி சாகிறீங்க...?"

அவர் நாய்க்கடி வேதனையை மறந்து 'புல்டோக்' போல உர்... என்று உட்கார்ந்திருந்தார்.

"வாழு... வாழவிடு... இதுதான் உண்மையிலே புதிய கலாச்சாரம்.. புதிய பண்பாடு.. யோசித்துப்பாருங்க.. 'செக்ஸ்லைஃப்'பிலே உச்சக்கட்டமே தெரியாம வாழ்ந்து கடைசியில் கிழவியாகி செத்துப்போன தமிழ்ப் பெண்கள் இருந்த சமுதாயத்தைவிட, செக்ஸ் வாழ்க்கையை இளம் வயதிலேயே முறையா தெரிஞ்சு வாழ்க்கையை அனுபவிக்கிற இளம் தமிழ்ப் பெண்கள் நிறைஞ்சு வருகிற இன்றைய சமுதாயம் எவ்வளவு அற்புதமானது.. இதை ஏற்றுக்கொண்டால் அது பழைய பண்பாட்டுக்கு நாம வைக்கிற ஆப்பு இல்லை, வாசுதேவன்...! புதிய சிந்தனை நிலைகளின் தொடக்கம்..."

என்னையறியாமலே ஒரு பிரசங்கி போல நானே தனியாக பேசிக்கொண்டு போவதை உணர்ந்து பேச்சை நிறுத்திக் கொண்டேன்.

அவர் எதுவும் பேசவில்லை. ஆனால் நான் சொன்னது எதையுமே ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுபோல தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். நான் நிதானித்துக் கொண்டேன். இவரோடு இந்த விஷயத்தை இந்த மாதிரி உணர்ச்சி வசப்பட்டு இங்கே பேச வேண்டிய தேவையே இல்லையே... நாய்க்கு 'நாப்கின்' கட்டி 'டைனிங்டேபிளில்' உட்கார்ந்து சாப்பிட கற்றுக்கொடுக்க முயல்வோமானால், நாமும் தோல்வி அடைந்து, வீணாக அந்த அப்பாவி நாயையும் கலவரப்படுத்துவதாகத்தானே போய் முடியும்.

என் மீதும் தவறு இருக்கிறது. இவரை மாற்ற நான் யார்? நாய் வாலை நிமிர்த்தத்தான் முடியுமா? இயல்பாக உருவாகும் கோணல்கள் இருந்துவிட்டுப் போகட்டுமே.. அதுவே ஒருவித அழகுதானே...

சிறிது நேரம் எம்மிடையே மௌனம்.. என்ன செய்வது என்று தெரியாததுபோல இருவரும் அங்கும் இங்கும் திரும்பித் திரும்பி பார்த்தவாறு இருந்தோம். டாக்டரும் இவரை அழைப்பதாகத் தெரியவில்லை. இன்னும் எவ்வளவு நேரம்தான் இப்படி இருக்க வேண்டுமோ தெரியவில்லை...

மௌனம்.

பேச்சை ஜாலியாக மாற்றலாம் என்று நினைத்தவனாக "ஏங்க.. உங்க கல்யாணம் எப்பங்க...?" என்றேன்.

நாணப்பட்டுக்கொண்டார்.

"கல்யாணமா சார்.. அதுதாங்க இழுத்திட்டே போகுது.. இப்ப பொண்ணு பாத்திட்டிருக்காங்க.. சிங்கப்பூர்ல 'கம்பியூட்டர் ப்ரோக்கராமிங்' தெரிஞ்சிருந்தா நல்ல வேலை கெடச்சிடும்.. சம்பாரிச்சிடலாம்.. அதால பொண்ணு கம்பியூட்டர் படிச்சு முடிச்சவளா இருக்கணும் அப்படீண்ணு நான் சொல்லியிருக்கேன்... அதென்னவோ நம்ம ஜாதியில படிச்ச பொண்ணுங்க ரொம்ப கம்மிங்க.. ஆனா எங்கப்பா நம்ம ஜாதி பொண்ணுதான் பாக்கணும்னு சொல்லிட்டார். ரெண்டு மூணு 'ஆபர்' வந்திட்டிருக்கு.. பொண்ணுக ஓகேதான்.. ஆனா அவங்க, தர்ரதா சொல்ற வரதட்சணை நம்மளுக்கு ஒத்து வரலைன்னு அம்மா எழுதியிருக்காங்க..."

"நீங்கதான் நல்லா சம்பாதிக்கிறீங்களே.. வரதட்சணையிலை கொஞ்சம் கழிவு அதாவது 'டிஸ்கவுண்ட்' கொடுங்களேன்.. பொண்ண பெத்தவங்க பாவம் இல்லையா...?"

"அதுதாங்க கொடச்சல்.. நான் சிங்கப்பூர் டாலர்லை நல்லா சம்பாதிக்கிறேனா... அது ஊரு பணத்துக்கு ரொம்ப அதிகமா ஆயிடுது... அதால என் சம்பாத்யத்துக்கு ஏற்றதாத்தான் வரதட்சணை இருக்கணும்ணு அம்மா கன்டிஷனா சொல்லீட்டாங்க.. இல்லேண்ணா எங்க 'கம்யூனிட்டில' மாப்பிள்ளையை மதிக்கமாட்டாங்க பாருங்க..."

"சரீங்க.. உங்க சம்பாத்யத்துக்கு ஏற்ற வரதட்சனையோட உங்களை கல்யாணம் பண்ணிட்டு வர்ரவ படிச்சவளாயிருப்பாங்கிறீங்க.. யாரு கண்டா.. இங்க வந்தப்புறமா நாகரீகமா தொடை தெரியத்தான் ட்ரஸ் போட்டுக்குவேன் அப்படீன்னு அடம் பிடிச்சா என்ன பண்ணுவீங்க.. டைவோர்ஸ் பண்ணிடுவீங்களா?"

"டைவோர்ஸா.. சே.. சே.. முடிஞ்சவரைக்கும் அப்படிப்பட்ட பொண்ணை பார்க்க மாட்டோமுங்க.. ஆனா எல்லாமே எங்க கையிலயா இருக்கு..

ஒருவேளை நீங்க சொன்னமாதிரி அமைஞ்சுட்டா.. சரி கழுதைண்ணு, அனுசரிச்சு போயிட வேண்டியதுதான்.. என்ன இருந்தாலும் சம்பாரிக்கிற இல்ல.. டைவோர்ஸ் எல்லாம் எப்படீங்க பண்றது.. அதெல்லாம் நம்ம தமிழ் பண்பாட்டுக்கு ஒத்து வருமா?"

கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டேன். ஒரு நாய் ஊளையிட்டதைக் கேட்டுவிட்டு தானும் ஊளையிடும் நாய் ஞாபகத்திற்கு வந்தது. தனக்குத் தெரியாத நாகரீக உருவத்தை விரட்டித் துரத்தும் நாய் ஞாபகத்திற்கு வந்தது. லஞ்சம் வாங்கி விட்டு திருட்டைக் காணாமல் விட்டு விடும் நாய் ஞாபகத்திற்கு வந்தது.

இருந்தபோதும் எனக்கென்னவோ நாய் மீது பலத்த மதிப்பும் வந்தது.

நாய்க்கு பைத்தியம் பிடித்தாலென்ன? அது கூட யாரைக் கடிப்பது என்று நன்கு யோசித்துத்தான் முடிவு செய்யுமோ...?

(canadamoorthy@gmail.com)

# தடம் மாறும் தார்ப்பரியம்

ஸ்ரீரஞ்சனி
கனடா



அந்த சிகிஷி எனப்படும் 'சிறுவர் ஆதரவுச் சபைக்' கட்டிடத்துக்குள் நுழையும் போது, மனசு கொஞ்சம் படபடத்துக் கொள்கிறது.

"பாரபட்சமின்றி இருக்க வேணும். வெறும் குரலைக் கொடுக்கிறது மட்டும் தான் எங்கடை வேலை. மற்றும் படி எந்தக் கலந்துரையாடலிலும் நாம் ஒரு பங்காளர் இல்லை" என்றெல்லாம் மொழிபெயர்ப்பாளருக்கான பயிற்சி வகுப்புக்களில் பல தடவைகள் மீள மீள வலியுறுத்தப்பட்டாலும் கூட, சில நேரங்களில் அப்படியிருக்க முடியாமல் மனசு மிகவும் குழம்பிப் போவதற்கு, நானும் ஒரு தாயாக இருப்பதும் ஒரு முக்கிய காரணம் தான்.

வரவேற்பறையினுள் புகுந்ததும், "எனது பெயர் லதா. 'லோலோவின்' ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர். சில்வியாவுடன் எனக்கு இரண்டு மணிக்கு ஒரு அப்பொயின்மென்ற் இருக்கிறது" என என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

சிறு பிள்ளைகள் ஏதாவது ஒரு விதத்தில் துன்புறுத்தப்படுகிறார்கள் அல்லது பாராமுகமாக விடப்படுகிறார்கள் எனச் சந்தேகம் வரும் சூழலில், குறித்த பிள்ளைகளின் நன்மைக்காகவென சிகிஷி அவர்களின் குடும்பத்தினுள் தலையிடுவது வழமை. அதுவும் அவர்களுடைய அலுவலகத்தில் அப்பொயின்மென்ற் என்றால் சற்றுச் சிக்கலான பிரச்சனை தான் என என் அனுபவத்தின் மூலம் தெரிந்திருந்தது.

“சரி, வருகையாளர்களுக்கான இந்தப் புத்தகத்தில் கையொப்பமிடுங்கள்” என்று சொல்லிவிட்டு அனுமதிச் சீட்டு ஒன்றைத் தருகின்றாள், வரவேற்புப் பகுதியில் அமர்ந்திருந்த அந்த இளம் பெண்.

கண்களால் அவ்விடத்தை ஒரு முறை வலம் வந்துவிட்டு, அங்கு இருந்த ஒரு கதிரையில் போய் அமர்ந்து கொள்கிறேன் நான். ஏக்கம் நிறைந்த கண்களுடனும், தூக்க முடியாத ஒரு பெரிய பையுடன் மறு பக்கத்தில் இருந்த அந்தத் தமிழ் பெண்ணைப் பார்த்த போது அவளுக்குத் சேவை வழங்கத்தான் நான் வந்திருக்கிறேன் என்பது புரிந்தது.

எனது வேலைக்குரிய ஒழுக்கக் கட்டுப்பாட்டை மீறாமலிருக்கவென கைப்பைக்குள் இருந்த ‘உள்ளும் புறமும்’ என்ற கதைப் புத்தகத்தை எடுத்து வாசிக்க முயன்ற போது, வாசலில் கேட்ட பலமான காலடிச் சத்தங்கள், என் கவனத்தைத் வாசலை நோக்கித் திருப்பின.

ஓடி வந்த வேகத்தில், “மம்மி” என்று மிகக் குதூகலமாக கூவிய படி அங்கிருந்த அந்தத் தமிழ்ப் பெண்ணை இறுகக் கட்டிக் கொள்கிறாள் மூன்று வயது மதிக்கக் கூடிய ஒரு சிறுமி. அவளின் பின்னால் இரு சிறுவர்களும் அவர்களின் தந்தை எனச் சொல்லக் கூடிய ஒரு நடுத்தர வயது மனிதனும் வந்தனர்.

“நீங்கள் தானா மொழிபெயர்ப்பாளர்?” என ஆங்கிலத்தில் கேட்டபடி என் அருகே வந்த சுருட்டை முடியும், கவர்ச்சியான கண்களும் கொண்ட அந்த அழகான பெண்ணை நோக்கி ”ஆமாம்” சொல்லும் போது ”நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்”, எனச் சொல்ல வேண்டும் போல வாய் குறுகுறுத்தது.

ஆனால் என் வேலைக்குரிய சட்ட திட்டங்கள் மீண்டும் நினைவுக்கு வர,

“எனது பெயர் லதா. ‘லோலோவின்’ ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர். நீங்கள் சொல்கிற எல்லாவற்றையும் முடியுமான அளவுக்கு சரியாக மொழிபெயர்த்துச் சொல்வதுடன் அவற்றை அந்தரங்கமாகவும் வைத்திருப்பேன். எந்தப் பக்கமும் சார்ந்து கதைக்க மாட்டேன். தயவு செய்து ஒருவருடன் ஒருவர் நேரடியாக தன்மை, முன்னிலையில் கதையுங்கள்”, என என்னை உத்தியோக பூர்வமாக அறிமுகம் செய்து கொள்கிறேன் நான்.

எங்களைப் பார்ததும் எழுந்து நின்ற அந்தப் பெண்ணும் அவள் மூன்று பிள்ளைகளும் அவள் கணவரும் எம்மைப் பின் தொடர, அருகில் இருந்த குழந்தைகள் விளையாடும் மைதானத்துக்கு நாங்கள் போகிறோம்.

“தாய் தன் பிள்ளைகளுடன் என்ன கதைக்கிறா, பிள்ளைகள் அவவுடன் என்ன கதைக்கிறார்கள் என்பதை மட்டும் நீங்கள் மொழிபெயர்த்தால் போதும்” என எனக்கு சில்வியா சொன்ன போது, அந்தப் பெண்ணுக்கும் என்னை நான் அறிமுகம் செய்து கொள்கிறேன்.

நல்ல வெயிலில் போடப்பட்டிருந்த ஒரு வாங்கைக் காட்டி, இதில் இருப்போமா எனச் சில்வியா கேட்ட போது, இல்லை, வெய்யில் இல்லாத இடமாக வேண்டும் என ஒரு மரத்தின் கீழ் போய் அமர்ந்து கொண்ட அவள் அவசரம் அவசரமாக தனது பைக்குள் இருந்த பலாப்பழ ரின்னைத் திறந்து அதைத் தனது மூன்று பிள்ளைகளுக்கும் மாறி மாறித் தீத்த ஆரம்பித்தாள்.

“அம்மா, உங்கடை லோயரிட்டையிருந்து உங்களுக்குக் கடிதம் வந்ததோ?” எனக் கேட்கும் மூத்த மகனின் கேள்விக்கு எந்தப் பதிலும் சொல்லாமலே, “சாப்பிடு, சாப்பிடு” என்று சாப்பாடு கொடுப்பதிலேயே அவளின் கவனம் முழுவதும் இருந்தது.

மகனுக்கோ அந்தச் சாப்பாட்டை விட பதிலே மிக முக்கியமாக தெரிந்தது போலும், அதனால் அவன் அதையே திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருந்தான்.

பின்னர் நிலைமையை மாற்றவோ என்னவோ, என்னையும் சில்வியாவையும் பார்த்து, "உங்களுக்குப் பலாப்பழம் வேண்டுமா?" எனச் சைகையால் கேட்டவள், நாங்கள் வேண்டாம் என்றதும்,

தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் இலங்கையில் தன்ரை வீட்டிலை பலாமரம் நிற்பதை எங்களுக்குக் கஷ்டப்பட்டு விளங்க வைக்க முயன்றாள்.

முடிவில் பிள்ளைகளும் பெற்றோரும் ஊஞ்சல்களில் ஒருவரை ஒருவர் மாறி மாறி ஆட்டத் தொடங்கினார்கள்.

அவளை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவதும், அவளைத் தொட்டுச் சுகம் காண்பதுமாக அவனின் செய்கைகளில் அவளைப் பிரிந்திருக்கும் விரகதாபமும் தவிப்பும் தெரிந்தன. பிள்ளைகளும் தமக்குள் விளையாடிக் கொண்டிருந்தனர். வேறு சில குடும்பங்களும் அங்கு நின்றனர்.

மழை வரப் போகிறதா அல்லது அது வெறும் இடம் மாறும் கார் முகில் கூட்டமா எனத் தெரியவில்லை. சூரியன் மேகக் கூட்டத்தினுள் ஒளிந்து ஒளிந்து விளையாடுவது போன்றதொரு பிரமை.

கொஞ்ச நேரத்தின் பின் சில்வியாவை நோக்கி வந்த அவன், " இன்னும் எத்தனை நாளைக்கு நாங்கள் இப்படிச் சந்திக்கோணும்? எங்கடை பிரச்சனையை கொஞ்சம் விளங்கிக் கொள்ளுங்கோவன். என்ரை மனிசி இல்லாமல் என்னாலை பிள்ளைகளைத் தனிய வளக்கேலாது.

அவாவின்ரை இடத்தை என்னாலை நிரப்பவுமேலாது. அதோடை சும்மா தேவையில்லாமல் நான் இரண்டு வீட்டுக்கு வாடகைக் காசு கொடுத்துக் கொண்டிருக்கிறன். எப்ப தான் உங்கடை அறிக்கையை குடுக்கப் போறியள்?" என மூச்சு விடாமல் ஆங்கிலத்தில் கூறி முடித்தான்.

" நான் அவதானித்த விடயங்கள் பற்றிய என்னுடைய அறிக்கையை நான் விரைவில் சமர்ப்பிப்பேன்.

பிறகு உன்னுடைய மனைவி போகும் 'கோபத்தைக் கட்டுப்படுத்தும் வகுப்புக்களின்' இணைப்பாளர் அவவின் முன்னேற்றம் பற்றி விபரிக்க வேண்டும். அவை எல்லாவற்றையும் பார்த்த பின்னர், அவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு தன்னுடைய தீர்மானத்தை அடுத்த கோட்டுத் தவணையின் போது நீதிபதி சொல்வார். அதுவரை கொஞ்சம் பொறுமையாக இருங்கள்'' எனச் சில்வியா அவனுக்கு ஆங்கிலத்தில் விளங்கப்படுத்திக் கொண்டிருந்த போது அவர்களின் இரண்டாவது மகன், தனது தங்கையின் கன்னத்தில், அவள் அழ அழ மாறி மாறி அறைந்து கொண்டிருந்தான்.

தாய் சத்தமாக கத்திக் கொண்டிருந்தாள்.

''பார்த்தீங்களா, இவனை! எந்தச் சொல்லும் கேக்காமல் இப்படி நடக்கிற இவனை வைச்சுக் கொண்டு நாங்கள் என்ன செய்கிறது? மூண்டு பிள்ளையளோடையும் தினமும் கஷ்டப்படுகிற என்ரை மனுசிக்கு, அண்டைக்கு அவன்ரை தொந்தரவைத் தாங்க முடியேல்லை. சும்மா ஒருக்கா அவனுக்கு காதை முறுக்கிச் சின்னதாக அடிச்சதை, அவன் ரீச்சருக்குச் சொல்ல, பிறகு நீங்கள் அதைப் பெரிசாக்கி, இப்ப எங்கடை வாழ்க்கையைப் பாழாக்கிறியள்'' அவன் உணர்ச்சி பூர்வமாக கோபத்துடன் பொழிந்தான்.

தான் இடை மறிக்க, மறிக்க அவன் நிற்பாட்டாமல் அப்படிச் சொன்னது, சில்வியாவுக்கு கோபமூட்டியதை அவளின் சிவந்த முகம் தெளிவாகக் காட்டியது.

''சரி, உங்களுடைய சந்திப்புக்கான நேரத்தை நான் இத்துடன் முடித்துக் கொள்ளப் போகிறேன். இந்தச் சம்பவம் பற்றி நான் என்னுடைய மேற்பார்வையாளருடன் கதைக்க வேண்டும். உங்களுடைய மனைவியின் அந்தச் செய்கையை, இப்படி நியாயப்படுத்தும் உங்களுடன், உங்களின் பிள்ளைகள் இருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பானதா என நாம் ஆராய வேண்டிய தேவை இப்ப வந்திருக்கிறது. பிள்ளைகளைத் துன்புறுத்துவது கூட இந்த ADHD (கவனக்குறைவும் அதீத செயற்பாடும் கலந்த குறைபாடு)க்கு காரணமாக இருக்கும். அதை மிக மோசமாக்குவதாக அமையும் என்றெல்லாம் நாம் கதைத்தது, உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

அத்துடன் பெற்றோரிடமிருந்து தான் பிள்ளைகள் வன்முறையைக் கற்றுக் கொள்கிறார்கள், என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்றெல்லாம் காரமாகச் சொல்லிவிட்டு சில்வியா எழும்ப, பெரியதொரு அலை வந்து எல்லாவற்றையும் அடித்துச் சென்ற மாதிரி, பூகம்பம் ஒன்று வெடித்து சிதறியது போல சட்டென சில நிமிடங்கள் ஒரு பலத்த அமைதி நிலவியது.

“நேரம் முடிஞ்சுதாம். சீ, இவன்ரை பழக்கவழக்கத்தாலை சில்வியாவுக்கு கோவம் வந்திட்டுது. இவனாலை எப்பவும் பிரச்சனை தான். சரி, பிரியா, சுதன். இந்த பையிக்கை கொஞ்சம் முட்டை மாவும் தொதலும் கிடக்குது. இரவைக்கு அதைச் சாப்பிடுங்கோ. நாளைக்கு வடிவா எண்ணெய் தேய்ச்சு முழுகுங்கோ. திரும்ப அடுத்த கிழமை வந்து விளையாடலாம்'' என்றாள் அவள்.

மூத்த மகன் வந்து “ஹக் மீ'' என்று சொல்லி தாயைக் கட்டி முத்தமிட்டான். மற்றவன் பேசாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான். சின்னவள் வந்து அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, “மம்மி, நோ, நோ, ஐ டோன்ற் வான்ற் ரு கோ, நீங்களும் எங்களோடை வாங்க மம்மி... ஐ வான்ற் மம்மி, ஐ வான்ற் மை மம்மி'' என்று பெரிதாகச் சத்தம் போட்டு அழுதாள்.

அப்படி அவள் அழ அழ அவளைத் தாயிடமிருந்து பறித்தெடுப்பது போலத் தூக்கி எடுத்த அவன், ''இந்த வெள்ளையளுக்கு என்ன தெரியும்? பதினெட்டு வயசானதும் இனி உன்ரை வேலையை நீ பார் எண்டு, தங்கடை பிள்ளையளை இவை கலைச்சுவிடுற மாதிரியே நாங்கள் பிள்ளை வளக்கிறனாங்கள் ?'' எனக் கோபமாகச் சொல்லிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

மீண்டும் சூரியன் மேகக் கூட்டத்தினுள் மறைந்து கண்ணாமூச்சி விளையாட, கேள்விக்குறியாய்ப் போன அந்தச் சின்னஞ் சிறு குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணி என் இதயம் பலமாகக் கனத்தது.

(sri.vije@gmail.com)

# அகலிகை

அருணாச்சலம்
அமெரிக்கா



கிறிஸ்மஸ் பார்ட்டிக்கு கட்ரீனாவிடமிருந்து அழைப்பிதழ் வந்திருந்தது.

சக்திவேலால் நம்பவே முடியவில்லை.

கட்ரீனா!

இதே ஒரு கிறிஸ்மஸ் கால பின்னிரவில் நடனமாடச் சென்றிருந்த பொழுது தான் அவனின் ஸ்பரிசம் அவளுக்கும் அவளின் ஸ்பரிசம் அவனுக்கும் அறிமுகமானது.

பன்னிரண்டு வருடங்களுக்கு பின்பு இப்போ அவள் அனுப்பியிருக்கும் அழைப்பிதழ் இது.

இருபது வயது இளைஞனுக்கும் யுவதிக்கும் உள்ள வாலிப முறுக்கும் வாலிபப் பின்னலும் அவர்களை எப்போதும் இறுக்கியே பிணைந்து வைத்திருந்த காலமது.

ஒன்றாகவே வேலைக்குப் போய். . .ஒன்றாகவே திரும்பி வந்து. . .ஒன்றாகவே சுப்பர் மாக்கற்றில் சாமான்கள் வேண்டி வந்து..ஒன்றாகவே சமைத்து சாப்பிட்டு . .ஒன்றாகவே படுத்து... ஒன்றாகவே ஒருவரை ஒருவர் அனுபவித்து..ஒன்றாகவே தூங்கி.. விடிந்தாலும் தங்கள் கைப்பிடிகளை விலத்தாமல். . .அடிக்கும் எலாமை நிறுத்தி விட்டு மீண்டும் கம்பளிப் போர்வையில் இருந்து வெளியே வர மனமில்லாமல். . .

அது ஒரு காலம்.

இடையில் கட்ரீனா இரு தடவை கருத்தரித்த பொழுதும் அதனை வைத்தியசாலையில் அழிக்க அவள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று நாட்களும் சக்திவேல் பக்கத்திலேயே நின்றிருந்தான்.

கட்ரீனாவின் பெற்றோர்கள் ஒரு நாள் பின்னேரத்தில் மட்டும் வந்து பூக்கொத்தைக் கொடுத்து விட்டுச் சென்று விட்டார்கள். பிள்ளை பெற்றெடுத்து வளர்ப்பதற்க்கு கட்ரீனாவிற்கு வயது போதாது. . எனவே சக்திவேலும் கட்ரீனாவும் எடுத்து முடிவு சரி என கட்ரீனாவின் தாய் மாக்கிரட்டா ஒத்துக் கொண்டாலும் கட்ரீனா தன் கருத்துடை மாத்திரைகளை ஒழுங்காக எடுக்காததையிட்டு கடிந்து விட்டுச் சென்றாள்.

அடுத்தமுறை கட்ரீனா கருக்கலைப்பிற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது தாய் வரவேயில்லை. தான் சொன்னதை மகள் கேட்கவில்லை என்ற கோபம். மீண்டும் சக்திவேல்தான் அனைத்தும்.

பத்து வருடங்கள். . .தினம் தினம் புதுக் காதலராக வாழ்க்கையை அனுபவித்து வாழ்திருந்த காலம் அது. கதரினுக்கு தமிழ் கற்றுக் கொடுத்து. . .தானே சேலை கட்டி. . .பொட்டு வைத்து அழகு பார்த்த காலம்.

வழமையான ந, ன, ண அல்லது ல, ள பிரச்சனைகளும் இருந்ததே தவிர முதல் ஐந்து வருடங்களுக்குள் அவளால் 'நான் தமிலிள் கதைப்பேண்' என்ற சொல்லும் அளவிற்கு அவள் முன்னேறியிருந்தாள். அந்த மழலைத் தமிழ் சக்திவேலுக்கு மிகவும் பிடித்திருந்தது.

இருவருக்கும் முப்பது வயதை தொட்ட பொழுது தங்கள் பிறந்த தினத்தை மிகப்பெரிதாக செய்ய திட்டமிட்டு அதனை நடாத்தினார்கள்.

பத்துவருடங்களுக்கு ஒரு முறை வரும் அந்த பிறந்த நாளுக்காக தொடர்ந்து பத்து வருடம் பணத்தை சேமிப்பதும் அதனை ஒரே நாளில் நண்பர்களுடனும் குடும்பங்களுடன் சேர்ந்து ஒரே நாளில் செலவு செய்வதும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் விநோதமான செயல் அல்ல.

அதற்கு சக்திவேலும் கட்ரீனாவும் விதிவிலக்கு அல்ல.

கட்ரீனாவின் முழுக்குடும்பமும் மற்றும் இருவரின் தமிழ், வெள்ளைக்கார, ஆபிரிக்க நண்பர்களும் அழைக்கப்பட்டு பிறந்தநாள் விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

கட்ரீனா மிகவும் கவர்ச்சிகரமான ஆடை அணிந்திருந்தாள். அனைவரின் கண்களும் அவளையே சுற்றியிருந்தது போன்றிருந்தது. அது சக்திவேலுக்கு அது ஒரு பெருமை போலுமாய் இருந்தது.

பிறந்தநாளுக்கு மிகக் குறைந்த அற்ககோல் குடிவகையில் இருந்து நாற்பது வீதத்தைத் தாண்டிய அனைத்துக் குடிவகைகளும் மேசையை நிறைத்திருந்தன.

கண்ணாடிக் குவளைகளும் அதை ஏந்தியபடி நடனமாடியவர்களினதும் உட்கார்ந்திருந்தவர்களின் கண்களும் சிவந்திருந்தன.

தோட்டத்தின் இருண்ட பகுதிகளில் தமிழ்க் காதலர்களும் வெளிச்சப் பகுதியில் வெள்ளைக்கார ஆபிரிக்க காதலர்களும் முத்தமிட்டுபடி அமர்ந்திருந்தார்கள். தவிரவும் கட்ரீனா சக்திவேல் போல இனக்கலப்புக் காதலர்கள் என இரண்டு மூன்று ஜோடிகளும் ஆங்காங்கே.

சக்திவேலும் கட்ரீனாவும் முதலே பேசிக் கொண்டபடி கடைசிவரை அதிகமாக மது அருந்தாமல் அனைவரையும் நன்கு கவனிப்பதில் கண்களாய் இருந்தார்கள்.

அவர்களின் விருந்துபசாரத்தினால் அனைவரும் மகிழ்ந்திருந்தார்கள்.

மாலை நாலு மணிக்கு தொடங்கிய இந்த பார்ட்டி இரவு மணி இரண்டை நெருங்கிக் கொண்டு இருந்த பொழுது அனேகர் கலையத் தொடங்கினார்கள்.

அதற்குப் பின்பு தான் இதர நண்பர்களுடன் இருந்து சக்திவேலும் கட்ரீனாவும் மது அருந்தத் தொடங்கினார்கள்.

தங்கள் தங்கள் இளமைக்காலக் கதைகள். . .குழப்படிகள். . .முஸ்பாத்திகள்.. . என ஆளுக்காள் தங்கள் அனுபங்களைப் பரிமாறிக் கொண்டு இருந்த பொழுது நேரம் போனது தெரியாமல் போய்க் கொண்டு இருந்தது. கடைசியாக மிஞ் சியிருந்த போத்தல்களும் காலியாகிக் கொண்டு இருந்தது.

சக்திவேலுக்கு தான் எங்கே இருக்கின்றேன் எனத் தெரியாமல் களையும் போதையும் சேர்ந்து அவனை அழுத்திக் கொண்டிருக்க தலை தண்ணியடித்த மேசையில் கவிழ்ந்திருக்க கட்ரீனா மீது தான் கொண்ட காதலைப் பற்றி வாய் உழறத் தொடங்கியது.

அதிகாலைப் புகையிரத்தின் ஒலி துரத்தே கேட்ட பொழுது அவர் அவர்களாகவே தங்கள் கதிரைகளை விட்டு எழும்பி தள்ளாடியபடியே கட்ரீனா வீட்டிற்குப் பின்னால் இருந்து புகையிரநிலையத்தை நோக்கிச் சென்றார்கள்.

*

“ஹாய். . .சக்தி. . .வை ஆர் யூ சைலன்ற். . .மை சுவீற் காட். . . பிளீஸ். . .சே. ..சம்திங் . . பிளீஸ் . . . சே. . .சம் சுவீற் வேர்ட்ஸ். . .அழகான வார்த்தைகள் சொல்லு. . பிளீஸ் சே தவுசண்ட் ரைம்ஸ்..ஐ லவ் யூ ஆயிரம் தடவை காதலிக்கிறன் சொல்லு”

“ம். . . ம். . . ம். . . ”

“ஓ. .. நைஸ். . . பிளீஸ் சே சம்திங். . . . ஏதாவது சொல்லு”

“ம். . . ம். . . ம். . . ”

“வை ஆர் யூ சோ..காட் ருடே. . . ஏன் இன்றைக்கு முரடனாயிருக்கிறாய்”

“ம். . . ம். . . ம். . . ”

“சக்தி. . சக்தி. . சக்தி. . .”

கட்ரீனா தன்னை இழந்து கொண்டு இருந்தாள்.

*

காலை வெயில் கண்ணை உறுத்திய பொழுது சக்திவேல் தான் இரவு முழுக்க புல் வெளியில் படுத்திருந்ததை உணர்ந்தான்.

பக்கத்தில் இரவு எடுத்த வாந்தியின் மனம் வேறு.

சுற்றிவர காலியான பாட்டில்கள்.

தலைப்பாரத்துடன் மெதுவாக எழுந்து வீட்டுக்குள் போனான்.

கட்ரீனாவின் போர்வை விலகியிருந்தது.

அவளின் நிர்வாணம் அவனுக்குள் உறுத்தலை ஏற்படுத்தியது.

எங்கேயோ ஒரு தவறு நடந்து விட்டது என மனம் சொன்னது.

கிட்டவாக சென்று பார்த்தான்.

முகம் வழமைக்கு மாறாக மேலும் சிவத்திருந்தது.

போர்வையை இன்னமும் விலக்கிய பொழுது அவள் இன்னொரு ஆடவனுடன் இரவைக் கழித்திருக்கின்றாள் என்பது ஊர்ஜிதமானது.

“கட்ரீனா”

அவளை உலுக்கினான்.

“ஹாய். . .டார்லிங். . .யூர் ஆர் சோ சுவீற். . .சக்தி” என்றபடி அவளின் கை அவனை அரவணைத்தது.

“கட்ரீனா வட் ஹப்பிண்ட்”

சக்தி முதல் தடவையாக தனது குரலை உயர்த்திய பொழுது கட்ரீனா அதிர்ந்து போனாள்.

சக்தியின் முகத்தை இந்த விதமாக அவள் என்றும் பார்த்திருக்கவில்லை.

“யாரவன்?”

கட்ரீனா மீண்டும் அதிர்ந்து போனாள்.

அதன் பின் ஆயிரம் வாக்குவாதங்கள். . . அழுகைகள். .நிஜாயங்கள். . .மறுப்புகள். . .மறுதலிப்புகள்!

சக்திவேல் அசையவேயில்லை.

நான் பிழை விடவில்லை என்பது அவளின் வாதம்.

நீ எனக்கு துரோகம் செய்து விட்டாய் என்பது எதிர்வாதம். அடுத்த பன்னிரண்டு மணித்தியாலங்களுக்குள் பன்னிரண்டு வருட உறவு, நட்பு, தாம்பத்தியம் அனைத்தும் முடிவுக்கு வந்து விட்டது.

வாழ்க்கை இருவரையும் இரு திசைகளுக்கு கூட்டிச் சென்றது.

*

“இப்பதான் பிள்ளையை பிடிச்ச சனி விட்டிருக்குது” என்றபடி சக்திவேலின் தாய் ஏழாலையில் பார்த்த சம்மந்தம் நல்ல சாதகத்துடனும் சீதனத்துடன் பொருந்தி வர திருமணம் சிங்கப்பூரில் இனிதே நிறைவேறியது.

அடுத்த ஆறு மாதத்தினிடையே அமெரிக்கா விசாவும் வர சத்திவேலின் இல்லற வாழ்க்கை தமிழ் சாப்பாடு..தமிழரின் விழாக்கள்..கோயில்கள் இலங்கை மரக்கறிக் கடைகள் என புதுப்பாதையில் பயணம் செய்யத் தொடங்கியது.

இடைக்கிடை கட்ரீனாவின் நினைவுகளும் வராமல் இல்லை.

இடையில் ஒருநாள் சுப்பர்மாக்கற் ஒன்றில் கட்ரீனாவையும் அவளது புதுக்காதலனையும் சக்திவேல் தனது மனைவி சகிதம் சந்தித் பொழுது கட்ரீனா கோப்பி பாருக்கு அழைத்து அவர்களுடன் அமர்ந்து கோப்பி அருந்தி விட்டுச் சென்றாள்.

அப்பொழுது கட்ரீனா கர்ப்பமாக வேறு இருந்தாள். காதலன் ஆப்கானிஸ்தானில் போர் வீரனாக இருக்கின்றானாம்.

வீடு திருப்பிக் கொண்டு இருக்கும் பொழுது கட்ரீனா பற்றிய இயல்பாக மனைவியின் கேள்விகள் சக்திவேலின் அடிமனதை குழப்பி விட சின்னதாய் ஆரம்பித்த வாக்குவாதம் பெருத்துக் கொண்டு செல்ல மோட்டார் விரைவுப் பாதையின் பாரிய வளையில் கார் தனது கட்டுப்பாட்டை இழந்தது.

சக்திவேல் மீண்டும் தனி மரமானான்.

ஏழாலையிப் பெண்ணின் வாழ்வும் அமெரிக்காவில் அகால மரணம் என செய்தித்தாள்களின் பக்கங்களை நிரப்பியபடி முடிந்தது.

*

**ஆ**ண்டு வளையங்களை நிர்ணயிக்கும் கால மாற்றங்கள் அமெரிக்காவில் விரைவாக ஓடியது.

பொஸ்ரனுக்கும் நியூயோர்க்குக்கும் இடையில் ஓடும் புகையிரதம் போல சக்திவேலின் வாழ்வுக்கும் வேலைக்கும் வீட்டுக்கும் இடையே ஓடிக் கொண்டு இருந்தது.

கட்ரீனாவின் நினைவு மட்டும் வந்து போய்க் கொண்டு இருப்பதை அவனால் தவிக்க முடியவில்லை.

ஒரு இலைதளிர் கால விடுமுறையின் ஒரு மாலைப் பொழுதில் கட்ரீனாவை அவளின் ஐந்து வயதுப் பையனுடன் ஆற்றங்கரையில் சந்தித்தான்.

தாயும் பிள்ளையும் ஆற்றில் நீந்திக் கொண்டிருக்கும் அன்னங்களுக்கு பாணைப் பிய்த்துப் போட்டுக் கொண்டு நின்றார்கள்.

சக்திவேல் எட்டவாக நின்று பார்த்துக் கொண்டிருப்பதை கண்டு விட்டு கட்ரீனாகவே மகனுடன் வந்து மகனுக்கு சக்திவேலை அறிமுகப்படுத்தினாள் தன் பழைய காதலன் என.

“அப்பா எங்கே?” எனக் கேட்ட பொழுது “ஹீ டெட் இன் ஆப்ஸ்கானிஸ்தான்” என பிஞ்சுக்குரல் சொன்னது.

சக்திவேலுக்கு வலித்தது.

பின்பு இருவரும் கோப்பி பாருக்குள் அமர்ந்து கொண்டு அளவளாவிக் கொண்டிருக்க கதரினின் மகன் ஊஞ்சலில் ஆடிக் கொண்டு இருந்தான்.

வாழ்வின் விநோதத்தை வியந்தபடி இருவருமே பழைய நண்பர்கள் போல கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

*

அந்தச் சந்திப்பிற்கு பின் இப்பொழுது இந்த கிறிஸ்மஸ் அழைப்பு வந்திருந்தது.

தனிமை தனிமையை தேடுது போலும். . .. சக்திவேல் எண்ணிக் கொண்டான்.

கதரினின் மகனுக்கு அழகிய ஒரு கிறிஸ்மஸ்பரிசை வாங்கி, சிவத்த கடுதாசியால் சுற்றியெடுத்துக் கொண்டு போய் வாசல் மணியை அழுத்தினான்.

கதரின் பத்து வருடங்களுக்கு முன் அவர்களது முப்பதாவது பிறந்தநாளுக்கு அணிந்திருந்த அதே சட்டையுடன் நின்றிருந்தாள். கவர்ச்சி என்பது ஒரு துளியும் குறைந்திருக்கவில்லை.

பதமாக வாட்டிய வாத்தும் சில்லி நாட்டின் சிவத்த வைனும் கிறிஸ்மஸ் உணவை பிரமாதப்படுத்தியது.

கதரினின் மகன் ரீ. வி. யில் மிஸ்டர் பீனுடன் ஒன்றிப் போய் கெக்கட்டும் விட்டுக் கொண்டு இருந்தான்.

சாப்பிட்ட பின் கதரின் இருவருக்குமாய் கோப்பியும் பெப்பமென்ற் சொக்கலட்டும் எடுத்து வந்தாள்.

கோப்பியைக் குடித்தவாறே, "வை டிட் யு இன்வைற் மீ" சக்திவேல் மனதின் அடியில் இந்த இரண்டு வாரமாய் கிடந்த கேள்வியை எடுத்து முன் வைத்தான்.

"நத்திங் ஸ்பெசல். . ."

"நோ..யு ரெல்"

"எயிற்றீன் இயரிலை இருந்து தேர்ட்டி வரை உன்னோடைதான் கிறிஸ்மஸ் கொண்டாடினான். . .பிறகு கிறிஸ்தோபர். . .லாஸ்ற் இயர் எதுவுமே செய்யவில்லை. . . இந்த வருசம் உன்னைக் கூப்பிடுவம் என நினைச்சன். எனக்கு தெரியும் நீ தனிய என்று"

கிறிஸ்மஸ் இரவுகளில் அவளுடன் சுகித்திருந்த இரவுகள் இப்பொழுதும் சக்திவேலின் கண்களுக்குள் தெரிந்தது.

வெளியே இன்னமும் வெளிச்சம் மங்கிய வர கதரினின் கைகளை சக்திவேல் பற்றினான்.

அதிர்ச்சியடைந்தவளாக கைகளைத் தட்டிவிட கோப்பிக் கப் சீமெந்து தரையில் விழுந்து உடைந்தது.

"கட்ரீனா ஐ ஆம் யுவர் சக்தி"

"இப்போ இல்லை"

"ஏன் இனி ஒரு தரம் நாங்கள் சேர்ந்து வாழக்கூடாது?"

“ருவல்வ் இயர்ஸ் . . .வாழ்ந்து என்ன பண்ணினாய். . . நீ என்னை நம்பேல்லை. . .எனக்கே தெரியாது யார் அந்த இருட்டிலை என்னேடை படுத்தது எண்டு. நீ எண்டு தான் நான் நினைச்சது. . .பட். . .நீ அசல் சிறிலங்கனாய் தான் என்னைப் பார்த்தாய். . .செக்ஸ்க்கு அலையுற ஒருத்தியாய்த் தானே என்னை நீ பார்த்தாய். . .ஆனால். . . கிறிஸ்தோபர். . .கீ லிவ்ட் போர் மீ, அண்ட் டெட் இன் ஏசியா. . .இன் யுவர் ஏசியா..”,

ஒரு தரம் மூச்சை விட்டுவிட்டு ஒரு சிகரட்டைப் பற்றிய படி தொடர்ந்தாள், “யு கனநொற் லிவ் வித் எ அமெரிக்கன் லேடி. பைன்ட் எ பியூட்டிபுல் தமிழ் கேள் புறம் ஜவ்னா”

அதற்குப் பின் சக்திவேல் எதுவுமே பேசவில்லை.

(Aru1960@gmail.com)

# கணங்கள்

## முருகபூபதி

### அவுஸ்திரேலியா



அண்ணாவின் ஆதரவு இல்லாமல் நானோ மகனோ அவுஸ்திரேலியாவுக்கு வந்திருக்கமாட்டோம். நானும் மகனும் இங்குவருவது முதலில் மச்சாளுக்கு விருப்பமில்லை என்பதை அண்ணாதான் ஒருநாள், மகனை அந்தப்பாடசாலையில் சேர்க்க அழைத்துப்போனபோது சொன்னார். "அவள் புருஷனைப்பறிகொடுத்திட்டு பிள்ளையோட தனிச்சுப்போனாள். 215 என்று ஒரு விஸா திட்டம் இருக்கு. அதன்மூலம் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இரத்த உறவினரை இங்கே அழைக்கலாம். அதுதான் பத்மாவையும் மகன் நிர்மலனையும் அழைக்கப்போறன்." என்று அவாவுக்குச்சொன்னன்

மகனை பாடசாலையில் சேர்ப்பதற்குச்சென்றபோது மச்சாள் வேலைக்குப்போயிருந்தா. அதனால் அண்ணாவால் சற்று சுதந்திரமாக அன்று பேசமுடிந்தது.

“ஏன்... அண்ணா நாங்க வாரது மச்சாளுக்கு விருப்பமில்லையா?”

“அவவுக்கு தன்ர தம்பியை இந்த 215 விஸாவில் இங்கே அழைக்க விருப்பம் இருந்தது. ஆனால் அவன்ரபோக்கு எனக்குப்பிடிக்கயில்லை. உனக்குத்தெரியும்தானே...? ஊர்மேயும் கழுதை. ஒழுங்காக படிக்கவும் இல்லை. இயக்கத்துக்குப்போய் பிழைசெய்து பங்கருக்குள்ள போட்டான்கள். பிறகு எப்படியோ வெளிய வந்திட்டான்.”

அண்ணாவுக்கு அவன் இயக்கத்துக்குப்போனதும் வெளியே வந்ததும் மாத்திரம்தான் தெரியும். ஆனால் என்ரை அவர் ஆமிக்காரரால் இழுத்துக்கொண்டுபோனது அவனாலதான் என்பது அண்ணாவுக்குத்தெரியாது. அந்தக்கதையளை நான் அண்ணாவுக்கோ மச்சாளுக்கோ சொல்லவும் இல்லை. தன்னாலதான் அவரை ஆமி பிடிச்சுக்கொண்டு போனவங்கள் என்ற குற்ற உணர்வு மச்சாளின்ர தம்பிக்கு இருந்தது. அவர் காணாமல் போனபிறகு அவன்தான் உதவியாக இருந்தான். கொழும்புக்கு அவுஸ்திரேலியா எம்பஸிக்கெல்லாம் அவன்தான் என்னையும் மகனையும் கூட்டிக்கொண்டுபோனான்.

“அண்ணா நீங்கள் அவனையும் இங்கே அழைக்க ஸ்பொன்சர் செய்திருக்கலாம்” என்று மாத்திரம் சொன்னேன்.

மச்சாளும் அண்ணாவும் அவர்களின் பிள்ளைகளும் வேலைக்கும் ஸ்கூலுக்கும் சென்றதும் அந்த வீட்டில் எனக்குத்தான் வேலை அதிகம். ஆரம்பத்தில் நானும் மகனும் வந்த புதிதில் முகத்தை இரண்டு முழத்துக்கு நீட்டிக்கொண்டிருந்த மச்சாள், பிறகு படிப்படியாக மாறிவிட்டா. நான் வந்தது அவவுக்கு பெரிய உதவி எண்டு வீட்டுக்கு வருபவர்களிடமெல்லாம் சொல்லிப்பூரிப்பா.

அவாவுக்கு ஒரு சம்பளமில்லாத வேலைக்காரி கிடைத்திருப்பதனால் வந்த பூரிப்பு.

ஆறுமாதங்கள் அண்ணாவின் வீட்டிலிருந்தோம். கிட்டச்சொந்தம் முட்டப்பகை என்பார்களே. அதனால் அண்ணாவே மகனுடைய பாடசாலைக்குச் சமீபமாக ஒரு இரண்டறைகள் கொண்ட ஒரு வீட்டை வாடகைக்கு ஒழுங்குசெய்துகொடுத்தார்.

நான் சொல்லப்போகும் கதைக்கு இனி அண்ணா மச்சாள் குடும்பம் அவசியமில்லை என்பதனால் இத்துடன் நிறுத்திக்கொள்கின்றேன்.

*

மகன் செல்லும் பாடசாலையில் பல இனத்துப்பிள்ளைகளும் படிக்கிறார்கள். எங்கட நாட்டிலதான் தமிழ்ப்பாடசாலை, சிங்களப்பாடசாலை, முஸ்லிம் பாடசாலை என்ற வேறுபாடுகள். ஆனால் இங்கே.. பலநாடுகளிலிருந்தும் இங்கு வந்துகுடியேறிய பல இனத்துப்பிள்ளைகளும் ஒரே பாடசாலையில் படிக்க முடிகிறது. இரண்டாவது பாடமாக ஏதாவது ஒரு மொழியை பிள்ளைகள் படிக்கக்கூடியதாக இருக்கிறது.

மகன் ஒருநாள் "அம்மா ஒருநாளைக்கு தோசை சுட்டுத்தாங்கம்மா" எனக்கேட்டான். அண்ணாவீட்டில் எப்படியும் வாரத்தில் இரண்டுதடவையாவது தோசைக்காக உளுந்தும் அரிசியும் ஊறப்போட்டு மிக்ஸியில் அறைத்து ஒரு தேக்கரண்டி ஈஸ்ட்டும் போட்டு பிசைந்து புளிக்கவைத்து அண்ணா குடும்பத்துக்கும் மகனுக்கும் தோசையும் சட்னியும் சாம்பாரும் செய்துகொடுத்துவிடுவேன். ஆனால் இந்த வீட்டுக்கு வந்த பிறகு ஒரு மிக்ஸி எனக்கும் மகனுக்காகவும் வாங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அடுத்தவாரம்.... அடுத்தவாரம் என்று நாட்களை கடத்திவிட்டேன்.

ஒருநாள், "ஏனடா திடீரென தோசை கேட்கிறாய்?" எனக்கேட்டேன்.

"பாணும் இடியப்பமும் புட்டும் நூடில்ஸும் சாப்பிட்டு சாப்பிட்டு அழுத்துப்போச்சம்மா. என்னோட படிக்கிற சுகத்தைப்பற்றி உங்களுக்கு சொல்லியிருக்கிறன்தானே. அவனுக்கு தோசை சாப்பிட விருப்பம் அம்மா" என்றான்.

நான் சற்று யோசித்தேன். சுகத். சிங்களப்பெயராக இருக்கிறதே.

“என்ன... உன்ர ஸ்கூல்ல சிங்களப்பெடியலும் படிக்கிறாங்களா?”

“ஓம் அம்மா. சுகத் என்ர நல்ல ஃபிரண்ட். ஒரே கிளாஸ்தான். நல்லா பெட்பண்ணுவான். அவனுக்கும் என்னைப்போல கிரிக்கட்லதான் விருப்பம்.”

சென்றலிங் (உதவிவழங்கும் நிறுவனம்) அடுத்தவாரம் காசு தந்தபோது ஒரு மிக்ஸியை வாங்கி விட்டேன். பாடசாலையால் வீடு திரும்பிய மகனுக்கு அதனைக்காட்டியபோது துள்ளிக்குதித்தான். என்னை கட்டி அணைத்து கன்னத்தில் முத்தம்கொடுத்தான்.

அவனுக்குத்தெரியாமல் கண்களை துடைத்துக்கொண்டேன். இந்தக்காட்சிகளைப்பார்க்க அவருக்குத்தான் பலன் இல்லாமல்போய்விட்டது. பாவிகள் எங்கே கொண்டுபோய்.....?காணாமல்போனவர்களின் பட்டியலில் அவரும் சேர்ந்து பல ஆண்டுகளாகிவிட்டன. இருக்கிறாரா இல்லையா என்பதும் தெரியாமல் வாழ்வது எவ்வளவு பெரிய கொடுமை. அவர் காணாமல் போன தினம்தான் எனக்கு அவருக்கான திவசநாள்.

அவரை விசாரிப்பதற்காக கூட்டிச்செல்லும்போது மகனுக்கு ஐந்துவயதிருக்கும் பலநாட்கள் பலமாதங்கள் வருடங்கள் கேட்டுக்கொண்டிருந்த மகன், நான் அழுது கண்ணீர் வடிப்பேன் என்பதனால் கேட்பதேயில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு வந்த பிறகு அவரை பெரும்பாலும் மறந்ததுபோலத்தான் அவன் படிப்பும் கிரிக்கட்டும் தொலைக்காட்சியுமாக இருக்கிறான். அவரை அழைத்துச்சென்ற தினம் வரும்போது விரதம் இருந்து சுவாமி அறையிலிருக்கும் அவரது படத்துக்கு படையல் போட்டு மகன் வரும்வரையில் காத்திருந்து அவனையும் படத்துக்கு முன்னால் நின்று வணங்கச்செய்துவிட்டுத்தான் அந்தப்படையலை இருவரும் சாப்பிடுவோம். அன்று வடை, பாயாசம் எல்லாம் செய்வேன். வருடம் ஒருமுறைவரும் திவசநாள்.

ஒரு திவசநாளில்....“ அம்மா இன்றைக்கும் அழுதீங்களா...?” மகன் கேட்டான்.

“அழாமல் இருக்கமுடியுமா தம்பி?”

“ஏனம்மா இப்படியே அப்பாவை நினைச்சுக்கொண்டே இருக்கிறீங்க...நீங்களும் இன்னுமொரு கலியாணம் செய்து எனக்கு ஒரு அப்பாவைத்தரலம்தானே...?”

நான் அதிர்ந்துபோனேன். அவனது கன்னத்தில் ஒரு அறைவிட்டேன்.

“ஐயோ அம்மா...” அவன் கதறிக்கொண்டு அறைக்குள் ஓடி கதவை சாத்திக்கொண்டான்.

என்றைக்குமே அவன் அப்படிப் பேசியதில்லை. எப்படி இந்த மாற்றம் அவனுக்குள் நிகழ்ந்தது.

சிறிதுநேரத்துக்குப்பின்னர் அறைக்குள் எட்டிப்பார்த்தேன். அவன் கட்டிலில் உறக்கத்திலிருந்தான். அருகே சென்று அமர்ந்து அவனது கேசங்களை தடவி வருடினேன். அவன் அரைஉறக்கத்திலிருந்து கோபத்துடன் எனது கையை தட்டிவிட்டான்.

கண்களை மூடியவாறே “இங்கே பிள்ளைகளுக்கு அடிக்கக்கூடாது தெரியுமா? வேணுமென்டால் பொலிஸக்கும் சொல்லலாம்”

அவன் என்னை மறுமணம் செய்யச் சொன்னதன் அதிர்ச்சி குறைந்து பொலிஸையும் அழைக்கலாம் என்றதும் அதிர்ச்சி கூடியது.

“அம்மாவிட்ட பேசுற பேச்சா இது. இனி நான் உன்னோட பேசமாட்டன். நீயே பொலிஸைக்கூப்பிட்டு சொல்லு.” நான் கோபத்துடன் எழுந்துவந்தேன்.

சோபாவில் சாய்ந்துகொண்டு அழுதேன். அப்படியே உறங்கிப்போனேன்.

சற்று நேரத்தில் மகன் அருகே வந்து அமர்ந்தது தெரிந்தது.

“அம்மா வெரி சொறி. நான் அப்படி பேசியிருக்கக்கூடாதுதான். எங்கட ஸ்கூல்ல சில வெள்ளைக்கார பெடியன்களின் அம்மாமார் தங்கட ஹஸ்பண்டை விட்டுப்பிரிந்து போய்ஃபிரண்ட் வைச்சிருக்கிறதா கேள்விப்படுறன். சில பெடியன்களுக்கு ஸ்டெப் ஃபாதர், ஸ்டெப் மதர் இருக்கிறாங்க.”

“அவர்கள் அப்படி இருக்கிறார்கள் என்பதற்காக நாங்களும் அப்படி வாழமுடியுமா தம்பி...?”

“அம்மா உங்களுக்கு ஒரு ஜோக் சொல்லட்டுமா?” எனக்கு அருகில் நெருக்கமாக அமர்ந்துகொண்டான்.

“சரி...சொல்லு...”

“My children and your children are playing with our children”- என்று ஒரு தகப்பன் தாயிடம் சொன்னவராம். எப்படியிருக்கு அம்மா....?” அவன் சொல்லிவிட்டு அட்டகாசமாக சிரித்தான். நானும் சிரித்தேன். பல ஆண்டுகளுக்குப்பின்பு அப்போதுதான் நானும் பலமாகச்சிரித்தேன்.

நானும் இந்த நாட்டில் மகன் ஊடாக தெரிந்து கொள்ள வேண்டியன பல இருப்பதாக உணர்ந்தேன்.

*

**அ**ன்று வெள்ளிக்கிழமை. காலையில் மகன் பாடசாலைக்கு புறப்படும்போது, “தம்பி... இண்டைக்கு தோசைக்கு போட்டிருக்கிறன். இரவே அரைச்சும் வைச்சிட்டன். இரவைக்கு உன்ற ஃபிரண்ட் சுகத்தையும் அவன்ர அப்பா அம்மாவையும் கூட்டிக்கொண்டுவா. இரவுக்கு அவுங்களுக்கு இங்கதான் டின்னர் எண்டு சொல்லு.”

“நல்ல அம்மா.” மகன் என்னை கட்டி அணைத்து முத்தமிட்டான். இதுபோன்ற சந்தர்ப்பங்களே அவனது குதுகலமான பொழுதுகள்.

" அம்மா... சுகத் மட்டும்தான் வருவான். அவன்ர அம்மாவுக்கு பின்னேர வேலை. ஒரு ஃபக்டரியில் வேலைசெய்யிறா என்று ஒருநாள் சுகத் எனக்கு சொல்லியிருக்கிறான்."

" அப்படியென்டால் அவன்ர அப்பா , சகோதரங்கள்..." மகன் சில கணங்கள் மௌனமாக நின்றான்.

"என்ன பேசாமல் நிக்கிற....சொல்லு..." அவனது தோளில் தட்டிக்கேட்டேன்.

"அவனுக்கும் அப்பா இல்லை..." மகன் தரையைப்பார்த்தவாறு சொன்னான்.

நான் திடுக்கிட்டேன்.

"ஏன்.. என்ன நடந்தது?" ஆவலுடனும் எதிர்பார்ப்புடனும்தான் கேட்டேனா என்பது தெரியவில்லை.

"மற்றவர்களின் தனிப்பட்ட விடயங்களை கேட்பது நாகரீகம் இல்லையம்மா." எனச்சொல்லிவிட்டு மகன் பாடசாலைக்குப் புறப்பட்டான்.

நான் துணுக்குற்றேன். நான் இன்னமும் எனது இலங்கையில் ஊரிலிருப்பதும் மகன் அவுஸ்திரேலியனாக மாறிவருவதும் புலனாகியது. ஆம் நான் மகனிடம் கற்றுக்கொள்ள பல விடயங்கள் இருக்கின்றன.

*

**மா**லை ஐந்து மணியளவில் மகன் தனது சைக்கிளையும் கிரிக்கட் பெட்டையும் எடுத்துக்கொண்டு வெளியே செல்லப்புறப்படும்போது, "தம்பி வரும்போது சுகத்தையும் கூட்டிக்கொண்டு வா" என்றேன்.

"ஓம் அம்மா. சுகத் தாயிடம் ஏற்கனவே சொல்லிவிட்டான். அதுதான் இன்றைக்கு எங்கட பிளான். வரும்போது அவன் வீட்டுப்பாடங்களையும் எடுத்துவருவான். இருவரும் ஒன்றாக இருந்து இங்கே படித்துவிட்டு தோசையும் சாப்பிட்டு தன்ர தாய்க்கும் உங்களிடமிருந்து தோசை, சட்னி, சாம்பார் வாங்கிப்போவான். எல்லாம் பிளான் போட்டுவைச்சிருக்கிறன்."

மகன் இப்படிச்சொன்னதும் எனக்கு அவர்தான் நினைவுக்கு வந்தார். அவரும் எதனையும் முன்கூட்டியே திட்டம் வரைந்துதான் செயல்படுவார். அந்த ஜீன்ஸ் மகனிடமும் இருப்பது எனக்குப் பெருமைதான். அப்பனுக்குத்தப்பாமல் பிறந்த பிள்ளை என்பது இதனைத்தானா? எனது மனஉளைச்சல் கண்ணீராக வடிந்தது.

மகன் சொன்னபடி சுகத்தையும் கூட்டிவந்தான். அன்றுதான் அவனையும் நான் பார்த்தேன். மகனுடைய வயதுதான் இருக்கும் கண்களில் துருதுருப்பு. சிவந்தமேனி. தாய் அழகானவளாக இருக்கவேண்டும். வீட்டுக்குள் வந்ததுமே "அம்மே.." எனச்சொல்லி என்னைக்கட்டிக்கொண்டான். அவனுக்கும் அவுஸ்திரேலியா நாகரீகம் தொற்றியிருப்பதை உணர்ந்தேன்.

மகன் அவனுக்கு வீட்டைச்சுற்றிக்காண்பித்தான். சுவாமி அறையில் அவரின் படங்களையும் காட்டி இதுதான் என்ர அப்பா என்றான். இலங்கைப்போரையும் அப்பா காணாமல்போனதையும் தனக்குக்தெரிந்த தகவல்களுடன் ஆங்கிலத்தில் சுகத்துக்கு சொல்லிக்கொண்டிருந்தான்.

நான் இருவருக்கும் தோடம்பழச்சாறு கொடுத்தேன். பேசிக்கொண்டிருந்தவர்கள் முன் ஹோலுக்கு வந்து வீட்டுப்பாடங்களை எடுத்துச்செய்யத்தொடங்கிவிட்டனர்.

அண்ணா குடும்பத்தினரிடமிருந்து சற்றுத்தள்ளி தொலைவுக்கு வந்த கவலை, இந்த சுகத்தைக்கண்டதும் காணாமல்போய்விட்டது. இனி மகனுக்காக நான் அதிகம் கவலைப்படத்தேவையில்லை. அவனுக்கு விளையாட... ஒன்றாக அமர்ந்து படிக்க... நல்ல சிநேகிதன் கிடைத்துவிட்டான். சுகத் வீட்டுக்குள் நுழைந்ததுமே...என்னை "அம்மே..." என விளித்து கட்டிக்கொண்டதன் மூலம் எனக்கு இந்த நாட்டில் இன்னுமொரு பிள்ளை கிடைத்திருக்கிறான். எனது கண்கள் பனித்தன.

நான் சமையலறையில் வேலையில் மூழ்கினேன். சட்ணியும் சாம்பாரும் வைத்தேன். விசேடமாக மசால தோசைக்காக உருளைக்கிழங்கை அவித்து கரட்டைச்சீவி வெங்காயம் பச்சை மிளகாய் நறுக்கி எண்ணெயில் வதக்கி மசாலாக்கறியும் சமைத்தேன்.

ஹோலிலிருந்து படித்துக்கொண்டிருந்த பிள்ளைகள் இருவருக்கும் இந்த மசாலா மணம் மூக்கைத்துளைத்திருக்கவேண்டும்.

எழுந்துவந்து நான் செய்வதை பார்த்தனர்.

"அன்ரி... எங்கட அம்மாவை ஒரு நாளைக்கு கூட்டிவாரன் அவாவுக்கும் தோசை சுடுவது எப்படி என்று சொல்லிக்கொடுங்கோ..." என்று ஆங்கிலத்தில் சொன்னான் சுகத்.

"மகனே... என்னையும் அம்மே என்றே கூப்பிடு..." எனச்சொல்லி அவனது தலையை தடவினேன்.

அவன், "தேங்ஸ்" என்றான்.

மேசையை ஒழுங்கு செய்துவிட்டு தட்டுகளும் எடுத்துவைத்து பிள்ளைகளை சாப்பிட அழைத்தேன்.

குளியலறைக்குச்சென்று கால் முகம் கழுவிக்கொண்டு வந்தனர். மகன் சுகத்துக்கு தன்னுடைய துவைத்து மடித்துவைத்த சிறிய டவல் ஒன்றை எடுத்துக்கொடுத்தான்.

மகன் சுவாமி அறைக்குச்சென்று அப்பாவின் படத்தையும் இதர சுவாமி படங்களையும் வணங்கிவிட்டுவந்தான்.

அவனது நெற்றியில் திருநிற்றுக்குறி தென்பட்டது. சுகத் அதனை விநோதமாகப்பார்த்தான்.

இருவரும் மேசையின் முன்னால் அமரந்தனர்.

நான் தோசையை பறிமாறியபோது... "நல்ல வாசம்" என்றான் சுகத்.

"சரி.. சாப்பிடுங்கள். சுகத் வெட்கப்படாமல் சாப்பிடவேண்டும். தம்பி சுகத்துக்கு எடுத்துக்கொடு... நான் போய் முகம்கழுவிக்கொண்டு வாரன் என்று திரும்பியபோதுதான் நான் சுகத்தை கவனித்தேன்.

அவனுக்கு முன்னால் நான் பரிமாறிய மசாலாதோசை, சட்ணி, சாம்பார் தட்டு. அவன் தட்டில் கைவையாமல் கண்களை இறுக மூடி வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தான்.

சில கணங்களில் கண்களைத்திறந்து “ சரி... சாப்பிடுவோம்” என்றான். எனக்கும் மகனுக்கும் அவனது அந்த மௌன அஞ் சலி வினோதமாக இருந்தது.

“சுகத் இந்த மௌனம் அதுவும் சாப்பிட முன்னர் இந்த மௌனம் கடவுளுக்கானது என்பது நல்லதொரு பண்பாடு” என்றேன்.

“அம்மே இது கடவுளுக்கான மௌனம் இல்லை. எனது அப்பாவுக்கானது. எனது அப்பா ஆர்மியில் பிரிகேடியராக இருந்தவர். ஒரு தற்கொலைத்தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரது உடலைக்கூட்டி அள்ளியதாக அம்மே சொல்லியிருக்கிறாங்க. அப்போது எனக்கு இரண்டுவயதிருக்கும். அப்பாவின் முகத்தை அவரது படங்களில்தான் பார்த்திருக்கிறேன்.”

நான் உறைந்துபோய் நின்றேன். அவர் காணமல்போன நாளன்றும் நான் இப்படித்தான் நின்றேன்.

(letchumananm@gmail.com)

# திருமணம்

பவதாரிணி
சுவிற்ஸ்லாந்து



பாரதிக்கு இன்று அதிகாலையில் இருந்து படபடப்புக் குறையவில்லை.

சுவிஸ்நாட்டிற்கு வந்து முதன்முதலில் கலந்து கொள்ளும் சுவிஸ்நாட்டவரின் திருமணம்.

இங்கு வந்த இந்த நான்கு மாதங்களிலும் வந்த பதினாறு சனி ஞாயிறுகளில் எல்லாம் ஏதோ ஒரு தமிழரின் விசேடம் அல்லது விழா நடந்து கொண்டு இருந்தது. சிலநாட்களில் இரண்டு அல்லது மூன்று விழாக்களுக்கும் போக வேண்டும்.

இலங்கையில் இருந்து கொண்டு வந்த அத்தனை சேலைகளும் கட்டி முடித்தாயிற்று. இங்கிலாந்தில் இருந்த தமக்கையார் சொல்லிருந்தார், “கவலைப்படாதே..நான் எனது சேலைகளை அனுப்புகின்றேன். . .நீ உனது சேலைகளை இங்கே அனுப்பு” என்று.

மேலும், "நான் சம்மர் விடுமுறைக்கு வரும் பொழுது எனது நகைகளைக் கொண்டு வந்து தருகின்றேன். நீ உனதை தா. இப்படி மாறி மாறிப் போடாவிட்டால் இங்கு சமாளிக்க முடியாது" என தமக்கையார் சொன்ன பொழுது பாரதியால் இந்த உலகத்தை விளங்கவே முடியவில்லை.

பாரதிக்கு தனது தாயினதும் சிறிய தாயினதும் நினைவுகள் வந்தது. . .இருவருக்கும் தமது தமது தாலிக்கொடிகள் மட்டும் இருந்தாலும் ஒருவரிடம் நல்ல கணமான ஒரு சங்கிலி இருந்தது. மற்றவரிடம் ஒரு சோடிக்காப்பு இருந்தது. இருவரும் சேர்ந்து எந்த கோயில் திருவிழாக்களுக்கோ அல்லது கோயிலுக்கோ போவதில்லை. காரணம் இந்த நகைகள் தான். ஒருவருடையதை மற்றவர் மாறிப்போட்டுக் கொண்டு போக வேண்டும். தாய் தாலிகட்டும் நேரத்திற்குப் போனால் சிறியதாயார் மாப்பிள்ளை பெண்பிள்ளை பார்க்கப் போவார்கள். அவ்வாறே சிறியதாய் தேருக்குப் போனால் தாய் தேரால் சுவாமி இறங்கும் பொழுது அல்லது அடுத்தநாள் தீர்த்தத்துக்குப் போவார். இது பாரதிக்கு சின்ன வயதில் இருந்தே எரிச்சல் ஊட்டிய செயலாய் இருந்து வந்தது. இப்பொழுது விரும்பியோ விரும்பாமலோ இந் வலையுள் தான் மாட்டுப்பட்டது போலிருந்தது.

இந்த விழாக்களில் அதிகம் பேரை யாருக்கும் யாரையும் தெரிவதில்லை.

போகும் பொழுது ஒரு சிறிய பலகாரப்பெட்டி, பின் உணவு விருந்து, பின் வரிசையில் நின்று படப்பிடிப்பு, கையில் உள்ள என்பலப்பை கை அளித்தல், அவர்கள் தரும் ஒரு குங்குமச் சிமிழோ அல்லது குத்துவிளக்கோ அதனை வேண்டிக் கொண்டு வீட்டை வர அன்றைய பொழுது போய்விடும். அவ்வாறே அடுத்த நாளும். போய்விடும்.

ஒவ்வொரு வெள்ளி வரும் பொழுதும், "நல்ல விடுமுறை தினமாக அமையட்டும். ஓய்வையும் ஆரோக்கியத்தை கொடுக்கட்டும்" என வேலையிடத்தில் வாழ்த்து சொல்லிவிட்டு தங்கள் ஓய்வெடுக்கும் விடுதிக்குச் செல்லும் பொழுது பாரதிக்கு மனம் வேதனைப்படும். இனி அடுத்த திங்கள் வேலையிடத்துக்கு வரும் பொழுதுதான் அவளுக்கு அவர்கள் கூறிய ஓய்வின் அர்த்தம் புரியும்.

“மாலை முழுவதும் நான் நாயுடன் நடந்து திரிந்தேன்”.

“புல்லை வெட்டி வளவைத் துப்பரவு செய்து விட்டு மாலை இறைச்சி வாட்டி குடும்பத்துடன் இருந்து சாப்பிட்டோம்”

“இந்தக் கிழமை நல்ல ஒரு நாவல் வாசித்தேன்”

“செஞ்சிலுவைச் சங்கத்திற்காக வீடு வீடாக சென்று பணம் வசூலித்தேன்” என ஒவ்வொருவரும் சொல்லும் பொழுதும் பாரதி ஒவ்வொரு தடவையும் தான் திருமண, பிறந்த நாட்களுக்குச் செல்லுவதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாள்.

சிலவேளைகளில் வேணுமென்றே படத்திற்குப் போனோம், கடற்கரைக்குப் போனோம் என பொய் சொல்லவும் பழகிக் கொண்டாள்.

இப்படி சுற்றி வரும் செக்குமாடு போல ஒடிக்கொண்டு இருந்தவளுக்கு இந்த சுவிஸ் நாட்டவரின் திருமணத்திற்கு செல்ல இருக்கின்றோம் என்பது அவளுக்குள் வேறுபட்ட ஒரு குதூகலத்தை உருவாக்கியிருந்ததில் எந்த வியப்பும் இருக்கவில்லை.

மாப்பிள்ளை பாரதியின் கணவன் ரஞ்சித்துடன் கணக்காளராக வேலைபார்த்துக் கொண்டு இருப்பவன். ரஞ்சித் 90களின் இறுதியில் சுவீசுக்கு வந்த பொழுது தொடக்கம் நல்ல நட்பு. அந்த வகையில் அவனின் வீட்டில் நடக்கும் விசேசங்களில் எப்பொழுதும் ரஞ்சித்துக்கு அழைப்பு உண்டு.

அவ்வாறே ரஞ்சித்தும் ஏதாவது விசேடங்களுக்கு அழைத்தால் அவனும் சென்று விடுவான்.

முள்ளிவாய்க்கால் ஊர்வலத்துக்கு கூட ரஞ்சித் கேட்ட பொழுது அவனும் கூடச் சென்றான்.

மற்றவர்களுடன் சேர்ந்து அவனும் கோஷம் இட்டான். அவனின் புகைப்படங்கள் பத்திரிகைகளிளும் வந்தது. “ஈழத்தமிழருக்காக குரல் கொடுக்கும் சுவிஸ் பிரஜை” என.

“உங்கள் சுவிஸ் பிறன்ட் மிகவும் நல்லவர் போல இருக்கிறாரே”, திருமணத்திற்கு அணிவதற்காக எடுத்து வைத்த தனது கூறைச்சேலையை அயன் பண்ணிக்கேட்டே பாரதி ரஞ் ஜித்திடம் கேட்டாள்.

“உண்மையில் அவன் நல்லவன் தான். . .அவனின் திருமணத்தை வந்து பார்”

“அதிக கூட்டமாய் இருக்குமா?”

“இல்லை. . .முப்பது பேர் வரையில் வருவார்கள் எனச் சொன்னான்”

“அவ்வளவுதானே”

“ஆனால் அந்த முப்பது பேரும் அவனின் அல்லது அவனின் மனைவியின் வாழ்வில் மிக முக்கியமானவர்கள்”

“ஓ”

*

**தே**வாலயத்தின் முன் முற்றலில் அங்கும் இங்குமாக திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் தம்பதிகளாகவும் மூன்று நான்கு பேர் கூட்டமாயும் நின்று பேசிக்கொண்டு நின்றார்கள்.

அனைரும் வெளிநாட்டு நாகரீக உடுப்பில் நின்று கொண்டிருக்க பாரதி மட்டும் கூறைந்சேலையில் வந்த பொழுது அனைவரும் ஒரு தேவதையைப் பார்த்த போல் பார்த்தார்கள்.

சிறிது நேரத்தில் இரண்டு சிறுமிகள் வரவேற்புக்கு அளிக்கப்படும் வெள்ளை வைனை மெல்லிய உயரமான கிளாஸ்களில் நீட்டியபடி வந்தார்கள். ரஞ்ஜித் எடுத்துக் கொண்டான்.

பாரதி வைன் குடிப்பதில்லை எனத் தெரிந்ததும் ஓடிச் சென்று வெள்ளை வைன் நிறத்தில் அமைந்த சோடா எடுத்து வந்தார்கள்.

பாரதியும் தாங்ஸ் சொல்லி வேண்டிக் கொண்டாள்.

அடுத்த அரைமணிநேரத்துள் வெள்ளை துணிகளால் அலங்கரிக்கப்பட்டு கறுப்பு நிறமான நீளமான காரில் மாப்பிள்ளையும் பெண்ணும் வந்து இறங்கினார்கள்.

முன்னால் இரட்டைப் பிள்ளைகள் பூக்கொத்துகளுடன் "இலங்கைப் பிள்ளைகள் போல இருக்கு" பாரதியின் மனம் சொல்லிக் கொண்டது.

ரஞ்ஜித்தை திரும்பி பார்த்தாள்.

'ஆம்' என்பது போல கண்ணைச் சிமிட்டினான்.

மணப்பெண் கிட்டவாக வந்த பொழுது அவளின் வயிறு நன்கு பெரிதாக வீங்கியிருந்தது.

அடுத்தடுத்த மாதம் அவளுக்கு குழந்தை பிறக்க வேண்டும் என பாரதியின் மனம் சொன்னது.

மீண்டும் திரும்பி ரஞ்ஜித்தை திரும்பி பார்த்தாள்.

இப்பொழுதும் 'ஆம்' என்பது போல கண்ணைச் சிமிட்டினான்.

மணமக்களைத் தொடர்ந்து அனைவரும் தேவாலயத்துள் சென்றார்கள்.

அமைதியான ஒரு திருமணம்.

இது பாரதிக்கு முற்றிலும் புதிது.

பாதிரியாரின் முன்னே இருவரும் தங்களின் சம்மதத்தைச் சொன்ன பொழுதும், இருவரும் மோதிரம் மாற்றிய பொழுதும், இருவரும் முத்தமிட்டுக் கொண்ட பொழுதும் அனைவரும் தங்கள் உண்மையான மகிழ்ச்சியை கையைத் தட்டி வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

இருவரின் பெற்றோர்களின் கண்களிலும் கண்ணீர் கசிந்திருந்த்து.

திருமணமண்டபத்துள் பாரதிக்கு ஆயிரம் ஆயிரம் கேள்விகள்?

யார் அந்த இரண்டு பிள்ளைகள்? அவனின் பிள்ளைகளா? அவளின் பிள்ளைகளா? அவள் கர்ப்பமாய் இருக்கின்றாளே? கர்ப்பத்திற்கு பின்னான திருமணம் சாத்தியமா?

பல கேள்விகள் அவளைத் துளைத்துக் கொண்டு இருந்தது.

இலங்கையில் பெற்றோர் பேசிய திருமணங்கள் 'எழுத்தில்' கைகூடியபின்பு, இருவரும் சுதந்திரமாக திரிய அனுமதித்த பின்பு, சிலவேளைகளில் பெண் கற்பமாகி விட்டால் அவர்கள் திருமணத்தில் 'கன்னிக்கால் நடாமலும்', 'ஓமம் வளர்காமலும்' அது ஒரு தகுதி குறைந்த திருமணம் போல நடாத்தப்படுகையில் இந்த திருமணம் பாரதிக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

எப்பொழுது தேவாலாயத்திற்கு வெளியில் போவோம் அனைத்தையும் ரஞ்ஜித்திடம் கேட்போம் என அவள் மனம் படபடத்துக் கொண்டு இருந்தது.

திருமணம் முடிந்து மணப்பெண்ணும் மாப்பிளையும் வெளியில் வந்த பொழுது அனைவரும் அரிசியும் றோஜாப்பூவும் கொண்டு வாழ்த்தினார்கள்.

அடுத்து விருந்துபசாரம்.

லைனில் நின்று சாப்பாடு எடுப்பதும் பின் இரண்டாம் தரம் சன நெரிசலுக்குள் போகாமலும் முதல் போட்ட சாப்பாட்டுடன் எழுந்து போவதுமான சுவிஸ் தமிழர்கள் திருமணங்களில் இருந்து இது வித்தியாசமாகப்பட்டது. சிலவேளை உணவு பரிமாறினாலும் எல்லோருக்கும் எப்பொழுதும் எல்லாமே கிடைப்பதில்லை.

வரிசை வரிசையாக சுவிஸ் நாட்டு இளம் பையன்களும் பெண்களும் வந்து உணவு பரிமாறினார்கள்.

முதலில் சூப்பும் உள்ளியில் வாட்டிய பாணும். அடுத்து வாட்டிய இறைச்சியும் வெவ்வேறு மரக்கறிகளும். மூன்றாவது பழங்களும் ஐஸ்கிறிம் கலந்த டெசேட்.

வைனைக் கொண்டு வந்து அனைவரின் கிளாஸ்களிலும் நிறைத்துக் கொண்டு இருந்தார்கள்.

ஒவ்வொரு உணவுகை முடிந்த்தும் அவர்கள் குடும்பத்தில் எழுந்து நின்று சிற்றுரை நிகழ்த்தினார்கள்.

மாப்பிள்ளையின் தாயும் தந்தையும் ஆற்றிய உரையில் தமது பரம்பரையின் வாரிசுகளை தம் மருமகள் காவுவது பற்றி மிகவும் பெருமைப்பட்டார்கள். அத்துடன் அவளின் இரு பெண்பிள்ளைகளும் தங்களுக்கும் பேரப்பிள்ளைகளே என சந்தோசப்பட்டார்கள். கறுப்பு மணிகள் என குதூகலப்பட்டார்கள்.

பாரதி ரஞ்சனைத் திரும்பிப் பார்த்தாள். ‘பொறுமையாய் இரு’ பின் சொல்கின்றேன் என அவன் கண்கள் சொன்னது.

விருந்திற்கு பின் அவர்கள் நடனம் ஆரம்பமாகியது. நடுவில் மாப்பிள்ளையும் பெண்ணும் நடனமாடத் தொடங்க பின் அவர்கள் பெற்றோரும் உறவினர்களும் இணைந்து கொண்டார்கள்.

பாரதியை ரஞ்சன் அழைக்க அழைக்க அவள் கூச்சத்தில் ஒதுங்கி ஒதுங்கிச் சென்றாள்.

பின் மாப்பிள்ளையின் வயதான தந்தை வந்து அழைக்க மரியாதை காரணமாக அவளும் நடனத்தில் இணைந்து கொண்டாள்.

“ஆசிய நாட்டின் ஏஞ்சலுடன் நான் ஆடிக்கொண்டு இருக்கின்றேன்” என அவர் பெருமைபடக் கூறினார். பின் அவள் ரஞ்சனுடன் அவள் இணைந்து ஆடத் தொடங்கினாள்.

அவனின் இந்த அரவணைப்பு அவளுக்கு புதிதே. ”யார் அந்த இரு பெண்பிள்ளைகள்” மெதுவாய் காதினுள் கேட்டாள்.

“அவளுடைய குழந்தைகள் தான்”

"யார் அவற்றின் அப்பா"

"எங்கள் நாடு தான். . .பிள்ளையைக் கொடுத்துவிட்டு சிற்றிமாறி விட்டான். பக்கத்து சிற்றியில் தான் இருக்கின்றான். உரும்பிராயில் பெரிய சீதனத்துடன் திருமணம் செய்து இப்ப ஒரு பிள்ளையுடன் இருக்கின்றான்."

"உவன்களை சுட வேணும்"

"பிறகு எப்பிடி இந்த சுவிஸ்காரன். . ."

"அது தான் காதல். . . அது சாவதில்லை. . .மலர்ந்து கொண்டே இருக்கும்"

"வயிறு வைக்க முதல் கலியாணம் செய்திருக்கலாமே. . ."

"அதில் என்ன தவறு? சிலர் பிள்ளை பிறந்த பின்பு பிள்ளையின் தலைதொடுதலையும் தங்கள் திருமணத்தையும் ஒன்றாகவே செய்வார்கள்"

"அப்ப திருமணம் என்பது. . ."

"அது ஒரு ஒப்பந்தம். இந்தப் பிள்ளைக்கு நாங்கள் தான் பெற்றோர்கள் என அறிவிக்கும் சடங்கே தவிர தாலி கட்டினால் தான் நீ என்னைத் தொடலாம் என வழங்கும் அனுமதி இல்லை"

ஆரோக்கியமான மாற்றங்கள் என மனது சொல்ல, "நாங்களும் இன்னோர் திருமணம் செய்வோமா" என பாரதி ரஞ்சனின் காதினுள் கேட்டாள்.

ரஞ்சன் "என்ன?" என வினாவுவது போல கண் விழியை உயர்த்த "ஆமாம்" என்பது போல அவனது கையை பிடித்து தனது வயிற்றடியில் வைத்தாள்.

இப்பொழுது ரஞ்சன் இன்னமும் பாரதியை இறுக இணைத்துக் கொண்டு ஆடிக்கொண்டு இருந்தான்.



# யாவரும் கேளீர்...

சித்ரா ரமேஸ்
சிங்கப்பூர்

**கா**லை விடிந்ததிலிருந்து வெயில் அனலாய் தகித்தது. வேலையில் இருந்து திரும்பும் போதே ரொட்டி வாங்கிக் கொண்டு வந்து விட்டார்.

ஹுசேனுக்கு நோன்பு மாதம் தொடங்கி விட்டது. விடியற்காலையில் எழுந்து சுல்தான் பள்ளி வாசலுக்குப் போய் தொழுது விட்டு சாப்பிட்டு விட்டு வந்திருப்பார். செங் மட்டும் தான் கொண்டு வரும் ரொட்டிக்காகக் காத்திருப்பார். கொடுத்ததும் அதை பொன்னிறமாக ரோஸ்ட் செய்து காயா, வெண்ணெய் தடவி சாப்பிடும் போது அந்தச் சீனக் கிழவரின் முகத்தில் தெரியும் ஆனந்தத்தில் ஒரு சின்ன சொர்க்கம் பாலாவுக்குத் தெரியும். பாலாவுக்கும் சேர்த்து வாட்டிய ரொட்டியும் த்ரீ இன் ஒன் பாக்கெட்டிலிருந்து காபியும் தயார் செய்வார். அதிலும் அவர் சொல்லுகிற அவுல் பிராண்ட் காபி தான் வாங்கி வர வேண்டும்.

பாலாவுக்கு ராத்திரியெல்லாம் கண் முழித்த அலுப்பில் மெத்தையை விரித்து படுத்து தூங்கி விடுவார்.

ஹீசேன் பாயும் செங்கும் அறையை விட்டு கிளம்பி விடுவார்கள். செங்கால் நடக்க முடியாது. தள்ளு வண்டியை ஹுசேன் தள்ளிக் கொண்டு அவர் வழக்கமாக இருக்கும் இடத்தில் விட்டு விட்டு தன் வேலையைப் பார்க்கப் போய் விடுவார். அவர்கள் இருவரும் தினமும் அப்படி கிளம்புவதைப் பார்க்க சிறு வயதில் தான் படித்த இரு புலவர்களைப் பற்றி நினைத்துக் கொள்வார். ஒருவருக்கு கால் முடம். இன்னொருவருக்கு கண் தெரியாது. கண் தெரியாதவர் நடக்க முடியாத தன் நண்பரை தோளில் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகச் செல்வார். முடமாயிருப்பவர் கண் தெரியாதவருக்கு கண்ணாக இருப்பார். அது போல் மூவருக்கும் ஒரு உறவு. யாருமற்றத் தனிமை, ஏழ்மை இப்படி மூவரையும் இணைத்திருக்கிறது.

லொட லொட என்று சத்தம் போட்ட மேசை மின் விசிறி தாலாட்டுப் பாட கண்கள் சொருகியது. பெரிய அலை முகத்தில் அடிப்பது போல் தோன்ற எழுந்தார். வீடு இருட்டிப் போயிருந்தது. இவ்வளவு நேரமா தூங்கி விட்டோம் என்று கடிகாரத்தைப் பார்த்தார்.

இரண்டு மணிதான் ஆயிருந்தது.. வெளியில் பெரிய பிரளயம் போல் மழை கொட்டிக் கொண்டிருந்தது. அதனால் தான் வீட்டில் இந்த இருட்டு. மழையினால் சூடு தணிந்திருந்தது. வீட்டை சுத்தம் செய்து ரொம்ப நாளாகியிருக்கும். சுத்தம் செய்யலாம் என்று நினைத்தார். வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள, வேளா வேளைக்கு சமைத்துப் போட, குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஒரு பெண்! இந்தச் சாதாரண விஷயங்கள் கூட சிலருக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. சாயங்காலம் வேலைக்கு போகும் வழியில் ஏதாவது சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று உடல் சொன்னதை வயிறு கேட்கவில்லை. பசிக்கத் தொடங்கியது. இந்த மழையில் செங் நனையாமல் இருக்க வேண்டும். எம் ஆர் டி வாசலில் செங்கின் சக்கர நாற்காலியைத் தள்ளி வைக்க ஒரு மனிதன் கூடவா இல்லாமல் இருப்பான்? செங்கிற்கு பாட்டரியால் இயங்கும் ஒரு சக்கர நாற்காலி வாங்கி விட வேண்டும். யார் உதவியும் இல்லாமல் அவரால் நகர முடியும். அதற்குப் பணம் சேர வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் இந்த குடியிருப்புப் பகுதிக்கு வந்த போது அவரிடம் உதவி கேட்கலாம் என்று பக்கத்து வீட்டில் இருக்கும் ஜென்னி சொன்னாள். செங் அதை மறுத்து விட்டார்.

இப்போது எம் ஆர் டி வாசலில் தான் விற்கும் பொருட்களை யாராவது வாங்காமல் காசு கொடுத்தால் முகம் சிவந்து விடும். ஹோக்கியனில் முணுமுணுத்து மறுத்து விடுவார். நன்றாக வாழ்ந்து கெட்ட குடும்பமாக இருக்கலாம் என்று யோசித்தார். செங் தன் குடும்பத்தைப் பற்றி வாயைத் திறந்ததில்லை. ஹுசேன் தினமும் ஒரு முறையாவது நாகப்பட்டினத்தில் இருக்கும் தன் குடும்பத்தைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. போதாதற்கு பெர்லிஸ்ஸில் இருக்கும் தன் காதலியைப் பற்றி வேறு நினைத்து ஏங்கிக் கொண்டிருப்பார்.

இடியும் மின்னலுமாக மழை வலுத்தது. தெருவில் தண்ணீர் கொப்பளித்து ஓடியது. மழை நின்றதும் தண்ணீர் வடிந்து விடும். சைனா டவுன் பகுதியில் இப்பொதும் மழை பெய்தால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. செராங்கூன் சாலை முக்கில் இதைப்போல் ஒரு பெரிய மழை. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய ஒரு மாலை வேலையில் முதலில் நீலாவைப் பார்த்தார். அங்கிருந்த திடலில் கால்பந்து விளையாடி விட்டு வீடு திரும்பும் போது இரண்டு மூன்று பெண்களுக்கு மத்தியில் நிலாவைப் போல் பளீரிட்டாள். மாலை நேரம். மழை பெய்து பூமி குளிர்ந்த இதம். மழை நீரில் மெல்ல நடந்து வந்ததைப் பார்த்த அந்தக் காட்சியையும், அவளையும் இன்னும் மறக்க முடியவில்லை.

வாழ்க்கையில் ஒரே ஒரு முறை ஏற்படும் வாய்ப்புகள் கை நழுவிப் போன கலக்கமும் வலியும் வாழ் நாள் முழுக்க மறக்க முடியாதுதானே!

ஐந்து குழந்தைகளில் அவன் அப்பா எதற்காக அவனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போக முடிவெடுத்தார்? அவனுக்கு முன்னால் ஒரு அண்ணன், ஒரு அக்கா இருந்த போதும் அந்த முறை ஊருக்கு வந்து சிங்கப்பூர் திரும்பிய போது பாலாவை தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் விடலாம் என்று முடிவெடுத்தது எதற்காக என்று அம்மா கேட்கவில்லை.

பத்து வயதுப் பையனாக அப்பாவுடன் கப்பலில் நாற்பது நாள் பயணம் செய்து தரை இறங்கிய ஊர் இப்போது எங்கே காணாமல் போனது?

புறாக்கூண்டு போல் சின்ன அறைகள். அதில் ஒன்று தான் இவர்களது அறை. பக்கத்து வீட்டில் அதை வீடு என்று சொல்ல முடியாது.

இரண்டு மூன்று தடுப்புகள் கொண்ட குடிசை. அங்கு இருந்த குடும்பம் தான் பாலாவுக்கு சாப்பாடு போட்டது. பள்ளிக்கு கூட்டிக் கொண்டுப் போனது, காய்ச்சல் அடித்து அனத்திய போது கண் விழித்துப் பார்த்துக் கொண்டது, காய்ச்சல் இறங்கியதும் கஞ்சி, கருவாடு என்று வாய்க்குப் பிடித்ததை தந்தது. கதிர்வேலு மாமா, ரஞ்சிதம் அத்தை, மணி அண்ணன், செல்வி அக்கா, தேவி, ராஜா, மனோகர்,பாப்பா எல்லோரும் உறவினர்கள் ஆனார்கள். அப்பா தினமும் காலைப் பலகாரம், மதியம் சாப்பாடு இரண்டுக்கும் மாதா மாதம் பணம் கொடுத்து ரஞ்சி அத்தையிடம் ஏற்பாடு செய்தார். முதலில் கொடுத்த காசுக்கு சாப்பாடு போட்டாள். ஆனால் நாள் ஆக ஆக வெறும் பணத்துக்காக மட்டும் அந்த உறவு இல்லை என்பது புரிந்து கொள்ள முடியாத வயது அது. பெரிய பையன் ராஜா, அடுத்தவள் தேவி, ராஜா, மனோகர், பாலா எல்லோரும் சேர்ந்து காலையில் பலகாரம் சாப்பிட்டு விட்டு கையில் தூக்குச் சட்டியில் மதியச் சோறுடன் கிளம்பி விடுவார்கள்.

யாருக்கும் பள்ளிக்குப் போய் நன்றாகப் படிக்க வேண்டும் என்று பெரிதாக ஆசைப்படவில்லை. பாலா எல்லோருக்கும் கடிதம் எழுத்தித் தருவான். அதையே அப்பா பெரிய படிப்பு என்று நம்பினார். நுணுக்கி நுணுக்கி ஒரு மாத விஷயத்தை ஒரு கடிதத்தில் எழுதித் தர வேண்டும். சென்ற மாதம் அனுப்பிய பணத்திற்கு இன்னும் சரியான கணக்கு காட்டவில்லை. பண விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவும். யாரையும் நம்ப வேண்டாம். ஆடம்பர செலவு செய்ய வேண்டாம் என்று எல்லாக் கடிதங்களிலும் தவறாமல் இருக்கும் வாசகங்கள். எழுதப் படிக்கத் தெரியாத அந்த உழைப்பாளிகள் எங்கோ தமிழ் நாட்டு மூலையில் இருக்கும் குடும்பத்துக்கு எழுதும் அந்தரங்க விஷயங்கள் அனைத்தும் தெரிந்து விடும்.

அந்த சிறிய வட்டத்துக்குள் எல்லோருடைய அந்தரங்கங்களும் எல்லோருக்கும் தெரிந்து தான் இருந்தது.

ரஞ்சி அத்தையைத் தேடி வரும் தனா மாமா, பிறகு ஒரு நாள் ஆறு குழந்தைகளையும் உதறி விட்டு ரஞ்சி அத்தை காணாமல் போனது, அப்பாவைத் தேடி வரும் பர்மா கொண்டைக்காரி நாகு, வாசலில் படித்துக் கொண்டிருக்கிறான் பிள்ளை என்ற நினைப்பில் அப்பா அவளுடன் கொண்ட உறவு, சனி, ஞாயிறு என்றால் குடித்து விட்டு உளறிக் கொட்டும் சாமி மாமா,

அவர் சொல்லும் காமக் களியாட்டக் கதைகள், எல்லாவற்றுக்கும் மேலாக நீலா நீலா நீலா என்று அலைந்தது, தேவி அவ மட்டும் தான் பொண்ணா நான் இல்லையா என்று உடல் சுட இவனைக் கட்டித் தழுவியது எல்லாமே கனவாய் தோன்றியது. சும்மா அர்த்தமில்லாமல் அலைந்த பொழுதுகளில் கணக்கு வாத்தியார் கொடுத்த கணக்கைப் போட்டுப் பார்த்திருந்தால் இன்று வாழ்க்கைக் கணக்கு வேறு விதமாகப் போயிருக்கும்.

பதினேழு வயதில் அப்பா வேலை செய்த இடத்தில் பாலாவுக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்து விட்டு ஊருக்குப் போன அப்பா திரும்பி வரவில்லை. அப்பாவுக்கு காரியம் செய்து விட்டு அண்ணன் எழுதிய கடிதம் மட்டும் வந்தது. கடிதம் முழுவதும் அப்பா சேமித்து வைத்தது, வேறு என்ன சொத்து இருக்கிறது என்ற விவரம் கேட்டு, கடைசியில் ஒரு வரி மட்டும் அப்பா இறந்து போனதைப் பற்றி எழுதியிருந்தது. அப்பா பெட்டியைத் திறந்து பார்த்தான். ஒரு காக்கி பேண்ட், ஒரு லுங்கி, பெரியாருடன் அப்பா எடுத்துக் கொண்ட போட்டோ ஒன்று! அப்பா அந்த முறை ஊருக்குக் கிளம்புவதற்கு முன் இருக்கும் பணத்தையெல்லாம் துடைத்து எடுத்துக் கொண்டு போனார். அது அவனுக்குக் தெரியும். பிறகு அம்மா அப்பா இருக்கும் போது என்ன செய்தாரோ அதை செய்ய வேண்டியது உன் கடமை எழுதி யாரோ எழுதி அம்மா கையெழுத்து போட்டிருந்தாள். அம்மாவுக்காக பணம் அனுப்பினான். யார் ஊருக்குப் போனாலும் துணிமணி, சாக்லேட், பிஸ்கெட் என்று அனுப்பினான். ஒரு தடவைக் கூட நீ எப்போது ஊருக்கு வரப் போகிறாய் என்று கேட்கவில்லை. ஊருக்குப் போவதற்கு ஆகும் செலவை பணமாக அனுப்பினான்.

**சித்ரா ரமேஸ் - சிங்கப்பூர்**

வாழ்க்கையின் தேவைகளில் அந்த அம்மாவுக்கு தான் பத்து வயதுக் குழந்தையாக அனுப்பியவன் எப்படியிருக்கிறான் என்று பார்க்க வரச் சொல்லக் கூட மனமில்லாமல் போய்விட்டதோ!

ஒரு மணி அதற்குள் ஆகி விட்டதா? எதிர் புறம் செய்தித்தாள் வினியோகம் செய்யும் கடை திறந்து விட்டது. ஒரு நாள் தவறாமல் அவர்கள் செய்தித் தாள்களை இறக்கி பிரித்து நான்கு மணிக்கு கிளம்பி விடுவார்கள். பிறகு செய்தித்தாளை வீடு வீடாகப் போட்டு விட்டு எப்போது வீட்டுக்குப் போய் தூங்குவார்களோ? பக்கத்தில் காய்கறிக் கடை.

விடியற்காலை மூன்று மணிக்கு பிக் அப் வேனிலிருந்து காய்கறிகளை இறக்கி தண்ணீரில் கழுவி அலசி, சிறிய பிளாஸ்டிக் பைகளில் போட்டு விற்பதற்கு தயாராகி விடுவார்கள். இரண்டுமே குடும்ப வியாபாரம். தாத்தா, பாட்டி, குழந்தை குட்டிகள் என்று அனைவரும் அங்கு இருப்பார்கள். காலையில் காபி சூடாக கலக்கும் போது பாலாவுக்கும் ஒரு குவளையில் கிடைக்கும். குழந்தைகள் கடையின் ஓரத்தில் தூங்கி எழுந்து அங்க்கிருந்தே பள்ளிக்கூடம் போவார்கள். ஏழு மணிக்கு பாலா கிளம்பும் போது இரண்டு சிறுவர்களும் இவரோடு புறப்படுவார்கள். பள்ளிக்கூட வாசல் வரை அவர்களை விட்டு விட்டுப் போவார். இந்த கம்பெனியில் செக்யூரிட்டி வேலைக்குச் சேர்ந்த மூன்று வருடங்களாகப் பழக்கம். சீனப் புத்தாண்டு சமயம் இரண்டு நாள் செய்தித்தாள் கடைக்கு விடுமுறை. காய்கறிக் கடைக்கு ஒருவாரம் விடுமுறை. மற்ற நாளெல்லாம் சாவி கொடுக்காத கடிகாரமாக அவர்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

திடீரென்று ஒரு நாள் காய்கறிக்கடையிலிருந்த பெண் "அங்கிள் அடுத்த மாதத்திலிருந்து நாங்கள் கடை போட முடியாது. இந்த இடத்தில் காய்கறிகள் விற்கக் கூடாதாம். நாங்கள் வேறு இடம் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். இனிமேல் இந்த மாதிரி ஈரச் சந்தைகள் இருக்கப் போவதில்லையாம். நான் ஏதாவது தொழிற்சாலையில் வேலைக்குப் போகப் போகிறேன். எல்லோரும் வேறு வேலை தேடிக் கொள்ள வேண்டும்", என்றாள். இப்படித்தானே திடீரென்று ஒரு நாள் நாம் தங்கியிருக்கும் இடங்களை இடித்து விட்டு அரசாங்கம் அடுக்கு மாடி வீடு கட்டப் போகிறது, வேறு எங்காவது வீடு பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று சொன்னார்கள்.

மாடு, கன்றுகுட்டிகள், கோழிகள் என்று சகல உயிரினங்களோடு எங்கே போவது என்று தெரியாமல் விழித்து விட்டு மெள்ள உருவாகிக் கொண்டிருந்த புதிய நகர வாழ்க்கைக்குத் தயாரானார்கள்.

அம்மிணிப் பாட்டி கோழிகளோடு அடுக்கு மாடி வீட்டுக்குக் குடி போனதை இப்போது நினைத்தாலும் புன்னகைக்க முடிகிறது. பழைய வாழ்க்கை, பழகிய மனிதர்கள், தெரிந்த தொழில் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து விட்ட ஒரு தலைமுறை, அதில் பார்வையாளர்களாக இருந்த ஒரு தலைமுறை,

அதைப் பற்றிய நினைவுகளின் சுவடுகள் இல்லாமல் வளர்ந்த ஒரு தலைமுறை என்று பல வருடங்கள் ஓடிப் போனாலும் இன்னமும் பழைய முகங்கள் கண்ணில் பட்டால் அது ஒரு ஏக்கமாக மனதில் தோன்றி மறைகிறது. அதைப் போல் இவர்களும் இதை மறந்து விட்டு வேறு வாழ்க்கையைத் தேடிப் போவார்கள். இந்த வாழ்க்கை வெறும் நினைவுகளாக மட்டும் தங்கியிருக்கும். செய்தித்தாள் கடையில் இருப்பவர்களும் முகத்தில் ஒரு கலக்கத்துடன் எங்களையும் எப்போது காலி செய்யச் சொல்வார்களோ? வருங்காலத்தில் செய்தித்தாள் படிப்பதற்கு ஆள் இல்லாமல் போகலாம். எல்லாவற்றையும் டிவி, ரேடியோ, கம்யூட்டரில் படித்து தெரிந்து கொண்டு விட்டால் அப்புறம் செய்தித்தாள் எதற்கு? என்று முணுமுணுத்தார்கள்.

ஊரிலிருந்து யாரோ ஒரு ஆள் வந்து கடையில் தன்னைத் தேடியதாக ஹீசேன் சொன்னார். என்ன விஷயம் என்று விசாரித்தார். உங்க அண்ணன் மௌத் ஆயிட்டாராம். அவருக்கு கருமாதி நடக்குதுன்னு ஹுசேன் சொன்னதைக் கேட்டு மனதில் கொஞ்சம் கூட வலியில்லை. வலியெல்லாம் வந்து மரத்து விட்டது.

ஊருக்குப் போய்த்தான் பார்ப்போமே அம்மா ஏதாவது பெண் பார்த்து கல்யாணம் செய்து வைக்க மாட்டாளா என்று யோசித்துக் கிளம்பினார். ரஞ்சி அத்தை ஓடிப் போனதும் தேவி அம்மாவின் இடத்தில் இருந்து வீட்டைப் பார்த்துக் கொண்டு சமைத்து எல்லாவற்றையும் பொறுப்பாகச் செய்தாள்.

ஒரு நாள் காய்ச்சல் என்று படுத்துக் கிடந்த போது தனக்குத்தானே காய்ச்சல் தேவி கை ஏன் இப்படி சூடாகக் கொதிக்கிறது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவள் உடல் சூடாக அவன் மேல் படர்ந்தது. ஏன் நீலான்னு அலையறே? உனக்கு நான் இல்லையா? என்று கேட்டு முத்தமிட்டாள். உடல் வேர்த்து காய்ச்சல் இறங்கியது. ஆனால் மனது? அந்தத் தொடுகைக்குப் பிறகு தற்செயலாக அவள் மட்டுமில்லை வேறு எந்தப் பெண் உடல் மேல் பட்டாலும் போதும் தன் உடல் தன் வசமில்லாமல் போகும். அந்த இளமை, அதன் துடிப்பு எல்லாம் மெல்ல அடங்கிய போது நீலாவும் இல்லை. தேவியும் இல்லை.

அம்மா "அங்க அப்பாவுக்கு தொடுப்பு ஒருத்தியிருந்தாளாமில்லே! பணம் எல்லாத்தையும் அப்பாவும் மகனுமா அவ கிட்ட வாரி கொடுத்திட்டீங்களா?", என்று கேட்டாள். பாவம் அந்த நாகு! அவள் வரும் போது இரண்டு பேருக்கும் துணி துவைத்துப் போட்டு வீட்டை ஒழித்துக் கொடுத்து விட்டு அப்பாவுக்கு ஒரு அடிமைப் போல் இருந்து விட்டுப் போவாள். அப்பா அவளுக்காக எதுவும் தந்ததாகத் தெரியவில்லை.

"அப்பா பணம் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டே! அதான் போவுதுன்னு உட்டுட்டுடோம். இப்ப வந்தியே அங்கேந்து ரெண்டு மருமவளுக்கும் ஆளுக்கு ஒரு பத்து பவுன்ல செயின் வாங்கி போட்டிருந்தா எனக்கும் எம் மாமியா வீட்ல மதிப்பா இருந்திருக்கும்", என்றாள் அக்கா. அண்ணன் முகம் கொடுத்துப் பேசவேயில்லை. எல்லொரும் பணம், பணம் என்று அலைந்தார்கள். ஆனால் அது அவர்கள் உழைப்பில் இல்லாமல் வேறு யாராவது கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார்கள். சிங்கப்பூரிலும் நகை வாங்குவதற்கு நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும். அதற்கு நிறைய உழைக்க வேண்டும். என்று சொன்னபோது எல்லோரும் அவனை அற்பமாகப் பார்த்தார்கள்.

"அப்பா மாதிரி நீயும் அங்க எவளொட இருக்கியோ? இங்க நா உன்னை நம்பி பொண்ணு பாக்க மாட்டேன்", என்று அம்மா சொன்னதும் அப்புறம் என்ன ஊர், சொந்தம் எல்லாம் என்று பாலா கிளம்பி விட்டார். சிங்கப்பூர் ஊராகியது. அவ்வப்போது வழிப்போக்கர்களாகக் கிடைத்து நண்பர்கள் உறவானது.

ஹுசேன் பாய் சொன்னது காதில் விழாதது போல் இருந்து விட்டு "செகண்ட் ஹாண்ட்ல விக்கற சாமான்ல நம்ப செங்குக்கு பேட்டரியால ஓடற வீல் சேர் இருக்கான்னு பாத்துட்டு விலை விசாரிச்சுட்டு வாங்க பாய். இந்த மாசம் போனஸ் வருமே! அதுல வாங்கிடலாம். பாவம் நீங்களும் எவ்வளவு நாள் தள்ளிட்டுப் போவிங்க? அவருக்கும் அது சந்தோஷமா இருக்கும்", என்றார். மழை விட்டு வானம் தெளிந்திருந்தது. இதமான காற்று அடித்தது.

(chitra.kjramesh@gmail.com)

# பணம்

கஸ்தூரி வசந்
சுவீடன்



**பா**ழாய்ப் போன தூக்கம் தொலைந்து நாட்கள் பலவாகிப் போய்விட்டது.

இப்பொழுது அதிகாலை நாலு மணி.

நாளைக்கு வேலைக்குப் போக வேண்டும். மணிக்கூட்டு கம்பிகளுடன் போராடி போராடிக் களைத்து விட்டேன்.

பார்வதி அம்மாளை சென்று பார்த்தால்தான் மனது கொஞ்சம் நிம்மதி அடையும்.

பாவம் பார்வதி அம்மா. சுதன் பிறந்து ஒரு வருடத்தினுள்ளேயே கூறைச்சேலையை கழற்றி விட்டு வெள்ளைச் சீலையை எடுத்து உடுத்து விட்டது இந்த சமூகம்.

கையில் குழந்தை. வீட்டில் வறுமை. யாழ்ப்பாண சராசரித் தாய்மார் போலவே கூலி வேலைக்குப் போய் சுதனுக்கு எந்த கஷ்டமும் தெரியாது வளர்த்தாள்.

சுதனுக்கு 14 வயது நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவனை வீட்டிலோ, நாட்டிலோ வைத்திருக்க முடியாத நிலை.

பிள்ளை இல்லாத தாயாக இருப்பதை விட பிள்ளையை பிரிந்த தாயாக வாழ முடிவு எடுத்தாள்.

தனது காணியையும், கைம் பெண்ணான பின்பு அணியாத அத்தனை நகைகளையும் விற்று அவனை வெளிநாடு ஒன்றுக் அனுப்பி விடுமாறு ஏஜன்ரிடம் சுதனை கையளித்தாள். சுதனின் நல்ல காலம் அவன் ஏறிய விமானம் சுவீடனின் தரை தொட்டது.

பின்பென்ன. . .அகதி அந்தஸ்து. . .மொழிப் பாடசாலை. . .அங்கு ஒரு காதல். . .பெண்ணின் பெற்றோர் மறுப்புச் சொல்லாத போதும் தாய் வந்துதான் கல்யாணம் என்ற நிலையில் சுதன் நிற்க சுவீடன் சட்டமும் இரக்கம் காட்ட பார்வதி அம்மா இங்கு வந்தாவாம்.

பின்பென்ன. . .எல்லோர் குடும்பத்திலும் உள்ளது தான். மாமியார் மருமகள் போட்டி. பார்வதி அம்மாவும் அதற்குத் தப்பவில்லை.

வீடு நரகம் தான். சுதனுக்கு அம்மாவா?. . மனைவியா?. . .என்ற போராட்டம் இருந்தாலும் தாய் மடியின் சுகத்தை விட தாரக மந்திரத்தின் சுகமே மேலாக பட்டது.

பட்ட மரம் படத்தொடங்கியது. வேர்களை கறையான்கள் அரிக்கத் தொடங்கியது.

ஆம்!. . . பார்வதி அம்மாக்கு புற்றுநோய் என்று சுவீடன் டாக்டர்கள் உறுதியாக சொல்லி விட்டார்கள்.

வீட்டின் வெளியில் குளிர் வெயில் என மாறி மாறி வருசது போல வீட்டினுள்ளும் வெம்மலும் வெடிப்பும் எப்போதும் தொடர்ந்து கொண்டே இருந்த்து.

“அறைக்குள்ளை கிடவுங்கோ என்று சொன்னாலும் கேட்கிறா இல்லை. . .இருமி இருமிக் கொண்டு. .. . நீங்களும் அப்பம்மாவைப் போலை வந்து இருக்கிறயள்” என தன் பிள்ளைகளை மருமகள் ஏசியது பார்வதி அம்மாளுக்கு ஒரு நாள் கேட்டது.

அவர்களாகவே பிடித்தனுப்பினால் மரியாதை இல்லை. தானாகவே போனால் மரியாதை.

ஒருநாள் நேரடியாகவே சுதனிடம் பார்வதி அம்மா சொல்லி விட்டா, “சுதன் நான் கடைசிவரை உன்னிலையோ உன்ரை மனிசியிலோ கோவிக்க மாட்டன். வயது போன ஆட்கள் தனிய இருக்கி இடம் இருக்கு எண்டு ஆக்கள் சொல்லினம். என்னை அங்கை கொண்டு போய் விடு”.

சுதன் தாயை மேலும் கீழும் பார்த்தான்.

தாயின் முகத்தில் எந்தக் கோபமோ.. கவலையோ இருக்கவில்லை.

முதலில் மாட்டன் என்று அவன் பிடிவாதம் பிடித்தாலும், ”இஞ்சை ஒருக்கா வாங்கோ” என மனைவிக்காரி குசினிக்குள் இருந்து அழைத்த பின்பு அவன் தாயின் விருப்பத்துக்கு சம்மதித்தான்.

தினமும் வந்து பார்ப்பேன் எனத் தொடங்கி பின் வார விடுமுறைகளில் போய்ப் பார்த்து பின்பு நேரம் கிடைக்கும் போது போய்ப்பார்த்தான்.

காரணம் பார்வதி அம்மாவில் பாசம் குறைந்ததில்லை. பதிலாக மனைவிக்காரியின் கட்டுக்கடங்காத பல ஆசைகளை நிறைவேற்றுவதற்காக அவன் இரண்டாவது வேலைக்கு இரவில் போகத் தொடங்கினான். பாடசாலைகளை துப்பரவு செய்வது . . அவர்களின் நகர எல்லையில் இருந்த பிற்ஸா ரெஸ்ரொறன்ரில் இரவு வேலை, அதிகாலையில் பேப்பர் போடுவது என தொடர்ந்தது.

பார்வதி அம்மாவும் அவனைக் காண வேண்டும் காண வேண்டும் எனக் காத்திருந்து ஏமாறுவதை விட அவன் வரும் போது கண்டால் வந்தோசம் என்னும் நிலைக்கு தன்னை மாற்றியிருந்தாள்.

இந்த வயோதிப மடத்துக்கு வந்த பின் அவாக்கு எல்லாமே நான் தான்.

"ஒரு பொம்பிளைப் பிள்ளை என்ற குறையை தீர்த்து வைச்சுட்டாய்" என அடிக்கடி சொல்வா.

எனக்கும் அப்பிடித்தான், "அம்மாவை ஊரிலை மச்சாள் என்ன பாடு படுத்துறாவோ" என்ற நினைப்பில் பார்வதி அம்மாக்கு எல்ல உதவியும் செய்வேன். இந்த புண்ணியம் ஆவது என் அம்மாவைக் காப்பாற்றட்டும் என்ற நினைப்பில்.

ஒருநாள் நான் வேலைக்குச் சென்ற பொழுது பார்வதி அம்மாவின் அறையில் பெரிய அமளி துமளி கேட்டது. நேர்ஸ்மார் வெளியில் ஓடுவதும் உள்ளே வருவதுமாக இருந்தார்கள்.

எனக்கு 'திக்' என்றது.

அதிகாலையில் அவரின் மூளைப்பகுதியில் அடைப்பு ஏற்பட்டு இப்போது எடுபட்டு இருக்கிறதாம்.

அது மீண்டும் வரக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால் மகனுக்கு அறிவிக்கும் படி சொன்னார்கள்.

சுதனின் வீட்டை அழைத்தேன்.

பதில் இல்லை.

சுதனின் கைத்தொலைபேசிக்கு அழைத்தேன்.

"ஹலோ. .நான் ஹோமிலை இருந்து சிந்து கதைக்கிறன்.. . சுதன் நிக்கிறாரோ?"

“கொஞ்சம் பொறுங்கோ. . இது உங்கடை அம்மான்ரை இடத்திலை இருந்துதான்” எனக்கு தொலைபேசியூடு கேட்கிறது.

அவர்கள் நிற்கும் இடத்தில் ஒரே இரைச்சலாய் இருக்கிறது. “ஹலோ. .நான் சுதன் கதைக்கிறன்”

“உங்கடை அம்மாக்கு கடுமையான சுகவீனம்.. . கஸ்டம் என்றும் சொல்லினம். . .அது தான் நீங்கள்”

தொலைபேசியில் பதைத்துக் கொண்டிருக்கும் என்னை பார்வதி அம்மா திரும்பி பார்க்கின்றா.

“நான் இப்ப இத்தாலியிலை குடும்பத்தோடை லீவுக்கு வந்து நிக்கிறன். உடனை ரிக்கற்றும் மாத்தோலாது... சரியான விலை... இனிப் பிள்ளையும் திரும்பி வரக் கவலைப்படுங்கள்... நீங்கள் கொஞ்சம் அம்மாவைக் கவனமாய் பாருங்கோ”

பார்வதி அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிகிறது.

நான் பக்கத்தில் சென்று துடைத்து விட்டேன்.

“எதுக்கும் அம்மாவோடை கதையுங்கோ”

“எப்ப ராசா வாறாய். . .ஒருக்கா உன்னையும் உன்ரை குஞ்சுகளையும் பார்க்க வேணும் போலை இருக்கு”

சுதன் பேசியது எனக்கு கேட்கவில்லை.

மேலும் விம்மி விம்மி அழத் தொடங்கினா. எனது கைகளை இறுக்கமா பிடித்துக் கொண்டா.

எப்பொழுதும் யாரோ ஒருவரை பக்கத்தில் இருக்கும் படி பெரிய டாக்டர் சொன்னார். அதன் பின் பகலில் நான் தான் பார்வதி அம்மாக்கு பக்கத்தில்.

பகலில் யன்னல் கரையில் உள்ள கதிரையில் தன்னை இருத்தி விடச் சொல்வா.

அங்கிருந்து பார்த்தால் ஆட்கள் வருவதும் போவதும் நன்கு தெரியும்.

அவா யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றா என்றும் எனக்கும் தெரியும்.

சிவப்புக் கார்களைக் காணும் போது அவாவின் முகம் விரியும். பின்பு சுருங்கிப் போகும்.

இப்பிடி மூன்று நாள் போனது.

கதிரையில் உட்கார்ந்து இருக்கும் அளவுக்கு அவாவிற்று பலம் இருக்கவில்லை.

கட்டிலில் தான் எல்லாமே. கதவுப் பக்கம் சத்தம் கேட்டால் கண்கள் திறக்கும் . பின் அது தானாக மூடும்.

நேற்று நான் வீட்டை வரும் வரை நிலைமை இது தான்.

இனியும் என்னுடன் நான் போட்டி போட்டுக் கொண்டு என்னால் படுத்திருக்க முடியாது என்பதால் எழுந்து குளித்து விட்டு ஏழுமணி வேலைக்கு ஆறுமணிக்கே போய்விட்டேன்.

“அம்மா”. . .

“அம்மா”. . .

“அம்மா”. . .

முகம் சிரித்திருந்தது போலிருந்தது.

எனக்கு பயம் தொட்டுவிட்டது.

அவசரமணியை அழுத்தினேன்.

எல்லோரும் ஓடிவந்தார்கள்.

எனது சக தோழி ஒருத்தி வெள்ளைச் சேலையால் பார்வதி அம்மாவின் முகத்தை மூடினாள்.

நான் கதிரையில் போயிருந்து அழத் தொடங்கினேன்.

*

சுதனுக்கு விடயம் அறிவிக்கபட்டது.

சுதனை ஏயர்போட்டில் இருந்து கூட்டி வரவும் அவன் துக்கத்தில் பங்கு கொள்ளவும் எங்கள் சிற்றியிலும் மற்ற மற்ற சிற்றியிலும் இருந்த தமிழர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள்.

பார்வதி அம்மாவின் இறுதிச் சடங்கு வெகு சிறப்பாக நடந்தேறியது.

அவ்வாறே எட்டுச் செலவு அந்தியேட்டியும்.

அதுவரை சுதன் வீட்டில் உலையே வைக்கவில்லை. மற்ற மற்ற தமிழ் ஆட்கள் முறை போட்டு சமைத்துக் கொண்டு போய்க் கொண்டு இருந்தார்கள்.

நான் இறுதிச் சடங்குக்கு மட்டும் போனேன்.

பின் எதிலுமே கலந்து கொள்ளவில்லை.

*

அந்தியேட்டிக்கு அடுத்து நாள் அவனும் அவன் மனைவியும் பார்வதி அம்மாவின் அறையை காலி செய்ய வந்திருந்தார்கள்.

தலைமை அதிகாரி ஒரு என்பலப்பை கொண்டு வந்து அவனிடம் கொடுத்தார்.

அது மொத்தமாயும் சிவப்பு மெழுகால் சீல் வைக்கப்பட்டும் இருந்தது.

“இது உங்க அம்மா இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன் தந்தவா. அவா கடைசியாக கதைத்ததும் அன்று தான்”

சுதன் என்வலப்பை பிரித்தான்.

எல்லாம் 1000 குறோன்கள் தாள்கள். . .குறைந்தது நூறு அல்லது நூற்றம்பது தாள்கள் இருக்கும்.

அதனுள் ஒரு கடிதம்.

“சுதன் இது இந்த நாலு வருசமும் நான் இங்கு சேர்த்த காசு. இது உனக்குத் தான். இதை வைத்து கொண்டு இரவு வேலைக்கு போறதை நிற்பாட்டு. உடம்மை பார்த்துக் கொள் அம்மா”

சுதன் தாயின் வெறும் கட்டில் காலைக்கட்டிக் கொண்டு அழத் தொடங்கினான்.

(vasanth34@hotmail.com)



# விருந்தோம்பல்

அ. முத்துலிங்கம்
**கனடா**

**சோ**மா என்ற பெண்மணியிடம் இருந்துதான் அழைப்பு வந்திருந்தது. ஒரு வியாழக்கிழமை மதிய விருந்துக்கு. அவருடைய முழுப்பெயர் என்ன? அவர் வயது, உயரம், எடை, பருமன், நிறம் ஒன்றுமே எனக்கு தெரியாது. முக்கியமாக அவர் இருக்கும் இடம். ரொறொன்ரோவில் இருந்து இரண்டு மணி நேரதூரம் என்ற விவரம் பின்னர்தான் கிடைத்தது. ஆனால் நான் விருந்துக்கு வருவதாக சம்மதம் தெரிவித்துவிட்டேன். ஆகவே வேறு வழியில்லை, போகத்தான் வேண்டும்.

வழக்கம்போல ஒன்றிரண்டு திருப்பங்களை தவறவிட்டு அரை மணி நேரம் பிந்தி விருந்து வீட்டுக்கு போய்ச் சேர்ந்தேன். ஒரு பெண்மணி வந்து தன்னை சோமா என்று அறிமுகப்படுத்தி கைகொடுத்தார். ஐந்து அடி உயரம் இருப்பார். முற்றிலும் பழுக்காத நாவல் பழத்தின் நிறம்.

மார்பு பிருட்டம் இடை எல்லாம் ஒரே அளவில் இருந்ததால் அவருக்கு ஆடை தைக்கும் தையல்காரருக்கு வேலை சிரமமாக இருக்காது. ஆனால் அவருடைய முகத்தில் பத்து சந்திரன்களின் ஒளியிருந்தது. இன் முகத்துடன் வாருங்கள் வாருங்கள் என்று வரவேற்று நேரே தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். பெரிய தோட்டம். அங்கே நின்ற அவருடைய பிரம்மாண்டமான வீடு போல அந்த தோட்டத்தில் நாலு வீடுகளை நிறுத்திவைக்கலாம். தோட்டத்தைப் பார்த்து நான் அதிசயித்துப்போய் நின்றேன்.

ரொறொன்ரோவில் சில தோட்டங்களில் வருடா வருடம் புதுப்பிக்கப்படும் பூக்கன்றுகளை வாங்கி நட்டு வைப்பார்கள். அவை பூத்து அந்த வருடம் முடியும்போது அவையும் முடிந்துவிடும். அடுத்தவருடம் மறுபடியும் புதிதாக பூக்கன்றுகள் வாங்கி நடவேண்டும். இன்னும் சில தோட்டங்களில் வருடா வருடம் அழியாமல் தொடர்ந்து நின்று பூக்கும் பூக்கன்றுகள் இருக்கும். பனிக்கால முடிவில் அவை ஓய்வு பெற்று மறுபடியும் வசந்தம் வரும்போது உயிர்த்தெழும். ஆனால் இந்த தோட்டத்தில் இரண்டு வகையான பூக்களும் பூத்து குலுங்கின. 'மிக அழகான தோட்டமாக இருக்கிறதே. நீங்கள் தோட்டக்கலை படித்திருக்கிறீர்களா?' என்று கேட்டேன். அவர் சிரித்தார். 'ஒரு கலையும் படிக்கவில்லை, அனுபவம்தான். இருபது வருடமாக தோட்டத்தை நான்தான் பராமரித்து வருகிறேன். இந்த தோட்டத்தில் தெரியும் அவ்வளவு அழகும் என்னிடமிருந்து வந்ததுதான்.' குரல் வந்ததே ஒழிய சோமா மறைந்துவிட்டார். எல்லா திசைகளிலும் ஆகக்குறைந்த நேரத்தில் ஓடிக்கொண்டிருந்தார். புதிய விருந்தாளிகளை வரவேற்று அவரவர்களுக்கு வேண்டிய பானங்களை அவரே எடுத்துவந்து பரிமாறினார். விருந்தினர் உபசரிப்பில் ஒரு குறையும் வைக்கவில்லை.

உடுப்பு அழுக்காகிவிடும் என்ற கவலை சிறிதும் இல்லாமல் விருந்தினர் ஒருவர் புல்தரையில் அமர்ந்து ஒரு கயிற்றிலே விதவிதமான முடிச்சுகள் போட்டுக் கொண்டிருந்தார். கைகளை வித்தைக்காரன்போல வேகமாக அசைத்து கண்வெட்டும் நேரத்துக்கிடையில் ஒரு புது முடிச்சை போட்டார். அதனிலும் வேகமாக போட்ட முடிச்சை அவிழ்த்தார். இவர் ஒரு காலத்தில் சாரண பயிற்சியாளராக இருந்திருக்கலாம் என்று நினைத்தேன்.

அவருக்கு முன்னால் ஒருவர் உட்கார்ந்து பாடம் கேட்பதுபோல அவர் செய்வதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். இருவரும் பேசும்போது அவர்கள் அத்தியந்த நண்பர்கள் போலிருந்தது. 'எவ்வளவு காலமாக உங்கள் இருவருக்கும் பழக்கம்?' என்று கேட்டேன். கயிறு வித்தைக்காரர் 'இப்ப இரண்டு நிமிடம்' என்றார். அப்பொழுதுதான் எனக்கு ஒரு விசயம் பிடிபட்டது. அங்கே வந்திருந்தவர்களில் ஒருவருக்குகூட இன்னொருவரைத் தெரியாது. விருந்துக்கு அழைத்த சோமாவுக்கு கூட அழைப்பை ஏற்று வந்த விருந்தினர்களை முன்னரே பழக்கமில்லை. விருந்து முடிவுக்கு வரும் சமயத்தில்தான் இந்தப் புதிர் எங்களுக்கு விடுவிக்கப்படும்.

மதிய உணவு மிகச் சாதாரணமானதாகவே இருந்தது. ஆனால் அதை வழங்கிய விதம் உயர்தரமானது. ஆடம்பரம் இல்லாத அழகு. விலைமதிப்பான கோப்பைகள், வெள்ளிக்கரண்டிகள், ஒளிவீசும் கிண்ணங்கள், நீளமான மெல்லிய காம்பின்மேல் நிற்கும் கிளாஸ்கள். சோமா உட்காரவே இல்லை. நின்றுகொண்டும் ஓடிக்கொண்டும் விருந்தினரை தனித்தனியாக உபசரித்தார். 'இதைச் சாப்பிடுங்கள். இது விசேஷமாக தயாரிக்கப்பட்டது. கோவா இலையில் அப்பிள் துண்டுகளையும், வறுத்த பெக்கன் விதைகளையும் கலந்து செய்தது.' ஒவ்வொரு விருந்தினரையும் மூன்று தரம் உபசரிப்பதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

'சிலர் மனம்விட்டு உபசரிக்கும்போதே உங்கள் வயிறு நிறைந்துவிடும். இவர் அந்த வகையை சேர்ந்தவர். சோமா இந்த நிமிடம் வரை பத்து மைல் தூரம் நடந்துவிட்டார்' என்றார் எனக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர். அப்பொழுதுதான் திரும்பி அவரைப் பார்த்தேன். வாழ்க்கை முழுக்க தேடிய ஒருவர் எனக்குப் பக்கத்தில் அமர்ந்து உணவருந்தியது எனக்கு தெரியவில்லை. அவர் என்னிடம் பேசியதாக நினைத்தேன். உண்மையில் அவரோ என்னோடு சேர்ந்து பத்து பதினைந்து பேர் நிற்பதுபோல என் திசையை பார்த்து பொதுவாகத்தான் பேசினார். வெள்ளைத் தலைமுடி, வெள்ளை மீசை, வெள்ளைத் தோல், வெள்ளை சேர்ட். அவருடைய சப்பாத்துகூட வெள்ளையாகத்தான் இருந்தது. என் பக்கம் திரும்பி 'என்னுடைய பெயர் ரிஸ்டோ' என்றார். நானும் என் பெயரைச் சொன்னேன். 'நீங்கள் இந்தியரா?' என்று விசாரித்தார்.

நான் 'இலங்கை' என்றேன். அப்படித்தான் பேச ஆரம்பித்தோம்.

'விருந்து கொடுப்பவர் விருந்தாளியுடன் உட்கார்ந்து சாப்பிடமாட்டார். அதுதான் முறையான விருந்தோம்பல். எங்கள் பழைய புலவர் ஒருத்தர்கூட அப்படிச் சொல்லியிருக்கிறார். 'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்.' விருந்து கொடுத்துவிட்டு மிச்ச உணவைத்தான் சாப்பிட வேண்டுமாம்.' ரிஸ்டோ ஆச்சரியப்பட்டார். 'எங்கள் நாட்டிலும் அதே வழக்கம்தான். நீங்கள் என் வீட்டுக்கு விருந்துக்கு வந்தால் என் மனைவி விருந்தின்போது எங்களுடன் உட்காரவே மாட்டார். அப்படி உட்கார்ந்தால் உபசரிப்பு குறைபட்டது என்று அர்த்தம். மிகப் பழமையான விருந்தோம்பல் முறை அது' என்றார்.

'ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் நாட்டிலும் அப்படியா? உங்கள் நாடு என்ன?' என்றேன். அவர் 'மாசிடோனியா' என்றார். நான் அலெக்சாந்தர் பிறந்த நாடல்லவா என்று சொல்லி எழுந்து நின்று அவர் கையை தொட்டு கண்ணிலே ஒற்றிக்கொண்டேன். 'என்ன செய்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்?' என்று சிரித்துக்கொண்டே அவர் கையை இழுத்தார். 'நான் சந்திக்கும் முதல் மாசிடோனியன் நீங்கள். உங்கள் உடம்பில் ஒரு துளிக்குச் சமமான அலெக்சாந்தரின் ரத்தம் ஓடக்கூடுமல்லவா?' என்றேன்.

சிறிய நாடான மாசிடோனியா அரசனுக்கும் கிரேக்க அழகி ஒலிம்பியாவுக்கும் பிறந்தவன் அலெக்சாந்தர். கிரேக்கரான அரிஸ்டோட்டல் அவனுடைய குரு. அலெக்சாந்தர் தன் தலையணையின் கீழ் எப்பவும் கிரேக்க கவி ஹோமரின் இலியட் காவியத்தை வைத்திருப்பானாம். கிரேக்க இலக்கியத்தில் அவ்வளவு பற்று அவனுக்கு. இளவயதில் ஆட்சிக்கு வந்து 33 வயதிலேயே இறந்துபோனான் ஆனால் அதற்கிடையில் அறிந்த உலகத்தில் பாதியை பிடித்து தன் அதிகாரத்துக்கு கீழ் கொண்டுவந்திருந்தான். இதுவெல்லாம் நான் ஏற்கனவே படித்தது. நான் படிக்காத ஒன்றை ரிஸ்டோவிடம் கேட்டேன். 'அலெக்சாந்தர் என்ன மொழி பேசினான்?' அவர் சொன்னார் 'அப்பொழுதெல்லாம் கிரேக்கம் உலக மொழி. மாசிடோனியன் அறிமுகம் இல்லாத சின்ன மொழி. தன் நாட்டு படைவீரகளுடன் மட்டும் அலெக்சாந்தர் மாசிடோனியன் பேசினான்.

உலகத்தோடு அவன் பரிமாறிய மொழி கிரேக்கம்' என்றார். அப்படி பேசிக்கொண்டே நாங்கள் உணவருந்தினோம். எங்களைச் சுற்றி இன்னும் இருபத்தைந்து பேர் அங்கே இருப்பது எங்களுக்கு தெரியவில்லை. உரையாடலில் எங்களை மறந்து ஆழ்ந்துபோயிருந்தோம்.

அங்கு கூடியிருந்த அத்தனை விருந்தினரும் இதற்கு முன்னர் ஒருவரை ஒருவர் சந்தித்தது கிடையாது. ஆனால் அவர்கள் எல்லோரும் ஐ. நா சபைக்காக எங்கோ ஒரு கிளையில், ஏதோ ஒரு நாட்டில், எப்பவோ ஒரு காலத்தில் வேலை செய்திருக்கிறார்கள். விருந்து கொடுக்கும் சோமாவும் அப்படி ஒரு காலத்தில் வேலை செய்தவர்தான். இதற்கென்று மினக்கெட்டு ஆராய்ச்சிகள் செய்து அங்கு வந்திருந்தவர்களை எல்லாம் முகப்புத்தகம் மூலமாகவும், கூகிள் மூலமாகவும் தேடிக்கண்டுபிடித்து ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அப்படித்தான் நாங்கள் எல்லோரும் சந்தித்துக்கொண்டோம். இந்த விவரம் விருந்து கிட்டத்தட்ட முடிவுக்கு வந்தபோதுதான் எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஒரு 16, 17 வயது மதிக்கத்தக்க பெண். அவள் அணிந்திருந்த காலணி பழைய போர் வீரர்களின் காலணிபோல கயிற்றினால் குறுக்காக மாற்றி மாற்றி கட்டி முழங்கால்வரைக்கும் உயர்ந்திருந்தது. அவளுடைய கண்கள் அங்கே மிச்சமாயிருந்த சூரிய வெளிச்சத்தை உள்வாங்கிவிட்டதுபோல பிரகாசித்தன. ரிஸ்டோ 'இவள்தான் என்னுடைய மகள். என்னை காரிலே இங்கே அழைத்துவந்தவள். என் புத்திமதிகளை கேட்பதை நிறுத்தியிருந்தபடியால் வழி தவறவில்லை' என்றார். 'அப்பா சும்மாயிருங்கள்' என்று செல்லமாகக் கண்டித்தாள் மகள். 'என் வாழ்க்கையில் மறக்கமுடியாத தினம் இது' என்றேன் நான். ஏன் என்பதுபோல இருவரும் என்னை பார்த்தார்கள். 'ஒரு மாசிடோனிய அழகியை சந்தித்த தினம்' என்றேன் நான். 'நீங்கள் இருவரும் உங்கள் பொய்களை பரிமாறுங்கள். நான் போகிறேன்' என்றுவிட்டு மகள் போய்விட்டாள்.

அவளையே பார்த்தவாறு இருந்த ரிஸ்டோ 'என் மகள் பேசும் மாசிடோனியன் சுத்தமானது. அவளைப்போல இப்ப மாசிடோனியன் பேசுபவர்கள் குறைவு' என்றார்.

'உங்கள் நாட்டில் இருப்பார்கள்தானே' என்றேன். 'மாசிடோனியா மிகச் சிறிய நாடு. 1991ல்தான் சுதந்திரம் கிடைத்து தனிநாடாக ஆகியது.

அதன் அரசகரும மொழி மாசிடோனியன். அங்கே ஒன்றரை மில்லியன் மக்கள் மாசிடோனியன் பேசுகிறார்கள். மாசிடோனியாவுக்கு வெளியே புலம்பெயர்ந்த வகையில் ஒரு மில்லியன் மக்கள் மாசிடோனியன் பேசுகிறார்கள்' என்றார். 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த மொழி உங்களுடையது. இப்பொழுது நாடும் கிடைத்துவிட்டது. இனிமேல் வாழ்ந்துவிடும்' என்றேன். அவருடைய வெள்ளை முகம் தோட்டத்தில் விழுந்த சூரியனில் சிவப்பாக மாறிக்கொண்டு வந்தது. 'எங்கள் மொழி வளர்வது கிரேக்கர்களுக்கு பிடிக்கவில்லை. அவர்கள் பெரும் முட்டுக்கட்டையாக அல்லவா இருக்கிறார்கள்?'

'உங்கள் நாட்டுக்கும் கிரேக்க நாட்டுக்குமிடையில் நீண்ட நாள் பகை அல்லவா? அவர்கள் அதை சீக்கிரம் மறந்துவிடுவார்களா?' என்றேன்.

அலெக்சாந்தர் இருபது வயதில் அரசனானதும் முதலில் படையெடுத்தது கிரேக்க நாட்டின்மீதுதான். அந்தப் போரில் 6000 கிரேக்க வீரர்கள் கொல்லப்பட்டார்கள். 30,000 பேர் அடிமைகள் ஆக்கப்பட்டார்கள். இது நடந்தது 2300 வருடங்களுக்கு முன்னர் ஆனால் கிரேக்கர்கள் அதை இன்றுவரை மறக்கவில்லை என்பது ஞாபகத்துக்கு வந்தது. 'சில பகைகள் அப்படித்தான். காலம் அவற்றை மறக்க விடுவதில்லை. நினைவூட்டிக்கொண்டே இருக்கும்' என்றேன். 'கிரேக்கம் எவ்வளவு பெரிய மொழி. எங்கள் மொழி இப்பொழுதுதான் வாழத் தொடங்கியிருக்கிறது. ஆனால் கிரேக்கர்களுக்கு இது பிடிக்கவில்லை. மாசிடோனியன் பெயர்களை எல்லாம் கிரேக்க பெயர்களாக மாற்றுகிறார்கள். ஒரு காலத்தில் மாசிடோனிய மொழி பேசுவதுகூட சட்ட விரோதமான செயல். இரண்டு மொழிகள் பக்கத்து பக்கத்தில் வாழமுடியாதா? ஒன்றை அழித்துத்தான் இன்னொன்று வாழவேண்டுமா?' உணர்ச்சிவசப்பட்டதில் ரிஸ்டோவின் குரல் பழுதுபட்ட முடி உலர்த்தியின் சத்தம்போல மாறியிருந்தது.

அப்பொழுது சோமா வந்தார். அவருடைய இரண்டு கைகளிலும் இரண்டு குடுவைகள் இருந்தன. ஒன்றில் தேநீர். ஒன்றில் கோப்பி. மூன்றாவது தடவையாக எங்கள் கோப்பைகளை நிரப்பினார். 'எங்கள் நாட்டிலும் இப்படித்தான் விருந்தினரை மூன்று தடவைகள் உபசரிக்கவேண்டும்' என்றார் ரிஸ்டோ.

அவர் சமநிலையை அடைந்திருந்தார். மீண்டும் நாங்கள் மொழி பற்றிய விவாதத்தில் இறங்கினோம். சோமா குடுவைகளை தூக்கிக்கொண்டு அடுத்த மேசைக்கு ஓடினார். அந்தச் சிங்களப் பெண்ணுக்கு களைப்பே இல்லை. சூரியக் கடிகாரம்போல ஓசையின்றி விருந்து முடிவுக்கு வரும்வரை உழைத்துக்கொண்டே இருந்தார்.

(amuttu@gmail.com)




[Muttar pass என்பது தாய்மை அடையும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கர்ப்பகால கண்காணிப்பு மருத்துவரால் வழங்கப்படும் ஒரு ஆவணம். அதில் தாய், சேய்களின் ஆரோக்கியம், நீளம் நிறைமன்ன பௌதீக தகவல்களுடன் அவரின் ஒவ்வொரு பிரசவத்தின்போதும் கவனித்துக்கொண்டமருத்துவர் பெயர், வழங்கப்பட்ட மருந்துகள், மருத்துவவிபரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்படும். ஐக்கிய இராட்சியத்தில் அதை Ante-natal Book என்பர்]

**பி**ங்கலை வெகு இயல்பாகத்தான் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள். ஆனந்தசிவன் வீட்டுக்குள் நுழைந்தவுடன் பேச்சை நிறுத்திவிட்டு வெறும் "ம்" களை மட்டும் கொட்டினாள். அவனுக்கு யாரும் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கையில் 'பேப்பரில என்ன விஷேசம்' ன்று கேட்பதோ, ாலைபேசிகொண்டிருக்கையில் 'போனில யாரு' என்று விசாரிப்பதோ பிடிப்பதில்லை.

அவனும் அப்படி எவரையும் விசாரிக்கமாட்டான். வெகு இங்கிதம். பிங்கலை இன்னுமிருந்த "ம்" களையும் கொட்டிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டு அவனைத் தவிர்த்துக்கொண்டு உள்ளே போன போதுதான் 'அவளைக்கூப்பிட்டு அது யாரென்று விசாரிக்கலாமா' என்றொரு மின் யோசனை வந்தது. பின் அது அனாவசியமாகப்படவும் விட்டுவிட்டான். உள்ளே போன பிங்கலை குளிர்பதனப் பெட்டிக்குள் இருந்த அவனுடைய சீனி சேர்க்காத பழச்சாற்றை அவனுக்கு பிடித்தமான கண்ணாடிக்குவளையுள் ஊற்றி பெரிய மனுஷிபோல எடுத்து வந்து அவனுக்குத் தந்துவிட்டு வதியும் அறைக்குள்ளேயே மைந்திக்கொண்டு நின்றாள். "தாங்ஸ் செல்லம்" என்றபடி வாங்கி ஒரு மிடறு விழுங்கிவிட்டு அவள் கண்களை நேர் கொண்டபோது அவளே தயக்கத்தோடு சொன்னாள், " அது அம்மா அப்பா. "

இவன் அக்கறைப்படாதவன்போல இருக்க முயற்சித்தான்.
"அவாவுக்கு muttar pass வேணுமாம் " என்றாள்.

ஓடிப்போற அவசரத்தில மகிமா அதை எடுத்துவைக்க மறந்துவிட்டாள். அதுக்கொரு அவசியம்வரும் என்கிற யோசனையும் அப்போ வந்திருக்காது. அவனுக்கு துருப்பிடிச்ச ஊசி ஒன்றைக் கன்னாமண்டையில் இன்னொருதரம் சொருகுவது போலிருந்தது.

மகிமாவிடம் அவனுக்கு நெருக்கம் உண்டானபோது அவளது முன்காதல் அனுபவங்கள்பற்றி அவன் எதுவும் உசாவவில்லை. காதலும் காமமும் அவரவர் அந்தரங்க உணர்வுகள். நாங்கள் சைட் அடிக்கலாம்இ சுழட்டலாம் அதெல்லாம் அவர்களுக்கு ஆகாதா? அவளும் எதைப்பற்றியும் சொல்லவுமில்லை. ஏதாவது விவகாரங்கள் இருந்து அவள் அதைச்சொல்லாமல் விட்டிருந்தாலும் அவனுக்கு அதுபொருட்டுமல்ல.

ஆனந்தசிவன் தான் காதலிப்பதை வீட்டில் தெரிவித்தபோது யாரும் கெம்பிக்குதிக்கவில்லை. அவனது மூத்தசகோதரன் மட்டும் அவனைத் தனிமையில் அழைத்து புத்திமதி சொல்வதுபோல மெல்லிய குரலில் சொன்னான் "உடல்ல சூடு மிஞ்சின குமரியள்தான்டா காதல் மயிரெண்டு அலையிறதும், பெடியளைக் கவுழ்க்கிறதும். உன்னையும் சிறுக்கி யாரோ மயக்கிப்போட்டாள்....... மாட்டியிட்டாய். கவனமாயிரு.

உருப்பிடியான கேஸிகள் ஒண்டும் குடும்பங்களுக்குச் சரிப்பட்டுவராது. கழட்டிவிட்டிட்டு திருநெல்வெலி பாங்கற்றை பெட்டையைக்கட்டு, மனுஷன் வத்தளையில பங்களாகணக்கா வீடொன்றும் வைச்சிருக்கு."

"இஞ்சை ஒருத்தரும் பெண்டுகள் கொண்டாறதில சுகம்காணத் தவிச்சிருக்கேல்ல."

தமையனாருக்கு அவன் தன்னைத்தான் குத்துறான் என்றது புரிந்தும் பொறுமைகாத்துச் சொன்னான், " கன்னிக் கிறக்கத்தில பேச்சுக்கள் இப்ப இப்படித்தான் வரும் அப்பு, அதோட இப்ப அட்வைஸ்பண்றவையும் அடிமுட்டாள்களாய்த்தெரியும்........ இந்தச் சுதிகள் எல்லாம் முழங்கால் மூட்டுக்குங்கீழ வடிஞ்சு சேறு உழக்கயில வரும்பார் ஒரு ஞானப்பிரகாசம்........ அதிலதான் எல்லாம் ஓடிவெளிக்கும். நாம இல்லாத சனத்திட்ட வற்புறுத்தவோ தெண்டிக்கவோ இல்லை. இருக்கிறவையிட்ட வாங்கிறது அப்பிடியொண்டும் மா......பாதகமில்லை. அப்ப பாங்கர் சொத்தை மகளுக்குக்கொடுக்காமல் என்ன திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு எழுதிவிடுறதே............ நடைமுறைக்கேற்றபடி கொள்கைகளைத் தளர்த்தி அனுசரித்துப் போறவன்தான் விவேகி."

குடும்பத்தில் மற்றவர்களும் காரணங்களை வைத்துக்கொண்டோ, இல்லாமலோ இந்தச்சம்பந்தம் வேண்டாமென்றே நினைத்ததால் பெரிதாக அவன் முடிவைப்பாராட்டி வரவேற்கவில்லை. அண்ணன் சொன்ன அனுசரித்து வாழுங்கலை யையும் ஏற்கமுடியவில்லை. மகிமாவை ஏதுங்காரணிகளால் இழந்துபோனால் தான் வாழ்வு முழுவதும் வெங்காயத்தூசைப்போல் அடிபட்டு ஒதுங்கிக்கொண்டே இருக்கவேணும்போல் தோன்றவும் துணிந்து மகிமாவைத்தான் தாலிகட்டிவந்து இறக்கினான் ஆனந்தசிவன்.

இப்போ மனது ஒருகணம் சினந்தாலும் மறுபடிம் அது ஞானச்சித்தனைப்போலாகிவிடுவது அவனுக்கும் வியப்பாக இருக்கிறது. வாழ்புலச்சமூகத்தில் இதெல்லாம் இயல்பாகிவிட்டதைப் பார்த்த பட்டறிவோ, ரௌத்ரம் கொண்டுதான் என்ன கிழித்துவிடப்போகிறேன் என்கிற யதார்த்தமோ அவனுக்கு ரௌத்ரம் வரவில்லை,

அப்படி வந்ததாக நடிக்கவும் அவனுக்கும் முடியவில்லை. மரபுக்கண்ணாடிகளைக் கழட்டிவைத்துவிட்டு உலகத்தைப் பார்ப்பதுபற்றித்தான் இப்போது சிந்திக்கிறான்.

நாம் ஒருவரை வெறுத்தால் அதேவிதமாக அவரும் வெறுப்பைத் திருப்பி உமிழும்போது அதைத்தாங்குவது கஷ்டம். அவர்கள் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் பரஸ்பரம் ஒருவரை வெறுக்கவோ ஒதுக்கவோ காரணங்கள் இருக்கவில்லை.

வெகு இயல்பாகவே நகர்ந்தன நாட்கள். 'ஒருவர் பரிசளித்த முத்தையோ, வைரத்தையோ திருப்பித்தந்துவிடுமளவுக்கு வாழ்க்கையில் நான் எவரையும் வெறுப்பதில்லை' என்றாராம் Zsa Zsa Gabor என்கிற ஹங்கேரியநாட்டு நடிகை.

மகிமா அவனுக்கு கொடுத்த முத்துக்களில் எதைவைத்திருப்பது, எதைத்திருப்பிக்கொடுப்பது? தங்கள் திருமணப்புகைப்பட அல்பத்தின் முதல்பக்கத்தில் 'இனிமேல் சேர்ந்துவாழ்வது சாத்தியமில்லை என்கிற முடிவுக்கு இருவரும் வரும்வரை சேர்ந்திருப்பதற்காய் இன்று இணைந்துள்ளோம்' என்று எழுதிவைக்க உந்திய உள்ளுணர்வை மீட்கையில் உடல் சிலிர்த்தது. யார் யாருடன் என்னனென்ன ஒப்பந்தங்கள்தான் செய்துகொண்டாலும் தருணத்தில் தற்காரியவாதியாயிருக்கவும் முடிவெடுக்கவும் வாழ்வின் நிகழ்வுகள் சூழ்தகவுகள் நிர்ப்பந்திக்கும். அப்போது ஒருவரின் விருப்பு வெறுப்புக்களை இன்னொருவர் நிறைவேற்றிக்கொண்டு வாழ்வது அசாத்தியமாகிறது. அப்பாவை 'குடிக்காதையுங்கோ குடிக்காதையுங்கோ' என்று சாகிறவரையில்தானே அம்மா கெஞ்சினார். அவரால் என்றாவது அதை விட்டுவிடத்தான் முடிந்ததா?

" எனக்கும் நாளைக்கு Duisberg வரையில் போகவேண்டிய ஒரு ஒபிஸ் அலுவல் இருக்குது. வேணுமென்றால் நாம வழியில அதைக் கொடுத்திடலாம்" என்றான். பிங்கலைக்கு ஆச்சர்யம் தாளவில்லை. பெரிய கண்களை மலர்த்தி பல்லில் பொருத்தியிருந்த பிறேஸ் முழுவதுந்தெரியும்படியாக வாயைத்திறந்து வைத்திருந்தாள் ஒரு நிமிடம். அது ஈஸ்டர் விடுமுறைக்காலம். உடனே "Appa kommen wir auch mit?" (நாங்களும் வருகிறோமா?) என்றாள்.

" No problem" தோள்களைக் குலுக்கினான். பிங்கலை உள்ளே ஓடிப்போய் ஏதோ வரைந்துகொண்டிருந்த தங்கை சாதனாவை (10 வயது) உலுப்பினாள்.

" Weisst du was" (சேதி தெரியுமா உனக்கு?)

Wir gehen zu Mama" (நாங்கள் அம்மாவிட்ட போகிறோம்")

"Unglaublich. . . machts du kein Witz, wann denn?"........... நீ ஒண்ணும் தமாஷ் பண்ணலையே, எப்போ?)

"Morgen" (நாளைக்கு) பிங்கலைக்கும் சாதனாவுக்கும் இரண்டு அகவைகள்தான் வித்தியாசம். பிங்கலை பெரிய மனுஷியைப்போல சாதனா அவ்வப்போது தரும் அலுப்புக்களைத் தாங்கிகொள்வாள்.

மறுநாள் அவர்கள் புறப்படுகையில் "உன் kindersitzஐ (child safety seat) எடுத்து வையடி" என்றாள் பிங்கலை.

"நான் 120 செண்டிமீட்டர் வளந்திட்டன். அது இனித்தேவையில்லை. வேணுமென்றால் வழியிலை போலிசை நிறுத்திக்கேட்டுப்பார்".

"இவளே மாட்டிவிட்டுடுவாள் போல இருக்கு அப்பா"

"சிட்டிக்குள்ள அது ஓகே.....ஆனா இப்போ நாம »Auto Bahnல (வேகநெடுஞ்சாலை) போகிறம், நீ அதில இருக்கிறதுதான்டா செல்லம் safty". "அது Auto Bahn வந்தபிறகு பார்ப்பம்"

மகிமாவிடம் இப்படியெல்லாம் வாலாட்டமுடியாது, முதுகு கன்றிப்போகும்.

பெர்லினில் அவர்கள் வீட்டுக்குப் பக்கமாக துருக்கி இஸ்லாமியச் சமூகத்தினரின் செறிவு அதிகம். அங்கே அவர்கள் நவீனமாக ஒரு மசூதி கட்டிகொண்டிருக்கிறார்கள். அதைத்தாண்டுகையில் சாதனா கேட்டாள்.

"அப்பா...... இப்போ 'அல்லா' எங்கே இருப்பர்? "

"ஏன்டா திடீர் சந்தேகம் ? "

"Moschee (மசூதி)தான் இன்னும் கட்டி முடியேல்லையே?"

அவளின் டி.எஸ். லைட் கேம் போயை பிங்கலை எடுத்துத்தான் விளையாடத்தொடங்கவும் சாதனா 'தனக்கும் உடனே அது வேணும்' என்று அலறினாள்.

"ஒரு பன்றி அழுகிறதை முதல் தடவை கேட்கிறன்."

"இங்கே பாருங்கோ அப்பா பிங்கி என்னோட தனகிறா........ என்னையை பன்றி எங்கிறா."

"Doch du hast kein zweifel" (உனக்கும் அதைப்பற்றிச் சந்தேகம் இல்லை.) "

"நான் ஒன்றும் பன்றி இல்லை. உன்னோட Schwester (தங்கச்சி)."

"Welche den. . . die dicke Dummkopi?" (எந்த தங்கச்சிமா...... குண்டாய் முட்டாளாயிருப்பாளே அவளா?)

ஆனந்தசிவன் இவர்களின் நட்டணை தாங்கமுடியாமல் டி.என்.சேஷகோபாலனின் குறுவட்டுத் தொகுப்பொன்றை இசைக்கவிட்டான். அவளுக்கு அதுவும் பிடிக்கவில்லை. அவருடைய வேகமான கமகம் ஒன்றை அதேவேகத்துடன் தப்பில்லாமல் ஆனால் வலிச்சத்துடன் பாடிக்காட்டிவிட்டு சாதனா மீண்டும் "Ist niemand da zumm retten uns?" (அய்யோ எங்களைக் காப்பாத்த யாரும் இல்லையா?)

"ஏய் சாது அது அவரோட மியூசிக். அவர் கேட்கட்டும் உனக்கென்ன?"

"எனக்கல்ல காதுக்க அவ்வா(வலி) செய்யுது" இரண்டு காதுகளையும் பொத்தினாள்.

"நீ வேணுமென்டால் ஏன்ட MP3 ப்ளேயரைப் போட்டுக்கேள்"

"பெறவு நீ கத்துவாய் "

"இல்ல சொல்றன்லே "

அதன் சொருகிகளால் காதுகளை அடைத்தபின் கொஞ்சம் அமைதியானாள். பின் சொருகிகளை கழற்றிவிட்டுக்கொண்டு சொன்னாள்,

"மெலானிக்கு ஒரு சூப்பர் IPODப்ளேயர் கிடைச்சிருக்கு, அதுல 100,000பாட்டுவைக்கலாமாம்."

"Es ist tierisch Teuer. . . (அதெல்லாம் ரொம்ப விலையாயிருக்கும்)."

"அவளோட பயோலொஜிகல் பப்பா அவள் பெர்த்டேக்கு Geschenke (பரிசாய்) கொடுத்தது."

"இரண்டு அப்பாக்களிடமிருந்தும் அவளுக்கு எவ்வளோ Geschenke (பரிசுகள்) தெரியுமோ.... மெலானி இரண்டு அப்பாக்கள் இருக்கும் Glueck (அதிஷ்டக்காரி)."

ஆனந்தசிவன் அதைத் தனக்குள் மீட்டுக் குறுநகைத்தான்.

முன்பெல்லாம் இப்படியான Auto Bahn பயணங்களின்போது குழந்தைகள் நித்திரையானதும் மகிமாவும் தூங்கிவிடமாட்டாள். வாசிக்கும் விளக்கைப்போட்டுக்கொண்டு அவனுக்காக கதைகள் படிப்பாள். தான் பத்திரிகைகளில், இணைவலைகளில் படித்த துணுக்குகள் ஜோக்குகள் என்று சொல்லிகொண்டே வருவாள்.

அவன் கழுத்து எலும்புகளையும், தோட்பட்டைகளையும் இதமாக நீவிவிடுவாள். நொட்டு நொறுக்கும், கோப்பியும் ஹோர்லிக்ஸிமாக கலந்து தந்துகொண்டே இருப்பாள் பயணம் களைப்பில்லாமல் ஒரு இன்பானுபவமாக இருக்கும்.

Braunschweigக்கு பிரிந்துபோகும் கிளையைத்தாண்டிச் செல்கையில் 2மீட்டருக்கும் அதிகமான அகலம்கொண்ட Hummer-H2 என்கிற ஒரு அதியுல்லாச அமெரிக்கன் டிறக்வண்டி அவர்கள் காரை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டு 200 மைல்வேகத்தில் முன்னேறிச்சென்றது. அது 6 லிட்டர் கொள்ளளவில் 400 குதிரைவலுவான மெஷின் பொருத்தப்பட்ள்ள ஒரு அநியாயச் சக்திவிரையம். பணக்காரநாடுகள் கொழுப்பெடுத்த செல்வந்தர்கள் பாவிக்கும் இத்தகை வண்டிகளை இன்னும் அனுமதித்துக்கொண்டு சுற்றுச்சூழல் பற்றித்தாம் கவலைப்படுவதாகவும் சொல்வது பெரீய பாசாங்கு.

"Wer HUMMER faehrt ist Dummer" (யார் Dummer ஓடுகிறானோ அவன் முட்டாள்) என்றாள் பிங்கலை.

" அப்படி யார் சொன்னா? " ஆனந்தசிவன் கேட்டான்.

"Frau. Berg" அது அவளது சூழலியல் ஆசிரியை. அது ஒரு ஆறு மணிநேர ஓட்டம்தான். அன்று வழியில் வாகன நெரிசல் எதுவுமே இருக்கவில்லை. அவர்களுகள் சீக்கிரமே வந்து சேர்ந்து விட்டிருந்தார்கள்.

அத்தொடர்மாடிவீட்டில் வாசலுக்குச்சற்றுத் தள்ளி காரை நிறுத்திவிட்டு '' அங்கே கனநேரம் நின்று கொஞ்சிக் கொண்டிருக்கப்படாது..... சீக்கிரம் வந்திடோணும்". அவர்களை எச்சரித்து உள்ளே அனுப்பிவிட்டு சாரதி இருக்கையின் சாய்கையை பின்னே சாய்த்துவிட்டு Judith Hermannஇன் கையடக்க ' Moment before Happiness' கதைப்புத்தகத்தை வாசிக்க முயற்சித்தான். கண்கள் வரிகளைத் தொடர்ந்தாலும் அவள் சொல்லும் கதையுடன் கலக்க மறுத்தது மனம். ஒரு மணிநேரம் கழிந்திருக்கும். முன்பென்றால் இதுவரையில் ஐந்தாறு சிகரெட்டுக்களாவது ஊதித்தள்ளியிருப்பான். அதைத்தொடாமலிருக்க மனத்தை பழக்கப்படுத்திவிட்டான். நினைத்தால் ஆகாதது எதுவுமில்லையென்று கொஞ்சம் கர்வமும் அவனுக்கு. அப்போது எடுப்புத்தொலைபேசி உதறியது. பிங்கலை பேசினாள்.

" என்னடா? "

" அம்மா எங்களை இட்லி சாப்பிட்டிட்டு போகச்சொல்றா அப்பா."

" சரி சரி சீக்கிரம். Hagenô ஆன்டி எங்களுக்காகக் காத்திருக்கப்போறா."

" இன்னொரு அரைமணிநேரமாகும்............பரவாயில்லையா அப்பா? "

" சரி....சரி."

"ப்ளாஸ்க்ல இன்னும் கோப்பி இருக்கு, நீங்க குடிக்கிறீங்களா அப்பா? "

இந்த பெண் என்கிற ஒரு ஜீன் மட்டும் போதும். குழந்தைகள் என்றாலும் அவர்களிடம் எதுவோ ஒன்று கூடியே விடுகிறது.

காரின் கடிகாரம் டிஜிட்டலில் 22:00 மணியாகிவிட்டது என்றது. வானொலியை வைத்துப்பார்த்தான். அதில் கென்யாவின் தேர்தல் செல்லுமா செல்லாதா, அதைத்தொடர்ந்த வன்முறை விவகாரங்களை இரண்டாவது வாரமாக வைத்து அலசிக்கொண்டிருந்தார்கள். மீண்டும் judith இடமே சரணடைந்தான். அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் வேளையில் அவனது மனம் மாறியது. இரவு Hagn போக வேண்டாமேயென்று பட்டது.

என்ன போனால் இன்னொருதரம் துக்கம் விசாரிப்பாள். குமர் குதிர்ற வயதில இவளுக்கு எப்பிடியப்பா மதிமயங்கிச்சு? குறைஎன்ன கண்டாள் உன்னட்ட? உச்சுக்கொட்டுவாள். Kueche Einrichtungs (சமையலறை தளவாடங்கள்) செய்துதாறன். . . Laminate போட்டுத்தாறனெண்டு அந்த நாய் வீட்டுக்க அலகை நீட்டக்குள்ளயே கதவுக்கு வெளிய போய்விழ அவனை நீ உதைச்சிருந்திருக்கவேணும். உள்ளே எடுத்ததும் உபச்சாரஞ் செய்ததும்....... எல்லாம் உன்ர பிழையுந்தான். குறைகள் சொல்வாள். ஏன் பிள்ளைகள் சாப்பிடவில்லையென்று விடுப்புக்கேட்பாள், குடைவாள். பொய் பேசவராத இவளவை எதையாவது உளறினாலும் உளறலாம்.

அவர்களை 'அம்மாவிட்டைபோகவில்லை என்று பொய் சொல்லுங்கோ' என்றும் சொல்ல முடியாது.

அவர்கள் காருக்குத் திரும்பியதும் சொன்னான் "இன்றைக்கு நாங்கள் தங்க hagen ஆண்டி வீட்டுக்குப் போகவேண்டாம். இங்கேயே திரும்புவம்."

" ஏன் அப்பா?"

" வீட்டுக்கே போயிடலாம் "

" றெஸ்ட் இல்லாமல் உங்களால திரும்பவும் கார் ஓட்டமுடியுமாப்பா?"

" ஓட்டுவேன் "

" சரி. அப்போ ஆன்டிக்குப் போன் பண்ணிச் சொல்லிடுவம்"

சொன்னார்கள்.

பிங்கலையும், சாதனாவும் வீதியைக்கடந்துபோய் காரில் ஏறிக்கொள்வதையும் கார் புறப்பட்டுப்போவதையும் மகிமா தன்வீட்டு கிழக்கு ஜன்னலில் நின்று பார்த்துக்கொண்டிருந்தது எவருக்கும் தெரியாது. அடுத்த நகரமான Krefeldல் அவனது தொழில் நிமித்தமாக இன்னும் யாரையோ பார்த்து பத்து நிமிடங்கள் பேசியபின்னால் கார் பெர்லினை நோக்கித் திரும்பியது. நூறு கிலோமீட்டர் கடந்து Belefeldஐ அண்மிக்கவும் அமைதியான சூழலில் அமைந்திருந்த ஒரு பயணியர் விடுதி அவர்களை மட்டிலும் 'வருக' 'வருக' வென்று அழைப்பதைப்போல் இருக்கவும் காரை அதற்குள் இறக்கினான்.

அவ்வாடிவீட்டுக்கு இட்டுச்செல்லும் பாதையின் இருமருங்கிலும் வரிசையாக நின்ற Tulpe Nelken பூமரங்கள் பூத்திருந்தன.

இன்னும் சுற்றிலும் செறிவில் Pflaumen ஆப்பிள்மரங்கள் சூழ்ந்திருக்க ஆடம்பரங்களற்று எளிமையாக இருந்தது விடுதி.

வாசலில் ஒரு பக்கம் சிகரெட் தான்வழங்கி (Automat) மறுபக்கம் தொலை பேசிக் கூண்டும், வேகநெடுஞ்சாலையின் பெரிய வரைபடமும் இருந்தன. ஜெர்மனியின் கிழக்குத் திசையிலிருந்து புறப்பட்டு பெர்லினை அவசரத்தில் கொஞ்சிவிட்டு தென்மேற்காக Dortmund, Cologne நோக்கி வளரும் A2 வேகநெடுஞ் சாலையில் எல்லைகளற்ற ஐரோப்பாவின் உதயத்தின்பின் போலந்து, செக்கோசெலவாக்கியா, ஹங்கேரியிலிருந்து ஹொலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ், நோர்வே, சுவீடன் செல்லும் வாகனங்களின் நெரிசலும், அச்சாலையிலுள்ள வாடிவீடுகளில் கூட்டமும் சற்றே அதிகமாகிவிட்டது. ஜெர்மனியின் பெர்லின், பிறேமன், ஹம்பேர்க் போன்ற பெருநகரங்களின் ஹொட்டல்களில் சலவைத்துணிகளை பாரவுந்துகளில் எடுத்துக்கொண்டுசெல்லும் சலவைக் குழுமங்கள் இப்போதெல்லாம் அவற்றைப் போலந்தில் சலவை செய்துவிட்டு திருப்பி எடுத்துவருகிறார்கள்.

அன்றும் ஏனோ அவ்வாடிவீட்டின் உள்ளேயும் கூட்டம் அவ்வளவாக இருக்கவில்லை. உயரமான ஸ்டூல்களில் ஒரு இளம் தம்பதி அமர்ந்துகொண்டு மிதமாக பியரையும், அமிதமாக முத்தங்களையும் பரிமாறிக்கொண்டிருந்தனர். மிகவும் இணக்கமான அச்சூழலின் பதிவான தரையிலிருந்த ஷோபாக்களில் இன்னும் சிலபேர் ஏதேதோ பானகங்களை வைத்துக் குடித்துக்கொண்டும் புகைத்துக்கொண்டும் ஓய்வெடுத்துக்கொண்டுமிருந்தனர். ஊதா, சிவப்பு, ஒறேஞ், பச்சை வர்ணங்களில் ஒளியை சிமிட்டிச்சிமிட்டி உமிழ்ந்துகொண்டும் 'வா வா' என்று அழைத்துக்கொண்டுமிருந்த slots, மற்றும் Pinball மெஷின்களைக்கண்டதும் பிங்கலையும், சாதனாவும் அப்பாவின் பர்ஸிலிருந்த சில்லறைகள் அத்தனையையும் கபளீகரம் செய்துகொண்டுபோய் ஆளுக்கொரு மிஷினைக் கைப்பற்றிக்கொண்டு ஆடத்தொடங்கினார்கள்.

விடுதியின் பார் அணங்குக்கு முப்பது வயதிருக்கும் வாரத்தில் ஒருநாள்தான் சாப்பிடுபவள்போல இளைத்த வார்ந்தெடுத்த தேகம்.

சந்ததிச்சங்கிலியில் எவ்விடத்திலோ ஆபிரிக்கன் ஜீன்ஸ்களும் கலந்திருக்கவேண்டும். கீரியின்கேசமன்ன சிறு அலையலையாய் அடர்ந்து திரண்டு திமிர்த்துத்திணறிக் கொண்டிருந்த கூந்தலைக் கூட்டியள்ளி உச்சந்தலையில் கட்டிக்கொண்டிருந்தாள்.

அது ஒரு கடல் அனிமோனியை தூக்கிவைத்துவிட்டமாதிரியும் அவளை மேலும் வாலையாக்குவதாயுமிருந்தது. சிரிக்கின்ற கண்களின் பின்னால் சிறுகிறக்கத்தை மறைந்து வைத்துக் கொண்டு இவனை ஒரு வாடிக்கை விருந்தினனைமாதிரி அமர்க்களமாய் எதிர்கொண்டு வரவேற்றாள். தனக்கு ஒரு பெக் டீரனறநளைநச பியர் வார்க்கச்சொல்லிவிட்டு அவளின் இதமான உபச்சாரத்துக்காக ஒரு கிளாஸ் ஷாம்பேனை அவளுக்கும் தன் கணக்கில் வழங்கினான். பியரைக் குடித்துக்கொண்டே பாரின் கண்ணாடி விறாக்கைகளிலிருந்த hot சமாச்சாரங்களைத் துழாவினான். எல்லாமே Ballentine, Teachers, Johnny Walker, Jim Beam, Wyborowa Vodka, Jacobi 1880, Asbach Uralt, Jack Daniels என்று பெருக்கன் வெட்டிரும்புகளாக இருந்தன.

" கொஞ்சமும் Fine Stuffs கிடையாதா?"

" Zum besipiel menine Monsieur?" (எடுத்துக்காட்டாய் என் மெஸியூ.)

" Hennessy, Dimple, Glenfiddich, Chivas....... (இப்பிடி)?"

" அதெல்லாம் இந்த வாடிவீட்டுக்கு கொஞ்சம் அதிகப்படி மெஸியூ."

" What about some Remy Martin?"

" Ideal ma. . .Cool hast du was (வைத்திருக்கிறாயா)? "

" இல்லை இங்க இல்லை. என்கிட்ட பெர்ஸனல் அறையில இருக்கு. இன்னும் அரைமணியில் Barஐ மூடியிட்டு நாம அங்கே போயிடலாம்." கண்ணடித்தாள்.

இளம் மின்னலின்கொடி ஒன்று அவன் உயிரின்மேல் பரவிப்படிந்து ஒளிர்ந்தது.

" ரொம்பத் தொலைவா?"

" இல்லை..... இங்கேதான். மெஸியூ யோசிக்கிறாப்போல. இங்கே கரடி புலி ஒன்றுங்கிடையாது.

எல்லாம் மனுஷங்கதான். அதுவரைக்கும் இன்னொரு பியர் சாப்பிடுகிறீர்களா மெஸியூ?"

இரண்டு பெக்ஸிம் உள்ளே போனதும் " எமக்கு இரண்டு kinderbett (குழந்தைப்படுக்கை)களுடன் கூடிய ஒரு அறை கிடைக்குமா?" என்று கேட்டான்.

" kinderbett எல்லாம் எதற்கு ஒரு சிங்கிள், ஒரு டபுள் பெட்ஸோட அறை தரலாமே......."

"பைன். "

" குழந்தைங்களுக்கு சான்ட்விட்ச் ஏதாவது பண்ணவா?"

" வேண்டாம் நன்றி. ஒருமணி முன்னதான் சாப்பிட்டார்கள்."

விளையாடி ஓய்ந்த குழந்தைகள் கொஞ்சம் பஷன்+ மாறகுயா+ ஒறேஞ் கலந்த ரசம் குடித்தபின்னால் அவள் காட்டிய அறையில் போய் தூங்குவதற்கான உடைகளை அணிந்துகொண்டு தொலைக்காட்சி பார்க்கத்தொடங்கினார்.

" நான் இந்த ஆன்டியோட கொஞ்சம் கதைச்சுக்கொண்டிருந்திட்டு வருவேனாம்.... நீங்கள் நெடுக டிவியையே பார்த்துக்கொண்டிராமல் படுத்திடோணும் என்ன........ Gute Nacht Kinder"

" அப்பா அங்கே ஸ்பிறிட்ஸ் கனக்க மண்டுறேல்ல..... சொல்லியிட்டன். "

பிங்கலை எச்சரித்தாள்.

Remy Martin Cognacகோடு கடிக்க வார்ந்த Wild-boar இறைச்சியைத்தட்டி மசாலாக்கள் தடவி கணிதமாய் கிறில் பண்ணிக்கொடுத்தாள்.

இருவரும் சாப்பிட்டானதும் 'உன் பெயருக்கு என்ன அர்த்தம்?' என்று கேட்டாள் படுக்கையில்.

"எப்பொழுதும் பேரானந்தமாக Infinitive-Ecstacyயோட சதா சிவனாக, உல்லாசமாக இருப்பவன், இறைவன் என்றெல்லாம் பல அர்த்தங்கள் உண்டு அதுக்கு. அவளின் இடுப்புக்குள்ளால் கையை நுழைத்து சேர்த்து இறுக்கியபடி இதுவும் அதில இருந்து பறந்த ஒரு sparkதான்" என்றான். சுகிர்தங்கள் அரிவையர்களாகவே அள்ளித் தருகையில் அதன் லயங்களே எப்போதும் தனி.

நிறையவே அள்ளிப்பகிர்ந்தனர்.

பின்னால் மிகத்தாமதமாக ஓசை எழுப்பிவிடாமல் பூனைபோல வந்து தங்களுக்கான அறையில் படுத்துக்கொண்டான். கலர்க்கனவுகள் சில வந்தன. காளிமாதிரி விரித்த சடையுடன் திரிசூலம், ஈட்டி, தீப்பந்தங்களோடு ரௌத்ரமாக வந்ததுதான் கற்புக்கடவுளின் படிமம் என்றால்..... பின்னால் கடிக்கவேணும் போலொரு வழவழப்பில் வந்து ஒத்திவிட்டுப்போன தேவதைகள் யார்? பாவனைகள் தீர்ந்தபின்பே இடையீடுகளற்ற நல்ல தூக்கம் வந்தது.

காலையில் எழுந்ததும் குளித்தான். புத்துணர்ச்சியுடன் கூடத்துக்கு பிள்ளைகளோடுபோய் உணவு மேசையில் அமர்கையில் அப்போதுதான் நினைத்துக்கொண்டவன் போல பிங்கலையிடம் கேட்டான்: "அம்மா வேற என்னடா சொன்னா?"

"நாங்கள் தலைமயிரை ஷோர்ட்டா வெட்டியிருப்பதைப் பார்த்ததும் அழுதாப்பா. எதுக்கிப்படியென்று கேட்டா...... நான்தான் காலையில தலைசீவப் பின்னப் பராமரிக்க ரொம்ப நேரமாகுதெண்டு 'கட்'பண்ணிட்டோமென்று சொல்லிச்சமாளிச்சன்."

"You are too smartறா செல்லம்."

" உங்களுக்கு அம்மாமேல கோபமில்லையாப்பா?"

" இல்லை."

" எப்பிடிப்பா..... ஏம்பா?"

" அவ நிறைய தந்திருக்காடா."

" புரியலை? "

" உங்களை எனக்கு தந்திருக்கா. அது அவளாலதான முடியும். பாடுபட்டு இதுவரையில உங்களை வளர்த்தது எல்லாம் அவதானே....... அதனால கடன் பட்டிருக்கோம்டா."

" எல்லாத்தையும் இவ்ளோ கூலா எடுத்துக்கிற உங்களைவிட்டிட்டு அப்புறம் ஏம்பா அவ........." அவளுக்கு முடிக்க வார்த்தைகள் வரவில்லை.

விம்மவும் கண்கள் நிறைந்து வழிந்தன.

வீதியில போற எல்லா கார்களுமா அடிபடுகுது...... எங்கோ ஒண்ணுக்குதானே அப்பிடி ஆகுது. அப்பிடி அதுவும் ஒரு விபத்தடா.

அவ்வளவுதான்.......ஏன் எதனால என்று ஆராய்வதெல்லாம் waste and vain yeah எந்த முடிவுக்கும் வரமுடியாது"

" சரி...... தனக்கு தம்பிப் பாப்பாதான் பிறக்குமென்று டொக்டர் சொல்லிட்டாராம். அப்பாவிட்ட நல்ல தமிழ்ப்பெயர் ஒன்று கேளடி என்று சொன்னாப்பா."

" பார்க்கலாம். "

" இரவு முழுவதும் நீங்கள் தூங்கவேயில்லை அப்பா. யாரையோ funny. . .funnyயா திட்டிக்கொண்டே இருந்தீர்கள்."

" திட்டினேனா....... நானா இருக்காதே......... சரி எப்பிடிடா செல்லம்? "

அவள் அரைமண்டி இடுவதற்கு செய்வதுபோல இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு முன்குனித்து ஒரு மரங்கொத்தியின் வேகத்தில் தலையை முன்னுக்கு ஆட்டியாட்டி " Schlampe. . . Schlampe. . . Schlampe. . . Schlampe. . . (அவிசாரி) என்று சொன்ன விதம் அவனுக்கு சிரிப்பை வரவழைத்தது.

அவ்வேளை மகிமாமேல் பித்தாக அலைந்த காலத்தில் பெய்த கவிதையொன்றும் அவன் நினைவின் அடுக்குகளில் கசிந்து குமிழ்த்துக் கிளம்ப எத்தனிக்கிறது.

என்னைக் கல்லும் முள்ளும்
வலிசெய்வதில்லை இப்போ, ஏன் ?
வெந்த தார்ச்சாலையே
சுடுவதில்லை
கால்கள் தரையில்
பாவாமல் செய்யும்
உன் நினைவுகள் என்னடி
ஹீலியம் வகையதா?

"She is good like a Frog. . . ஒரு வைரம் இடம்மாறி இருக்கிறதால அது வைரம் இல்லை என்றாகுமா...... Biological Papas, Preventive \ Papas, shared Slates all in the game. . .ma"

"என்னப்பா சொல்றீங்க? "

ஆனந்தசிவன் கண்களில் நீர்கட்டும் வரைக்கும் சிரித்துக்கொண்டிருந்தான்.

இரவு கீறினதுதான் அப்பாவுக்கு இன்னும் சரியாக முறியவில்லையென்று பிங்கலை நினைத்தாள்.

சாதனாவுக்கு எதுவும் புரியவில்லை.

நன்றி: உயிர்மை

(karunah08@yahoo.com)



# நிர்வாண மனிதர்கள்

வி. ஜீவகுமாரன்
டென்மார்க்

கணனித் திரைக்கு முன் சுஜித்தா.

ஹோலுக்குள் இருந்து நாங்கள் மூவரும் நிர்வாண மனிதர்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தோம். விவாதிப்பது என்பதை விட ஒருத்தரின் கருத்தை மற்றவர்கள் ஆமோதித்துக் கொண்டிருந்தம்.

"அங்கிள். . . கமோன். வந்து பாருங்க. . அப்பா அம்மாவும் வாங்கோ. . ."

சுஜித்தா 5 வயதுப் பெண்ணாக சந்தோஷத்தில் துள்ளினாள்.

அவள் ஒரு கிரபிக் எஞ் ஜினியர். வயது 22.

அவள் அமர்ந்திருந்த எனது அறைக்குள் ஓடிப்போனோம்.

எனது கணனியில் பிரபஞ்சத்தில் அனைத்துக் கிரகங்களும் சுற்றிக் கொண்டிருக்க பூமிப்பந்து மட்டும் தனித்து மேலே நோக்கிக் கொண்டு வருகிறது.

அடுத்த வினாடியில் அமெரிக்கா, அந்தாட்டிக்கா, அவுஸ்திரேலியா, ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என அகரவரிசைப்படி அனைத்துக் கண்டங்களும். . . . பூகோள உருண்டையில் இருந்து எழுந்து வந்து வந்து மறைந்து கொண்டு இருக்கின்றது.

எழுந்து வரும் பூகோள உருண்டையில் மனிதர்களின் அசைவுகளும் தெரிகிறது.

கணனித் திரையில் வெளிச்சத்தைக் கூட்டிக் குறைத்து அண்மித்து உற்றுப் பார்க்கின்றேன்.

மேலே வரும் மனிதர்கள் எங்களுக்கு கையை அசைத்துக் காட்டி விட்டுப் போவது போலத் தெரிகிறது.

இன்னும் உற்றுப் பார்க்கின்றேன்.

அவைகளில் அதிகமாய் தெரிந்த முகங்களாய் இருக்கிறது.

ஒவ்வொரு கண்டங்களின் எங்கோ ஒரு மூலையில் இருந்து ஓட்டப் பந்தயம் ஆரம்பிக்கின்றது போல இருக்கின்றது.

ஒலிம்பிக் பந்தயத் தீப்பந்தம் ஏந்திக் கொண்டு ஓடுவது போல ஒவ்வொருவரின் கையிலும் கையிலும் வெற்றி வாடகை சூடியதைக் கொண்டாடும் வெற்றிக் கொடிகள். அதிகமானவை ஐரோப்பா நாட்டுக் கொடிகள் போல இருக்கிறது.

அவர்கள் ஐரோப்பாவில் வென்ற கொடிகளா?. . .இல்லை ஐரோப்பாவை வென்ற கொடிகளா?. . .. . .வென்றவர்கள் அவர்கள் ஆயின் தோற்றவர் யார்?

இன்னும் உற்றுப் பார்க்கின்றேன்.

அதில் ஓடுபவர்களின் உடம்பில் யாதொரு துண்டு துணியையும் காணவில்லை.

“யூ நோட்டி சுஜி” அவளின் காதை செல்லமாக பிடித்து திருகினேன்.

“நீங்கள் தான் இவளைத் திருத்த வேணும். . .இவளை டென்மார்க்கிலிலேயே விட்டுட்டுப் போறம். . . இவளை கட்டி அவிழ்க்க எங்களாலை ஏலாது” சாந்தி ஆமோதித்தாள்.

வயதான ஆண்கள். . பெண்கள். . .இளம் குடும்பத்தினர்... இளைஞர்கள்.. யுவதிகள் என அனைவரும் தமிழர்கள் போலத் தெரிகிறார்கள்... எனக்குத் தெரிந்த.. நான் சந்தித்த... நான் பேசி மகிழ்ந்து என்னுடன் சேர்ந்து விருந்துண்ட... தமிழர்கள் போலத் தெரிகிறார்கள். . .ஆனால் யாருக்கும் நிர்வாணத்தைப் பற்றிய வெட்கம் ஒரு துளியும் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆளுக்கால் கதைத்துக் கொண்டு. . . தங்கள் தங்கள் பிள்ளைகளை தாங்கள் தாங்கள் கவனமாக பார்த்தபடி. . . தங்களுக்கு வேண்டியவரை அணைத்தும் வேண்டாதவரை விலத்தியும் கொண்டு ஓடுகிறார்கள்.

பிள்ளைகளின் உடம்பில் மட்டும் ஆடை இருக்கின்றது.

சிலர் நிர்வாணமாய் ஓடிக் கொண்டிருந்தாலும் அவர்கள் வழமையாக பாவிக்கும் மூக்கு கண்ணாடி மட்டும் கண்களிலேயே இருந்தது. இன்னும் சிலரின் காதுகளில் வாக்மேன் தொங்கிக் கொண்டிருந்தது.

இந்த நிர்வாணமாய் ஓடுபவர்களுக்கிடையே ஏதோ ஒரு ஒற்றுமை இருக்கு. . .நன்றாக யோசிக்கின்றேன்.

ஆம். . .இவர்கள் அனைவரின் படங்களும் என் பேஸ் புக்கில் இருக்கு! சிலரின் படங்கள் எனக்குத் தெரிந்த நல்ல நண்பர்களின் பேஸ்புக்கிலும் இருக்கு.

“என்ரை பேஸ் புக்கை ஹக் பண்ணினியா”

அவள் மீண்டும் குழந்தையாகச் சிரித்தாள்.

“இவங்கடை மானத்தை வேண்ட ஹக் பண்ணுறதிலை தவறே இல்லை அங்கிள். . . அவன் அவன் தப்பு பண்ணேக்கை சமுதாயம் தங்களை இப்பிடிப் பார்க்குது எண்டு பீல் பண்ண வேணும்.

இவன்களுக்கு ஏன் அங்கிள் கோட்டும் சூட்டும் . . கோயிலும் குளமும். . . பூவும் நகையளும்”

தாய் சற்றுமுன் ஆத்திரத்துடன் பொரிந்து தள்ளியதை மகள் ஆமோதித்தது போல இருந்தது அந்த கிரபிக் வேலைகள்.

தொடர்ந்து கவனித்தேன்.

இதையும் தாண்டி அவர்களுக்குள் ஏதோ ஒரு ஒற்றுமை இருக்கு.

அனைத்துக் கண்டங்களிலும் இருந்து ஆரம்பிக்கும் இந்த மரதன் ஓட்டம் ஐரோப்பாவின் திசையை நோக்கி நடைபெறுகிறது. அனைத்து நாட்டு ஆரம்ப புள்ளியில் இருந்து புறப்படும் அம்புக் குறிகள் ஐரோப்பாவின் தலைநகரங்களையே தலைநகரையே நோக்கி சுட்டி நிற்கிறது.

கடல்கள். . காடுகள். . .பாலைவனங்கள் . .எல்லாவற்றையும் தாண்டி எவ்வாறு இவர்கள் டென்மார்க்கை வந்தடையப் போகின்றார்கள்.

குளிர், வெயில், மழை, காற்று இவற்றினிடையே உடம்பில் ஒரு ஒட்டுத் துணி இல்லாமல் இவர்கள் எப்படி இங்கு வந்து சேரப் போகின்றார்கள்.

“போன மாதிரி வருவங்கள்”

திரும்பிப் பார்த்தேன்.

இப்ப சுஜி கதிரையில் இருந்தபடியே அரைகுறை நித்திரையில் அலட்டுவது போல இருந்தது.

"சுஜி. . . எழும்புங்கோ. . .எழும்புங்கோ. . .அப்பா அம்மாவோடை போய் என்ரை அறைக்குள்ளை போய் படுங்கோ. நான் ஹோலுக்கை சோபாவிலை படுக்கிறன்.

நல்ல குளிரான யூஸ் ஒரு கிளாசை எடுத்துக் கொண்டு திரும்பி வந்து கம்பியூட்டருக்கு முன்னே இருந்தேன் இன்னும் சிலரை அந்த நிர்வாண ஓட்டத்தில் இணைப்பதற்காக.

இன்ரநெற் தொடுப்பு அற்றுப் போய் இருந்தது.

வைரசு கம்பியூட்டரைத் தாக்கி இருந்தது.

"ஸிட். .." என வாய்க்குள் திட்டியவாறு சோபாவில் போய் விழுந்தேன்.

*

**சா**ந்தியின் றெயின் வர இன்னும் ஐந்து நிமிடம் தான் இருக்கு.

நான் ஸ்டேசனில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் நிற்கின்றேன் . கார் றவிக்கில் மாட்டிக் கொண்டு விட்டது.

இன்று றொஸ்கில மியூசிக் பெஸ்ரிவல் ஆரம்பம் என்பதை மறந்தே போய் விட்டேன்.

ஐரோப்பாவில் உள்ள இசைப்பிரியர்கள், குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி. உலகம் முழக்க உள்ள தலைசிறந்த பாடகர்கள் கலந்து கொள்ளும் நான்கு நாள் நிகழ்ச்சி.

இந்த நான்கு நாட்களுக்கும் இசை என்பது ஒரு முகம் என்றால் காதல்,காமம்,கஞ்சா,தூள்,தண்ணி என்பன அதன் அடுத்த முகங்கள். இதனிடையே பல களவுகள்.

இரவு முழக்க ஆட்டமும் பாட்டும். . . . பகல்வெயில் சுடும் வரை அல்லது குடித்தது முறிந்து பசி எடுக்கும் வரை தூக்கமும். . . . பின் அடுத்தநாள் இரவுவரை றொஸ்கில் தெருக்களில் அலைதலும் . . நாலுநாள் அட்டவணையும் ஒன்றேதான்.

சில ஜோடிகள் பிரியும். . . .சில ஜோடிகள் சேரும்... ஐம்பதினாயிரமாக உள்ள றொஸ்கிலின் குடிசனம் இந்த நாட்களில் ஒரு லட்சமாகும். பாதையோரங்கள் எல்லாம் கடைகள் ஆகும். பாதுகாப்பும் இரட்டிப்பாகி இருக்கும். அடித்து விலத்த ஏலாத சனக் கூட்டமாய இருக்கும்.

எயிட்ஸ் விழிப்புணர்வு இயக்கங்கள் வீதிக்கு வீதி நின்று ஆணுறைகளை இலவசமாக வழங்கிக் கொண்டு நிற்பார்கள்.

இந்த நெரிசலில் தான் றெயின் வந்து விடப் போகின்றது என்ற பதைபதைப்பில் நான் காரின் ஸ்ரேறிங்கை இறுகப்பிடித்தபடி.

இளைஞர்களும் யுவதிகளும் ஆளைஆள் அணைத்தபடி அரைகுறை ஆடைகளுடன் சம்மரை அனுபவித்தபடி. . . எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாது இளமையை இனிதே அனுபவித்தபடி.

சாந்தி!

மிகவும் தூரத்துச் சொந்தம் மச்சாள் முறை நல்ல பணக்காரர்.

இதே இளம் வயதில் அவள் புத்தகங்களை நெஞ்சுடன் கட்டிக் கொண்டு கம்பஸ்க்குள் வரும் போதும் போகும் போதும் ஒரு தேவதை வந்து போவது போல இருக்கும்.

கம்பி வேலியில் அமர்ந்திருக்கும் எனக்கு பக்கத்தில் நின்ற மலைவேம்பின் குளிர் காற்றை அப்பொழுது தான் நான் அனுபவித்தது போலத் தோன்றும்.

சொல்லவா. . விடவா. .என முதலாம் வருடத்தில் ஆரம்பித்த தயக்கம் மூன்றாம் ஆண்டு வரை இருந்து கொண்டே வந்தது. அவள் மறுத்து விடுவாளோ என்ற பயம் ஒரு பக்கம். . . விடயம் அறிந்தால் வீட்டில் உரித்து விடுவார்கள் என்ற பயம் மறுபக்கம்.

கடைசியாக ஒரு நாள். . கம்பஸ் ஒன்றுகூடலில் வைத்து உடைத்து விட்டேன்.

நான் பயந்த மாதிரி கோபப்படவில்லை  சிரித்து விட்டுப் போனாள்.

'அப்பாடா' என்று இருந்தது.

அதன் பின் அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு கம்பஸ்க்கு பின்னால் உள்ள ஒழுங்கையில் கதைத்துக் கொண்டு வர. . . களவாக ஒரு நாள் ஆவது சனம் குறைந்த ஒரு தியேட்டரில் அக்கம் பக்கம் இருந்து படம் பார்க்க... சைக்கிள் பாரில் வைத்து திருநெல்வேலிப் புகையிலைத் தோட்டங்களுக்குள்ளாகவும் பனங்கூடல்களுக்கு நடுவாகவும் பயணிக்க எல்லாம் மனம் ஏங்கும்.

சாந்தி அசைந்தால் தானே.

"உன்னை விட பெரியமாதா கோயிலிலை போய் ஒரு சிஸ்ரரைப் பார்த்திருக்கலாம்"

அதுக்கு பிறகு இரண்டு கிழமையாக எங்களுக்குள் எந்தப் பேச்சு வார்த்தையும் இல்லை.

பிறகு சண்டை சமாதானமாகி ஒரே ஒரு வெள்ளிக்கிழமை மட்டும் இருவருமாய் நல்லூர் கோயிலுக்குப் போனோம். அங்கும் ஆளுக்கால் குறைந்தது ஐந்தடி இடைவெளி இருந்தது.

மூலஸ்தானத்தை சுற்றி வரும் போது மட்டும் கையிலிருந்த சந்தனத்தை அவள் நெற்றியில் இட்டு விட்டேன். முதலில் முழிசி விட்டு பின் புன்சிரிப்புடன் நகர்ந்து விட்டாள்.

கட்டியணைத்து முத்தம் இட்டுக் கொண்டு போகும் வேகத்தில் என் கார் ஊர்வதைப் பொருட்படுத்தாத ஒரு கானாக்காரனும் டெனிஷ்காரியும் என் காரில் தாங்களே தட்டுப்பட்டு விழுந்து தாங்களே எழுந்து கொண்டார்கள்.

பிழை தங்களது எனத் தெரிந்தும் ஒரு சொறி கூடச் சொல்லாமல் நடு விரலைத் தூக்கிக் காட்டி விட்டு இன்னும் இறுக்கமாக அணைத்தபடி செல்லுகின்றார்கள். இருவர் கையும் இருவரின் பின் புறத்தை வருடியபடி இருக்கின்றது.

றெயின் வந்துவிடப் போகின்றது என்ற படபடப்பு இல்லா விட்டால் விரலைத் தூக்கி காட்டியதற்காக இறங்கி நாலு கேள்வி கேட்டிருப்பேன். ஆபிரிக்க பன்டியே என ஆங்கிலத்தில் பேசியிருப்பேன். அல்லது அவித்த இறால்காரியே என அவளை டெனிஷ் மொழியில் திட்டியிருப்பன்.

சுமார் 25 வருடத்துக்குப் பிறகு சாந்தியையும் அவள் புருஷனையும் மகளையும் இப்ப காணப் போகின்றேன்.

செல்வி சாந்தி கருணாகரன் திருமணத்தின் பின்பும் சாந்தி கருணாகரனாகவே இருப்பாள் என மலைவேம்பு மரத்தின் கீழ் மணிக்கணக்கில் நின்று பேசிக் கொண்டு நின்றிருப்போம்.

அனுபவம் இல்லாத அரசியல். . . பல்கலைக்கழக மாணவன் என்ற திமிர். . . எதுவும் செய்யலாம். . .எதையும் தட்டிக்கேட்கலாம் எனப் புறப்பட்ட பொழுது தான் சில பயங்கர உண்மைகளை தரிசிக்க வேண்டி வந்தது.

தலை மறைவாக வேண்டும். . .அல்லது தலை போகும்.. என்ற நிலை வந்த பொழுது ஐரோப்பியக் கதவுகளும் திறந்திருந்தது.

“கக்கூஸ் கழுவுறவனுக்கு கடைசிவரை என்ரை பிள்ளையை கட்டிக் கொடுக்கமாட்டன்”, என்று சாந்தி வீட்டார் கடைசிவரை மறுத்து விட்டார்கள்.

பின்னேரத்தில் கக்கூஸ்தான் கழுவுறன் ஆனால் கம்பியூட்டர் எஞ்ஜனினியருக்கு படிக்கிறன் என்று சொன்னதை யாரும் அங்கு நம்பவில்லை.

எல்லோரும் அவர் அவர்கள் அளவுகோலால் தானே மற்றவர்களை அளப்பது.

சாந்தி வீட்டாரின் பிடிவாதம் ஜேர்மனியிலை இருந்து போன ஒரு காரைநகர் எஞ்ஜினியருக்கு செய்து கொடுத்து இருக்கிறார்களாம் என்று தகவல் வந்தது.

எங்கள் இரண்டு வீட்டுக்கும் இருந்த கொஞ்ச சொந்தமும் அற்றுப் போய் விட்டது. கலியாணத்து சொல்லியும் எங்கடை வீட்டார் போகேல்லையாம்.

இரண்டு மாதமாக ஒரு விசரன் போலை. . . அவளின் படத்தையே வைத்து பார்த்துக் கொண்டு. . தலைமாட்டில் தலையணைக்கடியில் வைத்துப் படுத்துக் கொண்டு. . .முதன் முதலில் வொட்கா கூட வேண்டிக் குடித்துப் பார்த்தன். பிறகு அதுவும் விசர்வேலை என்று விட்டு வளர்ந்திருந்த தாடியை வழித்து விட்டு என் படிப்பினுள் இறங்கி விட்டன்.

அவளின் படத்தை எடுத்து லாச்சிக்குள் வைத்து பூட்டி விட்டேன்.

அவள் பாவம் என்ன செய்திருக்க முடியும் என்னைப் போலவே மனதினுள் அழுதிருப்பாள். அல்லது பெலமாக கத்தியிருப்பாள். . . பின் எல்லாம் அடங்கியிருக்கும்.

ஸ்டேசனை அடைந்து விட்டாலும் காரை நிறுத்துவதற்கு பெரும் பாடாய் இருக்கிறது.

கார் விடும் இடங்கள் எல்லாம் காதல் + காம ஜோடிகள் கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆட்களில் தட்டு முட்டுப் பட்டு விட்டால் அடுத்த இரண்டொரு வருஷத்திற்கு லைசென்சுக்கு ஆபத்து.

கட்டாயம் இப்பொழுது றெயின் வந்திருக்கும்.

தூரத்தில் தானியங்கியாய் பத்திரிகைகள், புத்தகங்கள் விற்கும் மெசினுக்கு முன்னால் பரமகுரு அண்ணை நின்று கொண்டு செக்ஸ் மக்கசீன்களின் நிர்வாண அட்டைப் படங்களை ரசித்துப் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்.

எனக்கு வாய்க்குள் சிரிப்பு வந்தது. நிச்சயமாக அந்தச் சிரிப்பு வந்திருக்க கூடாது. ஆனாலும் வந்து விட்டது.

அவருக்கு 65 வயதிருக்கும். பேரப்பிள்ளைகள் கூட இருக்கின்றார்கள். கையில் வேறு ஒரு தினசரிப் பேப்பர். குறிப்பிட்ட அந்த தினசரியின் 9ம் பக்கத்தில் தினமும் ஒரு பெண்ணின் நிர்வாணப் படம் பிரசுரமாகியிருக்கும். பேப்பரை மனுஷன் சுருட்டி வைத்திருக்கின்றார்.

கட்டாயம் வீட்டுக்கு போகமுதல் எறிந்து விடுவார். . .அப்படி உலக அரசியலோ, இலக்கியமோ அந்தப் பத்திரிகைகளில் வருவதில்லை. எல்லாம் கொலை, களவு, கற்பழிப்புத் தான்.

சாந்தி ஆட்கள் பிளட்போமில் என்னைத் தேடிக் கொண்டு நிற்பாள் என்ற அவசரத்தில் கீழ்ப்படிக்கட்டில் இறங்கி ஓடினேன்.

நான் எதிர்பார்க்கவே இல்லை. அவள் அப்படியே இருந்தாள். முன் தலையில் மட்டும் சின்ன நரை. பக்கத்தில் புருஷன், மகள்.

புருஷன் "ஹலோ" என்று கை தந்தார். மகள் "ஹாய்" என்று என்று என்னுடன் ஒட்டிக் கொண்டாள்.

அவர்களது பெரிய சூட்கேசுகளைத் தூக்குவதில் நானும் பங்கெடுத்துக் கொண்டேன்.

அவளின் சூட்கேஸ் ரொம்பக் கணத்தது.

"என்ன இப்பிடிக் கணக்குது"

"எல்லாம் சுஜின்ரை விதம் விதமான சப்பாத்துகள் செருப்புகள்"

"இல்லை அங்கிள். . .அம்மா உங்களுக்கு சுட்ட பலகாரங்கள்"

அவர்களின் கடிபாடு ரசிக்கக் கூடியதாக இருந்தது.

மேலே நாங்கள் ஏறி வரும் பொழுதும் பரமகுரு அண்ணை இப்பவும் அந்த நிர்வாணப் பட மக்கஸீன்களைப் பார்த்தபடி... நான் தன்னைக் கண்டது அவருக்கு சங்கடமாய் இருந்திருக்க வேண்டும்,

"இந்த அரியண்டங்களை எல்லாம் இதிலை போட்டு வைச்சிருக்கிறாங்கள் தம்பி" அசடு வழிந்தார்.

மீண்டும் எனக்குள் அதே சிரிப்பு.

சாந்தி சங்கேதத்தாள் நெளிந்தாள்.

"யாரு ஆட்கள்?"

"எங்கடை ஊர் தான்" என்றளவில் மெதுவாக நகர்ந்தேன்.

"உங்கடை பிறண்டா அங்கிள். . ."

கொஞ்சம் நகர்ந்ததும் சுஜி கேட்டாள்.

"இல்லையே. . .ஏன்?"

"முழுக்கள்ளன் என முகத்தில் எழுதி ஒட்டியிருக்கு" சொல்லி விட்டு சிரித்தாள்.

"நீங்க கெஸ் பண்ணினது சரி!. . ஆட்களை கொண்டு வாற ஆள். . .எத்தினையோ பேருக்குநாமம் போட்டுட்டு ஆள் ஜென்றில்மனாய் திரியுது"

"ஏன் எங்கடை சனம் தொடர்ந்து ஏமாந்து கொண்டு இருக்கு", சாந்தியின் புருஷன் கேட்டார்.

"பழகேக்கை என்ன பூதக்கண்ணாடி பிடிச்சுக் கொண்டா பழகிறது. . . எல்லாரும் அண்ணா, அக்கா, ஐயா, அங்கிள், அன்ரி எண்டு நல்லாத்தான் தொடங்கிறது" கதைத்துக் கொண்டே காரடிக்கு வந்துவிட்டோம்.

“பார்த்திங்களா எங்கடை சிட்டியிலை எவ்வளவு சனம் எண்டு.” பேச்சைத் திருப்பினன்.

“ஓம். றெயினுக்கையும் உங்கடை ஸ்டேசன் வரும் வரையும் சரியான சனம். நல்லூர்த் திருவிழா போலை கிடக்கு” நல்லூர் என்று சொன்ன பின்பு அவளாகவே அவள் நாக்கை கடித்திருக்க வேண்டும்.

எனக்கு ஒரு தரம் மூச்சு மேல் எழுந்து தாழ்ந்தது. மீண்டும் நான் என்னை சுதாகரித்துக் கொண்டேன்.

“நீங்கள் இங்கை நிற்கப் போற இந்த நாலு நாளும் இந்த சிற்றியிலை இப்பிடித்தான் சனம் இருக்கும். ஏதாவது சாமன்கள் எண்டால் நாங்கள் பக்கத்து சிற்றிக்கு போய் வேண்டுறது தான் புத்தி” கார் சிற்றியை விட்டு கடற்கரை வழியாக ஓடத் தொடங்கியது.

நல்ல காற்றும் வீசத் தொடங்கியது.

“கொழும்பிலை பீச் றோட்டிலை போற மாதிரி இருக்கு. . .இது மாதிரி பீச் றோட்டுக்கு ஜேர்மனிலை நோ சான்ஸ்” சாந்தியின் புருஷன் டென்மார்க்கை ரசித்தார்.

“இல்லை அங்கிள் . .அப்பாக்கு தெரியாது.. .எங்கடை சிற்றியிலை இருந்து ரொம்ப தூரத்திலை இருக்கு. . .அப்பாதான் கூட்டிக் கொண்டு போறதில்லை”

“ஓகே. .ஓகே. . .இஞ்சை நிக்கிறவரை ஆசைதீர குளியுங்கோ”

கொஞ்சத் தூரம் செல்ல கடற்கரை முழக்க ஆண் பெண்களும் உள்ளாடைகளுடன் மட்டும் சூரிய வெளிச்சம் தம் உடலில் படவும், குப்புறவும் படுத்து இருந்தார்கள். சில இடங்களில் குடும்பமாக பிள்ளை குட்டிகளுடன். சில பெண்கள்கள் மார்புக்கச்சை கூட அணிந்திருக்வில்லை.

“இந்தக் கருமம் இங்கையுமா”, சாந்தி.

நான் சிரித்தேன்.

“உங்களுக்குத் தெரியுமா வருஷம் முழக்க கஷ்ட்டப்பட்டு வேலை செய்யுறதே. . எப்ப வெயில் வரும். . .இப்பிடி படுத்துக் கிடக்க வேண்டும் எண்டும் தான். உங்கடை ஜேர்மனிலையிலை அதிகம் கடல் இல்லாததாலை அதிகம் ஜேர்மன்காரன்கள் கூட இங்கை வாறவங்கள். . .

எனக்கு என்னவோ இவங்கள் இப்பிடிப் படுத்துகிடக்கிறதை அக்செப்ற் பண்ணக் கூடியதாய் இருக்கு. . .எங்கடை லீவுகளுக்கு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு சொந்தக்காரர் வீட்டை போய் பழையபடி புட்டு, சோறு, புட்டு என்று சாப்பிட்டு விட்டு சோபாவிலை இருந்து பழைய கதையளை கதைச்சுக் கொண்டிருக்க பிள்ளையளுக்கு அரைவாசி விளங்கியும் அரைவாசி விளங்காமலும் முழிசிக் கொண்டிருக்க. . . .இது பரவாயில்லைத் தானே. .. ஒரு வருஷ ஓட்டக் களையை ஐந்து கிழமையும் நன்றாக ஆற்றுகிறார்கள். . .நாங்கள் லீவுக்கு போயிட்டு வரும் பொழுது தானே இன்னும் களைச்சுப் போறம்.”

“எதையுமே எதிர்பார்க்கத வாழ்வு அவங்கடை. . .எல்லாத்துக்கும் ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது எங்கடை”

நான் நாலடியாராக சொன்னதை அவள் திருக்குறளாக சொன்னாள்.

கார் பிளட்டின் முன்னே போய் நின்றது.

நான் வசிப்பது பன்னிரண்டாம் மாடி.

*

“பொம்பிளையள் இருக்கிற வீட்டை விட வடிவாக வைச்சிருக்கிறயள்”

”வேலையாலை வந்தால் என்ன வேலை. . .ஒரு ஹோல், ஒரு குசினி, ஒரு படுக்கை அறை. . அரை மணித்தியாலம் போதும்” சொல்லிக் கொண்டே தேநீர் வைக்க ஆயத்தம் செய்தேன்.

“நாங்கள் நிக்கிற வரையிலையும் நாங்களே எல்லாத்தையும் செய்கிறம் அங்கிள்”, என என் பின்னால் குசினிக்குள் வந்த சுஜி ஜன்னலினூடு தூரத்தில் தெரிந்த விழா நடக்க இருக்கும் மைதானத்தையும் அதில் தெரியும் மனிதத் தலைகளையும் பார்த்து அதிசயப்பட்டுப் போனாள்.

“பொறுங்கோ சுஜி. .. இது பன்னிரண்டாம் மாடி. . .மொட்டை மாடி இருபத்தைந்தாவதில் இருக்கு அதிலை போய்ப் பார்த்தால் இன்னும் நல்லாய் தெரியும். . .இரவில் பாடுவது கேட்காவிட்டாலும் வர்ண லைற்கள் வடிவாக இருக்கும். . .

சனங்கள் தலையசைத்து ஆடுவது அலைகள் மேல் எழுந்து கீழே போவது போல இருக்கும்”

இரண்டு பேருக்கு ஒரு சின்ன ரென்ற் என்று பார்த்தால் கடைசி 50 ஆயிரம் பேருக்கு 25 ஆயிரம் ரென்றுகள். . . எல்லாமே அவரவர்கள் எடுத்து வருபவை. . .வர்ண வர்ண நிறங்களில் இங்கிருந்து பார்க்க வடிவாயிருக்கும். ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் ரென்ற்றின் அளவு 5அடிக்கு 5அடிதான். பொதுவாக எல்லா ரென்றகளிலும் இருந்து 4 கால்கள் வெளியில் நீட்டியபடி இருப்பது தெரியும். அந்த கால்கள் கிடக்கும் பாங்கில் அவர்கள் தூங்கி விட்டார்களா அல்லது விழித்து இருக்கின்றார்களா என ஊகிக்க முடியும். அதைப்பார்த்து தான் கள்ளரும் தங்கடை கைவரிசையைக் காட்டுறது.

“எத்தினை மணிக்கு அங்கிள் ஆரம்பமாகும்”

“இரவு எட்டு மணிக்கு. . . ஹய்லைற்றான விடயங்கள், பாட்டுக்காரரை ரி. வி.யிலும் காட்டுவார்கள். நாங்கள் இரவுக்கு பார்க்கலாம்”

பிறகு சமையல். . . சாப்பாடு. . . சாந்தியின் புருஷன் குட்டித்தூக்கம் போடப் போய்விட்டார்.

சுஜி தனது இமெயில்களை செக் பண்ணிக் கொண்டு இருந்தாள்.

நானும் சாந்தியும் பழைய கதைகள். . .புதிய கதைகள்... என பொழுது பலவாறாய்ப் போய்க் கொண்டு இருந்தது.

எங்கள் சொந்தக்காரர்கள். . .அவர்களின் கோபங்கள்.. சாந்தியின் கலியாணத்துடன் பிரிந்த குடும்பங்கள் அம்மாவின் செத்த வீட்டுடன் ஒன்று சோந்தது. . . அவ்வாறே பக்கத்து நாட்டில் சாந்தி இந்தனை வருஷம் இருந்தும் யார் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாமல் இருந்ததும். . .எங்களுக்குள் நாங்கள் போடும் சின்னச் சின்னக் கோடுகளும் கோபங்களும் எத்தனை பெரிய பள்ளத்தாக்குகளாக பிளந்து போய் விடுகின்றன.

கதைத்துக் கொண்டே இருந்தோம்.

ஒரு இடத்தில் சாந்தி கேட்டாள் ‘‘சொல்லுங்கோ நீங்கள் ஏன் கலியாணம் செய்யாமல் இருந்தனிங்கள்?’’

‘‘உங்களுக்கு டெலிபோனிலை சொன்ன அதே காரணம் தான். . . செய்யக்கூடாது எண்டு நான் இருக்கேல்லையே. . .ஒரு இரண்டு மாதம் தேவதாஸ் வாழ்க்கை வாழ்ந்தது உண்மைதான்.. பிறகு ஒரே படிப்பு. . . அது ஒரு வைராக்கியம். .அதிலை கரை கண்ட பிறகு வீட்டார்றை ஆக்கினை தாங்கேலாமல். என்னைப் போலை கம்பியூட்டர் படிச்ச பெட்டை என்று கொழும்பிலை வேலை பார்த்த ஒண்டை அனுப்பி வைக்க... அது. . கூட்டிக் கொண்டு வந்த ஏஜன்ட் பொடியனோடை ஹொலண்டிலை இறங்கிப் போன பிறகு. . .திரும்பவும் . .. உந்த கலியாணம்.. பேச்சுகள். . .சாதகங்கள். .எல்லாத்திலையும் நம்பிக்கை இல்லாமல் போச்சு . . மற்றது அது அதுகளை அந்த வயதிலை சந்தோஷமாய் செய்திருக்க வேணும். . .சந்தோசமாய் வாழ்ந்திருக்க வேணும்’’

சாந்தியின் தலை குனிந்திருந்தது ‘தன்னால் என கவலைப்படுகிறாளோ என்னவோ. . .’

நான் நினைத்த மாதிரி அவள் தலை நிமிர்ந்த பொழுது கண்கள் சிவந்திருந்தது.

‘‘சாந்தி என்ன நடந்தது?’’

ஒன்றுமில்லை எனத் தலையாட்டிவிட்டு எழுந்து வோஷிங் ரூமுக்குள் போனாள்.

அவளைக் கவலைப்படுத்தி விட்டனோ என மனம் கஷ்டப்பட்டது.

வோஷிங் ரூமுக்குள் அதிக நேரம் நிற்பது போல இருந்தது. . அழுகின்றாளோ. . . சாந்தியின் கணவனும் தூக்கத்தில் இருந்து எழுந்து வர எல்லோருக்குமாய் நான் தேநீர் ஊற்றி எடுத்துக் கொண்டு வந்தேன்.

சாந்தி தலையை நன்கு வாரி, முகத்திற்கு பவுடர் போட்டுக் கொண்டு வெளியே வந்து சோபாவில் அமர்ந்தாள்.

கண்கள் இன்னமும் சிவந்திருந்தது.

பின்பு என்ன நினைத்தாளோ. . .தன் அறைக்குள் போய் தான் கொண்டு வந்திருந்த பலகாரங்களை எடுத்து வந்து எனக்கு முன்னால் வைத்தாள்.

அனைவரும் ருசித்து சாப்பிட்டபடி றொஸ்கில பெஸ்ரிவெல் பற்றிய கதை மீண்டும் தொடங்கியது.

நாலு நாளைக்கும் குறைந்தது ஒவ்வொருவருக்கும் இரண்டாயிரம் குறோன்கள் செலவாகும். அதனைச் சேர்ப்பதற்காகவே வருடம் முழுக்க இந்த இளைஞர்கள் கடைகளிளும் றெஸ்ரோரன்களிலும் சின்ன சின்ன வேலைகள் பார்ப்பார்கள். . .இதனால் வரும் லாபம் எத்தனையோ நல்ல விடயங்களுக்கு செலவிடப்படும்.. இலங்கையில் சுனாமி வந்த பொழுது கூட இவர்கள் காசு கொடுத்தவர்கள்.

எனது கை ரீவீயின் ரிமோட்டை அழுத்தியது.

றொஸ்கில வெஸ்ரிவல் ஆரம்பித்து விட்டிருந்தது.

“பாருங்கோ சனத்தை”

“அம்மாடி. . . இடிபட்டே செத்து போகுங்கள் போலை கிடக்கு”

ரீ. வீ.யின் கமரா எல்லா இடத்தையும் சுற்றி வந்தது.. மேடையை. . . பாடகரை. . .சனக்கூட்டத்தை. . . அதிலும் ஆண்களின் தோள்களில் ஏறியிருந்து கொண்டு வானத்தை நோக்கி இரு கைகளையும் நீட்டியபடி சந்தோஷ மிகுதியால் துள்ளும் பெண்களை கமரா சுற்றி வளைத்து காட்டிக் கொண்டு இருந்தது.

“கஞ்சா அல்லது தூள் பாவிக்காட்டி உப்பிடி உற்சாகம் வராது” நான் சொல்லிக் கொண்டு இருந்தேன்.

எங்கள் நால்வரின் கண்கள் ரீ. வி. யின் திரையை விட்டு அசையவே இல்லை.

ரீ. வீ.யின் கமரா மேடையில் இருந்து சுமார் 100 மீற்றத்தை தள்ளி போக்கஸ் பண்ணியது.

அங்கு குறைந்தது 100 ஆண்களும் பெண்களுமாக இருப்பார்கள். உடம்பில் ஒரு சொட்டுத்துணி கூட இருக்கவில்லை. அனைவரும் ஓட்டப்பந்தந்திற்கு ஆயத்தமாகிக் கொண்டு இருந்தார்கள். இந்த சனக்கூட்டத்தையும் மேடையையும் சுற்றி ஓடப் போகின்றார்கள். இடையில் சகதிகள். .சேறுகள். .உள்ள பிரதேசங்களுக்குள் எல்லாம் ஓடப் போகின்றார்கள். . . சிலவேளை சேற்றினுள் கிடந்து கட்டிப் புரள்வார்கள்.

“ரீ. வி.யை ஓவ் செய்யட்டா”

“ஏன்” சுஜி கத்தினாள்.

அவர்களின் ஓட்டம் தொடங்கி விட்டது.

மிக மகிழ்ச்சியாக . .எந்த கூச்சமும் இல்லாது. . .கமரா எவ்வளவு கிட்டச் சொன்றாலும். . .

“உங்களுக்கு பார்க்க அரியண்டமாய் இல்லையா”

"எது அரியண்டம். . . ஜேர்மன்காரியை தன் மகன் வைச்சிருக்கிறான் எண்டும் தெரிஞ்சு கொண்டு சுஜியை பொம்பிளை கேட்டு ஒரு யாழ்ப்பாண மனுசி எங்கடை வீட்டை வந்தாவே . . .உன்னைக் கட்ட வந்திட்டு ஹொலண்டிலை இறங்கிப் போனாளே ஒருத்தி. . . போடராலை கூட்டிக் கொண்டு வாறன் எண்டு சின்னப் பெட்டைக்கு மயக்க மருந்தைக் குடுத்து கற்பழிச்சானே ஒருத்தன். . .இந்தியாவிலை பிளட் வாங்கித் தாறன் எண்டுட்டு காசை எல்லாம் எடுத்துக் கொண்டு தலைமறைவானானே ஒருத்தன்... அண்ணா அண்ணா எண்டு இவரோடை உயிராய் பழகிக் கொண்டு அவருக்கு நாமம் போட்டுட்டு கனடாக்கு ஓடினானே ஒருத்தன். . கோயில் உண்டியயிலை சேர்த்த காசை ஏப்பம் விட்டாங்களே. .அவன்கள்...ஒவ்வொரு நாட்டிலும் சீட்டுகளை முறிச்சுக் கொண்டு மற்ற நாட்டுக்கு அகதி தஞ்சம் கேட்டு ஓடுறாங்களே.. அவன்கள்... கைகளைக் குலுக்கி கொண்டு காலுக்கு கீழே குழிபறிக்கிறாங்களே... அவன்கள் ஓடுறது தான் நிர்வாண ஓட்டம்... அருவருப்பு. . . இவன்கள் ஓடுறதிலை என்ன இருக்கு..."

இருபத்தைந்து வருடத்துக்கு முதல் கைலாசபதி அரங்கில் பேசும் பொழுது இருந்த அதே ஆவேசம். அவளிடம் கொஞ் சமும் குறைந்திருக்கவில்லை.

இந்தக் கோபம் இவளுள் எங்கிருந்து வந்தது. . .இவளுக்குள் இப்பிடி ஒரு சாந்தியா. . .

"சாந்தி பிளீஸ் றிலாக்ஸ்" கணவன் ஆறுதல் படுத்தினார். கதைச்சு கதைச்சுக்கொண்டே களைத்துப் போய் சோபாவில் கண்ணை மூடிக்கொண்டு இருந்தாள்.

நிர்வாண ஓட்டம் தொடர்ந்து கொண்டு இருந்தது.

அவள் சொன்னது அத்தனையும் நியாயம்.

சுஜி எழுந்து போய் என் கம்பியூட்டரின் முன்னாள் அமர்ந்தாள்.

"அங்கிள் உங்களிட்டை பேஸ் புக் இருக்கா"

“ஓம். . .எதுக்கு கேக்கிறியள்”

“சும்மா தான்”

*

அடுத்தநாள் நான் எழும்ப முதல் சாந்தி எழும்பி முழுகி தலையை ஈரம் துடைத்துக் கொண்டிருந்தாள்.

“உங்களுக்கு தேநீர் ஊற்றட்டா. . .இல்லை குளிச்சிட்டு குடிப்பிங்களா. .”

“குளிக்கிற பழக்கம் குறைவு. . பொறுங்கோ முகம் கழுவிக் கொண்டு வாறன்”

நான் முகம் கழுவி விட்டு வரும் பொழுது அவர்கள் மூவரும் குசினி ஜன்னல் வழியே றொஸ்கில பெஸ்ரிவல் நடந்த இடத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

ஒரு மனித அசைவும் இல்லை.

கூடரங்களில் மட்டும் மெல்லிய காலைப்பனி படிந்திருந்தது போலத் தெரிந்தது.

“இனி வெயில் வந்து ராத்திரி அடிச்சது எல்லாம் முறியத்தான் சனம் எழுங்கள் . . அது சரி உங்களுக்கு ராத்திரி நித்திரை எப்பிடி?”

“என்ன கவலை எண்டாலும் ஒழுங்கா நித்திரை கொள்ளுறனான்.. ஆனால் ராத்திரி. . .என்ன என்ன கனவுகள் எல்லாம் வந்தது தெரியுமா? பயங்கரம்” இது சாந்தி.

“அப்பிடி என்ன கனவு”

“இங்கை ஏதோ ஐரோப்பா நாடு போலை கிடக்கு... தேர்த்திருவிழா நடந்து கொண்டு இருக்கு. . .ஒரே சனக்கூட்டம்... நீங்களும் அதுக்குள்ளை நிக்கிற மாதிரி இருக்கு. .. திடீரெனப் பார்த்தால் தேரை இழுத்துக் கொண்டு வாற ஆட்களிலை நாலைஞ்சு பேருக்கு உடம்பிலை ஒரு துணியும் இல்லை...

அது போலை கற்பூரச் சட்டியோடை போற ஒரு அன்ரியும் அம்மணமாய் போய்க் கொண்டு இருக்கிற மாதிரி இருந்தது... திடுக்கிட்டு முழிச்சிட்டன்''

சுஜி விழுந்து விழுந்து சிரித்தாள்.

''நேற்று கதைச்சதை நினைத்துக் கொண்டு படுத்திருப்பியள். சுஜி செய்த கிராபிக்ஸ் உங்களை நல்லா இன்ஸ்பிரேஷன் செயுதிருக்க வேண்டும்''

''ஜெஸ்'' என்று சுஜி தனது கட்டை விரலை உயர்த்தி தனது வெற்றிககான அங்கீகாரத்தை தெரிவித்தாள்.

''எழும்பி தண்ணியைக் கொஞ்சம் குடிச்சிட்டு படுப்பம் எண்டால் அந்த ஜேர்மன் அன்ரியும், உங்களுக்கு பேசிவந்த பெட்டையும் உடுப்பில்லாமல் பாரிலை இருந்து கோப்பி குடிச்சுக் கொண்டு இருக்கினம். . . இப்பிடி இரவு முழுக்க நித்திரையே இல்லை''

''இப்பிடி கனவு காண வெளிக்கிட்டீங்கள் எண்டால் எத்தினை பேரைக் காண வேண்டி வரும் தெரியுமா?''

இப்பொழுது அவர்கள் மூவரும் கெக்கெட்டம் விட்டுச் சிரித்தாள்.

நேற்றுப் பின்னேரம் கண்கள் சிவக்க அழுதவள் இப்பொழுது கெக்கெட்டம் விட்டுச் சிரிக்க சந்தோஷமாய் இருந்தது.

*

அடுத்த மூன்று நாளும் ஓடியதே தெரியாமல் ஓடிப்போனது.

இந்தப் பயணத்தை நன்றாக அனுபவித்ததும் அதிகமாக சந்தோஷமாய் இருந்ததும் நானும் சுஜியும் தான். அவள் நித்திரை கொண்ட நேரத்தை விட மிச்ச நேரம் முழுக்க என்னைச் சுற்றிக் கொண்டு தான்.

எனக்குத் தெரியாத எத்தனையே விடயங்களை கம்பியூட்டரில் எனக்குச் சொல்லித் தந்து என்னை பிரமிக்கச் செய்தாள்.

அதேபோலை டென்மார்க்கின் மிகப் பெரிய கம்பியூட்டர் மியூசியத்தை நான் காட்டிய பொழுது அவளும் பிரமித்துப் போனாள் அந்தப் பெரிய ஜேர்மன் நாட்டில் இல்லாதவை எத்தனையோ இந்தச் சிறிய நாட்டில் உள்ளது என.

பகல் முழுக்க உலாத்து. . . பின்னேரத்தில் சனநடமாட்டம் குறைந்த கடற்கரைகளில் நானும் சுஜியும் தகப்பனும் குளித்துக் கொண்டு இருக்க எங்கள் உடுப்புகளை பாதுகாத்துக் கொண்டு சாந்தி கடற்கரையில் இருந்தாள்.

ஒவ்வொரு நாளும் வீடு திரும்பும் பொழுது சாந்தி சொல்லுவாள்,

“கட்டாயம் இவள் தனிய றெயின் எடுத்து உங்களிட்டை வந்திடுவள் . . . இவள் யாரோடையும் இப்பிடி ஒட்டியதில்லை” என்று.

இன்று அவர்களின் பயணம்.

எனதும் சுஜியின் மனதுக்குள்ளும் ஒரு மூட்டம். இருவருமே வெளிக்காட்டவில்லை.

சாந்தி தங்கள் பயணத்துக்கும், எனக்கு ஒரு கிழமைக்கும் போதியளவு வெவ்வேறு விதமான சாப்பாடுகளும் செய்து பிறிச்சில் வைத்து விட்டு புறப்பட ஆயத்தமானாள்.

“இனி எப்ப வருவீங்கள். . .”

“இனி நாங்கள் வரேல்லை. . .நீங்கள் ஜேர்மனிக்கு வாங்கோ”

அனைவரும் லிப்டில் கீழே இறங்கினோம்.

கார் கடற்கரைச்சாலை றோட்டில். . . இப்பொழுதும் மக்கள் கடற்கரையில் படுத்திருக்கிறார்கள். . . அது பற்றி யாருமே அலட்டிக் கொள்ளவில்லை. காரினுள் பெரிய அமைதி நிலவியது.

புகையிர நிலையத்தில் காரைக் கொண்டு போய் நிறுத்திய போது இன்றும் அதே சனக்கூட்டம். பெஸ்ரிவெலுக்கு வந்த எல்லோரும் திரும்பி அவர் அவர்கள் ஊர்களுக்கும் மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கும் போக நிற்கின்றார்கள் எல்லோரும் நன்கு களைத்துப் போயிருக்கிறார்கள் உடுப்புகள் மிகவும் ஊத்தையாக இருக்கிறது.

சுஜி மிகவும் இறுகிப் போயிருந்தாள் எந்த நேரமும் வெடித்துப் போய்விடுவாள் போலிருந்தது.

எனக்குள் நானும் அப்படித்தான். என் தொண்டை கட்டிப் போயிருந்த்த போல ஒரு உணர்வு.

இந்த மௌத்தை உடைத்து அவளை சந்தோஷமாக வழி அனுப்ப வேண்டும் என்று மனம் எண்ணியது.

பரமகுரு அண்ணை இன்றும் நின்று கொண்டு இந்த வார புதிய செக்ஸ் மக்கசீன்களின் அட்டைப் படங்களை பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

கையில் உள்ள கைத்தொலை பேசியில் யாருடனே கதைத்துக் கொண்டு நிற்கிறார், "நீங்கள் பயப்பிட வேண்டாம். .. அங்கை காசு குடுத்தால் இஞ்சை பொடியன் வீட்டு வாசலிலை. . ."

பரமகுரு அண்ணையின் உடம்பில் ஒரு சொட்டுத் துணியையும் காணவில்லை. எனக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

சுஜியைத் திரும்பிப் பார்த்தேன்.

"அங்கிள் நீங்கள் எதுக்குச் சிரிக்கிறிங்கள் என்று தெரியும்" என்று விட்டு தாயையின் முழங்கையில் கிள்ளினாள்.

சாந்திக்கு சிரிப்பை அடக்க முடியாமல் கண்களில் நீர் தழும்பியது.

சுஜி மெதுவாக என் காதுக்கு கிட்டவாக வந்து, “அந்த ஆள் வெள்ளை நிறம் எண்டாலும் பறவாயில்லை. . .” சொல்லி முடிக்க முதல் கெக்கட்டம் விட்டுச் சிரிக்கத் தொடங்கினாள்.

“ஐயோ. .ஐயோ. .. பிளிஸ் . . நீங்கள் இரண்டு பேரும் பெரிய மோசம்” சாந்தி எங்கள் இரண்டு பேரையும் அன்பாக கண்டித்தாள்.

புகையிரதம் மேடைக்கு வரும் வரை அந்த சிரிப்பு அடங்கவேயில்லை.

(jeevakumaran5@gmail.com)



ஓவியர்
சிவ.கௌதமன்



வடிவமைப்பாளர்
இவள் பாரதி



தொகுப்பாசிரியர்
வி.ஜீவகுமாரன்

| | | |
|---|---|---|
| நியூசிலாந்து | அகில் | முதிர்பனைகள் |
| கனடா | தேவகாந்தன் | பேரணங்கு |
| இலங்கை | யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | அம்மா அம்மாதான் |
| பிரான்சு | ஜோதிலிங்கம் | லா சப்பல் |
| ஜேர்மனி | சாந்தினி வரதராஜன் | எல்லாம் இழந்த பின்பும் |
| அவுஸ்திரேலியா | சு. ஸ்ரீகந்தராஜா | எனக்காகவே நான் |
| டென்மார்க் | 'நிலக்கிளி' பாலமனோகரன் | அர்த்தமுள்ள மௌனம் |
| ஹொலண்ட் | கலையரசன் | தற்கொலை |
| இலண்டன் | ரவி அருணாச்சலம் | ஜேர்மனியில் ஒரு நகரம் |
| கனடா | 'வீரகேசரி' மூர்த்தி | அறிவி(லி)ப்பாளன் |
| மலேசியா | ரெ. கார்த்திகேசு | அமீருக்கு இரண்டு கேக் |
| இந்தியா | 'குப்பிளான்'ரவிஜன் | வள்ளி ஆச்சி செத்துப்போனா! |
| சுவீடன் | வசந்தி | சாம்பல் |
| கனடா | துறையூரான் | வலையில் விழுந்தவள் |
| அவுஸ்திரேலியா | நடேசன் | சலனங்களுக்கு வயதில்லை |
| இலண்டன் | கோபன் மகாதேவா | தாடகையும் தண்டனையும் |
| நோர்வே | தியாகலிங்கம் | அல்லல் |
| இந்தியா | ராம் பிரசாத் | இருத்தலைத் தொலைத்த தமிழ் |
| கனடா | சரோ வர்ணன் | இடியும் மின்னலும் |
| சுவிற்ஸ்லாந்து | 'மயிலிட்டி' சிவபாலன் | அம்மனும் அடியவரும் |
| பிரான்சு | கணேசலிங்கம் | நானும் மனைவியும் திருவள்ளுவரும் |
| கனடா | 'மட்டுவில்' ஞானக்குமரன் | திருஞானம் |
| டென்மார்க் | 'இணுவையூர்' சக்திதாசன் | முகவரி தொலைத்த முகம் |
| இத்தாலி | சிவனேசன் | அ. . . ஆ. . . இ. . . |
| ஜேர்மனி | மேழிக்குமரன் | வரம்பு உடைத்தல் |
| இலண்டன் | நவஜோதி யோகரட்னம் | தடைமுகாம் |
| சிங்கப்பூர் | ஜெயந்தி சங்கர் | சக்கரம் |
| இலங்கை | எம். ரிஷான் ஷெரீவ் | பேரழகியும் அரபுநாட்டு பாதணிகளும் |
| நோர்வே | 'நோர்வே' நக்கீரன் | பாவம் |
| கனடா | அகிலேஸ்வரன் | இது இவர்களின் காலம் |
| மலேசியா | கௌரி | வேர் பிடிக்க இயலாத அழுகும் மனங்கள் |
| ஜேர்மனி | கோசல்யா சொர்ணலிங்கம் | சக தர சய சமன் |
| டென்மார்க் | என். முரளி | தலைமுறை இடைவெளிகள் |
| கனடா | யோகா பாலச்சந்திரன் | கலாச்சார அதிர்ச்சி |
| அவுஸ்திரேலியா | ஆசி. கந்தராஜா | சாத்திரம் உண்டோடி! |
| இலங்கை | அஷ்ரஃப் சிஹாப்தீன் | யசீர் அரபாத் 2 |
| இந்தியா | இவள் பாரதி | இது எனது நகரம் இல்லை |
| ஜேர்மனி | சுந்தராம்பாள் பாலசந்திரன் | ஆதலினால் காதல் செய்வீர்! |
| கனடா | நடராஜா முரளிதரன் | பிற்ஸா! |
| அவுஸ்திரேலியா | விஜயராணி | புதியபாடம் |
| சிங்கப்பூர் | 'கனடா' மூர்த்தி | யாகாவாராயினும் 'நாய்' காக்க! |
| கனடா | ஸ்ரீரஞ்சனி | தடம் மாறும் தார்ப்பரியம் |
| அமெரிக்கா | அருணாச்சலம் | அகலிகை |
| அவுஸ்திரேலியா | முருகபூபதி | கணங்கள் |
| சுவிற்ஸ்லாந்து | பவதாரிணி | திருமணம் |
| சிங்கப்பூர் | சித்ரா ரமேஸ் | யாவரும் கேளீர் |
| சுவீடன் | கஸ்தூரி வசந் | பணம் |
| கனடா | அ. முத்துலிங்கம் | விருந்தோம்பல் |
| பெர்லின் | பொன். கருணாகரமூர்த்தி | முட்டர்பாஸ் |
| டென்மார்க் | வி. ஜீவகுமாரன் | நிர்வாண மனிதர்கள் |